
JL
Y15m211,M79
M99-14
2162034

# மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol. XIV. } Madras: January 1912. { No - 1.

புத்தகம் - ௧௪. } சென்னப்பட்டணம்: ஜனவரி௴ 1912. { இலக்கம் - 1.

பெருமை பொருந்திய மகாராஜ சக்கரவர்த்தி
அவர்களின் மகுடாபிஷேக மகோற்சவம்
கொண்டாடினதை அவர்களுடைய இராஜ்ஜியங்
களுக்குள் பிரசித்தப்படுத்துவதற்காக மகாராஜ சக்
கரவர்த்தி அவர்களால் வெளியிடப்பட்ட

## ராஜ விளம்பரம்.

<u>ஜார்ஜ் மகாராஜ சக்கரவர்த்தி அவர்கள்.</u>

நமது அரசாட்சியின் முதல் வருஷமாகிய நமது கர்த்த ருடைய ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பத்தாம் வருஷம் ஜூலை மாதம் பத்தொன்பதாம் தேதியும் நவம்பர் மாதம் ஏழாம் தேதியுமுள்ள நம்முடைய இராஜ விளம்பரங்களி னாலே, ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினோராம் வரு ஷம் ஜூன் மாதம் இருபத்திரண்டாம் தேதியில் நமது இராஜ மகுடாபிஷேக மகோற்சவத்தை சர்வசக்தியுள்ள கடவுள் கிருபையினாலும் ஆசீர்வாதத்தினாலும் கொண்டாடவேண்டு

162034

மென்றும் நமது இராஜ உத்தேசத்தை நாம் பிரசித்தப்படுத்தி அறிவித்தபடியாலும்;

சர்வசக்தியுள்ள கடவுள் கிருபையினாலும் ஆசீர்வாதத்தினாலும் சென்ற ஜூன் மாதம் இருபத்திரண்டாம் தேதி வியாழக்கிழமை மேற்படி மகோற்சவத்தை நாம் கொண்டாடக் கூடியவர்களா யிருந்தபடியாலும்;

நமது அரசாட்சியின் முதல் வருஷமாகிய நமது கர்த்தருடைய ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினோராம் வருஷம் மார்ச் மாதம் இருபத்திரண்டாம் தேதியுள்ள நம்முடைய இராஜ விளம்பரத்தினாலே, மேற்படி மகோற்சவமானது அந்தப்படி கொண்டாடப்பட்டதென்று நம்முடைய இந்திய இராஜ்ஜியங்களுக்குள் நம்மிடத்தில் அன்பு பாராட்டும் எல்லாக் குடிஜனங்களுக்கும் நாமே நேரில் பிரசித்தப்படுத்துவதும், நம்முடைய கவர்னர்களையும், லெப்டெனெண்ட் கவர்னர்களையும், நம்முடைய மற்ற உத்தியோகஸ்தர்களையும், நமது சம்ரக்ஷணையிலிருக்கும் சுதேச இராஜ்ஜியங்களின் அரசர்களையும், அதிபதிகளையும், பிரபுக்களையும், நமது இந்திய ராஜ்ஜியத்தைச்சேர்ந்த சகல மாகாணங்களின் பிரதிநிதிகளையும் நமது சந்நிதானத்துக்கு வரவழைப்பதும் நம்முடைய கோரிக்கையென்றும் விருப்பமென்றும் நாம் தெரிவித்தபடியாலும்:

நமது இந்த இராஜ விளம்பரத்தினால் நாம் இப்போது அதைப் பிரசித்தஞ்செய்து, நம்முடைய சகல உத்தியோகஸ்தர்களுக்கும் இப்போது டேல்லியில் கூடியிருக்கும் சகல அரசர்களுக்கும் அதிபதிகளுக்கும் பலவகையான ஜனங்களுக்கும் நாம் மகாராஜாவாகவும் சக்ரவர்த்தியாகவும் வாழ்த்து கூறி, நமது இந்திய இராஜ்ஜியத்தில் நாம் ஆழ்ந்த அன்புவைத்திருப்பதையும், அதன் க்ஷேமத்திலும் அபிவிருத்தியிலும் நாம் இடைவிடாமல் அக்கறை கொண்டவர்களா யிருப்பதையும், இனி எப்போதும் அப்படியே இருந்து வருவதையும் அவர்களுக்கு உறுதியாய்ச் சொல்லுகிறோம்.

டெல்லியில் நமது இராஜ சபையிலே நமது அரசாட்சியின் இரண்டாவது வருஷமாகிய ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினோராம் வருஷம் டிஸெம்பர் மாதம் பன்னிரண்டாம் தேதியில் கொடுக்கப்பட்டது.

**மகாராஜ சக்கரவர்த்தி அவர்களைக் கடவுள் ரக்ஷிப்பாராக.**

JL
Y15m211.M99M0



# டெல்லி தர்பார்.

## நமது அரச சக்ரவர்த்தியும் ராணி சக்ரவர்த்தினியும் இந்தியாவுக்கு புறப்பட்டது.

நவம்பர்மீ 11உ நமது சக்ரவர்த்தியும், சக்ரவர்த்தினியும் இங்கிலாந்தைவிட்டு தங்கள் பரிவாரங்களுடன் 'மேடீனா' என்ற கப்பலில் ஏறி இந்தியாவுக்குப்பிரயாணம் செய்துவந்தார்கள்.

இவர்கள் தங்களது புத்திரன் வேல்ஸ் இளவரசருடனும், அருமையான ஏகபுத்திரி பிரின்ஸஸ் மேரியுடனும், இவருடைய பிரியம்வாய்ந்த தாயாராகிய அலக்ஸாண்டிரா ராணியாருடனும், காஞட்டுக்கோமகனுடைய குமாரனாகிய பிரின்ஸஸ் ஆர்தருடனும் மேடினா கப்பலுக்கு தங்கள் அரண்மனையிலிருந்து ராஜபிரதுகளுடனும் பந்துமித்திரர்களுடனும் ரதத்தில் ஏறி விக்டோரியா ரயில் ஸ்டேஷனுக்கு வந்தார்கள்.

சக்ரவர்த்தி ரயில் ஸ்டேஷன் வரும் வரையில் பெருத்த ஊர்கோலம் போலிருந்ததாம். ஜனங்கள் தெருக்களில் கும்பல் கும்பலாய் கூடி நின்று நமது சக்ரவர்த்தியையும், சக்ரவர்த்தினியையும் கண்டுகளித்து வாழ்த்தினார்கள்.

இவர்கள் ரயில் ஸ்டேஷனுக்கு வந்தவுடன் ராஜகுடும்பத்தைச்சேர்ந்தவர்களும், மந்திராலோசனை சபை மெம்பர்களும், இந்தியா ஆபீஸ் உத்தியோகஸ்தர்களும், கானடா முதலிய குடியேற்ற நாடுகளிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகளும் இவர்களது வரவை மிக்க பிரியத்துடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். பிரதம மந்திரி மிஸ்டர் ஆஸ்க்வித்தும், காண்டர்பரி ஆர்ச்பிஷப்பும், இங்குவந்திருந்தார்கள். சக்ரவர்த்தி இங்குவந்தவுடன் நமது "அரசனை கடவுள் ரக்ஷிக்கட்டும்" என்றபாட்டைப் பாடினார்கள். இதுமுடிந்ததும் சக்ரவர்த்தி அவர்கள் பிரதமமந்திரி முதலியவர்களுடன் அரைமணி நேரம் பேசியபின், வண்டியில் ஏறினார்கள். ஜனங்கள் குதூகலத்துடன் "நமது இறைவன் வாழ்க" என்றும் "கடவுள் நமது அரசர்பெருமானை ரக்ஷிக்கட்டும்" என்று யாவரும் ஏகோபித்து ஆசிகூறி கரகோஷம் செய்தார்கள்.

போர்ட்ஸ்மத் வெகு அழகான துறைமுகம். இங்கிருந்து பற்பலதேசங்களுக்கு கப்பல்கள் போய்க்கொண்டிருக்கும். இத்துறைமுகத்திற்கு ராஜாவும், ராணியும் தங்களது பந்துக்கள், சிநேகிதர்கள் உத்தியோகஸ்தர்கள் முதலியவர்களுடன் வந்தவுடன் கடற்படை, தரைப்படை இவைகளைச்சேர்ந்தவர்கள் வாத்தியகோஷத்துடன் எதிர்சென்று இவர்களை உபசரித்து நல்வரவு கூறினார்கள்.

இவர்களுக்காக தனிமையாக மேடீனா என்ற ஸ்டீமர் துறைமுகத்திலிருந்தது. இது வெகுபலமாகச்செய்யப்பட்டு அழகுபொருந்தியது. இதன் நீளம் 670 அடி, அகலம் 62 அடி, 12, 500 டன் நிறையுள்ளதாம். இதன் வெளிப்புறம் வெண்மைநிறம் பூசப்பட்டிருக்கிறது. இதில்படுத்து நித்திரைசெய்யவும், போஜனம் செய்யவும், படிக்கவும், சிநேகிதர்களைக் கண்டுபேசவும், உலாவவும், வாத்தியம் வாசிக்கவும் பற்பல அறைகளுண்டு. இவைகளில் நித்திரைசெய்யுமிடமும், வாத்தியம் வாசிக்குமிடமும் மிகப் பெரியவைகளாம். இவ்விடங்களில் பல ஜன்னல்களுண்டு. விசித்திர தீபங்களுமுண்டு. அடியில்

மிருதுவான பச்சைநிறமுள்ள உயர்ந்த ஜமக்காளம் போடப்பட்டிருக்கிறது வாத்தியம் வாசிக்குமிடத்தில் ஒருபெரிய விலையுயர்ந்த பியானோ வாத்தியப்பெட்டி வைக்கப்பட்டிருக்கிறது. போஜன மண்டபத்தில் ஒரு நீளமேஜையும் ஒவ்வொருபக்கத்திலும் மூன்று வட்டவடிவமான மேஜைகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. இவர்களுக்கு பால்குடிப்பதற்காக அரண்மனையிலிருந்து நல்ல மூன்று பெரிய பசுக்களைக்கொண்டுவந்து இக்கப்பலில் வைத்திருந்தார்கள். கடல் கொந்தளிப்பாயிருந்தால் இவர்கள்படுத்து நித்திரைசெய்ய வேறு தனிமையான அறை ஒன்று உண்டு.

தந்தி அனுப்பவும், பெறவும் தக்க ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது. இங்கிலாந்தில் நடைபெறும் ராஜ்யவிஷயங்களைக் கப்பலில் பிரயாணம் செய்யும்பொழுது அறிந்துகொண்டும், தெரிவிக்கவேண்டியவைகளைத் தெரிவித்தும் வந்தார். சகலவிஷயங்களையும் அப்பப்போது வெளியிட ஒருபத்திரிகையாபீஸும் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இவ்விதசௌகரியங்களுள்ள நல்ல பலமான கப்பலில் சுமார் 675 பேருக்கு மேலிருந்தார்களாம். இவர்களெல்லாம் சக்ரவர்த்தியவர்களின் உத்தியோகஸ்தர்கள். சிலர் கப்பல் வேலைக்காரர்களேயாம்.

சக்ரவர்த்தியும், சக்ரவர்த்தினியும், தங்களது பரிவாரங்கள் சூழ்ந்துவர துறைமுகத்திற்குவந்து கப்பலில் ஏறினார்கள். உடனே வெடிகள் தீர்க்கப்பட்டன. சக்ரவர்த்தியார் தமது தாயார் அலக்ஸாண்டிராராணியார், ப்ரின்ஸஸ்மாட், பிரின்ஸஸ் விக்டோரியா, பிரின்ஸஸ் மேரி, வேல்ஸ் இளவரசர் முதலானவர்களுடன் கப்பலில் போஜனமுண்டார்கள். இப்படி இவர்செய்தது இவருக்கு தமது தாயாரிடத்திலிருக்கும் சிறந்த அன்பைக்காண்பிக்கின்றதல்லவா? சாப்பாடானவுடன் சிறிதுநேரம் யாவரிடத்திலும் பேசிவிட்டு அவர்களிடமிருந்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார். உடனே இவர்கள் சக்ரவர்த்தியையும் சக்ரவர்த்தினியையும் சந்தோஷமாக யனுப்பிவிட்டு கீழேயிறங்கியதும், கப்பல் இந்தியாவுக்குப் புறப்பட்டது. பீரங்கி வெடிகள் தீர்க்கப்பட்டன. கப்பற்படையும், பீரங்கிப்படையும் சிறிது தூரம் மெடீனாவுடன் கடலில் அணிவகுத்துசென்று சக்ரவர்த்தியையும் சக்ரவர்த்தினியையும் வழியனுப்பியது வெகு ஆச்சரியமாயிருந்ததென அநேக ஆங்கிலப்பத்திரிகைகள் கூறுகின்றன.

நவம்பர்மீ 15உ ஜிப்ரால்டருக்கு வந்தது. இங்கிருந்து கப்பல் புறப்பட்டபொழுது 101 குண்டுகள் போடப்பட்டன. கரையிலிருந்து சக்ரவர்த்தியையும் சக்ரவர்த்தினியையும் அநேக ஆயிரம் ஜனங்கள் ஆசிகூறி வாழ்த்தினார்கள். தேசகீதமும் பாடினார்கள்.

நவம்பர்மீ 20உ மெடினா கப்பல் போர்ட்டுஸேட்டுக்கு வந்ததும் கேடிலையாட்டனும், கயாமில் பாஷாவும் இங்குவந்திறங்கினார்கள். இவர்களுக்கருகில் மெடீனா வந்ததும் "அரசரைக் கடவுள்வாழ்விக்க" என்ற பாட்டுபாடப்பட்டது. கடற்கரையில் வெகு ஜனங்கள் வேடிக்கைப்பார்த்து குதூஹலத்துடன் கரகோஷம் செய்தார்கள். லார்டு கிச்சனரும் ஜனரல் மாக்ஸ்வெல்லும் மெடினாக்கப்பலில் சக்ரவர்த்தியோடு விருந்துண்டார்கள்.

27உ மெடினாக்கப்பல் ஏடன் துறைமுகம் வந்துசேர்ந்தது. இங்குள்ள சுதேசமன்னர்களும், கடற்படை, தரைபடை, ஆபீஸர்களும், பொதுஜனங்களும் இராஜதம்பதிகளுக்கு நல்வரவு கூறி வரவேற்றார்கள். 101-மரியாதை குண்டுகள் போடப்பட்டன.



ஸர் ஜார்ஜ் கிளார்க்கு பம்பாய்க் கவர்னர் சக்கரவர்த்திக்கு; 'பம்பாய்க் கவர்ன்மெண்டும், அம்மாகாண ஜனங்களும் சக்கரவர்த்தி தம்பதிகளை மனப்பூர்வமாகவும் பக்தி சிரத்தையாகவும் அழைத்து மரியாதைசெய்கிறது" என்று ஏடனுக்குத் தந்தியனுப்பினார்.

அதற்குச் சக்கரவர்த்தி "யாமும் எமது மனைவியாரும் உமக்கும் உமது மகாண ஜனங்களுக்கும் நீங்கள் எம்மை விருப்பத்துடன் அழைத்ததற்கு மனப்பூர்வமாக வந்தனமளிக்கிறோம். உங்களுடைய அழைப்பைப்பெரிதும் பாராட்டுகிறோம்" என்று பதில் தந்திகொடுத்தார்.

பட்டணத்துக்குள் சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் சென்றபோது ஜனங்கள் கும்பலாகக் கூடிக்கொண்டு ஆவலுடன் இவர்களைக் கண்டுகளித்தார்கள். பாடசாலைப்பிள்ளைகள் குஜராத்தி, அரபிமுதலிய பாஷைகளில் ராஜகீதம் பாடினார்கள். ஏடனிலுள்ள ரெஸிடெண்டுக்கு கே. ஸி. பட்டத்தையளித்தார். உபசாரபத்திரம் பார்சிகளவாஜல் வாசிக்கப்பட்டவுடன் அதற்குத் தகுந்த பதிலையுரைத்தார். ரெஸிடென்ஸிக்குப்போய் அங்குவந்திருந்த அரேபியாவின் உள்நாட்டுத் தலைவர்களுக்கும், இன்னும் மற்ற பிரமுகர்களுக்கும் பேட்டிகொடுத்தார். யூதர்களைச்சேர்ந்த ஒருவர் சக்ரவர்த்தினிக்கும் ப்ரின்ஸஸ் மேரிக்கும் நெருப்புக்கோழி இறகுகளை வெகுமதியாகக் கொடுத்தார். பின்பு மெடினா கப்பலுக்கு வந்துசேர்ந்தார்கள். ஆறுமணிக்கு கப்பல் புறப்பட்டுவிட்டது. ஏடனில் தீபாலங்காரமும் வாணவேடிக்கையும் சிறப்பாக நடந்தன.

## பம்பாய்க்கு ராஜதம்பதிகளின் வரவு.

மெடினாகப்பல் டிசம்பர்மீ 2உ சனிக்கிழமை சுமார் 9-30-க்கு பம்பாய் வந்துசேர்ந்தது. அப்போது அங்கிருந்த ப்ளேக்ஷிப்பும், க்ரூஸர்க் கப்பல்களும் 101 ராஜமரியாதைக்குண்டுகள் போட்டன. மெடினாவும் தகுந்தயிடத்தில் வந்துநின்றது. ராஜப்பிரதிநிதி அவர்கள் தமது பரிவாரங்களுடன் 10½ மணிக்கு அப்பாலோ பந்தர் (Appollo Buuder) துறைமுகம்வந்து ராஜதம்பதிகளிருக்கும் மெடினா கப்பலுக்குப்போய் நல்வரவு கூறியதுடன் சேவாஞ்சலிசெய்துகொண்டார்கள். பின்பு பம்பாய் கவர்னரும், கப்பலுக்குள்செல்ல அவரை வைஸிராயவர்கள் சக்ரவர்த்திக்கும் சக்ரவர்த்தினிக்கும் அறிமுகம் செய்துவைத்தார்கள். பம்பாய் கவர்னருடன்போயிருந்த பெருத்த உத்தியோகஸ்தர்களை சக்ரவர்த்திக்குப் பம்பாய் கவர்னர் அறிமுகம் செய்துவைத்தார்கள். சுமார் 12-மணிக்கு பம்பாய் கவர்னரும் மற்ற உத்தியோகஸ்தர்களும் திரும்பி கவர்ன்மெண்டு மாளிகைக்கு வந்துவிட்டார்கள். வைஸிராய் மாத்திரம் ராஜதம்பதிகளுடன் இடைவேளைச் சாப்பாடு சாப்பிட்டபின் கவர்ண்மெண்ட் மாளிகைக்குத் திரும்பிவந்தார்.

சாயங்காலம் 3-50-க்கு எச். இ. வைஸிராய் அவர்கள் தமது பரிவாரங்களுடன் மெடீனா கப்பலுக்குப்போய் இராஜ தம்பதிகளை இட்டுக்கொண்டுவந்தார். உடனே 101-குண்டுகள் போடப்பட்டன. படகில் உட்கார்ந்து கரைக்கு வருமளவும் குண்டுகளின் சப்தம் கேட்ட வண்ணமாயிருந்ததாம். கரைக்குவந்ததும் இராஜதம்பதிகளை வரவழைத்து நல்வரவுகூற ஏற்படுத்தியிருந்த அழகானபந்தலுக்குத் தங்களது பரிவாரங்களுடன் மெதுவாக நடந்துவந்தார்கள். கப்பற்படையாளர் அணிவகுத்ததைப் பார்த்தார் நமது சக்ரவர்த்தி. எங்கும் ராஜ கீதப்பாட்டு முழங்கிற்று. நமது சக்ரவர்த்தியும், சக்ரவர்த்தினி

யும் பந்தலுக்குள் வரவே, அங்கிருந்த பிரபுக்கள் முதலானோர் எழுந்தார்கள். பம்பாய் கவர்னர் முன் சென்று வரவேற்றார்கள். இராஜதம்பதிகள் சிம்மாசனங்களில் உட்கார்ந்தவுடன் ஜனங்கள் தங்களது அத்யந்த சந்தோஷத்தைக் கரகோஷத்தால் தெரிவித்தார்கள.

நமது சக்ரவர்த்தியவர்கள் வெண்மையான உடையைத் தரித்திருந்ததுடன் இவ்வித பிரயாணத்தால் தேகசௌக்யமுடையவர்களாகத் தென்பட்டார்கள். சக்ரவர்த்தினியாரும் தேகசௌக்ய முடையவர்களாகத் தென்பட்டார்கள். காப்பிக்கொட்டையின் நிறத்தைப்போன்ற பட்டாடையைத் தரித்துக்கொண்டிருந்தார்கள். ரோஜா வர்ண டொப்பியையும் சிரசில் வகித்திருந்தார்கள்.

நல்வரவுபத்திரத்தை அக்கார்புரேஷன் பிரிசிடெண்ட் ஸர். பி. மேட்டா ராஜதம்பதிகளுக்கு வாசித்துக்கொடுத்தார். இதை சக்ரவர்த்தியவர்கள் மலர்ந்த முகத்துடன் பெற்றுக்கொண்டு அன்புடன் பதில் சொன்னார். இதுதான் பம்பாயில் சக்ரவர்த்தியார் பேசிய முதல் பேச்சு. சக்ரவர்த்தி பேசி முடித்தவுடன் லேடி மேட்டா சக்ரவர்த்தினியாருக்கு அழகான ரோஜாப்பூசெண்டை மிக்க மரியாதையுடன் அளித்தார்கள். கார்புரேஷன் மெம்பர்கள் சக்ரவர்த்தியவர்களுக்கு அறிமுகம் செய்யப்பட்டார்கள். இவைகளெல்லாம் முடிந்தபின் பம்பாய் நகரை வலமாகச் சுற்றிக்கொண்டு வர ஏற்பாடாயிற்று. ராஜதம்பதிகள் முதல் வண்டியிலும், ராஜப்பிரதிநிதியும் இந்தியா மந்திரியும் இரண்டாவது வண்டியிலும், ஸர் ஜார்ஜ் கிளார்க்கும் (பம்பாய் கவர்னர்) லேடி கிளார்க்கும் மூன்றாவதுவண்டியிலும் சென்றார்கள், இன்னும் சில கனவான்களுள்ள 5 வண்டிகளும் வரிசைக்கிரமமாகச் சென்றன.

நமது சக்ரவர்த்தியவர்களுக்கு முன்னால் பட்டாளங்களும் வாத்திய கோஷமும் நடந்துகொண்டே சென்றன. காலாட்படை குதிரைப்படை முதலானோர் வரிசைக் கிரமமாகச் சென்றார்களாம். பம்பாய் கவர்னருடைய பாடிகார்ட் நமது சக்ரவர்த்தியாரின் வண்டியைச்சுற்றி சவாரி செய்துவந்தார்களாம். இப்படி இவர்கள் செய்தது அப்பாடிகார்டின் சுதந்தரமாம். இப்பாடிகார்ட் இந்தியாவிலுள்ளவைகளில் சிறந்தவைகளாம். இதைச் சேர்ந்தவர்கள் சிக் சாதியார். இவர்கள் உயரமுள்ளவர்கள், திடகாத்திரமுள்ளவர்கள்.

அரச சக்ரவர்த்தியும், ராணி சக்ரவர்த்தினியும் கவர்ன்மெண்ட் சிறந்த வண்டியில் உட்கார்ந்து வந்தார்கள். வண்டியில் இவர்களுக்குப் பின் ராஜபணிவிடைக்காரர்கள் குடை சூத்ர சூமரம் முதலிய ராஜபிருதுகளைப் பிடித்துக்கொண்டு வந்தார்கள். சக்ரவர்த்தியார் தமது பிரஜைகளுக்கு ஊர்கோலம் முடியும் வரையில் தமது சந்தோஷத்தையும் அன்பையும் தெரிவித்துக்கொண்டே சென்றார்கள். ராணி சக்ரவர்த்தினியாரும் வலது பக்கத்திலும் இடது பக்கத்திலும் புன் சிரிப்புள்ள முகத்துடன் தலை வணங்கி சென்றார்கள். ஊர்கோலம் சுமார் 6-அல்லது 7-மைல் தூரம் சென்றது. இதில் 3-மைல் பட்டணத்திற்குள்ளேயாம்.

ஜனங்கள் ராஜபக்தியுடனும் விசுவாசத்துடனும் மிக்க ஆவலாய் ராஜதம்பதிகளைக் கண்டுகளிக்க பற்பல தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த தெருக்களில் கும்பல் கும்பலாய் கூடியிருந்தார்கள். மெத்தை வீடுகளிலும் பலகணியின் வழியாகப் பலர் பார்த்தவண்ணமே யிருந்தார்கள். உற்சவகாலத்தில் நல்ல உடைகளைத் தரித்துக்கொண்டிருப்பதுபோலவே இவ்விராஜதம்



பதிகளின் ஊர்கோலமகோற்சவசமயத்தில் நல்ல உடைகளைத் தரித்துக்கொண்டு வந்திருந்தார்கள். ஸ்திரீகள் கூட்டத்தில் நிறைந்திருந்தார்கள். இப்படி இவர்களிருந்தது செடியில் புஷ்பம் நிறைந்திருந்தால் அது எவ்வளவு அழகாகத் தென்படுமோ அதைவிட பதின்மடங்கு அழகாக பம்பாய் தென்பட்டதாம்.

மேலும் இன்று 28,000 பாடசாலைச் சிறுவர்கள் ஊர்கோலம் செல்லும் பாதைகளில் கட்டப்பட்டுள்ள இடங்களில் கையில் ஒவ்வொருவரும் ஒரு கொடியை வைத்துக்கொண்டு சந்தோஷசாகரத்திலமிழ்ந்தி கரகோஷம்செய்து வந்ததும் அதிக மகிழ்ச்சியை எல்லாருக்கும் உண்டாக்கியதாம்.

## தீபாலங்காரம்.

## பம்பாய்நகரமுழுவதிலுள்ள தெருக்களில் தோரணங்களும்.

பற்பல விநோதமான வளைவுகளும் தக்க சாமர்த்தியவான்களால் கட்டப்பட்டிருந்தன. இவ்வளைவுகளிலும் தெருக்களிலும் தீபாலங்காரம் வெகு அழகாக செய்யப்பட்டிருந்ததாம். துறைமுகத்திலுள்ள கப்பல்களிலும் தீபாலங்காரம் வெகு ஜோதியாய் விளங்கிற்று.

ஊர்கோலம் சுமார் 5.30க்கு முடிந்ததும் ராஜதம்பதிகள் மெடீனு கப்பலுக்குச் சென்றார்கள். வைஸிராய், கவர்னர் முதலியவர்கள் கவான்மெண்டு மாளிகைக்குச் சென்றார்கள்.

இன்று இரவு மெடீனு கப்பலில் ராஜதம்பதிகள் ஒருவிருந்து நடத்தினார்கள். ராஜப்பிரதிநிதியும் மற்ற உத்தியோகஸ்தரும், இந்திய கனவான்களும் வரவழைக்கப்பட்டார்கள்.

ஞாயிற்றுக்கிழமையதினம் 'பகல் ஒருமணிக்கு தெய்வாராதனை கப்பலிலேயே செய்துவிட்டு பம்பாய் கவர்னரையும் லேடி கிளார்க்கையும் பார்த்தார்கள்.

இன்றிரவு ராஜதம்பதிகள் ஒரு விருந்து செய்வித்தார்கள். இதற்கும் அநேக கனவான்கள் வரவழைக்கப்பட்டார்கள்.

கவர்ன்மெண்ட் அவுஸில இடைவேளைச்சாப்பாடு விருந்து சிறப்பாக கவர்னரவர்களால் நடத்தப்பட்டது. அப்பொழுது சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் கப்பலிலிருந்து புறப்பட்டு கரைக்கு வந்தவுடன் ஜெனரல் பீட்ஸன் எதிர்கொண்டு இராஜதம்பதிகளை வரவழைத்தார். உடனே குதிரைப்படை முதலியவைகளைப் பார்வையிட்டார். "நமது ராஜன் வாழ்க" என்று பாண்டு வாத்திய முழங்கிற்று. உடனே பரிவாரங்களுடன் கவர்ன்மெண்ட் அவுஸுக்குச் சென்றார்கள். இங்கு வந்ததும் கவர்னர் சக்ரவர்த்தியையும் சக்ரவர்த்தினியையும் உள்ளே அழைத்துக்கொண்டுபோக அங்கு வரவழைக்கப்பட்டிருந்த உத்தியோகஸ்தர்கள பிரமுகர்கள் முதலியவர்களுடன் விருந்துண்டார்கள். லேடிஜீஜிபாயையும் வரவழைத்திருந்தார்கள். ஏதோ தேக அசௌக்கியத்தால் இம்மாத்துக்குப் போகமுடியாமற் போயிற்றும. பின்பு இராஜதம்பதிகள் மெடினுவுக்குச்சென்று அங்கு சிறிதுநேரமிருந்து விட்டு சாயங்காலம் மறுபடியும் கோயிலுக்குப் போனார்கள். போகும்பொழுது பரிவாரங்கள் சூழ்ந்து வந்ததுடன் பிரஜைகள் இராஜதம்பதிகளைக் கண்டுகளிக்கத்திரளாக தெருக்களில் கூடியிருந்தார்கள். கெதீட்ரல் சர்ச்சுக்குப் போனதும் லார்ட்பிஷப் கடவுளைப்பற்றி ஸ்தோத்திரமும் செய்து அவருடைய அபாரசக்தியைப்பற்றியும் பிரசங்கம்செய்தார். இதுமுடிந்ததும் மெடினுவுக்

குச் சென்றார்கள். இங்கு ஒருவிருந்து நடந்தது. பலகனவான்கள் வரவழைக்
கப்பட்டிருந்தார்கள்.

திங்கட்கிழமை காலையில் சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் பொருட்
காட்சியைப் பார்க்கச்சென்றார்கள். இங்கு 24,000 பாடசாலைப் பிள்ளைகள்
வரவழைக்கப்பட்டிருந்தார்கள். இவர்கள் 6 வயது முதல் 16 வயது வரை,
யிலுமுள்ளவர்களாயிருந்தார்கள். இவர்களை ராஜதம்பதிகள் கண்டு களிக்க
வந்தபொழுது இங்கிலீஷ், பார்ஸி, குஜராத்தி, மராட்டி, உருடு முதலிய
பாஷைகளில் அந்தந்த பாஷைக்குரிய பிள்ளைகள் ராஜகீதங்களைச் செவ்வனே
முகமலர்ச்சியுடன் பாடினார்கள். இவைகள் முடிந்தவுடன் பார்ஸிப்பெண்களும்
இந்துப்பெண்களும், "இராஜவாழ்த்துப் பாடல்களை நடனஞ்செய்துகொண்டு
பாடினார்களாம். இவர்கள் வெகு நன்றாகப் பாடினதையும், நடனஞ் செய்த
தையும் இராஜதம்பதிகளும், மற்ற பிரபுக்கள் முதலியோரும் மிகுந்த சந்தோ
ஷங்கொண்டு கரகோஷம் செய்தார்களாம். உடனே பொருட் காட்சிகளிரு
க்குமிடத்திற்குச் சென்று அங்குள்ளவைகளை யெல்லாம் கால் மணிநேரமிரு
ந்து பார்த்தார்கள். இந்த பொருட் காட்சியில் ராணிசக்ரவர்த்தினி சக்ரவர்
த்தி இவர்களைப்போல சித்திரம் எழுதிவைக்கப்பட்டிருந்ததாம். இதை இராஜ
தம்பதிகள் ஒற்றுப்பார்த்தார்களாம். சக்ரவர்த்தி ஒன்றும் சொல்லவில்லை.
ஆனால் ராணி சக்ரவர்த்தினியார் "நான் நிச்சயமாக இதைப்போல் தென்பட
வில்லையே" என்று வேடிக்கையாகச் சொன்னார்களாம். பின்பு அபாலோ
பந்தருக்குச் சென்றார்கள். வழியில் ஜனங்கள் ராஜ கீதங்களைப் பாடிக்கொண்
டிருந்தார்கள். 11 மணிக்கு மெடீனு கப்பலுக்குப் போனதும் மரியாதைக்
குண்டுகள் போடப்பட்டன.

செவ்வாய்க்கிழமையதினம் பிற்பகல் எலிபெண்டாகுகைகளைப் போய்ப்
பார்த்தார்கள். இங்கு குரங்குகளிருக்கின்றன. இவைகள யதேச்சையாய்
திரிந்துகொண்டும் பழம், கொட்டை முதலியவைகளைப் புசித்துக்கொண்டு
மிருக்கின்றன. இவைகளை ராஜதம்பதிகள் கண்டு மிக்க ஆநந்தங்கொண்டார்
கள். இவைகளுக்கு சக்ரவர்த்தியே ஆகாரங்களைக் கொடுத்தார். இவைகள்
சந்துஷ்டியாய் குழந்தைகளைப்போல் பற்களைக்காட்டிக்கொண்டும் சிரித்துக்
கொண்டும் விளையாடிக்கொண்டிருந்தது ஆச்சரியத்தையுண்டாக்கியதாம். சக்
வர்த்தினியார் ஒரு குரங்குக்குத் தின்பண்டங்களைக் கொடுத்துக்கொண்டிருக்
கும் சமயத்தில், இது சக்ரவர்த்தினியாருடைய டொப்பியைத் தாவிப்பிடித்
துக்கொண்டதாம். அப்பொழுது சக்ரவர்த்தினியார் நடுக்கங்கொள்ளவில்லை
யாம். ஆனால் அதிகசந்தோஷத்தால் சிரித்தார்களாம். உடனே உத்தியோகஸ்
தர்கள் ஓடிவந்து அந்தக் குரங்கு விட்டு அகலும்படி செய்தார்களாம். இத
னால் யாதொரு கெடுதலுமுண்டாகவில்லை யென்பதைக் கேட்கச் சந்தோ
ஷப்படுகிறோம்.

இன்றிரவு சாப்பாடு செய்து கொண்டு சரியாய் 10-மணிக்கு இந்தியா
மந்திரி மார்க்விஸ் ஆப்க்ருவோடும் (Margvis of crewe) டியூக் ஆப்டெக்
கோடும் வேறு சிலரோடும் மெடினகப்பலை விட்டுப் புறப்பட்டு 10-15-மணி
க்கு அப்பாலோ பந்தர் துறை முகத்தில் வந்திறங்கினார்கள். அவருடைய
பரிவாரத்தைச் சேர்ந்த மற்ற ஜனங்கள் ஏற்கெனவே கப்பலை விட்டிறங்கி
அப்பாலோ பந்தரில் வந்து காத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் துறை
முகம் வந்து சேர்ந்ததும் 101 மரியாதைக் குண்டுகள் போடப்பட்டன. அங்
கிருந்து விக்டோரியா டர்மினல் ஸ்டேஷனுக்கு ஊர்கோலமாகவே ராஜதம்



பதிகள் தங்களுடைய பரிவார ஜனங்களுடன் சென்றார்கள். முதல்வண்டியில்
சக்கரவர்த்தியும் சக்கரவர்த்தினியும் ஏறிக்கொண்டார்கள். 2-வது வண்டியில்
தம்பதிகளின் உடுப்புகளைஎடுத்துக்கொடுத்து வாங்கிவைத்துக்கொள்ளும்பொ
றுப்பேற்றமிஸ்டரஸ்ஆப்தி ரோப்ஸூம்இந்தியாமந்திரி மார்க்விஸ்ஆப் க்ருவும்
வேறிரண்டு பேரும்ஏறிக் கொண்டார்கள். 3-வது வண்டியில் ஷாப்டஸ்பரி
கவுண்டஸ்ஸூம், (Countess of Shaftesbary) டியூக் ஆப்டெக்கும் (Duke
of Teck) மகாராணி சக்ரவர்த்தினிக்கு லார்ட்சேம்பர்லேனும, லார்ட ஸ்டாம்
போர்டாமும் ஏறிக்கொண்டார்கள். 4-வது வண்டியில் ஆனரெபில் வெனி
ஷியா பேரிங்கும் (Hon'ble Venetia Baring) லார்ட் ஹைஸ்டுவார்ட்டும்,
(Lord High Steward) ரியர் அட்மிரல் ஸர் கோலின் கெப்பலும், (Rear
Admiral Sir Colin Keppel) ஏறிக்கொண்டார்கள்.

அப்பாலோ பந்தர் முதல் ஸ்டேஷன் வரை எந்தப் பக்கம் திரும்பினு
லும் ஜோதி மயமாகவே காணப்பட்டது. ஜனங்களும் வழி நீளமொய்த்து
நின்று ராஜதம்பதிகள் தங்களைக்கடந்து செல்லும்போது மனவெழுச்சி மேலி
ட்டு ஆர்ப்பரித்த வண்ணமாயிருந்தார்கள். விக்டோரியா டர்மினஸ் ஸ்டே
ஷன் வெகு நேர்த்தியாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஸ்டேஷனுக்குள்ளே
பிரயாணமேடை யெங்கும் சிவப்பு நடைபாவாடை விரிக்கப்பட்டிருந்தது.
தூண்களெல்லாம் சிவப்புத் தோச்சீலையால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.
தூண்களின் அடிப்பக்கத்தின் அழகை யதிகப்படுத்த பச்சைச் செடி கொடி
கள் சேர்த்து வைத்துக் கட்டப்பட்டிருந்தன. ஸ்டேஷனுக்கு வெளியே பல
வர்ண வெளிச்சங்கள் ஆயிரக்கணக்காய்ப் போடப்பட்டிருந்தன.

ஊர்கோலம் ஸ்டேஷன் வந்து சேர்ந்ததும் ராஜதம்பதிகளை பம்பாய்க்
கவர்னர் ஸர்ஜார்ஜ் கிளார்க்கும் லேடி கிளார்க்கும், பம்பாய் சீப்ஜஸ்டிஸூம்,
கவர்னரின் நிருவாகச்சபை மெம்பர்களும், பம்பாய் பிரி
பம்பாய் பிஷப்பும், கவர்னரின் நிருவாகச்சபை மெம்பர்களும், பம்பாய் பிரி
கேட் தலைமை வகிக்கும் ஜெனரல் ஆபிஸரும், போலீஸ் இன்ஸ்பெக்டர்
ஜெனரலும், முனிசிபல் கமிஷனரும், போலீஸ் கமிஷரும், எக்ஸிகியூடிவ்
இஞ்சினீரும், கவர்மெண்ட் ராஜாங்க இலாகா அண்டர் செக்ரெட்டேரியும்,
தெற்கு ரேஞ்ச் போலீஸ்டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரலும் எதிர்கொண்டு
சென்று வரவேற்று அவர்களையும் அவர்களுடைய பரிவார ஜனங்களையும்
ஏற்றிச்செல்ல சித்தமாய் நின்றுகொண்டிருந்த ராயல் ஸ்பெஷலுக்கு அழை
த்துச்சென்றார்கள். அந்தஸ்பெஷலில் 10-வண்டிகள் கோர்க்கப்பட்டிருந்தன.
முதல் வண்டியில் ரெயில்வே சிப்பந்திகள் ஏறிக்கொண்டார்கள். இரண்டா
வது வண்டியில் டியூக் ஆப்டெக்கும் வேறு சிலரும் ஏறிக்கொண்டார்கள்.
அவைகளை யடுத்தாற்போல இரண்டு ஸலூன்கள் (Saloon) சேர்க்கப்பட்டிரு
ந்தன. ஒரு ஸலூனில் மேரி சககரவர்த்தினி ஏறிக்கொள்ள மற்றொன்றில்
ஜார்ஜ் சககரவர்த்தி ஏறிக்கொண்டார்.

ராயல் ஸலூன்களுக்குப் பின்னே சேர்க்கப்பட்டிருந்த வண்டியில் இந்
தியா மந்திரி மார்க்விஸ் ஆப் க்ருவும், லார்ட் ஸ்டாம் போர்டாமும், வேறே
3-பேரும் ஏறிக்கொண்டார்கள். அதற்குப் பின்னிருந்த வண்டிகளில் டிவான்
ஷயர் டச்சஸ்ஸூம், (Duchess of Devonshire) ஆனரபில் வெனிஷீயா
பேரிங்கு (Hon'ble Venetia Baring), எரல் ஆப்டார்ஹாம் (Earl of Dur-
hum), எரல் அண்ட் கவுண்டஸ் ஆப் ஷாப்டஸபரி (Earl and Countess
of Shaftesbury) இவர்களும் பணிபெண்களும் ஏறிக்கொண்டார்கள். இதற்
குள்ளாக ராயல் ஸ்பெஷல் புறப்படும் சமயமாய்விட ராஜதம்பதிகள் அங்கு

தங்களை வழியனுப்ப வந்திருந்தவர்களுடன் கைகுலுக்கி விடை பெற்றுக் கொண்டார்கள். ஸ்பெஷல் வண்டித் தொடரும் பிரயாண மேடையிலிருந்தோர் ஜயகோஷம் செய்ய ஸ்டேஷன் முற்றத்தைவிட்டு 10-45-க்கு நகர்ந்தது.

### பம்பாய்க் கவர்னரின் புறப்பாடு.

அப்புறம் கால்மணி நேரங் கழித்து இரண்டாவது பிளாட்பாரத்தில் தாம் ஏறிச் செல்வதற்குச் சித்தமாய் நின்று கொண்டிருந்த ஸ்பெஷலில் பம்பாய் கவர்னர் ஸர் ஜார்ஜ் கிளார்க் லேடி கிளார்க்குடனும் தமது பரிவாரத்துடனும் ஏறி டெல்லிக்குப் பிரயாணமானார்.

### ராஜதம்பதிகள் வழங்கிய ஞாபகப் பரிசுகள்.

செவ்வாய்க்கிழமை யிரவு ராஜதம்பதிகள் அப்பாலோ பந்தர் வந்து சேர்ந்ததும், பம்பாய்க்குத்தாம் விஜயம் செய்த காலத்தில் வந்திருந்த ராணுவப்படைகளின் தலைமையை வகித்த ஆபீஸருக்கு, தம்முடைய உருவப்பட மொன்றையும் மேரி சக்கரவர்த்தினியின் உருவப்பட மொன்றையும் அவைகளின் அடியில் தம்முடைய கைச்சாத்தை யிட்டுத் தம்முடைய பம்பாய் விஜய ஞாபகப் பரிசுகளா யிருக்கும்படி ஜார்ஜ் சக்கரவர்த்தி வழங்கினார். அவர் ராயல் யாட்ச்கிளப் (Royal Yacht Club) காமடோர் (Commodore) ஜெனரல் ஸ்வானுக்கு அந்த கிளப்பில் தங்களுடைய பம்பாய் விஜய ஞாபகப்பரிசாய் வைக்கப்படும்படியாய் தங்கள் இருவரின் போட்டோக்கள் அடங்கிய உருவப்பட மொன்றை வழங்கினார். வேறு சிலருக்கும் வேறு சில பரிசுகள் வழங்கினார். ரெயில்வே ஸ்டேஷனில் ஜெனரல் கிரிம்ஸ்டன் மூலமாய் ஸ்டேஷன் சூபரிண்டெண்டண்ட் மிஸ்டர் ஹாரி நைட்டுக்கு G. R. I. என்று ராஜக்குறி எழுத்துக்கள் வெட்டப்பட்டிருந்த ஒரு ஜோடி தங்க ஸ்லீவ் லிங்க்ஸ் (Gold Enamelled sleeve links) வழங்கினார்.

### டெல்லியில் சக்கரவர்த்தியின் விஜயம்.

டிசம்பர்மீ 7உ சகல வைபவங்களுடன் நமது சக்கரவர்த்தியும் சக்கரவர்த்தினியும் டெல்லிமாநகரம் வந்துசேர்ந்தார்கள். அப்பொழுது அவர்களுக்கு ராஜப்பிரதிநிதி சட்டசபை வைஸ் பிரசிடெண்டாகிய ஆனரபில் மிஸ்டர் ஜங்கின்ஸ் ஒரு விக்ஞாபனப்பத்திரம் வாசித்தார். இதற்கு சக்ரவர்த்தி பின்வருமாறு பதில் அருளினர்:—"மகாராணிச் சக்கரவர்த்தினிபேராலும் நாம் சொந்தமாயும் உங்களுடைய பக்தி விசுவாசம் வாய்ந்து வணக்கமான விக்ஞாபனப் பத்திரத்துக்காக உங்களிடத்தில் மனப்பூர்வமாய் வந்தனம் செலுத்துகிறேன். அதன் வார்த்தைகள் எங்களுக்கு ஆழ்ந்த நெகிழ்ச்சியையுண்டு பண்ணுகின்றன. இங்கிலாந்தில் நாங்கள் மகுடாபிஷேகம்செய்து கொண்டபோது என்னுடைய ராஜ்யத்தில் பல பாகங்களிலிருந்தும் அன்பார்ந்த பக்திகாட்டி கணக்கற்ற செய்திகள் வந்ததுபோல இந்தியாவும் அனுப்பினசெய்தியை அவைகள் ஞாபகப்படுத்துகின்றன. இத்தேசத்தில் நாங்கள் அடிவைத்தது முதல் இந்த அன்பார்ந்த பக்தி என்னுடைய எல்லாவகுப்பு இந்தியப்பிரஜைகளாலும் பாராட்டப்பட்டு வருகின்றது. என்னுடைய கவர்னர் ஜெனரல், அவருடைய சட்டசபை மெம்பர்கள் காட்டும் விவேகத்தாலும் அனுபோகத்தாலும் எவ்வளவு பலத்தையும் ஆதரவையும் பெறுகிறேனென்று சொல்ல அறிவேன். இவர்கள் பிரிட்டிஷ் இந்தியாவினுடைய



பொறுக்கியெடுத்த பிரதிநிதிகள். இந்திய ஜனங்களுடைய பெயரால் நீங்கள் எனக்குச்செய்யும் நல்வரவை நான் முற்றிலும் மதிக்கிறவனாயிருக்கிறேன். இந்திய ஏகாதிபத்தியம் அமைதியும் வளப்பமும் திருப்தியுமான வழிகளில் முற்படவேண்டுமென்று உங்கள் விக்ஞாபனப்பத்திரிகையில் நீங்கள் சொல்லுவதுபோல அது முற்படுவதைவிட எங்கள் இருதயத்துக்குப் பிரியமான நோக்கம் எதுவுமில்லையென்று நான் சொல்லுவதை உறுதியாய் நம்புங்கள்."

வெள்ளிக்கிழமை டிசம்பர் 8உ பிற்பகல் 3-30க்கு எட்வர்டு அரசர் ஞாபகச்சின்னச் சடங்குநடந்தது. அச்சமயத்தில் பின்வருமாறு லார்ட் ஹார்டிஞ்ச் விக்ஞாபனப்பத்திரத்தைப் படித்தார்:—"தங்களுடைய அருமையும் அன்பும் வாய்ந்த பிதாவாகிய எட்வர்ட் சக்கரவர்த்தியினிடம் அவர் பூஜியதையை அறிந்து அவரிடத்தில் அபிமானமும் பக்தியும் காட்டி அநேகாயிரம் ஜனங்கள்செய்த பணவுதவியால் நிர்மாணிக்கப்பட்ட இந்த ஞாபகச்சின்னத்தை ஸ்தாபிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்தக் கற்பலகையின் மீது அதற்கு அலங்காரமாகச் சமீபத்தில் ஸ்தாபிக்கப்போகும் உருவச்சிலையானது எட்வர்ட் சக்கரவர்த்தி காலத்தில் நிலைத்திருந்த அமைதிக்கும் நீதிக்கும் வளப்பத்துக்கும் உறுதியான ஞாபகமாக விளங்கும்; அவர் இவ்வாறு மனந்தளராமல் நிறைவேற்றின கடமைக்கும் உயர்ந்த லட்சியங்களுக்கும் அமைதிக்குரிய மேன்மை பெற்ற வெற்றிகளுக்கும் தக்க வெகுமதியை அடைந்தார். சரித்திரத்தினால் உண்டாகும் நினைப்புகளும் சௌரியமுள்ள காரியங்களும் நிறைந்த இந்தப் பேர்போன பட்டணத்தில், தங்களுடைய பூஜ்யமான பேர்பெற்ற பிதாவின் உருவச் சிலையானது, சென்றகாலத்து ராஜவமிசங்களின் செய்கைகளுக்கும் தங்களுடைய பெரிய ஏகாதிபத்தியத்தில் வசிக்கும் கணக்கற்ற ஜனங்களின் பக்திக்கும் காவலன் போல நிற்பதுமன்றி, இங்கிலண்டும் அதை யாளுவோரும் இந்தியாவுக்கும் அதன் ஜனங்களுக்கும் காட்டும் அன்பும் இந்தியாவை உயர்ந்த லக்ஷியங்களிலும் பெரும் விருப்பங்களிலும் நடத்தவேண்டு மென்கிற விருப்பமும் வன்மையும் அழியாத உருவத்தைப் பெற்றதுபோல நிற்கும். இப்போது இந்தக் கல்லை ஸ்தாபிக்கக் கேட்டுக்கொள்வதில் ஒரு மேன்மைபெற்ற அரசனின் ஞாபகச் சின்னத்தை இந்தியப் பிரஜைகள் அதை பக்தியுடன் பத்திரப்படுத்தவும் நமக்குப் பின்வருவோர் சேவாஞ்சலிசெய்து கௌரவப்படுத்தும்படியும் விட்டுவைக்கிறோம்."

ஹிஸ் இம்பீரியல் மாஜெஸ்டி சொன்ன பதிலாவது—"நீங்கள் வாசித்த விக்ஞாபத்திரமானது என்னுடைய அன்புள்ள பிதாவுக்கு நாமெல்லோரும், விசேஷமாய் நான், செலுத்தவேண்டிய கடமையை ஞாபகப்படுத்தி என் சித்தத்தை உருக்குகின்றது. என்னுடைய வமிசத்தில் இந்தியாவைப் பார்க்கவந்தவர் அவர்தான் முதல்; அவருடைய கட்டளையின் பேரிலேயே நான் ஆறு வருஷத்துக்கு முன்னால் இந்த மகத்தான ஆச்சரியப் படத்தக்க தேசத்தைப் பார்க்கவந்தேன். அப்போது அவர் மரணத்தைப்பற்றி இவ்வளவு சீக்கிரத்தில் துக்கப்படவேண்டிவருமென்று நாம் நினைக்கவில்லை. இந்த ஞாபகச் சின்னத்திற்கு என் பிதாவை நேரிற்கண்டு அறிமுகம் பெறும்படியான பாக்கியத்தைபெற்றவர்கள் மட்டுமல்லாமல் இந்தியாவிலுள்ள அவருக்கும் எனக்கும் பிரஜைகளாயுள்ள ஆயிரக்கணக்கான ஜனங்கள் செய்த பணவுதவியைக்கொண்டு இந்த ஞாபகச்சின்னம் நிர்மாணிக்கப்படுகிறதென்று உங்கள் விக்ஞாபனப் பத்திரம் சொல்லுகின்றது. அவர் இந்தியாவில் ஆழ்ந்து நிலைக்

கும்படியாய்க்கொண்ட கவலையானது இந்திய மக்களுடைய ஹிருதயத்தில்
பிரதியுணர்ச்சி யுண்டாக்கினதென்று நான் சந்தோஷப்படுகிறேன்.
நேர்த்தியானதும் சரித்திரத்தில் நிலைக்கும்படியானதுமான இடத்தில்
இந்தச் சிலையானது மேலான ஞாபகச்சின்னமாயிருக்குமென்றும், அவரிடம்
உங்களுக்கிருக்கும் அன்பையும் அவருக்கு உங்களிடத்திலிருந்த அனுதாபத்
தையும் நம்பிக்கையையும் இனிப் பிறக்கும் தலைமுறைகளுக்கு அது ஞாப
கப்படுத்துமென்றும், என்னுடைய வம்சத்தினருக்கும் இந்தியாவுக்கும்
இத்தகைய உணர்ச்சிகள் பரம்பரையாய் நிலைக்குமென்றும், நம்பி சந்தோ
ஷப்படுகிறேன்.''

## சக்கரவர்த்தினி இந்திய சீமாட்டிகளை வரவேற்றது.

டிசம்பர்மீ 9-ந்தேதி காலையில் மேரி சக்கரவர்த்தினி சில இந்திய சீமா
ட்டிகளை ஒரு படுதாக்கச்சேரி செய்து வரவேற்றனர். இந்த கௌரவத்தைப்
பெற்ற சீமாட்டிகளில் விஜயநகரம் ராஜாவின் சிறு குமாரத்தி ஒருவர். லேடி
ஹார்டிஞ்ஜ் உபசாரப்பத்திரம் வாசித்து தமது இந்திய சகோதரிகள் பேரால்
ஒரு நேர்த்தியான ஆபரணத்தை அருமையும் உற்சாகமுமான இந்த சமயத்
தின் ஞாபகார்த்தமாக மகா ராணி சக்கரவர்த்தினிக்கு சமர்ப்பித்தனர். இந்த
உபசாரப்பத்திரத்துக்கு ஹர்மாஜெஸ்டி பின்வருமாறு பதில் சொல்லியருளி
னர்:—

''நீங்கள் என்னை வரவேற்ற அழகான தன்மையினால் என்மனம் நெகிழ்
கின்றது. இந்த ஏகாதிபத்தியத்தில் வசிக்கும் சகோதரிகள் எங்களை சாந்தமா
ய்வரவேற்று பக்தியுடன் சேவாஞ்சலி செய்ததற்காக என்னுடைய வந்தன
த்தை நீங்கள் ஒப்புக்கொண்டு அவர்களுக்கு அறிவிப்பீர்களென்று நம்பு
கிறேன். ஜனானாவில் வசிப்போர்களின் க்ஷேமத்துக்கும் சந்தோஷத்துக்கும்
எனக்கு எப்போதுமுள்ள கவலையைப்பற்றி உங்களுக்கு உறுதி சொல்லு
கிறேன். இந்திய ஸ்திரீகள் அவரவர் கிரகத்தில் எவ்வளவு சிறந்த செல்வாக்
கைச் செலுத்தக் கூடுமென்று சரித்திரங்களின் பக்கங்கள் எடுத்துரைக்கின்
றன. இத்தேசத்து மேன்மை தங்கிய ஜாதியாரின் சரித்திரத்தை, தாய்மார்
கள் அவர்களுடைய மக்களின் மனசிலும் இருதயத்திலும் பதியச் செய்த
பாடங்களின் பலனாக மகத்தான ஊழியத்தையும் சமரஜித பக்தியையும் காட்
டும் செய்கைகள் வர்ணித்திருக்கின்றன. பர்தாவில் வசிக்கும் ஸ்திரீகளுள்
மெதுவாயும் நிச்சயமாயும் நிகழும் விரிவைப்பற்றி நான் வெகு திருப்தி
யுடன் கேள்விப்பட்டிருக்கிறேன். உங்கள் குழந்தைகள் கல்வி கற்றவர்களா
யிருக்க வேண்டுமென்பது உங்களுடைய விருப்பமென்று நம்புகிறேன்; அப்
படி கல்வி கற்பார்களானால் அவர்கள் பிற்காலத்தில் புருஷர்களுக்கு உபயோ
கமும் பயிற்சியும் பெற்ற தோழர்களாவார்கள். நீங்கள் எனக்குக் கொடுத்த
ஆபரணமானது என் நோக்கத்தில் அதிக மதிப்பேறினதாயிருக்கும்; நான்
அதைப் பூணும்போதெல்லாம், ஆயிரக் கணக்கான மைல்கள் தூரமுள்ள
தரையும் ஜலமும் என்னைப் பிரித்தபோதிலும், என்னுடைய எண்ணங்கள்
இந்தியாவின் ஜனானாக்களை நோக்கியோடி, இப்படி நாம் இன்று சந்தோஷ
மாய்ச் சந்தித்ததைத் திருப்பித்திருப்பி நினைப்பூட்டி, உங்களுடைய கசிந்த
இருதயம் எனக்குத்தந்த அன்பை ஞாபகப்படுத்தும். நீங்கள் கொடுத்த
ஆபரணம் ஒரு ஏகாதிபத்திய ஆர்ஜிதமாகப் பின்தலைமுறைகளுக்குப் போய்



ஒரு ஆங்கில அரசி இந்திய சீமாட்டிகளை முதல் தடவையாகச் சந்தித்ததற்கு
அடையாளமாய் எப்போது மிருக்கும். சக்கரவர்த்தி யிடத்தும் என்னிடத்
தும் நீங்கள் தெரிவித்த சந்தோஷத்துக்காகவும் நல்ல விருப்பங்களுக்காகவும்
நான் நன்றியுள்ளவளாயிருக்கிறேன். இந்த ராஜபம் ஒன்றாகச் சேர்ந்திருந்து
வல்லமையும் சுகமும் பெற்றிருக்கவேண்டுமென்று நீங்களும் நானும் சேர்
ந்து பிரார்த்திப்போமாக.''

டிசம்பர் மாசம் 12உ ராஜவிளம்பரம் வாசிக்கப்பட்டவுடன் சுவர்ணத்
தால் செய்து இரத்தினங்கள் இழைத்த மதிப்பேறின சிம்மாசனங்களில்
வீற்றிருந்து பீரங்கிகள் வெடிதீர கட்டியக்காரர்கள் கட்டியங்கூற வாத்தியங்
கள் முழங்க சக்கரவர்த்தி தர்பாரை யாரம்பிக்கக் கட்டளையிட்டனர். சப்
தம் அடங்கினதும் சகல ஜனங்களும் சக்கரவர்த்தி பேசுவதை எதிர்பார்த்து
மௌனமாயிருக்க, அவர் பின்வருமாறு பேசினார்:—

''இன்று இங்கே உங்கள் மத்தியில் நான் நிற்பது எனக்கு உண்மையான
திருப்தியையும் நன்றியுணர்ச்சியையும் கொடுக்கின்றது. இந்த வருஷமெல்
லாம் மகாராணி சக்கரவர்த்தினிக்கும் எனக்கும் அனேக பெருஞ்சடங்கு
களும் எப்போதுமில்லாத உழைப்பும்பளுவாயிருந்தபோதிலும் அதனால் என
க்கு சந்தோஷமே உண்டாயிற்று. இந்தியாவை முன்னொருதடவை வந்து
பார்த்து அதன் ஞாபகம் எங்கள் மனதில் நன்றியை யுண்டுபண்ணி அப்
போது இந்த தேசத்தை நாங்கள் அன்புடன் கருதத் தெரிந்துகொண்டோ
மாதலால், காலத்தையும் தூரத்தையும் பாராமல் மறுபடியும் வந்து பார்க்க
உற்சாக முண்டாயிற்று. இங்கிலாந்திலிருந்து இந்த நீண்ட யாத்திரை செய்ய
பிரகாசமான கோரிக்கைகளுடன் புறப்பட்டோம். இங்கே வந்த பிறகு எங்
கள் சொந்த தேசத்து அன்பைப்போல இங்கும் அன்பு பாராட்டப்படு
கின்றது. இப்படிச் செய்ததனால் சென்ற ஜூலை மாதம் தெரிவித்த செய்தி
யில் கண்ட விருப்பப்படி நடத்தியிருக்கிறேன். அந்தச் செய்தியில் இங்கி
லண்டில் வெஸ்ட் மினிஸ்டர் ஆபியில் நான் செய்துகொண்ட மகுடாபி
ஷேகத்தை நேரில் உங்களுக்கு அறிவிப்பேன் என்று விளம்பரப்படுத்தி
னேன். அப்போது கடவுள் கிருபையால் என் முன்னோர்கள் தரித்த கிரீட
மானது சகல உற்சவச்சின்னங்களுடன் பழைய சடங்குப்படி என் சிரசில்
வைக்கப்பட்டது. மகாராணி சக்கரவர்த்தியுடன் நான் இங்கே வந்து இந்தி
யாவிலிருக்கும் பக்தியுள்ள மன்னவர்களுக்கும் விசுவாசமுள்ள ஜனங்களுக்
குப் எங்களுடைய அன்பைக் காட்டக் கவலை கொண்டிருக்கிறேன். இந்திய
ஏகாதிபத்தியத்தின் க்ஷேமமும் சந்தோஷமும் எங்கள் இருதயத்துக்கு எவ்
வளவு அருமையென்பதைக் காட்டவும் கவலைகொண்டிருக்கிறேன். என்னு
டைய மகுடாபிஷேகக் கொண்டாட்டத்திற்கு வர இயலாதவர்களை டெல்லி
மாநகரத்தில் சேர்த்து அந்தக் கொண்டாட்டத்தில் பங்குபெறச் செய்யவும்
விரும்புகிறேன்.''

''இந்தப் பெருங்கூட்டத்தைப் பார்க்க எனக்கும் சக்கரவர்த்தினிக்கும்
உண்மையானசந்தோஷமும் திருப்தியும் உண்டாகின்றன. என்னுடைய கவர்
னர்களையும்,நம்பிக்கைபெற்ற உத்தியோகஸ்தர்களையும், என்னுடையமேலான
மன்னர்களையும், ஜனப்பிரதிநிதிகளையும், என் இந்தியசமஸ்தானங்களைச் சேர்
ந்த ராணுவங்களின் டெபிடேஷன்களையும், இந்தக்கூட்டத்தில் பார்த்துச்
சந்தோஷமும் திருப்தியும் அடைகின்றேன். அவர்கள் எனக்கு பக்தியுடன்
செலுத்த விரும்பும் சேவாஞ்சலியையும் நிஷ்டையையும், மனப்பூர்வமான

திருப்தியுடன் நான் நேராகப்பெறுவேன். சரித்திரத்தில் நிலைபெறக்கூடிய
இந்தசமயத்தில் மன்னர்களும் ஜனங்களும்ஒற்றுணர்ச்சியையும்அன்புவாய்ந்த
நல்லெண்ணத்தையும் பாராட்டி என்னோடு ஒன்றாகச் சேர்ந்திருக்கிறார்களெ
ன்ற எண்ணம் என்மனதில் ஆழப்பதிகின்றது. இந்த உணர்ச்சிகளுக்கு அறி
குறியாக என்னுடைய விசேஷ தயவையும் மதிப்பையும் காட்டும் குறி
களால் என்னுடைய மகுடாபிஷேகசம்பவம் ஞாபகத்திலிருககும்படி செய்ய
விரும்புகிறேன். இன்று இன்னும் சிலநேரம் பொறுத்து இவைகள் இன்
னவையென்று இந்தக் கூட்டத்துக்கு என் கவர்னர் ஜெனரலைக்கொண்டு
சொல்லிவிப்பேன். முடிவில் என்னுடைய பூஜியர்களான மூதாதைகளால் உங்
களுடைய சுதந்திர பாத்தியங்களைக் காப்பதாகச்செய்த உறுதிகளை நான்
புதிப்பிக்க அந்த சமயம் வாய்த்ததென்று நான் சந்தோஷப்படுகிறேன். உங்
களுடைய க்ஷேமம், அமைதி, திருப்தி இவைகளைப்பற்றியும் நான் கொள்
ளும் கவலையைத் தெரிவிக்கச் சமயம் நேரிட்டதென்றும் சந்தோஷப்படு
கிறேன். என்னுடையபிரஜைகளுக்குக் காவலாய் கடவுள் அருள் இருந்து அவ
ர்களுடைய சந்தோஷத்தையும் வளப்பத்தையும் முற்படுத்த என்னாலியன்ற
முயற்சியில் உதவி புரிவாராக. இங்கிருக்கும் சாமந்த மன்னர்களுக்கும் பிர
ஜைகளுக்கும் எங்களுடைய அன்புவாய்ந்த வாழ்த்துக்களைச் செய்கிறோம்."

## மகுடாபிஷேக நன்குடைகள்.

(1) கீழ்த்தரப்படிப்பை விருத்தி செய்வதற்கு இந்த வருஷம் ஒரே
தடவையாய் 50-லட்சம் ரூபாயும் இனி வருஷாவருஷம் இதற்காகத் தாராள
மான பணவுதவியும் கொடுக்கப்படும்; (2) ராணுவத்தைச் சேர்ந்த உத்தி
யோகஸ்தர்களில் 50-ரூபாய்க்குக் குறைந்த சம்பளமுள்ளவர்களுக்கு அரை
மாதச் சம்பளம் இனாம் கொடுக்கப்படும்; (3) ராணுவத்தில் இந்திய உத்தி
யோகஸ்தர்களுக்கு "விக்டோரியா கிராஸ்" என்ற உயர்ந்த கௌரவமான
பட்டம் இதுவரையில் கொடுக்கப்படாதிருக்க, இனி அவர்களில் யுத்தத்தில்
சௌகரியம் காட்டுவோருக்கு இந்தப்பட்டம்ஐரோப்பியரைப்போலக் கொடு
க்கப்படும்; (4) இந்திய சைனியத்தில் சில உத்தியோகஸ்தர்களுக்கு இனாமாக
நிலங்கள் கொடுப்பதும் அல்லது வரிவஜா செய்வதும்அல்லது அவர்கள் இற
ந்துபோனால் அவர்கள் சம்ஸாரத்துக்கு இப்போது மூன்று வருஷத்துக்குக்
கொடுக்கப்படும் பென்ஷனானது ஆயுள் பரியந்தமாவது மறுவிவாகம்செய்து
கொள்ளுங்காலம்வரையிலாவதுகொடுக்கப்படும்; (5) கவர்ன்மெண்டின் சிவில்
உத்தியோகஸ்தர்களில் 50 ரூபாய்க்குக் குறைந்த சம்பளமுள்ளவர்களுக்கு
அரைமாதச்சம்பளம்இனாமாகக்கொடுக்கப்படும்; (6) திவான்பகதூர், ராய்பக
தூர், ஸர்தார்பகதூர், கான்பகதூர், கான்சாகிப், ராய்சாகிப் அல்லது ராவ்சாகிப்,
இந்தப்பட்டங்கள் பெறுகிறவர்களுக்கு அடையாளமாக பாட்ஜ்கள்கொடுக்கப்
படும்; மகாமகோபாத்தியார் அல்லது ஷாமஸ்-உல்-உமா என்ற பட்டத்தை
இப்போது தறிக்கிறவர்களாயிருந்தாலும் அல்லது இனி தரிப்பவர்களாயிருந்
தாலும் அவர்களுக்குப் பென்ஷன்கொடுக்கப்படும்; (7) வடமேற்குமாகாணத்
திலும் பெலுசிஸ்தானிலும் உள்ள சில உத்தியோகஸ்தர்களுக்கு இனாம்
நிலங்கள் கொடுக்கப்படும், அல்லது வரி இல்லாமற் செய்யப்படும்; (8) இந்
திய மன்னர்கள் பட்டத்துக்கு வரும்போது 'நஸரானா'ப் பகுதி இனி கவர்ன்
மெண்டுக்குக் கொடுக்க வேண்டியதில்லை; கத்தியவார், குஜராத்து, மீவாரி



லுள்ள பூமியாத்தலைவர்கள், இவர்கள் கவர்ன்மெண்டுக்குக் கொடுக்க வேண்டி
யிருந்த சில கடன் தொகைகள் முழுமையுமாவது வஜா செய்யப்படும்; இம்
பீரியல் சர்விஸ் துருப்புகளில் சிலருக்கு "ஆர்டர் ஆப் பிரிட்டிஷ் இந்தியா"
என்ற பட்டம் புதிதாய்ச் சிருஷ்டித்துக் கொடுக்கப்படும்; (9) சில கைதி
களுக்கு முழுவிடுதலையாவது தண்டனையைக் குறைத்தலாவதுசெய்யப்படும்;
சிவில் ஜயில்களிலிருப்பவர்களுக்கு அவர்கள் கொடுக்கவேண்டிய கடன்கள்
சொற்பமாகயிருந்து மோசக்கருத்தில்லாமலிருக்கும் பட்சத்தில் அவைகளைக்
கவர்ன்மெண்ட் கொடுத்து அவர்களை விட்டுவிடுவார்கள்.

## தர்பார்முடிவில் சக்ரவர்த்தி யவர்களுடைய முக்கியமான நிர்வாகத் திருத்தங்கள்.

சக்கரவர்த்தி யவர்கள் தர்பார் முடிவில் சில முக்கியமான நிர்வாகத்
திருத்தங்களுக்குத் தாம் அனுமதி கொடுத்திருப்பதாக விளம்பரப்படுத்தி
னார். இந்தத் திருத்தங்கள பின்வருமாறு சக்கரவர்த்தியினால் வெளியிடப்
பட்டன:

"தர்பார் முடிவில் நமது ஜனங்களுக்கு நாம் வெளியிட விரும்புவதாவது:
ஆலோசனைச் சபையிலுள்ள நமது கவர்னர்ஜெனரலோடு ஆலோசனைசெய்து
நம்மந்திரிகள் நமக்குச் சொன்னபடி இந்தியாக் கவர்ன்மெண்டின் ராஜஸ்தலம்
கல்கத்தாவிலிருந்து பழய ராஜஸ்தலமாகிய டெல்லிக்கு மாற்றுவதாக நிச்ச
யம் பண்ணிவிட்டோம். அதே காலத்தில் இந்த மாறுதலின் பயனாக, வங்
காளமானது ஒரு பிரசிடென்ஸியாக்கப்பட்டு அதற்கு ஒரு கவர்னர் நியமிக்
கப்படுவார். பேஹார், ஒரிஸ்ஸா, சோடா நாக்பூர், இந்த மூன்று மாகாணங்
களையும் சேர்த்து ஒரு லெப்டினெண்ட் கவர்னரும் நிர்வாக சபையும் நியமிக்
கப்படுவார்கள்; ஆஸாம் மாகாணம் ஒரு சீப் கமிஷனருக்குள் இருக்கும்.
இப்படி புதிதாய் சிருஷ்டிக்கப்பட்ட மாகாணங்களின் எல்லைகளும் நிர்வாக
மும் ஆலோசனை சபையிலுள்ள நமது இந்தியா செக்ரிடெரியின் சம்மதத்
தின்பேரில் ஆலோசனைச் சபையிலுள்ள நமது கவர்னர்ஜெனரல் அவசிய
மானபடி அமைப்பார். இந்தத் திருத்தங்களால் இந்தியா இப்போதைவிட
நன்றாய் நிர்வகிக்கப்பட்டு நமது அன்புள்ள பிரஜைகளின் அதிகமான வளப்
பத்துக்கும் சந்தோஷத்துக்கும் அவைகள் ஹேதுவாகுமென்று நாம் மனப்
பூர்வமாய் விரும்புகிறோம்."

புதன்கிழமையதினம் டெல்லி முனிசிபாலிடியார் அளித்த அட்டரஸு
க்குப் பின்வருமாறு பதில் கூறினார்கள்:—"உங்களுடைய விக்ஞாபனப் பத்
திரத்தில்கண்ட வரவேற்புக்கும் நற்சிந்தனைக்கும் நானும் சக்கரவர்த்தினியும்
நன்றி யுள்ளவர்களா யிருக்கிறோம். சில மாசங்களுக்கு முன்னால் இந்தியா
வில் தோன்றும்போலிருந்த எப்போது மில்லாத வரட்சியால் நாங்கள் இத்
தேசத்துக்கு வரும்சமயம் சந்தோஷ மற்றுப்போமென்று பயப்பட்டோம்.
ஜனங்களுடைய க்ஷேமமானது பருவமழையினாலும் பூமியின் நல்ல விளைச்
சலாலும் பாதிக்கப் படுகிறபடியால் நம் பிரஜைகளின் பெரும்பான்மையோ
ருக்கு இந்தவரட்சி துக்ககரமான ஆபத்தாய் முடியுமென்று பயந்தோம்.
இப்போது இந்த வரட்சியானது விஸ்தீரணத்தில் குறைந்து போயிற்றென்
றும், போக்குவரத்து வசதிகளும் பாசனவேலைகளும் அதிகப்பட்டிருப்ப
தால் பூர்வம் பஞ்சத்தால் ஜனங்கள்வருந்தி மாண்டதுபோல இப்போது

வருந்தி மாளமாட்டார்க ளென்றும் சந்தோஷப்படுகிறோம். மற்றவழிகளிலும் இந்தியாவின் விவசாய நிலைமைதிருந்தி யிருக்கின்றது. விவசாயிகளின் அநுஷ்டானங்கள் பழயவழக்கத்தைப் பற்றினவரா யிருந்தாலும் பொறுமையும் உழைப்பும் சாமர்த்தியமும் உள்ளவர்கள். சமீபத்தில் சாஸ்திரத்தின் சாதகங்களால் விவசாயம் நன்மைபெற் றிருக்கின்றது. பூமி வளப்பத்தை அதிகப் படுத்துவதிலும் கால் நடைகளின் வியாதிகளுக்குச் சிகிச்சை செய்வதிலும் பூமியைப் பயிரிடுவோருக்குப் பயங்கரமான விரோதியா யிருக்கும் பூச்சிகளைக் கொல்லுவதிலும் சாஸ்திரப் பிரயோகத்தினால் பெரும் பலன்கள் பெறக்கூடுமென்று சில தினங்களாக நிரூபணமா யிருக்கின்றது. ஜனங்களுக்குள் ஐக்கியமுறையை யுண்டுபண்ணி முழுமையும் உபயோகப் படுத்தக் கூடுமானால் இத்தேசத்து விவசாய உரிமைகள் இனி பெருமையும் மகிமையும் பெறுமென்று நினைக்கிறேன்.

“எங்கள் வரவை நோக்கி உங்கள் நகரத்தை அலங்காரங்களால் தயார் செய்ய நீங்கள் செய்த முயற்சிகள் பயன்பட்டதை நாங்கள் உணர்கிறோம். சென்ற இருபது வருஷகாலமாக சுகாதார நிலைமையைச் சீர்ப்படுத்துவதில் நீங்கள் அசிரத்தையா யிருக்கவில்லை. உங்களுடைய வடிகால்களைச் செப்பனிட்டு நல்ல பயனைப் பெற்றிருக்கிறீர்கள். சுத்த ஜலத்தைப் பெற்று காலராமுதலிய தொற்று வியாதிகள் தோன்றாமற் செய்ததால் அதற்கான செலவுகள் நல்ல செலவுகளாகவே ஆயின. டெல்லியில் காடும் சதுப்புமா யிருந்த பூமியை விசாலமான தோட்டமாக்கி மேலாவைச் சுத்தப்படுத்தினபடியால் விஷஜுரம் எப்போதும் காணுவதுபோல் இந்த வருஷம் காணவில்லையென்று அறிகிறேன். என்னுடைய இந்தியப் பிரஜைகளுக்கு நல்ல சரீரசுகமும் பத்திரமும் உண்டாகும்படி இங்கு செய்த மாதிரி எங்கும் செய்யப்படுமென்று நான் மனப்பூர்வமாய் நம்புகிறேன். இந்த பயங்கரமான வியாதிகளாகிய பிளேக், விஷஜுரம், காலரா இவைகள் வராமலிருக்கும் உபாயம் ஜனங்களாலும் அவர்களுடைய தலைவர்களாலுமே செய்யப்படவேண்டும். அதிகாரிகள் செய்யும் சாஸ்திர பூர்வமான முயற்சிகளோடு இவர்கள் மனமொப்பி ஒத்துழைக்கவேண்டும். இந்தக் கொடும் வியாதிகளின் காரணங்கள் ஸ்தல நிலைமைகளைச் கற்பதாலும் ஆராய்ச்சியினாலும் வெகுவாய் அறியப்பட்டிருக்கின்றன; ஆனாலும் இன்னும் செய்யவேண்டியதுண்டு. எல்லாவற்றிற்கும் மேலாக, சாமானிய ஜனங்களுக்கு அறிவை யூட்டி அவர்களுடைய சாவதானத்துக்கும் க்ஷேமத்துக்கும் தகுந்த முன் ஜாக்கிரதைகளை அறிந்து அநுசரிக்க ஆரோக்கிய சாஸ்திரத்திலும் வீட்டு சுகாதாரத்திலும் மூலாதாரங்களை அவர்களுக்குக் கற்பிக்கவேண்டும்.

“உங்களுடைய பழய கீர்த்திபெற்ற நகரத்துக்கு மறுபடியும் வரப்போவதைப்பற்றி சந்தோஷப் பட்டுக்கொண் டிருந்தோம். இத்தேசத்தின் சரித்திரத்தில் ஞாபகமிருக்கக்கூடிய சம்பவங்களுக்கு அது ஸ்தலமாயிருந்தது. இவைகளிற் சில என்னுடைய வமிசத்தோடும் சிம்மாசனத்தோடும் நெருங்கி சம்பந்தப்பட்டவைகள். இனி எங்களுக்குள்ள சம்பந்தம் இன்னும் நெருங்கியதாகும். உங்கள் நகரத்தின் பூர்வ சரித்திரத்தால் அதற்கு விநோதமான கவர்ச்சியுண்டா யிருக்கின்றது. பூர்வகாலத்து ராஜவமிசங்களின் சின்னங்கள் எங்குபார்த்தாலும் கண்ணில் விழுகின்றன. சிறப்பான மாளிகைகளும் ஆலயங்களும் காலத்தாலுண்டாகும் நாசத்துக்குத் தப்பியிருக்கின்றன. இவைகளெல்லாம் பூர்வகாலத்துப் பெருமைக்கு நிதர்சனங்கள். இந்தியாக்



கனம் V. கிருஷ்ணசுவாமி ஐயர் அவர்கள்.

OFFICE OF THE REGISTRAR OF ...
REGISTERED
2 ... 1912
MADRAS.



கவர்ன்மெண்டுக்கு ஒரு மத்தியஸ்தலமான ராஜ நகரத்தை நிச்சயம் செய்த தில் இந்த பழய நிலைமைகளும் லக்ஷணங்களும் நான் சமீபத்தில் வெளியிட்ட தீர்மானத்துக்கு முக்கிய காரணங்கள். இன்றுமுதல் இந்திய ஏகாதிபத்தியத்துக்கு டெல்லி ராஜஸ்தலமாயிருக்கும். இந்த அழகான நகரம் பஞ்சாப் மாகாணத்தில் சேர்க்கப்பட்ட 50-வருஷ காலத்தில் அதைப் பிரபலப்படுத்திச் செய்த முயற்சிகளை நான் ஒப்புக்கொள்கிறேன். அதனுடைய பூர்வீக சரித்திரச் சின்னங்களைக் காப்பாற்றி டெல்லி இந்திய ஏகாதி பத்தியத்துக்கு ராஜஸ்தலமாகி அதனுடைய பூர்வீக கௌரவமான நிலைமைக்கு இப்போது அதை உயர்த்த உங்கள் கவர்ன்மெண்ட் கவலைப்பட் டிருக்கின்றதையும் அறிவேன். இந்த மாறுதலால் ராஜாங்க நிர்வாகத்தில் பல புதுமைகள் செய்யும்படி நேரிடும். ஆயினும் டெல்லி மாகாணக் கவர்ன்மெண்டின் முக்கிய ஸ்தலமாக யிருந்து அதனுடைய பழய பெருமையையும் ஜனங்களின் க்ஷேமத்தையும் பற்றி ஜாக்கிரதை பெற்றதுபோல இம்பீரியல் ராஜஸ்தலமாக அதே ஜாக்கிரதையைப் பெறுமென்பதில் சந்தேகமில்லை. டெல்லி இப்போது எந்த ஏகாதி பத்தியத்துக்கு ராஜஸ்தலமாயிற்றோ அதில் அமைதியும், முற்போக்கும், நீதியும், வளப்பமும் நிலை நின்று அது உங்கள் நகரத்தின் பூர்வீகப்பேருடன் இன்னும் அதிகப் பெருமையும் மகிமையும் தங்கிய சரித்திரத்தையும் உண்டாக்குமென்று நான் பிரார்த்திக்கின்றேன்."

சென்னை அட்டிரஸுக்குப் பின்வருமாறு சக்கரவர்த்தி பதில் அருளினர்.—"சென்னை ராஜதானியின் ஜனங்கள்பேரால் நீங்கள் செய்திருக்கும் பக்தியும் அடக்கமுமுள்ள விக்ஞாபனப் பத்திரத்துக்கு நானும் சக்கரவர்த்தினியும் சந்தோஷப்படுகிறோம், நமது இந்திய சமஸ்தானங்களில் பழய ராஜதானியாகிய சென்னையில் வசிக்கும் ஜனங்களுடைய பக்தியால் எங்கள் மனம் நெகிழ்கின்றது. இதில்வசிக்கும் 4 கோடி ஜனங்கள் எங்களிடத்தில் நேரான பிடிப்பிருப்பதைக் காட்ட ஒன்று சேர்ந்ததற்காக நன்றி கொள்கிறோம். தென்னிந்தியாவில் பலஜாதி மதஜன வேற்றுமைகளைக்காட்டி கையெழுத்திட்டிருப்பது நீங்கள் எங்களை வரவேற்றதற்கு விலைபெற்ற அத்தாட்சியாகச் சேமிக்கப்படும். இந்தியாவுக்கு இப்போதுவந்த சமயத்தைப்பற்றி நீங்கள் சொல்லி யிருக்கும் வார்த்தைகளையும் 1906-ம் வருஷத்தில் சென்னையில் நாங்கள் இருந்ததை நீங்கள் பட்சமாய் நினைத்திருப்பதையும் நாங்கள் பூராவாய் அறிகிறோம். எங்களுக்கு அப்போது நீங்கள்செய்த உபசாரத்தை நாங்கள் மறக்கவில்லை. உங்களுடைய பேர்பெற்ற நகரத்தை நாங்கள் திரும்பிப்பார்க்க வேண்டுமென்று நீங்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்குமாறு எங்களுக்கு அவகாசமில்லாததைப்பற்றி நாங்கள் விசனப்படுகிறோம். இந்திய ஏகாதிபத்தியத்தில் எனக்குப் பிரியமான பாட்டியாரும் பிதாவும் காட்டின ஒற்றுணர்ச்சியையும் தரிசனத்தையும் பற்றி நீங்கள் சொல்லுவதைக் கேட்க எனக்கு ஆழ்ந்த திருப்தி யுண்டாகின்றது. அவர்களுடைய உணர்ச்சி போல என்னுடையதும் இருக்கிறதென்று உங்களுக்குச் சொல்லவேண்டியதில்லை. என் இந்தியப்பிரஜைகளின் க்ஷேமமும்வளப்பமும் என்னுடைய மனப்பூர்வமான கவலைக்கு விஷயங்களாயிருக்குமென்றுநான்சொல்லவேண்டியதில்லை."

## சக்கரவர்த்தினி இந்திய ராஜ ஸ்திரீகளுக்குக் கொடுத்த பேட்டி.

புதன்கிழமை யன்று ஜார்ஜ் சக்கிரவர்த்தி வாலண்டியர் படையைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களுக்கும் ராணுவத்தைச் சேர்ந்த இந்திய உத்தி

யோகஸ்தர்களுக்கும் சென்னை டில்லி டெபுடேஷன்களுக்கும் பேட்டிகொடுத்துக்கொண்டிருந்தபோது மேரி சக்கிரவர்த்தினி பெருமாட்டி டில்லி ஸர்க்கிட் ஹவுஸில் (Circuit house) தேச மன்னர்களின் குடும்பங்களைச் சேர்ந்த 120-ராஜஸ்திரீகளுக்கு பேட்டி கொடுத்துக் கொண்டிருந்தார். அப்போது லேடிஹார்டிஞ்சும், டெவன்ஷையர் டச்சஸ்ஸும், லேடி மாக்மோகனும் சக்கரவர்த்தினி பெருமாட்டியோடு கூடவேயிருந்தார்கள். அந்த 120-ராஜஸ்திரீகளில் விஜயநகரம் ராணி ஒருவர். அச்சீமாட்டி தமதுகுழந்தைகள் இரண்டையும் தமது கூடவே அழைத்துக்கொண்டு போயிருந்தார்கள். சக்கரவர்த்தினி பெருமாட்டி அக்குழந்தைகளிரண்டையும் தம்முடைய சிம்மாதனத்தின் கீழேயே உட்கார்ந்து கொள்ளச் சொன்னார்கள். சிறிதுநேரம் பரஸ்பரம் குசலப் பிரஸ்னம் செய்து கொள்வதில் கழிந்தது. அப்பால் விஜயநகரம் ராணி சக்கரவர்த்தினியைப் பார்த்துப் பின்வருமாறு சொன்னார்கள்:—

"சக்கரவர்த்தினி பெருமாட்டியின் இப்போதைய விஜயத்தை இந்திய மாதர்கள் வெகு மங்களகரமான நற்குண நிகழ்ச்சியாய்க் கருதுகிறார்கள். அவர்கள் சக்கிரவர்த்தினி பெருமாட்டி இந்நாட்டுக்கு இரண்டாந்தடவை விஜயஞ்செய்ய கிருபை கூர்ந்ததற்கு அப்பெருமாட்டிக்குப் போதுமானபடி நன்றிசெலுத்த முடியாதவர்களாயிருக்கிறார்கள். சக்கரவர்த்தினி பெருமாட்டி இவ்விஜயத்தால் இந்தியா முழுமையையும் கௌரவப்படுத்தியிருப்பதோடு இன்றைக்கும் அப்பெருமாட்டியின் முதல் விஜயத்தை மிகுதியும் பேணி ஞாபகத்தில் வைத்துக்கொண்டிருக்கிற இந்திய மாதர் கூட்டத்தை கௌரவப்படுத்தியிருக்கிறார்கள். நேற்று சக்கிரவர்த்தி பெருமானும் சக்கிரவர்த்தினி பெருமாட்டியும் நடத்திய தர்பாரைவிட வேறெதுவும் இந்திய ஜனங்கள் மனதில் நன்றாய்ப் பதியும்படி அவ்வளவு ராஜ கம்பீரத்தோடு கூடியதாயிருக்கவில்லை. தங்களுக்கு ஒரு அரசனும் அரசியும் இருக்கிறார்களென்று இந்திய ஜனங்களுக்கு இப்போது நன்றாய்த் தெரியவருகிறது. டில்லி தர்பார் தலைமுறைக் கணக்காய் ஜனங்கள் ஞாபகத்திலிருக்கும். அது இந்திய ஜனங்கள் பிரிடிஷ் அரசரிடம் வைத்திருக்கும் மதிப்பால் ஏற்படக்கூடிய ராஜ விசுவாசத்தைக் கயிறு கட்டி இழுத்து நெருங்கிவரும்படி செய்யும். போன வருஷம் இந்த மாதவாக்கில் நான் லேடி ஹார்டிஞ்சினிடம் சக்கிரவர்த்தினியின் பணி மாதர்களில் ஒருத்தியாய் இன்னும் சில இந்தியமாதர்களுடன் சேவிக்கவேண்டுமென்ற விருப்பம் எனக்கிருப்பதாய் அப்பெருமாட்டிக்குத் தெரியப்படுத்தும்படியாய்க் கேட்டுக்கொண்டேன். ஆனால் என் பிரேரணை ஒப்புக்கொள்ளப்படவில்லை. இந்திய மாதர்கள் தங்களுக்கு சக்கிரவர்த்தினியிடமிருக்கும் பக்தி விசுவாசத்தைத் தெரியபடுத்திக்கொள்ள ஏதேனும் ஒருசமயம் கிடைத்தால், அம்மாதிரிசமயம் கிடைத்ததைப்பற்றி அவர்கள் கர்வங்கொள்வார்களென்று இச்சமயம் நான் உறுதிகூறத் துணிகிறேன்". அப்படி விஜயநகரம் ராணி பேசியதைக் கேட்டுக்கொண்டிருந்த சக்கிரவர்த்தினிபெருமாட்டி அந்தராணியைப்பார்த்து டில்லிதர்பாரால் நன்மைகள் விளையுமெனஉங்கள் வாய்ப்படக்கேட்க எனக்குச் சந்தோஷமாயிருக்கிறதென்று சொல்லி அந்த ராணிக்கு நன்றி செலுத்திவிட்டு அச்சீமாட்டியின் மூத்த பிள்ளையைப்பற்றி விசாரித்தார்கள். அப்போது விஜயநகரம் ராணி தமது மூத்தபையன் ஆஜ்மீர் மேயோ காலேஜில் வாசித்துக்கொண்டிருப்பதாயும் சக்கிரவர்த்தினி பெருமாட்டி அந்த காலேஜுக்குப் போகும்போது அவன் அப்பெருமாட்டியை வந்து சேவாஞ்சலிசெய்து கண்டுகொளவானென்றும் தெரிவித்தார்கள். விஜயநகரம் ராணி சக்கிரவர்த்தினி பெருமாட்டியை அச்சமயம் ரூபா 2000 காணிக்கை வைத்துக்கண்டார்கள். அதனை அப்பெருமாட்டி ஏற்றுக்கொண்ட பாவனையாய் கையால்தொட்டுத் திருப்பினார்கள். அதன்மேல் அந்த ராணி, "சக்கிரவர்த்தினி பெருமாட்டியை நேரிற்கண்டு சம்பாஷிக்கும்படியாய் இன்று நான் அடைந்துள்ள மகோன்னத பதவியையும் பெருமையையும் குறிக்கும் ஞாபகார்த்தமாய் இத்தொகையை தருமத்துக்குக்கொடுத்துவிடப் பிரியப்படுகிறேன்" என்றுசொன்னார்கள்.



OFFICE MADRAS

வெள்ளிக்கிழமை 15உ சக்ரவர்த்தியவர்கள் புதிய டெல்லி நகரத்துக்கு அஸ்திவாரக்கல்லை நாட்டினார்கள். சக்ரவர்த்தினியும் பெருமாட்டியும் ஒருகல்லை யெடுத்து நாட்டினார்கள். பின்பு லார்ட் ஹார்டிஞ்ச் இவ்விஷயமாக பின்வருமாறு பேசினார்:—

"காரொனேஷன் தர்பாரின்போது இந்தியாவுக்கு டெல்லி இனி தலைநகராகுமென்று விளம்பரப் படித்தினதற்கு இப்போது யுவர் இம்பீரியல் மாஜெஸ்டி இந்தத் தலைநகரத்தில் புதிதாய் நிர்மாணிக்கப் படப்போகும் புதுப் பட்டணத்துக்கு அஸ்திவாரக்கல் நட இசைந்தது முத்திரை வைத்தது போலாகின்றது. அந்தசமயம் ஒப்புயர்வற்ற சிறப்புடன் நிறைவேறினதைவிட அதனால் கிளப்பப்பட்ட ராஜபக்தியினால் எபபோதும் அது ஞாபகத்திலிருக்கும். டெல்லியைச் சுற்றிப்பல தலைநகர்கள் அப்போதப்போதுண்டாகி அவைகள் ஆதிகாலத்துச் சரித்திரத்தில் மறைந்திருக்கின்றன. ஆயினும் இவைகளில் எதுவும் யுவர் இம்பீரியல் மாஜெஸ்டி இப்போது செய்யப்போகிற சடங்குகளைவிடப் பிரகாசமான சடங்குகளுடன் உண்டானதில்லை. எதுவும் பிற்காலத்து வளப்பமும் மகிமையும் நிலைக்கும்படியான சந்தர்ப்பங்களுடன் உண்டானதில்லை யென்பது நிச்சயம்.

"கல்கத்தாவிலிருந்து தலை நகரத்தை டெல்லிக்கு மாற்றுவது பூரணமான கவலைபெற்ற யோசனையின்றிச் செய்யப்படவில்லை. இதுபோன்ற யோசனைகள் 1868-ம் வருஷமுதல் கடந்துபோன பலதடவைகளில் செய்யப்பட்டிருக்கின்றன. விவாதத்துக்குரிய அம்சங்கள் பலவற்றைப்பற்றிச் சரியான அபிப்பிராயங்கள் செய்ய ஏற்கெனவே சாதனங்கள் ஏற்பட்டிருக்கின்றன. எந்தப்பெரிய மாறுதலும், அது எவ்வளவு நலந்தரத் தக்கதாயிருந்தபோதிலும் சில உரிமைகளுக்கு நஷ்டமில்லாமலாவது செய்யப்படுதல் கஷ்டம். ஆனாலும் என் ஆலோசனை சபையிலுள்ள மெம்பர்கள் பேராலும் என் பேராலும் யுவர் இம்பீரியல் மாஜெஸ்டியினுடைய பிரதிநிதியாக நான் பேசக்கூடுமாயின், எந்த மாறுதலும் இதைப்போல பலருக்கு நன்மைசெய்வதாய் இருந்ததில்லை; சிலருக்கு நேரிடுமென்று நினைக்கக்கூடிய தீங்குகள் சிலகாலத்துக்கு மட்டும் நேரிட்டு பின்னால் கிடைக்கக்கூடிய நன்மைகளில் மறைந்துவிடும், யுவர் இம்பீரியல் மாஜெஸ்டியின் மந்திரிகளுடைய ஆலோசனையின்பேரில் கான்ஸிடிடுஷன் (ராஜாங்கமுறை) படி செய்த தீர்மானம். அதனால் அவசியமாயுண்டாகக் கூடிய மாறுதல்களோடு இந்திய ஏகாதிபத்தியத்தின் கவர்ன்மெண்ட் முறைகளில் விசாலமான முற்போக்குள்ள திருத்த

மாய்முடியும்; போட்டியையும் விரோதத்தையும் இல்லாமற்செய்து, பொதுவாய் அமரிக்கையும் திருப்தியும் குடிகொண்ட சகாப்தத்தை யுண்டுபண்ணும் என்றுசொல்ல விரும்புகிறேன்.

“இந்தத் தீர்மானம் செய்தவிதத்தைத் தவிர, அபிப்பிராயபேதமாவது விவாதமாவது இல்லாமலும் யுவர் இம்பீரியல் மாஜெஸ்டியின் பக்தியுள்ள பிரஜைகளிற் பலவகுப்பாரும் உற்சாகத்துடனும் விசுவாசத்துடனும் ஆதரிக்கக் கூடியபடியும் வேறுவிதமாய்ச்செய்தல் சாத்தியமல்ல. இந்தக்கல்லுகள் நடப்படும் ஸ்தலத்தைச்சுற்றி நாம் நிர்மாணிக்கக் கருதியிருக்கும் மகா பட்டணமானது அதன் உற்பத்தியான சமயத்துக்கு உற்றதாயிருக்குமென்று. நாங்கள் நம்புகிறோம். இந்த பழய நாகரிகத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் ஸ்தானமாயுள்ள இடத்தில் யுவர் இம்பீரியல் மாஜெஸ்டி நடும் கல்லுகளே யுவர் இம்பீரியல் மாஜெஸ்டியின் அருளுள்ள பிரசன்னத்திற்கும், யுவர் இம்பீரியல் மாஜெஸ்டியினுடைய பிரஜைகளுக்கு விளம்பரம்செய்து பிரசுரிக்கப்பட்ட மகா முக்கியமான தீர்மானத்திற்கும், அடையாளமாயிருக்கும்.”

சக்கரவர்த்தியின் பேச்சாவது:—“சக்கரவர்த்தினிக்கும் எனக்கும் டெல்லியைவிட்டுப் போவதற்குமுன்னால் நாம் நிற்குமிடத்தில் நிர்மாணமாகப் போகிற பட்டணத்துக்கு அஸ்திவாரக்கல் நடக்கூடியதாயிருப்பது பெருந்திருப்தியாயிருக்கின்றது. மூன்று தினங்களுக்கு முன்னால் என்னுடைய காரொனேஷன் தர்பார் சிறப்பாயும் எங்கள் மனதில் உறுத்தும்படியாயும் இருந்தசமயத்தில் நான்செய்த முக்கியமான பிரசித்தமானது பூர்த்திபெற இது முதலெடுப்பாகும். இப்போது செய்யப்படப்போகும் பெரும்மாறுதல்களால் எதிர்பார்க்கக்கூடிய நலந்தரத்தக்கனவாய் நெடுந்தூரம் செல்லத்தக்க பலன்கள் பூர்த்திபெறு மென்றும் இந்தியாவுக்கு திருத்தம்பெற்ற நிர்வாகத்தையும் ஜனங்களுக்கு அதிகமான சுகத்தையும் வளப்பத்தையும் கொடுக்குமென்றும் நான் மனப்பூர்வமாய்க் கோருகிறேன். இங்கு கட்டப்படும் பட்டணத்தின் பிளானும் டிஸைனும் தக்கபடி யோசனையுடனும் ஜாக்கிரதையாயும் செய்யப்படுமென்றும் அந்தப்புது சிருஷ்டியானது இந்த அழகான நகரத்துக்குப் பொருந்தியதா யிருக்குமென்றும் கோருகிறேன். இன்று இவ்வளவு மங்களகரமாய் ஆரம்பிக்கும் வேலைக்கு ஈஸ்வரக்கடாக்ஷம் பூரணமாயிருக்கவேண்டுகிறேன்.”

இராஜதம்பதிகள் 16உ டெல்லியைவிட்டு ரெயில் ஏறினார்கள்.

[சுதேசமித்திரன் பத்திரிகையிலிருந்து சக்ரவர்த்தி அவர்கள் பேசினபேச்சு முதலியவைகளை எடுத்து இங்கு பிரசுரித்திருக்கிறோம். ப. ர்.]

[நேபாளம், கல்கத்தா முதலிய விடங்களில் ராஜதம்பதிகள் செய்த விஜயத்தின் விவரம் அடுத்த பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்—ப. ர்.]



# ஜோதிமதி.

ஒரு தேசத்தில் ஒரு அரசன் அரசு புரிந்துவந்தான். இவனுக்கு ஒரு புத்திரன் உண்டு. இவன் நன்றாகப்படித்து அநேக நூல்களிலுள்ள விஷயங்களை நன்றாக அறிந்துகொண்டான். இவன் மிகவும் நல்லவனாயும் புத்திசாதுரியமுள்ளவனாயு மிருந்தான்.

ஒருநாள் வேட்டையாட காட்டுக்குப் போகவிரும்பி தன் தாய் தந்தையை உத்திரவுகேட்டான். அவர்கள் ஜாக்கிரதையாகப்போய் வேட்டையாடிவிட்டுத் திரும்பிவாவென்று இராஜ புத்திரனுக்குச் சொன்னார்கள். இவன் தாயா சிறிது சிற்றுண்டியைய தனது [illegible]களில் உண்ண அவன்கையில் கொடுத்தாள். இது தாயாரின் உண்மையான பிரியமல்லவா? இராஜ புத்திரனும் அகமகிழ்ந்து அதைப் பெற்றுக்கொண்டு காட்டுக்கு வேட்டையாட குதிரைமேல் ஏறிக்கொண்டு போனான்.

காட்டில் வேட்டை யாடியபின் இராஜ குமாரனுக்கு அதிக இளைப்புண்டானது. வெய்யிலும் அதிக உக்கிரமாக யிருந்தது. உடனே ஒரு மரத்தின் நிழலிருக்கு மிடத்திற்குப்போய் அங்கு உட்கார்ந்தான். உடனே தனது அருமையான தாயார்கொடுத்த சிற்றுண்டியில் சிறிது புசித்துவிட்டு நித்திரை செய்யலாமென்று நினைத்து அம்மூட்டையை அவிழ்த்தான். அதில் ஒன்றை எடுத்தவுடன் அதில் ஒரு எறும்பு யிருப்பதைக் கண்டான். இன்னொரு பணிகாரத்தைப் பார்ப்போம் என்று சொல்லி அதையும் எடுத்தான். அதில் ஒரு எறும்பு யிருப்பதைக் கண்டான், இன்னொரு பணிகாரத்தைப் பார்ப்போம் என்றுசொல்லி அதையும் எடுத்தான். அதில் இரண்டு எறும்புகளிருந்தன. மூன்றாவதை எடுத்துப் பார்த்தான். அதில் மூன்று எறும்புக ளிருப்பதைக் கண்டான். இப்படியே ஒவ்வொன்றிலும் ஒரு எறும்பு அதிக மிருந்தது. கடைசியாக ஆறாவது பணிகாரத்தில் ஆறு எறும்புகளும் இவைகளுக்கு நடுவில் இராஜ எறும்பு இருப்பதையும்கண்டு சந்தோஷித்தான்.

எறும்பு இராஜனைப் பார்த்து “இப்பணிகாரங்களைத் தாராளமாகப் புசியுங்கள், எனக்கு இவைகள் சொந்தமா யிருந்தபோதிலும் இவைகள் உங்களுடையதே” என்று சொன்னான். பின்பு மரநிழலில் படுத்து அயர்ந்து நித்திரை செய்தான்.

இராஜ புத்திரன் கனவு கண்டுகொண்டே நித்திரை செய்யும்பொழுது இராஜ எறும்பு இவன் காதுக்குச் சமீபத்தில் நகர்ந்துசென்று, “நாங்கள் நீ எங்களுக்குக் கொடுத்த தின்பண்டங்களைப் புசித்தாய்விட்டது. நீ செய்த நன்றியை மறக்கவேமாட்டோம். இதற்குப்பதிலாக உனக்கு நாங்கள் செய்யக்கூடிய காரியம் ஏதாவதிருந்தால் அதைச் செய்கிறோம்” என்று குசுகுசுவென்று சொல்லிற்று. எறும்புகளின்பாஷை இவனுக்கு நன்றாகத்தெரியுமாதலால் தூக்கக்கண்ணில் ஒன்றுமில்லை” என்று இராஜன் மறுமொழி பகர்ந்தான். மேலும் செலவு செய்யவேண்டிய அளவுக்குமிஞ்சி பணம் எனக்கு அதிகமாக யிருக்கிறது, நான் எவ்வளவு நகைகளைத் தரித்துக்கொள்ளக் கூடுமோ அவைகளைவிட அதிகமாக நகைகளிருக்கின்றன, வேலைக்காரர்களோ கணக்குவழக்கில்லாம லிருக்கிறார்கள். இவைகளால் நான் சலித்துப் போய் விட்டேன்.” என்றான்.

“ஜோதிமதி, என்கிற பெண்மணியைக் கண்டுபிடி, அவள் மிக்க அழகு பொருந்தியவள். எப்பொழுதும் சிரித்தமுகத்துட னிருப்பாள். அவளை நீ

மணந்துகொண்டாள் நீ ஒருபொழுதும் வெறுப்படையமாட்டாய்'' என்றது எறும்புராஜன். ராஜகுமாரன் நித்திரையிலிருந்து எழுந்தவுடன் இப்படி தூக்கத்தில் நடந்த சம்பாஷணை ஞாபகத்தி லிருந்தது. என்னசெய்வான்! அங்குமிங்கும் எறும்புராஜனைப பார்த்தான். அது தென்படவில்லை; அதன் சினேகிதர்களையும் இவன்காண முடியவில்லை. ஒரு எறும்பையாவது கண்டால் ஜோதிமதியைப்பற்றி இன்னும் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயங்களைக் கேட்டு அறிந்து கொள்ளலாமே என்று அங்குமிங்கும் பார்த்தான். கடைசியாய் "இக்காடுகளின் வழியாகப்போய் அப்பெண்மணி யிருக்கும் தேசத்தையறிய முயலுகிறேன்'' என்று நினைத்தான்.



உடனே குதிரையின் மீது அஸ்தமிக்கும் வரையில் சவாரி செய்து கொண்டு வெகுதூரம் போய் விட்டான். அச் சமயத்தில் ஒரு குளத்தண்டை வந்தான். அக்குளத்தினருகில் ஒரு புலி கர்ச்சித்துக் கொண்டிருந்தது. இவனுக்கு மிருகம் பக்ஷி முதலியவைகளின் பாஷை நன்றாகத் தெரியும். ஆகையால் தைரியமாக "உனக்கு உடம்பென்ன? நீ பசியாயிருக்கிறுயா?'' வென்று அரசகுமாரன் கேட்டான்.



"ஒன்றுமில்லை; ஆனால் என் காலில் ஒருமுள் புகுந்திருக்கிறது, அது எனக்கு அதிக வலியை உண்டாக்குகிறது'' என்று புலி பதில் சொல்லிற்று.

வாலிப வயதுள்ள இராஜகுமாரன் உடனே குதிரையினின்று கீழே குதித்து புலியினுடைய பாதத்தை நன்றாகப் பரிசோதித்தான்.

"நான் இதை எடுக்கமுடியும். இதை நான் எடுத்தபின்



எனது தலைப்பாகைத் துணியைக் கிழித்து இவ்விடத்தில் இதை சொஸ்தப் படுத்தக்கூடிய மூலிகையை வைத்து கட்டிவிடுகிறேன்'' என்றான்.

இராஜகுமாரன் அவ்விதமே செய்துவிட்டான். உடனே தன் குதிரையின்மீது எறும்பொழுது ஒரு பெண்புலி புதரிலிருந்து வேகமாக வெளிக்கிளம்பி ஓடிவந்தது. "இங்கு ஒரு மனிதன் ஏன் யிருக்கிறான்?'' என்று ஆண் புலியைக் கேட்டது. "நீ அவனைப் புசிக்கப் போகிறதில்லையா?''

"இல்லை'' என்று ஆண்புலி பதில் சொல்லிற்று.

[அடுத்த பத்திரிகையில் இக்கதை முடிவுபெறும். இன்னும் 4 சித்திரப் படங்கள் அப்பொழுது பிரசுரிக்கப்படும்-பா].

## பூமியில் புதையுண்ட பட்டணம்.

ஐரோப்பா கண்டத்தின் தென்புறத்தில் இத்தாலியா என்று ஒரு தேசம் இருக்கின்றதே. அதில் நேபில்ஸ் நகரத்துக்கருகே பொம்பியா என்று ஒரு பட்டணம் இருந்ததென்று அநேகர் கேள்வியுற்றிருக்கலாம். அந்தப் பட்டணம் விஸுவியஸ் என்னும் எரிமலையினின்றும் பொங்கிவந்த மண் வெள்ளத்தின் கீழே பதினெட்டு நூற்றாண்டுகளாய்ப் புதையுண்டு கிடக்கின்றது. அப்படிப் புதையுண்ட பட்டணம் இது ஒன்று மாத்திரமேயல்ல; ஹெர்க்கியுலேனியம், ஆபிலொந்தி, தெக்லானம், ரெதினு, ஸ்தோபியா என்று பல பட்டணங்கள் உண்டு. ஆயினும் அவற்றுள் பொம்பியா, ஹெர்க்கியுலேனியம், ஸ்தோபியா என்னும் மூன்று நகரங்கள் மட்டுமே கண்டறியப்பட்டன; மற்றவை இன்னும் அப்படியேதான் ஒருவர் கண்ணுக்கும் அகப்படாமல் பூமியின்கீழ் அழுந்திக் கிடக்கின்றன. பொம்பியாபட்டணம் சாம்பல் மண் கல் இவைகளாலேயே மூடப்பட்டிருந்ததனால் அதை வெகு லேசாக வெட்டிப் பார்க்கக் கூடியதாயிற்று. ஹெர்க்கியுலேனிய மென்பது லாவா என்னும் ஒருவகை எரிமலைப்பொருள் வெள்ளம் பாய்ந்து கல்போலக் கெட்டிப் பட்டுப் போனதனால் அதை வெட்டியெடுக்க வெகு வருத்தமாயிற்று. பொம்பியா பட்டணத்தைப் பற்றியே இங்கு ஒருவாறு எடுத்துரைப்போம்.

அப்பட்டணத்துள் பலவிடங்கள் வெட்டிக் கண்டறியப்பட்டிருக்கின்றன வென்றாலும், இன்னும் காணமல் பூமிக்குள் புதைந்த விடங்கள் அனேகம் இருக்கின்றன. அவற்றையும் நாள் அளவிலே வெட்டி யெடுப்பார்கள். வெட்டிப்பார்த்த விடங்களும் பூமிக்குள் ஒரு குகைபோல் இருக்கின்றன.
மூடி யிருப்பதனால் நன்றாய்ப் பார்க்கக்கூடாம லிருக்கின்றன.

ஒருக்கால் மிகப் பெருமைபெற்றிருந்ததான அப்பழைய நகரத்தைப் போய்ப் பார்ப்பவர்கள் நாளைக்கும் அதன் அற்புதங்களைக் கண்டு அதிசயிக்கும்படியாகும். அப்பட்டணத்தில் தெருக்களெல்லாம் மிகவும் நெருக்கமாக பலவகைக் கற்கள் படுத்து மிருக்கின்றன. வீடுகளும் ஒரு அளவாயிராத பலவகைக் கற்கள் படுத்து மிருக்கின்றன. வீடுகளெல்லாம் அநேகமாய் இரண்டு கட்டுகள் உள்ளவை. நீர்க்குழாய்கள் அநேகம் இருக்கின்றன.

அந்த நகரத்தில் மாளிகைவீதி என்று பேர்பெற்று ஒழுங்காய் நெடுந்தூரம் நீண்ட பெரியவீதி ஒன்று உண்டு. இப்பொழுது அவ்வீதி எங்கும்

நிச்சப்தமாய் இருக்கின்றது. ஒன்றும் அங்கு அசைந்து உலாவுவது இல்லை; குழந்தைகள் கூவி விளையாடுவதில்லை; வீடு வாயில்களில் ஒருவரும் தென்படுவதில்லை; இங்குமங்கும் சரக்குகள் போக்குவரவு செய்வதில்லை; மளிகைக் கடை பழக்கடை முதலாகிய கடைத்தெரு ஒன்றுமில்லை; கைத்தொழில்கள் எதுவும் நடந்தேறுவதில்லை; எல்லாம் நிச்சப்தமா யிருக்கின்றன. அங்கிருந்து பின்னும் சிறிதுதூரம் சென்றால், அழகிய ஆலயங்கள், நாடகசாலைகள, நியாயசபைகள் முதலிய பல பிரசித்தமான பெருங் கட்டடங்களெல்லாம் அழிந்து அழகு குலைந்து கிடக்கக் காணலாம். கற்படுத்த தரைகளில் தேர் ஓடின சுவடுகள் இன்னும் வெயிலில் பளபளத்துப் பிரகாசிக்கின்றன. கிலமாயிருக்கின்ற கம்பங்களிலும் சுவர்களிலும் செய்திருக்கும் முற்காலத்துச் சிறந்த சிற்பவேலைகளின் வடிவங்களும் வர்ணங்களும் இன்னும் அவைகட்கு அழகாயிருக்கின்றன. இவ்விடத்தில் ஆணும் பெண்ணுமாய்ப் பல வேலைக்காரர்கள் மேலேபடிந்து கெட்டியாய்ப்போன மண்கண்டங்களை மலைமலையாகப் பெயர்த்து வண்டிகளிலேற்றி அப்புறப் படுத்துகின்றனர்; வேறுசிலர் கற்களையும் சாம்பல் கட்டிகளையும் ஜாக்கிரதையாய்ப் பெயர்த்தெடுத்து வெளிப்படுத்து கின்றனர்; மற்றும் சிலர் அங்குள்ள உயர்ந்த பொருள்களை வேறாகப் பிரித்துவைப்பதும், அழியாது மிகுந்திருக்கும் மெத்தை மேடைகளைப் பின்னும் அழிக்காது அவ்வளவோடாவது வைத்துக் காக்கும்படி, அசைந்து ஆடும் சுவர் முதலியவற்றை முட்டுக்கொடுத்து நிலைக்கச் செய்வதுமாகிய வேலைசெய்து வருகின்றனர். பியரெலி என்பவர் தலைவராயிருந்து இவ்வேலை அனைத்தையும் நடத்திவருகிறார்.

பொம்பியா பட்டணம் பூமியில் புதையுண்டு இப்பொழுது 1800 வருஷங்களாகின்றன. அப்பட்டணத்தை வெட்டிப்பார்த்து அதில் உள்ள அற்புதக் காட்சிகளைப் பின்னும் கண்டறிய வேண்டுமென்னும் ஆவல் சென்ற இரண்டொரு வருஷத்துக்கு முன்புதான் ஐரோப்பியர்களுக்கு உண்டாயிற்று. அதன்பொருட்டு அத்தேசத்துப் பெரிய பண்டிதர்கள் பலர்கூடி மகோற்சவமொன்று நடத்தி அப்பட்டணத்தின் பூர்வ சரித்திரத்தைப் படிக்கச் செய்தார்கள். அங்கே கிலமாய்க்கிடந்த கட்டடங்களைப் போய்ப் பார்த்தார்கள். பின்னும் பலவிடங்களைப் புதிதாய் வெட்டியெடுத்துவருகிறார்கள்.

—[+]—

(இன்னும் வரும்.)

விடுகதை. (1) பத்து எழுத்தாலாகியதோர் தேவர் பெயரை கீழ்கண்டவாறு எழுத்தெழுத்தாகக் கூட்ட கீழ்கண்ட பொருட்களைத் தரும். அப்பெயரை இப்பத்திரிகை மூலமாய் விவரிக்கவும்.

1, 4, 6 நான்.
2, 4, 10 கடன்.
3, 4, 6 அறிவு.
9, 7, 6 வெப்பம்.
7, 8, 1 சபை.
9, 5, 6 பத்து.

(2) ஆறு எழுத்தாலாகிய ஒரு ஊரின் பெயர்.

1, 3, 6 அழகு.
2, 3, 6 வாராவதி.
1, 5, 6 கொடுமை.
4, 5, 6 பட்டணம்.
4, 3, 6 கழனி.

(3) ஒன்பதெழுத்தாலாகிய வோர் பாஷாபிமானி பெயர்.

1, 2 ஓர் ஊர்.
5, 3 உடுக்கை.
8, 3 கயிறு.
1, 6 கல்.
7, 9 இரதம்.
8, 6 மலை.

தி. மா. மார்க்கசகாயன்.

OFFICE OF THE ... MADRAS. 2 ... FEB 1912

# மாதர் மனோரஞ்சனி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol. XIV. Madras: February 1912. No-2.
புத்தகம் - கச. சென்னப்பட்டணம்: பிப்ரவரி௴ 1912. இலக்கம் - 2

## நமது பத்திரிகை.

நமது பத்திரிகைக்கு இப்பொழுது 14-வது வருஷம் நடக்கிறது. நாம் சென்ற வருஷத்தில் இங்கிலாந்திலிருந்து வரவழைத்த சித்திரப்படங்களுள்ள கதைகளையும், இன்னும் மாதர்களுக்கும் பெண்மணிகளுக்கும் அவசியமான விஷயங்களையும்பிரசுரித்தோம். இவ்வருஷமும் பற்பலசித்திரப்படங்களுள்ள கதைகளும், சாஸ்திரப்பாடம், வீட்டிற்குரிய விஷயங்கள்முதலியவைகளையும் பிரசுரிக்க எண்ணியிருக்கிறோம். பரோபகாரமுள்ள கனவான்கள், சீமாட்டிகள் இவர்களுடைய திவ்ய சரித்திரங்களும் சித்திரப்படத்துடன் பிரசுரிக்கப்படும். முக்கிய ஸ்தலங்களின் அருமை பெருமைமுதலியவைகளும் அப்போதைக்கப்போது பிரசுரிக்கப்படும். உலகவர்த்தமானம் ஒவ்வொரு மாதமும் தப்பாமல் பிரசுரிக்கப்படும். மேற்கூறியவைகளைச் சரிவரசெய்துவரவும், பத்திரிகையைக் கிரமமாகப் பிரசுரிக்கவும் அதிகப்பணம் தேவை. நம்முடைய கையொப்பநேயர்களில் அநேகர் தயைகூர்ந்து சென்ற வருஷத்துக்குச் சேரவேண்டியதொகையைச் செலுத்திவிட்டார்கள். ஆனால் இன்னும் சிலர் அவ்விதம் செய்யவில்லை. அவர்களும் அவ்விதம் செலுத்திவிட்டால் மிகவும் உதவியாகயிருக்கும். கையொப்பநேயர்கள் வழக்கம்போல் நமது பத்திரிகையின் விருத்தியைக்கோரி இன்னும் தங்கள் சிநேகிதர்களையும், பந்துக்களையும் இதற்குக் கையொப்பம் செய்யும்படி தங்களாலியன்ற சகாயம் புரியபின்னடையார்களென்றும் நம்புகிறோம். கூடிய சீக்கிரத்தில் இன்னும் விசித்திரமான சிற்சில சித்திரப்படங்கள் இங்கிலாந்திலிருந்து நமக்கு வந்துவிடும். ஆனால் அவைகளுக்கு அதிக ரூபாய் கொடுக்கவேண்டியிருக்கிறது. நமது கையொப்பநேயர்கள் நமது அரச சக்கரவர்த்தியவர்களின் சரித்திரத்தை விலைக்கு வாங்கினால் பேருதவியாயிருக்கும். ஏனெனில் அப்புஸ்தக வரும்படி இப்பத்திரிகையின் விருத்திக்கு வைக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நமது கையொப்பநேயர்கள் அச்சிறந்த புஸ்தகத்தைக் கூடிய சீக்கிரத்தில் நமது ஆபீஸுக்கு எழுதி பெற்றுக்கொள்ளுவார்களென்று நம்புகிறோம்.

நமக்கு இதுவரையிலும் உதவிபுரிந்து வருகிற கையொபப நேயர்களுக்கும், நிருபநேயர்களுக்கும், சென்னை கவர்ன்மெண்டாருக்கும் நமது மனப்பூர்ண வந்தனத்தை யளிக்கின்றோம். மேற்கூறியவர்களுக்கும் நமக்கும் கடவுள் தீர்க்காயுளையும், தேகபலத்தையு மளிப்பாராக. சுபம்.

# சப்தம்.

நமது அநுபோகத்தில் நிலைபெற்றுநிற்கும் பொருள்களையும், நகரும்
பொருள்களையும் தினமும் பார்க்கின்றோம். கையில் வைத்துக் கொண்டிருக்
கும் காசு தவறி விழுந்துவிட்டால் வெகு விரைவாய் ஓட்டம் பிடிக்கிறது;
சிறிதுதூரம் ஓடினபின் நின்றுபோய்விடுகிறது. உம் எதிரில் இருக்கும்
பந்தை உதைத்தால் அதுவும் நகர்ந்து செல்லுகின்றது. இம்மாதிரி, நகரும்
வஸ்துக்கள் எல்லாம் இடம்விட்டு பெயர்ந்து செல்லுகின்றன. இவ்வா
றன்றி பம்பரம் ஒரே இடத்தில் நின்றுகொண்டு சுழல்வதைப்பார்த்து இரு
க்கின்றீர் அல்லவா? அப்பொழுது பம்பரம் முழுவதும் ஒரே அடியாய்
இடம் இடம்விட்டு பெயராவிட்டாலும்—அதாவது பம்பரம் நின்றவிடத்
திலேயே நிலையாய் இருப்பதுபோல் தோன்றினாலும்—அதன் ஒவ்வொரு
பாகமும் சுற்றிக்கொண்டே வருகிறது பாருங்கள். கடிகாரத்தில் இப்படி
யும் அப்படியும் ஆடும் பெண்டுலம் அசைவதைப் பாருங்கள். ஒரு சமயம்
ஒரு புறமும் ஒரு தடவை இன்னொரு புறமும் போய்க்கொண்டே இருக்கி
ன்றது. பெண்டுலம் ஆடுவதுபோன்ற அசைவுக்கு 'வைப்ரேஷன்' என்று
பெயர்.

சப்தத்தைபற்றி பேசும்பொழுது இதை ஏன்சொல்ல வேண்டுமென்று
கேட்பீர்களோ? சீக்கிரத்தில் எதற்கு என்பது விளங்கும்.

சப்திக்கும் வஸ்து வொன்றைப் பரிசோதிப்போம், வெங்கலப்
பானையோ, ஜோடுதவலையோ, நன்றாய் சப்திக்கக்கூடிய ஒரு பாத்திரத்தை
எடுத்துவைத்துக் கொள்ளுங்கள். உமது பென்சிலால் ஒரு அடி கொடுத்தால்
சப்தம் ஆகின்றது. மெதுவாய் விரலால் பாத்திரத்தைத் தொடுங்கள். எப்
படியிருக்கிறது? கையில் குறுகுறு என்கிற ஒரு உணர்ச்சி உண்டாகின்றது.
ஆம்! உண்மையே! அவ்வுணர்ச்சிக்குக் காரணம் என்ன? இன்னுமொரு
பரிக்ஷை செய்வோம்; பாத்திரத்தில் கொஞ்சம் ஜலம் விட்டபின்பு பென்சி
லால் பாத்திரத்தை அடியுங்கள்; இப்பொழுது என்ன பார்க்கின்றீர்? ஜலத்
தில் சிறுசிறு அலைகள் வட்டம் வட்டமாய் காண்கின்றன. இவ்வலைகள் எங்
கிருந்துவந்தன? சப்திக்கும் பாத்திரம் இவ்வலைகளை யுண்டாக்கியிருக்கலாம்;
இதை நிர்ணயமாய் அறிய இன்னொரு பரிக்ஷை செய்யவேண்டும்.

சோளத்தட்டு ஒன்றை எடுத்து அதன்மேல் புறத்திலுள்ள தோலை
நீக்கிவிட்டு உள்ளே யிருக்கும் சதையை (சடை, சோறு, என்றும் சொல்
வார்கள்) எடுத்து சிறியதோர் உருண்டையாய்த் தேய்த்துக்கொள்ளுங்கள்.
இதை ஒரு மெல்லிய பட்டு நூலில் தொங்கவிடுங்கள். அது சிறு பெண்டு
லம்போல் ஆடுகின்றது. முன் பரிக்ஷைகளில் செய்ததுபோல் பாத்திரத்தை
பென்சிலால் ஒரு அடிகொடுத்து அது சப்தம் செய்யும்போது சோளத்
தட்டுப் பெண்டுலத்தை பாத்திரத்தின் விளிம்பின் பக்கத்தில் பிடியுங்கள்;
பாத்திரம் பெண்டுலத்தை தள்ளிவிடுகின்றது, பாருங்கள். உட்புறம் ஒரு
பெண்டுலமும் வெளிப்புறம் ஒன்றையும் வைத்துப்பாருங்கள். இரண்டும்
அதேமாதிரி தள்ளப்படுகின்றன. ஆகையால் சப்திக்கும் பாத்திரத்தின்
அணுக்கள் முன்னும் பின்னும் நகருகின்றன என்பது விளங்குகின்றதல்
லவா? சப்தம்செய்யும் பாத்திரம் முழுவதும் இடம் பெயர்ந்து செல்லா



விட்டாலும் அதன் ஒவ்வொரு அணுவும் வைப்ரேஷன் செய்கிறது—அதா
வது முன்னும் பின்னும் நகருகின்றது.

சப்தம் செய்யும் எல்லா வஸ்துக்களின் அணுக்களும் இப்படியேதான்
வைப்ரேஷன் செய்யும். பெரிய மணி யொன்றைக்கொண்டு மேற்கூறிய
பரிக்ஷைகள் எல்லாவற்றையும் செய்துபார்க்கலாம். ஒரு கம்பியையாவது
ஒரு நூலையாவது மேஜையின் இரண்டு கால்களின் மத்தியிலும் பல
மாய்க் கட்டிவிட்டு அதன்மேல் சிறுசிறு காகிதத் துண்டுகளை வைத்துவிட்டு
மெதுவாய் பிடில் வில்லினால் தேய்த்தால் (அல்லது ஒரு விரலால் ஒரு
மூலையில் சுண்டிவிட்டால்) சப்தம் உண்டாவதோடு அணுக்கள், முன்
னும் பின்னும் நகருவதுபற்றி காகிதங்கள் கீழே தள்ளப்படுகின்றன. குழ
ந்தை விளையாட வைத்திருக்கும் சிறு பறையின்மேல் கொஞ்சம் ரம்பத்
தூளைத்தூவி பறையை மெதுவாய் ஒரு அடி கொடுத்தால் ரம்பத்தூள்
குதித்துவிழுவது நேர்த்தியாய் விளங்கும்.

எந்த வஸ்துவும் சப்திக்கும்போது அதன் அணுக்கள் வைப்ரேஷன்
செய்கின்றன வென்பது இப்பொழுது தெளிவாயிற்றே! இனி சப்தத்தை
நாம் கேட்பது எப்படியென்று ஆராய்ச்சி செய்யவேண்டும். மேஜையில்
ஒன்றன்முன் ஒன்றாய் 15 அரையணாக் காசுகளையாவது காலணாக் காசுகளை
யாவது அடுக்கி வைத்துக்கொள்ளுங்கள். ஒரு காசு மற்றொன்றைத் தொட்
டுக்கொண் டிருக்கவேண்டும். (இதற்கு ஒரு உபாயம் செய்யலாம்: முதலில்
ஒரு கோடு கிழித்துக்கொண்டு அதன் ஓரமாய் காசுகளை அடுக்கிக்கொண்டு
போகலாம். அப்பொழுது வரிசை தப்பாது.) ஒரு ஓரத்தில் இருக்கும் ஒரு
காசை வரிசைமாறாமல் ஒரு அங்குலதூரம் அப்பால் தள்ளிக்கொண்டு
அதையே வரிசையின்பேரில் வேகமாய்த் தள்ளினவுடன் நின்று விடுவதை
யும் மற்ற காசுகள் நகராமல் இருப்பதையும் மற்றொரு ஓரத்தில் இருக்கும்
கடைசிக் காசுமட்டும் நகர்ந்துபோய் இருப்பதையும் பார்க்கலாம். நாம்
தள்ளினகாசு வரிசையைத் தொட்டவுடனே தன்விசையடங்கி, அவ்வி
சையை தான் தாக்கின காசுக்கு கொடுத்து விடுகிறது. அது, தனக்கு
அடுத்த காசுக்கு தன் விசையைக் கொடுத்து தன் நிலையில் நின்றுவிடுகின்
றது. இப்படியே கடைசிக்காசும் விசையைப் பெருகின்றது; அதற்குப்பின்
இன்னும் வேறு காசு இல்லாதபடியால் தனக்கு கிடைத்த விசையுடன் ஓடி
ப்போகிறது. இதுவேபோல் மேஜையில் நீளமாய் குழிசெய்து அதில் அம்
மானைக் காய்களை வரிசையாய் அடுக்கி முன்போலவே பரிக்ஷை செய்யலாம்.
நாம் முதலில் வரிசையை நோக்கி பலத்துடன் தளளும் அம்மானைக் காய்,
காசு, இவைகள், எவ்வாறு தாமேநகர்ந்து போகாவிட்டாலும தம்விசையை
ஒவ்வொரு வஸ்துவின் வழியாலும் செலுத்தி கடைசியில் இருக்கும் வஸ்
துக்கு தமது சக்தியை கொடுக்கின்றனவோ—அப்படியேதான சபதமும்
வாயுவின் வழியாய்ப் பாவுகின்றது.

சப்தம் செய்யும் பாத்திரம் மணி, கம்பி இவைகளின் அணுக்கள் முன்
னும் பின்னும் ஓயாது ஆடுகின்றதென்பதை முன்னமேயே சொன்னோமே!
அவ்வணுக்கள் தம் வஸ்துக்களுக்கெல்லாம் தம்விசையைக் கொடுக்கின்றன.
நீர் பாத்திரத்தைத் தொட்டபோது உமது கை அவ்விசையை வாங்கிக்
கொண்டதுபற்றி குறுகுறு என்கிற உணர்ச்சி உமக்கு உண்டாயிற்று. அது
வேபோல் சோளத்தட்டின் சோற்றால்செய்த பெண்டுலமும் அடிபட்டு
நகர்ந்துபோயிற்று. ஒரு திரவுகோலைப் பிடித்தால் திரவுகோலை பாத்திரத்

தின் அணுக்கள் அடிப்பதைக் காணலாம். ஆகவே சப்தம்செய்யும் பொருள்
களின் பக்கத்தில் எவ்வஸ்து இருப்பினும் அது அணுக்களின் வேகத்தைப்
பெறுகின்றது.

வாயுவும் ஒரு பொருள் என்று முன் பாடத்தில் சொல்லியிருக்கிறோம்.
அல்லவா? வாயு நம்மைச் சுற்றிலும் எல்லா விடத்திலும் இருக்கின்றதென்
பதையும் நான் மறுபடிசொல்ல வேண்டுவதில்லை; ஆகையால் வாயு சப்தம்
செய்யும் வஸ்துவைச் சுற்றிலும் இருப்பதுபற்றி சுற்றுமுள்ள வாயுவின்
அணுக்கள், சோளத்தட்டின் சோறு தள்ளுண்டதுபோல் அடிபட்டு நகரு
கின்றன. அவை நகரும்போது தம் பக்கத்தின் உள்ள வாயுவின் அணுக்
களைத் தொடுவதுபற்றி அவற்றிடம் தமது வேகத்தைக் கொடுத்துவிட்டு
தமது நிலைக்கு வந்துவிடுகின்றன. இப்படியே வாயுவின் அணுக்கள் நாலா
பக்கமும் இருப்பது பற்றி எல்லாப் பக்கங்களிலும் இவ்வேகத்தை வாயு
வின் அணுக்கள் பரப்புகின்றன. வேகம் (அசைவு) இம்மாதிரியே முறை
யாக வாயு அணுக்களின் வரிசைகளால் மாற்றப்பட்டு நமது காதின் பக்
கத்தில் உள்ள வாயுவின் அணுக்கள் வரையில் வருகின்றது. அவற்றை அடு
த்து நமது காது இருப்பதால் அவை தம் வேகத்தால் 'காதை' அடிக்கின்
றன; நாம் சப்தம் கேட்கின்றோம். ஆகவே சப்தம் என்பது வாயுவின்
அணுக்கள் நமது காதுக்குக் கொடுக்கும் மெல்லிய அடிகளால் ஏற்படும்
உணர்ச்சியே தவிர வேறில்லை.

நான் காது என்று முன்னே சொன்னதினால் வெளிப்புறத்தே தெரி
யும் காதின் விரிவென்று நீங்கள் எண்ணக்கூடாது. வெளிப்புறத்தில் காதின்
உறுப்புகள் சரியாய் இருப்பதுபோல் தோன்றினும் சிலர் முற்றிலும் செவி
டாய் இருக்கலாமே! அதைப் பலரும் கண்டிருக்கலாம். ஆகையால் சிறுகச்
செல்லும் பொருட்டு காதினுள் உள்ள கேட்கும் கருவியான 'டிம்பனம்'
என்பதையே நான் மேலே காதென்று சொல்லிவிட்டேன்; அப்படியே மற்
றும் சில பண்டிதர்கள் சொல்லியுள்ளார். காதினுள், பறைக்குமேல் தோல்
போர்த்து இருப்பதுபோல் ஒரு மெல்லிய தோல் விரித்து இருப்பதாய் தேக
தத்துவசாஸ்திர பண்டிதர்கள் சொல்லுகிறார்கள். அது அசையும்போது
சில நரம்புகளை அசைக்கின்றதாம். அந்த நரம்புகள் சத்தம் கேட்கிறதென்ற
உணர்ச்சியை மூளைக்கு அறிவிக்கின்றனவாம். நாம் இந்தப்பாடங்களில் எல்
லாம் காது என்றால் 'டிம்பனம்' என்றே பொருள் கொள்வோம். சப்தம்
வாயுவின் அணுக்களின் வழியாய் வரும் விசை (சக்தி) என்பது உண்மையா
னால் 'வாயு இல்லாத ஒரு இடத்தில் ஒரு வஸ்துவை சப்தம் செய்தால் அதன்
சப்தம் நமக்கு கேட்காதே' என்று வினவலாம். அதற்கு என்ன சந்தேகம்?
வாயு வில்லாத ஒரு இடத்தில் ஒரு வஸ்துவை வைத்து சப்தம் செய்தால்
அதனிடம் இருந்து வரும் சப்தம் நமக்கு கேட்கவே கேட்காது. அதை நீங்
கள் அறியும்படி சரியான பரிக்ஷை செய்யமுடியாது; 'வாயு வாங்கி' என்னும்
யந்திரமும், எலக்டிரிக் மணியும், வேண்டும்; அவை இருந்தால் ஓரிடத்தில்
இருந்த வாயுவை எடுத்துவிட்டு எலக்டிரிக் மணியை அங்கே அடிக்க, அதன்
சப்தம் கேட்கமாட்டாது.

சப்தம செய்யும் எல்லா வஸ்துக்களின் அணுக்களும் அசைந்து
கொண்டு இருப்பதுபற்றி சப்தம் ஓரிடமிருந்து மற்றொரு இடத்துக்குச்
செல்லவேண்டுமானால், ஏதாவது ஒருவஸ்து நடுவேநின்றுதான் அசைவை
முறையே வேறு இடங்களுக்கு மாற்றவேண்டியிருக்கின்றது. வாயுவு மட்டும்



MADRAS

தான், சத்தத்தை ஓரிடமிருந்து மற்ற ஒரு இடத்துக்கு மாற்றக்கூடிய சக்
தியையுடையதென்று எண்ணவேண்டாம். ஜலமும் சப்தத்தை பரவச்செய்
யும்; இரும்பு, மரம், பித்தளை, கல், முதலிய கனபதார்த்தங்கள் வழியாலும்
சப்தம் செல்லும். உதாரணமாக உங்கள் வீட்டில் ஒரு பெரிய சட்டம்
இருக்கும் பக்ஷத்தில் அதன் ஒரு நுனியில் ஒரு காதைவைத்துக்கொண்டு,
மற்றொரு நுனியில் உமது சினேகிதனை, ஒரு பின் ஊசியால் மெதுவாய்க்
கீறச்சொன்னால், சப்தம் கேட்பதை அறியலாம். சப்தம் மெதுவாய் இருப்
பதுபற்றி வாயுவழியால் கேட்பதுகூடக் கிடையாது. இரும்புக்குழாய்களி
ருப்பின் அவற்றிலும் இதே மாதிரி செய்யலாம்.

சிறு பிள்ளைகள் விளையாடுவதற்குச் செய்யும் 'நூல்டெலிபோன்' வேலை
செய்வதும் இவ்விதியை அனுசரித்தேயாம். வலுவாயுள்ள நூல் 20, 30,
கஜம் எடுத்துக்கொண்டு அதை ஒவ்வொரு நுனியையும் ஒவ்வொரு காகிதக்
குழாய்க்காவது, மரக்குழாய்க்காவது சேராய்க்கட்டி விடவேண்டும். இரண்டு
பிள்ளைகள், ஒவ்வொருவனும் ஒரு குழாயைக் கையில் வைத்துக்கொண்டு,
நூலைச் சுருங்கிவிடாமல் இழுத்துப் பிடித்துக்கொளவார்கள். ஒருவன் குழா
யின் வாயில் மெதுவாய்ப் பேசுவதை மற்றொருவன் தன் குழாயைக் காதில்
வைத்துக்கொண்டு செவ்வையாய்க் கேட்கலாம். ஒரு பையன் பேசுவது
குழாயைத் தாக்கி அதன் வழியாய் நூலை அடைந்து நூலின் அணுக்கள்
வழியே மற்றொருவனிடம் செல்லுகின்றது. நீர் இம்மாதிரி ஒரு கருவி
செய்ய விரும்பினால் இரண்டு பாணக்குழாய்களை எளிதில் சம்பாதித்து அவ
ற்றை உபயோகிக்கலாம். இல்லையேல் இரண்டு தகர டப்பாக்களை உபயோ
கித்தாலும் சரியே.

சப்தம் செய்யும் வஸ்துவின் அணுக்கள் அசைவதாலும் அவ்வசைவு
வேகத்துடன் வாயுவின் வழியே வருவதாலும் சப்தம் தனது சக்தியால்
வேலைசெய்யக்கூடியது. பலமான வெடிபொன்று வெடித்தால் அந்த சத்தத்
தின் பலத்தில் சிலருக்கு காதுகெட்டுப்போகிறது. பாட்டுக்கச்சேரி நடக்கும்
அறையில் மிருதங்கத்தின் சத்தத்தால் விளக்கின் நுனி ஆடுவதைக் காண
லாம். இடி பலமாய் இடித்தால் கூரையிலிருந்து தூசிகள் கீழே விழுகின்றன.
குண்டின் சப்தத்தால் சுவர்களும் அதிரும். இவைகளெல்லாம் சத்தத்திற்கு
சக்தியிருக்கின்றதென்பதையும், சத்தம் வேலைசெய்யக் கூடியதென்பதை
யும் விளக்குகின்றன.

ஆர். கே. சுவாமி, பி-ஏ. எல்-டி.

## காலஞ்சென்ற கனம் வி. கிருஷ்ணசுவாமி ஐயரவர்கள்.

இம் மகாபுருஷர் திருவிடைமருதூரில் ஜூன்மாதம் 1836-ம் வருஷம்
ஜனித்தார். பாலியத்தில் அங்கேயுள்ள பாடசாலையில் சிறிதுகாலம் படித்த
பின் தஞ்சாவூரிலுள்ள எஸ். பி. ஜி. காலேஜியில் சேர்ந்து படித்தார். இங்கி
ருந்து கும்பகோணத்துக்குப்போய் அங்குள்ள கவர்ன்மெண்ட் காலேஜியில்
சேர்ந்து படித்து மெட்ரிகுலேஷன் பரிக்ஷையில் முதல் வகுப்பில் தேறி
னார். அக்காலத்தில் இக்காலேஜியில் மிஸ்டர் போர்டரும், மிஸ்டர் கோபால
ராயரும் இருந்தார்கள். இவ்விருகனவான்களும்சிறந்தஉபாத்தியாயர்கள். இவர்க
ளிடத்தில் படித்து சிறப்பாக தேறினவர்கள் பலர். அவர்களில் நமது காலஞ்

சென்ற கிருஷ்ணசுவாமி ஐயரவர்கள் ஒருவர். இங்கு சிறிதுகாலம் படித்த
பின்சென்னைபிரசிடென்சிகாலேஜியில்சேர்ந்து Logic & Moral Philosophy
முதலியவைகளைப் படித்து 1882-ம் வருஷம் பி. ஏ. பரிக்ஷையில் தேறி
னார். சிலமாதகாலம் Chemisty & Physics என்ற சாஸ்திரம் கற்றுவந்தார்.
இது இவருக்கு ஓய்வு நேரத்தில் மிகுந்த சந்தோஷத்தை யுண்டாக்கியதாம்.
பின்பு பி. எல். பரிக்ஷைக்குப் படித்து 1884-ம் வருஷம் இப்பரிக்ஷையிலும்
தேறினார். 1885-ம் வருஷம் வக்கீலாய்விட்டார். ஆனால் என்ன? சிறுவர்.
வரும்படி வந்தால்தானே சந்தோஷமாயிருப்பார். அதில்லாமையால் சிறிது
விசனமுற்றிருந்தாராம். இவருடைய புத்தி விசாலம், நன்னடக்கை முதலிய
வைகளைச் சர். எஸ். சுப்பிரமணிய ஐயரவர்கள் கண்டு தம்மிடத்திலிருந்து
வக்கீல் வேலைசெய்துவரும்படி ஏற்பாடு செய்தாராம். கிருஷ்ணசுவாமி
ஐயரும் அவரிடத்திலுள்ள பற்பல சட்ட புஸ்தகங்களைப் படித்து தமது
அறிவை விருத்திசெய்துகொண்டார். அவரிடத்திலிருந்தமையால் அநேக
வழக்குகளின் விவரம், அவைகளைக்குறித்து கோர்ட்டில் வாதாடும் முறை
முதலியவைகளைச் செவ்வனே கற்றுக்கொண்டார். இவ்விதம் சுமார் 7 அல்
லது 8 வருஷகாலம் செய்துவந்தமையால் ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயர
வர்கள் ஜட்ஜியாக நியமிக்கப்பட்டவுடன் இவர் நற்பேர் பெற காலம்வந்த
தென்றே சொல்லலாம். வரும்படி அதிகம் வர ஆரம்பித்துவிட்டது. பெரிய
வழக்குகளுக்கு வக்கீலாக நியமிக்கப்பட்டார். இவரும் வஞ்சனையின்றி வழக்
கின் சம்பந்தமான எல்லா விஷயங்களையும் நன்றாகப் படித்து தெரிந்துகொ
ண்டு வாதாடிவந்தார். கக்ஷிக்காரர்களிடத்திலிருந்து பணம் அடைந்து அசட்
டையாயிராமல் அவர்களுக்குத் தம்மாலியன்ற உபகாரத்தை அளிக்கவேண்டு
மென்று எண்ணி உழைத்துவந்தார். இவ்விதம் செய்துவந்தமையால் பணம்
குவிய ஆரம்பித்துவிட்டது. இப்பொழுதுதான் இவருக்கு லக்ஷ்மிகடாக்ஷம்
உண்டானதென்று சொல்லலாம். ஜட்ஜிகளுக்கு முன் தமது வழக்கைச் செவ்
வனே எடுத்துரைப்பார். சகல நியாயங்களையும் காட்டுவார். தாட்டியாகவும்
மரியாதையாகவும் பேசிவந்தார். இவர் இவ்விதம் செய்துவந்தது இவர்களு
க்கு இவரிடத்தில் மதிப்பும், சந்தோஷமாயிருக்கும்படியும்செய்தது. ஐகோர்
ட்டில் ஒரு ஜட்ஜிவேலைகாலியாகவே, இவர் ஜட்ஜியாக நியமிக்கப்பட்டார். அவ்
வேலையையும் திறமையுடன் யாவரும் மெச்சும்படி செய்துவந்தார்.

இவர் பின்னிட்டு கவர்னருடைய எக்ஸிக்யூடிவ் கௌன்ஸிலுக்கு மெம்ப
ராக நியமிக்கப்பட்டார். இதுவரையிலும் இப்பதவிக்கு இந்தியர்கள நியமிக்
கப்படவில்லை. (போபிலி மகாராஜா இவ்வேலையில் முதலில் நியமிக்கப்பட்
டார். இவர் இவ்வேலையை விட்டதும்) ஐயர் அவ்வேலையை வெகு நன்றாகப்
பார்த்துவந்தார். அநேக பத்திரிகைகளும், கனவான்களும்அவர்செய்தவேலை
யைப் புகழ்ந்து அவருக்கு ஞாபகச்சின்னமாக ஒரு சிலை உருவத்தை வைக்க
ஒருசபை கூடினபொழுது பேசினார்கள். சம்ஸ்கிருதம் நன்றாகப் படித்தவர்.
தமிழிலேயும் நன்றாகப்பேசிவந்தார். வக்கீலாயிருந்தபொழுது காங்கிரஸ் மகா
சபைக்கு மிக்கஉழைத்துவந்தவர்களில் இவரொருவர். சென்னை மகாஜனசபை
யில் ஒருமெம்பராகயிருந்தார். கைத்தொழில், வியவசாயம் இவைகள் விருத்தி
யடையவேண்டுமென்று பற்பல சமயங்களில் பிரசங்கம் செய்ததும் தவிர
அவ்வித முயற்சியுடையோருக்கும் பணஉதவிபுரிந்துவந்தார். தமது ஏழையா
யுள்ள உறவினர்களுக்கு திரவியசகாயம் செய்ததாகவும் வதந்தி. மைலாப்பூரி
லுள்ள இந்துவைத்திய காலேஜியையும், சம்ஸ்கிருத காலேஜியையும் ஸ்தாபி



த்து அவைகளுக்கு கட்டடம் கட்டிவைத்து திரவிய சகாயமும் செய்தார்.
தாம் கஷ்டப்பட்டு சம்பாதித்த ஆஸ்தியில் பாதிக்குமேல் தரும விஷயத்
தில்செலவழித்திருக்கிறார். வேதாந்தவிஷயத்தில் மிகப்பற்றுண்டு. கான்வொ
கேஷன் நடந்த காலத்தில் இந்து மதத்தைப்பற்றி யாவரும் மெச்சும்படி ஓர்
சிறந்த உபந்நியாசம் செய்தார். இவருடைய மனைவியார் இவர் ஜட்ஜியான
வுடன் இறந்தபொழுது இவருக்கு பெருத்த விசனமுண்டானது. ஆயினும்
தமது குழந்தைகளைக் கவனித்துக்கொண்டும் தமக்குண்டான புதிய அலு
வலைப் பார்த்துக்கொண்டும் ஒருவாறு தமது மனதைச் சந்தோஷப்படுத்திக்
கொண்டிருந்தாரென்றே சொல்லலாம். மறுவிவாகம் செய்துகொள்ள சிறிதும்
விரும்பாதவராயிருந்தது மிகவும் புகழத்தக்கதே. சரீரதிடமுள்ளவராயிரு
ந்து டெல்லிக்குச்சென்று வியாதியின் உபத்திரவத்தால் டர்பார் வைபவத்
தைப் பார்க்கமுடியாமல் சென்னைக்குத் திரும்பிவந்து பரலோகமடைந்த
தைப்பற்றி நாம் மிகவும் விசனப்படுகிறோம். தர்மசிந்தையும், தேசக்ஷேம
மும், இவர் மனதில் குடிகொண்டிருந்தன. முன்கோபமும், அவசரமுமுள்ள
வர். இவைகள் சாதாரணமானவைகளே. முதலில் கூறிய குணங்கள் இவை
களை மறைத்து வைத்ததென்றே சொல்வோம். இவர் புத்திநுட்பமுள்ள
வர்களைக்கண்டால் அவர்களிடத்தில் இவருக்குப் பிரியமுண்டு. சுயஜாதியபி
மானமுடையவர். ஏழைகளுக்கு தம்மாலியன்ற உதவிபுரிந்தே வந்தார். இவ்
வித தரும சீலரும், தேசோபகாரியும் இவ்வுலகைவிட்டு வானுலகுக்கு நீங்கி
யது நமக்கெல்லாம் பெரும் துக்கத்தை உண்டாக்கியது.

பா—ர்.

## தக்காளி.

சாதாரணமாய் இக்காய்வர்க்கம் நம் பிரதேசங்களிற் பயிரிடப்படுவ
தில்லை. தற்காலத்தில், தக்காளிச் செடிகள் பெங்களூரில் அதிகமாய்ப் பயிரி
டப்படுகின்றன. நம் நகரில் பெங்களூரிலிருந்து தக்காளிப்பழங்கள் கொண்டு
வரப்பட்டு, ஒவ்வொரு பழமும், உருவத்திற்கேற்ப, 2 பை முதல் 6 பை
வரை விற்கப்படுகின்றன.

இது குளிர்தேசத்துப் பயிராயிருந்தபோதிலும் நம் தேசத்திலும் சற்
றேறக்குறைய நன்றாய்ப் பயிராகிறது. வெண்டை, கத்தரி முதலியவைகளைப்
பயிரிடுவதுபோல இச்செடியையும் நம் குடியானவர்கள் தோட்டக்கால்களிற்
பயிரிட்டால் தக்கபலனை யடைவார்களென்பதற் கையமில்லை.

தக்காளி விதைகள் பெங்களூரில் விதை வியாபாரிகளிடமிருந்து சொற்ப
விலைக்குப் பெறலாம். அப்படிப்பெறச் சாத்தியமில்லாதவர்கள், சென்னையில்
பெங்களூர் காய்கறி வகையறாக்கள் விற்பவர்களிடமிருந்து, ஒரு நல்ல பழ
த்தை வாங்கி, விதைகளை யெடுத்துத் தெள்ளிய சாம்பலிற் கலந்து உணர்த்தி
யெடுத்துக்கொள்ளலாம்.

விதைகளை நன்றாக எருவிட்ட ஒரு சிறிய பாத்தியில், நிழலில், நாற்று
விடவேண்டியது. ஐந்து அல்லது ஆறுதினத்தில் விதைகள் முளைக்கின்றன.

அப்படி முளைத்து 15-தினங்களானவுடன் நாற்றுகள் நடவுக்குத் தயாரா
கின்றன.

8 அங்குலம் சதுரமாயும், ஒரு அடி ஆழமாயும் ஒன்றரையடி தூரத்
திற்கொரு குழிவெட்டி, நன்றாக எருவிட்டு, நாற்றுகளை நடவேண்டியது.
தினந்தோறும் செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சவேண்டிய தவசியம். பயி
ருக்கு ஈரம் உணராமலிருக்க வேண்டுமேயானாலும் பயிரில் தண்ணீர் தேங்கக்
கூடாது. பயிருக்கு அதிக நிழல் வேண்டியதில்லை.

இச்செடி கொடியாக வளருவதன்று. செடிகளாகத்தான் வளர்கின்றன.
செடியின் தண்டுகள் அதிநுட்பமானவை. செடிகள் காற்றில் ஒடிந்து ஒன்
றன்மேலொன்று கீழே விழுந்து விடாதபடி, செடிகளைத் தாங்குவதற்காக
தரைமட்டத்திலிருந்து சுமார் 2 அடி உயரத்தில், மூங்கிற்பத்தைகளால் ஜல்
லிப்பந்தல் போடவேண்டும். பந்தலில் ஜல்லித் துவாரங்கள் 5 அல்லது 6
அங்குலம் சதுரமாயிருத்தல் வேண்டும்.

நாற்றுகள் நட்டு, சுமார் 25 தினங்களுக் கப்புறம் செடிகள் பயன்றர
வாரம்பிக்கின்றன. முதலில் அவ்வளவு அதிகமாய்க் காய்ப்பதில்லை. நடவு
ஆன இரண்டாவது மாதமுதல் மூன்றாவது மாத இறுதிவரை அதிகமாய்க்
காய்க்கின்றன. நான்காவது மாதக் கடைசியில் பயனே யில்லையென்று சொல்
லும்படியான அவ்வளவு கொஞ்சமாய் காய்க்கின்றன. இன்னும் கொஞ்ச
நாளைக்கெல்லாம் செடிகள் பட்டுப்போகின்றன. இச்செடியை, ஏப்ரல், மே,
ஜூன், ஜூலை முதலிய உஷ்ணமாதங்களைத் தவிர்த்து மற்ற காலங்களிற்
விசேஷமாய்ப் பயிரிடலாம்.

காய்கள் கிச்சலிக்காய்போன்ற தட்டையான உருண்டை வடிவமுள்
ளனவாய், வெளிரான பச்சைநிறமுடையவை. பழங்கள் உதிரம்போற் சிவந்
திருக்கும். ஒரு பெரிய டென்னிஸ் பந்து (Tennis ball) அவ்வளவு பெரி
தாய் இருக்கும்.

பழங்கள் அதிக ருசியாயிருப்பதுபற்றி அனேகர் சமையல் செய்யா
மலே தின்கிறார்கள். பருப்பு சாம்பாரில் சேர்த்தாவதும், அல்லது எலுமிச்
சை ரஸம் கலந்து பச்சடி செய்தும் உபயோகிப்பாருமுண்டு.

தக்காளியைக் காய்களாகவே கூட உபயோகிக்கலாம். கத்தரிக்காய்கள்
எவ்வெவ்விதங்களி லுபயோகப்படுகின்றனவோ, அவ்வவ்விதங்களிலெல்
லாம் தக்காளிக்காய்களும் உபயோகப்படுகின்றன. தக்காளிக்காய் வற்றல்
செய்யவும் உபயோகப்படுகின்றது.

தக்காளிப்பழம் தேகத்திற்குக் குளிர்ச்சியானது. இதைப் புசிப்பத
னால் தேகத்திற்கு ஆரோக்கியமே தவிர வேறில்லை.

☞ தி. மு. வரதாசாரி.



# சில முக்கிய சுகாதாரக் குறிப்புகள்.

சென்னை பெங்களூர், திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் முதலிய பட்
டணங்களில் சாதாரணமாக ஓட்டல்களுக்குப் பிள்ளைகளும், பெரியவர்களும்
சென்று காப்பி. தேயிலை முதலியவைகளைக் குடித்து வருவது யாவருக்கும்
தெரிந்த விஷயம். அவ்விதம் குடிக்கும்போது பாத்திரத்தின் வி
ளிம்பில் வாயில்படும்படியாக வைத்துக்கொண்டு பானம்செய்து
வருகிறார்கள். இவ்விதம் செய்வதால் ஆசார விரோத மொரு
பக்கமிருக்க, வைத்திய சாஸ்திரத்திற்குப் பெருத்த விரோத
மாயுமிருக்கிறது. எப்படி யெனில் ஒருவர் குடித்த பாத்திர

**காப்பி மு தண்ணீர் குடித்தல்.**

த்தை ஓட்டல்காரர் நன்றாகக் கழுவாமல் அதை ஜலத்தில் போட்டு உடனே
எடுத்து அதில் காப்பித்தண்ணீரை விட்டு கொடுக்கிறார்களே தவிர அப்பாத்
திரத்தை நன்றாகக் கழுவி கொடுப்பதேயில்லை. இவ்விதம் நடந்து வருவதால்
தொத்து வியாதியுள்ளவன் குடித்த பாத்திரத்தால் அவ்வியாதி பரவுமென
வைத்ய நிபுணர்களின் அபிப்பிராயம். அமெரிக்காவில் இவ்வழக்கம் அதிகம்.
அங்குள்ள டாக்டர்சள் இதைக் கண்டித்து ஒவ்வொருவனுக்கும் கடுதாசி
யால் செய்யப்பட்ட பாத்திரங்களைக் கொடுத்து வரும்படி ஏற்பாடு செய்
திருக்கிறார்களாம். கடுதாசி பாத்திரங்களில்லா விடின் ஓட்டல்களில் பாத்
திரங்களை நன்றாக சுத்தி செய்துவர ஏற்பாடு செய்திருக்கிறார்களாம். நம்ம
வர்களும் ஓட்டல்களில் தொன்னைகளை வைத்துவர முயன்றால் மிக நலமா
யிருக்கும்.

வியாதியஸ்தர்கள்:—நமது வீடுகளில் வியாதியுள்ள குழந்தைகள் அல்
லது பெரியவர்களிருந்தால் அவர்களை வெகு ஜாக்கிரதையாக கவனித்து வர
வேண்டும். கால்களை ஜில்லென்றிருக்கும்படி செய்யக்கூடாது. அடிக்கடி
கவனித்தும் கால்களைக் கம்பிளியால் மூடியும் வைத்துக்கொள்ளவேண்டும்.
அவர்கள் படுத்திருக்குமிடம் ஈரமாயிருக்கக்கூடாது. அதிக ஜனங்கள் நட
மாடுமிடமாயுமிருக்கக்கூடாது. காற்று வேண்டுமளவு வரவும், உள்ளிருக்கும்
காற்று வெளியிற் செல்லவும் ஏற்பாடு செய்துகொள்ளவேண்டும். வியாதியஸ்
தர்களை அடிக்கடி பந்துக்களோ அல்லது ஸ்நேகிதர்களோ பார்த்து பேசி
தொந்திரவு செய்யக்கூடாது. இவ்வழக்கம் நம்மவர்களில் அதிக முண்டு.
இதைத் தடுத்துவர ஒவ்வொருவரும் முயலவேண்டும்.

போஜனபதார்த்தங்கள்: நம்மவர்களில் தனவந்தர்கள் பழையபதார்த்தங்
களையும், சாம்பார், இரசம் முதலியவைகளையும் தங்கள் குழந்தைகளுக்குப்
புசிக்கக் கொடுப்பதில்லை. ஆனால் சில மத்திய வகுப்பாரும், ஏழைகளும்.
இவ்விதம் செய்துவருகிறார்கள். இவைகளை பலமுள்ள குழந்தைகளுக்குக்
கொடுத்தால் அவ்வளவு கெடுதல் உண்டாகாது. பலஹீனர்களுக்குக் கொடுத்
தால் அஜீர்ண சம்பந்தமான பலவியாதிக ளுண்டாகும். இதையும் தாய்மார்
கள் கவனித்து வரவேண்டும்.

குழந்தைகளின் உடுப்பு: இதை அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டும்.
அழுக்கடைந்த உடுப்புகளைக் குழந்தைகளுக்கு யணிந்தால் மிக்க கெடுதலே
யாம; இன்னும் அடுத்த தடவையில் எனக்குத்தோன்றும் சிற்சிலவிஷயங்களை
எழுத எண்ணியிருக்கிறேன். நமது மாதர்கள இவைகளைப்படித்து அநுஷ்டா
னத்திற்குக் கொண்டுவருவார்க ளென்று நம்புகிறேன்.

☞ உற்றுப்பார்ப்போன்.

# பெண்களுக்கு கல்வி அவசியமா?

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்—குறள்.

அரிய சகோதரிகளே!

பிரபஞ்சத்தில் மானிடவுருக்கொண்டு பிறந்த ஆண் பெண் சகலருக்கும் பாஷா ஞான மியல்பாக வுண்டென்பதும், மற்ற ஜந்துக்களைப்போலல்லாமல் பேசுந் திறமிருத்தலால் தங்கருத்தை பிறர்க்கு வெளியிடவும் பிறர் கருத்தை கிரகிக்கவும் சக்தியுடையவர்களா யிருக்கிறார்க ளென்பதும் தடையில்லாம லொப்புக் கொள்ளக்கூடிய விஷயங்களாகும். இவ்வியல்பு ஸ்திரீ புருஷ பேத மின்றி ஈஸ்வரனால் சிருஷ்டிக்கப்பட்டிருக்க சிலர் கல்வியானது ஸ்திரீகளுக் கவசியமில்லை யென்று கூறுகின்றார்கள். இம்மட்டோடு நிற்காது வேறுசிலர் கல்வி கற்பதனால் ஸ்திரீகள் துன்மார்க்கமான வழியை கடைப்பிடித்து கெட்டுப் போகின்றார்க ளென்றும் ஆகையினால்அவர்களைப் படிக்க வைப்பது மதியீனமெனச் செப்பியும் வருகின்றார்கள். ஆயினு மித்தகைய தப்பெண்ணங் கொள்ளுகிறவர்கள் நாட்கள் செல்லச் செல்ல குறைந்துகொண்டு வருகின்றார்கள். பரதகண்டத்திலுள்ள ஆண்பிள்ளைகள் வாசிப்பில் தேர்ச்சி யடைந்தவர்களாய் நாளடை விலத்தகைய வாசிப்பின் பயனை மதியீனத்தாற்கொண்ட பலவித துரெண்ணங்களை மாற்றி வருதலினாலும், பொதுவாக வாசிக்கும் ஆண்பிள்ளைகளின் தொகை வருஷாவருஷ மதிகரித்து வருதலினாலும், மேற் சொன்ன தப்பெண்ணங்கொள்ளுகிறவர்களின் தொகை குறைந்துகொண்டே வருகின்றது. இன்னங்கொஞ்ச நாட்களில் பெண்களுக்கு கல்வி யவசியமென்ற விஷயத்தை மனப்பூர்வமாக வெல்லோருஞ் சொல்லுவார்களென்றே யெண்ணங்கொள்ள வேண்டியிருக்கின்றது.

"பெண்களுக்கு கல்வி கூடாது, அவர்கள் கல்வி கற்பதால் கெட்டுப் போகிறார்கள்" என்று சொல்லுபவர்களின் கொள்கைகளைச் சிறிது ஆராய்ந்து பார்க்குமிடத்து அத்தகையோருடைய அறியாமை நன்கு புலப்படும். பெண்களுக்குக் கல்வி கற்பிக்கு மிடத்து சிறிது காலஞ்சென்றபின் கற்றதின் பயனாக சில சுதந்தரங்கள் கொடுக்கவேண்டி வருமெனப் பயந்தோ, தங்கள் குடும்ப க்ஷேமத்தைக்கோரி வீட்டின் வேலைகளை சிரத்தையோடு பிறருதவியின்றி செய்யமாட்டார்களென அஞ்சியோ, அல்லது தங்களுக்கு சமமான ஸ்திதிக்கு பெண்மணிகளைக் கொண்டு வரும் பக்ஷத்தில் பிறர் நகைப்பார்களென நினைத்தோ இவ்விதமான கோணலான எண்ணத்தை வகித்தவர்களாயிருக்கிறார்கள். ஒரு காரியஞ்செய்யத் துணிவதிலித்தகைய யோசனைகளிருக்க வேண்டியது முக்கியமே யானாலும் சிறிது ஆழநோக்குவார்களே யானால், தவறான வெண்ணங்கொண்டதற்கு தாங்களே துக்கிப்பார்கள். ஏதோ தங்கள் கண்ணுக்குத்தோன்றின விரண்டொரு விடயங்களா லொரே தீர்மானத்துக்கு வந்து யோசனையின்றி பலர்க்குஞ் சொல்லி வருவது நியாயமுமன்று நீதியுமன்று.



ஸ்திரீகளுக் கேற்பட்டிருக்குங் கடமைகளை நினைக்குமிடத்து புருஷரை விட கடினமான வேலையைச் செய்ய கடமைப்பட்டிருக்கிறார்களெனத் தெரி யவரும். ஒரு தேசத்தரசனைவிட மந்திரியானவ னெவ்விதமாக மேம்பாடுடைய புத்திசாலியா யிருக்க வேண்டுவதவசியமோ அவ்விதமாக தங்கள் பர்த்தாக்களுக்கு உற்றவிடத்து யோசனைகளைச் சொல்லவும் அவர்கள் துக்கப் படுங்காலத்து வேண்டிய ஆறுதல் சொல்லி துக்கத்தை தாங்கள் வகித்துக் கொள்ளவு மிருத்தலோடுகூட தாய்மார்களான காலத்தில் தேசத்தின் நன்மையையும் குடும்பத்தின் விர்த்தியையுங் கோறினவர்களாய் சன்மார்க்கத்தில் தங்கள் குழந்தைகளை நடத்திவரும்படியான பொறுப்பும் ஸ்திரீகளின்மேலே யிருக்கின்றனவே யன்றி இவ்விஷயங்களின் பொறுப்பு புருஷர்களுக் கவ்வளவு கிடையாது.

புத்திவன்மையிலேனும் மற்றெந்த ஒழுக்கங்களிலேனும் இத்தேயத் துப் பெண்கள் மற்றதேசத்துப் பெண்களைக் காட்டிலும், தாழ்ச்சி யடை யார்களென்பது நிச்சயம். முற்காலத்திலோ சீதை, துரௌபதை, சாவித்திரி நளாயினி முதலிய கற்புக் கரசிகள் தத்தம் அறிவிற் சிறந்த கணவரோடும் முனிவர்களோடும் தேவர்களோடுங்கூட தத்துவ விஷயங்களைப்பற்றி சம் வாதித்தும் போராடியுமிருப்பதாக நமது நூல்களுரைக்கின்றன. இவர்கள் வாசிப்பின் மேன்மையால் கற்புமிகுந்து பிரகாசித்ததும் தங்களுக்கு கஷ்ட காலம் வந்த காலத்தி லியல்பாக தெய்வகிருபை யேற்பட்டதும் சகலருமறிந்த விஷயங்களே யாகும்.

பெண்கள் அப்பொழுது தாங்களடைந்திருந்த கல்வியாலும் சுதந்தரத் தாலுங் கர்வங்கொண்டு தமக்கேற்பட்டுள்ள வீட்டுவேலைகளைச் செய்யாமல் விட்டு விட்டனரா? தங்கள் தாய்தந்தை பர்த்தா இவர்களுக்குச் செய்யவேண்டிய முறைகளினின்றும் வழுவினார்களா? தங்களிஷ்டப்படி மனம்போன போக்கெல்லாஞ் சென்று பிறர் நகைக்க மார்க்கந்தேடிக் கொண்டார்களா? ஒருபோதுமில்லை. இவர்களே தாயார்க்கும் மனைவியர்க்குமுள்ள கடமைகளைக் குறைவுறாது செய்து பேர்பெற்றவர்கள். இப்படியிருக்க சரியான வழியில் பெண்மணிகளுடைய கல்வியை விர்த்தி செய்தால் நாட்டுக்கு க்ஷேமமேவரு மென்பது சொல்லாமலே விளங்கும்.

சற்றுப்படிக்கவும் எழுதவுங் கற்பின் பெரும்பாலும் ஸ்திரீகள் செய்ய வேண்டிய காரியங்களையும் பிறர்பாலொழுகும் மார்க்கங்களையும் போதிக்கும் நூல்களை யவர்களிடம் பயிற்சிக்கு கொடுக்காது, தமது மதக்கொள்கைகளுக்கு விபரீதமாகச் சொல்லப்படும் பாடங்களையும், தேசாசார வழக்கத்துக்கு மாறுபாடாக விருக்கும் காரியங்களையும் அவர்கள் புத்தியிற் செலுத்தி வந்தால், வாசித்து பயனில்லாமற் போவதோடு மட்டும் நிற்காமல் தீங்குவிளைவதிற் சிறிதேனும் சந்தேகமில்லை. இத்தகைய வழிகளைப் பெண்களுக்கு காண்பித்துக் கொடுப்பது வீட்டின் கண்ணுள்ள தாய்மார்களின் தவறேயாகும். நல்ல புத்தகங்களைப் பொருக்கி, வாசிக்க கொடுத்தாலும், வாசிப்பின் பிரயோசனமாக வாசித்த வழியில் நிற்க முயலும்படி புகட்டலும், சகவாசம் சரியானபடி யிருக்கின்றதாவென கவனித்தலும், வீட்டிலுள்ள மூத்தோர்களுடைய கடமையாகும். அக்கடமை சரிவர செலுத்தப்பட்டு வருமாயின்

நமது தேசத்தில் வாசித்த பெண்களளவற்ற கோடியாயிருப்பதோடு மட்டும் நிற்காமல், இவ்வளவு நாளாக பலராலிகழப்பட்டும் நிராகரிக்கப்பட்டும் வருகிற அநேக ஒழுங்கீனங்கள் மறைந்தே போயிருக்கும்.

கடைசியாக வொன்று குறிப்பிட வேண்டியிருக்கிறது. நம்முடைய நாட்டிலுள்ள பெண்களுக்கு படிப்பு அவசியமென்று சொல்லுவதாலவர்கள் ஆண்பிள்ளைகளைப்போல ஓர்வித உத்யோகத்தை யபேக்ஷித்து கற்றுவரல் வேண்டுமென்ற அர்த்தமல்ல. புருடர்களுக்கு தகுந்த பத்தினிகளாகவும் குழந்தைகளுக்கு தகுந்த தாயாராகவு மிருக்கவேண்டுமென்றே யொழிய மற்றெவ்வித எண்ணத்துடனு மிவ்விட மெடுத்துக் கூறவரவில்லை. வாசித்த பெண்களிருக்கும் பக்ஷத்தில் வீட்டுவேலை போக, மற்ற நேரங்களில புராதன சரித்திரங்களை வாசித்து, சகல நற்குணங்களை யனுசரித்து, துர்க்குணங்களைக் களைந்தும், வீட்டிலாண்மக்களில்லாத காலத்து குழந்தைகளைச் சீர்படுத்தும் வழியை யறிந்தும் வருவார்களென்பதும் நிச்சயம். அப்படியில்லாதிருக்குமானால் குடும்பத்தில் சுகமில்லாதிருத்தலோடு கூட பசி, தாகம், நித்திரை முதலான உலகவிச்சைகளி லாழ்ந்துள்ள மிருக ஜாதிகளினின்று பேதமில்லாதவர்களாய் நாட்களை கழித்துச்செல்ல வேற்படுமேயன்றி மற்றைய பயன் யாதொன்றையுமடைய மார்க்க முண்டாகாது. ஆகையாலினி மேலாவது தேசத்தின் நன்மையையும், குடும்பத்தின் க்ஷேமத்தையும், யாக்கையின் பயனையுங் கருதிய ஆண் பெண்மக்களனைவருங் கல்வியாலுண்டாகும் பிரயோசனங்களை யாழக்கருதினவர்களாய் தங்கள் பெண்களினிளமைப் பருவத்தை வீணே கழிக்காமல் மேற்சொன்ன வழியினடக்க ஒன்றுசேர்ந்து வருவார்களென்பதே யெமது விண்ணப்பமாகும்.

ஆண்மக்களுக்கு ராஜாங்கத்திற் பெரிய கௌரவங்கள்கிடைப் பதனாலும், புகைவண்டி, மின்சாரம், புகைக்கப்பல் இவைகளால் சகல சௌகரியங்களேற்படுவதாலும், பலவித மார்க்கங்களால் வயல்களில் விளையும் பயிர்களையும் கைவேலைகளாற்செய்யப்படும் தொழில்வேலைகளையும் விர்த்திசெய்வதாலும் இன்னமித்தகைய பலவித மார்க்கங்களால் மட்டும் நம்முடைய தேயம் செழிப்புற்று பிரதான நிலைமைக்கு வந்து விடுமென்று நினைத்தல் தவறேயாம். ஆண்மக்களுக்குத் தக்க சவரக்ஷணையும் தைரியமும் கொடுப்பதற்குத் தகுந்த பத்னியர்களாகவும் பால்யர்களை சன்மார்க்கத்திற்கு கொண்டுவரும்படியான முயற்சியைச்செய்வதே நோக்கமாகவுடைய மாதாவாகவுமிருப்பதற்கு கல்வி இன்றியமையாததாலும் இத்தகைய கூட்டுறவை புருடர்கள் ஸ்திரீகளிட மிருந்தடைந்தாலன்றி விர்த்திகேதுவில்லை யாதலாலும் நாட்டின் நற்காலத்தைக் கோருகிற யாவரும் எவரெப்படிச் செப்பினும் பெண்கல்விக்காக சிரமப்படுவார்களென்பதில் தடையுமுண்டோ ?

☞ காமாக்ஷியம்மாள்.

[மேற்சொல்லிய விஷயம் அச்சிடப்பட்டு இனமாகக் கொடுக்கப்படுகிறது. இவ்வித தாமம் செயபவர் ஸ்ரீமதிகாமாக்ஷியமமாள்.—ப-ர்.]



# ஜோதிமதி.

“எந்த மனிதன் என் பாதத்திற்குள் அதிக ஆழத்தில் பதிந்திருந்த முள்ளை எடுத்து விட்டவன். அவனிடத்தில் நான் நன்றியுள்ளவனாயிருக்கிறேன், மேலும் அவன் எப்பொழுதாவது நமது உதவியை விரும்பினால் நாம் அப்பொழுது அவனுக்கு அவ்வித உதவியைச் செய்யவேண்டும்.” என்று ஆண் புலி சொல்லிற்று.

அன்றிரவுக்கு ஆகாரம் எதையாவது சம்பதிக்க சக்தியில்லாத பெண்புலி “அவனைப் புசிப்பதே மிக்க மேலானது” என்று உறுமிற்று. ஆண்புலி பயங்கரமான கர்ச்சனையுடன் “அவனைப்புசிக்கக் கூடாது” என்று கெட்டியாகச் சொல்லவே, தான் வந்த வழியைப்பார்த்துக் கொண்டு புதருக்குப் போயிற்று. இராஜகுமாரன் போகும்வரையில் இவ்விடத்திற்குப்பெண்புலி வரத்துணியவே யில்லை.

இராஜகுமாரி ஜோதிமதி யிருக்கும் தேசத்திற்குப்போக இராஜகுமாரனுக்கு புலி குறுக்குவழியைச் சொல்லிற்று. “ஆனால் அத்தேசம ஏழு காடுகளுக்கு அடுத்தாற்போலிருக்கிறது. காடுகளுக்கு மத்தியில் மூன்று மலைத்தொடர்களிருக்கின்றன” என்றும் சொல்லிற்று.

இராஜகுமாரன் தான் ஒருபொழுதும் அங்குபோக முடியாதென்று பயப்பட ஆரம்பித்தான்.

இக்காடுக்கு அடுத்த பக்கத்திலுள்ள காட்டில் ஒருசாது யிருக்கிறார். இவர் மிக்க தெய்வபக்தியுள்ளவர். இவர் பிச்சை யெடுத்து புசிக்கிறார். இவரிடத்தில் ஒரு கட்டிலிருக்கிறது. நீ இதில் படுத்துக் கொண்டு ஏதாவதொரு விடத்திற்குப்போக நினைத்தால் இதுஉடனே உன்னை அவ்விடத்திற்கு கொண்டுபோய் சேர்த்துவிடும்.

“மேலும் இவரிடத்தில் ஒரு பை யிருக்கிறது. அதினுள் உன்கையைப் போட்டு உனக்கு என்னென்ன வேண்டுமோ அவைகளை யெல்லாம் நினைத்த மாத்திரத்தில் உனக்கு அவைகள் கிடைக்கும். மூன்றாவது வஸ்துவும் மிகவும் உபயோகமுள்ளது. அது ஒருவித கப்பரை. தண்ணீர் தேவையாயிருக்கும் பொழுது நினைத்தால் இதில் நிரம்ப தண்ணீரைக்காண்பாய். மேற்கூறிய மூன்று அருமையான பொருள்களை நீ அடைந்தால் அப்பெண்மணியிருக்கும் தேசத்திற்குச் சுலபமாகபோகலாம்” என்றது புலி. புலிசொன்னதைக்
கேட்டு மிகுந்த சந்தோஷத்துடன் எனது குதிரையைக்கொடுத்து அவைகளை
யடைகிறேன் என்று ராஜகுமாரன் பதிலுரைத்தான். புலி நீ என்னை எப்
பொழுது நினைக்கிறாயோ அப்பொழுது உன்னிடத்திற்கு வந்து உனக்கு
வேண்டிய உதவி புரிகிறேன் என்று சொல்லி விடைபெற்று சென்றது.

இராஜகுமாரன் புலிசொன்னபடி காட்டின்வழியாகச் செல்லுகையில் ஒரு மரத்தின்கீழ் அப்பெரிய சாது உட்கார்ந்திருப்பதைக் கண்டான். அவரிடத்தில் புலி சொன்ன மஞ்சம் ஒரு பக்கத்திலும், ஒரு பையும், கப்பரையும் மற்றொரு பக்கத்திலுமிருந்தன. இராஜகுமாரன் அப்பெரியவரை வணங்கி “ஐயா, ஜோதிமதியை நான் பார்க்க விரும்புகிறேன். ஆகையால் தங்களிடத்திலுக்கும் மிகவும் உபயோகமுள்ள சாமான்களை எனக்கு இரவலாகக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்” என்றான்.

அரசகுமாரன் விரும்புவதை அவர் கேட்டபொழுது நெடுநேரம் ஆழ்ந்த யோசனையிலிருந்தார். சிறிதுநேரம் சென்றபின் ஜோதிமதி என்ற ராஜகுமாரத்தியை ஏன் காண விரும்புகிறாய் என்று கேட்டார்.

"அவளை மணம்புரிய விரும்புகிறேன்" என்று வாலிப வயதுள்ள இராஜகுமாரன் சொன்னான்.

"சரி, உன் கையைப்பிடித்து நான் உன் கண்களைப் பார்க்கட்டும்" என்று சாது உரைத்தார்.

இராஜகுமாரன் கையை நீட்டவே, சாது அவன் கையைப்பிடித்து நேராக அவன் கண்களை உற்றுப்பார்த்து இவனை நம்பலாம் என்று தெரிந்து கொண்டார்.

"உனக்கு அவ்வஸ்துக்களை இரவலாகக்கொடுத்து உனது குதிரையை நீ திரும்பி வரும் வரையில் ஜாக்கிரதையாக வைத்திருக்கிறேன். இப்பொழுதே இப்படுக்கையுள்ள கட்டிலில் படுத்துக்கொண்டு ஜோதிமதி யிருக்கும் தேசத்திற்குப் போக நினை" என்றார்.

அவ்விதமே இராஜகுமாரன் கிண்ணம், பை இவைகளை யெடுத்துக்கொண்டு படுக்கையில் சயனித்து அத்தேசத்தில் தானிருக்கவேண்டுமென்று விரும்பினான். உடனே வாயுவேக மனவேகமாய் ஏழுகாடுகளையும் அவைகளுக்கு குறுக்கேயுள்ள மூன்றுமலைத் தொடர்களையும் தாண்டிக்கொண்டு அத்தேசத்தில் இவனைப் பத்திரமாய்க் கொண்டு வந்தது.

அதன் அரசன் பெயர் ராஜசேகரன். இவனுடைய அருமையான பெண் 'ஜோதிமதி'. விவாகம் இன்னும் ஆகவில்லை. தனது தேசத்திலுள்ள பிரஜைகள் இதர தேசங்களிலிருந்து வரும் அந்நியர்களுக்கு ஒரு இராத்திரி கூட அங்கு தங்க இடம் கொடுக்கக்கூடாதென கண்டிப்பான உத்திரவு செய்திருக்கிறார். அநேக இராஜகுமாரர்கள் இவன் குமாரத்தியை மணம்புரிய விரும்பி இவனையணுகி கேட்டபொழுது முடியாதென்று சொல்லியிருக்கிறார். சிற்சில சமயங்களில் அவர்களால் செய்யமுடியாத காரியங்களைச் செய்யும்படி சொல்லியிருக்கிறார். அவர்களுக்குப் பதில் சொல்வதில் அலுத்துப்போய் அந்நியர்கள் தமது நாட்டுக்குள் வராமல் வெளியிலேயே யிருக்கும்படி செய்ய நிச்சயம் செய்து இவ்விஷயத்தை யாவருக்கும் தெரிவித்தார்.

இச்சங்கதி நமது இராஜகுமாரனுக்குத் தெரியாது. இவன் இவ்விராஜ்யத்திற்கு வந்ததும் ஒரு கிழவியின் குடிசைக்கு வந்து, "அம்மா! இன்று இராத்திரி இவ்விடத்திலேயே தங்கியிருக்கலாமா" வென்று கேட்டான்.

"தங்கக்கூடாது; எங்களது அரசன் இவ்விதம் செய்ய சம்மதிக்கமாட்டார்" என்று கிழவி சொன்னாள்.

"உனது தோட்டத்தில் ஒரு மூலையில் என் படுக்கையைப் போட்டுக் கொண்டாவது படுத்துறங்கலாமா" வென்று அரசகுமாரன் கேட்டான். "உன்னுடன் இரவுபோசனம் நான் செய்யலாமா" என்றும் கேட்டான். கிழவி, "இரவு போஜனத்திற்கு என்னிடத்தில் அரிசியைத் தவிர வேறொன்றுமில்லையே" யென்று தலையை அசைக்கிக்கொண்டு மறுமொழி பகர்ந்தாள்.

அரிசியில்லாவிட்டாலும் சரி, இருந்தாலும் சரி எப்படியாகிலும் தன்னை உள்ளே விடும்படி மிக்க ஆவலுடன அக்கிழவியைக் கெஞ்சிகேட்கவே, அவளும் கடைசியாகச் சம்மதித்தாள். இராஜகுமாரன் உள்ளே வந்து ஒரு மேஜையின்மீது தன் பையை வைத்தான்.



"பையே!" எனக்குப் புசிக்க ஆகாரம் வேண்டு" மென்றான். உடனே பை திறந்துகொண்டது. இருவருக்கும் போதுமான ஆகாரமிருந்தது. கிழவியும் இராஜகுமாரனுடன் புசித்தாள். ருசியுள்ள மிட்டாய் தினுசுகளும், காரதினுசுகளும், பழம் முதலிவைகளும் ஏராளமாகயிருந்தன. வயதுசென்ற கிழவி இவைகளைக்கண்டு அதிசயித்து இவைகளைப்புசித்து சந்தோஷமடைந்தாள். இவைகளெல்லாம் தங்கத் தாம்பாளங்களில் வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு தங்கத் தாம்பாளத்தில் ஒரு பொன் கரண்டியுமிருந்தது.



இவர்கள் போஜனமுண்டபின், கிழவி கிணற்றண்டை போய் தண்ணீர் கொண்டு வருவதாகச் சொன்னாள்.

"நீ போகவேண்டாம். நான் தண்ணீர் கொடுக்கிறேன்" என்று இராஜகுமாரன் சொன்னான்.

தனது விரலால் குடுவையைத் தட்டினான். ஓ குடுவையே எனக்குத் தண்ணீர் வேண்டுமென்று கூவினான். உடனே அக்குடுவை நிரம்ப ஜலமிருந்தது. அரசகுமாரன் இத்தண்ணீரை ஒரு மரத்தொட்டியில் கொட்டி, தங்கத் தாம்பாளங்களையும், கரண்டிகளையும் சுத்திசெய்யும்படி கிழவிக்குச் சொன்னான்.

இங்கு இன்னும் சிறிது நேரம் தங்கியிருக்கும்படி உத்திரவளித்தால், நீயே இவ்விலையுயர்ந்த பாத்திரங்களை வைத்துக்கொள்ளலாம்.

பின்பு தனது குடுவையில் மறுபடியும் தண்ணீர் நிரம்ப இருக்கும்படி கட்டளையிட்டான். தண்ணீரில் தன் கைகளைச் சுத்திசெய்து கொண்டான்.

"ஓ! வயது சென்ற கிழவி! எனது பாத்திரம் நான் விரும்பும்போது எனக்கு வேண்டிய தண்ணீரை யளிக்கிறது. எனது பையோ எனக்குப் புசிக்க இஷ்டமானதை யெல்லாம் தாராளமாகக்கொடுக்கிறது. இவைகளிரண்டும் ஒரு பரிசுத்தமான பெரிய வருடையது. இன்றிராத்திரி நீ இவைகளை இவ்வீட்டிற்கு வெளியில் எங்கேயாவது கொண்டுபோய் வைத்துவிட்டால் அவர் மிக்க கோபமாயிருப்பாரென்று நினைக்கிறேன். ஆகையால் இவைகளை வெகு பத்திரமாக உன்னிடத்தில் வைத்துக்கொண்டிரு" என்று அரசகுமாரன் சொன்னான்.

இராஜ குமாரன் மேற் கூறிய வண்ணம் சொன்னதைக் கேட்டபின் "ஒரு ராஜாவின் கோபத்தை விட சாதுக்களின் கோபம் மிக்க கொடியதென சிலர் நினைப்பது உண்மைதான்" என்றாள் வயது சென்ற கிழவி.

"இப்பொழுது 12 பொன் தட்டுகளும். 12 பொன் கரண்டிகளு மிங்கிருக்கின்றன." என்று பிரியமாய் இராஜகுமாரன் சொன்னான்.

கிழவி தலையை அசக்கி விட்டு, தனது படுக்கையின் அடியில் அவைகளைப் பத்திரமாய் ஒளித்து வைத்தாள்.

"நீ இங்கு தங்கி யிருக்கலாம்; அதற்கு யாதொரு தடையில்லை; ஆனால் இராஜாவின் சேவகர்கள் உன்னைக் கண்டு பிடிக்காமல் பார்த்துக்கொள்" என்றாள்.

இவ்வேளையில் இரவுகாலம் வந்து விடவே. இருள் சூழ்ந்துகொண்டது. இந்த வீட்டில் விளக்கொன்றுமில்லாமையால் கிழவியும், இராஜகுமாரனும் இருட்டில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள்.

"இவ்வூர் அரசன் ஒருவர் வீட்டிலும் விளக்கு எரியக்கூடாதென கட்டளை செய்திருக்கிறார். ஏனெனில் இவரது குமாரத்தி 'ஜோதிமதி' இரவு காலத்தில் தனது அரண்மனையின் மெத்தையின்மீது உட்காருவாள். அப்பொழுது இவளது காந்தி இவ்வூர் முழுவதும் பிரகாசிக்கும்" என்று சொன்னான்.—

இவ்விதம் கிழவி சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது அழகான சந்திர காந்தியைப்போன்ற வெளிச்சம் இவர்களிருக்குமிடத்தில் வீசியது. உடனே இராஜகுமாரன் வெளியிற் சென்றான். இராஜாவின் குமாரத்தி மெத்தையில் இப்பொழுது உட்கார வந்துவிட்டாள் என்பதைக் கண்டான்.

வெள்ளி சரிகையுள்ள பீதாம்பரத்தைத் தரித்துக்கொண்டிருந்தாள். அவளுடைய அழகான கூந்தல் கால் வரையில் நீண்டு வளர்ந்திருந்தது. தலையில் அணியும் வைரம், முத்து முதலியவைகளால் செய்த நகையை யணிந்திருந்தாள். இவளிடத்திலிருந்து வீசின வெளிச்சம் சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் இவைகளிடமிருந்து திரண்டு வரும் வெளிச்சம்போலிருந்தது.

"இவளது அழகு இருளை வெளிச்சமாகவும் இரவைப்பகலாகவும் மாறும்படி செய்ததென்றே சொல்லலாம்" என்று இராஜகுமாரன் சொன்னான். "நான் இப்பெண்ணரசியை மணம்புரிந்தால் எப்பொழுதும் சந்துஷ்டியாயிருப்பேனென்று" எறும்புராஜா சொன்னது உண்மையே.

நடு இராத்திரி ஆனவுடன் ஜோதிமதி மெத்தையிலிருந்து கீழே இறங்கி படுக்கை அறைக்கு நித்திரை செய்யச்சென்றாள். பிரஜைகள் எல்லாரும் நித்திரைசெய்யச் சென்றார்கள்.

பின்பு ராஜாவின் குமாரன் கையில் பையுடன் கட்டிலில் உட்கார்ந்தான். மஞ்சமே! "என்னை ஜோதிமதி நித்திரைசெய்யுமிடத்திற்குக் கொண்டுபோ" வென்று சொன்னான். அப்படியே அக்கட்டில் இராஜகுமாரத்தி அயர்ந்து நித்திரை செய்யுமிடத்திற்குக் கொண்டுபோனது.

உடனே பையைக் குலுக்கினான். "பையே! எனக்கு நேர்த்தியானவும் விலையுயர்ந்ததும், பொன் வெள்ளி சரிகையால் வேலைப்பாடுள்ளதும், சிவப்பும், நீலவர்ணமுமுள்ள ஒரு புடவை வேண்டும்" என்று சொன்னான்.

அந்தப் பை அவன் கேட்டவண்ணம் ஒரு சிறந்த புடவையைக்கொடுத்தது. அதை அவள்மீது மெதுவாக வைத்தான்.

பின்பு படுக்கை வயது சென்ற கிழவியின் குடிசைக்கு இவனைத் திரும்பிக் கொண்டுபோய்ச் சேர்த்தது. மறுநாளும் பை இவ்விருவர்களுக்கும் வாய்



க்கு அதிமதுரமுள்ள பணிகாரங்களையும் ஆகாரத்தையும் கொடுத்தது. இன்றிரவில்வழாகம்போல் இராஜகுமாரத்தி மெத்தையில் வந்து உட்கார்ந்தாள். பூப்போட்ட வெண்பட்டாடையைத் தரித்துக்கொண்டிருந்தாள். இது முந்தியநாள் இவள் தரித்திருந்த உடுப்பை விட மிக்க சோதியுள்ளதாயிருந்தது.



நடு இராத்திரியானதும் இவள் தனது படுக்கை அறைக்குப் போனபொழுது இராஜகுமாரன் தனது படுக்கையில் உட்கார்ந்து ஜோதிமதி யிருக்கு மிடத்திற்குத் தன்னைக்கொண்டுபோகும்படி கட்டளையிட்டான். அங்குவந்து சேர்ந்தவுடன் பையைக் கையில் வைத்துக்கொண்டு, பையே! எனக்கு ஒரு அழகான மோதிரம் வேண்டுமென்று கேட்டான்.

(அடுத்த பத்திரிகையில் முற்றுபெறும்.)

## சக்கரவர்த்தி இந்தியரைச் சிலாகித்தது.

பக்கிங்காம் அரண்மனையில் லண்டன் சிடி கார்பொரேஷன் சக்கரவர்த்திக்குக் கொடுத்த சந்தோஷவாழ்த்துப்பத்திரத்துக்கு நம் சக்கரவர்த்தி பதில் சொல்லுகையில் பின்வருமாறு உயர்ந்த அன்புவாய்ந்த கருத்துக்களை வெளியிட்டார்:—"இந்தியாவில் மன்னர்களும் பிரின்ஸ்களும் எங்களுக்குச் செய்த சேவாஞ்சலியும், நாங்கள் போன விடங்களிலெல்லாம் பாராட்டப்பட்ட பக்தி நிஷ்டைகளும் எங்களை நெகிழ்த்திவிட்டன. அன்புவாய்ந்த இவர்களுடைய விசுவாசமானது இந்திய ஜனங்கள் பிரிட்டிஷ் மகுடத்தில் வைத்திருக்கும் பற்றுக்கு அழியாத நிதர்ஸனமாகுமென்று நம்புகிறோம். தாய்தேசத்துக்கு இருதயம்போல் விளங்கும் லண்டன் நகரத்துப் பிரதிநிதிகளாகிய நீங்களும இந்தத் தீவுகளில் வசிக்கும் என்னுடைய பிரஜைகள் பலரும் இந்தியாவில ராஜாக்களும் ஜனங்களும் மனப்பூர்வமான நல்லெண்ணத்தையும் சகோதாத்வத்தையும் வெற்றுமுதலும் செய்தியில் அடங்கியுள்ள உறுதிகளை வரவேற்றுப்பரிமாற்றம் செய்வீர்களென்று நம்பியிருக்கிறேன்."

லண்டன் கௌன்டி கௌன்சில் கொடுத்த உபசாரப்பத்திரத்துக்குப்
பதில் சொல்லுகையில் சக்கரவர்த்திசொன்னது:—"இப்போது நடந்துமுடி
ந்த முக்கியமும் பிரகாசமுமான சம்பவத்தை லண்டன் நகரத்தார் ஒற்றுணர்
ச்சியுள்ள அக்கரையுடன் கவனித்து வந்திருக்கிறார்களென்று திருப்தியடைந்
திருக்கிறேன். இப்படி இந்த அக்கரையினால் என்னுடைய ஜனங்கள் இந்திய
ஏகாதிபத்தியத்துக்கு ஏற்றிருக்கும் பொறுப்புகளை ஆழ்ந்துணர ஏதுவுண்
டாகுமென்று நம்புகிறேன். ஊக்கமும் அன்பும்வாய்ந்த இந்த யாத்திரை
யானது என்னுடைய பிரஜைகளின் பொதுக்ஷேமத்துக்கு உழைப்பதில் எப்
போதும் உற்சாகத்துக்கு மூலமாயிருக்கும்."

## பார்லிமெண்ட் திறப்பும் சக்ரவர்த்தியின் விஜயமும்.

பிரிட்டிஷ் பார்லிமெண்ட் வருஷத்திற்கு இரண்டுமுறைகூடித்திறப்பது
வழக்கம். இந்தவருஷம் பார்லிமெண்ட் சில விடுமுறை தினங்களுக்குப்பிறகு
திறக்கப்பட்டது. திறந்தபோது வழக்கம்போல் ஜார்ஜ் மகாராஜா நேராகவந்
திருந்து "இந்தியாவிலிருக்கும் ராஜாக்களும் பிரபுக்களும், ஜனங்களும் காட்
டின பக்தி நிஷ்டைகளைப்பற்றியும், பம்பாயிலும் கல்கத்தாவிலும் எல்லா
வகுப்பு ஜனங்களும் அவர்கள் மனதில் அலைகளாகப் பொங்கின அன்பு பக்தி
இவைகளைப்பற்றியும், அந்தப்பேச்சில் குறிப்பிட்டார். அவர்கள் திரும்பி
வருகையிலும் பிரிட்டிஷ் பிரஜைகள் கூறின நல்வரவும், அவரது குடும்பத்
தில் நேரிட்ட துக்கத்தைப்பற்றின அநுதாபமும், அவரையும் அவர் மனைவி
யாரையும், உருக்கிவிட்டனவென்றும் சொன்னார். இந்தியாவின் தலை நகர
த்தை டெல்லிக்கு மாற்றினதும் மற்ற நிர்வாகத் திருத்தங்களும் இந்தியா
விற்கு க்ஷேமத்தை உண்டுபண்ணும் என்று சொன்னார்."

## போபால்பீகம் பெண் கல்வியைப்பற்றி பேசியது.

போன மாசம் 29-ந்தேதி மத்திய இந்தியாவிலுள்ள போபால் சமஸ்
தானத்தின் அதிபரான பீகம் அரசி அந்தசமஸ்தானத்து ஸ்திரீகளைக்கூட்டி,
தாம் இங்கிலாந்துக்கும் ஐரோப்பாவுக்குபபோய் வந்ததைப்பற்றியும் தமது
ஸ்திரீ பிரஜைகள் கல்வி கற்பதைப்பற்றியும் பிரசங்கம்செய்தார். போபால்
பீகம் ஒருமகமதிய ஸ்திரீ. சாமானியமாய் அவர்கள் வீட்டைவிட்டு வெளி
யிற்போகாமல் கோஷாவாயிருப்பவர்கள். ராஜ ஸ்திரீகள் முக்காடிட்டுக்கொ
ண்டு படுதாவழியாய் மந்திரிகளுடன் பேசி ராஜாங்கத்தை நடத்துவார்கள்.
வெளியில்வந்து புருஷரோடு கலந்து அநுபோகம் பெறுவதும் அன்னிய
தேசங்களுக்குப்போய் அங்கு கிடைக்ககூடிய அநுபோவத்தைப்பெற்று
வருவதும் மகமதிய ராஜஸ்திரீகள் செய்யும் வழக்கமல்ல. தற்காலம் மேல்
நாடுகளின் பழக்கத்தாலும் பிரிட்டனோடு இந்தியா சம்பந்தப்பட்டிருப்பதா
லும், நமது மன்னர்கள் அன்னிய தேசங்களில் சஞ்சரிப்பதுமன்றி, ராஜ
ஸ்திரீகள் கூடச்சிலர் முக்காடில்லாமலும், சிலர் முக்காடுடனும், அன்னிய
தேசங்களுக்குப்போய், தங்கள் அநுபோகத்தையும் அறிவையும் புத்தியை
யும் விசாலப்படுத்திக்கொண்டு வருகிறார்கள். பிரிட்டிஷ் ராஜாங்கத்தோடு
நாம் சம்பந்தப்பட்டிருப்பதால் இதற்கு விசேஷத்தருணங்கள் உண்டாகின்
றன. சமீபத்தில் ஜார்ஜ் சக்கரவர்த்தி சிம்மாசனமேறி மகுடாபிஷேகம்செ



ய்துகொண்டபோது இங்கிருந்து பல ராஜாக்கள் போயிருந்தார்கள். போ
பால் பீகமும் போயிருந்தார். அவர் தம் முக்காடைத்திறவாமலே சக்கரவர்
த்தி சக்கரவர்த்தினிகளைக் கண்டுபேசி, விசேஷ உபசாரமும் கௌரவமும்
பெற்றதன்றி ஐரோப்பாவில் பலதேசங்களைக்கண்டு தம் மதத்தினராகிய
துருக்கி சுல்தானையும் கண்டுவிட்டு வந்தார். துருக்கி சுல்தானை இவர்காணுவ
தில் பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் கான்ஸ்டாண்டி நோபிலிலுள்ள தூதர் மூல
மாய் போபால் பீகமுக்கு சகாயம்செய்தார்களென்றும், சுல்தான் தமக்கு
மதிப்பற்ற அருமையான ஒரு வெகுமதியைக் கொடுத்தாரென்றும் சொன்
னார். அன்னியதேசங்களில் இவர் சஞ்சரித்தது தம்முடைய சுகத்துக்காவது
பொழுதுபோக்குக் காவதல்ல அத்தேசங்களது நாகரிகத்தையும் பற்பல
ஸ்தாபனங்களையும் ஸ்திரீகளுடைய நிலைமையையும் கவனித்து, அந்த அநு
போகத்தைக்கொண்டு தம் பிரஜைகளுக்கு நன்மை செய்யவேண்டுமென்ற
நோக்கத்துடனே யாம்.

ஆனால் அந்த நோக்கம் போப்பாலில் பலன் விளைப்பதற்கு ஸ்திரீகள்
கல்விகற்றவர்களாவது அவசியம். மேற்றிசை ஜாதியாரின் பெருங்குணங்
கள். அவர்களுடைய வீரியும் செல்வமும் ஜீவியத்தின் பலவழிகளிலும் வேக
மாய் முன்செல்வதும் அவ்விடங்களது ஸ்திரீகள் நன்றாய்க் கல்வி கற்றுப்
பிள்ளைகளை நல்வழிகளில் வளர்ப்பதனால் சாத்தியமாகின்றன. புருஷர் ஸ்திரீ
களின் கல்விக்காக உதவிசெய்து உழைப்பதுமன்றி ஸ்திரீகளே உயர்ந்தோர்
தாழ்ந்தோர்களுக்கும் எல்லோருமாகவும் சேர்ந்துழைத்து அறிவு பயிற்சியா
கிய வானத்தில் முதற்றரமான நக்ஷத்திரங்களாகச்செய்து கொள்ளுகிறார்கள்.
தம் பிரஜைகளும் இம்மாதிரி கல்வி கற்கவேண்டுமென்று போபால் பீகம்
வற்புறுத்தினார். வீண் சடங்குகளில் பணத்தைவாரி எறியாமல் பெண்பாட
சாலைகளுக்கும் ஸ்திரீகளின் இளப்புகளுக்கும் பத்திரிகைகள் மாகவின் இவை
களுக்கும் இந்திய ஸ்திரீகளின் உரிமைகளைக் காப்பனவாயிருக்கும்போது,
செலவு செய்யவேண்டும் என்று பீகம்சொன்னார். ஒரு ஜாதி சித்திபெற்று
முன்னுக்கு வரவேண்டுமானால் கல்வியே அதற்கு அஸ்திவாரமாயிருப்பதால்
அதற்காக நாமெல்லோரும் உழைக்கவேண்டுமென்றார். இப்படிச் சொல்வி
விட்டு, போப்பால் சமஸ்தானத்து அரசி, கல்வியின் செருக்கால் தம்பிரஜை
கள் மிதமிஞ்சின சுதந்திரத்தை விரும்புவார்களோ வென்றுபயந்து, அதைக்
கண்டித்துப்பேசினார். ஸ்திரீகளுக்குச் சகஜமாயுள்ள அடக்கத்தை மீறிச்செ
ல்லும் சுதந்திரம் தமக்கு விருப்பமல்லவென்றும், அத்தகைய சுதந்திரம்
மேல் நாடுகளுக்குப் பொருந்துமானாலும் அது கிறிஸ்தவ மதபோதத்துக்கு
ஒத்திருந்தாலும இந்தியாவுக்கு அதுபொருந்தினதல்ல. அதிலும் படுதா ஸ்தி
ரீகளாகிய இந்திய மகமதிய ஸ்திரீகளுக்குப்பொருந்தாது. கடவுளின் வார்த்
தையே மகமதியருக்கு உண்மையும் சித்திக்குற்றதுமான வழியாகும். மக
மதியமதம் ஸ்திரீகளுக்கு அளித்துள்ள சுதந்திரம் அவர்கள் சகல வழிகளி
லும் முன்செல்வதற்குப் போதுமானது. மகமதிய சரித்திரத்தைச் சோதி
த்துப்பார்ப்பீர்களானால் அந்தமதத்தின் போதங்களை மீறாது நடந்த பெரி
யோர் பலர் நாகரிகக்கலைகளைப் பயிற்சிசெய்து, அவர்கள் செய்வித்த பயிற்சி
யால் சாஸ்திர வல்லோரும் கீர்த்திபெற்றோரும் உண்டாயிருக்கிறார்கள்,
என்று அறிவீர்கள். இவ்வாறு போபால் பீகம் கல்வியின் பெருமையை வற்
புறுத்தி ஸ்திரீகளுக்கு இயற்கையாயுள்ள அடக்கம், லச்சை, மென்மை முத
லிய குணங்களை மீறக்கூடாதென்றும், அக்குணங்களுக்கு அடங்கியே பற்பல

வழிகளில் தங்களுக்குற்ற கடமைகளைச்செலுத்தி தாங்களும் தங்கள் இனத்
தாரும் சமூகமும் ஒருங்கே முன்செல்லுதல் சாத்தியமென்றும் பேசினது
எல்லோருக்கும் சந்தோஷத்தைக்கொடுக்கும்.

---

## பெண்கல்வி அபிவிருத்தியும் லேடி கார்மிகேலும்.

H. E. லேடி கார்மிகேல் பெண்கள் கல்வியிலும், மாதர்களின் முன்
னேற்றத்திலும் ஆழ்ந்த சிரத்தை காட்டிவருகிறார். லேடி கார்மிகேல், விக்
டோரியாவைவிட்டு வருவதற்கு முந்தி, அக்குடியேற்ற நாட்டிலுள்ள உயர்வு
தாழ்வு அந்தஸ்துள்ள பல மாதர்களும், கண்ணில்லாச் சிலமாதர்களும் சேர்
ந்து மொத்தத்தில் 7000 பேர் கையொப்பமிட்டு, லேடி கார்மிகேல் காலத்
தில் தங்களுக்குக்கிடைத்த நன்மைகளைப்பற்றிப் புகழ்ந்து ஓர் அட்ரெஸ்
வாசித்தார்கள். லேடி கார்மிகேலும், ஆனரெபில் மிஸ் கார்மிகேலும், சரிகை
தையல்வேலையில் கைதேர்ந்தவர்கள். உயர்தரமான சரிகைத் தையல்வேலை
மாதிரிகள் பல, லேடி கார்மிகேல் தம்வசம் வைத்திருக்கின்றனர். லேடி கார்
மிகேல் சென்னையிலுள்ள மாதர்களின் படிப்பு விஷயமாயும், அவர்களின்
முன்னேற்ற விஷயமாயும் அதிக சிரத்தை யெடுத்துக்கொண்டிருக்கிறார்.
லேடி கார்மிகேல் சென்னைக்கு விஜயஞ்செய்த கொஞ்சம் நாட்களுக்குள்,
இந்திய மாதர்களுடன் அறிமுகஞ்செய்து கொள்வதற்கு நான்குமுறை
மைலாப்பூரிலுள்ள வில்வன் லாட்ஜைப்போய்ப் பார்வையிட்டனர். சரிகைத்
தையல் வேலையை அங்குள்ள சிறுமிகளுக்கும் உபாத்தினிகளுக்கும் கற்றுக்
கொடுத்தனர். லேடி கார்மிகேலுக்கும் மைலாப்பூர் வில்வன் லாட்ஜ் மாதுகள்,
சிறுமிகள், உபாத்தினிகள் இவர்களுக்கும் நேசம் அதிகரித்து லேடி கார்மி
கேல் பங்களாத்திற்குப் போய்விடுவதாகக் கேட்ட சிறுமிகள், இந்த மாதம்
23-ந்தேதி லேடி கார்மிகேல் வில்வன் லாட்ஜிக்கு வரவே, சென்னையிலேயே
அவரைத்தாமதிக்கும்படி கேட்டுக்கொண்டனர்கள். தவிர மிஸ்ஸஸ் ரவணு
ம்பா, லேடி கார்மிகேலின் குணாதிசயங்களைப்பற்றிப் புகழ்ந்துபேசினர்.

---

## உலகைச்சுற்றிலும் கம்பியில்லா தந்தி.

மின்சார வசதியால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கம்பியில்லாதந்தி ஸ்தம்
பங்களை பிரஞ்சு கவர்ன்மெண்டார் தம் ஆட்சிக்குட்பட்டிருக்கும் பற்
பல இடங்களிலுள்ள பிரபல நகரங்களில் ஸ்தாபித்து ஆங்காங்கு நடக்கும்
விஷயாம்சங்களை வெகு எளிதில் தமது முக்கிய தலை நகராய் விளங்கும்
பாரிஸ் நகரத்திற்குத் தெரிவிக்கும்படி ஏற்பாடு செய்யப்போகிறார்கள். இவ்
வித தந்தி ஸ்தம்பங்கள் நாட்ட 82,500,000 டாலர்கள் செல்லுமென்றும்
இதைச்செய்து முடிக்க கியாதிபெற்ற இஞ்சினீர் மிஸ்டர் பெர்ரி அவர்கள்
நியமிக்கப்பட்டிருக்கிறதாயும் இன்னும் இரண்டு அல்லது மூன்று வருஷத்தி
ற்குள் முடிந்துவிடுமென்றும் தெரிகிறது. கம்பியில்லா தந்தி ஸ்தம்பங்கள்
நாட்டப்படுமிடங்கள் பின் வருமாறாகும். 1. பாரிஸ் நகர ஐபல்கோபுரம்
2. மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள டஹோமே அல்லது டிம்பக்டூ 3. இந்து மஹா
சமுத்திரத்திலுள்ள மடகாஸ்கர் தீவு 4. இந்தியாவிலுள்ள புதுச்சேரி
5. ஸைகான 6. நியூகாலிடோனியா 7. மார்க்விஸ் தீவு 8. அத்லாந்திக் மகா
சமுத்திரத்திலுள்ள மான்டினீக் 9. மேற்கு ஆப்பிரிக்கா கரைக்கருகாமையி



லுள்ள ரபீஸ்க். மேற்சொன்ன ஒவ்வொரு நகரங்களுக்கும் முறையே தந்தி
சமாசாரங்கள் அறிவித்துக்கொள்ளும்படி சம்பந்தமும் கடைசியாய்ச்சொ
ன்ன ரபீஸ்க் நகரத்தினின்று பாரிஸ் நகர தபல் நகர ஸ்தம்பத்துக்குச் சம்
பந்தமு மேற்படுமெனத் தெரிகிறது.

---

## ஓர் ஆச்சரியமான பண்டு.

ஒருவர் முதன்முதலில் ஒரு தம்பிடி எடுத்து உண்டியில் சேர்க்கவேண்
டியது. மறுநாள் இரண்டு பைகளும் மூன்றுநாள் நான்கும், நான்காம் நாள்
எட்டும் ஐந்தாம் நாள் பதினாறும் இவ்வாறே ஒவ்வொருநாளும் அதன் முன்
னாளிட்ட தொகைக்கு இரண்டுபங்கு அவ்வுண்டியில் 31 நாள் கொண்ட ஒருமா
தம்வரையில் சேர்த்துவர வேண்டியது. பின்னர் 32-ம் நாள் அவ்வுண்டியி
லிருக்கும் தொகையை யெண்ணிப் பார்த்தால் ஒருபை குறைய 138, 174, 144
ரூபாய்களிருக்கும். இவ்வாறு ஒரு பையிலிருந்து ஆரம்பித்து சீட்டுக் கட்டி
னால் பெருலாபமாயினும் கட்டுவோர் ஒருவரு மிலரென்றே நம்பலாம்.

தி. மா. மார்க்கசகாயன்.

---

ஜனவரிமீ பத்திரிகையில் 24-ம் பக்கத்திலுள்ள விடுகதைகளுக்கு விடை.
(1) திருஞானசம்பந்தர். (2) கோபாலபுரம். (3) பாண்டித்துரைத்தேவர்.

ஜானகி அம்மாள். ஜே. ராஜாங்கம்மாள்.

---

## இந்தியாவின் கல்வி அபிவிர்த்தி.

இந்தியாவில் கல்வி அபிவிர்த்தி:—சென்றவருஷத்தில் இந்தியாவில் கல்வி
அபிவிர்த்தியைப்பற்றிய இந்தியாகெஜெட்டின்விசேஷப்பிரசுரம்ஒன்றுவெளி
ப்பட்டிருக்கிறது. அதில் கீழ்வரும்விவரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன:
1910-11-ம் வருஷத்தில் பொது வித்யாசாலைகளிற் பயிலும் ஆண்
பிள்ளைகளின் சங்கியை 4,930,084-என்றும், பெண்பிள்ளைகளின் சங்கியை
793,646 என்றும் 1910-11-ல் மொத்தச்செலவு ரூபா 71868 என்றும்,
1906-07-ல் ரூபா 55904 என்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.
சென்னை ராஜதானி:—சென்னை ராஜதானியில் 1910-11-ல் ஆண்பிள்ளை
கள் படிக்கும் பிரைமெரிப் பாடசாலைகளின் மொத்தம் 23426; பெண்கள்
படிக்கும் பிரைமெரிப் பாடசாலைகள் 900; பாடசாலைகளில் படிக்கும் மாண
வர்களின் மொத்தசங்கியை 1215725; 1910-11-ல் மொத்தச்செலவு ரூபா
12768. 1906-07-ல் 9764.
பம்பாய் ராஜதானி:—1910-11-ல் ஆண்பிள்ளைகள் படிக்கும் பிரைமெ
ரிப் பாடசாலைகள் 11267. பெண்களின் பாடசாலை 1121. ஆண்பெண் அட
ங்கலாகப் பயின்றுவரும் வித்யார்த்திகளின் சங்கியை 1910-11-ல் 868535
என்றும் 1906-07-ல் 720547 (1910-11-ல்) மொத்தச்செலவு ரூபாய் 12400
1906-07-ல் 10643.
வங்காளம்:—பிரைமெரிப் பாடசாலைகளின் மொத்தம் 35437. ஆண்
பெண்கள் அடங்கலாக வித்யார்த்திகளின் தொகை 1518239. 1910-11-ல்
செலவு 16071 ரூபாய். 1906-07-ல் 11663 ரூபாய்.
கீழ் வங்காளம் அஸ்ஸாம்:—1910-11-ல் பிரைமெரிப்பாடசாலைகளின்
மொத்தம் 17,292 - மாணவர்கள் மொத்தம் 984,213 - மொத்தச்செலவு
1910-11-ல் ரூபாய் 7,305. 1906-07-ல் 5,124-ரூபாய்.

ஐக்கிய மாகாணங்கள்:—1910-11-ல் பிரைமெரிப் பாடசாலைகளின் மொத்தம் 9067; 1906-07-ல் 9545; 1910-11-ல் அவைகளில்பயிலும் மாணவர்களின் மொத்தம் 645,787; 1906-07-ல் 606174; 1910-1i-ல் மொத்த செலவு 9339-ரூபாய். 1906-07-ல் 7490-ரூபாய்.

பஞ்ஜாப்:—1910-11-ல் மொத்த பிரைமெரி பாட்சாலைகள் 3321. பயிலும் மாணவர்களின் தொகை 356940. (1910-11-ல்) மொத்தச்செலவு ரூபாய் 6057. (1906-07-ல்) செலவு ரூபாய் 5197.

குடகு:—பிரைமெரி மொத்தப்பாடசாலைகள் 1910-11-ல் 81; மொத்தப்பிள்ளைகளின் சங்கியை 1910-11-ல் 6640, 1906-07-ல் 4865 மொத்தச் செலவு ரூபாய் 1910-11-ல் 92. 1906-07-ல் 49 ரூபாய்.

பர்மா:—1910-11-ல் பிரைமெரிப் பாடசாலைகளின் தொகை 4,895. 1906-07-ல் 4,950; மாணவர்களின் மொத்தத்தொகை 42,9902. 1906-07-ல் 39,8598-மொத்தச்செலவு 4363-ரூபாய். 1906-07-ல் மொத்தச்செலவு 3487-ரூபாய்.

மத்திய மாகாணங்கள் பீகார்:—பிரைமெரிப் பாடசாலைகளின் மொத்தம் 1910-11-ல் 3094. 1910-11-ல் மாணவர்களின் மொத்தம் 2,97620. மொத்தச்செலவு 1910-11-ல் 3085 ரூபாய். 1906-07-ல் 2248 ரூபாய்.

வடமேற்கு மாகாண எல்லைப்பிரதேசங்கள்:—மொத்தப் பாடசாலைகள் 1910-11-ல் 264; 1910-11-ல் மொத்த மாணவர்கள் 31891 1906-67-ல் 29017. (1910-11-ல்) மொத்தச்செலவு 388 ரூபாய்; 1906-07-ல் 236ரூபாய்.

---

## யாசகவிருத்தியின் சாதுரியம்.

யாசகன் ஒருவன், இராஜனின் ஆசிரயத்தை நாடிவந்தான். அப்பொழுது இராஜன் "என்னப்பா உன் பெயரென்ன?" என்றான்.

யாசகன்:—"என்பெயர் நந்திகேசன்"

இராஜன்:—"எங்கிருந்து வந்தாய்?"

யாசகன்:—"எங்கிருந்து வந்தேனென்று சொல்லட்டும்?"

இராஜன்:—உன்பெயர் நந்திகேசன் என்று சொன்னாய். அப்படியானால் நீ கைலாஸத்திலிருந்து வந்தனையோ?

யாசகன்:—ஆம் என்றால் தப்பு என்ன?

இராஜன்:—அப்படியானால் சிவனை நீ நன்றாய் அறிவாய்போலும்.

யாசகன்:—ஆம் நன்றாய் அறிவேன்?

இராஜன்:—சிவன் சௌக்கியமாய் இருக்கிறானா?

யாசகன்:—சிவனிருக்கிறானோ?

இராஜன்:—சிவனில்லையோ?

யாசகன்:—சிவனில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

இராஜன்:—அது எப்படி?

யாசகன்:—யாருக்கு தன்தேகத்தில் சுதந்தரமில்லையோ அவன் இல்லை என்றாலும், இறந்தானென்றாலும் தப்பென்ன?

இராஜன்:—(இறந்துவிட்டானென்றெண்ணி) ஆ! சிவனுக்கு என்ன வாயிற்று?

யாசகன்:—பாதி உடல் விஷ்ணுவுக்கும், பாதி உடல் பார்வதிக்கும் பாகமாயிற்று. அவனுடைய விபூதியெல்லாம் குபேரனின் கைவசமாயிற்று. அவன் பிராணன் பக்தர்களிடத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.



இராஜன்:—அவன் ஆசிரயத்திலிருந்த, கங்கை, சந்திரன், ஸர்ப்பம் இவர்களெல்லாம் என்னவானார்கள்?

யாசகன்:—"கங்கா ஸாகரமம்பரம், சசிகலா நாகாதிபஃஹஷாதளம்"

கங்கை. ஸாகரத்தையும், சந்திரன், ஆகாசத்தையும் ஸர்ப்பம் பூமியையும் ஆசிரயித்துக்கொண்டார்கள்.

இராஜன்:—ஐயோ! அவருடைய ஸர்வஞ்ஞதையும் அதீசுவரத்தையும் தங்களையடைந்தது.

அம்மகானுபாவனுடைய யாசனா விருத்தி மாத்திரம் ஸம்பூரணமாய் என்னை யிடைந்திருக்கிறது"

இவ்வாறு சொல்லவும் இராஜன் அவனுடைய அபிப்பிராயத்தை அறிந்து அவனுக்குவேண்டிய பொருளுதவிசெய்து அவனை சந்தோஷப்படுத்தி யனுப்பினான்.

☞ சி. மங்களாபாய்.

---

## சமாசாரக் குறிப்பு.

ஆகாயகமனம்:—லெப்டினெண்ட் பாரிங்டன் கென்னட்டு மற்றொரு பிரயாணியை உடன் கூட்டிக்கொண்டு ஸாலிஸ் பரி வெளியில் $249\frac{3}{4}$ மைல் ஆகாய சஞ்சாரம்செய்து, இப்படித்தாம் செய்துமுடித்த ஸாகஸகாரியத்தை லண்டன், பிப்ரவரியீ 23உ பிரசுரமும் செய்திருக்கிறார்.

---

மிஸ் ஜோஷி:—M. V. ஜோஷியின் குமாரத்தியான மிஸ் ஜோஷி, லண்டன் L. R. C. P. M. R. C. S. பட்டத்தை வகித்திருக்கின்றனர். இந்த மாது பிரான்ஸ் ஜெர்மனியிலுள்ள முக்கிய ஆஸ்பத்திரிகளைப்பார்த்துவிட்டு இந்தியாவிற்குத் திரும்பிவிட்டனர். இந்த மாது பம்பாய் சர்வகலாசாலையில் L. M. S. பட்டம் வகித்தவர். லண்டனில் பட்டம்பெற்ற ஹிந்து மாதருள் இவர்தான் முதல்வராவார்.

---

ஆங்கிலேய ஸ்திரீகளுக்கு குடும்ப நிர்வாகப்பயிற்சி:—லண்டனில் ஆங்கிலேயச் சிறுபெண்களைக் குடும்ப நிர்வாக முறையில் பயிற்றுவிக்கும்பொருட்டு, ஸ்திரீகளுக்கான கிங்க்ஸ் காலேஜ் என்னும் ஸ்தாபனத்தை ஒட்டியதாய் ஒருமுயற்சி செய்யப்படுகிறதென்றும், இம்முயற்சியை லண்டன் யூனிவர்ஸிடி அங்கீகரித்திருக்கிறதென்றும் சொல்லப்படுகிறது. இம்முயற்சிக்குவேண்டிய மூலதனத்தின்பொருட்டு 50,000 பவுன் கையொப்பமாயிருக்கிறது.

---

கடலை நீந்தினான்:—இங்கிலாந்துக்கும் ப்ரான்ஸுக்கும் நடுவிலுள்ள 10 மைல் விஸ்தீரணமுள்ள சமுத்திரத்தை பர்ஜெஸ் எனபவன் நீந்தினான். சென்ற 36 வருஷங்களாக எத்தனையோ நூற்றுக் கணக்கான நீச்சல்காரர் பிரயத்தனப்பட்டும் சாதிக்கமுடியாத விஷயத்தை பர்ஜெஸ் சாதித்தவன். சென்ற 7-வருஷங்களாகப் பர்ஜெஸ் என்பவன் 15 தடவை பிரயத்தனங்களை பட்டு முடியாமற்போயும் விடாமுயற்சியினால் 16-வது தடவையாக கடைசியில் இந்த 30 மைல் தூரத்தையும் நீந்திக் கரையேறித் திரும்பினான்.

---

"கத்தரிக்கப்பட்ட தலைமுடியை யுடையவர்கள் கோவிலுக்குள் பிரவேசிக்கக் கூடாதென்று கொச்சிராஜா ஒரு கட்டளை பிறப்பித்திருக்கிறார். கமலா மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் கோவிலில் பாதரக்ஷையைக் கையில் எடுத்துக்கொ

ண்டும் உட்புகக் கூடாதென்று தேவஸ்தானத்தார் தீர்மானித்துத் தமது தீர்மானத்தை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவர மகமதியர்களைக் காவற்காரராக நியமித்திருப்பதும் ஆலய அபிமானிகளுக்குச் சந்தோஷமும் திருப்தியும் விளைவிக்காமற் போகாது" என்று வித்தியாபாநுவால் தெரிகிறது.

சமுத்திரத்தில் நல்ல தண்ணீரூற்றுகள்:—பெர்ஷியா தேசத்திலே கடலோரத்தி லிருக்கும் பேரைன் என்னு மூர் அதிக உஷ்ணமுள்ளது. அதன் உஷ்ணம் 130 டிக்கிரியாம். அங்கே தாகத்துக்கு நல்ல ஜலம் கிடைக்காது. ஆனால் சமுத்திரத்தில் 1-மைல் தூரம்போய் அடியிலிறங்கி அங்கேயிருக்கிற அற்புதமான ஊற்றுகளிலிருந்து நல்ல தண்ணீர்கொண்டு வருகிறார்கள். சமுத்திரத்தின் அடியிலே இந்த நல்ல ஜலம் உண்டாகிறது மெத்த அதிசயமாயிருந்தாலும், இதனால் கடவுளின் இரக்ககுணத்தை அறிந்துகொள்ளலாம்.

ஸர் வால்டர் ஸ்காட்டினுடைய பேனா 45-ரூபாய்க்கும், வெல்லிங்டன் பிரபுவினுடைய பேனா 75-ரூபாய்க்கும் வாங்கப்பட்டன. இப்படி விலைகொடுத்து வாங்குவதற்குக் காரணம் அவைகளை உபயோகித்த மகா புருஷர்களின் மகிமையேயன்றி பேனாக்களின் மகிமையல்ல. நம்மிந்தியாவில் பூர்வகால மகாவித்வன் மணிகளாகிய காளிதாஸர், தண்டி, பீமகவி, கம்பர், காளமேகம், ஒட்டக்கூத்தர் முதலிய மகா கவிகளெழுதிய எழுத்தாணிகளின் கதியென்ன? மகா கவிகளின் கதியே அதோகதியாய் நினைப்பற்றுக் கிடக்கு மிக்காலத்தில் அவர்களின் பேனாவின் கதியைச் சொல்லவும் வேண்டுமா?

ஆறுமாதம் நித்திரை செய்தவன்:—பாரீஸ் பட்டணத்தில், "மோம்ப்பெல்லியே" ஆஸ்பத்திரியில் எமீல் கோத்ராங் என்கிற கொடிமுந்திரிகைத் தோட்டக்காரன் ஒருவன் ஆறுமாதகாலமாய் நித்திரையிலிருந்து சென்றமீ 0வ சவுக்கியமாய் விழித்தெழுந்தான். அவனுடைய நீண்ட நித்திரையில் அவனுக்குத் தினந்தோறும் 5 பைண்ட் பால் குழாய் வழியாய் உள்ளுக்கு ஆகாரமாக இறக்கப்பட்டதாம். இது "நித்திரை ரோகம்" என்கிற வியாதியல்லவென்றும், பிராஞ்சு தேசத்தில் அவ்வியாதி கிடையாதென்றும் அந்தத் தோட்டக்காரனுக்குச் சுபாவத்திலேயே தூக்கத்தைப்போன்ற ஓர் அசமந்தம் உண்டாயிருக்கவேண்டுமென்றும் வைத்தியர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

கணிதத்தில் மேதாவி:—திருநெல்வேலி ஜில்லாவைச்சேர்ந்த தமிழனை 14 வயதுப் பையனொருவன் திருவாங்கூரில் வந்து கணிதத்தில் தனக்குள்ள அபாரமான சக்தியைக்காட்டி, எங்கும் பெருவியப்பை உண்டாக்கியிருக்கிறானென்று தெரிகிறது. பெருந்தொகைகளைக் கூட்டுவதும் வகுத்து மூலத்தொகை சொல்வதும் 6,7 டெஸிமல் ஸ்தானங்கள் வரையிலும் திட்டமாகக் கேள்விகளுக்குப்பதில் சொல்வதும் போன்ற சிக்கலும் சங்கடமுமான கணக்குகளையெல்லாம் ஒரு நிமிஷம் அல்லது இரண்டு நிமிஷத்துக்குள்செய்துவிக்கிறானாம். காலேஜ் மாதமாடிக்ஸ் ப்ரொபஸர்கள் அனேகர் இவனைப் பரீக்ஷித்து இவனுடைய ஆச்சரியமான மூளை வலுவைப்புகழ்ந்து சர்டிபிகேட்டுகள் கொடுத்திருக்கிறார்கள். அ என்னும் அக்ஷரம்கூட இவன் எழுதத்தெரியாதவன் எனப்படுகிறது.

---

# மாதர் மனோரஞ்சனி,

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" ஔவையார்.

Vol. XIV. } Madras: March & April 1912. { இலக்-3& 4.
புத்தகம் - கச. } சென்னை: மார்ச்சுமீ ஏப்ரல்மீ 1912. { No-3 & 4.

## ஸ்ரீமத் ராமாயணம்.

## சீதா கல்யாணம்.

விநாயகர் காப்பு.

இராகம்: "பதசனிதப" என்ற கோட்டுமெட்டு.

பல்லவி

மங்களாம்பிகை—மைந்த!
எங்க ளுள்ளம் வா.

அநுபல்லவி

திங்களாய னிந்த தேவன் ஜேஷ்ட புத்ர தீரனே!
திரு————குரு————ப————தம்
திருப்பதம்
திருப்பதம்
திருப்பதங்கள் துதித்திட்டோம். (மங்களாம்பிகை)

சரணங்கள்.

கஜமு கத்தோனே!—நான்கு,
புஜப்பொ லிந்தோனே!
விஜய சூரன் வீர மொடுங்க விண்ணோர் எவரும் ஏத்திடும்
வே————லன்————அண்————ணன்————
வேலனண்ணன்
வேலனண்ணன்
விக்ன மழிக்கும் விமலனே!————.———(மங்களாம்பிகை)

வனிதை ஜானகி—அன்னை
புனித நன்மணம்
இனிதாச் இயம்ப இணையில் எழிலார் இணையாம் விழியோடிலக்கிடும்
ஈ————சா— ————உன்————றன்
ஈசா உன்றன்—ஈசா உன்றன் (மங்களாம்பிகை)
இனிய அருளை ஈந்திட,

# ஸ்ரீராமர் பாலப்பருவம்.

இதுவும் நோட்டுமெட்டு—வேறு.

1. பூதலங்க ளேழி லும்பு கழ்பெற் றோங்கும் புண்ணியன்
ஆத வன்குலத்து தித்த அன்பு மிக்க தசரதர்.
2. பட்ட மகிஷி கௌசல் யாவும் பத்னி ஸுமித்ரை நங்கையும்
இஷ்ட மார்லைக கேசியோடு இன்பம் நுகருந் தசரதர்.
3. உம்பர் மன்னன் றன்னைப் போரில் ஓட்டி வென்ற வீரனாஞ்
சம்பரன் செய் ஸமர்த்து மிக்க சண்டை வென்ற தசரதர்.
4. முத்தி மூலம் முழுது ணர்ந்த முனிவர் பல்லோர் அருளினால்
புத்ர காமேஷ்டி யாகம் செய்த புனித ரான தசரதர்.
5. தேவர் முதலா யாவருங்க ளிப்பை மேவ கௌசலை
ஆவல் தீர அயோத்தி நகரில் உதித்த ராமச் சந்திரன்.
6. நங்கை நற்கை கேசி யுள்ளம் நன்கு வப்பி பரதனும்
மங்கை ஸுமித்ரை மகிழச் செய்லக்ஷ் மண சத் ருக்னமைந்தரும்.
7. பொழுதோர்வண்ணம்நாளோர்மேனிபுதல்வர்நால்வர்உடையராய்த்
தொழுதே எவருந் துதிக்கத்தக்க தூய தேஜஸ் உற்றனர்.
8. உவகையுடனோர்வண்ணப்பந்தைஉருட்டிவிட்டுத்தொடர்ந்ததைத்
தவழ்ந்து தவழ்ந்து தாவிப்பற்றும் தனியன் ராமச் சந்திரன்.
9. நாம மென்ன வென்று கேட்பின் நயன மிரண்டும் அசைந்திட
"ஆம்" என்றுரைத்து மகிழும் அன்பன் ராமச் சந்திரன்.
10. அன்னை யெங்கே யென்று சாவின் அன்னைமடியை அடைந்திட்டுப்
புன்சிரிப்பும் பூரிப் புங்கொள் புனித ராமச் சந்திரன்.
11. தந்தை மடியில் தங்கி அவர்தங் தரணி யாளுந் தன்மையில்
சிந்தை யெல்லாஞ் செலுத்து கின்ற செல்வன் ராமச் சந்திரன்.
12. எண்ணிலா ரத் நங்களிருக்க எழில் விசுப்பில் எய்ந்திடும்
வெண்ணி லாவை வேண்டி யழுத விமலன் ராமச் சந்திரன்.
13. விண்ணில் நின்ற வெண்ணிலாவை விளங்குமோர் கண்ணாடியில்
கண்ணிற் கண்டு களித்த எங்கள் காதல் ராமச் சந்திரன்.
14. தம்பி மாரோ டைந்து வயதில் தக்க வித்யா ரம்பமுற்
றெம்பி ரானாய் இலங்கி நின்ற எங்கள் ராமச்சந்திரன்.
15. அன்னை யாங்கை கேசி தாதி அங்கக் கூனை நிமிர்த்திடப்
பின்னை அவள்தன் பகையைப்பெற்ற பிரிய ராமச் சந்திரன்.

(தொடரும்)

சு. அ. சுப்பராயன்.



OFFICE OF THE ... 2 ... 1912 MADRAS.

# சப்தம்.

சப்தம் இன்னதென்பதையும், அது உண்டாகும் விதத்தையும், அது
வாயுவின் வழியே செல்லும் மாதிரியையும், போனபாடத்தில் பேசினோமல்
லவா? சப்தம் ஓரிடமிருந்து மற்றொரு இடத்துக்குச்செல்ல, சற்றுப்பொ
ழுது செல்லுகின்றது. இவ்விஷயம் ஆற்றின் கரையில் வண்ணான் துவைக்
கும் இடத்திற்குச் சற்று அப்பால் நின்று பார்த்தால் தெரியவரும். தூரநிற்
கும் நமக்கு, துணி பாறையின்மேல் படும் சத்தம், துணியை மறுபடி இரண்
டாந்தடவை அடிக்க மேலே தூக்கும்போது தான் கேட்கின்றது. இன்னும்
சற்று அப்பால் நின்றுகொண்டால், இன்னமும் அதிகப் பொழுதாகின்றது.
விறகு பிளக்கும் இடத்துக்கு அப்பால் நின்று கொண்டும், இரும்புக்கடை
யில், இரும்புச் சட்டங்கள் வெட்டும்போது தூர நின்றுகொண்டும் இதே
விஷயத்தை விவரமாய் பரிக்ஷைசெய்து அறியலாம். சத்தம் ஓரிடமிருந்து
மற்றொரு இடத்துக்குச் செல்லப் பொழுதாகின்றதென்பது தான் இதற்குக்
காரணம்.

சாஸ்திர பண்டிதர்கள் பலவிதமாய்ப் பரிக்ஷை செய்து, செகண்ட் நேர
த்தில் சத்தம் $1\frac{1}{2}$ பர்லாங்கு தூரம் செல்லுமென்று கண்டு பிடித்து இருக்
கின்றனர். அதாவது 3 செகண்ட் நேரத்தில் 5 பர்லாங்கு தூரம் சப்தம்
சென்றுவிடும். சப்தத்தின் வேகத்தை அளப்பது சுலுவான வேலை அன்று.
நம்போலியர் சரியான கருவிகள் இன்றி அவ்வேகத்தை அளவிடச்செல்வது
மிகவும் கஷ்டம். ஆயினும் பண்டிதர்கள் தீர்மானம் செய்யும் விதத்தைமட்
டும் சொல்லுகிறேன். ஒரு இடத்தில் குறிப்பிட்ட சமயத்தில் ஒரு துப்பாக்
கியைச் சுட்டால் தூரநிற்கும் ஒருவன் முதலில் புகையை காண்கின்றான்.
சிறிது பொழுது சென்ற பின்னர் சத்தம் காதில் படுகின்றது. புகை கிளம்
பிய சமயத்திலேயே தான் சப்தமும் உண்டாயிருக்கவேண்டும்; ஆகவே
புகை கண்ட சமயம் முதல் சத்தம் காதில் படும் சமயம் வரையில் சென்ற
சாவகாசத்தில் சத்தமானது துப்பாக்கி சுட்ட இடத்திலிருந்து எவன் கேட்
கின்றானோ அவன் நிற்கும் இடம் வரையில் வருகின்றது. ஆகையால் நேர்த்
தியான ஒரு கடிகாரத்தை வைத்துக்கொண்டு புகை கண்ட சமயம் முதல்
சத்தம் கேட்கும் சமயம் வரையில் உள்ள செகண்டுகள் இவ்வள வென்று
கவனித்துக்கொண்டால் அந்நேரத்தில் எவ்வளவு தூரம் சத்தம் சென்றிருக்
கின்றதென்பது விளங்கும். அக்கணக்கிலிருந்து 1 செகண்டில் எவ்வளவு
தூரம் சத்தம் செல்லுமென்பதைக் கண்டு பிடித்துக்கொள்ளலாம்.

வாயுவின் வழியாய் சத்தம் 1 செகண்டில் $1\frac{1}{2}$ பர்லாங்கு தூரம் போகு
மாயின் ஜலத்தில் எத்துணைவேகத்துடன் செல்லுமெனில் சொல்லுகிறேன்.
ஜலத்தில் சத்தம் வேகமாய்ச் செல்லுமென்பதை ஜலத்திலுள் மூழ்கியுள்ள
இரண்டு பிள்ளைகளுள், ஒருவன் இரண்டு கற்களைக்கொண்டு ஒன்றை ஒன்று
கொட்டினால் மற்றவன் அந்த சத்தத்தை தெளிவாயும் விரைவாயும் கேட்
பது பற்றித் தெரிந்துகொள்ளலாம். வாயுவின் வழியாய்ப்போகும் வேகத்
தைவிட சத்தம் ஜலத்தின் வழியாய் 4 மடங்கு அதிக வேகத்துடன் செல்
லுகின்றது. ஒரு பெரிய குளக்கரையில் ஒரு புறத்தில் நாம் நின்றுகொண்டு
மற்றொரு புறம் ஒருவரை பலமாய்ச் சத்தம் செய்யச்சொன்னால், முதலில்

ஒரு சத்தமும், சில செகண்டுகளுக்குப் பின்னர் ஒரு சத்தமும், இரண்டு
தொனி கேட்கும். முதலில் கேட்பது ஜலத்தின் வழியே வந்த சத்தம்; இர
ண்டாவது கேட்பது வாயுவழியே வந்த சத்தம்; ஜலத்தின் வழியே செல்
லும் சப்தத்தின் வேகத்தை நிர்ணயம் செய்வது வாயுவழியே செல்வதை
நிர்ணயம் செய்வதைக் காட்டிலும் கஷ்டமானது. மரம், இரும்பு முதலிய
கனபதார்த்தங்களின் வழியே, சத்தமானது ஜலத்திலும் வேகமாய்ச்செல்
லும்.

எதிரொலி:—ஒருபெரிய கட்டிடத்திற்கு முன்னே யாவது, கோட்டைச்
சுவற்றின் முன்னே யாவது, மரமடர்ந்த தோப்பின் முன்னேயாவது நின்று
கொண்டு உரக்கக்கூவினால் சில நொடிகளுக்குள் நாம் செய்த சப்தம்போ
ன்ற மற்றொரு சப்தம் உண்டாவதைக் கேட்டிருக்கின்றீர்கள் அல்லவா ?
இதையே எதிரொலி என்று சொல்வது; சில பெரிய வீடுகளிலும் எதிரொலி
கேட்பதுண்டு. அதனாலேயே அவ்வீடு கெட்டதென்றும், பேய், பிசாசு வசி
க்கும் இடமென்றும் சில மூட ஜனங்கள் பிதற்றுவார்கள். அவ்வாறு சொல்
லுதல் பிசகு. அவ்வாறு வீணாய்த் தூற்றும் பேதைகளின் மனப் பிசாசைத்
தவிர வேறு பிசாசங்கள் அவ்விடங்களில் கிடையா !! எதிரொலி உண்டாவ
தற்குக் காரணம் சரியாய்த் தெரியாதது பற்றியே அம்மூடாத்துமாக்கள்
அங்ஙனம் உளருகின்றனர். இதைக்கேட்டுப் பெண்டிரும்குழந்தைகளும் அவ்
வீடுகளில் நுழைய பயப்படுகின்றார்கள். இவ்விஷயத்தை விவரிக்க எடுத்துக்
கொண்டதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணம். எதிரொலி உண்டாகும் வித
த்தை விளக்க ஒரு திருஷ்டாந்தம் கூறுகின்றேன். ஒரு ரப்பர் பந்தை எடு
த்துக்கொள்ளுங்கள். அதை நிலத்தில் போட்டால் என்ன நிகழ்கின்றது?
பந்துமேல் கிளம்பி வருகின்றது; அதுவே போல் ஒரு கோலி குண்டை கல்
லின்மேல் போட்டுப்பாருங்கள்; கோலி குண்டும் மேல்கிளம்புவதைப் பார்க்
கலாம். இவை மேல் கிளம்பக் காரணம் என்ன ? ரப்பர் பந்து, கோலிகுண்டு
இவை நகரும் வஸ்துக்கள் அல்லவா ? அவை நகர்ந்து செல்லும்போது
சுவரோ, நிலமோ, கல்லோ,—இவை எதிர்ப்படும்போது அவற்றைத் தாக்கு
கின்றன. அவை தம்மைத் தாக்கிய பந்து, கோலிகுண்டு இவற்றை மறுபடி
எதிர்ப்புறமாய் உந்தித்தள்ளுகின்றன. ஆகையால் மறுபடி அவைமேல் கிளம்
புகின்றன.

இவ்விஷயத்தை முன்னிட்டு எதிர் ஒலியை கவனிப்போம். சப்தம்
செய்யும் வஸ்துவின் அணுக்கள் முன்னும் பின்னும் அசைந்துகொண்டு இரு
க்கின்றன என்று முன்னேயே சொல்லியிருக்கிறோம். அதனால் அவ்வஸ்து
வின் அணுக்கள் தம்மைச் சுற்றியுள்ள வாயுவின் அணுக்களைத் தாக்குகின்
றன. வாயுவின் அணுக்களின் வழியாய் இவ்வேகம், பெரிய கட்டிடம், கோ
ட்டை மதில், தோட்டம் இவற்றைச்சேரும் வரையில் நேரே செல்லுகின்
றன. வாயு அணுக்கள் அத்தடைகளின்மேல் பட்டவுடனே பந்து, கோலி
குண்டு, இவை மறுபடி உந்தப்பட்டதுபோல் எதிர் முகமாய்க் கிளம்புகின்
றன. இப்படிக் கிளம்பிய அணுக்கள் முன்போலவே தம்மைச் சுற்றியுள்ள
வாயு அணுக்களைத் தாக்க அவை முறையே எதிர்முகமாய் தம் வேகத்தை
அனுப்புகின்றன. நம் காதில் அவ்வேகம் வந்து தாக்கியவுடனே நாம் மறு
படி அந்த சத்தத்தைக்கேட்கிறோம். ஆகையால் நாம் செய்த சப்தமே நமது
காதில் மறுபடி விழுகின்றது.



மலைப்பிரதேசங்களில் ஒரு குண்டு வெடிபோட்டால் அதிக நேரம்
வரையில் 'கடகட' வென்று சத்தம் கேட்டுக்கொண்டே இருப்பதற்கும் கார
ணம் இதுவே. சுற்றிலும் வெவ்வேறு தூரங்களில் உள்ள மலைகளால் எதி
ரொலி உண்டாகி ஒவ்வொன்றும் வெவ்வேறு சமயங்களில் நம் காதில் விழு
வதோடு, ஒரு எதிரொலியே மறுபடி இன்னொரு மலையில் பட்டு மறுபடி
எதிரொலிக்கவும் கூடும். இந்த மாதிரி ஒரு சத்தமே பலதடவை எதிரொலிக்
கும். மேகம் சூழ்ந்துகொண்டு இடி இடிக்கும்போது நீண்ட காலம் இடிகேட்
பதற்கும் காரணம் இம்மாதிரியே தான். இவை மேகங்களால் உண்டாகும்
எதிரொலிகள்.

ஆர். கே. சுவாமி, பி-ஏ., எல்-டி.

## ஜோதிமதி.

[41-வது பக்கத்தொடர்ச்சி.]

டை உடனே வைரம், வைடூரியம் முதலிய விலையுயர்ந்த கற்களுள்ள
ஒரு அழகான மோதிரத்தைக் கொடுத்தது. இராஜகுமாரன் நித்திரை செய்
யும் ஜோதிமதியின் கையை மெதுவாக எடுத்து விரலில் மோதிரத்தை அணி
ந்துவிட்டான்.

உடனே இராஜகுமாரத்தி திடுக்கிட்டு எழுந்து படுக்கையில் உட்கார்ந்
தாள். "நீ இவ்விடத்தில் என்ன செய்கிறாய்? நீ யார்?" என்று மிகப்பயந்தப்
பார்வையுடன் கேட்டாள்.

"உன்னை நான் விரும்புவதால் தான் நான் இவ்விடத்திலிருக்கிறேன்"
என்று மறுமொழி பகர்ந்தான். பயப்படாதே! உன் கையை நான் பிடித்துக்
கொள்ளுகிறேன். தயவுசெய்து நான் சொல்லவேண்டியதைக் கேள் என்றும்
சொன்னான்.

இராஜ குமாரத்தி கம்பீர முள்ளவும், அழகுள்ளவுமான வாலிபவயது
ள்ள இராஜ குமாரனைக் கண்டபொழுது மனம்குளிர இவனை மணம்புரிந்து
கணவனாக வகிக்க வேண்டுமென்று விரும்பினாள்.

தான் ஒரு பெரிய இராஜ்யத்து அரசகுமாரனென்றும், முந்தியநாள்
இரவில் அவள்மேல் போட்டுவிட்டுப்போன விலையுயர்ந்த புடவையைத்
தான் கொண்டுவந்ததாகவும் சொன்னதைக்கேட்டு அகமகிழ்ச்சிகொண்டு,
உன்னை மணம்புரிய எனது மனப்பூர்ண இஷ்டமென்று எனது தாயாருக்
கும் தந்தைக்கும் சொல்லுகிறேன் என்று ஜோதிமதிசொல்லி இராஜகுமா
ரனை அனுப்பிவிட்டு நித்திரை செய்தாள்.

பின்பு அரசகுமாரன் முன்சொல்லிய கிழவியின் குடிசைக்குத் திரும்
பிச்சென்றான்.

மறுநாள் காலையில் இராஜனிடத்திலும் இராணியிடத்திலும் ஜோதிமதி
அந்த அரசகுமாரனைப் பற்றி தனக்குத் தெரிந்தவரையிலும் சொல்லி தன
க்கு அவனை மணம்புரிந்து கொள்வதில் யாதொரு ஆக்ஷேபனை யில்லையெ
ன்றும் தங்களுடைய உத்திரவை எதிர்பார்க்கின்றேன் என்றும் சொன்னாள்.

உடனே அவ்வரசன் அரசகுமாரனை அழைத்துவரும்படி ஒரு தூதனை யனுப்பினான்.

அரசகுமாரன் இராஜனிடத்திற்கு வந்து மரியாதைசெய்து நின்றான். "என்குமாரத்தி விருமபும்வண்ணம் நீ அவளை மணம் செய்துகொள்ளலாம். ஆனால் முதலில் நான் இடும்வேலையை நீ செய்யவேண்டும். அதாவது 80 மரக்கால் கடுகு கொடுக்கிறேன். அதிலிருந்து எண்ணெய் இன்றைக்கே எடுக்கவேண்டும்" என்றான்.

அரசகுமாரன் மிகுந்ததுக்கத்துடன் அரண்மனையைவிட்டு குடிசைக்கு திரும்பிப்போனான்.

"நான் எவ்விதம் அக்காரியத்தைச் செய்யமுடியும்? அது கஷ்டம், என்னால் முடியாது" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

கிழவி இதைக் கேட்டபொழுது, "ஆம், அது முடியாத காரியம்தான்; ஆனால் எறும்புகள் அதைச் செய்யக்கூடும்" என்று சொன்னாள்.

கிழவி சொன்னது எறும்பு ராஜாவின் ஞாபகம் வந்தது. தக்ஷணமே அதை இராஜகுமாரன் நினைக்கவே, அது தனது பரிவாரங்களுடன் கதவண்டை நகர்ந்துவந்து நின்றது. இராஜகுமாரன் அதைக்கண்டு சந்தோஷப்பட்டு, "தான் அரண்மனையிலிருந்து கொண்டு வந்த கடுகு மூட்டையை அவைகளுக்குக் காண்பித்தான். நாளை காலைப்பொழுதிற்குள் இவைகளிலிருந்து எண்ணெய் யெடுக்காவிட்டால் ஜோதிமதியை விவாகம் செய்துகொள்ள முடியாது" என்று சொன்னான். எறும்பு ராஜா "சரி, நீ நித்திரை செய்யபோ, அதை எங்களிடத்தில் ஒப்புவித்துவிடு "என்றது. அடுத்த நாள் காலையில் கடுகில் துளி எண்ணெய்கூட இல்லை, எல்லாவற்றிலிருந்தும் பத்திரமாக எண்ணெயெடுத்து வைத்துவிட்டன. அரசகுமாரன் இந்த எண்ணெயைக்கண்டு உள்ளம்பூரித்து உடனே இராஜனிடத்திற்குப்போய் இதைக் காண்பித்தான். ராஜன் கண்டுகளித்து, மிகவும் நல்லது, ஆனால் இன்னொரு காரியமிருக்கிறது என்றான். அதோ தெரிகிற சிறிய குன்றுகளுக்கு ஒரு தினம்நான் சென்றபொழுது இரண்டு வேதாளங்களைப் பிடித்துக்கொண்டு வந்து இவ்விராஜயத்தில் ஓரிடத்தில் கூண்டில் அவைகளை அடைத்து வைத்திருக்கிறேன். அவைகளைக் கொன்றுவிட விரும்புகிறேன். ஏனெனில் அவைகள் கூண்டை உடைத்துக்கொண்டு வெளியில் வந்து என் பிரஜைகளைத் தொந்திரவு செய்தாலும் செய்யும். நீ அவைகளைக் கொன்றுவிட்டால் எனது அன்பு வாய்ந்த மகளாகிய ஜோதிமதியை விவாகஞ்செய்துகொள்ளலாம்" என்று சொன்னான்.

அரசகுமாரன் இதைக் கேட்டபின் விடைபெற்றுக்கொண்டு கிழவியின் குடிசைக்குப்போய் அரசன் சொன்னதைக் கிழவியினிடம் சொன்னான். "நான் எவ்விதம் அந்த வேதாளங்களுடன் போராடுவேன்?" என்னிடத்தில் நான்வேட்டையில் உபயோகிக்கும் கத்திதா னிருக்கிறதென்று சொல்லி மிக்க மனவருத்த மடைந்திருந்தான்.

நீ வேதாளங்களைக் கொல்ல முடியாதுதான். இரண்டு புலிகள் அவைகளைக் கொல்லும்." என்று கிழவி பதிலுரைத்தாள்.

உடனே தான் முன் உதவிசெய்த புலியின் ஞாபகம் வந்ததும், அதைப் பற்றி நினைத்தான். ஆண்புலியும், பெண் புலியும் சேர்ந்து இவன் முன் எங்கிருந்தோ தெரியாது திடீரென வந்துநின்றன.

ஆண்புலி "என் மனைவியாகிய பெண்புலியும் நானும் உனக்காக அந்த வேதாளங்களைக் கொல்லுகிறோம், எங்களை இவ்வூர் இராஜனிடத்திற்கு இட்டுக்கொண்டுபோ" என்றது.



பாலில் பழம் நழுவி விழுந்தாற்போல் மகிழ்ந்து புலி சொல்லிய வண்ணம் அவைகளை இட்டுக்கொண்டு ராஜனிடத்திற்குப் போய்," மகாராஜாவே! இப்புலிகள் அவைகளுடன் சண்டை செய்யலாமா" வென்று கேட்டான்.



எவ்விதத்திலாவது இவைகளை ஒழித்துவிடவேண்டுமென்று மிக்க கவலையுடனிருந்த அரசன் "தடையென்ன? அவைகளுடன் இப்புலிகள் சண்டைசெய்து எப்படியாவது அவ்வேதாளங்களைக்கொன்றால் போதும்" என்றான்.

உடனே அரசகுமாரன் புலிகளுடன் வேதாளங்களிருக்கு மிடத்திற்குப்போகும்பொழுது, அரண்மனையிலுள்ளவர்களும், ஊர் ஜனங்களும் இவ்வேடிக்கையைப் பார்க்கத் திரளாக இவனைப் பின் தொடர்ந்து சென்றார்கள்.

வேதாளங்களிருக்குமிடத்திற்கு அரசகுமாரனும் புலிகளும் வந்தவுடன் புலிகளுக்கு வேதாளங்களைக் காண்பித்தான். வேலைக்காரர்கள் கூண்டின் கதவை மெதுவாகத்திறந்தார்கள். வேதாளங்களிரண்டும் கோபாவேசத்துடன் வெளியிற் வந்து புலிகளையும், கும்பலாய் நிற்கும் ஜனக்கூட்டத்தையும் கண்டன. புலிகளிரண்டும் உக்ரத்துடன் வேதாளங்களின்மீது பாய்ந்து சண்டைசெய்ய ஆரம்பித்தன. வேதாளங்களும் சண்டை சலிக்காமற் வெகுநேரம் செய்தன. இவ்வாச்சரியமும், பயங்கரமுமுள்ள சண்டையை ஜனங்கள் கண்கொட்டாமல் பார்த்தவண்ணமா யிருந்தார்கள். கடைசியில் புலிகள் வேதாளங்களைக் கிழித்துக்கொன்றுபோட்டு இராஜகுமாரனிடத்திற்குவந்து விடைபெற்றுக்கொண்டு வந்த வழியை நோக்கிச் சென்றன.

இராஜகுமாரன் அரசனைப்பார்த்து "இப்பொழுதாவது உமது மகளை எனக்கு மணஞ்செய்து வைப்பீராவென்று" கேட்டான்.

"இன்னும் ஒரே ஒரு காரியம்தான் பாக்கியுளது. இராஜன், "பேர்ப்பறையை நீ அடித்தால் எனது குமாரத்தியை நீ கலியாணஞ் செய்துகொண்டு சுகமாக வாழலாம்" என்றான்.

"அது எங்கே யிருக்கிறது?".

"ஆகாயத்தில் அதி உயரத்திலிருக்கிற" தென்றான்.

"ஆகாயத்தில் அதி உயரத்திலிருக்கிற" தென்றான். இம்மூன்றிலும் இது மிகவும் கஷ்டமான வேலை. "நான் எவ்விதம் ஆகாயத்தில் சென்று அதை அடிப்பேன்!" என்று அரசகுமாரன் பெருமூச்சு விட்டான்.

அரசகுமாரன் குடிசைக்குத் திரும்பிப் போய் கிழவியினிடத்தில் இச்சங்கதி முழுவதையும் சொன்னான்.

“அம்மாகிழவியே! எனது எறும்புகள் கடுகை எண்ணெயாகச் செய்தன. எனது புலிகள் வேதாளங்களைக் கொன்றன. ஆகாயத்திலுள்ள இரணபேரியையார் அடிப்பார்கள்?” என்று தாழ்ந்ததொனியுடன் சொன்னான்.

“முட்டாளே! ஏழுகாடுகளையும், மூன்று மலைத்தொடர்களையும் உனது கட்டிலின் உதவியால் தாண்டி வந்திருக்கிறாயே! ஆகாயத்தில் உயரத்திலிருக்கும் இதனிடத்திற்கு உன் கட்டில் உன்னை எடுத்துச்செல்லாதா” வென்று சொன்னாள்.

ஆம்! ஆம்!! இதைப்பற்றிய ஞாபகம் என்மனதில் உதிக்கவேயில்லை!’. என்று இராஜகுமாரன் சந்தோஷ முகத்துடன் உரக்கச்சொன்னான். பின்பு சந்தோஷமாக அன்றிரவு போஜனமுண்டு நித்திரை செய்தான்.

மறுநாள் காலையில் தனது கட்டிலில் உட்கார்ந்து போர்ப்பேரிகையிருக்குமிடத்திற்குப் போகவேண்டுமென்று நினைக்கவே மாயாகட்டில் ஆகாயத்தில் வெகு உயரத்திலுள்ள பேரிகை யண்டை இவனை எடுத்துச்சென்றது இவன் தனது கத்திப்பிடியால் யாவரும் இதன் சப்தத்தைக் கேட்கும்படி கெட்டியாக அடித்தான்.

அரசன் இதன் சப்தத்தைக் கேட்டான். இராஜகுமாரன் கீழே வந்ததும், நீ நான் இட்டவேலைகளைத் திருப்திகரமாகச் செய்தாய். கூடிய சீக்கிரத்தில் உனக்கும் எனது குமாரத்திக்கும் விவாகத்தைச்செய்துமுடிக்கிறேன் என்று அரசன் வாக்களித்தான்.



இராஜகுமாரன்தான் இரவலாக வாங்கிகொண்டுவந்த குடுவை, கட்டில், பை இம்மூன்றையும் காட்டிலுள்ள சாதுவினிடத்திற்கு ராஜாவின் வேலைக்காரர்கள் மூலமாக அனுப்பிவிட்டான். இராஜகிரகத்தில் சுகமாக சில தினங்கள் தன்காலத்தைக் கழித்துவந்தான். உடனே விவாகமுகூர்த்தம் நிச்சயம் செய்யப்பட்டு, எல்லாதேசத்து மன்னர்களுக்கும் விவாகப்பத்திரிகையனுப்பப்பட்டது. விவாகமும் வெகுசிறப்பாக நடந்தேறியது.

விவாகமானவுடன் தனது மாமனார் மாமியார் முதலியவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு ஜோதிமதியோடு அநேக இராஜபரிவாரங்களுடன் தனது சொந்த இராஜ்யத்திற்குச் சென்று பட்டாபிஷேகஞ் செய்துகொண்டு சுகமாக இல்லறத்தை நடத்திவந்தான். ஜோதிமதி மிக்க தானதர்மம் செய்துகொண்டு மகா உத்தமராணியென பேரெடுத்தான்.

முற்றிற்று.



# கமலாலயம்.

## நவராத்திரி சமயம்.

தாரா நகரத்தில் மழைகாலம் வந்துவிட்டது; 7, 8, நாளாய் மழைபெய்து, எங்கே பார்த்தாலும் ஜலம். நதியில் வெள்ளம் கரைபுரண்டு போகின்றது. இன்று இரவு மழை நின்றுவிடுமோ என்று எண்ணினால் சாயங்காலத்துக்குள்ளாகவே எங்கிருந்தோமேகங்கள்வந்துகூடி மழைகொட்டி விடுகின்றது ஒருநாள் கொடியில் உலரப்போட்ட சீலை காய 4 நாள் பிடிக்கின்றது. வீடுகளில் எங்கே பார்த்தாலும் ஈரம்; உப்புமண் வாயுவில் உள்ள ஈரத்தையும் இழுத்துக்கொண்டு ஊற்றம் ஊறும் இடம்போல் தோன்றுகின்றது. ஈரத்தில் குழந்தைகளும் பெரியோர்களும் அலைவதினால் சளி, காய்ச்சல் முதலான சில்லறை வியாதிகள் இல்லாதவீடில்லை. காலில் சேறுபடாமல் அடுத்த வீட்டுத் திண்ணைக்குக்கூட போகமுடியாது; அவ்வளவு நேர்த்தியாய் இருக்கின்றன ரோட்டுகளும், ரோட்டின் இருபுறத்துக் குழிகளும்! முதல் மழைகளில் பாதையின் இருபுறத்து வாய்க்கால்களிலும் ஜலம் மட்டுமே ஓட, அதைக்கண்டு பொறுக்கமாட்டாமல் ரோட்டில் உள்ள மண் மணல் இவைகளும் அவ் வாய்க்கால் வழியே ஓடத் தலைப்பட்டு, தண்ணீருடன் ஓடமுடியாமல் தங்கிப்போகவே, தோற்றுப் போனவர்கள் தடுத்துக்கொண்டு நிற்கும்வழியில் செல்ல விரும்பாது, ஜலமெல்லாம் பாதையின் பேரிலேயே புதுவழி செய்துகொண்டு புறப்பட்டுவிட்டன!! இச்சண்டையின் பலன் என்னவெனில் பகலில் நடப்பவர்களின் கால்கிழிவதும், இரவில் நடப்பவர்கள் தவறிவிழுவதும் தவிர வேறு இல்லை. வேகமாய்ச் செல்லும் குதிரை வண்டிகள் தலைகீழாய் விழுவதை வேண்டுமானாலும் சேர்த்துக் கொள்ளலாம்!!

பகலெல்லாம் சூரிய வெளிச்சமே கிடையாது. “சன்னியாசிவாயில் மண்தான் இன்றைக்கு!” என்கிறார்கள் பெண்டீர் எந்தசன்னியாசிவாயிலோ என்னவோ நாம் அறிகிலோம்; அப் பழமொழிக்குச் சரியான பொருளும் எனக்குத் தெரியவில்லை. வெளிச்சம் இல்லாமல் போகவே தமது நாயகனை சூரியனைக் காணாது ஏக்கம்கொண்டு, கண்ணீர் விடுவதுபோல் செடிகள் ‘சொட்டு சொட்டு’ என்று துளித்துக்கொண்டே இருக்கின்றன. பிறகு இனி எப்படியாவது நம் நாயகனைத் தேடிப்பிடிக்க வேண்டியதுதான் என்று ஆகாயத்தை நோக்கிப் புறப்படுவனபோல் அதிக வேகமாய் துளுக்க வாரம்பிக்கின்றன. பள்ளிப் பிள்ளைகள் பொழுது தெரியாமல் வேளைதப்பிப் பள்ளிக்கூடம் சென்று அடி படுகிறார்கள். சாயங்கால வேளைகளில் வருணப் பிரஸாதம் கிடைப்பதால் பந்தும் கையுமாயும், துடுப்பும் கையுமாயும் பந்தாட முடியாமல் வீட்டைபார்க்க ஓடி வருகிறார்கள் சிறுவர்கள்!!

இரவில் குளிரோ அசாத்தியம்; ஈசல், கம்பளிப்பூச்சி (புழுவன்று), தட்டாரப்பூச்சி, சாணிவண்டு—முதலிய புண்ணியாத்மாக்களின் உதவியால் வீட்டில் விளக்கு எரியவிட ஆசையில்லை ஐரோப்பிய விளக்குகளின் சிம்னிகள் உடைந்து போகின்றன. விளக்கெண்ணெய் விளக்கிலோ எண்ணெய் தெரியாமல் பூச்சிகள் விழுந்து நிரம்பிவிடுகின்றது. மழையும்விட்டுக் காணப் போகுமோ என்கிறார்கள் எல்லாரும்!!

இவ்வளவு 'தடபுடலில்' என் பிழைப்பும் மிகச் சிராய்தான் இருக்கின்றது. வீட்டுக்கு வருகிறவர்களே கிடையாது என்று சொல்லலாம். கமலாலயத்தில் இருப்பவர்களும் வெளியே புறப்படுவதில்லை. நான் திண்ணைச் சுவற்றில் சாய்ந்துகொண்டு வீதியில் போகிறவர்களைப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டியதாயிற்று. சாப்பாட்டுக்கோ ஆக்ஷேபணையில்லை. திண்ணைவிட்டு இறங்காமல் கால் தொங்கப்போட்டு உட்கார்ந்து சாப்பிடுவது நன்றாய்த்தான் இருக்கின்றது. ஆனால் ஜீர்ணம் மட்டும் ஆவது இல்லை. என் மருமகன் தோட்டக்காரனுக்கும் அப்படியே; செடிகளுக்கு தண்ணீர் ஊற்றவேண்டிய செலவே இல்லை. பாத்திகளில் இருந்தே ஜலம் வெளியே ஓடுகின்றது. பூப்பறிக்கப்பாடில்லை; மொட்டுகளே விழுந்துபோகின்றன. செடிகளிடம் நெருங்கவேண்டிய வேலையில்லாதபோது தோட்டக்காரன் பாடும் கொண்டாட்டம்தானே!!

இம்மாதிரி மழைவிடாமல் பிடித்து 1 வாரம் ஆனபின்பு, இன்று சற்று மேகம் விலகி சூரியன் உதயமாகிறான். 8 நாளாய் வெயில் காணாமல் இன்று வெயிலைக்கண்ட பறவைகள் சந்தோஷத்தால் என்னபாடுபடுகின்றன! குருவிகள் கூவுவதும், காக்கைகள் கத்துவதும், கிளிகள் தோட்டத்தில் பேசுவதும், கருடனும் கழுகும் கூச்சலிட்டுக்கொண்டு ஆகாயத்தில் வட்டமிடுவதும் வெகு இன்பமாய் இருக்கின்றன; தெருவில் செல்லும் ஜட்காக் குதிரைகள் கூட கனைத்துக்கொண்டு ஓடுகின்றன; கன்றுக் குட்டிகள் துள்ளி விளையாடுகின்றன. மணி எட்டு அடிக்கின்றது. வீதிகளில் பலர் வெயில் காய்கின்றார்கள். பெட்டிகளில் வைத்திருந்த ஆடைகளையெல்லாம் சூரிய வெளிச்சத்துக்கு அற்பிதம் செய்கிறார்கள். ஒவ்வொருவரும் சுறுசுறுப்பாய் வேலை செய்கிறபடியே என் மருமகனும் விசையாய் நடந்துவருகிறான். அவன் தோளில் மண்வெட்டி, கையில் செடிவெட்டும் கத்தரி இவை கொண்டுவருகிறான்.

நான் "பயலே! என்ன செய்யப்போகிறாய் இன்றைக்கு?"

என் மருமகன் (தோட்டக்காரன்) "மாமா! பாத்தியில் கிளம்பியுள்ள மண்ணெல்லாம் வெளியில் போட்டுவிட்டு வாய்க்கால் வழிபறிக்கப் போகிறேன். பிசாசுபோல் கொடுக்காய்ப் புளியும், ரோஜாக்கொடியும் வளர்ந்துவிட்டதே; அதைக் கத்தரிப்பதும், இன்றைக்கு இதுதான்வேலை".

நான் "இன்றைக்கு நீ பறி, நாளைக்குள் ராத்திரியே மூடிவிடுகிறது மழை!! செய், செய்!! பலமிருக்கிறவரையில் ஒரு மூச்சுப்பார்!"

தோட்டக்காரன் "என்ன மாமா அப்படி இன்னும் மழை பெய்யுமா?"

நான் "அது என்னவோ அப்பா, எனக்கு என்ன ஜோஸியம் தெரியுமா? என்னசெய்ய வேண்டுமென்று தோன்றதோ அது செய்."

தோட்டக்காரன் "பின்னை யேன் வேலை செய்யும்போது தடை செய்கிறாய்"

நான் "தடை யென்னடா? நீ குசாலாய் வேலை பண்ணேன்! யார் தும்முகிறார்கள்! உனக்கென்ன நாள் முழுவதும் வேலை செய்யவேண்டியதுதானே கணக்கு! பிறகு எது எப்படிப்போனால் என்ன? தின்னசோறு ஜீர்ணத்துக்கு வரவேண்டாமா?"



தோட் "என்ன மாமா நீர் சொல்வது அர்த்தமாகவில்லையே! என்ன பண்ணச் சொல்லுகிறீர்"

நான் "அடே முட்டாளே! வாய்க்கால் வெட்டி இன்றைக்குத் தண்ணீர் இறைக்கப்போகிறாயா? வாய்க்கால் பின்னால் பார்த்துக்கொள்வோம். செடி கத்தரிக்கத்தான் இப்பொழுது என்ன அவசரம்? பூச்சட்டிகளிலும், பாத்திகளிலும்பார்! இவற்றில் முளைத்து இருக்கும் புல், நெருஞ்சி, கோரைக்கிழங்கு, கீழாநெல்லி, குப்பைக்கீரை, குப்பைமல்லி இவற்றைப் பிடுங்கு இன்றைக்கு; சுத்தமாய்ப் பார்வைக்கு நன்றாய் இல்லை. உடனே சிற்றடிப்பாதைகளை நேர்ப்படுத்து; இல்லையேல் யாராவது பூந்தோட்டத்தில் நடந்தால் அருவைப்படுவார்கள். நாளைக்கு மற்ற வேலை செய்யலாம்."

தோட் "ஆனால், நான்—"

"அடே தோட்டக்காரா!" என்கிற சத்தம் கேட்கவே ஞானம்மாள் குரல்போல் இருந்தபடியால் இருவரும் உள்ளே தோட்டத்தில் நுழைய.,

ஞானம்பாள் "வீரா நீயும் உன் மருமகனும் கூடி இன்னும் இரண்டு மூன்று தினத்துக்குள் தோட்டத்துச் செடிகளையெல்லாம் ஒழுங்குபடுத்தி நடுவேயுள்ள லதாக்கிரகத்தையும் சிராய் வைக்கவேண்டும். அங்குள்ள நாற்காலிகள் முதலியன அழுக்கடைந்தும் மழைக்குப் பூஞ்சாளம் பிடித்தும் போய் இருக்கின்றன. அவைகளை நன்றாய்த்துடைத்து வைக்கவேண்டும். புதிதாய்க் கொண்டுவந்த 18 சட்டிகளையும் கொடிவீட்டின் உட்புறமாய்ச் சுற்றிலும் வைக்கவேண்டும்—தெரியுமா."

தோட் "செய்கிறேன்; எந்தச் சட்டிகளை? ரோஜாமுதலிய துண்டுகள் முளைத்து இருக்கிறதே அதையா?" ஞானம் "ஆம், அதுதானே இப்பொழுது புதிதாய்க் கச்சேரியில் இருந்துகொண்டுவந்தது!"

நான் (பழைய சேவகன் ஆனபடியாலும், குழந்தைமுதல் ஞானம்பாளைத் தூக்கி வளர்த்தபடியாலும், அவளிடம் உரிமை பாராட்டும் வழக்கம் உண்டு.) "என்ன அம்மா விசேஷம்?"

ஞானம் (என் கேள்விக்கு நேராய் பதில் சொல்லாமல்) "வாடினதழை, பழுத்ததழை ஒன்றுகூட ஒரு செடியிலும் இருக்கவேண்டாம்; பண்டிகை வருகின்றது, புதிதாய் வருகிறவர்கள் பார்த்தால் எல்லாம் நேர்த்தியாய் இருக்கவேண்டாமா? ஆகையால் ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ளுங்கள். வேண்டுமானால் துணைக்கு வேலைசெய்ய குதிரைக்காரனையும் இடையன் வெங்கடனையும் சேர்த்துக்கொள்ளலாம்" என்றுசொல்லிப் போய்விட்டாள்.

எனக்கு உண்மை விளங்கிற்று. நேற்று எஜமான் பிரேமநாதர், மகளும் மாப்பிள்ளையும் சீக்கிரத்தில் வருவதாகப் பேசிக்கொண் டிருக்கவில்லையா? அதற்குத்தான் இவ்வளவு ஏற்பாடும்; ஆகையால் நானும் சாவகாசப்படும் போதெல்லாம் தோட்டத்தை கவனிப்பதாகத் தீர்மானம் செய்துகொண்டேன்.

பிரேமநாதருடைய மாப்பிள்ளையும் ஞானம்பிகையின் புருஷருமாய் விளங்கும் சந்திரசேகர சர்மா என்பவர் பி. ஏ. பரிக்ஷை தேரிவிட்டுப் பட்டணத்தில் சட்டப்பரிக்ஷைக்குப் படிக்கிறார். இதை முன்னமேயே ஒருமுறை சொல்லி யிருக்கிறேன். இப்பொழுது பண்டிகை சமயமாதலால் (நவராத்திரி) ஏதோ பள்ளிக்கூடங்கள் மூடி விடுகிறார்களாம். அச்சமயத்தில் 2, 3, வாரம்

அவர் தாரா நகரத்தில்வந்து இருப்பதாக நேற்று எஜமான் பேசிக்கொண்டிருந்தது காதில்பட்டது. மாப்பிள்ளை ஐயருக்கு தோட்டம் போடுவது, செடி கொடி பயிராக்குவது—இவற்றில் அதிகப்பிரியம். இத்துடன் குறை கண்டவிடத்தில் தாக்ஷிண்யம் பாராது எடுத்துக் காட்டிவிடுவார். நாங்கள் தோட்டத்தைச் சீராய் வைத்துக்கொண்டு இராவிட்டால் அவர் ஞானம்பாளைப் பழிப்பார். ஏனெனில் வீட்டில் எஜமானர் சாவித்திரியம்மை இவர்களைத் தவிர்த்து இருப்பது ஞானம் ஒருவள்தானே; அவளே வீட்டுக் காரியங்கள் எல்லாம் சரியாய் நடக்கின்றனவா என்று கவனிக்க வேண்டுமென்பது அவருடைய கருத்து. ஞானம்பிகைக்கோ கடுஞ்சொல் ஒன்றுகூட ஒருவரையும் சொல்லத் தெரியா . என்ன தப்பிதம் செய்தாலும் ஒரு சேவகனையும் கோபிக்கமாட்டாள். பிறர்காரியம் சரியாய்ச் செய்யாவிட்டால் அதற்குத் தான் வருந்துவாள். தன் புருஷன்வந்தால் தன் காரியம் சரியாய் இருக்கிறதென்று சொல்லவேண்டும் என்ற ஆசைக்கு அளவில்லை. "நீ செய்வது ஒன்றும் சரியில்லை; வேலைவாங்கக்கூடத் தெரியாத பெண் பிள்ளைகளும் வீட்டில் இருக்கிறார்களே! அதுதான் ஸ்வாரஸ்யம்!!" என்று சிரித்துக்கொண்டே சுடாமல் சுடுவார். அவ்வாறு அவர் வாயிலிருந்து வராமல் இருக்க வேண்டுமே என்று ஒவ்வொரு விஷயத்தையும் தானே நேரில்போய்ப் பார்த்து அவற்றிற்குத் தக்கபடி உத்தரவு அளிப்பாள். எவ்வளவு சமயங்களில் எங்கள் முட்டாள் தனத்துக்காக ஞானம்பிகை சிக்கிக் கொள்ளுகிறாள் !!.

முன் பாராக்களில் சொன்ன விஷயங்கள் நடந்து 4 தினங்களுக்குமேல் ஆய்விட்டன. களைபிடுங்கிக் கொத்திவிட்டு வாய்க்கால் வெட்டி, வரப்புகள் பணித்துச் சீர்ப்படுத்தி செடி கொடி கத்தரித்து நேர்ப்படுத்தினோம். நாலாம் நாள் வேலை கிட்டத்தட்ட முடிந்துவிட்டது. என் மருமகன் (தோட்டக்காரன்) "மாமா இவ்விடமெல்லாம் நன்றாய் இருக்கின்றதா ? அம்மா சரியென்று ஒப்புக்கொள்வாளா ?".

"நான் "சரிதான்—அம்மாள் ஒப்புக்கொண்டு என்ன பிரயோஜனம். ஐயர் வருகிறார்; அவர் பார்த்து சரியென்றால் சரி; இன்னும் ஒருவேலை பாக்கி; கொடி வீட்டில் எட்டுக்கால் பூச்சிகள் அதிகம். அவை எவ்விடத்தில் வேண்டுமென்றாலும் கூடுகட்டுகின்றன. அவற்றை யெல்லாம் விலக்கி சுத்தம் செய்ய வேண்டும். செய்துவிட்டு என்னிடம் வா. வீதியில் எனக்கு வேலை யிருக்கிறது" என்று நான் மட்டும் வீதிக்குப் போய்விட்டேன்.

மணி சாயங்காலம் 5 ஆயிற்று. வண்டி ரயில்வே ஸ்டேஷனுக்குப்போய் இருக்கிறது. இன்னும் வரவில்லை. மேல் மாடியில் மேற்புறத்து அறையின் சன்னல் வழியாய் ஞானம்பாள் மட்டும் எதையோ உற்றுப்பார்த்துக்கொண்டிருக்கிறாள். நானோ இடம் விட்டு நகரவில்லை. ரயிலிலிருந்து இறங்கி வருகிறவர்கள் 5 மணிக்கே இவ்விடம் வந்து விடவேண்டும். மணியோ 6 ஆயிற்று. இன்றைக்கு வண்டி லேட்போல் இருக்கிறது ! மாடியில் இருந்து ஞானம் இறங்கி வீதிவாசற்படிக்கு வந்துவிட்டாள். சாவித்திரி யம்மன் முன்னமேயே வீதி வாயிலில் நின்றுகொண்டிருக்கிறாள். பிரேமநாதர் திண்ணையில் கம்பீரமாய் நாற்காலியில் படுத்துக்கொண்டு இருக்கிறார். வெங்கடன் என்னும் இடைப்பையன் விசிறிக்கொண்டு நிற்கின்றான். நானும் திண்ணையின் கீழே நின்றுகொண்டு இருக்கிறேன். தூரத்திலேயே வண்டி வருகிற சத்தம் கேட்கின்றது. "சுவாமி நமது வண்டியும் வருகிறது" என்கிறேன் எஜமானிடம்.



வண்டி பக்கத்தில் வந்துவிட்டது. வண்டிக்காரன், நாராயணன், புன்சிரிப்புடன் ஓட்டி வரும்போதே வரவேண்டியவர் வந்துவிட்டனர் என்பது புலப்படுகின்றது. வந்து வீதியில் நின்றதும் ஓடினேன், கதவைத் திறக்க, ஒரே அடியாய்க் கதவு திறந்தது, ஒரு குதிகுதித்து செல்வப்பிள்ளை நடராஜன், வெளிக்கிளம்பி சாவித்திரியம்மையின் ஆலிங்கனத்தில் மூழ்கினான். மாப்பிள்ளை சந்திரசேகரர் மெதுவாய் இறங்கி "நாராயணா தகரப்பெட்டியை வெகு ஜாக்கிரதையாய் எடுத்து வைக்கவேண்டும்" என்று சொல்லிவிட்டு, தன் மாமனாருக்கு நமஸ்காரம் பண்ணிவிட்டு எதிரில் நின்றார். அவர் ஆசீர்வாதம்செய்து க்ஷேமசமாசாரம் விசாரித்தார். அவருக்கு பதில் சொல்லிவிட்டு, சாவித்திரியம்மைக்கும் வந்தனம் செய்துவிட்டு மேல்மாடிக்குப் போய்விட்டார். ஞானம்பிகை பின் தொடர்ந்தாள் என்பது ஒருவருக்கும் தெரியவில்லை.

இதற்குள் குழந்தை நடராஜன் தாயாரிடத்தில் கொஞ்சிவிட்டுத் தகப்பனாரிடம் வந்தான். "ராஜா என்னடா சமாசாரம் ? படிப்பு ஏதாவது நடக்கிறதா ? விளையாடுகிறாயா ? பட்டணம் எப்படி இருக்கிறது? சொல்லு பார்க்கலாம்" என்றார். நடராஜன் "அப்பா நன்றாய்ப்படிக்கிறேன். எல்லாப் பரிக்ஷையும் தேறிவிட்டேன் என்று வாத்தியார் சொல்லுகிறார்" என்று அவருக்கு நமஸ்காரம் செய்துவிட்டு பக்கத்தில் உட்கார்ந்தான். அதற்குள் நாராயணன் தகரப்பெட்டியை அதிக ஜாக்கிரதையாய்த் தூக்கிச்சென்றான். அதைக் கண்ட நடராஜன் "அப்பா இந்தப் பெட்டியில் அத்திம்பேர் ஒரு குழாய் வைத்து இருக்கிறார். அது பெரியதாய் இருப்பதுடன் இரண்டு பக்கமும் கண்ணாடியால் அடைத்து இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு மானத்தைப் பார்த்தால் கொள்ளைகொள்ளையாய் நக்ஷத்திரம் தெரிகின்றன. பூமியில் உள்ள வஸ்துக்கள் மிகப் பக்கத்தில தெரிகின்றன. சந்திரன்கூட ஓட்டுக்கிட்டே வந்துவிடுகிறது. நீ பார்த்து இருக்கிறாயா அப்பா இந்தமாதிரி" என்றான். தகப்பனார் பிள்ளை சொல்வது இன்னதென்று தெரிந்துகொண்டு "நீ எப்பொழுது அதைப் பார்த்தாய் என்றார் ?" நடராஜன் "எத்தனையோதரம் ! இராத்திரி யெல்லாம் அத்திம்பேர் அதையேதான் பார்க்கிறார். படித்து முடிந்து போனபின் வேறுவேலை யில்லாவிட்டால் மேல் மாடிக்குப் போய்விடுகிறார். யாரோ ஒரு துரைகூட அத்திம்பேரிடம் அடிக்கடி வருகிறாரே—"

பிரேமநாதர் "அப்படியா; சரி, உள்ளே போய் கைகால் அலம்பிக்கொண்டு ஏதாவது பக்ஷணம் வாங்கிக்கொள், போ" என்று அனுப்பிவிட்டார்.

தன் மாப்பிள்ளைக்கு கணித சாஸ்திரத்தில் அதிக பயிற்சி யென்பதும் முதல்வகுப்பிலேயே அவர் பி.ஏ. பரிக்ஷைதேறிவிட்டு தங்கப்பதக்கம் பெற்றார் என்பதும், இளம்பிராயம் முதல் அவர் நக்ஷத்திரங்களைப் பார்ப்பதும் அவற்றை எண்ணுவதும், அளவிடுவதும் ஆகிய இக்காரியங்களில் விருப்பம் அதிக மென்பதும் அவருக்கு நன்றாய்த்தெரியும். தன்னிடம் மிஞ்சிய பணத்தில் ஒரு தூர திருஷ்டிக்கண்ணாடி வாங்கவேண்டுமென்று சந்திரசேகரன் சொல்லிக்கொண்டு இருந்ததும் அவர் பலநாள் கேட்டு இருக்கிறார். ஆகையால் நடராஜன் சொன்ன குழாய் தூரதிருஷ்டிக் கண்ணாடிதான் என்பது அவருக்கு விளங்கிற்று. ஆயினும் இரவெல்லாம் அதை வைத்துக்கொண்டு ஆகாயத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறான் என்று நடராஜன் சொல்லக் கேட்டதும் அவருக்கு சற்று மனவருத்தம் உண்டாயிற்று. "இம்மழை

காலத்திலும் பனிக்காலத்திலும் அதிகமாய்த் தூக்கம் விழித்துக்கொண்டு பனியில் நனைந்தால் உடம்பு என்னவாகும்!!—சாந்தமாய் சமயம்பார்த்துச் சொல்லவேண்டும்" என்று முணுமுணுத்துக் கொண்டே உள்ளே சென்றுவிட்டார்.

☞ வாயில்காப்போன்.

## பெண்கள் டிரெய்னிங் ஸ்கூல்களில் தொழிற்படிப்பு.

"வாத்திமார்களாகப் பெண்கள் பயிற்சிபெறும் ஸ்கூல்களில் அவர்களுக்குத் தொழிற்படிப்பு கற்பிக்கவேண்டி சென்னைக் கவர்ன்மெண்ட் பின்வருகிறபடி உத்தரவு செய்திருக்கிறார்கள்:—குண்டூர், எழும்பூர், ராயப்பேட்டை கள்ளிக்கோட்டை, கோயமுத்தூர், ராஜமகேந்திரபுரம், மங்களூர் இந்த இடங்களிலுள்ள பெண் டிரெய்னிங் ஸ்கூல்களில் தொழிற்படிப்புக் கற்றுக்கொடுக்கும் வகுப்பு ஸ்தாபிக்கப் படலாமென்றும், தொழிற்படிப்பு ஸ்கூல்கள் தனியாய் ஸ்தாபிக்கப்படும் விஷயத்தைப்பற்றி மேற்கண்ட இடங்களிலுண்டாகும் அனுபோகத்தைக் கொண்டு பின்னால் முடிவு செய்யலாமென்றும் வித்தையிலாகாத் தலைவர் சிபார்சு செய்திருந்தார். இந்த வகுப்புகளில் புதிதாய் சம்பளம் வாங்கவேண்டிய தில்லையென்றும் தொழிற்படிப்பு தற்போது ஊசிவேலை சரிகைவேலை, பூவேலை, சமையல், உள்பட வீட்டு நிர்வாகம் இவைகளாக இருக்கலாமென்றும் சொல்லியிருந்தார். மாடல் ஸ்கூல்களில் 3-ஆவதும் அதற்கு உயர்ந்தவைகளுமான வகுப்புப் பெண்களும் டிரெய்னிங் வகுப்புகளிலுள்ள எல்லாப் பெண்களும் மேற்கண்ட வகுப்புகளில் எதையாவது வாரத்துக்கு மூன்று மணிக்குக் குறையாமல் சேர்ந்து கற்றுக்கொள்ளலாமென்றும், சொல்லப்பட்டிருந்தது. நல்ல யோக்கியதையுள்ள இந்தியஸ்திரீகள் 6 அல்லது 7-வது ஸ்டான்டர்ட்களில் படித்திருந்தால் அவர்களையும் சம்பளமில்லாமல் சேர்த்துக் கொள்ளலாம். இவர்களுக்கு ஸ்காலர்ஷிப்புகள் எவையும் வேண்டியதில்லை. இப்படி சிபார்சு செய்திருந்ததை சென்னைக் கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டுவிட்டார்கள்.

நமது கவர்ன்மெண்ட் புதிதாய் எது செய்தாலும் அதிகக் கவலையுடன் செய்வது வழக்கம். இந்த வழக்கத்தை யனுசரித்துப் பெண் வாத்தியார்களுக்குத் தொழிற்படிப்பு கற்பிப்பதிலும், அது நிறைவேறுமோ, நிறைவேறாதோ என்கிற கவலைகொண் டிருக்கிறார்களென்று தெரிகிறது. மேற்கண்ட ஸ்கூல்களில் ஊசிவேலை, ஜரிகைவேலை, பூவேலை இவைகளிலும் வீட்டு நிர்வாகத்திலும் படிப்பு கற்பிக்கலாமென்று செய்திருக்கிறார்கள். இவைகளைப்போல உபயோகமான வேறு தொழில்களிற் சிலவற்றையும் கற்பிக்கலாமென்று நமக்குத் தோன்றுகிறது. உதாரணமாக, ஹோஸியரி அதாவது பனியன், சொக்காய், கால் மேல்ஜோடு, குல்லாய் முதலிய வேலைகள் பெண்களுக்குச் சொல்லிவைத்தால் உபயோகமா யிருக்குமென்று தோன்றுகிறது" என சுதேசமித்திரன் அபிப்பிராயப்படுகிறது. இதன் பத்திராதிபரின் சிறந்த அபிப்பிராயத்தை அநுசரித்து வித்யா அதிகாரிகள் நடந்தால் பெண்களுக்கு பெருத்த லாபகரமாயிருக்கும்.



## சென்னையில் படிப்பு.

"சென்னை ராஜதானியைச் சேர்ந்த பொதுக்கல்வி விஷயமாய் வெளியான ரிப்போர்ட்டின்படி ராஜதானியிலுள்ள பாடசாலைகளின் மொத்தத் தொகையும், அவைகளில் படிக்கும் வித்யார்த்திகளின் தொகையும் அதிகரித்திருக்கின்றன. அனேக செக்கன்டெரி பாடசாலைகள் பிரைமெரிப் பாடசாலைகளாகத் தாழ்த்தப்பட் டிருக்கின்றன. 362 எண்கொண்ட செக்கன்டெரி பாடசாலைகள் 340 ஆக இருக்கிறது. இச்செக்கன்டெரி பாடசாலைகளில் படித்துவரும் வித்தியார்த்திகளின் தொகைமுன் 10,1,082 ஆக இருந்தது, இப்பொழுது 96074 ஆகக் குறைந்திருக்கிறது. முந்தி 4242 உபாத்திமார்கள் இவைகளில் அமர்ந்திருந்தனர். இப்பொழுது அவர்களின் தொகை 4250. சாஸ்திர காலேஜ்களில் படிக்கும் மாணவர்களின் தொகை கொஞ்சம் குறைந்துவிட்டது. செக்கன்டெரி படிப்பு எல்லா விஷயத்திலும் அதிகவிருத்தியடைந் திருக்கிறது. அருத்தமின்றிப் பொட்டை உருப்போடும் வழக்கம் நின்றுகொண்டு வருகின்றது. புத்தி, யுக்தி, கவனம், ஜாக்கிரதை, சுத்தம் முதலியவைகள் நாளுக்குநாள் வித்யார்த்திகளினிடம் விருத்தியாய் வருகின்றன. சித்திரப் படிப்பு, தேகப்பயிற்சி இவைகளின் விஷயமாய் அதிக சிரத்தை எடுத்துக் கொள்ளப் படுகின்றன.

பிரதமப் படிப்பு அதிக அபிவிருத்தி யடைந்திருக்கிறது. இப்பொழுது முன்னிருந்ததைவிட 330 எலிமெண்டெரி பாடசாலைகள் அதிகமாக இருக்கின்றன. அதில் பயிலும் மாணவர்களும் ஏராளமாக அதிகரித் திருக்கின்றனர். பிரைமெரி பாடசாலைகளுக்குப் போதனு முறையிற் பயின்ற உபாத்திமார்களையே தெரிந்தெடுக்கிறார்கள். ஆனால் இன்னும் அனேக விஷயங்களைப் பிரதமப் பாடசாலைகளின் அபிவிருத்தி விஷயமாய்க் கவனித்து வரவேண்டியனவா யிருக்கின்றன. பெண்கள் பாடசாலைகளின் அபிவிருத்தி விஷயத்திலும் அப்படியே. போதனுமுறை பயின்ற உபாத்தினிமார்களை நியமனஞ் செய்தால், விருத்தி அதிகமாகும். ஆண்பிள்ளைகளின் பாடசாலைகளில் உபாத்திமார்களை நியமனஞ் செய்துவருவதில் எந்தெந்த விஷயங்கள் கவனிக்கப் படுகின்றனவோ அவ்விஷயங்கள் அனைத்தும் பெண்கள் பாடசாலைகளிலும் கவனித்து வரும்படியான வழிகள் அனுசரிக்கப்பட்டுவருகின்றன. தொழிற் பாடசாலைகளின் மானேஜ்மெண்டு வித்யா இலாகாவுக்கு மாற்றப்பட்டுப் போயின. சித்திர கலாபோதனைச்சாலை இவைகள் அனைத்தும் அதிக திருப்திகரமான வேலையைக் காட்டியிருக்கின்றன.

பெண்கள் கல்வி, பிரதம கல்விக்குமேல் போகிறதில்லை, இது அபிவிருத்தியாகும்படி கவர்ன்மெண்டார் ஏற்பாடுசெய்துவருகின்றனர்.

ஐரோப்பிய பாடசாலைகளில் நடந்தேறும் படிப்பு அவ்வளவு திருப்திகரமாக இல்லை. ஐரோப்பிய பாடசாலைகளின் விஷயமாய் செய்துவரும் செலவு அதிகரித்திருக்கிறது.

மகம்மதிய பாடசாலைகள் விருத்தியடைந் திருக்கிறதாகத்தெரியவில்லை. பஞ்சமர்களின் வித்யாபி விர்த்தியும் அதே மாதிரிதான்.

போதனுமுறைப் பாடசாலைகளில் பயின்ற உபாத்திமார்களை வைத்து, பாடசாலைகளில் கல்வி கற்பிக்காத குறையே ஐரோப்பியருள் படிப்பும் பெண்கள் படிப்பும் செக்கண்டெரி படிப்பும் அவ்வளவாக விருத்தியடையாததற்குக் காரணமாகும்."

## கலப்படஞ் செய்யப்பட்ட பால்.

"லாபத்தை உத்தேசித்து உணவுப்பொருள்களைக் கலப்படஞ்செய்வது மிகவும் ஸாதாரணமாக விருக்கிறது. பப்ளிக் அனலிஸ்ட் அதாவது பரிசோதகர்களிடத்தில் வரும் கலப்படஞ் செய்யப்பட்ட உணவு பதார்த்தங்களில் முக்கியமானது பால். வியாபாரிகளும், விற்பவர்களும் பாலைக்கலப்படஞ் செய்ய பின்வரும் முறைகளில் ஏதாவது ஒன்றை அநுஷ்டிக்கிறார்கள்.

(1) பாலில் ஜலத்தைச் சேர்த்தல். இது மிகவும் ஸாதாரணம். அனேகமாய் கறக்கும் ஸமயத்தில் ஸமீபத்திலிருந்து வாங்கினாலொழிய நல்ல பால் கிடைப்பது அரிது.

(2) பாலிலிருந்து ஏடையெடுத்துவிடல். பாலைக் காயவைத்து மேலாக நிற்கும் ஆடையை யெடுத்து விட்டு நல்லபாலென்று சிலர் விற்கிறார்கள். யந்திரத்தால் பாலிலுள்ள எல்லாக் கொழுப்பையும் எடுத்துவிட்டு ஏடெடுத்த பாலை நல்லபாலென்று வேறு சிலர் விற்கிறார்கள். மற்றும் சிலர் ஏடெடுத்த பாலை நல்ல பாலுடன் கலக்கிறார்கள். பாலிலிருந்து ஏட்டை யெடுத்துவிட்டு ஜலத்தையும் சேர்க்கிறதுண்டு.

(3) பால்ரொம்ப நாளைக்கிருக்கும்படி போரிக்ஆஸிட் அல்லது வெண்காரத்தைச் சேர்த்தல். சிலர் "பார்மலின்" என்ற கெடுதலான சரக்கைச்சேர்ப்பது முண்டு

(4) பால் வாங்குபவர்களை ஏமாற்றவேண்டுமென்ற எண்ணத்துடன் பார்வைக்குத் தடிப்பும் நல்ல நிறமும் கொடுக்கக்கூடியதுமான பதார்த்தங்களைச் சேர்த்தல்.

(5) சில பசுக்கள, பாலில் எவ்வளவு கொழுப்பு, சர்க்கரை, ஜலம் முதலியவை யிருக்கவேண்டுமோ, அவ்வளவு அளவுள்ள பாலைக் கொடுக்கிறதில்லை. இதற்குக்காரணம் ஸொந்தக்காரர்கள் அவைகளுக்கு ஸரிவர தீனி போடாமலிருப்பதாலும், அவைகளை ஸரிவர கவனிக்காம லிருப்பதாலுந்தான். இதனால் பாலில் கொழுப்பு குறைவாகவாவது அல்லது தண்ணீர் அதிகமாகவாவது இருக்கிறது. விற்பவர்கள் பாலைக் கறந்து நல்லெண்ணத்துடன் விற்றாலும் ஸ்வயப்பிராலுக்குள்ள குணங்களில்லாததால் அவைகளைக் கலப்படஞ் செய்யப்பட்ட பாலென்றே எண்ணவேண்டிவருகிறது."



## தர்மமே ஜயம்.

வெகுகாலத்திற்குமுன், ஒரு மராட்டி அரசன் அழகிலும் சம்பத்தி
லும், விவேகத்திலும், பராக்கிரமத்திலும், ஜனங்களிடத்தில் தயவிலும் எல்
லா அரசரைக்காட்டிலும் உயர்ந்தவனாயிருந்தான். அவனுக்குப் பலவிதத்தி
லும் சமானமாகிய பன்னிரண்டு பத்தினிமார்கள் இருந்தார்கள். இவர்க
ளோடு சுகமாக வாழ்ந்துகொண்டிருந்த அந்த ராஜாவுக்கு, ஒருத்தியினிடத்தி
லாவது புத்திரனுண்டாகவில்லை. அதைக்குறித்துச் சுதேசத்திலும் அந்நிய
தேசங்களிலுமுள்ள சமஸ்த தேவஸ்தலங்களுக்கும், கோவில் கோபுரமண்டபப்
பிரகாரவாபி தடாகம்முதலான சீரணோத்தாரணமான திருப்பணிகளாலும்,
அபிஷேக நைவேதன உற்சவமுதலான நித்திய நைமித்தியங்களும், நோன்பு
பிராம்மணபோஜனம், புராண விசாரணம், அக்கினிபூஜை, தானங்கள் முத
லான தருமங்கள் செய்தும் சந்தானம் உண்டாகவில்லை. பின்பு வெகுநாள்
கழித்து மந்திரிப் பிரதானிகள் சேனைகளுடனே தேச சஞ்சாரம் பண்ணும்
போது, ஒரு தேசத்து நடுவில் புஷ்பச்செடிகளும், சுற்றி நிழலுள்ள மரங்
களுமுள்ள ஒரு தோப்பு காணப்பட்டது. அதில் பிரவேசித்துச் சுற்றிப்பார்
க்குமிடத்தில் இரண்டடி உயரமுள்ள கத்தரிச் செடிபோல இலை, பூ ஒன்று
மில்லாமல் நூற்றொரு காயோடு கூடின ஒரு செடியைக் கண்டு, மந்திரியைப்
பார்த்து: இந்தச் சிறியசெடி இலை, பூ ஒன்றுமில்லாமல் நூற்றொரு காயோடு
கூடியிருக்கிறது என்ன காரணம்? இதற்கு நீ என்ன சொல்லுகிறாயென்று
கேட்க, அப்போது மந்திரி: மகாராஜாவே, நான் சொல்லுகிறது உமக்குப்
பொய் என்றாவது, பரிகாசமென்றாவது, காலத்தினாற் சொன்னேனென்றா
வது தோன்றினபோதிலும், என்னிடத்தில் கோபம்செய்து, என்னை சிக்ஷை
செய்யவில்லையென்று அபயப்பிரதானம்பண்ணினால் அதன் விவரங்களை விச
தப்படுத்துவேன் என, அப்போது அரசனும் அப்படியே அபயப்பிரதா
னம் பண்ணினேன், சொல்லென, மந்திரி சொல்லுகிறான்:

இந்தத் தோட்டவேலைக்காரனுக்கும் பூம்பாவை என்கிற ஒரு பெண்
ணிருக்கிறாள். அந்தப் பெண்ணை யார் கலியாணம் பண்ணிக் கொண்டாலும்
அவருக்கு அவளிடத்தில் நூறு பிள்ளையும் ஒரு பெண்ணும் பிறக்குமென,
அப்போதரசன்: அந்தப்பெண்ணை எவ்விதமாயாவது யான் கலியாணம்பண்
ணிக்கொள்ளவேண்டும்; அதற்கு உபாயம் சொல்லென்று கேட்டான். அத
ற்கு மந்திரி: மகாராஜாவே, உம்முடைய சேனைகளையெல்லாம் அனுப்பிவிட்டு
நீரும் ஊருக்குப் போய்விடுகிறதாய் விளம்பரஞ் செய்வித்து, நீர் மாத்திரம்
இவ்விடத்திலேயே சிலநாள் வரையில் மறைந்திருந்தால், அந்தப்பெண் இந்த
வனத்தில் வந்து பூ முதலானவை எடுக்கும்போது பார்க்கலாம்; அப்போது
உபாயம் செய்து சுவாதீனம் பண்ணிக் கொள்ளலாமென்று சொன்னான்.
அதைக் கேட்ட அரசன், தன்னுடைய சேனை பரிவாரமுதலான யாவற்றை
யும் பட்டணத்திற்கு அனுப்பிவிட்டுத் தான் மாத்திரம் இருக்க, சிலநாள் கழி
த்து அந்தப் பூம்பாவை என்கிற பெண் அந்தப் புஷ்பவனத்தில் புஷ்பமெடு
த்துக்கொண்டிருக்கும்போது ராஜா சமீபத்தில் போனான். அவ்விடத்திலிருக்
கிற மனிதர்கள் காட்டில் வசிக்கிறவர்களாகையால், அதிக அழகும் தேஜஸு
முள்ள இந்த ராஜாவைப் பார்த்து அச்சமுற்று, வீடுகளில் போய் ஒளித்துக்
கொள்ள, இந்தப் பெண்ணும் இவனுடைய அபூர்வமான ரூபத்தைக் கண்டு

பிரமித்து, விரைவாக வீட்டுக்குப் போக, ராஜாவும் விரைவாகப் பின் சென்
றான். அப்போது அந்தப்பெண்ணினுடைய அன்னநடையையும், குதிகாலில்
புரளுகிற தலைமயிர் பின்னலையும், தேவர் முதலானவர்களும் மோகிக்கும்
படியான அழகையும் பார்த்து, ஆசையுடன் பின்தொடர்ந்துபோக, அந்தப்
பெண் வீட்டுக்குள்ளே நுழைந்து தெருக்கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்
கொண்டாள். உடனே ராஜாவும் போய்க்கதவை இடிக்க, அந்தப் பெண்ணுக்
குத் தகப்பன்: நீ யார், ஏன் கதவை இடிக்கிறாயென்று கேட்க, அதற்கு அர
சன்: நான் இந்த தேசாதிபதியாகிய ராஜா, உன் பெண்ணினிடத்தில் ஆசை
கொண்டு விவாகஞ்செய்துகொள்ள வந்திருக்கிறேனென்று சொல்ல, அந்தப்
பூந்தோட்டக்காரன்: நல்ல மோசமான சொற்கள சொல்லுகிறாய், எங்கள்
ராஜா இப்போது வெகுதூரம் போயிருப்பார்; நீ ராஜனல்ல போ, இந்தப் பரி
காசமான பேச்சு என்னிடத்திலேயா பேசுகிறாய்? ராஜாவானால் உன்மட்டு
மிருக்கட்டும், நான் எளியவனானாலும் என் பெண் விஷயத்திலும் என் விஷ
யத்திலும் இப்படி ஹீனமான சொல்லைச்சொல்ல நான் இடங்கொடேன்;
போபோவென்று சொல்ல, அப்போது ராஜன்: நான் இந்தத் தேசாதிபதி
தான், நான் இருப்பதாகத் தெரிந்தால் இந்த வனத்தில் வசிக்கின்ற உங்கள்
ஜனங்கள் வெளியில் வரமாட்டார்களென்று ஊருக்குப் போவதாக எங்கும்
பறையறைவித்து ஒளித்திருந்தேன். அந்தத் தோட்டத்தில் இலை, பூ இல்லாத
நிறைந்த காயுடன் ஒரு சிறிய செடியைக் கண்டேன்; அதன் விவரம் மந்திரி
மூலமாய் அறிந்து, உன்னுடைய பெண்ணையும், அவளால் எனக்கு உண்டா
கப்போகிற சந்ததி முதலான சவுக்கியங்களும் தெரிந்துகொண்டு தனித்திரு
ந்து, உன் பெண்ணையும் அவ்விடத்தில் பார்த்து அவளைப் பின்சென்று உன்
வீட்டுக்கு வந்தேன்; அவளை விவாகஞ் செய்துகொண்டு, பட்டணத்திற்கு
அழைத்துக்கொண்டு போவேன்; நான் ராஜன்தான், சத்தியமாகவே சொல்
லுகிறேன்; கதவைத் திற, உன் பெண் தாழ்ந்த ஜாதியென்று அவளை அவ
மானம் செய்கிறதில்லை; அவளையே பட்டஸ்திரீயாக வைத்துக்கொள்ளு
கிறேனென்று சொல்ல, அந்தத் தோட்டக்காரனும் நம்பிக் கதவைத் திறந்து
பார்த்து ராஜாவென்று நிச்சயம் தெரிந்துகொண்டு, அந்தப் பெண்ணை அவ
னுக்கே விவாகஞ் செய்துகொடுத்து, அந்த ராஜாவுடன் அனுப்பிவிட்டான்.

அந்த ராஜா இந்தப்பூம்பாவை என்கிற பெண்ணை அழைத்துக்கொண்டு
பட்டணம் வந்து சேர்ந்தான். முன் சொல்லிய பன்னிரண்டு பேர்களான
ராஜஸ்திரீகள், தாழ்ந்த ஜாதியில் ஒருபெண்ணை விவாகஞ் செய்துகொண்டு
நமக்குச் சரியாக வைக்க அரசன் யோசித்திருக்கிறது எவ்வளவும் சரியல்ல;
இவள் விஷயத்தில் ஏதாவது துஷ்டகாரியங்கள் செய்து ராஜாவை அவமா
னம் பண்ணவேண்டுமென்று யோசித்தார்கள். இதை ராஜா அறிந்துகொண்டு
வேறே உப்பரிகை கட்டி, அதில் இந்தப்பெண்ணை வைத்து வெகுகாலம் சம்
ரக்ஷணை பண்ணிக்கொண்டு வந்தான்.

அப்படியிருக்க, அந்த ராஜனுக்கு ராஜகாரியமாக அதிக தூரதேசத்துக்
குப் போகவேண்டிய அவசியம் நேரிட்டது. அப்போது அந்தப் பூம்பாவை
என்கிற பெண்ணைப் பார்த்து: நான் தூரதேசம் போகவேண்டியிருக்கிறதா
கையால் உனக்கு ஏதாவது சங்கடம் நேரிட்டால் இந்த மணியை அடி, நான்
எங்கிருந்தபோதிலும் வந்து உன் சங்கடத்தை நீக்கிவிடுகிறேனென்று சொ
ல்லி, தங்கத்தினாற்செய்த ஒரு மணியைக் கையில் கொடுத்துவிட்டுத்தானும்
பிரயாணப்பட்டுப்போனான். அந்தப் பெண் இந்த ராஜா அரைநாழிகை வழி



தூரம் போகிறதற்குள்ளாகவே இந்த மணியை அடித்தால் தூரத்திலிருக்கிற
வனுக்கு எப்படிக்கேட்கும், அவன் மெய்யாகவே வருவானாவென்று சந்தே
கித்து மணியை அடித்தாள். அதுகேட்டு ராஜன் ஓடிவந்து: பெண்ணே,
என்னசங்கடம் வந்ததென்றுகேட்க, அதற்கு அந்தப் பெண்: என்னுடைய
சங்கடகாலத்தில் இந்த மணியை அடித்தால், அதுகேட்டு ராஜா வருவாரா
வென்று சமுசயித்துப் பரீட்சைக்காக அடித்தேன் என்றாள். அதற்கு ராஜா
இனிமேல் சமுசயிக்கவேண்டியதில்லை யென்று சொல்லிவிட்டுப்போனான்.
ராஜன் இரண்டுநாழிகை வழிதூரத்திற் போகும்போது திரும்பியும் சமுசயி
த்து மணியை ஒருதரம் அடித்தாள். அதைக்கேட்டு ராஜா மறுபடியும்வந்து
பெண்ணே, என்னசங்கடம் வந்ததென்று கேட்க, ராஜாவே, நீர் மிகவும்
தூரப்போனால் எப்படிக் கேட்குமென்று சந்தேகித்து அடித்தேன் என,
அரசன்: பெண்ணே, இனிமேல் இப்படி சங்கடமில்லாதகாலத்தில் வீணாக
அடிக்கவேண்டாமென்று சொல்லிவிட்டு நடந்துவிட்டான். அப்படியிருக்க,
வெகுதூரமுள்ள ஒரு தேயத்தருகில் போய்க்கொண்டிருக்கும்போது திரு
ம்பியும் ஒருதரம் மணியை அடித்தாள். அது கேட்டு ராஜா அதிவேகமாய்
வந்து, பெண்ணே, உனக்கு இடர் என்ன வந்ததென்று கேட்க, ஓ என்
பிராணநாயகனே, என்தேகத்திற்குள் என்னமோ சொல்லத் தெரியாத ஒரு
துன்பம் செய்கிறது; அதனால் தேகம் தெரியாமல் அடித்துவிட்டேனென்று
சொல்ல, ராஜன் முகத்தைக் கடுத்துக்கொண்டு தலைமயிரில் கிள்ளுகிறது
போல ஒருவிடத்தில் மயிரை இழுத்துவிட்டுக் கோபித்துக்கொண்டு நடந்து
விட்டான்.

பின்பு சிலநாளையில் கர்ப்பமாயிருந்த அந்தப் பெண்ணுக்கு ஒவ்வொன்
றாக நூறு பிள்ளைகளும், ஒரு பெண்ணும் பிறந்தது. அவைகளைத் தனித்
தனியாய் ஒவ்வொரு தொட்டிலில் வளர்த்தி சீராட்டிக்கொண்டுவருகிற சமா
சாரத்தை ராஜபத்தினிகள் பன்னிருவரும் கேள்விப்பட்டு, முன்னமே அவ
ளிடத்தில் ராஜா போகப்ரீதியாயிருந்தார்; இப்போது பிள்ளைகள், பெண்,
இவர்களைப் பார்க்கும்பொழுது அவளையே முக்கியப்படுத்திக்கொள்வாரெ
ன்று யோசித்து, இந்தக்குழந்தைகள் எல்லாவற்றையும் நாசம்செய்துவிட்டு,
அவள் வித்தைக்கள்ளியென்று தொட்டிலில் அழகாய்விட்டிருந்த குழந்தை
களைக் கல்லாகச் செய்துவிட்டாளென்றும், வெகு மோசக்காரியென்றும் ரா
ஜாவந்தவுடன் கலகஞ்செய்து இவளை ராஜாவைக்கொண்டே நீக்கிப்போட
வேண்டுமென்று யோசித்து, தங்களிடத்தில் வெகுநாளாயிருந்து தங்களுக்கு
வேண்டியவளான அவளிடத்தில் போயிருக்கிற ஒரு தாதியை அழைப்
பித்து, அவளுடன், ஏகாந்தமாக இந்தக் குழந்தைகளையெடுத்து வீட்டிற்குப்
பின்னாலிருக்கும் குப்பையிலெறிந்துவிட்டு, அந்தத் தொட்டில்களில் நீளமா
யும் குண்டாயும் இருக்கிற கல்லை வைத்துவிடென்று சொன்னார்கள். அந்த
வேலைக்காரியும் நானும் அப்படியே யோசித்திருக்கிறேனென்று சொல்லி,
அந்தப்பெண்ணிருக்கும் உப்பரிகைக்குப் பின்பக்கத்தில் வெகு பெருச்சாளி
வலைகளுள்ள குப்பையில் அவளுக்கு ஓசைகேளாமல் ஒவ்வொன்றாய்
எறிந்துவிட்டு, இவைகளைப் பெருச்சாளியும், பருந்துகளும், நாய்களும்
கொண்டு போய்விடுமென்று யோசித்துக்கொண்டு, தொட்டிலுக்கு ஒரு கல்
விழுக்காடு நீளமாயும் குண்டாயுமிருக்கிற கல்லுகளை வைத்துவிட்டு அந்த
ராஜபத்தினிகளுக்குத் தெரிவித்தாள்.

(இன்னும் வரும்) ஐ. வி.

## சமாச்சாரக்குறிப்பு.

ஏப்ரல்மீ 4வ சுரங்கக்கலகத்தால் சோற்றுக்கு வழியின்றி வருந்தும் ஜனங்களின் உதவிக்காக வேல்ஸ் இளவரசர் 500 பவுன் நன்கொடை அளித் திருக்கிறார்.

---

ஏப்ரல்மீ 8வ பஞ்சாப் லெப்டினண்ட் கவர்னரின் மனைவி லேடி டேன் தினம் மிஸ்ஸஸ் சாரளாதேவி சௌதாரணியின் வீட்டில் லாகூர் இந்திய மாதர்கள் சிலரை அவர்கள் கேட்டுக்கொண்டபடி சந்தித்து அவர்கள் நடத் தும் உல்லாசக் கச்சேரியில் கலக்கப்போகிறார்.

---

ஓர் நூதன மெத்தை.—படுத்துத் திரும்பும் போதெல்லாம் அந்த அந்த பக்கத்துக்குக் காற்றை யெழுப்பி வீசிக்கொண்டிருக்கும் புதுவகை மெத்தை யொன்று அமெரிக்காவிலே அமைக்கப்பட்டிருக்கிறது. வீசுங்காற்று விசிறி யால் வீசிப்பெறும் ஸுகத்துக் கொத்திருக்கிறதாம்.

---

அலகாபாத்து ஹைகோர்ட்டு ஜட்ஜ மிஸ்டர் ஜஸ்டிஸ் கரமத்ஹுஸேன் இந்தியாவில் மகம்மதியப் பெண்கல்வி அபிவிருத்தி விஷயத்தில் அதிக ஊக்க மும் சிரத்தையும் கொண்டவர். இவர் மகம்மதியப் பெண்கல்வி அபிவிர்த்தி யின் விஷயமாய் 1,80 000 ரூபாய் நன்கொடையாக அளித்திருக்கின்றனர். இந்த சாஸ்வத பண்டு "கரமத்பண்டு" என்ற நாமத்துடன் விளங்கிவரும்.

---

மனிதனைச் சுமந்து செல்லும் பட்சி.—ஜபான் தேசத்து உள் நாட்டி லிருந்து ஜப்பானியன் ஒருவன் ஒரு பட்சியின் மேலேறிச் சவாரி செய்து கொண்டு ஆகாயவழியாய் ஸைபீரியாவுக்குச் சென்றானாம். அப்பட்சி நூதன மானதாகவும், ரூபத்தில் பருந்தைப்போலவும், தீக்குருவியிலும் பெரிய ரூப முடையதாகவுமிருக்கிறதாம்.

---

பிப்ரவரிமீ 28வ லண்டனிலுள்ள "இந்தியமாதர் கல்விச்சங்க"த்தைச் சேர்ந்த 4 மாதர்களின் கையெழுத்தின்மீது இந்தியமாதரின் கல்விக்காகத் திரவிய ஸகாயம் வேண்டுமென்று ஒரு மனு லண்டன் டயம்ஸில் தோன்று கிறது. இந்தியமாதர்களை இங்கிலாந்தில் படிப்பித்து, அவர்களைக்கொண்டு இந்தியாவில் பெண்களுக்குக் கல்வியைப்போதித்து அபிவிருத்திசெய்வது இச்சங்கத்தின் நோக்கமாகிறது.

---

கயாவுக்கருகாமையில் சென்றுகொண்டிருந்த ஓர் எக்ஸ்பிரெஸ் டிரெ யின் இன்ஜினின் முன்புறத்தில் தரைப்பக்கம் நீட்டிக்கொண்டிருக்கும் கருவி யில் ஓர்புலி அகப்பட்டுக்கொண்டதனால் டிரெயின் நிறுத்தப்பட்டது. பிறகு ரிவால்வரால் அது சுடப்பட்டது என்றாலும் அதற்கு அபாயம் நேரிடவில்லை. டிரெயின் 30 மைலுக்கப்பால் போனபிறகு, அந்தப்புலி, எழுந்திருந்து ஓடப் போகையில், அஸிஸ்டண்ட் வே இன்ஸ்பெக்டரால் அது கொல்லப்பட்டது.

---

ஏப்ரல்மீ 2வ இங்கிலாந்தில் பரவிவரும் சுரங்கக்கலகத்தினால் சோற்று க்கு அகப்படாமல் வருந்தும் ஜனங்களுக்குப்பகிர்ந்து அளிக்கும்படி ஜார்ஜ் சக்கரவர்த்தியவர்கள் மிஸ்டர் ஜான்பர்ன்ஸினிடத்து 1000 கினி அளித்தார் கள் (1 கினி என்பது 1 பவுன் 1 ஷில்லிங்) மேரிராணியும், அலக்ஸாண்ட்ரா ராணியும் தலைக்கு 1000 பவுன் நன்கொடை அளித்தார்கள். மிஸ்டர் பார்ன்ஸ் அத்தொகையைக் கஷ்டப்படும் ஜனங்களுக்குப் பகிர்ந்துகொடுப்பதாக ஒப்பு கொண்டிருக்கிறார்.

---



நசுக்கப்பட்ட விரல்கள்.—விரல்கள் ஏந்தக் காரணத்தினாலாவது நசுங்கி ப்போனால் உடனே பொறுக்கக்கூடிய வெந்நீரில் அந்த விரலை அமிழ்த்த வேண்டியது. அப்படிச் செய்வதனால் அந்த விரலின் நகமானது பருத்து ரத்த ஓட்டத்திற்கு இடவெளி விஸ்தாரப் படுத்திக் கொடுக்கிறது. ரத்த ஓட்டத்துக்கு இடம் ஏற்படவே வலி குறைவாகும், உடனே ரொட்டியைத் தண்ணீரில் நனைத்துக் கட்டவேண்டும். இப்படி நசுங்கினவிரலை அஜாக்கிர தையாய் விட்டுவிடக்கூடாது. பெருத்த கெடுதலுக்குக் காரணமாகும்.

---

பிப்பிரவரிமீ 28வ. வின்ஸ்டர்:—இன்று ஸெயிண்ட் ஜார்ஜ் சேபலில் காலஞ்சென்ற பைப் டியூக்கின் சவ அடக்கம் நடந்தது. சக்கரவர்த்தி தம்பதி களும், பிரின்ஸஸ் ராயலும், வேல்ஸ் இளவரசரும் இராஜ குடும்பத்தைச் சேர்ந்த மற்றவர்களும் வந்திருந்து மரியாதை காட்டினார்கள். ஒருவராவது பூணிபாரம் தரிக்கவில்லை. எல்லாரும் கடுந்துக்கத்திற் கடையாளமான முழுக் கறுப்பு உடைதரித்திருந்தார்கள். இராஜகுடும்பத்தாரை ஒழித்து அங்குவந்த மற்றவர்களில் அன்னிய ஸ்தானிகர்களும், லார்டு க்ரூவும், ஸர் எட்வர்ட் கிரே யும், பப்ளிக் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் காணப்பட்டார்கள்.

---

பிழைப்பூட்டும் யந்திரம்.—ஜர்மன் சாஸ்திரி யொருவர் பல்மோடார் என்னும் பிழைப்பூட்டும் யந்திர மொன்றைக் கண்டுபிடித் திருக்கிறார். இதன் நீளம் 21-அங்குலமாம்; குறுக்களவு $3\frac{1}{2}$ அங்குலமாம். இதில் 2800 பவுன் நிறையுள்ள பிராணவாயு அடங்கி யிருக்குமாம். இந்த யந்திரத்தை இறந்தவ ரது உடம்பில் உடனே செலுத்தி உபயோகப் படுத்தினால் அவர் பிழைத்து நல்ல நிலையைப் பெருவாராம். இந்த யந்திரத்தின் உதவியால் அமெரிக்கா வின் சிக்காக்கோ முதலிய நகரங்களில் நூற்றுக் கணக்கான ஜனங்கள் பிழைத் துக் கொண்டார்களாம்.

---

மாமிசச்செடி:—அமெரிக்காவில் மாமிசச்செடி யென்ற ஓர் வகையானச் செடியுளதாம். அச்செடியின் இலை நிரம்ப அகலமுள்ளதாம். அவ்விலையின் நடுவில் மாமிசத்துண்டை வைத்தவுடன் மூடிக்கொள்ளுகிறதாம். பிறகு 1 மணி ஸாவகாசத்திற்கெல்லாம் இலை திறக்க அதில் வைத்த மாமிசம் காண்கிற தில்லையாம். இதை இன்னும் நன்றாய் ஆராய்ச்சி செய்யும்பொருட்டு களி மண்ணை உருட்டி வைக்கவே அவ்விலையானது மூடியும் களிமண் இருந்தாற் போலிருந்தனவாம். ஆகையால் அவ்விலை மாமிசத்தைத் தவிர வேறொன் றும் விரும்புவதில்லையென்த் தெரியவருகிறது.

---

சீதோஷ்ணந் தெரிவிக்குங் கருவி.—ஜுரமடிப்பவர்களைப் பரிசோதிக் கும்போது ஆங்கில வைத்தியர்கள் உபயோகப்படுத்துங் கருவியை நேயர் கள் பார்த்திருக்கலாம். உலகத்திலெல்லாம் பெரிய கருவியொன்று அமெரிக் காவில் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. அது 20 அடி உயரமும் 100 அடி தூரத்திலுமிருந்து பார்த்தால் தெளிவாய்த் தெரியக்கூடிய பெரிய எழுத்து களை யுடையதா யிருக்கிறது. இக்கருவி குளிர்ச்சியை 35 டிக்கிரி வரையிலும் உஷ்ணத்தை 115 டிக்கிரி வரையிலுங் காட்டுமாம்.

---

ஒரு புதுவகைப் பெட்டி.—புதுவகை நகைப்பெட்டி யொன்று கண்டு பிடிக்கப்பட் டிருக்கிறது. யாராவதுவந்து நகைப் பெட்டியைத் தூக்கினால்

அது நாய்போல ஓயாமற் குலைத்துக்கொண் டிருக்குமாம். எட்டுமணி ஓயா
மற் குலைக்குமாம். அதை நிறுத்த வேண்டுமானால் பெட்டியின் சொந்தக்
காரன்வந்து அதைத்திறந்து குலைக்கும்படி உள்ளேவைத்த யந்திரத்தை
அமர்த்திவிட வேண்டுமாம். இப்பெட்டி உபயோகத்துக்கு வந்தபின் களவு
போகமாட்டாது. எங்கே வேணுமென்றாலும் அச்சமின்றி நகைப்பெட்
டியை வைத்துப்போகலாம்.

நீர்வழியாய் கம்பியில்லாத் தந்தி.—அலாஹபாத்து தந்தி டிப்டி ஸூபரி
ண்டண்டு முகம்மதீய ஹபிப் ரஹிமான்கான் அவர்கள் ஸமீபத்தில் பரிசைக்ஷ
கள் செய்து, கம்பி ஸகாய மில்லாமல் நீரிலும் தந்தி ஸமாசாரம் கொடுத்து
வாங்குவது ஸாத்தியமெனறு ரூபித்தார். நிலத்தில் அவ்வாறு ஸாத்திய
மென்பதைப் பல வருஷங்களுக்குமுன் இத்தலிய ஸ்ரீமானாகிய மார்கொனி
என்பவர் நிரூபித்து, இப்பொழுது, அந்த முறைப்படி நடவடிக்கை அனேக
இடங்களில் நடந்துவருவது அனேகருக்குத்தெரிந்திருக்கலாம். ஆகவே இனி
சமீபகாலத்தில்நிலம் நீர் இரண்டிலும் கம்பியின்உதவிவேண்டாமல் தந்திசமா
சாரம் அனுப்புவது நடக்கும். இது ஒரு பெரிய அதிசயமாதலால், மேனாட்
டில் பௌதிக சாஸ்திரிகளுடைய சங்கங்களில் அனேகத்திற்கு மேற்குறித்த
ஸ்ரீமான் ஹபிப் ரஹிமான் கௌரவ மெம்பராகி யிருப்பதுடன், டில்லிதர்
பாரிலும் அவருக்குப் பட்டதானம் கிடைத்தது. இந்த சந்தோஷத்தை இந்தி
யர் அனைவரும் அறிய விரும்புகிறோம்.

இக்காயம் நீர்க்குமிழிபோல் நிலையற்றதென்றும், நகை பூணுதற்காய
யௌவனகாலம் மின்னலைப்போல் அதிவிரைவில் நீங்குந் தன்மையுடைய
தென்றும், அன்றியும் அந்த யௌவனகாலத்திற்கு நோய்முதலியவற்றாலே
பங்கமுண்டென்றும் உணர்ந்து, பொன்னாபரணங்களைப் பெரியனவா யெண்
ணுது யாம் இதுகாறுங்கூறிய கற்புமுதலிய ஆபரணங்கள் தலைமயிர்கொக்குக்
கொக்க நரைத்துத் தடியோடு தத்தித்திரியும் விருத்தாப்பிய தசையினும்
அணியத் தகுந்தன வென்றும், அன்றியும் இப்பூதவுடம்பு நீங்கிய காலத்தும்
புகழுடம்பிலும் அவ்வாபரணங்கள் விளங்குந் தன்மையுடையன வென்றுஞ்
சிந்தித்து எம்சகோதரிகள் பின்னர்க்கூடிய ஆபரணங்களையே பெரிதும் விரு
ம்பி யொழுகக்கடவர்.—இந்துசாதனத்தில் வே. திருஞானசம்பந்தப்பிள்ளை."

சக்ரவர்த்தினியைப் பற்றி ஒருகதை.—சக்ரவர்த்தினி கல்கத்தாவுக்கு
விஜயம் செய்திருந்தபோது அவரைப்பற்றிப் பின்வரும் கதை சொல்லப்
படுகிறது.—சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் ஸர்டேவிட்யூலுடைய ஜூட்
மில்லைப் பார்க்கப்போயிருந்தபோது, அங்கு வேலை செய்துகொண்டிருந்த
ஒருபெண் அரைகுறையாயுடுத்து அழுக்குள்ளவளாய் முன்வந்து, சக்ரவர்
த்தினியைப் பார்த்துக் கூச்சத்தோடும் குழந்தைத்தனமாயும் "ஸலாம், மெம்
சாகிப்!" என்று ஒரு புஷ்பச்செண்டைக் கொடுத்தாளாம். சக்ரவர்த்தினி
அலாதப் புன்னகையுடன் சந்தோஷமாய் ஏற்று அதைக் கையில் வைத்துக்
கொண்டு கவர்ன்மெண்ட் அவுஸுக்குத் திரும்பிச்சென்றாராம். இந்த சிறிய
ஜூட் தொழிற்சாலைப் பெண்கொடுத்த கொடையை சக்ரவர்த்தினி தமக்கு
இந்தியாவில் மன்னர்களும் மற்றச் செல்வவான்களும் கொடுத்த மதிப்பேறின
நன்கொடைகளுடன் சேர்த்து சேமித்து வைத்துக்கொள்ளுவாரென நம்பக்
கூடும்.



"பெண்ணானவள் தான் தன்கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் பிறருக்கும்
செய்யவேண்டிய வீட்டுக்கடமைகளனைத்தையும் குற்றமில்லாமல் நிறைவே
ற்றி விட்டேனேயென்று தன்மனதில் நினைக்கும்போது உண்டாகும் மகிழ்
ச்சி காரணமாக அரும்பும் புன்னகை யொன்று, ஜீவனார்த்தமாகப் பொருள்
சம்பாதிக்கும் பொருட்டேனும் வேறு கருமத்தேனும் தூரதேசத்திற்குச்
சென்ற தன் நாயகன் (ஆல விருட்சத்தை நோக்கிப் பறவை வருதல்போல)
வீடு நோக்கி வரும்போது கண்ட நாயகி தன் மனதிற்கொண்ட பேருவகை
காரணமாகச் செய்யும் குறுநகை (புன்சிரிப்பு) பிறிதொன்று. அறிவுடை
யோர் தன்மக்களைச் சான்றோரெனக்கூறக்கேட்டபோது உண்டாகும்பெரு
மகிழ்ச்சி காரணமாய் அம்மாதாவிடத்து எழும் மந்தகாசமாகிய நகை மற்றொ
ன்று. இந்த மூவகை நகைகளையும் பூணுவளேல் அப்பெண் அடைந்த பாக்கி
யத்தை வேறுயார் அடைவார்?"

மேரி சக்கரவர்த்தினி டெல்லிக்கு விஜயம்செய்துவிட்டுப் போனதன்
ஞாபகமாக அவ்வூரில் பெண்கள் வாசிக்கக்கூடிய பள்ளிக்கூடமொன்று ஏற்
படுத்துவதைக் குறித்துப்போபால் பீகம் என்ற போபால் நாட்டு மகமதிய
அரசியானவள் சிலருக்குக் கடிதம் அனுப்பியிருக்கிறார்கள். அந்த ஸ்கூலை
ஸ்தாபிக்க 4 லட்சம் கட்டிடத்துக்கும் 8 லட்சம் மூலதனத்துக்குமாக 12
லட்சம் ரூபாய் வேண்டியிருக்குமென்று சொல்லியிருக்கிறார். தாம் ஒரு லட்
சம் ரூபாய் சமஸ்தான பொக்கிஷத்திலிருந்தும், 20,000 ரூபாய் தமது
சொந்தப்பணத்திலிருந்தும் கொடுக்கச் சித்தமாயிருப்பதாகவும், தமது குமா
ரர்களின் பெண்சாதிமார்களில் முதல் இரண்டுபேரும் தலைக்கு 7000 ரூபா
யும் மூன்றாவது குமாரனது பெண்சாதி 5000 ரூபாயும் கொடுக்கச் சித்தமா
யிருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார். அப்பெருமாட்டி அந்த ஸ்கூல் ஸ்தா
பன சம்பந்தாய் தமது தோழிமார்களுக்குத் தோற்றும் யுக்திகளை தமக்குத்
தெரிவிக்கும்படியாய் கேட்டுக்கொண்டு மிருக்கிறார்.

ஸ்ரீ சிருங்ககிரி ஸ்வாமிகள்:—"ஸ்ரீ சிருங்ககிரி மடாதிபதி அவர்களாகிய
ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹபாரதீ ஸ்வாமிகள் நாளது
மார்ச்சு மீ 20உ புதன்கிழமை காலை ஸுமார் 11 மணிக்கு, சுக்லபக்ஷம்
த்விதியையில் வழக்கம்போல் பூஜை முடித்து ஸமாதிகொள்பவர்போல இருந்
தவர் யாவரும் எதிர் பாராமல், எவ்வித வியாதியுமின்றி விதேக முக்தி பெற்
றார்கள். இது அவர்களுடைய எண்ணிறந்த சிஷ்யகோடிகளுக்கு மிகவும் துக்
கத்தை விளைவிக்கும். அவர்கள் தர்க்கம், சாங்கியம், வேதாந்தம், யோகம்
முதலிய சாஸ்திரங்களில் மஹாபிரக்ஞையுள்ளவர்கள். உயர்ந்த ஸ்வாநுபவம்
உடையவர். மஹா சீலர். மஹா காருண்ணியம் உள்ளவர். ஈசுவர கடாக்ஷம்
பெற்ற புண்ணியர். சுபாநுக்கிரக சக்தியுள்ளவர். எப்பொழுதும் சிரித்த முக
த்தினர். சாந்தர். எவரும் அவர் பிறந்துள்ள மதத்தை ஸரிவர அநுஷ்டிக்க
வேண்டுமென்று வற்புறுத்தி அடிக்கடி உபதேசம் செய்வார்கள். பிற மதத்
தினரைப் பொதுவாய துவேஷியாமல் அன்போடு நன்குமதித்துப் பாராட்டி
னார்கள். அவர்கள் சிஷ்யர்களின் நன்மையின் பொருட்டு, தென்னாட்டில் இரு
முறை யாத்திரை செய்தார்கள். அவர்கள் யாத்திரையில் தங்கிய க்ஷேத்திர
ங்களில் எல்லாம், சிஷ்யர்களின் ஸபையைக் கூட்டிவைத்து, அவர்களுக்கு
ஆசார விஷயத்திலும் ஞானவிஷயத்திலும் உயர்ந்த உபதேசங்களுள்ள உபந்நி
யாஸம் செய்துவந்தார்கள். அவர்கள் ஸ்ரீ சிருங்ககிரி மடத்திற்கு குரு சிஷ்ய
வார்சு கிரமத்தில் 33-ம் பட்டம் பெற்றிருந்தார்கள்."

சிவகௌரி கல்யாபாய் கஜ்ஜருடைய சகோதரர், ப்ரொபஸர் T.K.கஜ்ஜர் தமது சகோதரிக்கும் அவருடைய தோழியாகிய பாஜிகௌரி தௌலத்ராய் முன்ஷிக்கும் ஒரு ஆலோசனைசொன்னார். ப்ரொபஸர் கஜ்ஜர் வெகுகாலமாய்ப் போதகாசிரியராயிருந்தவர். கெமிஸ்டிரிமுதலிய சாஸ்திரங்களில் மகாவிற்பன்னர். ஆழ்ந்த தேசாபிமானி. இவர் தமது சகோதரியின் சிந்தனையை அறிந்து, அவர்கள் இருவரும் சேர்ந்து ஹிந்துப் பெண்களின் அஞ்ஞானம் நீங்கி ஞானவொளி அவர்கள் பெறும்படி செய்ய ஒரு ஸ்கூல் ஸ்தாபித்து நடத்துவதே இவர்கள் ஆயுளெல்லாம் செய்யக்கூடிய கைங்கரிய மாகுமென்று ஆலோசனையை அங்கீகரித்த இந்த இரண்டு விதவைகளிடத்தும் சில நகைகள்முதலிய சொத்துக்களிருக்க, அவைகளைவிற்று 10,000 ரூபாய் அவர்கள் முதலாக்கிக் கொண்டார்கள். ப்ரொபெஸர் கஜ்ஜர் தம் சொந்தப் பணத்தையும் தம் இஷ்ட மித்திரர்களுடைய பணத்தையும் சேர்த்து 40,000 ரூபாய் கொடுத்தார். இந்த 50,000 ரூபாயைப் பெற்று இந்த இரண்டு ஸ்திரீகளும் சூரத்தில் கோபிபுரத்துக்குச் சமீபத்தில் நகர்பலியா என்கிற இடத்தில் "வநிதவிஸ்ரம்" என்கிற பேருடன் ஒரு ஸ்திரீ வித்தியாசாலை ஸ்தாபித்தார்கள். இப்படி ஸ்தாபித்தது 1907-ம் வருஷம் மேமாதத்தில். ப்ரொபெஸர் கஜ்ஜர் இந்த ஸ்கூலுக்கு ஒரு வீட்டையும் ஸ்கூல் நடத்துவதற்கு வேண்டிய அவசியமான சாமான்களையும் கொடுத்து, அந்த ஸ்கூலை என்னவிதமாய் நடத்துவதென்கிற கற்பனையையும் நிச்சயித்துக் கொடுத்தார். 'வநிதவிஸ்ரம்' என்பதற்கு ஸ்திரீகள் வசிக்கும் இடம் என்று பொருள்.

---

ஸ்ரீமதி ஸத்யபாலாதேவி சங்கீதத்தில் அடைந்திருக்கும் தேர்ச்சியானது, அமெரிக்காக் கண்டத்தைச்சேர்ந்த யுனைடெட் ஸ்டேட்டிலுள்ள சில பிராந்தியங்களில் ஆச்சரியத்தை உண்டாக்கியிருக்கிறதென்று சொல்லப்படுகிறது. மைசூரில் பிரசுரமாகும் இந்திய சங்கீத சஞ்சிகையில், இந்த மாதின் ஜீவசரித்திரம் வெளியாயிருக்கிறது. இந்த மாது, பாபுகாமாக்யநாத் சதோபாத்யாய என்ற நாமத்துடன் விளங்கிவரும் ஒரு ஜமீன்தாரின் பௌத்திரியாவாள். இவள் 1892-ம் வருஷத்தில் பேலூரில் ஜெனித்தனள். இவள் பிதாவான பாபு ஸத்சந்தி சதோபாத்யாயருக்கு ஆண்சந்ததியில்லாததினால், இந்த பெண்ணுக்கு தகுந்தபடி வித்யாப்பியாசம் செய்வித்தனர். இந்தமாது தன் எட்டாவது வயதிலேயே தன் பிதாவுடன் ஹிந்து யாத்திரை ஸ்தலங்கள் அனைத்தையும் சுற்றிப்பார்த்து வந்தனள். இந்த மாது தன் 14-வது வருஷம் வரையிலும் பெத்யூன் ஸ்கூலில் கல்விகற்றுவந்தாள். இந்த மாது சங்கீத சாஸ்திரத்திலும் மதசம்பந்தமான படிப்பிலும், மிகத் தேர்ச்சி அடைந்திருக்கிறாள். சங்கீதரத்னாகரம், சங்கீத பாரிஜாதம், என்ற சங்கீத சாஸ்திரசம்பந்தமான சம்ஸ்கிருத நூல்களை, மகாராஷ்டிர சாஸ்திரிகளிடம் கற்றுவந்ததுமன்றி, காசியிலுள்ள பண்டித துர்க்காசங்கர சாஸ்திரியினிடம் சாமவேதத்தை கனம், ஜடை முதலிய ஸ்வரங்களுடன் அப்பியசித்து வந்தாள். வீணை வாசிப்பதில் நிபுணள்; வீணையில் நிபுணத்துவத்தை அடைய வேண்டுமானால் 12 வருஷம் அப்பியசிக்கவேண்டும். இந்த மாதுக்கு சம்ஸ்கிருதம், பங்காளி, குஜராத்தி, மராட்டி, பஞ்சாபி, ஹிந்தி, பார்சி, தமிழ், இங்கிலீஷ் ஆகிய இந்த ஒன்பது பாஷைகள் தெரியும். இந்த மாது டாக்டர் தேசேயின் மனைவியாவாள்.

---


# மாதர் மனோரஞ்சனி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

| | | |
|---|---|---|
| Vol. XIV. | Madras: May 1912. | இலக்கம் - 5. |
| புத்தகம் - கச. | சென்னப்பட்டணம்: மேமீ 1912. | No. 5. |


## ஏழைப் பெண்களுக்குப் புண்டு.

பாலிய விவாகமானது சாஸ்திர சம்மதமாயிருந்தாலுமில்லாவிட்டாலும் ஜனசமூகத்தில் அநேகம் துன்பங்களுக்குக் காரணமாயிருப்பதுடன் குழந்தை விதவைகளும், 20-வயதிற்குள் அநேகம் விதவைகளும் ஏற்படுவதற்குக் காரணமாயிருக்கிறது. இப்பாலிய விதவை அநேகமாய் ஒரு சகோதரன், சகோதரி புருஷன், அல்லது வேறு எவராவது ஒரு சமீபபந்துவிடம் இருந்து தன் சாண்வயிற்றின் போஷணார்த்தமாய் காலை -மணி முதல் இரவு 10-மணி வரைக்கும் அவர்கள் வீட்டில் உழைக்கும் வேலைக்காரியாகிறாள். அவள் தகுந்த பெற்றோர்களால் மிகவும் செல்வமாயும் கௌரவமாயும் வளர்க்கப்பட்டிருந்தால் அவளுடைய கஷ்டங்கள் இன்னும் கொடுமையாயிருக்கின்றன. அவளுடைய அழகிய கூந்தல் களையப்படுகிறது. மிகவும் அசுத்தமான வெள்ளைப் புடவையைக் கட்டிக்கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறாள். ஆண், பெண் இருபாலாரும் அவள் வெளிக்கிளம்பினால் சகுனத்தடையாக எண்ணுகிறார்கள்.

தன் வருத்தங்களை அதிகமாக எடுத்துச்சொல்லுவது ஒரு ஹிந்துமாதின் இயற்கையல்ல. அதுடன் வழக்கத்தையோ சாஸ்திரத்தையோ ஆதாரமாகச்சொல்லி அவள் வருத்தமாகச்சொல்லிக் கொள்வதற் கொன்றுமில்லையென்று சொல்லிவிடுகிறார்கள். அதனால் அநேகர் வெளியிற் சொல்லாமலே கஷ்டப்படுகிறார்கள். அநேகாயிரம் விதவைகள் சந்தோஷமில்லாவிட்டாலும் பரிசுத்தமாய் தங்கள் வாழ்நாட்களைக் கழிக்கிறார்கள். அநேகமிடங்களில், தன் குழந்தைப் பருவத்திலேயே தன் சுகதுக்கங்களை உடனனுபவிக்கும் கணவனை யிழந்த ஒரு விதவை, தன் வாழ்நாட்களை முழுவதும் தர்மசிந்தையிலேயே செலவிடுவதைக் கேட்டிருக்கிறோம். ஆனால் இப்படிப்பட்ட நற்குணமமைந்தவர்கள் ஆயிரமிருந்தால் அநேகம் கோடிபரிதபிக்கக்கூடிய விதவைகள் தங்களுக்குப் புத்திமதிகூறி நல்வழியில் நடத்தக்கூடியவர்களில்லாமல் உலக இச்சைகளுக்கும் கஷ்டங்களுக்கு முட்பட்டு உழலுகிறார்கள். சில வீடுகளில் விதவைகள் தங்கள் கொடுமையான பந்துக்களால் அடிக்கவும் படுகிறார்கள். இக்கொடுஞ்செய்கை ஒன்றேபோதும் நாகரீகமானவர்கள் நம்மைப்

பார்த்து இகழவும் சிரிக்கவும். இவ்விதமாய் அலங்கோலஞ் செய்யப்பட்டு
வெறுக்கப்பட்டு அடிமைகளுக்கும் கீழாய் நடத்தப்படும் இவ்விதவைகளில்
அநேகர் சாவையே ஆவலாய் எதிர்பார்க்கிறார்கள். சிலர் தற்கொலை செய்து
கொள்ளுகிறார்கள. அந்தோ! என்ன பரிதாபம்! "எந்த வீட்டில் ஒரு ஸ்திரீ
கண்ணீர் வடிக்கிறாளோ அவ்வீடு விருத்தியாகாது" என்பது மனுஸ்மிருதி
வாக்கியம். அப்படியானால் நமது வழக்கத்தினால் நாமே ஏற்படுத்திக்கொண்ட
இக்கொடுமையை அனுபவித்துக்கொண்டிருக்கும் கோடிக்கணக்கான ஸ்திரீ
கள் ரத்தக்கண்ணீர் பெருக்கினால், நம்மிந்தியா எப்படி முன்னுக்குவரும்?
பழைய வழக்கமாகிய சககமனத்தை மறுபடி அநுபோகத்தின்கீழ் கொண்டு
வந்து விதவைகளே இல்லாமற் செய்துவிட்டாலும் தருமமாகும். சககமன
மென்பதே சகிக்கப்படாத கொடியசெய்கை; ஆனால் தற்காலத்தில் சில
விதவைகளின் கதியைப்பார்த்தால் உடன்கட்டையேறி ஒரேநாளில் நீங்குதல்
நலம் யென்னலாம்.

வயதாகி (15-வயதிற்குப் பிறகு) கலியாணஞ் செய்வதைப்பற்றியும்
குழந்தை விதவைகளுக்கு மறுவிவாகஞ் செய்வதைப்பற்றியும் பேசுவதற்கு
இது இடமல்ல. இவ்விஷயங்களை புத்திமான்களும் கண்யமுள்ளவர்களும்
நம்மை நடத்த பாத்யம் வகித்தவர்களுமான ஜனசமூகத்திற் குழைக்கும்
பெரியவர்கள் கையிலொப்பிவித்து தற்காலஸ்திதியைக் கவனிப்போம். திட
சரீரிகளாயும் புத்திசாலிகளாயு மிருக்கும் இவ்விதவைகளை ஏன் ஏதேனும்
உபயோகமான காரியங்களைச் செய்ய ஏற்படுத்தக் கூடாது? கடவுளின் கிரு
பையை எதிர்பார்க்கும் மனிதர்களாகிய நாம் பரிதாபமான இக்குழந்தை
விதவைகளிடம் (பார்க்கப்போனால் இக்குழந்தை விதவைகள் நம்முடைய
சிருஷ்டியேயன்றி கடவுளுடைய சிருஷ்டியல்ல என்னலாம்) கொஞ்சமே
னும் இரக்கம் காட்டி அவர்களுடைய கஷ்டங்களைச் சிறிது குறைத்து அவர்
கள் வாழ்நாட்களைச் சற்றாவது சந்தோஷிக்கச் செய்வது நமது கடமை
யாகும்.

ஸ்ரீமான்களே, ஸ்ரீமாட்டிகளே, தாங்கள் தர்ம விஷயத்திற்காகச் செலவி
டும் தொகையில் ஒரு சிறுபாகங் கொடுத்துதவினால் இச்சிறு விதவைகளை
ஆதரித்து அவர்களுக்குச் சிறிதேனும் சந்தோஷ முண்டாகும்படி செய்து,
உபயோகமாகவும் கௌரவமாகவும் அவர்கள் வாழ்நாள் கழிப்பதற்குத் தகு
ந்த ஏற்பாடுகளைச்செய்ய நான் முன்வருகிறேன். இவ்விதவைகளுக்கும் மூளை
இருக்கிறதல்லவா? கடவுள் எதையும் வீணாக சிருஷ்டிக்கவில்லை. பிரகிருதி
யில் அவர் சிருஷ்டிக்கும் ஒவ்வொன்றும் ஒரு உபயோகத்திற்காகவே. சிறு
வயதாயும் புத்திக்கூர்மையாயு மிருந்து இஷ்டப் படுகிறவர்களைப் படிப்பி
த்து இப்பொழுது ஏற்படப்போகும் அநேகம் பெண் பள்ளிக்கூடங்களுக்கு
உபாத்தியாயினிகள் வேண்டியிருப்பதால் அதற்கு அவர்களைத் தகுதியாக்கு
வதற்கு உங்களுதவியை எதிர்பார்க்கின்றேன்.

இப்பொழுது எல்லாவிடங்களிலும் பெற்றோர்கள் தங்கள் பெண் குழ
ந்தைகளைப் படிப்பிக்க வேண்டுமென்று இஷ்டப்படுவதுடன் பெண்கள்
பள்ளிக்கூடமாயிருந்து கற்பிப்பவர்களும் ஸ்திரீகளாகவேயிருந்தால் கொஞ்
சம் அதிகநாள் படிக்க வைப்பதற்கும் இஷ்டப்படுகிறார்கள். பெண்கள் படி
த்தால் கெடுதியுண்டாகும் என்னும் அபிப்பிராயம் வேண்டியகாலம் நமக்



குள்ளிருந்து இப்பொழுதுதான் சிறிதுகுறைந்து கொண்டுவருகிறது. பூர்வ
இந்தியாவில் அநேகம் ஸ்திரீகள் விசேஷமாய்க் கல்வி கற்றிருந்தார்களென்
றும், சிலர் வேதம் உபநிஷத்துக்களிலுங்கூட சிலபாகம் எழுதும்படியான
திறமை யுடையவர்களா யிருந்தார்களென்றும், படித்த வித்வான்களுடன்
இவர்களும் சபைகளிலிருந்து வாக்குவாதம் செய்தார்களென்றும் நமக்குத்
தெரியும். புருஷர்களுக் கிருப்பதுபோலவே ஸ்திரீகளுக்கும் ஆத்துமாவுண்டு.
ஆத்மஞான முண்டாவதற்குக் கல்வி இன்றியமையாதது.

பணஞ்சேர்த்து அதைக்கொண்டு விதவைக் குழந்தைகளுக்கும் வேறு
ஏழையான பெண்களுக்கும் உதவி சரியானபடி செய்யும்பொருட்டு ஒரு
பிரசிடெண்ட், ஒரு காரியதரிசி பொக்கிஷத்தலைவர் சில மெம்பர்கள் இவர்
களடங்கிய ஒரு கம்மிட்டி ஏற்படுத்தப்படும்.

பண்டு சரியாய்ச் சேர்ந்தால் ஒரு வாத்தியங் கற்பிக்குமிடம் ஏற்படுத்தி
அதில் வீணை, பிடில் ஹார்மோனியம் முதலிய இந்திய வாத்தியங்களும்
வாய்ப்பாட்டும் கற்பிக்கப்பட்டு பரிட்சைசெய்து சர்ட்டிபிகெட்டுகள் கொடு
க்கப்படும்.

கைத்தொழில் கற்பிக்குமிடம் ஒன்று ஏற்படுத்தி அதில் வயதான ஸ்தி
ரீகளுக்குத் தையலும் மற்றும் குடும்பத்திற்கு உபயோகமான விஷயங்களும்
கற்பிக்கப்படும்.

குழந்தைகள் சரியாய் பாது காக்கப்பட்டு நல்வழியில் நடத்தப் படுவத
ற்கு வேண்டியமுயற்சி எடுத்துக் கொள்ளப்படும்.

மாதாந்தரமாகவோ வருஷாந்தரமாகவோ அல்லது மொத்தமாகவோ
ஒவ்வொருவரும் கொடுக்கும் எவ்வளவு சிறிய தொகையும் வந்தனத்துடன்
ஏற்றுக் கொள்ளப்பட்டு அவசியமானால் 'ஹிந்துவிலும்' பிரசுரிக்கப்படும்.

கம்மிட்டி (நிர்வாகசபை) ஏற்பட்டவுடன் இதற்குவேண்டிய விதிகள்
(Rules) ஏற்படுத்தப்பட்டு ஒவ்வொருவருஷத்து ரிபோர்ட்டும் இவ்விஷயத்
தில் அநுதாபப்பட்டு உதவிபுரியும் ஒவ்வொருவருக்கும் அனுப்பப்படும்.

நல்ல காரியத்திற்காக ஏற்பட்டிருக்கும் இந்த அப்பீல் வீணாகாதென்று
நான் மனப்பூர்வமாய் நம்புவதுடன் தாங்களெல்லோரும் இவ்விஷயத்திற்கு
உதவிசெய்வதுடன் தங்கள் சிநேகிதர்களையும் செய்யும்படி தூண்டும்படியாக
கேட்டுக் கொள்ளுகிறேன். இவ்விஷயமாய் உதவிபுரியும் எல்லோருக்கும்
எங்கள் வந்தனமும் நன்றியும் செலுத்துகிறோம்.

ஆர். எஸ். சுப்பலக்ஷ்மி அம்மாள், பி. ஏ.

# சூடான வஸ்துக்கள்.

ஒவ்வொருவரும் தம்முடைய அநுபோகத்தில் உஷ்ணமான வஸ்துக்கள் பலவற்றைப் பார்த்து இருக்கிறார்கள். சூடு, குளிர்ச்சி, என்கிற வார்த்தைகளின் பொருள் எல்லாருக்கும் ஏதோ ஒரு விதமாய் அபிபபிராயம் ஆகின்றதென்பதற்கு சந்தேகமில்லை. ஆயினும் நமது உணர்ச்சியால் சூடு, குளிர்ச்சி என்பதை அனுமானம் செய்யும்போது பலதடவை தப்பியும் போகிறோம். எப்படியெனில் பகல்பொழுதில் வழி நடந்தவன் ஒருவன் ஒரு வீட்டுத் திண்ணையில்வந்து உட்கார்ந்தவுடன் திண்ணை குளிர்ச்சியா யிருக்கின்றதென்கிறான். அதே சமயத்தில் தோப்பில் உலாவிவிட்டு அதே திண்ணையில் வந்து உட்காரும் ஒருவன் திண்ணை அதிகதாபமாய் இருக்கின்றதென்கிறான். இது புலரும் அறிந்தவிஷயம். இவர் இருவருள் எவர்சொல்வது சரியென்பதைப் பின்னால் அறியலாம். இப்பொழுது நாம் தெரிந்துகொள்ள வேண்டியதென்னவெனில் நம்முடைய உணர்ச்சியை மட்டுமே நம்பி ஒரு இடத்தின் சூட்டையும் குளிர்ச்சியையும் சரிவர நிர்ணயம்செய்ய முடியாதென்பது தெளிவாகின்றது. இரண்டுமனிதர்கள் தம்முணர்ச்சியின் வித்தியாசம் பற்றி வெவ்வேறுவிதமாய் திண்ணையின் ஸ்திதியைப்பற்றி அபிப்பிராயம் பட்டது போன்று நம் இருகைகளும் வெவ்வேறு உணர்ச்சியை நமக்குச் சிலசமயங்களில் தெரிவிக்கும். அது எப்படியென்று நீங்கள் சந்தேகப்படலாம். இப்பரிக்ஷையால் யான்சொல்வது தெளிவாகும். மூன்று சிறுகிண்ணங்கள் எடுத்துக்கொள்வோம். ஒன்றில் கைபொறுக்கக்கூடிய அளவு உஷ்ணமான ஜலம் ஊற்றுவோம். அடுத்த கிண்ணத்தில் மிகவும் குளிர்ச்சியான ஜலம் ஊற்றுங்கள். மூன்றாவது கிண்ணத்தில் 'வெதவெத'வென்று இருக்கும் ஜலம் எடுத்துக்கொள்ளுங்கள். மூன்றையும் நான் சொல்லிய வரிசையாகவே வைத்துக்கொண்டு ஒரு கையின்விரலை முதல்கிண்ணத்தின் உஷ்ணமான ஜலத்திலும், மற்றொரு கைவிரல் ஒன்றைக் குளிர்ந்த ஜலத்திலும் வைத்துக்கொண்டு இருங்கள். இரண்டு நிமிஷம் கழித்து இரண்டு விரல்களையும் மூன்றாவது கிண்ணத்து ஜலத்தில் ஒரேசமயத்தில் நனையுங்கள். இரண்டு விரல்களும் ஒரேவிதமான உணர்ச்சியை அறிவிக்கின்றனவா? அல்லது ஏதாவது வித்தியாசம் தோன்றுகின்றதா? முதல் கிண்ணத்தில்வைத்து இருந்தவிரல் குளிர்ச்சியாகவும் இரண்டாவது கிண்ணத்தில்வைத்து இருந்தவிரல் சூடாகவும் இருக்கின்றன என்பீர்கள்!! ஆம்!! நம் கைவிரல்களே நமக்குசரியான விஷயத்தை சில சமயங்களில் தெரிவிப்பதில்லை; விபரீதமாய்த் தெரிவிக்கின்றன.

ஆயினும் உஷ்ண நிலைமை என்பதும் குளிர்ச்சி என்பதும் உண்டு என்பதற்கு ஆக்ஷேபணை இலலை. அவற்றை எபபடி தப்பில்லாமல் தீர்மானம் செய்வது என்பதைப்பற்றியே முக்கியமாய் எடுத்துச்சொல்லப்போகிறேன்.

கரண்டியை அடுப்பில் போட்டால் உஷ்ணமாகிறதென்பது தெரிந்த விஷயம். அதை வெளியே எடுத்து எண்ணெயை ஊற்றினால் எண்ணெய் உஷ்ணமாகின்றது. எண்ணெய்க்கு உஷ்ணம் கரண்டியிலிருந்து வருகின்றது பாருங்கள். கரண்டிக்கு உஷ்ணம் நெருப்பிலிருந்து வந்தது. இன்னுமொரு பரிக்ஷை செய்வோம். ஒரு ஊசியை விளக்கில் காய்ச்சுவோம். (ஒரு மரத்துண்டில் ஊசியைக் குத்திக்கொண்டு காய்ச்சவேண்டும். இல்லாவிட்டால்



கையைச் சுட்டுவிடும்.) சிவக்கக்காய்ந்த பிறகு அதை நாம் தொடக்கூடுமா? அதைத்தண்ணீரில் தோய்ப்போம். இப்பொழுது தொடக்கூடுமா? கூடும்! ஏன்? ஊசியின் உஷ்ணமெல்லாம் ஜலத்திற்குப் போய்விட்டது. சூடான வஸ்துவின் குணம் என்னவென்று தெளிவாயிற்றல்லவா? சூடு அதிகமான நெருப்பு தன்உஷ்ணத்தை கரண்டிக்குக் கொடுத்ததனால் கரண்டி சூடாயிற்று. சூடான கரண்டி தன் உஷ்ணத்தை எண்ணெய்க்குக் கொடுத்ததனால் எண்ணெய் சூடாயிற்று. அதிக சூடான ஊசி தன் உஷ்ணத்தை ஜலத்துக்குக் கொடுத்தது. ஆகையால் சூடானவஸ்துக்கள் எல்லாம் தம்மிலும் சூடு குறைவாயிருக்கும் வஸ்துக்களுக்கு தம் உஷ்ணத்தைக் கொடுக்கும் என்பது தெளிவாகின்றது. ஆகவே உஷ்ணம் ஒரு வஸ்துவிலிருந்து மற்றொரு வஸ்துவுக்குப்போக வேண்டுமானால் அவ்விரண்டுக்கும் சீதோஷ்ண ஸ்திதியில் வித்தியாசம் இருக்கவே வேண்டும்; அப்படி வித்யாசம் இருக்கும்போது குளிர்ந்த வஸ்துவின்பக்கம் உஷ்ணமானது வருகின்றது. சூடான வஸ்து என்பதற்கெல்லாம் நீங்கள் இனி இவ்விதமே பொருட்கொள்ளவேண்டும். எந்த வஸ்துவினின்று உஷ்ணம் மற்ற வஸ்துக்களுக்குப் போகுமோ, அதே உஷ்ணமான வஸ்து. இரண்டு வஸ்துக்களின் சீதோஷ்ண ஸ்திதி ஒரே மாதிரியாகவே இருந்து விட்டால் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு உஷ்ணமே போகமுடியாது. ஒரு பெறையில் இருக்கும் ஆணிகளை அதே பெறையில் இருக்கும் ஜாடி எண்ணெயில் போட்டால் சீதோஷ்ண ஸ்திதியில் ஒன்றும் வித்யாசம் ஏற்படுகிறதில்லை.

வஸ்துக்களின் சீதோஷ்ண ஸ்திதிக்கு ஆங்கிலேயர் Temperature என்பார்கள். அவ்வார்த்தையையே சௌகரியப்படும் பொழுதெல்லாம் உபயோகப்படுத்துவோம். சூடான வஸ்துவின் டெம்பரெசர் அதிகமென்பார்கள். குளிர்ந்தவஸ்துவின் டெம்பரெசர் தணிவு என்பார்கள். இன்னும் இவ்விஷயத்தைப் பற்றிப்பேசு முன் வஸ்துக்களைச் சூடாக்கும்போது உண்டாகும் சில மாறுதல்களைப்பற்றி அறியவேண்டும்.

ஒரு அடுப்பின்மீது சிறு கூஜா ஒன்றையாவது அல்லது வாய்குறுகலாய் உள்ள பாத்திரம் எதையாவது வைத்து அதில் முழுவதும் ஜலம் ஜாக்கிரதையாய் நிரப்புங்கள். வழியவிடக்கூடாது. நிரப்பாமலும் இருக்கக்கூடாது. அப்படி இருக்கும் பாத்திரத்தைக் கொஞ்சங் கொஞ்சமாய் உஷ்ணப்படுத்துங்கள். ஜலம் வழிவதைக்காணலாம். ஏன்? முன் இருந்த இடம் ஜலத்துக்குப்போதாமல் வழிந்து போயிற்று. அதாவது, ஜலம் சூடான்போது அதிக அளவாயிற்று. வழிந்துபோனது போகட்டும். நெருப்பை எடுத்து
அதிக அளவாயிற்று. வழிந்துபோனது போகட்டும். நெருப்பை எடுத்து
விட்டு ஜலத்தைக் குளிரசெய்வோம். உஷ்ணமாய் இருக்கும்போது பாத்தி
ரம் நிறைய இருந்த ஜலம் குளிரக்குளிர பாத்திரத்தின் உள்ளே போகிறது.
ஆகவே குளிரக்குளிர ஜலத்தின் அளவு குறைகின்றதென்பது தெளிவாகின்
றதல்லவா? ஜலம்மட்டும் இவ்வாறாகின்றதென்று எண்ணவேண்டாம். எல்லா
த்திரவப் பொருள்களும் அப்படியே. ஜலத்துக்குப்பதிலாக, எண்ணெய்,
தேன், முதலியன எதைவேண்டுமானாலும் உபயோகித்து மேற்சொன்ன
பரிக்ஷையை மறுபடிசெய்து பார்க்கலாம்.

இதுவேபோல் வாயுபதார்த்தங்களையும் பரிக்ஷை செய்வோம். வெந்நீர் அண்டாவில் ஜலம் காயும்போது ஒரு சொம்பு எடுத்து ஜலத்தில் தலைகீழா

யப் பிடித்துக்கொண்டு சில நிமிஷங்கள் அப்படியே வைத்து இருங்கள். என்ன நிகழ்கின்றது? சொம்பிலிருந்து வாயுகொப்பளித்து வருகின்றது. கண்ணாடிப்பாத்திரம் கிடைக்குமானால் இன்னும் சௌகரியம். வாயுகொப்பளித்து வெளிக்கிளம்பினபோதிலும், இன்னும் வாயுபாத்திரம் நிறைய இருப்பதைப்பார்க்கலாம். சுமார் 10 நிமிஷம் வரையில் வைத்திருந்து பிறகு வெகுசீக்கிரமாய் அப்பாத்திரத்தைக் குளிர்ந்தஜலத்தில் கவிழ்த்தால் சிலநிமிஷங்களுக்குள் வாயு குளிர்ந்து பாத்திரத்திற்குள் அடங்கியிருக்கும். ஜலமும் பாத்திரத்தின் உள்ளே ஏறும். ஆகையால் வாயு பதார்த்தங்களும் உஷ்ணமடையும்போது தம்மளவில் அதிகமாகின்றன என்பது தெளிவாய்ப் பார்க்கலாம். கனபதார்த்தங்களும் இப்படியே தம்மளவில் அதிகமாகின்றதோ என்று நீங்கள் சந்தேகப்படலாம். ஆம் அவைகளும் தம்மளவில் அதிகப்படுகின்றன. ஒரு த்வாரத்தில் சரியாய் நுழையும் ஒரு இரும்புதுண்டு உஷ்ணமானால் அத்த்வாரத்தின் வழியாய் மறுபடி போவதில்லை. தவிரவும் ஒரு கம்பியை எடுத்துக்கொண்டு அது உஷ்ணமாகும்போது நீளமாகின்ற தென்பதையுங் காட்டலாம். ஒரு பல்கையில் இரண்டு ஆணி அடித்துவிட்டு அவ்விரண்டு ஆணிகளுக்கும் நடுவில் சரியாய் நுழையக்கூடிய ஒரு குடைக்கம்பியை அல்லது தாமிரக் கம்பியையோ வெட்டி எடுத்துக் கொள்ளுங்கள். உஷ்ணமாக்கினால், அப்பொழுது கம்பி 2 ஆணிகளுக்கும் நடுவில் போவதில்லை.

இம்மாதிரி கனபதார்த்தங்களும் திரவபதார்த்தங்களும் வாயுபதார்த்தங்களும் உஷ்ணமாக்கியபோது தம்மளவில் அதிகப் படுகிறதைப்பற்றி நம க்கு பலவிதத்தில் உபகாரமாயிருக்கின்றன. வண்டிச்சக்கிரத்திற்கு பட்டை போட வேண்டுமானால் பட்டையை சிவக்கக்காய்ச்சி அப்பொழுதே சக்கிரத்தில் பதித்து ஜலம் ஊற்றுவதை தினந்தோறும் கொல்லன் பட்டையில் காணலாம். இரயில்வண்டிப் பாதைகளில் தண்டவாளங்களுக்கு இடையில் சற்று இடம் விட்டிருப்பதை பலரும் பார்த்திருக்கலாம். அதனுடைய உபயோகம் என்னவென்றால் வெயிற்காலத்தில தண்டவாளத்தின் நீளம் அதிகமாகும்போது ஒன்றின்மேலொன்று முட்டிக்கொண்டு வளைந்து போகாமலிருப்பதற்கே.

ஆர். கே. சுவாமி, பி. ஏ., எல். டி.

# ஸீதாகல்யாணம்.

## 2 விஸ்வாமித்திரர் ராமலக்ஷ்மணரை அண்டதல்.

இராகம்:—"மார்கழிமாதந் திருவாதிரைநாள்" என்கிறமெட்டு.

16. சந்திர வதியரிச் சந்திர பூபதி சத்தியந் துலக்கிய கௌசிகரும்
இந்திர னுகவிற் றிருந்திடு தசரதர் எழிற்சபை ஏகியே இலங்கினரே.

17. அன்றலர் பங்கஜம் அன்னதா முகத்துடன் அருந்தவ ரடிபணிந்
துபசரித்தே
என்றனை யாட்கொள் இக்கருற்றது யார்தவ மோவென்றார்
தசரதரும்.



18. வெண்கடல் வெண்மலை வெண்மல ரோனகர் விளம்பிடுங் கற்பக
நன்னகரும்
தண்புனல் அயோத்தியும் தவத்தினர் இடருறின் தஞ்சமென்
றியம்பினர் கௌசிகரும்.

19. வேள்வியை அழித்திடு துஷ்டரை அழித்திட விரைந்துனை
அணுகினேன் மன்னவனே
தோள்வலி ராமனுந் தூயனுன் புதல்வனைத் தந்திடென்
றுரைத்தனர் கௌசிகரும்.

20. பொறிகளுங் கலங்கிட இன்னுயிர் பதைத்திடப் புகன்றனர்
தசரத பூபதியும்
சிறியவன் சிறிதேனுஞ் சண்டையே அறிந்திடாச் செல்வனென்
றாமனும் செம்முனியே.

21. எக்கணம் எவ்வெவர் எவ்விடர் இழைப்பினும் எமபுரிக்
கவரையான் ஏற்றிடுவேன்
இக்கணம் இக்கணம் எழுந்திடும் எழுந்திடும் எழுந்திடும்
வேள்வியை இயற்றிடவே.

22. கடுஞ்சின மடைந்திடு கௌசிகமாமுனி கண்களிற்
செம்பொறி கனன்றெழவே
நெடுநில நடுங்கிட நிலத்துளோர் பதறிட நினைத்தனர்
பலபல தவமுனியும்.

23. ரத்தின ஒண்முடி சிரந்தனில் அணிந்தனை சத்தியக்
கோலினைக் கைக்கொண்டாய்
க்ஷத்திரி யாவுனை க்ஷத்திரி யாவுனைச் சார்ந்ததே பிழையென்றார்
கௌசிகரும்.

24. பொங்கின பெருஞ்சினந் தணித்திடு வீரெனப் புகன்றனர்
குலகுரு முனிவசிஷ்டர்
மங்கள காலமுன் மைந்தனை அடைந்தது மாதவர்
மொழிபணி மன்னவனே.

25. கண்மணி இருவரை அழைத்திடு வீரெனக் கட்டளை
கழறினர் கழலரசர்
பெண்மணி கௌசலை மைந்தனுந் தம்பியும் பிதாவையும்
முனியையும் பணிந்துநின்றார்.

26. என்னையாள் முனிவரே இளைஞரா மிருவரை ஏற்றிடும்
என்றனர் தசரதரும்
அன்னையு மாகவே தந்தையு மாகவே ஆதரித் தருளுவீர்
அருந்தவரே.

27. முகுந்தரா மிருவரை இருகரங்கொண்டுநல் மொழிகளுஞ்
மொழிந்தனர் மன்னவர்க்கும்
சகுந்தலை தந்தையாஞ் சற்குரு கௌசிகர் சபையுகன்
றேகினர் இருவருடன்.

## 3. தாடகை வதை.

இராகம்:—ஸ்ரீமத் ராமலிங்க ஸ்வாமிகளது "உனக்கு மெனக்கு இசைந்த பொருத்தம் என்ன பொருத்தமோ" என்ற மெட்டு.

28. விரக தாபம் விலக்கு ரிஷியும் வில்லார் மைந்தரும்
சரயு வென்ற புண்யநதியைச் சார்ந்து கடந்தனர்.

29. வனங்கள் பலவும் பொழில்கள் பலவும் வான மங்கையர்,
புனல்விளையாடும் பொய்கை பலவும் பொலிந்து கடந்தனர்.

30. அரிய தவத்தா ராச்சி ரமங்கள் அணைந்துக் கடந்துபோய்
கரிய தாமோர் கடின நிலத்தைக் கடிதில் அடைந்தனர்.

31. கரிய நிலத்தின் கதையை எமக்குக் கருணை யுடனனி
தெரியச் சொல்வீர் ஸ்வாமி என்றான் தேவ ராமனும்.

32. தேடற்கரிய தேவராமா தவங்கள் அழித்திடும்,
தாட கையெனும் அரக்கி தங்கி தகித்தாள் இந்நிலம்.

33. சிவந்த மயிருஞ் சிவந்த பல்லுஞ் சிவந்த விழியுடன்
உவந்து விண்ணில் ஒளியை ஒழித்து உதித்தாள் தாடகை.

34. பதறி ரிஷியும் பாலன் பின்போய் பாணம் விடுவென
முதலில் பெண்மேல் பாணம் விடுதல் மூர்க்கம் என்றனன்.

35. தாட கையிவள் தைய லெனினும் புருஷ ராயிரம்
ஈடல் லவேயிவ் வரக்கி ஒருத்திக் கென்றனர் கௌசிகர்.

36. பழுத்த முனியை பக்ஷிக்க இரண்டு பயல்கள் ஊறுகாய்
கொழுத்த தினி கிடைத்த தென்றாள் கொடிய தாடகை.

37. துன்பந் தருமோர் சூலம் விடுத்தாள் துஷ்ட தாடகை
அன்ப ராமா அபயம் அபயம் என்றார் தவமுனி.

38. க்ஷணத்தில் ராமன் சரத்தை விடுக்க சூலம் அறுந்திட
பிணமாய் வீழ்ந்தாள் பெரிய மலைபோல் கரிய தாடகை.

39. மலர்கள் மழையாய் பிகுந்து பொழிய மைந்த ரிருவரை
புலனை வென்ற புனித ரிஷியும் புகழ்ந்து வாழ்த்தினர்.

(தொடரும்)

ச. அ. சுப்பராயன்.



## பாலிகைகளை வயதின் மூத்தவருக்கு மணம் செய்தலைத் தடுத்தல்.

இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை—குறள்.

பிரிய சகோதரிகாள்!

நாமனைவரும் முன்ஜன்ம பூஜாபலத்தால் புண்ணிய பூமியாகிய இந்தியா
வில் ஜனித்தோம்; நமது ஒளவை மூதாட்டியார் திருவாய்மலர்ந் தருளி
ரூர்:—

அரியது கேட்கின் வரிவடி வேலோய்
அரிது அரிது மானிட ராதலரிது
மானிடராயினுங் கூன் குருடு செவிடு
பேடுநீங்கிப் பிறத்தலரிது
பேடுநீங்கிப்பிறந்த காலை

னல்லர்ப் பிறப்பினும் மேம்பாடுடைய மானிட ஜன்மத்தை எடுத்தும்
அதோடு கல்வியைக்கற்றும் ஞான உணர்ச்சியுடையோராயுமிருக்கிறோம். இரு
ந்தும் என்ன பயன்? அவ்வழி நடக்காம மனம் சென்றாலும் நம் பழைய
வழக்கங்களுக்கு அஞ்சிநல் வழியில் நடக்க அஞ்சுத லுடையோரா யிருக்கின்
றனம். இவ்வுலகின்கண் அநேககோடி மாந்தர்கள் சந்தானமில்லாமையால்
சந்தானத்தைக்கோரி அநேக நோன்புகளை நோற்றும் அநேகவிதமான அறங்
களைச் செய்தும் அநேகவிதமான உபவாசங்களை அனுஷ்டித்தும் பூர்வ
ஜன்மத்து புண்ணியவசத்தாலும் இப்பிறப்பிற் செய்த புண்ணிய மேலீட்டி
னாலும் குழந்தைகளைப் பெற்று, அக்காலை தாய் தந்தையர் நமக்கு கடவுள்
சந்தானப் பிச்சையை அளித்தனரே என்று ஆநந்தமென்னும் கடலில் மூழ்கி
அக்குழந்தையை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்
த்து அதிக அன்பு பாராட்டி அவர்கள் விவாகத்தில் மாத்திரம் அவர்களை
மீளாவேதனைக் குட்படுத்திவிடுகின்றனர். ஓர் வீணையானது அதிக உயர்ந்த
தாக விருப்பினும் அதிற் பூட்டும் தந்திகள் தகுந்தனவாக யிராவிடின் கேட்
போர் செவிக்கு ரமணீயமாகயிராது. அவ்வாறு பெண்கட்குத் தகுந்த கண
வர் வாய்க்காவிடின் அவர்களுடைய குணங்கள் பிரகாசிக்கா.

பத்து அல்லது பதினைந்து வயதுடைய ஓர் பெண்ணுக்கும் நாற்பத்தை
ந்து அல்லது ஐம்பது வயதுடைய புருஷனுக்கும் மணஞ்செய்து வைக்கின்
றனர். அதினும் நம்மவருக்குள் ஓர் கொடிய வழக்க மிருந்து வருகிறது.
அதாவது விவாகத்திற்கு புருஷர்களுடைய சம்மதத்தைக் கேட்பதே ஒழிய
பெண்களின் சம்மதத்தைக் கேட்பதேயில்லை. அம்மணப்பெண்ணுக்கு இஷ்ட
மில்லாமலிருந்தாலும் விவாகத்தை நடத்தி விடுகின்றனர். அப்போது அப்
பெண்ணின் மனம் எவ்விதமான துன்பத்திற் குள்ளாயிருக்கு மென்பதைச்
சற்றேனும் அப்பெண்ணின் தாய் தந்தையரேனும் உற்றார் உறவினரேனும்
கவனிப்பதில்லை. அப்பெண் பெரியோர்களுக் கஞ்சி விவாகத்தைச் செய்து
கொண்டு துக்க சாகரத்தில் மூழ்கி இல்லற தர்மத்தைக் கூட கைவிட்டு அநேக

பாபத்திற்கு ஆளாகின்றனள். இத்தகைய பெண்மணிகளநேகருளர். அவர்கள் வாழுநாட்களை வீணுநாட்களாக கழிக்கின்றனர். அப்பெண்மணிகள் தங்கள் மனதுக்கிசைந்த வாலிப நாயகரை அடையின் அவ்வித கஷ்டங்களுக்கு உள்ளாகார்கள். புதல்விகளுக்குத் தகுந்த கணவர்களைத் தேடுபவரே அப்பெண்மணிகளின்மேலன்பைக்காட்டும் தாய்தந்தையர்களாவர். அப்படி அல்லாது வயதின் மூத்தோர்க்கு அர்ப்பணம் செய்து அப்பெண்மணிகளை மீளாதுக்க சாகரத்தில் வீழ்க்கும் தாய் தந்தையர் அவர்களுக்குற்ற பெற்றோரல்லர். அவர்களுக்கு சத்துருக்களேயாவர். அக்குழந்தைகளை அன்புடன் வளர்த்து கிளியை வளர்த்து பூனையின் கையில் ஒப்புவிப்பதைப்போல் கிழவர்களுக்கு மணஞ் செய்வித்து அவர்கள் படும் கஷ்டத்தைக்கண்டு சகிக்க வியலாராகித் தாமும் வியாகூலப்படுகின்றனர்!

மணஞ் செய்துகொண்ட கிழவனுக்கும் சிறிதும் சுகமில்லை: அவனுக்கு எப்பொழுதுங் கவலையாகவே யிருக்கும். இக்கவலைமேலிட்ட வாழ்வு வாழ்ந்தென்ன வாழாமலிருந்தென்ன? பயனொன்றே: அன்றியும் வயதின் மூத்தவர்கள் இரண்டாந்தாரமாகவும், மூன்றாந்தாரமாகவும் மணஞ் செய்துகொள்ளும் சிறுமிகளுக்கும், அவர்களின் சொந்த புத்திரிகளுக்கும் என்ன பேதம்? ஒன்றுமில்லையே. நம் நாட்டில் தாரமிழந்த கிழவர்கள் தான் சிறு பெண்களை மணஞ் செய்துகொள்கிறார்கள். முதல் மனைவியை சுடுகாட்டில் விட்ட தினமே நம் வீட்டிலிருக்கும் கிழவிகள, அக்கிழவனுக்குப் பெண் பேசி விடுகிறார்கள். புத்திரர்களைப் பெற்றும் மற்றெல்லா சுகங்களையு மனுபவித்த வயது சென்ற ஒருவன் தன் மனைவி யிறக்க, உலகப்பற்றை அம்மனைவியுடன் எரித்து விடவேண்டும். பின் தன் மக்கட்கும் மற்றவர்கட்கும் பயன்படும்படியாய்த் தன் வாழுநாட்களைக் கழிக்கவேண்டும். அப்படியில்லாமல், தன் மக்ளும் குடும்ப சுகமனுபவிக்கத் தனக்கு வெட்கமில்லாமல் தானும் யவ்வன புருடன்போல் குடும்ப சுகம் அனுபவிப்பவனை ஓர் விலங்கிற்கொப்பிடலாம். அவன் தன் மனைவியைத் தன் துணையென்றெண்ணினவனல்லன். அவளொரு விலைமாதென்றே யெண்ணினவன். மகள், மனைவி, விலைமாது என்றவித்தியாசமொன்று மறிகிலாராயிருக்கும் கபோத கிழட்டுக்காமிகளுக்கு நம்மினிய சிறுமிகளை மணஞ்செய்துகொடுக்கிறார்களே பாபிகள்!

கிழட்டுக் காமிகளே! சாரங்கதரன் கதையை நினைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு மணஞ்செய்துகொள்ள விருப்பமாயின் ஓர் உபாயமிருக்கின்றது. அதாவது உங்கள் வயதிற்குத் தகுந்த விதவைகளை மணஞ் செய்துகொள்ளுங்கள். ஒவ்வொரு வருணத்தாரிலும் பால்ய விவாகத்தின் பயனாகவும், கிழவன் சிறுமி விவாகத்தின் பயனுக்வும், அநேக விதவைகளிருக்கின்றனர். விதவா விவாகம் என்னும் சீர்திருத்தமும் கஷ்டமின்றி நடைபெறும்.

விவேகமுள்ள தாய் தந்தையர்களும், சகோதர சகோதரிகளும், நண்பர்களும் கிழவன் சிறுமி விவாகத்தைத் தடுக்கவேண்டும். சத்தியததின் வழி நிற்பதற்கு அஞ்சவேண்டுவதில்லை. தைரியத்தைக்கைவிட வேண்டுவதில்லை. நாம் நமக்குண்மையாயிருந்தால் எல்லாகாரியமுஞ் சித்திக்கும்.

வயதின் மூத்தவர்களாயிருந்தாலும் ஆஸ்தி அதிகமிருப்பதோடு நாத்திமாயிஃ கொடுமையில்லாமல் சுகமாயிருக்குமென்ற எண்ணத்தினாலும் சில



தாய்தந்தையர்கள் 12-அல்லது 13-வயதுள்ள தங்கள் பெண்மணிகளை 45-அல்லது 50-வயதுடைய கிழவர்களுக்கு மணம் செய்கின்றனர். பிறகு அவர் 60-அல்லது 65-வயதுக்குமே லிருத்தல் பெரும்பாலும் அசாத்திய மாதலால் அப்பெண்ணின் கதி என்னவாகும்? அச்சமயம் அப்பெண்ணுக்கு சரியான வாலிபம். அப்பெண் விதவையாயின் தன் சரீரத்தில் உயிரற்றவளாய் பிரேதம்போல் உலாவுகிறள். என்னே பரிதாபம்! அம்மம்ம என்னகொடுமை!! அக்காலை அப்பாலிகை படும் துயரத்தை எடுத்துச்சொல்ல யாரால் முடியும்? அப்பாலிகையை சிருஷ்டித்த ஈஸ்வரருக்கே தெரியும். பிராமணரில் அநேகர் வயதிற்சென்றவனா யிருப்பவனுக்கு பணத்தாசைகொண்டு தங்கள் பாலியபெண்களை மணம்செய்து துக்கசாகரத்தில் மூழ்கின்றனர். அப்பெண்ணுக்கு தாய் தந்தையரே விதவைச் சடங்குகளையும் செய்கின்றனர். அத்துடன் எல்லாவித சுதந்தரங்களையும் சுகங்களையும் இழந்துவிட்டதாக எண்ணி அவர்களை ஆண்பாலாரும் பெண்பாலாரும் புறக்கணிக்கின்றார்கள். பிறகு அப்பெண் "துரதிஷ்டை" "கொடுத்து வைக்காதவள்" "அவளாலேயே அவள் கணவனிறந்தான்" "அவள் தலைவிதி அவளனுபவிக்கிறாள்" என்றும் அப்பேதைப் பெண்ணை அவளனுபவிக்கும் துன்பம் போதாதென்று புண்ணிற் கோலிட்டதுபோல் நிந்திக்கின்றனர். அவர்களுக்குச் சற்றேனு மிரக்கம் கிடையாது. என்ன பரிதாபம்! அவள் தலைவிதி என்பது விவேகமற்ற பெற்றோர்கள் செயல்தான். வேறல்ல.

இப்பிரபஞ்சத்தில் மானிடரடையக் கூடியது யாது? அறம், பொருள் இன்பம், என்னும் மூன்று. அவைகளை அடையக்கூடிய மார்க்க மெதுவெனின் இல்லற தர்மத்தை வழுவாது நடத்துதலேயாம். அப்படியில்லாதவருக்கு நான்காவதாகிய 'வீடு' எனும் மோட்சபதவி மறுமையில் கிட்டாதென்றே யாவரு மொப்புக்கொள்வார்கள். மேற்சொன்ன விவேக மற்ற விவாகமுறைகளினால் ஒற்றுமை யென்பதும், சமாதான மென்பதும் ஸ்திரீ புருடருக்கில்லாது போயின் இல்லறம் சரிவர நடந்தேறாமல் பாபத்துக் காளாவார்களென்பது சொல்லாமலே விளங்கும். வாயற்ற நிரபராதிகளாயிருக்கும் யௌவனக் குமரிகளைத் தாங்கள் பெற்றெடுத்ததின் பயனாக ஆழயோசித்து விவாகஞ் செய்து கொடுப்பதே புத்திசாலித்தன முள்ள பெற்றோர்களின் கடமையாகும். இதை யாவரும் கவனிப்பாராக. ஸ்திரீ புருஷர் ஒரு மனதோராய் உடலிரண்டு உயிரொன்றென்று ஒத்துவாழ்தலே இல்லறத்தை வழுவாது நடத்துதற்கு முக்கியமானவழி.

☞ சிவஞானம்மாள்.

†"வயது சென்றவர்களும் சிறுவர்களும் ஒரே அறையில் படுத்து நித்திரை போகலாகாது. அப்படிச்செய்ய நேரிடின், வியாதியஸ்தரை குணப்படுத்துவதற் காகத்தான்! நாம் சாதாரணமாய் சொல்லுப ஜீவ சக்தியானது சிறுவர்களிடத்தில் ஏராளமாய் காணப்படும். இச்சீவசக்தியானது அதிநுட்பமாய் சுத்தி செய்யப்பட்ட ஓர்வித பொருளெனலாம். அதினுடன் ...மையும் கருத்தையும் செலுத்தினால் அச்சீவ சக்தி திடகாத்திரர்களிடத்தினின்றும் பலவீனர்களுக்கு செல்லும். தன் பாட்டியுடன் படுத்துறங்கும் குழந்தை வரவர பலவீனமாய்ப் போய்விடும். அக்குழந்தை எவ்வளவுக் கெவ்வளவு

ளவு பலவீனப்படுகிறதோ அவ்வளவுங் கவ்வளவு அக்கிழவி பயன்படுகின்றாள். கிழவர்களை மணஞ்செய்த பெண்ணும் அப்படியே பலவீனப்படுகிறாள். காடு வாவா வென்றும் வீடு போபோ வென்றும் சொல்லிக்கொண்டிருக்கும் ஓர் கிழவன் சிறு பெண்ணை விவாகம் செய்வதைக் காண்பது மிக்க பரிதாபம். அப்பெண்ணோ பணத்துக் காசைப்பட்டு மணம் புரியப்படுகிறாள். பிறகு அவள் கதியோ நரகில் அவதிப்படுவதற்கொப்பாகும்." என டாக்டர் J.M. பீபில்ஸ், MD. M. A. PH. D. என்பவர் "தொண்ணூறு வருடம் இளமையுடனும் பிணியின்றியும் வாழ்வதெப்படி ?" என்னும் புத்தகத்தில் கூறுகிறார். இவருக்கு 90-வயதாயிற்று. 100-வயதாகிற வரையிலும் சீவித்திருப்பேனென்றுறுதியாய்ச் சொல்லுகிறார். ஆகையினால் இவர் சொல்வது நாம் கவனிக்கத்தக்கது.—பத்திராதிபர்.]

# கமல.

## நாடகம் நடிப்போர்,

1. தரேந்திரன்—காஸ்மீர அரசன்
2. கமல—அரசகுமாரி
3. இந்துமுகி } கமலாவின் தோழிகள்
4. பத்மாவதி } கமலாவின் தோழிகள்
5. மந்திரி, விகடன், சேவகன் முதலியவர்கள்
6. அருணேசன்—பஞ்சாப் அரசன்
7. த்ரிவிக்ரமன்—மந்திரி
8. ப்ரபாகரன்—வங்கதேசத்து அரசன்
9. அருணேசனது விகடன்
10. நாரத மகாரிஷி

(கமல தனது இருதோழிகளுடன் அரண்மனையில் பேசிக்கொண்டிருக்கிறாள்.)

### அங்கம்-1. களம்-1.

இந்துமுகி:—எனது பிரியமுள்ள கமல ! நேற்றுசாயங்காலம் இங்கு அருணேச அரசன் வந்திருந்தது உனக்குத் தெரியுமா ?

கமல:—எனது அன்புக்கினிய இந்துமுகி ! நிச்சயமாக எனக்குத் தெரியாது. இந்த அரண்மனையிலா இருந்தார்? எனது தந்தை அவரை மேரையரியாதையோடு வரவழைத்தாரா ? யாவரும் சொல்வதுபோல் அவர் அழகுள்ளவராகவும், தைரியவானாகவு மிருக்கிறாரா ?

இந்துமுகி:—ஒரே மூச்சில் அவ்வளவு கேள்விகளுக்கும் பதில் சொல்ல முடியுமா. அவருடைய நெருங்கிய பந்துவைப்போல் பேசுகிறாய். பத்மாவதி! அவளை அப்படித் தானே பேசுகிறாள் !

பத்மாவதி:—உன் மனது அதிக கவலை கொண்டிருப்பதுபோல் உன் முகம் காணபிக்கிறதே. அவனைப்பற்றி உனக்கு ஆவல் அதிகமுண்டா?



162034

கமல:—(தலைகுனிகிறாள்) பத்மா ! என் தகப்பனாருக்கும் அவருக்கும் விரோதமென்பது எனக்குத் தெரியுமே. அவ்விருவர்களும் விரோதத்தை நீக்கி, சிநேகமானதைக் கேட்பது எனக்கு மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்குகிறது. ஆகையால் இந்துமுகி! உனக்குத் தெரிந்தவற்றையெல்லாம் சொல் நான் கேட்போம்.

இந்துமுகி:—அப்படியானால் நல்லது, சொல்லுகிறேன், கவனமாய்க் கேள். இந்நகரத்தை அவ்வரசன் விட்டு நீங்கினவரையிலும் உன் தகப்பனாருக்கு அவன் இன்னானென்று தெரியாது. எப்படியெனில் அவன் ஒரு வீரனைப்போல் மாறுவேஷம் போட்டுக்கொண்டு வந்து குதிரைப் பந்தயத்தில் நேற்றுசாயங்காலம் ஜயித்து தங்கப்பதக்கத்தை வெகுமதியடைந்தான். பந்தயத்திற்கு வந்தவர்களில் அதிக தைரியவானாகத்தென்பட்டமையால் அவனது உருவப்படத்தைப்பெற்று வைத்துக்கொள்ள விருப்புங்கொண்டார். ஆனால் அவன் அப்பொழுதே போய்விட்டபடியால் அதைப்பெற முடியவில்லை.

பாத்மாபதி:—நான் இப்பொழுது தான் சித்திரம் வரைவோனைக்கண்டேன். அவன் அரசனுடன் பேசிக்கொண்டிருக்கிறான். அவனிடத்தில் படங்களின் மூட்டை ஒன்றுமிருக்கிறது.

கமல:—பத்மா ! நல்ல சங்கதியைத் தெரிவித்தாய். அவன் என் தகப்பனாருடன் பேசி விட்டு திரும்பி வரும்பொழுது, அவனை இங்கு தயவுசெய்து அழைத்து வா. நான் அப்படங்களைப்பார்க்க விரும்புகிறேன்.

பத்மா:—அவ்விதமே செய்கிறேன். (போய்விட்டாள்.)

இந்துமுகி:—என் எஜமானியின் படத்தைப் பார்க்க விரும்புகிறேன்.

கமலா:—இந்துமுகி ! நீ மிகவும் கெட்டிக்காரியாயிருக்கிறாய் ! ஆயினும் நாம் பார்ப்போம். (பத்மா சித்ரம் வரைவோனை அழைத்துக்கொண்டு வந்தாள். இருவரும் கமலாவுக்கு தலைவணங்கி மரியாதை செய்தார்கள்.)

பத்மா:—கமலா, இவர் தான் சித்திரம் வரைவதில் சமர்த்தர்.

கமலா:—நல்லது; சித்திரம் வரைவோரே! உங்களது வித்தையில் நீங்கள் அடைந்திருக்கும் சிறந்த கீர்த்தியைப்பற்றி நாங்கள் கேள்வியுற்றிருக்கிறோம். தங்களிடத்திலுள்ள படங்களைப்பார்க்கலாமா? நாங்கள் ஏதாவதொரு சிறந்த படத்தை விலைக்கு வாங்குவோம்.

சித்திரம் வரைவோன்:—தங்கள் இஷ்டப்படி செய்யலாம். (மூட்டையை அவிழ்க்கிறான்.)

கமலா அநேகபடங்களைப் பார்த்துவிட்டு கடைசியாக ஒரு படத்தைப் பொறுக்கி எடுத்து, அது தான் சிறந்ததென்று நினைக்கிறாள்.

(இந்துமுகி அதில் எழுதியுள்ள அருணேசன் அரசன் என்ற பெயரை வாசிக்கிறாள். கமலா வெட்கமடைகிறாள்.)

JL
Y15 m211, M98 M0
M9...4

கமலா:—(அப்படத்தை அப்புறம் வைத்துக்கொண்டாள்.) ஐயா, ஒரு சிற ந்த படம் எனக்குக் கிடைத்திருக்கிறது. (இந்துமுகி இதைக் கவனிக்கிறான்) மற்ற படங்களைச் சேர்த்து மூட்டையாக கட்டி வைத்துக்கொள்ளும். என க்கு இப்படம் தான் தேவை, இதற்கு என்னவேண்டும்?

சித்திரம்:—ஒன்றும் வேண்டாம். ... ...

கமலா:—இந்துமுகி! 5 பொன் மோஹராக்களை இவருக்குக் கொடுத்து இவரை அனுப்பிவிடு.

இந்து:—நமது இராஜ புத்திரியின் உருவப்படம் எங்களுக்கு வேண்டும், நீங்கள் ஒன்று வரைந்து கொடுப்பீரா?

சித்திரம்:—என்னை அதிகமாக கௌரவப்படுத்துகிறீர்களே!

எனது வேலைக்காரன் அடுத்த ஞாயிற்றுக்கிழமை தினம் அதைக்கொ ண்டு வருவான்.

(சித்திரம் வரைவோன், வேலைக்காரன், இந்துமுகி முதலியவர்கள் விடை பெற்றுப் போகிறார்கள்.)

பத்மா:— பிரியமுள்ள கமலா! நரி முகத்தில் விழித்தாயா? என்ன! நல்ல லாபம் கிடைத்ததே!

கமலா:—பத்மா! ஆம் இதை எப்பொழுதும் என்னிடத்திலேயே வைத் திருப்பேன். (இருவரும் போகிறார்கள்.)

☞ தாதா.

# தர்மமே ஜயம்.

83-வது பக்கத்தொடர்ச்சி.

அந்தக் குப்பையில் எறிந்துவிட்ட குழந்தைகளை அதற்குச் சமீபத்தில் பெரிய வளையிலிருந்த கிழப்பெருச்சாளி அதிக தயவுடனே தன்னுடைய வளையில் ஒவ்வொன்றாகச் சேர்த்து, தன் இனங்களான அநேகம் பெருச்சா ளிகளை வரவழைத்து, அதில் புத்தியுள்ள நூற்றொரு பெருச்சாளிகளை அந் தக் குழந்தைகளுக்குத் தனித்தனி வேண்டியான ஆகாரங்களைத் தினந்தோ றும் கொடுத்து ரட்சிக்கும்படி ஏற்பாடு செய்தது. அந்தப்படி அந்தக் குழ ந்தைகள் ஒரு வருஷமானபின்பு வளைக்கு வெளியில் வந்துதிரிந்து விளையா டிவிட்டு உள்ளே போய்க்கொண் டிருந்தன.

அப்படியிருக்க ஒருநாள் அந்தப் பிள்ளைகளெல்லாம் வெளியில் வந்து ஆடிவிட்டு உள்ளே நுழைந்தன. பின்னாக அந்த வளையில் நுழைந்து கொண்டிருக்கிற இந்தப் பெண் குழந்தையை, அங்கேவந்த எவளோ ஒரு



த்தி பார்த்தாள். அவள் யாரென்றால், முன்னே துஷ்டகாரியஞ் செய்த வ
ளேயல்லாமல் வேறல்ல. அந்த துஷ்டதாதி துஷ்டர்களான ராஜபத்தினிக
ளிடத்தில்போய், நாம் கொன்றுபோட்ட குழந்தைகளில் ஒரு பெண்குழ
ந்தை அந்தப் பெருச்சாளி வளை வாசற்படியில் நுழையக் கண்ணுக்குத்
தெரிந்தது. இன்னம் எத்தனை ஆண்பிள்ளைக் குழந்தைகள் தெய்வகதியால்
ஜீவனுட னிருக்குமோ, அந்த வளையைச் சோதித்து அந்தக் குழந்தைகளைக்
கொன்று போட்டீர்களானால் நல்லதென்று சொன்னாள். அந்த துஷ்ட ராஜ
ஸ்திரீகள் அப்படிச் செய்தால் வெகு தோஷமுண்டு; ஆகையால் தோட்டக்
காரரைக்கொண்டு அந்தக் குப்பையைக் கொத்தி நிரவிப் பாத்திகட்டிப் பயிர்
செய்ய வேண்டுமென்று சொல்லுகிறோம். அவர்கள் நிரவிப்போட்டால்
வளைகளில் மண்விழுந்து மூச்சுவிட இடமில்லாமல் தானே இறந்து போகு
மென்று சொல்லிவிட்டு தோட்டக்காரர்களை அழைத்துக் குப்பையை நிரவ
உத்தரவு பண்ணினார்கள். அந்தத் தோட்டக்காரர்கள் மண்வெட்டி எடுத்துக்
கொண்டு வருகிறதைப் பார்த்து, அந்தக் கிழப்பெருச்சாளி பக்கத்திலிருக்
கும் நூற்றொரு படியுள்ள நடபாவியினுடைய படிக்கட்டுக் கல்லுகளின்கீழ
ஒவ்வொருபடிக்கு ஒவ்வொரு குழந்தைகளாக, அந்தப் படிக்குக் கீழ்ப்போ
கிற வளையிலே இந்தக் குழந்தைகளைக்கொண்டு சேர்த்துவிட்டது. தோட்டக்
காரர்களும் அப்படியே நிரவிவிட்டார்கள்.

இப்படியிருக்க, ராஜாவும் தான்போன ராஜகாரியத்தை முடித்துக்
கொண்டு பட்டணம் வந்துசேர்ந்தான். இந்தத் துஷ்ட ராஜஸ்திரீகள் ராஜா
விடத்திற்குப்போய், ஓய் ராஜாவே, இப்போது நீர் கொண்டுவந்த அற்ப
ஜாதியிற் பிறந்த அந்த வித்தைக்கன்னி பிசாசுபோல மாயத்தினால், தன்
வயிற்றிற்பிறந்த குழந்தைகளைத் தானே கல்லாகச் செய்துவிட்டாள்; அப்ப
டிப்பட்டவளைத் தகுமான சிக்ஷைசெய்து தள்ளிவிட வேண்டுமென்று
சொன்னார்கள். அந்த ராஜாவும் அவர்கள் வார்த்தையைக் கேட்டு அவளை
நிர்த்திசெய்து காவலில் வைத்துவிட்டான்.

இப்படியிருக்க, ஒருகாலத்தில் ஒரு வண்ணான் நடபாவியில் துணிதோ
ய்க்கவந்தான். அவனுடைய ஒரு பெண்குழந்தை அவனுடன் கூடவந்தது.
அவன் நடபாவியிலிருந்து தண்ணீரைமொண்டு வெளியில் தோய்த்துக்கொ
ண்டிருக்கும் காலத்தில், அவனது பெண்குழந்தை இந்தப்படியில் குதித்துக்
கொண்டிருந்தது. அது குதிக்கும்போது அந்தப்படி அதிர்ந்து இந்தப்
பிள்ளைகள்மேல் தாக்கும்பொழுது சகித்துக் கொண்டிருந்தன. இந்தப் படி
க்கட்டில் ஏறி யிறங்கும்போது அதன் கீழிருந்த பெண்குழந்தை மாத்திரம்
சகிக்கமாட்டாமல், நீயும் பெண்ணாயிருக்க, நானும் பெண்ணாயிருக்க, என்
தேகத்தில் கல்படும்படி குதிக்கிறாயே; நானும் உன்னைப்போல வளருகிற
பெண்ணல்லவோ வென்றுசொன்ன சத்தங்கேட்டு பிரமித்து, தகப்பனிடத்
தில்போய், இந்தப் படிக்கட்டில் நான் விளையாடும்போது அதன் கீழிருந்து
பிசாசோ இன்னம் ஏதுவோ ஒன்று, உன்னைப்போல நானும் வளருகிற
பெண்ணல்லவா? என்முதுகில் கல்படும்படி ஏன் மிதிக்கிறாயென்று கேட்
டது என்றுசொல்ல, வண்ணான் இந்தத் துஷ்ட ராஜஸ்திரீகளுக்கு இந்த
சமாசாரத்தைச் சொன்னான். அதைக்கேட்டு அவர்கள் தோட்டக்காரர்க
ளோடே இந்த நடபாவிப் படிக்கல்லுகளெல்லாவற்றையும் பெயர்த்துவிட்டு

அதன்கீழ் ஏதாவது துஷ்டமிருகங்களிருந்தால் அடித்துவிட்டுப் பூமியைச் சமமாய் நிரவிப் போடுங்களென்று ஆக்யாபித்தார்கள். அந்தத் தோட்டக்காரர்கள் மண்வெட்டி, கடப்பாரை இவைகளை எடுத்துக் கொண்டுவந்து இந்தக் கல்லுகளைப் பெயர்க்கும்பொழுது, அதக்குள்ளிருந்த இந்தப் பாலர்கள், டப்பாவியருகிலுள்ள பிள்ளையார் கோவிலிலிருக்கிற விநாயகரைத் துதிசெய்ய, அந்தச் சக்தியுள்ள விநாயகர் இந்தப் பிள்ளைகளைத் தன் கோவிலைச் சுற்றி மாமரமாகவும், அந்தப்பெண்ணை நடுவில் ஒரு ரோஜாச் செடியாகவும் நிர்மாணஞ் செய்து, வளர்ந்து கொண்டிருக்க அநுக்கிரகம் செய்தார்.

இப்படியிருக்க, ஒருநாள் அந்த வண்ணான் தோய்க்கும்போது அவன் பெண் இந்த மாமரங்கள் நடுவிலிருக்கிற ரோஜாச்செடியில் இரண்டு புஷ்பத்தைக் கிள்ள, அந்தப் பெண்: உன்னைப் போல நானும் வளருகிற பெண்ணல்லவா? என் நரம்பைக் கிள்ளுகிறாயே, எனக்கு நோகாதா வென்று கேட்க, அந்த வண்ணாரப்பெண் ஓடிவந்து, தகப்பனுடன் இந்த ரோஜாப்பூவை நான் கிள்ளும்போது, உன்னைப்போல நானும் வளருகிற பெண்ணல்லவா, என் நரம்பைக் கிள்ளுகிறாயே, எனக்கு நோகாதா வென்று சொன்னது என்ன; அந்த வண்ணான் துஷ்ட ராஜஸ்திரீகளிடத்திற்குப்போய், புதுசாய் முளைத்த நூறு மாமரத்து நடுவிலிருக்கிற ரோஜாச்செடி பூவைப்பறித்த என் பெண்ணுடன் இப்படிச் சொல்லிற்றெல, துஷ்டராஜஸ்திரீகள் தோட்டக்காரர்களை அழைத்து; அந்த நூறு மாமரத்தையும் ரோஜாச்செடியையும் வேருடன் பிடுங்கி, உலர்ந்தபின்பு வைக்கோல்களைப் போட்டு நெருப்பினால் கொளுத்திச் சாம்பலாக்கி விடுங்களென், அப்படியே அந்தத் தோட்டக்காரர் வேருடன் பிடுங்கி உலர்த்தி வைக்குங்காலத்தில், நல்ல மழையடித்து வெள்ளத்தில் இழுத்துக்கொண்டுபோய் ஆற்றில் விட்டுவிட, அந்த ஆற்றினுடைய மகத்துவத்தினாலே இந்தப் பாலர்கள் எப்போதும்போல மனுஷியர்களாய் ஒரு நல்ல காட்டில் கரையேறி விட்டார்கள்.

அந்தப் பெண்ணை தன்முத்த ஒரு சிறிய மரத்தின்மேல் உட்கார வைத்து ஐம்பதுபேர் காவலிருந்து, ஐம்பதுபேர் ஆகாரந் தேடிக்கொண்டு வந்து கொடுத்துக்கொண்டிருந்தார்கள். இப்படியிருக்க, ஒரு நாள் நூறு பேரும் ஆகாரம் கொண்டு வரப்போனார்கள். போனவிடத்தில் நடுக்காட்டில் ஒருகுடிசையில் ஒரு பிசாசுக் கிழவிபோல் ரூபங்கொண்டு படுத்துக்கொண்டிருக்க, அதன் பாகங்களில் இவர்கள் சம்பாதிக்கும்படி திரிந்துகொண்டிருக்க, இவர்களைப்பார்த்துக் கோபித்துக்கொண்டு, இந்தப் பிசாசுரூபமானது தன் மாயையினால் இவ்வளவு பேரையும் காக்கையாக்கிப் போட்டது. இவர்கள் காக்கையாய்ப் போயும் அந்தப் பெண்ணிடத்தில் பிரீதியினால் மூக்கினாலே பழம் முதலான ஆகாரங்களைச் சம்பாதித்துக் கொடுத்துக்கொண்டு காப்பாற்றிக் கொண்டேயிருந்தார்கள்.

இப்படியிருக்க, நம்முடைய சகோதரரான அழகுள்ள பிள்ளைகளை யாரோ ஒரு ராக்ஷதன் மாயையினாலே காக்கையாகச் செய்துபோட்டிருக்கவேண்டும், இல்லாவிட்டால் அவர்கள் வராமல் நூறு கருப்புக்காக்காய்களாக வந்து நமக்கு ஆகாரங்களைக் கொடுத்துக்கொண்டு வந்து நம்மை ரக்ஷிக்க வேண்டிய காரணமென்னவென்று தானே யோசித்துக்கொண்டு, அந்த மரத்



தின்பேரில் உட்கார்ந்து அழுதுகொண்டே பெருகிய கண்ணீர்கள் மரத்து வழியால் பெருகிப் பூமியில் ஆறுபோல பிரவகித்தன. அப்போது அந்தத் தேசத்துக்குச் சமீபத்திலிருக்கிற ஒரு பட்டணத்து ராஜகுமாரன் காட்டில் வேட்டைக்குப்போய்த் திரிந்து, ஒரு மிருகமும் அகப்படாமல் வழி தப்பிக் கூடவந்தவர்களையும்விட்டுப் பிரிந்து ஒரு வேட்டைநாயும் இவனும் மிகுந்த தாகத்துடனே சாயங்காலத்தில் இந்தத் தண்ணீர் ஆறாய்ப் பெருகுகிற வழியாக அந்த மரத்தடியில் வந்துசேர்ந்து, ராத்திரி அங்கு படுத்திருப்போமென்று எண்ணி, அந்த மரத்தின் கீழே தன் கையைத் தலையணையாக வைத்துக்கொண்டு மல்லாந்து படுத்துக்கொண்டு மரத்தைப் பார்த்தான். அதில் அதிக ரூபமுள்ள இந்தப் பெண்ணைக்கண்டு: பெண்ணே, நீ என்னைக் கலியாணம் பண்ணிக்கொள், உன்னை நான் நன்றாகக் காப்பாற்றுகிறேன் என்று சொன்னான். இந்தப் பெண்ணும் ரக்ஷகர் ஒருவருமில்லையே, யார் ரக்ஷிக்கப் போகிறார்களென்று யோசித்துக்கொண்டு, அப்படியே ஆகட்டுமென்று ஒப்புக்கொண்டது. அந்த ராஜகுமாரனும் என்னுடைய தாய் தகப்பன்மார் மிகவும் நல்லவர்கள்; உன்னையும் ரக்ஷிப்பார்கள், வாவென்று அழைக்க, அந்தப் பெண், இந்தக் காக்கைகள் என்னிடத்தில் வெகு பிரீதியாக என்னை ரக்ஷிக்கிறதுகள்; இதுகளை விட்டு நான் வரமாட்டேன்; இவைகளும் என்னுடன்கூட வரவேண்டுமென்று ராஜகுமாரனுடன் சொல்ல, ராஜகுமாரன்: இந்தக் காட்டிலுள்ள சமஸ்த ஜந்துக்களையும் வேண்டியிருந்தால் அழைத்துக்கொண்டுவாவென்று சொல்ல, அந்தப் பெண்: காகங்களை அழைத்துக்கொண்டு ராஜகுமாரன் பட்டணத்துக்குப் போய்ச் சேர்ந்தாள்.

(இன்னும் வரும்.) ஐ. வி.

## டைடானிக் என்கிற நீராவிக் கப்பலின் விபத்து.

டைடானிக் என்கிறகப்பல் உலகத்திலுள்ள கப்பல்களைவிட பெரியது. மிகவும் பலமுள்ளது. இது 900 அடி நீளமும், 90 அடி அகலமும், 46,328 டன் நிறையுமுள்ளது, இதில் சுமார் 3,500 பேர் தங்கி யிருக்கலாமாம். இது பிரயாணம் செய்தபொழுது இதில் 2206 ஜனங்கள் பிரயாணம் பண்ணினார்கள். இதில் 703 பேர் தப்பிப் பிழைத்தார்கள்; அவர்களில் 336 ஸ்திரீகள், 52 குழந்தைகள், மீதி யுள்ளவர்கள் புருஷர்கள். சுமார் 1503 பேர் சமுத்திரத்தில் தங்கள் உயிரைவிட நேர்ந்தது மிகவும் விசனிக்கத்தகுந்ததே. சென்ற மாதம் 14-உயில் அமெரிக்காக் கரையைவிட்டு அட்டிலாண்டிக் சமுத்திரத்தில் வருகையில் பனிக்கட்டி மலையில் மோதிக்கொண்டது. உடனே இதன் அடியில் ஒரு துவாரம் உண்டாய் ஜலம் உட்புக ஆரம்பித்தது. நடுராத்திரியாயிருந்தமையால் ஒருவருக்கும் இச்சங்கதி தெரியவில்லையாம், இச்சங்கதி சிறிதுநேரம் சென்றபின் தெரிந்தவுடன் கப்பல் தலைவன் குழந்தைகளையும், ஸ்திரீகளையும் முதலில் கூடுமளவில் காப்பாற்ற வேண்டுமென்று உத்தரவளித்தான். அவ்விதமே 336 ஸ்திரீகளையும், 52 குழந்தைகளையும் படகுகளில் ஏற்றி கரைக்குக் கொண்டுவந்தார்கள். கணவர்களை விட்டுப்பிரிய மனம் ஒவ்வாத ஸ்திரீரத்னங்கள் படகில் ஏறி தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள பலவந்தமாய் மேற்குறித்த ஸ்திரீகள் காப்பாற்ற மறுதலித்து விட்டார்கள்.

ப்பட்டார்கள், ஒரு கோடீஸ்வரர் ஒரு படகில் ஏறினதும் ஒரு ஸ்திரீ அப்ப
டகில் ஏறவந்தாளாம், அதில் இடமில்லையென்று யாவரும் கூக்குரல் செய்
யவே, இம்மகான் தன்னுயிரைச் சிறிதும் பெரிதென்று நினையாமல், "அம்மா!
நீவந்து என்னிடத்தில் உட்காரு, நான் கப்பலுக்குத் திரும்பிப்போகிறேன்"
என்று சொல்லி அம்மாதைப் படகில் உட்கார வைத்துவிட்டு, முழுகிக்
கொண்டிருக்கும் கப்பலுக்குச் சென்று தம் உயிரை விட்டாராம். கடைசி
யாகக் கப்பல் ஜலத்திற்குள் செல்லும்பொழுது பாண்டு வாசிப்பவர்களும்
மற்றவர்களும் "கடவுளே! உங்கள் அருகில் வருகிறோம்" என்று வாத்தி
யம் வாசித்தார்களாம். இவ்வித விபத்து இக் கப்பலுக்கும் 1500-ஜனங்க
ளுக்கும் நேர்ந்ததைக் குறித்து மிகவும் விசனிக்கிறோம். இது கடவுள் செய்
கையே! அவர் எண்ணத்தை யார் அறியக்கூடும்?

நிற்க, இதில் மாண்டுபோனவர்களில் நமது மாதர் மனோரஞ்சனிக்குச்
சித்திரப்படங்கள் அனுப்பி உதவிபுரிந்த W. T. ஸ்டேட் துரை ஒருவர்,
இவர் இங்கிலாந்தில் நடைபெறும் "ரிவியூ ஆப் ரிவியூஸ்" என்ற சித்திரப்
படங்களடங்கிய மாதாந்தரப் பத்திரிகையின் ஆசிரியர். இந்தியாவுக்குப் பல
சமயங்களில் தம்மாலியன்ற நன்மைபுரிந்திருக்கிறார். பற்பல தேசங்களுக்கும்,
அநேகசமயங்களில் உதவிபுரிந்திருக்கின்றனர். பாலர் பாலிகைகள் படித்து
ஞானம் பெறத்தகுந்த புஸ்தகங்களைச் சித்திரப்படங்களுடன் பிரசுரித்திருக்
கிறார். அம் மகானுடைய அனுமதிபெற்றுத்தான் சித்திரப்படங்களுடன்
"இந்திய மாயா விநோதக் கதைகள்" என்ற புஸ்தகத்தைப் பிரசுரித்திருக்
கிறோம். அம் மகானுடைய மரணத்தைக் குறித்து நாம் மிகுந்த விசனப்படு
கிறோம்.

பத்திராசிரியர்.

## மாதர் மனோரஞ்சனி வாழ்த்து.

### அகவல்.

பதின்மூன் றாண்டாய்ப் பாரினி லொவ்வோர்
மதிதோறும் புலவர் மனமுவந் தளிக்கும்
சொற்பொருண் மலிந்த சுவைதரு வியாசமும்
கற்பனைக் கதைகளும் கற்பின் மாட்சியும்
தன்னிடங் கொண்டு தகைமையோ டுலாவி
நன்றுத லார்க்கவை நயம்பட வுணர்த்திய
மனோரஞ் சனியெனும் மாதுல களவும்
ஜனோப காரமாம் தன்மையின் மாறு
திலகுக வனைபோ லிதுநா ளளவும்
நிலை தளராது நேர்மை யோடுந்த
வனிதைநே ய வளர்த்த மறையவர் குலத்துப்
புனிதன் ராமசாமிப் புகழோன
வாழ்க நீடூழி வாழ்க வாழியவே.

ஜானகி அம்மாள்.



## விடுகதை.

### ஒன்பதெழுத்தாகியது ஒருபெயர்:

முதலெழுத்து மானத்திலுமுண்டு மாதத்திலுமுண்டு.
இரண்டாவது தவறிலுமுண்டு தவசிலுமுண்டு.
மூன்றாவது மார்பிலுமுண்டு சார்பிலுமுண்டு.
நான்காவது மனதிலுண்டு குணத்திலில்லை.
ஐந்தாவது அன்னையிலுமுண்டு என்னையிலுமுண்டு.
ஆறாவது மாத்திலுமுண்டு சூத்திலுமுண்டு.
ஏழாவது கஞ்சியிலுண்டு காசியிலில்லை.
எட்டாவது சாத்திலுமுண்டு சமரிலுமுண்டு.
ஒன்பதாவது பொன்னியிலுமுண்டு கன்னியிலுமுண்டு.

இவ்வொன்பதெழுத்துக்களை ஆய்ந்தறிந்து இப்பெயரைப் பத்திரிகையில் பிரசுரஞ்
செய்யுமாறு சந்தாதாரர்கள் எழுதியனுப்புவாராக.

தி. மா. மார்க்கசகாயன்.

## சமாசாரக் குறிப்பு.

"M. B. அண்டு C. M. பரீக்ஷையில் தேர்ந்த முதல் இந்தியமாது:—
M. B. அண்டு C. M. பரீக்ஷையில் சென்னை சர்வ கலாசாலையைச் சேர்ந்த M. B. அண்டு C. M. பரீக்ஷையில்
சென்னை சர்வ கலாசாலையைச் சேர்ந்த M. B. அண்டு C. M. பரீக்ஷையில்
தேர்ந்திருக்கிற மிஸ் C. N. முத்துலட்சுமி அம்மாள் புதுக்கோட்டைவாசி.
இந்தமாது, சிறுவயதில் புதுக்கோட்டையிலுள்ள பயால் பாடசாலையில்
சேர்ந்து கல்விகற்றுவந்தார். இந்தமாது லோயர் செக்கெண்டெரி பரீக்ஷை
பாஸ் செய்தபிறகு, 1903-ம் வருஷத்தில், விண்டிகேட்டின் உத்தரவுபெற்று,
மெட்ரிகுலேஷன் பரீட்சைக்கு பிரைவேட்டாகச் சென்று பாஸ் செய்தார்.
ராஜாவின் உத்தரவின்பேரில் இந்த அம்மாள் காலேஜ் வகுப்பில் சேர்க்கப்
பட்டார். சேர்ந்து வாசிக்கவே படிப்பில் அதிக சிரத்தையும், ஊக்கமும்
உபாத்திமார்களுக்குச் சகலவிதத்திலும் திருப்தியும் காட்டிவந்தார். இங்கி
லீஷ் பாஷையில் மிகத்தேர்ச்சி யடைந்திருந்தார். சிறந்த இங்கிலீஷ் வியாச
ங்களை எழுதிவருவார். 1905-ம் வருஷத்தில் F. A. பரீக்ஷையில் தேர்ந்து
விட்டார். சென்னை மெடிகல் காலேஜில் சேர்ந்து வாசிப்பதற்குப் பணவுதவி
செய்யவேண்டும் என்று புதுக்கோட்டை தர்பாருக்கு விண்ணப்பஞ் செய்து
கொண்டார். புதுக்கோட்டை தர்பார் இவர் விண்ணப்பத்திற்கு இணங்கி,
மாதம் ஒன்றுக்கு 50-ரூபா வீதம் 5-வருஷங்களுக்கு ஸ்காலர்ஷிப்பு கொடு
த்து வருவதாக தீர்மானித்தார்கள். அப்படியே இந்தமாது 1907-ம் வருஷ
த்தில் சென்னை மெடிகல் காலேஜில் சேர்ந்து M. B. அண்டு C. M. பரீட்சை
க்கு வாசிக்கத் தொடங்கினார். இந்தப் பரீட்சை மிகக் கடினமென்றும் இந்த
மாதின் வயதிற்கு இது அசாத்தியமென்றும் இந்தமாது L. M. S. உடன்
திருப்தியடைந் திருப்பது நலம் என்றும், M. B. அண்டு C. M. பரீட்சை
யில் அநுபோகமுள்ள பலர் இந்த மாதுக்குச்சொல்லி அதைரியத்தை உண்

டாக்கி வந்தார்கள். இதைக் கவனிக்காமல் இந்தமாது சுறுசுறுப்பு, ஊக்கம், முதலியவைகளைக் காட்டி முதல் இரண்டு மூன்றாவது வருஷத்திய பரீட்சையிலும் முடிவுப் பரீக்ஷையிலும் தேர்ந்து M. B பட்டத்தையும் நற்சாட்சிப் பத்திரங்களையும் ரணவைத்தியத் தொழிலில் வெகுமதியும் பெற்றார். M, B. அண்டு C M. பரீட்சைக்கு இந்த மாதுவுடன் படிக்கத் தொடங்கிய 50 வித்தியார்த்திகளுள், முடிவு பரீட்சைக்குத் தயாராக வந்தவர்கள ஆறேபேர். அவர்களுள் மூன்றுபேர்தான் பரீட்சையில் தேர்ந்தார்கள். இம்மூவருள் முத்துலட்சுமி முதல்வராயினர். மூன்று தங்கமெடல்கள் பரிசளிக்கப்பெற்றார்."

---

புரசைவாக்கம் சமஸ்கிருத பெண் பாட்சாலை:—ஆனரெபில் ஜஸ்டிஸ் C. சங்கரன் நாயர் C. I. E. அவர்களின் ஆதரணையின் கீழ் புரசை வாக்கத்தில் ஸ்தாபிக்கப்பட்ட ஹிந்து சமஸ்கிருத பெண்பாடசாலையில் ஒழுங்காய் வேலை நடந்தேறி வருகிறது. ஏறக்குறைய 60 பெண்கள்படித்து வருகிறார்கள். த்ரிகணிதசித்தாந்த ஸ்தாபகரும் காலஞ்சென்ற ஸ்ரீமான் வெங்கடேச தீட்சிதருடைய குமாரத்தியும், சாமவேதம் ஹார்மோனியம் ஸ்ரீமான் லட்சுமண ஸ்ரௌதிகளுடைய மனைவியுமான ஸ்ரீமதி கமலம்பாள் அம்மாள் இப்பாடசாலைக்குத் தலைமை உபாத்தினி ஸ்தானத்தை வகித்து வருகிறார். சாமவேதத்திலும், கீதையிலும், ஸ்மிருதி, இதிகாசங்கள், காவியம் முதலியவைகளிலும் இந்த அம்மாளுக்கு பாண்டித்தியம் உண்டு. இதைக் கேள்வியுற்ற அனேகம் பெற்றோர்கள் தங்கள் குமாரத்திகளை இப்பாடசாலைக்கு அனுப்பி வருகிறார்கள். இப்பாடசாலை அதிக நன்மை பயக்கும் என்று கண்டறிந்த அனேக கனதனவான்கள், இதற்குப்பண உதவிசெய்ய முன்னுக்கு வந்திருக்கிறார்கள். சப்தம், ஸ்யாமளதண்டகம், இவைகள் கற்பிக்கப்பட்டு வருகின்றன. வெள்ளிக்கிழமை தோறும் சிறுமிகளை அம்பிகா தேவாலயத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் அவர்களுக்கு அம்பிகையைத் தொழும்படியான ஸ்தோத்ர பாடங்களைக் கற்பித்து வருகிறார்.

---

(a) 16 வயதுக்கு மேற்பட்ட புருஷனுக்கும் 10 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கும்தான் விவாகம் செய்ய வேண்டுமென்றும் அதற்குக் குறைந்த வயதுள்ளவர்களுக்குக் கண்டிப்பாய் விவாகம் செய்யக்கூடாதென்றும, (b) வைசியப் பெண்களுக்கு வித்தியாபி விருத்தியுடன் பாகசாஸ்திரம், சன்மார்க்கவழி, சித்திரம் வரைதல், சங்கீதப் பயிற்சி இவைகளையும் போதிக்க வேண்டுமென்றும்; வைசிய கான்பிரவில் தீர்மானிக்கப்பட்டது.

காலஞ்சென்ற திவான்பகதூர் ரகுநாதராவ்:—1875 முதல் 1879 வரையிலும் மறுபடியும் 1886 முதல் 1888 வரையிலும் ஆக இரண்டுமுறை திவான்பகதூர் R. ரகுநாதராவ் C. S. I ஹோல்கார் மகாராஜாவின் மந்திரியாக் வேலை பார்த்துவந்தார். ஹோல்கார் மகாராஜா இவர் மரணத்தைக் கேட்டு, காலஞ்சென்ற ரகுநாதராயரின் குடும்பத்தாருக்கு அநுதாபத் தந்தி அனுப்பியதும் தவிர, ஒரு நாள் தர்பார் ஆபிஸை மூடி யிருக்கும்படியும் உத்தரவு செய்தார். ராயர் அவர்களின் மரணத்தைக்குறித்து துக்கம்பாராட்ட மகாஜன சபையின் ஸ்பெஷல் மீட்டிங் நடந்தது. நாமும் மிக வருந்துகிறோம்.

---



ஸ்திரி டாக்டர்களை நியமித்தல்:—மிஸ்டர் பாரிஸ்டர் பார்லிமெண்டில் ஸ்திரி டாக்டர்களை இந்தியாவில் நியமிக்க வேண்டுமென்று ஸர்ஜன் ஜனரல் லூகியின் சிப்பார்சை இந்தியா கவர்ன்மெண்டு ஒத்துக் கொண்டார்களா வென்று கேட்க, மிஸ்டர் மாண்டேகு, "இல்லை. சில மாதர்களால் இந்தியா மந்திரிக்கு இந்தியாவில் ஸ்திரீ டாக்டர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்று மனுச்செய்து கொள்ளப்பட்ட விஷயத்தை இந்தியா கவர்ன்மெண்டார் கவனித்து வருகிறார்கள். இதுவரையில் ஒன்றும் முடிவு சொல்லவில்லை" என்றார்.

---

இந்தியாவுக்கு ஸ்திரீ வைத்தியர்கள்:—இந்தியாவுக்கு ஸ்திரீ வைத்தியர்கள் அவசியமென்று லண்டன் "டைம்ஸ்" பத்திரிகையில் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது:—"இந்திய ஸ்திரீகள் படுதா ஸ்திரீகள் ஆனபடியாலும், புருஷரிடத்தில் அவர்கள் வைத்தியம் பார்த்துக்கொள்வதில்லை யாகையாலும், வைத்தியம் கற்ற ஸ்திரீகளைக் கவர்ன்மெண்டே தயார்செய்து அவர்களுக்குச் சம்பளம் பென்ஷன் முதலியவைகள் புருஷ வைத்தியர்களுக்குள்ளபடி இருக்கவேண்டுமென்றும், இந்திய ஸ்திரீகளை வைத்தியத்தில் தயார்செய்வது அவசியமென்றும் எழுதப்பட்டிருக்கிறது. இப்படிச் செய்யாதவரையில் இந்திய ஸ்திரீகளுள் மரணங்கள் அதிகமாய் நேரிட்டுக்கொண்டிருக்கும். பிரிட்டிஷ் நாகரிகத்துக்கே அது ஒரு பெரும் வசையாயிருக்கும். கவர்ன்மெண்ட் அப்படிச் செய்தால் அது அவர்கள் நல்லெண்ணத்தைக் குறிப்பதாக இந்தியர் கருதுவார்கள். அதனாலுண்டாகும் செலவு பெரிதல்ல. காலாந்தரத்தில் இந்தச் செலவு வரும்படியால் சரிக்கட்டிப்போனாலும், ஆரம்பத்தில் கவர்ன்மெண்ட் முயற்சி அவசியம். சக்ரவர்த்தி இந்தியாவுக்குப் போய் வந்ததின் அறிகுறியாக இந்தத்திருத்தம் மிகவும் பொருந்தும். இப்படி இந்தப் பத்திரிகை எழுதுகின்றது. இந்திய ஸ்திரீகள் நல்ல வைத்தியர்களில்லாமல் மாண்டுபோகிறார்களென்பதில் சந்தேகமில்லை. நாட்டு வைத்தியர்கள் பயிற்சியில்லாமல் பிரயோஜனமற்றிருக்கிறார்கள். நாட்டு வைத்தியர்களை நமது பூர்வீக சாஸ்திரங்களின்படியும் வழக்கத்தின்படியும் தயார்செய்து அவர்களைக்கொண்டு ஸ்திரீகளுக்கு வைத்தியம்செய்வித்தால் அது ஏழைகளுக்குப் பிரயோஜனப்படும். மேல்நாடுகளது வைத்தியமுறை அதிகச் செலவு பிடிக்கும். அந்த வைத்திய முறையில் தயாரான வைத்தியர்கள் செல்வமுள்ள குடும்பங்களைச் சேர்ந்த ஸ்திரீகளுக்குப் பிரயோஜனப் படுவார்கள்; மேலும் அவர்களை தேசத்துக்கு வேண்டிய அளவு தயார்செய்வதும் கஷ்டம்."

---

"விசாகபட்டணத்தில் ஹிந்துஸ்திரீகளுக்கு ஓர் ஹைஸ்கூல்:—"விசாகப்பட்டணத்தில் ஹிந்துஸ்திரீகளுக்கு ஹைஸ்கூல் ஒன்று கூடிய சீக்கிரத்தில் ஸ்தாபிக்கப் படுவதாகக் கேட்டுச் சந்தோஷப் படுகிறோம். தெலுங்கு ஜனங்கள் தங்கள் வழக்கம்போல் அப்பாடசாலையின் அபிவிருத்தியைக் கருதாமல் உதாசீனமாய் இருந்து விடுவார்களேயானால் பொதுஜனங்களின் தேகப்பிரயாசமும் பணச்செலவும் வீணாகிவிடுமே என்று பயப்படுகிறோம். 7-வது ஸ்டாண்டர்டு வரையிலும் தேசபாஷையைக் கட்டாயம் பாடமாகவே கற்பித்து வரவேண்டும். முதல்பாரத்திலிருந்து இங்கிலீஷ் பாஷையை இஷ்டமான பாடமாகக் கற்பித்துவரலாம். இப்பொழுது இருக்கும் வித்யா விதிகளின்படி இங்கிலீஷை கட்டாயமான பாடமாக எடுத்துக்கொள்ளும் பட்சத்தில் இந்த பாடசாலை அபிவிருத்தி யடையாது. நாம் எதிர்பார்த்துவரும் பெண்களுக்கு செக்கெண்டரி நன்மை ஹிந்து ஸ்திரீகளுக்கு உண்டாகாது.

உயர்தரப்படிப்பு கற்றுக் கொடுக்கவேண்டும் என்பதின் கருத்தென்னவெனில் (ஸ்திரீகள் பிற்காலத்தில் தங்கள் கடமைகளைச் சரிவர நடத்தி வருவதற்குப் பிரயோஜனமாக இருப்பதற்கேயாம்,) என்று ஆனரெபில் மிஸ்டர் கோகலே பெண் கல்வியைப்பற்றிப் பேசும்பொழுது சொல்லியிருக்கிறார். இந்தியாவில் பெண்கல்வி முறையை இந்த 50 வருஷகாலமாக அனுசரித்து வருகிறதில் யாதொரு அபிவிருத்தியையும் காணோம். மிஸ்டர் கோகலேயின் முறையை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவராத பக்ஷத்தில் பெண்கல்வி ஸ்திரீகளுக்கும் பெண்களுக்கும் பிரயோஜனப் படவேமாட்டாது"

"நம் தேசத்தில் நம்மவர்கள் தம் வாழ்நாளில் விசேஷ திரவியத்தை சம்பாதித்தாலும் பேர்பாதி திரவியம் வீணுக வைத்தியத்தில் செலவழிந்து போகின்றது. ஆதிகாலத்தில் நம் குடும்பங்களில் ஸ்திரீகளிடத்தில் வைத்திய சாஸ்திரப்பயிற்சி இருந்துவந்தது. அதனால் வீண் பணச்செலவு ஏற்படாமல் எவ்வளவோ நன்மைகள் ஏற்பட்டுவந்தன. புருஷர்களைவிட ஸ்திரீகளுக்கு உப்பு, புளி, காரம் இவைகளைச்சேர்த்து பாகம்பண்ணும் அப்பியாசம் ஸ்வயமாகவே ஏற்பட்டிருக்கிறபடியால் ஸ்திரீகளுக்கே மருந்துகளைச் செய்யும் திறமையைக் கற்பிப்பதற்குச் சுகமாயிருக்கும். ஆகவே பலவித நன்மையை கருதி நம் சிறுமிகளுக்கு ஆயுர்வேத சாஸ்திரம், சுகாதாரகல்வி, பாகசாஸ்திரம் இவைகளின் பயிற்சியை உண்டுபண்ணி வைக்கவேண்டியது அவசியம்.

இதைப்போலவே நம் குடும்ப க்ஷேமத்தைக் கருதி நம் சிறுமிகளுக்கு கணக்கு, சுதேச சரித்திரம், பூகோளசாஸ்திரம், நம் இந்துக்களுக்கு முக்கியமாய் உள்ள புண்ணிய க்ஷேத்திரம் தேவாலயம் முதலியவைகளின் சரித்திரம், மதக்கொள்கை இவைகளைக் கற்பிக்கவேண்டும். இவ்வாறே நம் சிறுமிகள இலவாழ்வில் இருக்கையில் மிதமாகப் பணச்செலவு செய்யும்படிக்குள்ள அப்பியாசத்தை நம் சிறுமிகளுக்கு நாம் கற்பிக்கவேண்டும். ஆகையால் நம்மவர்களின் குடும்ப க்ஷேமத்தைக் கருதி, ஸ்திரீகளுக்காக ஏற்பட்டிருக்கும் பாடசாலைகளில் ஆங்கிலம், சம்ஸ்கிருதம் முதலிய தேசபாஷைகள், சங்கீதம், ஜ்யோதிஷம், வைத்தியம், தேசசரித்திரம், பூகோளசாஸ்திரம், கணக்கு, பாகசாஸ்திரம், சுகாதாரக் கல்வி முதலியவைகளை நம் சிறுவர்களுக்கு நாம் கற்பிக்கவேண்டும்."

ஜார்ஜ் அரசர் சிம்மாசனமேறிய உற்சவம்:—மேமீ 6உ ஜார்ஜ் அரசர் சிம்மாசனமேறி ஒருவருஷமாகிறது. அவ்வருஷ பூர்த்தி மகோற்சவம் இன்று உலகெங்கும் கொண்டாடப்படுகிறது.

ஹிந்து யூனிவர்ஸிடிக்கு உதயபுரம் மகாராஜாவின் நன்கொடை:—ஹிந்து யூனிவர்ஸிடி நிதிக்கு உதயபுரம் மகாராஜா அவர்கள் 1½ லட்சம் ரூபாய் உபகரிக்கிறாரென்று இப்போது தெரிந்து சந்தோஷிக்கிறோம்.

காலஞ் சென்றுவிட்ட எட்வர்ட் அரசரின் ஞாபக ஆராதனை:—மேமீ 6உ விண்ட்ஸர் மாளிகையைச் சேர்ந்த ஸெயிண்ட் ஜார்ஜ் சேப்பலில் காலஞ் சென்றுவிட்ட எட்வர்ட் அரசரின் ஞாபக ஆராதனை நடத்தப்பட்டது. அதற்கு ஜார்ஜ் அரசரும் மேரி ராணியாரும், அலெக்ஸாண்டிரா ராணியாரும் ராஜ குடும்பத்தைச் சேர்ந்த வேறு பலரும் வந்திருந்தார்கள்.



[illegible]தி பத்யநாள் கொண்டாட்டம்:—லண்டன் மேமீ 24உ உலக முழுமையும் ஏகாதி பத்யநாள் கொண்டாடப்பட்டது. அவற்றுள் கானடா வில் கொண்டாட்டம் பலம். டாரண்டோவில் 100,000 பள்ளிச்சிறுவர்கள் இவ்வுத்ஸவத்தில் கலந்து களித்தார்கள். யுத்த வித்யார்த்திகள் கானடாவின் கவர்னரான காநாட்டுக் கோமானால் பார்வையிடப்பட்டார்கள்.

பம்பாயில் மாதர்கள் காலேஜ்:—பம்பாயிலுள்ள ஜெஸுவட் (Jesuit) பாதிரிமார்கள் அவ்வூரிலே மாதர்கள் காலேஜ் ஒன்று ஏற்படுத்தப் போகிறார்களென்று சொல்லப்படுகிறது. அவர்களுடைய ஆலோசனையில் ரோமன் காதலிக் ஆர்ச்பிஷப் (Archbishop) கூட அக்கரைகாட்டி வருகிறாரென்றும் பம்பாய்க் கவர்னர் அந்த யோசனையை அங்கீகரித் திருக்கிறாரென்றும் தெரிகிறது. விவரங்கள் கூடிய சீக்கிரத்தில் வெளியாகக்கூடும்.

ஜார்ஜ் சக்கரவர்த்தி பென்ஷனர்களைப் பார்வையிட்டார்:—மேமீ 20உ செல்ஸி பென்ஷனர்களை சக்கரவர்த்தி பார்வையிட்டார். 1805-ம் வருஷத் திற்கும் பிறகு சக்கரவர்த்தியே நேரில்போய் பென்ஷனர்களைப் பார்வையிட்டதில்லை. ஸர் ஜார்ஜ் உவெட்டின் வீட்டுக்குச் சென்று, தேக அசௌக்யமாயிருக்கும் அவரையும் பார்வையிட்டார். ஸர் ஜார்ஜ் உவெட் அசௌக்ய மேலீட்டினால் எழுந்து அரசரைத் தக்கபடி வரவேற்க முடியவில்லை.

அல்டர்ஷாட்டில் ராஜசக்கரவர்த்தி:—டென்மார்க்கு அரசரின் அபரக் கிரியை அல்டர் ஷாட்டில் நடந்தபோது ஜார்ஜ் சக்கரவர்த்தியும் மேரி சக்கரவர்த்தினியும் உடனிருந்து மரியாதை செய்தார்கள். அந்தக் கிரியைகள் முடிந்தபிறகு சர்ச்சில் தொழுது கொண்டிருந்த ஜனங்களுக்கும் மகாராஜா சக்கரவர்த்திக்கும் எதிரில் ராணுவப்படை அணிவகுத்து நின்று நடைபுரிகின. அச்சமயத்தில் அந்த ஜில்லாவிலுள்ள படைகளின் தலைமை பாகங்கள் அவற்றுடன் சென்றன. உடனே சக்கரவர்த்தி தம்பதிகள் லண்டன் திரும்பினார்கள்.

நிடாவோலில் ஸ்திரீகளின் கூட்டம்:—இந்தமாதம் 24-ந்தேதியன்று ஆந்தரமஹிலசபை கூடிற்று. ஸ்ரீமதி அட்சந்த ருக்மணி அம்மகாரு அக்ராசனம் வகித்தார். ஸ்திரீகளின் க்ஷேமத்தைப்பற்றியும் முன்னேற்றத்தைப் பற்றியும் விசேஷ வியாசங்கள் எழுதி 16 ஸ்திரீகள் வாசித்தார்கள். ஜெமீன்தார் மிஸ்டர் சந்திர ரெட்டியின் மனைவியரான ஸ்ரீமதி K லட்சுமி நரசிம்மகாரு "த்ருகேச நந்தினி" என்கிற ஆந்தர பாஷையில் எழுதப்பட்ட முதல் நாவலை ரெவ்யூ செய்தவர்களுள் முதல்வரான ஸ்ரீமதி கல்லுப்பிள்ளி ஓவந்தடரமணம்ம காருவுக்கு 50 ரூபாய் வெகுமதி கொடுத்தார்.

லார்ட் பெண்ட்லண்ட்:—சென்னைக் கவர்னராய் வரப்போகிற லார்ட் பெண்ட்லண்ட் ஸ்காட்லண்ட் மந்திரியாயிருந்தவர். அவர் ராஜ்ய நிருவாகத் திறமைமட்டுந்தா னுடையவரென்று நாம் நினைப்பதற்கில்லை. அவர் புஸ்தக கிரந்தகர்த்தா என்று காண்கிறது. ங்கள் எழுதும் யோக்கியதையுமுடைய பிரபலஸ்தர்களாயுள்ள 1600 கன 1901 முதல் 1911 வரை இறந்துபோன வான்களின் ஜீவிய சரித்திரங்களை யெழுதிய 300 சிறந்த கர்த்தாக்களில் அவர் ஒருவரென்று தெரிகிறது. அவர் மிஸ்டர் ஆஸ்க்வித்துக்கு முன்னே

ம்பரல் கவர்ன்மெண்ட் தலைவராயிருந்த ஸர் ஹென்ரி காம்பல் பானர்ம
னின் ஜீவிய சரித்திரம் (Biography) எழுதியிருக்கிறார்.

மகமதிய நான்பிரன்ஸ் பெண்கல்வி:—"பெண்களின் படிப்பை உத்தே
சித்து இச்சங்கம் ஏற்படா திருந்தபோதிலும், பெண்கல்வி அவசியம் என்று
கருதி, இச்சங்கத்தார் மகமதியப் பெண்களின் படிப்பு அபிவிருத்திக்கென்று
கொஞ்சம் தொகையை உதவி வருகிறார்கள். மகமதிய சமூகத்தைச் சேர்ந்த
கனதனவான்களின் பெண்கள் படிப்பதற்கு சென்னையில் ஓர் சிறந்த செக்க
ண்டெரி பாடசாலை இருக்கவேண்டியது அவசியம் என்று எண்ணி வந்தார்
கள். இவ்விஷயத்தைப்பற்றிப் பேசித் தீர் மானிப்பதற்காக ஹோபர்ட்டு
ஸ்கூலில் இரண்டு மீட்டிங்குகள் கூடின. இவ் விஷயத்தில் பாடசாலை இன்ஸ்
பெக்டரஸான மிஸ்லிஞ்சு மிகசிரத்தையெடுத்துக் கொண்டு உழைத்து வந்
தார். மகமதிய கனதனவான்கள் தங்கள் பெண்களின் படிப்பைப்பற்றி அதி
க கவலைப்பட்டதாகக்காணப்படவில்லை. ஆனால் நாம் கூடியசீக்கிரத்தில் மகம
மதிய கனதனவான்கள் பெண்களின்படிப்பு அபிவிருத்தியைக் கருதி உழை
த்து வரவேண்டும்."

பாரத் ஸ்திரீ மகா மண்டலம்:—லாகூரில் மிஸ்ஸஸ் ஸாரளாதேவி
சௌது ராணியின் நன் முயர்ச்சியால் சென்ற 4 வருஷகாலமாய் ஸ்தாபிக்கப்
பட்டு நடந்துவரும் பாரத்ஸ்திரீ மகாமண்டலத்தின் 4-வது வருஷோற்சவம்
அந்த அம்மாளின் வீட்டிலேயே சிலதினங்களுக்கு முன்னே நடந்தது. அந்த
மகாமண்டலத்துக்கு கிளை மண்டலங்கள் வட இந்தியாவிலே அநேக இடங்
களில் ஸ்தாபிக்கப்பட்டு கல்யாணமான ஸ்திரீகளுக்குப் படிப்பு சொல்லிவை
க்கப்பட்டுவருகிறது. அந்த மகோற்சவ சமயத்தில் சாரளாதேவி சௌதுராணி
அந்த மகாமண்டலம் இன்னவேலைசெய்து வந்திருக்கிறதென்று எடுத்துச்
சொன்னார். அச்சமயம் லேடிஹார்டிஞ்சும், பஞ்சாப லெப்டினண்ட் கவர்னர்
ஸர் L. டேனும் அவருடைய மனைவியார் லேடிடேனும் தங்கள் கைப்பட
எழுதியனுப்பிய ஒற்றுமை யுணர்ச்சிக் கடிதங்களை அந்த அம்மாள் வாசித்து
காண்பித்தார்கள். சில அமெரிக்க மாதர்கள் எழுதியிருந்த கடிதங்களையும்
வாசித்துக் காண்பித்தார்கள்.

கோப்பன்ஹேகனில் மிருகங்கள் வைக்கப்பட்டிருக்கும் தோட்டம்:—
இந்தியாவி லிருந்து ஆண் யானை பெண் யானை ஆக இரண்டு யானைகள்
கொண்டுவரப்பட்டு, இத்தோட்டத்தில் வைக்கப்பட் டிருக்கின்றன. பெண்
யானை ஐந்துவருஷம் கழித்து இப்பொழுது இரண்டாவது குட்டிபோட்டிரு
க்கிறது. 1907-ல் முதல் குட்டி போட்டது. அதற்கு இப்பொழுது 4-வரு
ஷம் ஆயிற்று. அது சுறுசுறுப்பாயும் திடகாத்திர முள்ளதாயும் இருக்கிறது.
இவ்விரண்டு குட்டிகளின் தேகத்தின் மேல்பாகத்தில் முக்கியமாய்த் தலையி
லும், முதுகிலும் நீண்ட கறுத்த மயிர்கள் நிறைந்திருக்கின்றன. இரண்டா
வது குட்டியைப் பார்க்கிலும் முதல் குட்டியின் தேகத்திலும் தலையிலும்
முதுகிலும் உள்ள மயிர்கள் அதிக நீளமா யிருக்கின்றன. இக்குட்டி யானை
தலையிலும் முகத்திலும் மயிரே இல்லாத தன் தாய் யானையின் பக்கத்தில்
நின்று கொண்டிருக்கையில் பார்ப்பவர்களுக்கு இது மிகவும் ஆச்சரியகர
மான தோற்றத்தைக் காண்பித்துக்கொண்டிருக்கிறது. லண்டனிலுள்ள மிரு
கங்கள் வைக்கப்பட்டிருக்கும் தோட்டத்தில் 1903-ம் வருஷத்தில் ஒருயானை
குட்டிபோட்டது. அது இந்த கோபன் ஹேகன் யானைக் குட்டியைப்போல்
அடர்த்தியான மயிர்களை உடையதாயிருக்கிறது.

# மாதர் மனோரஞ்சனி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol. XIV. } Madras: June 1912. { No-6.
புத்தகம் - கச. } சென்னப்பட்டணம்: ஜூன்மீ 1912. { இலக்கம் - 6.

## ஏழைப்பெண்களுக்கு உதவி.

சென்னையில்மாது ஸ்ரீ சுப்பலக்ஷ்மி அம்மாள் அவர்கள் ஏழைப்பெண்
களை ஒரு தனிமையான இடத்தில் வசிக்கும்படிசெய்து அவர்களுக்கு, கல்வி,
கைத்தொழில் சங்கீதம் முதலியவைகளைப் போதித்து வருவதற்கு வேண்
டிய முயற்சிகளைச் செய்து வருவதைக் கேட்க மிகவும் சந்தோஷப் படுகி
றோம். இதற்கு திரவியம் முதலில்வேண்டும். அதற்காக இம்மாது ஒரு நிரு
பம் எழுதி எல்லாப் பத்திரிகைகளுக்கும் அனுப்பி யிருக்கிறார்கள். அவ்விதம்
செய்ததில் ஏதோ சுவல்பதொகை வசூலாயிற்றாம், இன்னும்வேண்டியதொ
கை வசூலாக வில்லையாம். நம்மவர்களில் பெரிய அந்தஸ்திலுள்ளவர்களும்,
ஜமீன்தார்களும் இத்தருணத்தைக் கைவிட்டுவிடாமல் தங்களாலியன்ற உதவி
புரிய முன் வருவார்களென்று நம்புகிறோம். மத்தியவகுப்பார் மொத்தமாக
பணம்கொடுத்து உதவிபுரிய முடியாது 'அவர்களில் ஒவ்வொருவரும் வரு
ஷாவருஷம் ஒருரூபாய் இத்தர்மசாலைக்குக் கொடுத்து உதவிபுரியலாம். இவ்
விதம் பூனாவிலுள்ளகைம்பெண் ஆஸ்ரமத்திற்கும் ப்ரோபஸர்கார்வேஅவர்கள்
வசூல்செய்து, அவ்வாஸ்ரமத்தை நல்லநிலைமைக்குக் கொண்டுவந்திருக்கிறார்.
'சுப்பலக்ஷ்மி அம்மாள் பி. ஏ. பரிக்ஷையில் தேறியுள்ளாராகையால் இவ்
வித ஆஸ்ரமத்தைச் செவ்வனே நடத்துவார்களென்பதற்குச் சந்தேகமி
ல்லை. இதற்கு மிஸ் லிஞ்ச் என்கிற மாது பிரசிடெண்டாகவு மிருக்கிறார்கள்.
கனம் ஜட்ஜி சங்கரநாயரின் மனைவியாரும், லேடி ராமசுவாமி முதலியா
ரும், கனம் ஜட்ஜி சதாசிவஐயரின் மனைவியாரும் இதற்கு உப அக்ராசனாதி
பதிகள். ஸ்ரீமதி சுப்பலக்ஷ்மி அம்மாளும் ஸ்ரீமதி வி. பட்டம்மாளும் காரிய
தரிசிகள். இன்னும் சில கனவான்கள் மெம்பர்களாகவு மிருக்கிறார்கள்.
ஆகையால் நமது தேசத்திலுள்ள கனதனவான்கள் இம்முயற்சி விருத்தி
யடையுமாறு தங்களாலியன்ற உதவிபுரிய முன் வருவார்களென்று நம்பு
கிறோம். மேலும் நமது கையொப்ப நேயர்களும் இந்த தர்ம கைங்கரியத்
திற்குத் தங்களால் கூடிய திரவிய உதவியைச் செய்வார்களென்றும் உறுதி
யாக நம்புகிறோம். ஸ்ரீமதி சுப்பலக்ஷ்மி அம்மாள் செய்துவரும் தர்மகை
ங்கரியம் விருத்தி யடையுமாறு ஈசன் அருள் புரிவாராக. இவ்வித தர்மம்
செய்ய விரும்புவோர் சென்னை, எழும்பூர் ஹைரோட், 3,38 நம்பர் கிரஹத்
திலுள்ள ஸ்ரீமதி ஆர். எஸ். சுப்பலக்ஷ்மி அம்மாள் பி. ஏ. என்று எழுதி
அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

## சீதாகல்யாணம்.

### 4. கௌசிகர் வேள்விமுடித்தல்.

இராகம்:—"ஆஞ்ச நேயவா—ஓங்—காரப் பிரணவா"
என்ற நோட்டு மெட்டு.

40. படைத்தற் கரியதோர்—புவி—படைத்த முனியருள்
படைக்க லங்கள் பணிவொ டடைந்தார் ராமலக்ஷ்மணர்.

41. காதம் இரண்டினைக்—கடந்—தேகி ஆங்கொரு
ஓதை செவியில் உற்ற துணர்ந்தார் ராமலக்ஷ்மணர்.

42. புனிதர் செவிகளில்—புகு—யர்ழின் ஒலிப்ழி
இனிய கோஷம் யர்தென் றுரைத்தார் ராமலக்ஷ்மணர்.

43. தூய கோமதி—நதி—தூய சாயுவில்
பாயும் ஒலியென் றுரைக்கக் கேட்டார் ராமலக்ஷ்மணர்.

44. சந்த நதியடைந்—ததைச்—சார்ந்த மானமியம்
பந்தம் ஒழித்தோன் பகரக் கேட்டார் ராமலக்ஷ்மணர்.

45. அகத்தை அடக்கிடும்—நெறி—அறிந்த முனியொடு
அகன்ற வேள்விக் களத்தை அடைந்தார் ராமலக்ஷ்மணர்.

46. விரும்பி யாண்டுசெயும்—உயர்—வேள்விக் காவலாய்
இருங்கள் என்றே இயம்ப உவந்தார் ராமலக்ஷ்மணர்.

47. விஸ்தீ ரணம்பெறும்—பெரு—வேள்விக் களத்திற்கு
அஸ்த்ரக் கோட்டை அணியாய் அமைத்தார் ராமலக்ஷ்மணர்.

48. இன்னல் இழைத்திடும்—திறல்—எண்ணில் அரக்கரை
மன்னன் காலன் மகிழ அழித்தார் ராமலக்ஷ்மணர்.

49. வலிய சுவாகுவின்—உயிர்—வதைத்து மாரீசனை
ஒலிக்குங் கடலுள் ஒழித்தே உவந்தார் ராமலக்ஷ்மணர்.

50. நினைத்த தனைத்தையும்—நிறை—வேற்றுங் கௌசிக
முனிவர் வேள்வி முடித்தார் நிகரில் ராமலக்ஷ்மணர்.

51. மாசில் மாதவர்—உப—தேசத் துடனவர்
ஆசிர் வாதம் அடைந்தார் எங்கள் ராமலக்ஷ்மணர்.

### 5. அகலிகை சாபவிமோசனம்.

இராகம்:— இந்துஸ்தானி காபி. தாளம் - ஆதி,

52. மிதிலா புரி ஜனகன் புரி மெய்வேள் வியைக் காண — நிறை
மதியார் முக மைந்தீர் இன்று மகிழ்ந்தே குவம் என்றார்.



53. மனத்தே என்றும் மகிழ்வே யளி மலர்ச் சோலையை அணுக—கொடுங்
கனல்சூ ரியன் கடலாழ்ந் திடக் களையா றினர் ஆங்கு.

54. அதிகா லையில் எழுந்தே இயோர் நிறையாற் றினை அணுக — அந்த
நதிகங் கையின் நன்மான் மியம் நவின்றார் குரு முனியும்.

55. கங்கை யகன் றிடமே வருங் கார்மே கங்கள் தவழும் — திரு
நங்கை உறை ஜனகன் வள நறுநாட் டினை அடைந்தார்.

56. இருசீ ஷரை இருகைக் கொண்டு இணையில் முனி ஏக — உல
கொருசீ ஷனும் ராமன் பதம் ஓர்கல் லினைத் தொடவே,

57. வில்லுங் கையு மாய்ச்செல் எங்கள் வீரன் பதம் படவே — கருங்
கல்லுந் தன துருமாறிட ஒருகா ரிகை எழுந்தாள்,

58. எழுந்தே நின்ற மங்கை எங்கள் எழில்ரா மரை ஏத்தி—கரங்
தொழுதே நிற்கத் தோன்றல் வியந்திட மாதவர் மொழிவார்.

59. அருங்கற் பமை அணங்காம் அக லிகையென் றவிவ் வம்மை—மதி
மருண்டிந் திரன் புரிவஞ் சத்தில் மாகற் பினை இழந்தாள்.

60. இவர்நா யகர் முனிகௌ தமர் இந்நங் கையைச் சபித்தார்—ஸர்வ
புவிநா யகா உன்பா தங்கள் போக்கிற் றதச் சாபம்.

61. என்றே யுரை குருகௌ சிகர் இருமைந் தரும் அணங்கும் — மகிழ்ந்
தன்றே தவ முனிகௌ தமர் ஆச்ர மத்தை அடைந்தார்.

62. அடைந்தே அவண் அணங்கை அவள் ஆளன் முனிக் களித்து — அவர்
விடையேற் றிட்டு விஸ்வா மித்ரர் வில்வீரரும் சென்றார்.

(தொடரும்.) சு. அ. சுப்பராயன்,

## மழையினறிகுறிகள்.

1. முகவுரையாக நாம் அறியவேண்டியன சிலவுள. சூரியவெப்பத்தினால் கடல்நீர் நீராவியாகி மேகங்களாக வொன்று கூடி அம்மேகங்கள் குளிர்காற் றுடன் சம்பந்தப்படுவதினால் மழையாகப் பொழிகின்றது.

2. மழைக்காலங்களில் நம்மைச் சூழ்ந்த வாயுவில் ஜலமுமொன்று சேர்ந்து அவ்வாயுவை மாறுபடுத்துகின்றது.

3. அலைகள் ஒன்றோடொன்று மோதுவதால் அவற்றில் மின்சாரமுண் டாகின்றது. இம்மின்சாரம் காற்றிலுங்கலந்து அக்காற்றை மாறுபடுத்துகின் றது.

இப்பீடிகையைக்கொண்டு மழையினறிகுறிகளை யிங்கு விளக்கிக் காட்டு வாம்,

1. மழைக்காலத்தில் வாயுவின் ஸ்திதி மாறுபடுகின்றதெனமுன்னர்க் கூறினோம். இம்மாறு பாட்டைப் பொறுக்கமாட்டாது மலர்ந்த புஷ்பங்களி யாவும் மறுபடியும் குவியும்,

2. மழைக்காலங்களில் வாயு நீராவியை அதிகமாகக்கொண்டிருக்கும். இத்தன்மையதாகிய வாயுவினால் தூரத்திலுள்ள வஸ்துக்கள் அருகே தென்படும்.

3. நீராவியுடன் கலக்கும் வாயு சப்தத்தை உட்புகவிடுமாதலால் தூர சப்தங்கள் அருகே கேட்கும்.

4. வாயுமாறு படுவதினால் அம்மாறு பாட்டைத் தாளமுடியாது வீட்டிலிருக்கும் மிருகங்கள் அவஸ்தையுறும்.

கோழிகள் அகாலத்தில் கூவுவதுடன் சிறகுகளை யடித்து அவஸ்தைபடும். சிலந்தி வகைகள் தத்தம் வலைகளை பிரித்துவிட்டு மறையும்.

வாயுவானது காந்த சக்தியை யடைந்து மாறுபடுகின்றதென முன்னர்க் கூறினோம். இம்மாறு பாட்டைத் தாளமுடியாது ஆடுமாடுகள் மிகவுந் தொந்தரை யடைந்து அதனை நீக்கும் பொருட்டு வயல்களிலங்கு மிங்குமோடும்.

எறும்புகள் தொந்தரைப்பட்டு தமது முட்டைகளை யெடுத்துக்கொண்டு எங்கணும் பரவும்.

5. அக்கணங் குருவிகள் தமதிரையைப் பொறுக்கும்பொருட்டு மிகத் தாழப்பறக்கும். அவைகளுண்ணும் பூச்சிகள்மேல் நிலையிலுள்ள நீராவி கலந்த வாயுவில் பறவாது தாழவே பறக்கும்.

6. தேரைகளும் தவளைகளும் தம்முடைய இடங்களைவிட்டு நீராவி கலந்து வாயுவை பக்ஷணம் பண்ண விரும்பி வெளிவரும்.

7. ஈக்களும் மற்ற பூச்சிகளும் மழை வருதலை யறிந்து காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளவேண்டுமாதலால் மழைவரு முன்னரே தமது ஆகாரத்தையடைய விரும்பி மற்றைய பிராணிகளைக் கடித்துத் தொந்தரவு புரியும்.

8. வாயுவின் மாறுபாட்டினால் பக்ஷிகள் தொந்தரையடைந்து பாடுதலை விட்டொழியும்.

9. மேகங்கள் மழையாக மாறுங்காலத்து வாயு ஓர்வித சுழற்சியை யடைகின்றது. இம்மாறுபாடு நீர் குட்டைகளிலுள்ள சலத்தை சுழலச்செய்கின்றது. சலத்தில் விழுந்துள்ள காகிதங்களும் சருகுகளும் சுற்றிச் சுற்றி ஓடும்போது மழைவருமென நம்பலாகும்.

10. நீராவி கலந்த வாயு மெழுகுவர்த்தி தீபங்களின் மேல்படுவதனால் அவைகள் சிடுசிடெனயெரிந்து அணையும் நீராவியினால்வாயுவிலுள்ள பிராண வாயு சொல்பமாகிறது. இதனால் மெழுகுவர்த்திகள் சரியாக யெரியாது கருகி விழும்.

இவைகள் மழையையறிவதற்குரிய சுலபமான வழிகளாகும். இன்னும் ஏனையகுறிகளுமுள. இவைகளியாவும் சுயமாக உண்டாகும் குறிகள்.

☞ உள்ளது பகர்வோன்.



# தர்மமேஜயம்.

அவனுடைய தகப்பனும் தாயும இந்தப் பெண்ணைப்பார்த்து: காட்டிலிருக்கிறபெண் தங்கக்கொடிபோல் அழகும், சந்திரவிம்பம்போல் முகமும், சிறுத்தவிடையும் இவ்வளவு அழகாயிருக்குமோவென்று ஆச்சரியப்பட்டு, இந்தப் பெண்ணுக்கு திரௌபதி என்று பேர்வைத்து, போகப்பிரசுத்தமுள்ள ராஜாவினுடைய பெண் போகவரிசைகளோடே வந்தால் எவ்வளவு சந்தோஷமும் மரியாதையுமாக விவாகஞ்செய்வார்களோ அப்படி விவாகஞ்செய்து, இவளுக்குத் தனியாகப் பெரிதாய் ஒரு உப்பரிகைகட்டி அதில் இவளைவைத்து, அதனருகில் ஒரு பெரிய மரத்தைவைத்து, அதில் நூறு கூடுகட்டி இந்தக்காக்கைகளை அதில் இருக்கச்செய்தார்கள்.

இந்தப் பெண் அந்த உப்பரிகையில் இருந்து கொண்டு சோறு முதலான அநேக ஆகாரங்களைக் காகங்களுக்குப் போட்டுக்கொண்டுவந்தாள். சில நாளில் அந்தப் பெண்ணுக்கு ஒரு பிள்ளை பிறந்தது. அந்தப் பிள்ளையின் அழகையும் சொரூபத்தையும் பார்த்து இராமசந்திரன் என்று பேர் வைத்தாள். அந்த பிள்ளையை காலைமாலை இரண்டு வேளையும் தானே பள்ளியில் கொண்டுவிட்டு அழைத்துக்கொண்டு வந்தாள். இப்படியிருக்க ஒருநாள் சாயங்காலம் தாயார் வராமலிருக்க, பிள்ளையானது தானே புஸ்தகங்களை எடுத்துக்கொண்டு வீட்டுக்கு வரும்போது, தன்னுடைய தாயார் அந்த மரத்தின்கீழ் உட்கார்ந்து தலைமயிர் கீழேவிழ, அந்தக் காக்கைகளை ஒவ்வொன்றாய் கைகளால் தடவி அழுதுகொண்டிருக்க, இந்தப்பிள்ளை சமீபத்தில்வந்து புஸ்தகத்தைக் கீழே வைத்துவிட்டு, தாயின் முழங்கால் மேல் உட்கார்ந்துக் கொண்டு, ஒரு கையில் அவள் மோவாய்க்கட்டையைப் பிடித்துக்கொண்டு, நீ ஏன் அழுகிறாய், அதை என்னுடன் சொல்லம்மா, தாய்: நீ அந்த விசனத்தைத் தீர்க்கப்போகிறாயா, உன்னோடே ஏன் சொல்லவேண்டும்? இந்த விசனத்தை நான் ஒருவரோடும் சொன்னதில்லையென்று சொல்ல, அவன் வெகு தொந்தரவு செய்து, நான் அந்தக் குறையைத் தீர்த்துப் போடுகிறேனென்று சொல்ல, நீ பாலியன், உன்னால் ஆகமாட்டாதென, திரும்பியும் அந்தப் பிள்ளை வெகு தொந்தரவுசெய்ய, அதற்கு மேல் இதோ இந்த மரத்தின் மேலே காக்கையா யிருக்கிறார்களே, இவர்கள் உனக்கு அம்மான்மார்கள், இவர்கள் இப்படிப் போய் விட்டார்களே யென்று நான் விசனப்படுகிறேனென்று சொன்னாள். அப்போது அந்தப்பிள்ளை: இவர்கள் எந்த இடத்தில் யாராலே காக்கைகளாகச் செய்யப்பட்டார்களோ அந்த இடத்தைச் சொன்னால், அவ்விடத்துக்குப்போய் நான் அவரோடு கலந்து இவர்களைத் திரும்பவும் மானிடர்களாக்கும்படி உபாயம் தெரிந்துகொண்டு வருகிறேனென்று சொல்ல, அப்போது திரௌபதியானவள்: எந்த ராக்ஷதன் இவர்களை இப்படிச்செய்தானோ அது எனக்குத் தெரியமாட்டாது. தாய், தகப்பன், கூடப் பிறந்தவர்கள் ஒருவரும் சகாயமில்லாமல் உன்னைக் கதியாக நம்பியிருக்கிறேன்; நீயும் எங்கையாவது ஒரு ராக்ஷதன்கையில் அகப்பட்டுக்கொண்டால் நான் என்ன பண்ணுவேனென்றுசொல்ல, நான் உபாயத்தினால் ஒருவர்கையிலும் அகப்படாமல் காரியத்தைச் சாதித்துக்கொண்டு வருகிறேனென்று சொல்லிவிட்டு நடந்துபோய்விட்டான்.

அப்போது அவனுக்குப் பதினாலுவயது; இப்படியிருக்க, அவன் தகப்பனுடைய சமீபத்தில்போய் நான் தேசம்திரிந்து அவ்விடத்திலுள்ள அதிச

யங்களையும், ஜனங்களுடைய சாமர்த்தியங்களையும், விசித்திரங்களான செய்கைகளையும் அறிந்துகொண்டு சீக்கிரத்தில் வந்துவிடுகிறேனென்றுசொல்ல, தகப்பனும் அப்படியே உனக்குவேண்டிய சேனைமுதலான ஒத்தாசையைக் கூட்டிக்கொண்டு போவென்று சொன்னான். ஐயா, எனக்கு ஒன்றும் வேண்டியதில்லை; ஒரு குதிரையும் குதிரைக்காரனும் கொடுமென்றுசொல்லி, தகப்பனிடத்தில் செலவு வாங்கிக்கொண்டு தாயாரிடத்திற்குவந்து, என்னுடைய அம்மான்கள் காக்கைகளாய் உன்னுடைய சமீபத்திற்கு வருகிறபொழுது எந்ததிக்கிலிருந்து வந்தார்கள்; அந்த திக்கைச்சொல்லு. அதைக்குறித்து நான் போகிறேன் என்றுசொல்ல, திரௌபதியானவள் என்னுடைய உப்பரிகைக்கு நேர் மேற்காகக் காட்டிலிருந்து காகங்களாக என் சமீபத்திற்கு வந்தார்கள்; அதுதவிர மற்றொன்றும் தெரியாதென்று சொன்னாள். அதைக்கேட்டு இராமசந்திரனும் மேற்காகக் காட்டில் பிரவேசித்து, குதிரை குதிரைக் காரனையும் நிறுத்திவிட்டு ஒருவனாய் வெகுதூரம் காட்டில் தேடிக்கொண்டு போகும்போது அவ்விடத்தில் ஒரு குடிசையைப் பார்த்து, அதனருகில்போய், அதற்குள் ஒரு கிழவியைப்போல் தலையில் சடையும், கைகளில் சிங்க நகங்களும், பயங்கரமுமாய்ப் படுத்துக்கொண்டிருக்கிற பிரம்மராக்ஷசைப் பார்த்து பயப்படாமல், அதன் பக்கத்தில் போய் உட்கார்ந்துகொண்டு அதன் தலை, பிடரி, தோள், முதுகு, கைகள் இவைகளை அமுக்கிச் சௌக்கியமாய் அதற்குத் தடவிக்கொடுக்க, அப்போதந்த பிரம்மராக்ஷசு கண்விழித்துக்கொண்டு, வெகு சுந்தரனையும் குமாரனுமிருக்கிற இந்தப் பிள்ளையைப் பார்த்து: குழந்தாய், நீ பயப்படாதே, உன்னை நான் சௌக்கியமாக ரக்ஷிக்கிறேனென்று சொல்லி, உள்ளுக்குள்ளே அவனிடத்தில் பிரீதியில்லாமற் போனபோதிலும், பாலன் என்கிற தயவினாலே அவனைச் சேர்த்து வைத்துக் கொண்டிருக்க, அவன் நித்தியமாகப் பணிவிடை செய்துகொண்டுவந்து, ஒருநாள் அம்மா, இந்தக் குடிசையைச் சுற்றிலும் சின்ன சின்ன பாத்திரத்திலே ஜலம்வைத்திருக்கிறதே, இது என்னத்துக்கென்று கேட்க, பிரம்மராக்ஷசு சொல்லுகிறது: யாரையாவது மாயையினாலே வேறுருபம் செய்துவிட்டால், அவர்களைத் திரும்பவும் முன்போல செய்யத்தக்க சக்தியுள்ள உதகம் இந்த மண்கலத்திலிருக்கிறதென்று சொல்ல, மற்றொருநாள் ராஜகுமாரன்: பக்கத்தில் தடி வைத்துக்கொண்டிருக்கிறையே, இது என்ன செய்தற்கென்று கேட்க, இந்தத் தடியைக் கையிலெடுத்துக்கொண்டு சுழற்றினால் மனதில் எது வேண்டுமென்று நினைத்தாலும் அந்தப்பிரகாரமே உண்டாய்விடுமென்று சொல்லிற்று. பின்னொருநாள் ராஜகுமாரன்: அம்மா உன் தலை மயிர்ச்சடைகளை நன்றாகச் சிக்குவிடுத்து முடிந்து விடுகிறேனென, அதற்குத் தலைமயிரைத் தொடவேண்டாம், என் தலைமயிரினின்றும் ஒருமயிர் கீழேவிழுந்தால் அவ்விடத்தில் அக்கினியுண்டாய் அந்தத் தேசமெல்லாம் பற்றிக்கொண்டு சாம்பலாய்ப் போய்விடுமென்று சொல்லிற்று. இந்த உபாயங்களையெல்லாம் தெரிந்துகொண்டு, இராமசந்திரன் சிலநாள் கழித்து ஒரு தினத்தில் நல்ல மத்தியான வேளையில் அந்தப் பிரம்ம ராக்ஷசினுடைய தேகத்தை நன்றாய் அமுக்க, அதில் அதற்கு நல்ல தூக்கம் வந்துவிட்டது. அந்தச் சமயத்தில் தலை யமுக்குகிறவன் போலச் சடையில் நோகாமல் சில மயிர்களைப் பிடுங்கிக்கொண்டு, பக்கத்திலிருந்த தடியையும் இரண்டு கலச மந்திர தீர்த்தங்களையும் எடுத்துக்கொண்டு பிரம்ம ராக்ஷசுக்குத் தெரியாமல் வெகுதூரம் வந்துவிட்டான். பிரம்மராக்ஷசு விழி-



த்துக்கொண்டு, நம்மை மோசம்செய்து முக்கிய வஸ்துக்களை எடுத்துக்கொண்டுபோன இந்தப்பயலை விரைவிலே பிடித்துக் கொல்லவேண்டுமென்று ஓடிவர, இவன் திரும்பி அதைப் பார்த்துத் தடியைச்சுற்றி இருவருக்கும் நடுவில் வெகு ஆழமும் பிரவாகமுமுள்ள ஒரு ஆற்றை யுண்டு பண்ணினான்; அந்த ஆற்றை நிமிஷத்தில் நீந்திக்கொண்டு பிரம்மராக்ஷசு கிட்டவந்தது. ராஜகுமாரன் மறுபடியும் தடியைச் சுற்றி வெகு பெரிதாகிய மலையை உண்டாக்கினான்; அந்த மலையையும் ஏறியிறங்கிக் கிட்டிவந்தது. அப்போது தன் கையிலிருந்த தலைமயிரை எறிய, அது பிரம்மாண்டமான அக்கினியாய் நாற்புறமும் சூழ்ந்துகொண்டு பிரம்மராக்ஷசை சாம்பலாய் எரித்துவிட்டது.

அப்புறம் அந்த இராமசந்திரன் தன்னுடைய பட்டணம்வந்து தாய் தந்தையரை நமஸ்காரம்செய்து, தான் காட்டுக்குப்போய் அந்தப் பிரம்ம ராக்ஷசைக் கண்டு சிநேகம் பண்ணிக்கொண்டு, சிலநாள் கூடவிருந்து, அதனிடத்திலிருந்த மந்திரசகிதமான தீர்த்தகலசமிரண்டும், வேண்டிய காரியங்களைச்செய்து கொடுக்கத்தக்க ஒரு தடியையும், நெருப்பை உண்டுபண்ணத்தகுந்த அதன் தலைமயிரில் கொஞ்சமும், அது தூங்கும் காலத்தில் நான் சேகரித்துக்கொண்டு ஓடி வந்துவிட்டேன்; அது விழித்துக்கொண்டு என்னைத் துரத்திக்கொண்டே ஓடிவந்தது. நான் அதைப் பார்த்துச் சுழற்றிய மந்திர தடியினால் வெகு ஆழமுள்ள ஒரு ஆற்றை நடுவில் உண்டுபண்ணினேன்; அது நீந்திக்கொண்டு கரையேறி சமீபத்தில் வந்தது. மறுபடியும் அந்தத் தடியினால் வெகு உயரமுள்ள ஒரு மலையை உண்டுபண்ணினேன்; அது அந்த மலையின்மேல் ஏறியிறங்கிச் சமீபத்தில் வந்துவிட்டது. அப்போது அக்கினியை உண்டாக்கத்தகுந்த அதன் தலைமயிரை அதைச்சுற்றி எறிந்தேன், அப்போது உண்டான மகத்தான அக்கினி அந்தப் பிரம்மராக்ஷசை எரித்துச் சாம்பலாக்கிவிட்டது. அதற்குப்பின்பு உங்களுடைய பக்கத்தில் தைரியமாய் வந்துவிட்டேன் என்றுசொல்லி, அந்தக் கமண்டலத்தில் இருக்கிற மந்திரஜலத்தை எடுத்துக்கொண்டு தன் தாயாரை அழைத்துக்கொண்டு மாயக்காகங்களாக இருக்கிற தன்னுடைய அம்மான்களின் மேலே தெளிக்க, அவர்களெல்லாரும் உருக்கிவிட்ட தங்கம்போல் மேனியுள்ள தேகத்தை உள்ளவர்களாய் நல்ல ராஜ லக்ஷணத்தோடே கூடிய இருபத்தைந்து வயதுள்ள ராஜ குமாரர்களாய்விட, தன்னுடைய மச்சினமார்களைக் கண்டு, அந்த ராஜ குமாரன் தாய்தகப்பனோடும் பத்தினியோடும் பிள்ளையோடுங்கூடி வெகு சந்தோஷத்தை அடைந்திருந்தான.

இப்பால் இவர்களுக்கு விருந்துசெய்ய அநேகம் தேசங்களிலுள்ள ராஜாக்களும் ராஜஸ்திரீகளும் வரும்படி தூதர்களை அனுப்ப, அப்போது திரௌபதியின் தகப்பனை ராஜாவும், அவருடைய பத்தினிகள் பன்னிருவரும் சகோதரர்களுடன்கூடி வந்துசேர்ந்தார்கள். இந்த திரௌபதி தன்னுடைய தகப்பனென்று தெரிந்துகொண்டு, அந்த ராஜாவை நமஸ்கரித்து: ஓய், ராஜாவே, உமக்குப் பூம்பாவை என்று ஒரு பத்தினியிருக்கிறாளே அவளை மாத்திரம் ஏன் அழைத்துக்கொண்டு வரவில்லை என, அந்தராஜன்: பெண்ணே அவள் வெகு வித்தைக்கள்ளி, மிகப் பொல்லாதவள், தன் வயிற்றிற்பிறந்த நூறு குழந்தைகளையும் கல்லாகச் செய்துவிட்டாள்; ஆகையால் அவளைக் காவற்கொட்டடியில் போட்டுவிட்டேன், அவளுடைய சொல்லை என்னிடத்தில் எடுக்கவேண்டாம் என்று சொல்ல, இந்த திரௌபதி அந்த ராஜாவினுடைய முன்பாகவே தன்னுடைய புருஷனுடன் சொல்லுகிறாள்:

இந்த ராஜா எங்களுடைய தாயாரை வெகு ஆசையுடன் விவாகஞ் செய்துகொண்டு, தன்னுடைய பட்டணத்திற்கு அழைத்துக்கொண்டு போனபோதே இவருடைய பன்னிரண்டு பத்னிகளும் வெகு பொறாமையுடன் எங்கள் தாயாரை எவ்விதமாயாவது அவமானஞ்செய்து ராஜாவுக்கு துவேஷியாகப் பண்ணி அவளைக் கெடுக்க யோசித்தார்கள். இது ஜாடை கொஞ்சம் தெரிந்து, இந்த ராஜா வேறே உப்பரிகை கட்டி அதில் வைத்து சம்ரக்ஷணை பண்ணிக்கொண்டு வருங்காலத்தில் இந்த ராஜாவுக்கு வெகு தூரத்தில் ராஜகாரியமாய் ஒரு தேசத்துக்குப் போகும்படி நேரிட்டசமயத்தில், எங்கள் தாயார்கையில் பொன்னாற்செய்த ஒரு மணியைக் கொடுத்து, உனக்கு ஏதாவது சங்கடமுண்டான காலத்தில் இந்த மணியை அடிப்பாயானால் நான் கேட்டுவந்து சங்கடத்தைத் தீர்த்துப்போடுவேன் என்று பிரயாணப்பட்டுப் போகும்போது, எங்கள் தாயார் ராஜா அரை நாழிகை வழிதூரம் போகும்போது ஒருதரமும், இரண்டு நாழிகை வழி தூரத்திற் போகும்போது ஒருதரமும், ராஜன்போய்ச் சேரவேண்டிய தேசத்தருகிற் போகும்போது ஒருதரமும், இப்படி மூன்றுதரமும் தனக்குச் சங்கடமில்லாத காலத்தில் பரீக்ஷைக்காக மணியை அடிக்க, அந்த மூன்றுதரமும் ராஜா அவள் சமீபத்தில்வந்து, ஒரு சங்கடமன்றி வீணாக மணியை அடித்த இவளுடைய புத்திக்குறைச்சலைத் தெரிந்துகொண்டு போய்விட்டார். அப்புறம் சிலநாள் கழித்து ஒவ்வொருவராய் என்னுடைய நூறு சகோதரர்களும் நானும் பிறந்தோம். எங்களைத் தொட்டிலில் விட்டிருக்கிற சங்கதியைத் தாதி மூலமாய்த் தெரிந்துகொண்டு துஷ்டர்களான எங்களுடைய மாற்றாந்தாயர்கள் பன்னிரண்டுபேரும் கேள்விப்பட்டு, தங்களுக்கு நம்பிக்கையுள்ள வயதுசென்ற ஒரு தாதியைக்கொண்டு ஒவ்வொருவராய் எங்களைத் தூக்கிப் புறக்கடையிலிருக்கும் குப்பையில் எறிந்துவிட்டு, நீட்டாயும் குண்டாயுமிருக்கிற கல்லுகளைத் தொட்டிலில் விட்டுத் தங்களுக்குத் தெரியப்படுத்தும்படி சொல்ல, அவள் வந்துசொன்ன சங்கதிகளைக் கேட்டுத் தாங்களெல்லாரும் ராஜாவினுடைய இஷ்டத்தைச் செய்கிறவர்கள்போல அழுதுகொண்டும் இரைந்துகொண்டும் எங்கள் தாயார் இருக்கிற உப்பரிகைக்குவந்து: அடி மாயக்கள்ளி, எங்களுக்குப் புத்திரனில்லாமல் போனபோதிலும் உனக்காவது ராஜாவம்சம் விர்த்தியாகும்படி இவ்வளவு பிள்ளைகள் பிறந்ததைக்கேட்டு வெகுசந்தோஷத்துடனே இருந்தோம், நீ ஏதோ மாயத்தினால் இத்தனை குழந்தைகளையும் கல்லாகச் செய்துவிட்டையே; இதை ராஜாவுக்குத் தெரியப்படுத்தி உனக்குத் தகுந்த தண்டனை செய்துவிடுகிறோமென்று சொல்லித் தொட்டில்களை அறுத்துக் கீழேதள்ளி அந்தக்கல்லுகளைக் குப்பலாகக் குவித்துவிட்டு அரண்மனைக்குப் போய்விட்டார்கள். பின்பு சிலகாலம் கழித்து ராஜா வந்தபின்பு இந்த துஷ்டர்கள் எதிர்கொண்டு போய் ராஜாவுக்கு துர்ப்போதனைசெய்து, எங்கள் தாயாரை தண்டனைசெய்து, காவலில் வைக்கும்படி செய்தார்களென்றும், தங்களை ஒரு கிழப்பெருச்சாளி தன்னுடைய பெரிதான வளையில் சேர்த்து, தன் இனங்களைக்கொண்டு ரக்ஷித்தது முதலாக தெய்வகதியினால் தாங்கள் அநேக ஆபத்துகளிலிருந்து நீங்கி இவ்விடம் வந்துசேர்ந்து இதுவரையில் க்ஷேமமாயிருக்கிறோமென்பதீறாக, திரௌபதி என்கிற பெண் தன் புருஷனோடே சொல்ல, இதைக்கேட்டு அந்தக்கிழ ராஜாவானவன் தனக்கு இவ்வளவு ஆண்பிள்ளை பெண்பிள்ளை இருந்தது என்பதையும் தெரிந்துகொண்டு, தன்னுடைய முன் பன்னிரண்டு ஸ்திரீகளும் ஒன்றாய்ச்சேர்ந்து துர்ப்புத்தி



யினால் பூம்பாவை என்கிற இளையாளையும், பிள்ளை முதலாகிய நூற்றொரு குழந்தைகளையும் செய்த தொந்தரையைக் கேட்டு, முன் பன்னிரண்டு ஸ்திரீகளையும் சுண்ணாம்புக் காளவாயில்வைத்து எரித்துவிட்டு, தன்னுடைய பெண்ணான திரௌபதிக்கு அநேக ஸ்திரீதனங்களைக் கொடுத்து மருமகனிடத்தில் சேர்த்துவிட்டு, தன்னுடைய நூறு பிள்ளைகளையும் பூம்பாவை என்கிற இளையாளையும் அழைத்துக்கொண்டு தன்னுடைய பட்டணம்போய்ச் சேர்ந்து சுகமாய் வாழ்ந்துகொண்டிருந்தானென்கிற கதை "சத்தியமே ஜயம்" என்கிற வசனத்துக்குச் சாக்ஷியாயிருந்தும், இப்புவியில் ஒன்றும் பூரணமாய் நிறைவேறாதென்பது ஒரு காரியத்தால் நிச்சயிக்கப்படுகிறது:

அதென்னவென்றால், இந்தக் குழந்தைகளைக் குப்பையில் எறிந்துவிடச் சொன்னவர்களுக்கு மாத்திரம் தண்டனை பூர்த்தியாய் நடந்தது. தன் கையினால் நேராகச்செய்த பிராணகாதகியான தாதிமாத்திரம் இந்த லோகத்தில் சம்பத்துள்ளவர்கள் அநுபவிக்கும் சவுக்கியத்தைப் போலத்தானும் அநுபவித்து, இறந்த பிற்பாடும் சீமாட்டிகளைப் போலவே சடங்குகளையும் நடத்திக்கொண்டாள். இது ஒன்றுமாத்திரம் வித்தியாசமாயிருக்கிறது; ஆகிலும் இந்தப் பாபிஷ்டி பரலோகத்தில் தகுந்ததண்டனை பெறாமற்போகாள. ஜ.வி.

## சூடானவஸ்துக்கள்.

[94 வது பக்கத் தொடர்ச்சி.]

முன்பக்கங்களில் உஷ்ணப்படுத்தியபோது ஜலப்பொருள்களும் வாயுப்பொருள்களும் கனப்பொருள்களும் தம்மளவில் அதிகமாகின்றன வென்பதை விளக்கிக்காட்டினோமல்லவா? பள்ளிக்கூடத்தில் படிக்கும் பிள்ளைகளுக்கு இவ்விஷயத்தை மிகத்தெளிவாய்க்காட்ட சிலசாமான்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். கண்ணாடியில்செய்த Flask என்ற ஒருபாத்திரமுண்டு. அதற்கு ஒரு கார்க் அடைத்து அக்கார்க்கின் வழியாய் இருபுறமும் திறந்துள்ள ஒரு கண்ணாடிக்குழாயை நுழைத்து இருப்பார்கள். பாத்திரத்தில் ஜலம் நிரப்பி கார்க்கையுள்ளே நுழைக்கும்போது ஜலம் குழாயில் கொஞ்சம் ஏறி நிற்கும். அந்த இடம் நமக்கு நன்றாய்த்தெரிய ஒரு நூலைக் கட்டுவார்கள். அதை வெந்நீரில் வைத்தால் Flask இன் உள்ளே இருக்கும் ஜலம் உஷ்ணமாகும்போது நூலைத்தாண்டி அப்பால் போவதைக் காண்பீர்கள்.

பனிக்கட்டிபோட்டு குளிர்ந்தஜலத்தில் அப்பாத்திரத்தை வைத்தால் நூலுக்குக் கீழே ஜலம் இறங்குவதையுங் காணலாம்.

நூலைக் கட்டுவதற்குப் பதிலாய் ஒரு சிறு துண்டு காகிதத்தை ஒட்டவைத்து அக்காகிதத்திலும் அங்குலங்களும் அவற்றின் பாகங்களையும் போட்டிருத்தல் இன்னுமனுகூலம். அவ்வியந்திரத்தைகொண்டு சாதாரணமாய் எந்தவஸ்து உஷ்ணமாய் இருக்கிறது, எது குளிர்ச்சியாய் இருக்கிறது என்று

கூட ஒப்பிடலாம். எப்படியெனில் ஜலம் இரண்டாவது அங்குலத்துக்கு
நேரே இருக்கின்றதென்று வைத்துக்கொள்வோம். அதையெடுத்து நம்மிரு
கைகளாலும் அணைத்துக்கொண்டால் கையின் உஷ்ணத்தால் ஜலம் சூடேறி
இரண்டங்குலத்துக்கு மேல்போகக்காணலாம். ஒருவீட்டின் பல அறைகளி
லும் சீதோஷ்ணஸ்திதி எப்படி யிருக்கின்றது என்பதை அறியவும் அக்
கருவியை யுபயோகிக்கலாம். சமையலறை, மேல்மாடி, இவற்றில் அக்கரு
வியை 15, 20 நிமிஷ நேரம் வைத்திருந்தால் உள்ளிருக்கும் ஜலம் ஒரு
நிலைக்கு வந்தபிறகு எவ்வுயரத்தில் இருக்கின்றதென்று பார்த்து அவ்வறை,
யின் உஷ்ணத்தின் ஸ்திதியைத் தீர்மானிக்கலாம். ஆனால் இவ்விதக் கருவி
யால் அனுகூலம் அதிகங்கிடையாது. பாத்திரம் பெரிதாய் இருப்பதால்
அறையின் டெம்பரேசரையடைய அதிக நேரமாகின்றது. ஜலம் கொஞ்
சம் கொஞ்சமாய் ஆவியாய்ப்போய்க் கொண்டேயிருக்கும். மேலும் உம்மு
டையவீட்டில் நீர் ஒருவிதமான கருவிசெய்து வைத்துக்கொண்டு பார்ப்பின்
என்வீட்டில் நான் மற்றொன்று செய்துவைத்து இருப்பேன். இரண்டுக்கும்
சம்பந்தமில்லாமற் போகின்றது. என் கருவி இரண்டங்குல உயரத்தில் நிற்
கும் அறையில் உம்முடையகருவி 3 அங்குலஉயரத்தில் நிற்கலாம். ஆகையால்
இந்த அசௌகரியங்களில்லாமல், இதேமாதிரியாகச் செய்துள்ள நயமான
இன்னுமொருகருவி இருக்கின்றது. அதை வர்ணிக்கிறேன். அதற்கு Ther-
mameter என்றுபெயர். தெர்மாமிடர் என்பது உஷ்ணத்தையளக்கும் கருவி
க்குப்பெயர். உண்மையாய் அது (டெம்பரேச்சர்) சீதோஷ்ண நிலைமையை
அனுமானிக்கின்றது.

மேலே காட்டியிருக்கும்தெர்மாமீடரைப்பாருங்கள். அதற்கும் அடியில்
ஒரு கண்ணாடி கிண்ணிபோல் இருக்கின்றது. அக்கிண்ணத்திலிருந்து மயிர்
இழைபோன்று ஒருகுழாய் வருகிறது. மேல்புறம் துவாரம் இல்லாமல்
கண்ணாடியையே உருக்க மூடியிருக்கின்றது. இப்பொழுது கிண்ணத்தை
சற்று கவனமாய்ப்பாருங்கள். அதிலிருப்பது பாதரசம். பாதரசம் கிண்ணம்
முழுவதும் நிரம்பியிருப்பதுடன் மயிர் இழைபோன்ற குழாயிலும் கொஞ்
சம் ஏறி நிற்கின்றது பாருங்கள்! குழாயின் இருபுறமும் கோடுகள்போட்டு
இருப்பது விளங்குகின்றனவா? அவற்றின் உபயோகத்தை நீங்களறிவீர்
களல்லவா? கோடுகளை 10, 20, 30 என்று இலக்கமிட்டிருக்கிறார்கள்; ஏன்?
பாதரசம் எப்படி இதில் நிற்கின்றதென்பதை யறியவே. இப்பொழுது ரசம்
இருக்கும்படியை நிர்ணயம் செய்யுங்கள். வெந்நீர் ஒருபாத்திரத்தில் கொண்
டுவந்து அந்த ஜலத்தில் தெர்மாமீடரின் கிண்ணத்தை முழுக்குவோம்.
உடனே இரசம் 'கபகப' வென்று மேலே ஏறுகின்றது. நாம்போன பாரா
வில் சொன்னகருவியைவிட இது எத்தனை மேலானது பாருங்கள். அது
அதிகநேரம் வைத்திருந்தால் ஒழிய பக்கத்து வஸ்துவின் டெம்பரேச்சரை
யடைவதில்லை. இதுவோ வெகுசீக்கிரம் அடைகின்றது, ஏனெனில் கிண்
ணம் வெகு சிறிது; முக்கியமாய் கண்ணாடி மிக இலேசானது. சீக்கிரம்
கண்ணாடிக்கிண்ணமும் அதிலுள்ள இரசமும் உஷ்ணமடையவே ரசம் தன்
னளவில் அதிகமாகிறது. குழாயோ வெகு ஒடுக்கமாய் இருக்கின்றது. அது
வும் ஒரு அனுகூலம். ஏனெனில் மிககொஞ்சளவு ரசம் அதிகமானாலும்
அது அவ்வொடுக்கமான குழாயில் அதிக உயரம் ஏறிவிடுகின்றது. இவ்வனு
கூலங்களைப்பற்றி ரசம் ஊற்றிச்செய்த தர்மாமீடர் போனபாராவில் சொல்லிய



கருவியைவிட நுட்பமானது. மேலே மூடியிருப்பதுபற்றி ரசம் சிந்து
வதற்கும் கெட்டுப்போவதற்கும் வழியில்லை.

எவ்வாறு இக்கருவியள் ரசம் ஊற்றுகிறார்கள் என்று நான் இப்பொ
ழுது சொல்லப்போகிறதில்லை. அதை நீங்களே செய்துபார்க்க முடியாதா
கையால் சமயம் கிடைத்தபோது சொல்லவேண்டியது அவசியமானால்
சொல்லுகிறேன். சிலதர்மாமீடர்களில் கண்ணாடிக்கிண்ணம் உருண்டையாயி
ராமல் நீட்டுப்போக்காய் யிருப்பதும் உண்டு.

இக்கருவிகளிலும் ஒவ்வொன்று ஒவ்வொருவிதமாய் வேலை செய்யா
தோ? இரண்டு கருவிகள் ஒரே இடத்தில் வேண்டிய சாவகாசம்வைத்து
இருந்த பிற்பாடு ஒரே அளவையே காட்டுமா? அல்லது ஒவ்வொன்றும்
வெவ்வேறுபடிகளில் நிற்குமோ எனின், இரண்டும் ஒரேபடிகளில்தான் நிற்
கும்படிசெய்து இருக்கிறார்கள். எப்படியெனில், தெர்மாமீடர் ஒன்று
வைத்துக்கொண்டு பரிசை செய்வோம். ஒருபன்னல்போன்ற பாத்திரத்
தில் உருகிக்கொண்டிருக்கிற பனிக்கட்டித் துண்டுகளின் மத்தியில், நமது
தெர்மாமீடரைச்சொருகி ஒருகயிற்றில் தொங்கவிடுவோம். ரசம் கிடுகிடு
என்று இறங்கத்தொடங்கும். கடைசியில் 4, 5-நிமிஷத்திற்குப் பிறகு இற
ங்குவதுமில்லை; ஏறுவதுமில்லை.

ஆர். கே. சுவாமி, பி-ஏ. எல்-டி.

## கமலா.

### அங்கம் - 1. களம் - 2.

(காஸ்மீரத்தில் ஒரு சத்திரத்தின் அறையில் தனிமையாக ஒருவன் மாறு
வேஷத்துடன் வருதல்.)

மனிதன்:—ஆ! இதுதான் ஜாக்ரதையான இடம், ஒட்டுக் கேட்பவர்
களுக்கு வெகுதூரமிது இருக்கிறது. எனது வேஷத்தைக் களைந்துவிட்டு
அந்த நாற்காலியில் உட்காருகிறேன், (தனது வேஷ உடுப்புகளை எறிந்து
விட்டு உட்காருகிறான்.)

என்னைப்போலொத்தவனுக்கு இதுதான் தகுந்த இடம், அவசரமான
காரியங்களுக்கு சாஸ்திரம் பார்த்து முடியாது, த்ரிவிக்ரமனோ நல்லவன்தான்,
அவன் செய்யும் முயற்சிகள் ஜயமடைகின்றன.

ஆனால் இந்துமுகியை அவன் நேசிக்கிறான், அவளிடத்திலுள்ள அன்பு
மிகுதியால் நான் அவனுக்கிட்ட வேலையை எங்கு மறந்துவிடுவனோ? அவ்வி
தம் நான் ஏன் நினைக்கவேண்டும் ? அவன் என் காரியத்தில் கண்ணும் கருத்
தாயிருக்கும்படி கடவுள் கிருபை செய்வாராக. அரண்மனைக்குள் அவன்
போனபோதிலும் கமலாவைப் பார்ப்பனோ பார்க்கமாட்டானோ? அவன்
சித்திரம் வரைவதில் சமர்த்தன் அல்லவா ? இதென்ன இந்தச் சுவரில் ஒரு

பட மிருக்கிறதே! அதை நான் பார்க்கிறேன், இது கமலா வின் படம்தான்.
இப் பூலோகத்திலுள்ள பெண்களைவிட மிக்க அழகு பொருந்தியவ ளாச்
சுதே! சத்திரக்காரன் இதை இங்கு வைத்திருப்பதனால் மிகவும் சந்தோஷப்
படுகிறான், இது இங்கிருப்பதால் இந்த வீட்டுக்கு ஒரு ரத்னம்போல் விள
ங்கி, யாவருக்கும் மனமகிழ்ச்சியையும், இன்பத்தையும் அளிக்கிறது. இப்
படத்தை எவன் பார்த்தபோதிலும் சரி அவனை இப்படம் ப்ரவசமாகும்படி
செய்யுமென்பது எனது அநுபோகத்தால் தெரிகிறது, (படத்தைப் பார்
த்துச் சொல்லுகிறான்) ஓ, பிரியமுள்ள மாதே! நீ உண்மையாகவே அழகு
வாய்ந்த பெண்ணரசிதான, நேற்று நீ கூச்சமுள்ள முகத்துடன் என்னைப்
பார்த்தாய். உனது சங்கோசம் இப்பொழுது காற்றாய்ப்பறந்து போயிற்று
என்று நினைக்கிறேன். சந்திரனிடத்தில் அநேகவடுக்க ளிருக்கின்றன, ஒரு
வேளை அவ்விதவடுக்கள் சந்திரன் கர்வங்கொள்ளாவண்ணம் உண்டாயிருக்
கலாம். சந்திரன் உனக்குத்தாழ்ந்ததே. ஏனெனில் நீ வெகு அழகுள்ளவள்.
உன்முகத்தில் யாதொரு அவ்வித வடுக்களில்லை! ஆ! சௌந்தரியவதியே!
உனது தகப்பனாருடைய விரோதியாயும், நேற்று, சாயங்காலம் உன்முன்
பேர்பெற்ற தைரியமுள்ள யுத்தவீரனை நேசிப்பாயா? அவனை மணம்புரி
வாயா? (மெத்தை படிக்கட்டில் காலடிசப்தம் கேட்கிறதே! பேச்சை நிறு
த்துவோம்! நான் மூடத்தனமாய் இப்படத்துடன் பேசிக்கொண் டிருக்
கிறேனே. நான் முன்போல மாறுவேஷம் அணிந்துகொள்ளுகிறேன். (அவ
சரத்துடன் துணிகளைஎடுத்து வேஷம்போட்டுக்கொள்ளுகிறான்). (கதவைத்
திறந்துகொண்டு சித்திரம் வரைவோனுடைய வேலைக்காரன் உள்ளே வரு
கிறான்.)

(உடனே இவனைக்கண்டு தன்வேஷத்தை கலைத்துவிடுகிறான்.)

மனிதன்:—விகடகவியே! உள்ளேவரவேணடும். த்ரிவிக்ரமன் எங்கே?
விகடன்:—அரசே! த்ரிவிக்ரமமந்திரி வர்ணம் வைப்போன் வேஷத்துடன் சித்திரசாலையில் காயமடைந்த இராஜகுமாரியின் படத்தைப்போல் இரண்டு எழுதிக்கொண்டிருக்கிறார்.

அருணேசராஜன்:—எந்த இராஜகுமாரி?

விகடன்:—ராஜகுமாரி கமலாதான், வேறு யார்? மகாராஜ்!

அருணேசன் (கவலையுடன்) காயம் எப்படி உண்டானது? எப்பொழுது?

விகடன்:—தங்களுடைய உருவப்படத்தைக் கண்டபொழுது அப் பெண்ணரசி, கீர்த்திபெற்ற வில்லாளியாகிய மன்மதன் பாணத்தினால் காய மடைந்தாள்.

(இருவரும் குதூகலத்துடன் விழுந்து விழுந்து சிரிக்கிறார்கள்). (சித்திரம்வரைவோன் இரண்டு அழகான படங்களுடன் உள்ளே வருகிறான்.)

சித்திரம் வரை:—(விகடனை நோக்கி) பேயே; என்ன கூக்குரல்! அவன் நித்திரையைப் பங்கம் செய்ததற்காக உன்னைக் கொல்ல கும்பகர்ண்ணனி இல்



லாதது தெய்வச் செயல்தான், அவனை இவ்வறைக்கு வெளியில் தள்ளுகிறான்.)

சி-வரை:—மகாராஜ்! தங்களிட்டவேலை பூர்ணஜயமடைந்திருக்கிறது.

அரசன்:—மிகவும் நல்லது, த்ரிவிக்ரமா! ஆனால் நீங்கள் உறுதியாக நம்புகிறீர்களா?

த்ரி:—ஆம், நான் நிச்சயமாய் அவ்வேலை ஜயமாகவே முடிந்திருக்கிறது என்று நம்புகிறேன்.

அரசன்:—த்ரிவிக்ரமா! அது அப்படி முடிந்திருப்பது நல்லதே. ஆனால் அது உமக்கு நிச்சயமாகக் காண்கிறதா?

த்ரி:—மகாராஜாவே! அவ் விஷயத்தைப்பற்றி நான் நிச்சயமா யிருக்கிறேன். அவளுடைய ப்ரியம் சீதா சாவித்ரி முதலியவர்கள் தங்கள் பர்த்தாக்களிடத்தில் ப்ரியமாயிருந்ததைவிட தங்களிடத்தில் வேரூன்றி யிருக்கிறது. சௌந்தரியமுள்ள இந்துமுகி இவ்விஷய முழுவதையும் சந்தேகித்ததாக என்னிடத்தில் சொன்னாள். நானே அவளுக்கு யாவற்றையும் ரூபித்தேன். (அரசன் ஒன்றும் தோன்றாமல் திகைக்கிறான்.) தாங்கள் நான் சொல்வதையே நம்பியிருக்கலாம். வேறொருவரையும் அவள் இனி ஸ்மரிக்கவே மாட்டாள். ஏனெனில், இதோ பாருங்கள், மகாராஜாவே! (மூன்றாவது படத்தை எடுத்து அரசன் கையில் கொடுக்கிறான்.)

அரசன்:—ஹோ! ஹோ! நீங்களிருவரும் சேர்ந்து உட்கார்ந்திருக்கிறீர்களே! பேஷ். நான் அதிக சந்தோஷப்படுகிறேன். த்ரிவிக்ரமா! நீ அதை எவ்விதம் அடைந்தாய்?

த்ரி:—தங்களது படத்தைவிற்று பணம் பெற்றபொழுதுதான், மகாராஜாவே! இதோ கமலாவின் இரண்டுபடங்க ளிருக்கின்றன பாருங்கள்! ஒன்று உங்களுக்கு, மற்றொன்றை கமலாவுக்கு அடுத்த ஞாயிற்றுக்கிழமையன்று கொடுக்கவேண்டும், எனது வேலைக்காரன் இவ்வேலையைச் செய்வான். (விகடன் புன்சிரிப்புடனிருக்கிறான்).

அரசன்:—பேஷ்! வெகு நல்லது! நான் இதைப் பத்திரமாய் எனது இரும்புப் பெட்டியில் வைக்கிறேன் (அதற்கு முத்தம் கொடுத்தபின் அதைப் பெட்டியில்வைக்க எழுந்திருக்கிறான்.)

த்ரி:—மற்றொரு படத்தை கமலாவுக்கு அனுப்ப ஏற்பாடு செய்கிறேன்.

அரசன்:—அப்படியே செய். (இருவரும் போகிறார்கள்.)

தாதா.

# கமலாலயம்.

நவராத்திரிப் பண்டிகை வந்துவிட்டது. எல்லா வீடுகளிலும் சுண்ணு
ம்புப் பட்டை செம்மண் பட்டை இட்டு இருக்கிறார்கள். சாவித்திரியம்மை
தன்வீட்டு வேலைகளைப்பற்றி கவனித்து இருப்பாள் என்பதற்கு என்ன
சந்தேகம்! மேலும் மாப்பிள்ளை வீட்டுக்குவந்து இருக்கும்போது வீடெல்
லாம் சுத்தமாய் வைத்துக்கொண்டு அவரை திருப்திசெய்ய வேண்டுமெ
ன்று எண்ணுவது ஒவ்வொரு ஸ்திரீக்கும் ஸகஜம்தானே. கமலாலயத்தி
'ஸபாமண்டபமும்' அலங்கரிக்கப்பட்டது; அவ்விடத்தில்தான் பதுமைகளை
கொலுவில்வைக்க ஏற்பாடுகள்செய்து இருக்கின்றன. அம்மண்டபத்தின்
அலங்காரங்களையும், அவ்விடத்தில் மாட்டியுள்ள படங்களைப் பற்றியும் முன்
ஒருமுறை வர்ணித்து இருக்கிறேன். இப்பொழுது அவ்வறையின் மேற்
குப் புறமாய் கிழக்கு நோக்கி, பல வரிசைகளாகப் பலகைகளைப் படிப்படி
யாய் அடுக்கி அவற்றின்மேல் வெள்ளியதுணி ஒன்றைப் பரப்பி பதுமை
வரிசைக்கிரமமாய் வைத்து இருக்கிறார்கள். இந்த வேலைகள் எல்லாம் முக்
கியமாய் ஞானம்பாளுடையதே. ஒவ்வொரு வரிசையும் அடுக்கியபின் 10
அடி தூரம் அப்பால் சென்று எப்படி தூரப் பார்வைக்கு தோன்றுகின்றது
என்று பரிசைக்ஷ செய்வாள்; செய்து பின் திருத்தவேண்டியவற்றைத் திரு
த்துவாள். பதுமைகளை யடுக்கியபிறகு பழ வகைகள், காய்கள், கண்ணாடி
சாமான்கள், விநோத ஜந்துக்கள்—எல்லாம் மண்ணாலும், மரத்தாலும், பித்
தளை, தாமிரம் முதலான உலோகவகைகளாலும் செய்தவை—வேடிக்கை
யாய் ஓடும் விளையாட்டு வண்டிகள், புஷ்பச்செடிகள் ஆகிய இவற்றை முறை
யே அடுக்கினாள். 4 பேர் தயாராய் நின்றுகொண்டு விடிந்ததுமுதல் வேலை
செய்துகூட, சமான்களை இடம் மாற்றுவதும், திருப்பிவைப்பதும், பிரித்து
வைப்பதும், சேர்த்து வைப்பதுமான இக்காரியங்கள் செய்வதிலேயே ஞா
னம்பாளுக்குக் காலைப்பொழுதெல்லாம் கழிந்துபோய்விட்டது. என்னைப்
போன்ற அறைகுறைப் படிபபுக்காரர் வர்ணித்தால் ஏற்குமா? நேரே கண்
டவர் ஒவ்வொருவரும் ஒரு நிமிஷமாவது திகைத்துப்போகாமல் இருப்பது
அரிது. பகல்காலத்திலேயே இவ்வளவு அழகாய் இருந்தது என்றால் இர
வில் பலவர்ணமான விளக்குகள் ஏற்றும்போது, நாற்புறமும் காகிதத்தால்
செய்த புஷ்பமாலைகளும், உண்மையான புஷ்பமாலைகளும் தம்மில் கலந்து
மயங்கிநிற்க எவ்வாறு இருக்கும் என்பதை ஆலோசித்துக்கொள்ள வேண்
டியதுதான்!! தம்பெண் நெற்றி வியர்க்கச் சலிப்பில்லாமல செய்யும் இவ்
வேலைகளைப் பார்த்து பிரேமநாதரும் சாவித்திரியம்மையும் தம் மனதில்
கொண்ட சந்தோஷத்துக் களவேயில்லை. குழந்தை நடராஜனோ எதிரே
நின்றுகொண்டு கூத்தாடுகிறான். சில அற்புதமான வண்டிகளை எடுத்துச்
சாவிகொடுத்து ஓட்டவேண்டும் என்று அவன் கைகால்கள் பறந்தபோதி
லும், அவன் தொடவில்லை; அலங்காரம் கெட்டுப்போகும் என்று தொட
வில்லையோ, தன் பெற்றோர் கோபிப்பார்கள் என்றோ, அல்லது தன் தமக்
கை வருத்தப்படுவாள் என்றோ—காரணம் எனக்குத் தெரியவில்லை.

பகல்மணி இரண்டு இருக்கலாம். போஜனம் ஆனதும் பிரேமநாதர் வழ
க்கம்போல் ஊஞ்சலில் படுத்துத் தூங்கிவிட்டார். நடராஜன் ரப்பர்பந்து,



கோலிகுண்டு, உடைந்தசிசா, இவற்றைத் தூக்கிக்கொண்டு என்னிடம் வீதி
க்கு வந்துவிட்டான். சந்திரசேகரர் பூந்தோப்பில் உலாவவும் லதாக்கிரகத்
தில் உட்கார்ந்து படிக்கவும் போய்விட்டார். எனக்குப் போது போகவில்லை
யாகையால் நடராஜனைப்பார்த்து "ராஜா! அத்திம்பேர் என்ன கொண்டுவந்து
இருக்கிறார் தகரப்பெட்டியில்? சொல்லுசாமி" என, வாய் மூடுமுன், நடரா
ஜன் "அடே உனக்குத் தெரியாதா, இவ்வளவுதானா! சந்திரன். நக்ஷத்திரம்
இவற்றைப்பார்க்க ஒருகுழாய் கொண்டுவந்து இருக்கிறார். நேற்று இராத்
திரிகூட அப்பா அம்மா இவர்கள் பார்த்தார்களே! நீதான் வரவில்லை. நாளை
க்கு வெள்ளிக்கிழமை யில்லையா? நாளைராத்திரி நம்மாத்து சபைக்கு வரு
கிற பொம்மண்டாட்டிகளுக்கு எல்லாம் வேடிக்கைகள் காட்டவேண்டுமெ
ன்று அக்கா கேட்டுக்கொண் டிருக்கிறாள்." நான் "என்றைக்கு? நாளை ராத்
திரியா?" நடராஜன் "நம்மாத்து மாடியிலிருந்து பார்த்தால் மரங்கள் மறைத்
துக் கொள்ளுகின்றது என்று ஆற்றங்கரை யோரத்திலிருக்கும் பங்களா
மெத்தைக்குப் போகிறதாக உத்தேசம்பண்ணி யிருக்கிறது" நான் "நீ
என்ன பார்த்தாய், ராஜா, அதற்குள்ளே." நடராஜன் "அதற்குள்ளே
என்ன பார்க்கிறது; அது வழியால் பார்க்கிறது; அம்மட்டுத்தான். நான்
பார்த்ததைச் சொல்லுகிறேன், கேள். 3-ம் பொறை சந்திரனைப் பார்த்தால்
அதில் எத்தனை மேடு! எத்தனை குழி!! தெரியுமா? நம்மாத்துத் தோட்டத்
துக்குப் பக்கத்தில் உள்ள கறையான் புத்தில்கூட அவ்வளவு மேடு பள்ள
மில்லை!!! அக்குழிகளுக்கு என்னவோ பேர் சொல்லுகிறார்கள்—எனக்கு நினை
ப்பு இல்லை; மேடெல்லாம் பெரிய பெரிய மலைகளாம்—இன்னும் என்ன
வேணும்: போது ஆகிறது சொல்லு—பந்தாடப் போகவேண்டும்.—"

சிறுவனுக்குப் பந்தாட ஞாபகம் வந்துவிட்டது கண்ட நான் இனி
அவனைத் தொந்தரவு செய்வதில் பயன் இல்லையென்று கண்டு "ஆடுபோ
சாமி" என்றேன். எனக்கு அக்குழாயின் வழியாய் ஒரு தடவையாவது
ஆகாயத்தின் அற்புதங்களைப் பார்க்கவேண்டு மென்கிற ஆசை யிருந்தது.
எப்படிப் பார்ப்பது? நாளை ஏதாவது பிரயத்தனம் செய்து பங்களாவுக்கு
சபையாரோடு செல்வதற்கு பிரயத்தினம்செய்ய வேண்டியதுதான் என்று
தீர்மானம் செய்துகொண்டேன். அதற்கு என்ன செய்வது என்று உத்தே
சித்து மாப்பிள்ளை ஐயரையே பூந்தோப்பில் சந்தித்துக் கேட்டுவிடுவது
நலம் என்று அவரைத் தேடிப் புறப்பட்டேன். நாளை அங்கே போய்விட்
டால் எப்படியாவது எல்லாரும் பார்த்தபிறகு எனக்கும் காட்டச்சொல்லிக்
கேட்டுக்கொள்ளலாம் என்று தைரியம். லதாக்கிரகத்தின் பக்கத்தில் போன
தும் ஞானம்பிகை அபபொழுதுதான் அவ்விடத்தி லிருந்துவந்து கொண்டி
ருந்தாள். ஐயர் ஒரு நாற்காலியில் படுத்துக்கொண்டு ஏதோ படித்துக்கொண்
டிருக்கிறார். என்னைக் கண்டதும் ஞானம்பாள் "வீர! உன்னைப் பற்றி இப்
பொழுதே பேசிக்கொண்டிருந்தோம். ஏதோ உன்னிடம் சொல்லவேண்டு
மாம்; ஐயரைப் பார்த்துவிட்டுப்போ" என்று சொல்லிக்கொண்டே உள்ளே
போய்விட்டாள். எனக்குப் "பழம் நழுவிப் பாலில் விழுந்தது" போல் ஆயி
ற்று. நான் அவரைத் தேடிச்செல்ல அவரே எனக்குச் சொல்லியனுப்பி விட்
டாரே! ஆகையால் உடனே லதாக்கிரகத்தில் நுழைந்து "சுவாமி" என,
ஐயர் "வீரா! வந்துவிட்டாயா! உன்னைக்கண்டு பேச வேண்டுமென் றிருந்
தேன். நாளை இராத்திரி என் தூரதிருஷ்டிக் கண்ணாடிவழியாய் ஆகாயத்தின்

வினோதங்களைச் சிலருக்குக் காட்ட வேண்டுமென்று அபிப்பிராயம். இங்கே வீட்டில் இடம் சௌகரியப்படவில்லை. ஆற்றின்கரையில் இருக்கும் பங்களாவுக்குப்போய் அம் மேல்மாடியில் வைத்துக்கொண்டால் நன்றாய் இருக்கும் என்று சொல்லுகிறார்கள். வண்டிகள் வருவதாய் இருந்தாலும் ஒரு ஆள் எடுத்துக்கொண்டு வருவது நன்றாய் இருக்கும். ஆகையால் நீயாவது, உன் மருமகனாவது தூக்கிக் கொண்டுவந்தால் தேவலை."

"நானே தூக்கி வருகிறேன். அவர்கள் எல்லாம் பார்த்தபிறகு எங்களுக்கும்கூட காட்டவேண்டும் சுவாமி! என்னவோ வெகு நன்றாய் இருக்கிறது என்கிறார்கள். அதுதான் பார்க்கவேண்டும் என்று ஆசை."

"சரி அப்படியே ஆகட்டும்—தோட்டத்தில் புதிதாய் பூஞ்செடிகள் வைத்தது யார்?"

"என் சுவாமி! நானும் என் மருமகனும்தான்! என்னத்துக்குக் கேட்கிறீர்கள்!—"

"ஒன்றுமில்லை; இரண்டு மூன்று வருஷமானாலும் 2 முழத்துக்குமேல் வளராத செடிகளையும் 6 மாதத்தில் 4, 5 அடி உயரம்வளரும் செடிகளையும் கலந்துபிடித்து, வரிசையாய்வைத்து இருக்கிறீர்கள்! இன்னும் 2 மாதத்தில் ஒன்று உயரமாயும் ஒன்று குட்டையாயும் விகாரமாய்த் தோன்றுமல்லவா? இதை ஆலோசனை செய்யவில்லையா? இரண்டு மூன்று ரவுண்டுவைத்து இருப்பதால் முதல்ரவுண்டில் சிறியதாய் வளரும் செடிகளையும் அடுத்தரவுண்டில் கொஞ்சம் பெரிதாய் வளரும் செடிகளையும், கடைசி வரிசையில் இன்னும் சற்று உயரமாய் வளரும் செடிகளையும் வைக்கவேண்டும். உதாரணமாக முதல்ரவுண்டில் சில இங்கிலீஷ் செடிகளையும், அடுத்ததில் நந்தியாவட்டம் அதுபோன்ற மற்றவைகளையும், கடைசிரவுண்டில் அடுக்காளி, தங்காளி இவற்றையும் வைத்தால் நயமாய் இருக்கும். இப்பொழுதோ மழைக்காலமானபடியால் எப்படி வேண்டுமானாலும் மாற்றலாம். அப்படிசெய்? நான் வேண்டுமானாலும் பக்கத்தில் இருக்கிறேன்"

"எப்படி சொல்லுகிறார்களோ அப்படியே செய்து முடிக்கிறோம்"

"சரி, நீ போய்வா" என நான் வீதிப்புரம் வந்து சேர்ந்தேன். குழந்தை நடராஜன் பந்தாடிவிட்டு வெயில் உக்கிரமாயிருந்தமையால் திண்ணையில் படுத்துத் தூங்கிப்போய்விட்டான். அவனுடைய சாமான்களையெல்லாம் எடுத்து பத்திரமாய்வைத்துவிட்டு நாளை காணப்போகிற வானத்தில் அதிசயங்களைப்பற்றி மனோராஜ்யம் செய்ய வாரம்பித்துவிட்டேன்.

வாயில்காப்போன்.



## வேடிக்கைக் கதை.

இருகால்களும் முழந்தாளிலிருந்து பின்புறம் மடக்கி ஒட்டிவைத்திருப்பதுபோ லிருந்தனவால் ஒரு அரசகுமாரன் நொண்டியாயிருந்தான். கண்குவளைகள் மூடப்பட்டிருப்பனபோல் விளங்கினவால் ஒரு மந்திரிகுமாரன் குருடனாயிருந்தான்.

*அரசகுமாரன்:*—நாமிருவரும் அங்கயீனராயிருத்தலால் பிறரால் நன்கு மதிக்கப்பட்டிலேம். அரசிற்குரிய பாத்திய மிருப்பினும் என் பெற்றோர் முன் நானதை வெறுக்கிறேன். சின்னாளேனு மயல்நாடு செல்லுதல் குணமல்லவா? மந்திரிகுமாரா, உன்னாலோசனையைத் தெரிவி.

*மந்திரிகுமாரன்:*—அங்கக்குறைவுடைய நம்மால் ராச்சியபாரம் சமக்கப்படுவது துன்பமே. இந்த ராச்சியத்தை முற்றும் வெறுப்பது குணம். இராவே நீரும் ஆயத்தப்படின் கிடைத்தவை கொண்டு நடப்பது நன்மை. என் தோள்கள் உமது பாரம் தாங்கும். என் கைகள் உமது வழிகாட்டுகோல் கொள்ளும். என்கால்கள் நமது விருப்பமானயிடத்திற்கு கொண்டுசேர்க்கும்.

*அரசகுமாரன்:*—நமது ராச்சிய எல்லை கடந்தது. சூரியனும் கீழ்த்திசைப்பருவங்கொண்டான். பிறர் பக்குவங்காணவிரும்பும் சாதுக்கள்போல் முன் கடுமை காட்டிபின் சாந்தங்காட்டும், இவன் மேற்றிசைக் கடலில் மூழ்கட்டும். இச்சத்திரத்து தங்கி யிளைப்பாறுவோம். பகைவரைத் தாக்கும் வலுமையுடைய அரசனைப்போல் இருட் கூட்டத்தின் மத்தியில் தன் கிரணமாகிய கரங்களால் தாக்கும் பூரணசந்திரன் தோன்றட்டும். களைப்பின்றி வழிநடக்கலாம்.

*மந்திரிகுமாரன்:*—நாம் நெடுந்தூரம் செல்ல நினைப்பதாலும் அங்கப் பழுதுடைய நாம் சுக துக்கங்களை பாகித்துக்கொள்ளும் மனவோர்மை அடைதல் குணமல்லவா?

*அரசகுமாரன்:*—சத்தியத்தில் என் விருப்ப மதுவே.

*மந்திரிகுமாரன்:*—இஃது தேவர் நந்நாடென நம்புகிறேன்; நெடுநாளாய்ச் சுமந்தலுத்த என்தோள்கள் சுகமடையுமாறு இங்கு தங்க ஓர் இடம் பாரும்.

*அரசகுமாரன்:*—கட்டமுது மூட்டைபோல் உன் தோள்களிலுலாவிய என் தொந்திரவு நீங்கிற்று. இவ்வூரரசன் மாளிகையின் பிற்புறம் இருக்கும் இக்குடிசைக்குரிய கிழவி நாம் தங்க ஒருப்படுகிறாள். மெதுவாயுன்தோள் பாரத்தை யிறக்கு.

*அரசகுமாரன்:*—விருத்தையே, இதோ அரண்மனை உயர்நிலாவு மயிலனுன் யார்?

*விருத்தை:*—மூன்று ஸ்தனங்கள் தோன்றியதால் பிறர் வதுவை செய்து கொள்ள மன மூவக்காது கன்னிகாமாடத்திலிருக்கும் இந்நாட்டரசன் ஏக புத்திரி.

அரசகுமாரன்:—இவளழகு என்மனதைக் கவரக் கூடியதாய் விளங்கிறது.

மந்திரிகுமாரன்:—அம்மையாரே, அரசாங்க சேவகர்கள் தேடுகிறார்கள்.

விருத்தை:—ஏன்ப்பா அழைக்கிறீர்கள்?

சேவகர்:—அரசகுமாரனைப்போல் உன் குடிசைப்புறம் உன்னோடு சம்பாஷித்திருந்ததார்?

விருத்தை:—அரசகுமாரன்தான், ஆனால்:— பார்க்கிறார்கள்.

சேவகர்:—இவர்க்கும் நமது அரசகுமாரிக்கும் வதுவை நிகழும்போலிருக்கிறது. இவரைப் பல்லக்கின்கண் தூக்கிச் செல்லுங்கள். போகிறார்கள்.

மந்திரிமகன்:—முற்றும் என்னைமறந்தான். என்புத்தியை இனி பிரயோகிக்கவேண்டும். யாரப்பா சமீபத்தில். சேவகரிலொருவன் போலிருக்கிறதே. யிந்தா ரூபாய் 100. என்விருப்பத்திற் குதவிசெய். பதின்மடங்கு இன்னும் எதிர்பார்க்கலாம். என்னை உடன்கொண்டுபோ.

சேவகன்:—உமது உதாரத்வம் நான் எதிர்பாராதபடி என்னையுமக்கடிமையாக்கியது. பல்லக்குடன் வாரும்.

மந்திரிகுமாரன்:—மங்களவாத்தியங்கள் முழங்குகின்றன. வதுவை நடக்கிறதுபோலிருக்கிறது. சேவகனே, நீ செய்யவேண்டிய முக்கியவுபகாரம் அவர்கள் தம்பதிகளாய் சம்பிரமஞ்சம் சேருமுன் அதன்கீழ் என்னைக்கொண்டுபோய் விட்டுவிடு.

சேவகன்:—இரவு முதற்சாமங் கழிந்தது. இனி தாமதியாது வாரும். இது சம்பிரமஞ்சம். இதன் கீழ் உம்மை ஒளித்துக்கொள்ளும்.

அரசகுமாரன்:—கண்மணி, இருவர்மனோசக்தி ஒன்றுபடின் அதின் முடிவு இந்த மஞ்சத்திற் துயிலுதலே. மஞ்சத்தில் உட்காரு. என் மனோவுற்சாகத்தை மூட்டத்தாம்பூலம்தா.

மந்திரிகுமாரன்:—வெளிவந்து அரசகுமாரியே, எங்கள் விவகாரத்தைத்தீர். எங்களிருவருக்கும் லாப நட்டங்கள் பாதி.

அரசகுமாரன்:—திடுகிட்டு, பொட்டப்பயல்! விவகாரமா! தீர்க்கவா! என்று பளீர்பளீரென இருகன்னங்களிலும்கரங்களால் மோதுகிறான். மோதவே, மந்திரிமகன் கண்கள் பளீரெனத்திறந்தன. மஞ்சத்தின்மேலேறி அரசகுமாரனை கால்களால் துவைக்கிறான். அரசன்மகன் கால்களும் நீண்டன. எனக்குரிய இழவுபோதியதல்லவா? இப்புதிய இழவும் தேவையா? எனத்தன்மார்பில் மோதிக்கொண்டாள். அரசன் மகள் இரண்டு தனங்களின் நடுவே தோன்றியிருந்த அதிகத் தனமொன்றும் அவன் தேகத்துள் மறைந்தது.



இச்சத்தங்களைக் கேட்ட பலர் கூடி அரசகுமாரன் முடம் நீங்கியதும் அரசகுமாரி குணம்பெற்றதும், குருடு நீங்கிய மந்திரிமகனையுங் கண்டு பரவசமாகி மந்திரிமகனுக்கு அவ்வூர்மந்திரிமகளை மணம் புரிவித்தனர்.

இவர்கள் சுகித்து வாழ்ந்தார்களென்பதைக் கேட்கவேண்டுமோ?

☞ கமலத்தன்னை.

## வரிசைக்கிரம எண்களின் கூட்டுத்தொகை.

(1) 1, 2, 3, 4, 5, 6, 7, 8,...20, 21, 22...என்று அடுத்துவரும் எண்கள் வரிசைக்கிரம எண்களாம். ஒன்றுமுதல் 1000 வரையிலுள்ள வரிசைக்கிரமஎண்களின் கூட்டுத்தொகையைப்பற்றி இங்கு வரைவாம். இவ்வெண்களை வரிசையாக எழுதி சாதாரணக்கூட்டல் மாதிரியாகக்கூட்ட அநேக நிமிஷங்கள் செல்லுமன்றோ? இப்பேர்க்கொத்த எண்களைக் கூட்டுவதற்கு ஒரு சுலபு வழியுண்டு. கடை எண்ணாகிய ஆயிரத்தை அதன் பாதியாகிய 500 ஆல்பெருக்கிய தொகையுடன் கடையெண்ணாகிய 1000-த்தின் பாதியாகிய 500 ஐக்கூட்டவேண்டும். இவ்வாறு கூட்டிவந்ததொகையே நாம்வேண்டும் கூட்டுத்தொகையாகும்.

1000×500=500000+500=500500. இவ்வாறே மற்றமுள்ள எண்களையும் பகிர்ந்துகொண்டு பெருக்கிக்கூட்ட ஒன்றுமுதல் அவ்வெண்வரையுள்ள எண்களின் கூட்டுத்தொகையை யெய்தலாம்.

(2) பன்னிரண்டு தமிழெழுத்துக்களாலாகிய பெயரை கீழ்கண்ட குறிப்பாலறிந்து விடுவிக்க.

$$\frac{15}{216}+\frac{137}{216}+\frac{86}{216}+\frac{161}{216}+\frac{1}{18}+\frac{1}{216}+\frac{133}{216}+$$
$$\frac{41}{216}+\frac{86}{216}+\frac{121}{216}+\frac{208}{216}+\frac{12}{18}.$$

அதே குறிப்பினைக்கொண்டே இதனையும் விடுவித்து இவ்வெண்களையப் பிரிக்கிறேன், பெயரையறிக.

$$\frac{110}{216}+\frac{12}{18}+\frac{1}{18}+\frac{1}{216}+\frac{3}{18}+\frac{2}{216}+\frac{121}{216}+\frac{18}{18}$$

குறிப்பு:—ஒவ்வொரு எண்ணும் ஒவ்வொரு எழுத்தைக் குறிக்கும்.

☞ T. M. மார்க்கசகாயம்.

## விடுகதைக்கு விடை.

ரஞ்சனியின் 14-ம் புத்தகம் 5-ம் இலக்கம் 107-ம் பக்கத்து வரைந்துள்ள விடுகதைக்கு விடை=மாதர் மனோரஞ்சினி என்பதே.

☞ கமலத்தன்னை.

## சமாசாரக்குறிப்பு.

ஜார்ஜ் அரசர் துருப்புக்களைப் பார்வையிட்டார்:—லண்டன், ஜூன்மீ 8உ ஹைட்பார்க்கில் ஜார்ஜ் அரசர் ரிஸர்வ் துருப்பைப் பார்வையிட்டு அவர்களில் சிலரோடு பேசினார்.

ஜார்ஜ் அரசரின் இந்திய மெய்காப்பாளர்கள்:—ஜார்ஜ் சக்கரவர்த்தி இந்தியாவுக்கு விஜயஞ் செய்திருந்தபோது சில இந்தியர்களை தமது மெய்காப்பாளர்களாய்த் தெரிந்தெடுத்துக் கொண்ட அம்மெய்காப்பாளர்கள் இங்கிலாண்டுக்குப் புறப்பட்டுப் போயிருந்தார்கள். அவர்கள் போன மே மாதம் 29-ந் தேதி புதன்கிழமையன்று பக்கிங்காம் அரண்மனையில் ஜார்ஜ் சக்கரவர்த்திமுன் ஆஜர் செய்யப்பட்டார்கள்.

உலகத்திலுள்ள உன்னத சிகரம்:—இதுவரையிலும் ஹிமயமலையில் உன்னத சிகரமாகிய எவரெஸ்ட்டு தான் உலகத்திலுள்ள மலைச்சிகரங்களில் உன்னதமானது என்று படித்தும் கேட்டும் இருந்தோமல்லவா? கிஞ்சிங்கங்காதான், எவரெஸ்ட்டைவிட சில நூறு அடி உயரம் என்று கண்டுபிடித்திருக்கிறதாகத் தெரியவருகிறது.

காக்கினாடா ஸ்திரீ ஸங்கமும் மிஸ் வால்ஷும்:—சென்ற 14-ம் தேதி மிஸ் வால்ஷ் காக்கினாடா ஸ்திரீ ஸங்கக் கட்டிடத்தில் இந்திய ஸ்திரீகளுக்கு அற்புத விளக்குக் காட்சிகளைக் காட்டியதோடு, பாட்மிண்டன் பந்து விளையாட்டுக் கருவிகளின் ஜோடிப்புடன் சதுரங்கக்காய் முதலியனவும் அளித்து 50 ரூபாய் நன்கொடையும் கொடுத்தார். மிஸ்டர் வால்ஷும் 10 ரூபா நன்கொடை அளித்தார்.

மகாராஜா ஜார்ஜ் சக்கரவர்த்தி ஓலக்கம் (Levee) வீற்றிருத்தல் லண்டன், மே 31:—இன்று ஜார்ஜ் சக்கரவர்த்தி ("லெவி") என்ற திருவோலக்கம் வீற்றிருந்தார். திருவோலக்கமென்பது காட்சிக் கெளியராய் சகலருக்கும் [illegible]லபராயிருந்து காட்சி கொடுத்து தக்கவருக்குக் [illegible]வுரவப்பட்டங்கள் கொ[illegible]சல். ஜலாவர் ராஜாவையும், லம்ப்டி தாகூர் ஸாகிப்பையும் சக்ரவர்த்தி வர[illegible]று உபசரித்தார்.

சென்னைக்கு முஸ்லீம் பெண்கள் பாடசாலை:—இந்த மாதம் 26-ந் தேதி மாலையில் சென்னை மகம்மதியர்கள் லேடி ஹாபர்ட் விஜி[illegible]டினார்கள். அனைரெயில் மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்துர்ரஹிம, மிஸ் லின்ச் [illegible]ஸ்டர் அஸத் அலிகான் பகதூர், மிஸ்டர் யாக்கப் ஹாஸன், மிஸ்டர். [illegible]மெத்கான்பகதூர், மிஸ்டர் அப்தர் ரஹீமான் ஷாடிர், மிஸ்டர் A. [illegible]மெட் ஹாஸன், மிஸ்டர் சுல்தான் மகம்மது முதலியவர்கள் ஆஜராயிருந்தார்கள். வைக்கப்போகும் பெண்கள் பாடசாலைக்குப் பெற்றோர்கள் அனைவரும் தங்கள் பெண்களை அனுப்பப் பிரியப்பட் டிருக்கிறார்கள என்றும், ஹிந்துஸ்தானி பாஷையைக் கற்பித்து வரவேண்டும் என்றும், இங்கிலீஷ் பாஷையை கட்டாயப் பாஷையாகப் படிப்பித்து வரக்கூடாதென்று ஜனங்களின் அபிப்பிராயம் என்றும், மிஸ்டர் சுல்தான் ஆமெத் மிஸ் லிஞ்சுக்குத் தெரிவித்தார். இங்கிலீஷ் கட்டாயமாய்க் கற்பிக்கப்பட்டு வரவேண்டும் என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.



சென்னைக் கவர்னர்—லார்ட் பெண்ட்லண்ட்:—லார்ட் கார்மைகேலுக்குப்பதிலாய் சென்னைக் கவர்னராய் நியமிக்கப்பட்டிருக்கும் லார்ட் பெண்ட்லண்ட் லேடி பெண்ட்லண்டுடன் அடுத்த செப்டம்பர் மாதம் 28-ந்தேதி லண்டனை விட்டு இந்தியாவுக்குப்புறப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறாரெனப்படுகிறது. அவர் இந்தியாவுக்குப் புறப்படுவதற்கு முன்னே ஜார்ஜ் சக்கிரவர்த்தி அவருக்குப் பேட்டிகொடுத்து அவருடன் பேசிக்கொண்டிருந்துவிட்டு அவருக்குவிடைகொடுத்தனுப்புவார். ஸ்காட்லண்டிலும் அச்சமயம் பிரிவுபசாரக் கொண்டாட்டங்கள் சில நடக்கக்கூடும்.

ஆந்தைக்காதல்:—நோயாளியிருக்கு மிடத்தினருகில் ஆந்தைக் கத்துமாகில் அந்நோயாளி நிச்சயமாய் இறப்பானென்று நாம்யாவரும் நம்புகின்றோம். இது சாஸ்திர சம்மதமு மானதே. ஆந்தையானது காற்றிலுண்டாகும் எல்லாவித மாறுபாடுகளையும் நன்று யறியவல்ல பறவையாம். நோயாளியிருக்கு மிடத்திலுள்ள வாயுமாறு படுங்காலத்து ஆந்தை அம்மாறுபாட்டை தாளமுடியாது கத்துகின்றது. இம்மாறுபாடு அந்நோயாளியினால் தாளமுடியாததா யிருக்கின்றது. ஆகவே அந்நோயாளிக்கு மரணம் சம்பவிக்கக்கூடும். அதனால்தான் ஆந்தைக்காதல் சிலவேளை மரணத்தை தெரிவிக்கின்றது என்னும் நம்பிக்கை சாஸ்திர யுக்தமானதே.

வைரம் பரிசோதிக்கும் முறை:—"போலி வைரங்களும் இமிடேஷன் ரத்தினங்களும் வேண்டிய வளவு மலிவாய்க் கிடைக்கும் இக்காலத்தில், வைரத்தைப் பரிசோதிக்கும் முறையை அனைவரும் அறிந்து வைத்திருத்தல் அவசியமாகும். ஒரு கடுதாசி அட்டையிலே ஊசியினால் ஒரு சிறு துவாரத்தைச் செய்து, வைரம் என்று சொல்லப்படுகிற கல்லின் வழியாய் அந்த துவாரத்தைப்பார்த்தால், வைரம் மெய்யானால் ஒரே துவாரமும், அது பொய்யானால் இரண்டு துவாரங்களும் கண்ணிற்குப் புலப்படுமாம். இன்னொருமுறை வைரத்தின் வழியாய் தன் விரலைப் பார்த்தால் அது எப்பொழுதும் போலிருந்து வைரம் மெய்யும்; அது பெருத்துப்பிரிந்து தோன்றினால் பொய்யுமாம்," எனமிஸ்டர் இ. வடிவேலு சுதேசமித்திரனில் எழுதியிருக்கிறார்.

ஏழைப் பெண்கள் பண்டு:—பால்ய விதவைகளைப் படிப்பித்து அவர்களை முன்னுக்குக் கொண்டுவரும் நோக்கத்துடன் சென்னை எழும்பூரில் "சாரதா வித்யாச்ரமம்" என்று ஓர் ஆச்ரமம் இந்த ஜூலைமீ முதல் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதில் இப்பொழுது நான்கு பால்ய ஸ்திரீகள் சேர்ந்திருக்கிறார்கள். இன்னும் ஆறு பெண்களுக்கு இடமிருக்கிறது. சேர்வோர் இந்த மாதத்திற்குள் தானால் உடனே எழுதித் தெரிந்துகொள்ளவேண்டும். இந்த மாதத்திற்குள் சேராதவறினால் ஸ்கூலில்சேர்ந்து படிக்க இன்னும் ஒருவருடம் காத்திருக்க வேண்டும். ஏழைப் பெண்களுக்குச் சாப்பாடு முதலியன இனும். பள்ளிக்கூடத்து வாத்திமாரெல்லாரும் ஸ்திரீகளே. ஆச்ரமத்திலும் ஸ்திரீகளே. வெகு ஒழுங்காக நடத்தப்படும். விருப்பமுள்ள பெற்றோர்கள் சென்னை எழும்பூர், ஹைரோட் 3-38 நெம்பர் வீட்டிலிருக்கும் சகோதரி R S. சுப்பலக்ஷ்மி அம்மாள், B. A. அவர்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மகமதியப் பெண்களின் கல்வியைப்பற்றி சையத் ராஷிட் ரிஸா:—லக்கௌவில் நடந்த ஒரு மகமதிய மீட்டிங்கின் தலைமையை வகிக்க ஈஜிப்டிலிரு

ந்து வந்திருந்த சயித் ராஷிட் ரிஸா என்ற பத்திராசிரியர் அலிகருக்கு வந்தி வந்திருந்தபோது, இந்தியாவில் மகமதியப் பெண்களின் கல்வி இன்னும் எவ்வளவோ விருத்தியாக வேண்டுமென்று சொன்னார். அவர் ஈஜிபடில் மகமதியப் பெண்கள் மகமதிய ஆண்களுடன் பிரைமரிப் பள்ளிக்கூடங்களிலும் சேர்ந்து வாசிக்கிறார்களென்றும், அந்த நாட்டில் மகமதிய ஆண்களுள் கல்வி எவ்வளவு பரவியிருக்கிறதோ அவ்வளவு அது மகமதியப் பெண்களுள்ளும் பரவியிருக்கிறதென்றும் சொன்னார். அவர் ஈஜிப்டிலே ஆண்களும் பெண்களும் ஒரே பள்ளிக்கூடத்தில் சேர்ந்து வாசிக்கிறார்களென்றும் அங்கே கோஷா ஏற்பாடு இங்குபோல் அவ்வளவு கடுமையில்லையென்றும் சொன்னார்.

---

பிரெஸிடென்ஸி காலேஜ்போதகர் ராவ்பகதூர் M. ரெங்காச்சாரியின் ஆசாரத் திருத்தக்கொள்கை சபை மேடைகளில் பேசப்படும் வெறும் பேச்சோடு காற்றுவாக்கில் போய்விடுவதாயிருந்து வருவதற்கு அவர் தமது இரண்டாவது குமாரத்திக்குச் சமீபத்தில்செய்த கலியாணமே சாட்சியாகுமென்று மிஸ்டர் N. K. ராமசாமி அய்யர் எடுத்துக் காட்டுகிறார். தஞ்சாவூர் வக்கீல் அய்யர் அவர்கள் ஆசாரத்திருத்த விஷயங்களில் 'ஜஸ்டிஸ் சதாசிவய்யர் தாம் பேசுவதுபோல நடத்திக் காட்டுகிறாரென்றும், ராவ்பகதூர் ரெங்காச்சாரியாரும் மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தரய்யரும் தாங்கள் பேசுவதுபோல நடத்திக்காட்டப் பின்வாங்குகிறார்களென்றும்' எழுதுகிறார். ராவ்பகதூர் M. ரெங்காச்சாரியாரும் மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தரய்யரும் பெண்கள் ப்ரௌடையான பின்னரே அவர்களுக்குக் கலியாணஞ் செய்யவேண்டுமென்று சொல்லுகிறார்களானாலும், அவர்கள் தங்கள் பெண்களுக்கு அம்மாதிரி கலியாணம் செய்து காட்டவில்லையென்கிறார். இது உண்மைதானே!

---

காப்பிக்குடியால் மூளைக்கு உதவியுண்டா?—நியூயார்க்கிலுள்ள கொலம்பியா யூனிவர்சிடியில் மனோதத்துவ ஆராய்ச்சி இலாகாவில் காப்பிக்குடியால் தீமையுண்டாவென்றும், அதனால் மூளைக்கு ஏதாவது உதவியுண்டா என்றும் கண்டறியப் பல பரீக்ஷைகள் செய்யப்பட்டன. இப பரீக்ஷைகள் முற்றிலும் சாஸ்திரரீதியாகவும், சிறிதும் முன்பின்னாக இல்லாது சரியாகவும், செய்யப்பட்டன. பதினாறுபேர் ஸ்திரீகளும் புருஷர்களுமாகப் பரீக்ஷைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். அவர்கள் வெவ்வேறு வயதுடையவர்களாயுமிருந்தார்கள். வெகு ஜாக்கிரதையாய்ப் பரீக்ஷைசெய்தானபிறகு காப்பிக்குடியால் முதலில் மிகுந்த உத்ஸாகம் உண்டாகிச் சிறிது நேரமான பிறகு களைப்புண்டாகிவிடுகிறது என்று சொல்லும்வதந்தி உண்மை யல்லவென்றும், அளவுக்குமிஞ்சி காபிகுடித்தால், உத்ஸாகம் உண்டாகாது மந்தமே உண்டாகிறதென்றும், அப்பொழுது முடிவு சொல்லப்பட்டது. பிற்பகலில் வேறு ஆகாரத்தோடில்லாமல் காப்பிமாத்திரம் அதிகமாய்க் குடித்தால் தூக்கமின்மையும், உடம்பில் ஒரு படபடப்பும் உண்டாகின்றன. சிற்றுண்டியோடு ஒரு கப் அல்லது இரண்டு கப்பு காப்பி மாத்திரம் குடிப்பதால் மூளைக்குச் சிறிது உதவியேயாகும். வேலை செய்வோருக்கும் சிறிது சுறுசுறுப்புக் கொடுக்கும்.

---

செத்தவனைப் பிழைப்பு மூட்டல் சாத்தியம்:— அமெரிக்காவில் சரீரதத்துவ சாஸ்திரத்திலும் மருந்து செய்யும் சாஸ்திரத்திலும் மகா நிபுணரான டாக்டர் ஸாமுவேல் ஜேம்ஸ் மெய்ட்ஸர் இறந்த ஜந்துக்களை உயிர்ப்பிக்கக் கூடும் என்று சொல்லி, ஒரு இறந்த முயலை உயிர்பித்துச் சோதனை காட்டினார். அவருடைய ஸித்தாந்தம் முயல்போன்ற சிறிய ஜந்துக்களையேயன்றி மனிதனைக்கூடப் பிழைப்பிக்கலாமென்பது. அப்படிப் பிழைப்பிக்கப் பின்கூறுமாறு செய்வதென்கிறார்; குழாய்க் கருவியை உள் நாக்குக்கு அடியில் நுழைத்து, நாவை யிழுத்துக்கொண்டு அதன் அடியையே மேல் அண்ணத்தில் நுழைத்து, மோவாய்க்கட்டை யடியில் கைகொடுத்து மேலே தள்ளித் திணிக்கவேண்டும். அத்தருணத்தில் வயிற்றில்பாரம்வைத்து காற்று வயிற்றிற் புகாதபடி செய்யவேண்டும். பிறகு துருத்திகளைக்கொண்டு நெஞ்சில் நுழைத்துள்ள குழாய் வழியாய்க் காற்றை சுவாசாசயத்திற் செலுத்தவேண்டும். இப்படியெல்லாம் செய்துவிடின் நிச்சயமாகச் சிறிய ஜந்துக்கள் பிழைத்துவிடுகின்றனவாம். ஆனால் இக்காரியங்கள் இறந்தக்ஷணத்தில் செய்யவேண்டும் என்று அந்த டாக்டர் கூறுகிறார்.



---

ப்ரேதக்குழியினின்றும் பிழைத்தவன்:—ஸ்பெயின் தேசத்து மாகாணங்களில் ஒன்றாகிய கெலீஷியாவிலுள்ள ஜாராவிக்காவில் மாஸ்னி என்கிற மிராசுதார், மூன்று நாட்களுக்குமுந்தி வலிப்புநோய்கண்டு அவஸ்தை பட்டுக்கொண்டிருந்தார். பக்கத்தில் வைத்தியர் ஒருவரும் இல்லாததினால் மிருக வைத்தியர் ஒருவரை வரவழைத்துப் பார்க்கச்சொல்ல, அவர் வந்துபார்த்து நோயாளி ஜன்னியால் இறந்துபோய்விட்டார் என்று சொல்லிவிட்டார். சுற்றத்தார்கள் பலர்வந்து இறந்துபோனவரை கல்லறைத் தோட்டத்திற்குக் கொண்டுபோய், பிரேதக் குழியில்வைத்து, செய்யவேண்டிய சடங்குகளைச் செய்தபிறகு, பிரேதக் குழியை மூடுவதற்குமுந்தி வழக்கப்படி மண் வெட்டியால் மண்ணைவாரிப் பிரேதத்தின்பேரில் கொட்டினார்கள். பிரேதக் குழியிலிருந்து ஒருவிதமான தீனஸ்வரம் உண்டாயிற்று. அதை உற்றுக் கவனிக்கையில் அது செத்துப்போனான் என்று உறுதியாக்கப்பட்டிருந்த மனிதனுடைய குரலாக இருந்தது. இதைக் கேட்டவுடனே அங்கு வந்தவர்களுள் சிலர் பயந்து ஓடிப்போனார்கள். தைரிய முள்ளவர்கள், பிரேதக் குழியிலிருந்த பிரேதப் பெட்டியைத் திறந்து பார்க்கையில் மாஸ்னி உயிரோடிருக்கக் கண்டார்கள். அவனைப் பிரேதப் பெட்டியிலிருந்து வெளியே எடுத்து அவனுக்கு ஒரு அங்கி கொடுத்தார்கள். அந்த அங்கியைத் தரித்துக்கொண்டு அவன் வீட்டிற்கு நடந்துவந்தான் என்று ஆங்கிலப் பத்திரிகை ஒன்று கூறுகிறது.

---

கோயமுத்தூர் ஜில்லா சிங்காநல்லூரில் ஒரு புதிய சர்க்கரைத் தொழிற்சாலை:—கோயமுத்தூர் பட்டணத்துக்கு 5 மைலுக்கப்பால் சிங்காநல்லூருக்குச் சமீபத்தில் ரோட் வசதியுள்ள ஓர் இடத்தில் வெல்லம் செய்வதற்காகத் தொழிற்சாலை யொன்று பரீட்சார்த்தமாய் ஸ்தாபிக்கும்படி ஆனரபில் மிஸ்டர் சாட்டர்ட்டன் கவர்ன்மெண்டுக்குப் பிரேரிக்க, கவர்ன்மெண்ட் இந்தப் பிரேரணையை ஒப்புக்கொண்டுவிட்டார்கள். இதற்கு 10,000 ரூபாய் கவர்ன்மெண்ட் சாங்க்ஷன் செய்துவிட்டபடியால், தொழிற்சாலைக்கு வேண்டிய எஞ்சின் பம்ப்முதலிய கருவிகளும் மற்றத் தளவாடங்களும் மாவி அண்ட் கம்பெனியாரிடமிருந்தும் மற்றஸ்தல வியாபாரிகளிடமிருந்தும் வாங்கி கரும்பு நசுக்கிச் சாறு பிழியுங் காலமாகிய ஜூலை மாதத்தில் வேலை ஆரம்பிக்கப்படும். இந்தத் தொழிற்சாலையில் சிங்காநல்லூர்முதலிய கிராமங்களி

136a

OFFICE OF THE REGISTRAR OF BOOKS ... MADRAS.

லிருந்து விவசாயிகள் அனுப்பும் கரும்புகளை ஒவ்வொருவருடைய கரும்புகளாய் நசுக்கிச் சாறுபிழிந்து பாகாக்கி வெல்லம் செய்யப்படும் இயந்திரோபாயங்களால் செய்யப்படும் வெல்லம் விவசாயிகள் செய்யும் வெல்லத்தைவிட நல்லதா யிருக்குமென்று நம்பப்படுகிறது. இந்தப் பரீட்சையானது விவசாயிகள் தங்கள் கரும்புகளைத் தங்கள் நிலத்திலேயே நசுக்குவதைவிட்டு தொழிற் சாலைகளுக்கு கொண்டுபோய் நசுக்கினால் எவ்வளவுதூரம் லாபங் கிடைக்குமென்று அறிவதற்காகச் செய்யப்படுகின்றது. இந்த நோக்கம் சிங்காநல்லூர் விவசாயிகளுக்கு விளக்கிக் காட்டப்பட்டபோது அதை யவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். இந்த விஷயத்தில் சர்க்கார் செய்யும் செலவுக்கு ஈடாக உண்டாகும் வெல்லத்தில் நூற்றுக்கு 20 பாகம் சர்க்காரே எடுத்துக் கொள்வார்கள். இது அதிகமென்று தெரியுமானால் மிகுந்ததை விவசாயிகளுக்குத் திருப்பிக் கொடுத்துவிடக்கூடும். வருஷக் கடைசியில் இந்தப் பரீட்சை எவ்வளவுதூரம் நிறைவேறிற்றென்று மிஸ்டர் சாட்டர்ட்டன் கவர்ன்மெண்டுக்கு ரிபோர்ட்செய்வார். நிறைவேறும் பட்சத்தில அடுத்த வருஷத்திலும் பரீட்சைசெய்யப்படும்.—(சுதேசமித்திரன்.)

---

போப்பால் பீகமின் பெண் கல்வியைப் பற்றின முயற்சி:—போப்பால் பீகம் டெல்லியில் ஸ்தாபிப்பதாக யோசனை செய்திருக்கும் பெண் காலேஜில் அனுதாபங்காட்டி, பரத்பூர் மகாராஜாவின் தாயார் 'பயோனியர்' பத்திரிகைக்கு எழுதியிருக்கிறார். சக்கரவர்த்தினி இந்தியாவுக்குவந்த சுபசம்பவத்தை நிலைநிறுத்தும் நோக்கத்துடனும் ஸ்தாபிக்கப்படும் இந்தக் காலேஜில் எல்லோரும் அனுதாபங் காட்டுவார்கள். இம்மாதிரி அனுதாபங்கள் அநேகம் போப்பால் பீகமுக்கு வந்திருக்குமென்று நம்புகிறோம். பரத்பூர் மகாராஜாவின் தாயார் இந்தக் காலேஜைப்பற்றிப் பின்வரும் சமுச்சயங்களைத் தெரிவித்து, அவைகளைத் தீர்க்கவேண்டுமென்று கேட்கிறார்: (1) மேயோக் காலேஜில் ராஜகுமாரர்கள் பயிலுவதுபோல இந்தக் காலேஜிலும் ராஜகுமாரிகளே பயிலுவார்களா? அல்லது எல்லா வகுப்புப் பெண்களும் சேர்ந்து பயிலக்கூடியதா? (2) பின்னால் சொன்னது இந்த ஸ்கூலின் நோக்கமானால் டெல்லியிலுள்ள பெண்கள் மட்டுமா? அல்லது இந்தியாவிலுள்ள எல்லாப் பெண்களுமா? (3) இந்தக் காலேஜில் எந்த வழிகளில் படிப்பு சொல்லி வைக்கப்படும்? இந்த சமுசயங்களைப் போப்பால் பீகம் தாமசமில்லாமல் தீர்க்கும்படி பத்திரிகைகளில் கடிதம் பிரசுரிப்பாரென்று நம்புகிறோம்.

---

காக்கிநாடாவில் மாதர் சங்கம்:—இந்த மாதம் 24-ந்தேதி மாலை, காக்கிநாடா மாதர் சங்கத்தார், ஸ்திரீகளுக்கு ஸெஷனல் பாடசாலைகள் ஸ்தாபிக்கப்படவேண்டும் என்றும், வீட்டில் படிப்போர்களுக்கு அறை கிராண்ட்டு கொடுக்கப்படவேண்டும் என்றும், விசாகபட்டணத்தில் ஸ்திரீகளுக்கென் றேற்படுத்த உத்தேசித்திருக்கும் மாதிரி ஹைஸ்கூலில் படிப்பவர்களுக்கு, நான்காவது பாரத்திலிருந்து இங்கிலீஷ் கற்பிக்கப்பட்டு வரவேண்டும் என்றும், கண்டு பெண்கள் பாடசாலை இனிஸ்பெக்டருக்கு ஒரு அட்ரெஸ் தயார்செய்து வாசித்தார்கள்.



சீனதேசத்து ஸ்திரீகள்.

ஏலீ1

# மாதர் மனோரஞ்சனி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol. XIV. | Madras: July 1912. | No. 7.
புத்தகம் - கச. | சென்னப்பட்டணம்: ஜுலை௴ 1912. | இலக்கம் - 7.

## சாஸ்திரப்பாடம்.

## சூடானவஸ்துக்கள்.

பனிக்கட்டிகளின் மத்தியில் நின்றும் கருவியை எடுங்கள். உடனே ரசம் ஏற ஆரம்பிக்கின்றது. மறுபடி அத்துண்டுகளின் மத்தியில் புதைத்து, வைத்தால் முன் இருந்த இடத்திற்கேவந்து நின்று விடுகின்றது. அவ்விடத்தில் போட்டுள்ள கோட்டை கவனித்தால் அது முப்பத்திரண்டாவது படியாயிருக்கும். மற்றும் ஒரு தெர்மா மீடரைவைத்துப் பார்த்தாலும் அது 32-வது படியிலேயே கிட்ட கிட்ட நிற்கும். அப்படியே கருவிகளை விட்டு விட்டால் பனிக்கட்டிகள் எல்லாம், முழுவதும் உருகும்வரையில் ரசம் முப்பத்திரண்டாவது படியை விட்டு மேலேபோவதில்லை. ஆகையால் உருகும் பனிக்கட்டிகளின் உஷ்ணஸ்திதி நிலையானது; மாறுவதே விசேஷமாயில்லையென்பது புலப்படுகின்றதல்லவா? நிலையான டெம்பரெசர் ஆனதுபற்றி தெர்மா மீடர்களில் எல்லாம் இந்த நிலையையே ஆரம்பமாகக் கொள்வது வழக்கம். அஸ்திவாரமெல்லாம் நிரம்பின பிறகு வீட்டு வாசப்படியின் லெவல் (Level) எடுத்துக்கொண்டு அதற்குமேல் எப்படி கட்டடம் கட்டிக்கொண்டு போகிறார்களோ அதுவேபோல் உருகும் பனிக்கட்டியின் உஷ்ண நிலையாகிய 32-ம் படியையே ஆரம்பஸ்தானமாகக் கொள்ளுகின்றனர் சாஸ்திர பண்டிதர்கள். நமது தெர்மாமீடரைக்கொண்டு இன்னமொரு பரீக்ஷைசெய்வோம். ஒரு சிறு பாத்திரத்தை எடுத்துக்கொள்வோம். அதற்கு வாய் குறுகலாயிருக்கவேண்டும். (தகரடப்பாக்கள்மேல் சொன்னமாதிரி எளிதில் கிடைக்கும்) அதன்வாயில் ஒருநல்ல கார்க்கை அடைப்போம். அதன் மத்தியில் இரண்டுதுவாரம் செய்வோம். ஒரு துவாரத்தில் தெர்மாமீடரைச் சொருகுவோம். மற்றதைச் சும்மா விட்டுவிடுவோம். பாத்திரத்தில் பாதி வரை ஜலம்விட்டு நடுவே தெர்மாமிடர் சொருகியுள்ள கார்க்கால் பாத்திரத்தின் வாயை மூடுவோம். தெர்மாமீடரின் கிண்ணம் ஜலத்துக்கு இரண்டு அங்குல உயரத்தில் இருக்கவேண்டும். ஜலத்தைத் தொடவும் கூடாது. ஜலத்தினுள்ளேயும் இருக்கக்கூடாது. இப்பொழுது ஜலத்தை ஒரு அடுப்பில் காய்ச்சுவோம். (கரியடுப்பு சௌகரியமானது.) ஜலம் சூடு ஏற ஏற தெர்மாமீடரின் ரசம் மேலேபோவதைப் பார்க்கலாம். ஜலம்கொதிக்க ஆரம்

பித்ததும் சும்மாவிருக்கும் கார்க்துவாரத்தின் வழியாய் "புஸ்" என்று நீராவி வெளியில் புறப்படும். சிறிது தூரத்திற்கப்பால் ஆவி காற்றுப்பட்டு குளிர்ந்து சிறு மேகம்போல் வெள்ளிய நிறத்துடன் போகக்காணலாம். தெர்மாமீட ரை மறுபடி கவனியுங்கள். ரசம் மேலே ஏறி ஒரு நிலையில் நின்றுவிட்டது. மேலும் போவதில்லை, கீழும் இறங்குவதில்லை. பாத்திரத்தை யடுப்பிலிருந்து இறக்கிவைத்தால் ரசம் கீழிறங்கும். மறுபடி ஏற்றுவோம். மறுபடி மேலே போய் முன் நிலையில் நிற்கின்றது அங்கே போட்டிருக்கும் இலக்கம் கிட்டத் தட்ட 212 ஆய் இருக்கும்: ஆகவே கொதிக்கும் நீரிலிருந்து கிளம்பும் ஆவி யின் உஷ்ண ஸ்திதியும் நிலையான டெம்பரேசர் என்பது விளங்குகின்ற தல் லவா? இந்த இரண்டு நிலையான டெம்பரேசர்களுக்கும் இடையில் உள்ள விடத்தை நமது தெர்மாமீடரில் 180 சரியான பாகங்களாக வகுத்திருக்கின் றது. வேறுவிதமான தர்மமீடர்களுமுண்டு. அவைகளைப்பற்றி இங்கேபேச போவதில்லை. ஆனால் எல்லாவிதமான கருவிகளிலும் மேலேகாட்டின உரு கும் பனிக்கட்டியின் உஷ்ண ஸ்திதியையும் கொதிக்கும் ஜலத்தினின்று கிளம்பும் ஆவியின் உஷ்ணஸ்திதியையுமே ஆதாரமாகக்கொண்டு வகுப்புகள் செய்து இருக்கிறார்கள். ஒவ்வொரு வகுப்புக்கும் ஒரு டிக்கிரீ (Degree) என்று சொல்வார்கள். நாம் ஒவ்வொரு வகுப்பையும் ஒருபடி யென்று பேசுவோம்.

உருகும் பனிக்கட்டியின் டெம்பரேசர் முதல்கொண்டு கொதிக்கும் ஜலத்தி லிருந்துவரும் ஆவியின் டெம்பரேசர்வரையில் உள்ளபாகத்தை மேற்சொல்லிய மாதிரி 180 சரியான பாகங்களாக வகுத்து இருந்தால் அம் மாதிரியான தெர்மாமீடர்களுக்கெல்லாம் பாரன்ஹீட் (Fahrenheit) தெர்மா மீடர் என்றுபெயர். ஏனெனில் இம்மாதிரியான தெர்மாமீடரை முதலில் பாரன்ஹீட் என்னும் சாஸ்திர பண்டிதர் கண்டுபிடித்தனர். இந்த வித தர் மாமிடரே சாதாரணமாய் இந்தியா, இங்கிலாந்து முதலான விடங்களில் உபயோகிப்பதுபற்றி இதைப்பற்றி இந்நேரம் பேசினோம். ஆகவே எல்லா பாரன்ஹீட் தெர்மாமிடர்களும் ஒரேமாதிரியான நிலையான டெம்பரேசர்களைக் கொண்டு வகுப்புகளசெய்து இருப்பதால் எல்லா தெர்மாமீடர்களும் ஒரு இடத்தில்வேண்டிய நேரம்வைத்து இருந்தால் ஒன்றில் ரசம் 90-ம் படியில் நின்றால் மற்ற எல்லாவற்றிலும் 90-ம் படியிலேயே ரசம் நிற்கும். இத்தெர் மாமீடர்படி மனிதசரீரத்தின் உஷ்ணம் 98 டிகிரி. அதாவது சாதாரணமாய் சௌக்கிய நிலைமையிலிருக்கும் மனிதசரீரத்தில் சரியானகாலம். பாரன்ஹீட் தெர்மாமிடரை வைத்து இருந்தால் சுமார்ரசம் 98-வது படியில் நிற்கும். 32 டிகிரீ, 212 டிகிரீ இவை நிலையான டெம்ரேசர்களென்று சொன்னதினாலேயே 21 டிகிரீக்கு மேலேயும் 32 டிகிரீக்குக் கீழேயும் (டெம்ரேசர்) சீதோஷ்ண ஸ்திதியை இத்தெர்மாமிடரால் அடக்க முடியாதென்று எண்ணவேண்டாம். ஒரு கஜம் நிலையான அளவுதானே? அதை வைத்துககொண்டு 2கஜம் நீளம், 3கஜம், 4, 5, 6என்று முறையே அளவிடக் கூடாதா? அதே மாதிரியாய் 213, 214, 215 என்றுமுறையே மேலேயும் அளந்துகொண்டு போகலாம். 31, 30, 29, 28, என்று 32-க்கு கீழேயும் அளககலாம்.

டாக்டர் உபயோகிக்கும் தெர்மாமீடர்:—

யாருக்காவது உடம்பு சௌக்கியமில்லா விட்டால் டாக்டரை யழைப் பது சகஜமே. டாக்டர் வியாதிஸ்தர்களைப்பரிக்ஷைசெய்யும்போது தேகத்தில்



காய்ச்சல்(சுரம்) இருக்கிறதாவென்று பார்க்க ஒரு சிறிய தெர்மாமீடரை யுப யோகிப்பார். அதை நீர் டாக்டரிடம் கேட்டு வாங்கி பரிக்ஷை செய்யலாம். அதில் 32-ம்படியும் காணமாட்டீர். 212-ம்படியும் கிடையாது. 90-ம் படி முதல் 115-ம் படிக்குமேல் இருப்பதரிது. இதன் காரணம் உங்களுக்கு விள ங்கலாம். 98-டிகிரீ எல்லாமனிதருடைய சாதாரணதேசத்து டெம்பரேசர். அதிககாய்ச்சல் வந்தபோதிலும் கூட 110-டிக்கிரிக்குமேல் வெகுவாய்ப போவதில்லை. சிலவியாதிகளால் தேகம் குளிர்ந்துபோய் 95-டிக்கிரிக்குக் கீழ் போவது வருத்தம். அப்படிப்போகுமானால் அவ்வியாதியஸ்தர் தப்பிப்பிழை ப்பது அரிது. டாக்டருடைய தெர்மாமீடருக்கும் ஒடுக்கமான குழாய் ஆரம் பிக்குமிடத்தில் இன்னுமொரு வித்தியாசம். சாதாரண தெர்மாமீடரை எந்தவஸ்துவின் மேல்வைத்து இருந்தோமோ அதைவிட்டு எடுத்தோமானால் ரசத்தின் நிலைமாறிவிடும். டாக்டர் தெர்மாமீடரில் அப்படியில்லை. அதன் அடிப்பாகத்தில் கண்ணாடிக் கிண்ணத்துக்குமேல், ஒரு சுறுக்கம் இருக்கின் றது. ரசம் மேலே போகும்போது அச்சுறுக்கமான இடத்தைத் தாண்டிப் போகிறது. வியாதியஸ்தன் தேகத்தைவிட்டு எடுத்தால் சுறுக்கமான பாகத் துக்குமேல் உள்ள ரசம்தானே கீழேவர முடிகிறதில்லை. தன்னிலையில் நிற் கின்றது. ஆகையால் டாக்டர் சாவகாசமாய் வியாதியஸ்தன் தேகஸ்திதியை அறியலாம். மறுபடி உபயோகம் செய்யும்போது ஒரு குலுக்கு குலுக்கினால் தான், மேலே போன ரசம் கீழேவரும். பிறகு தான் மறுபடி உபயோகிக்க வேண்டும்.

தினப்பத்திரிகைகளில் ஒவ்வொருஊரிலும் உஷ்ணநிலை இவ்வளவென்று வரைந்திருப்பதைப் பார்த்திருக்கலாம். இல்லையேல், மெயில், ஹிந்து, முதலிய பத்திரிகைகளை எடுத்துப்பாருங்கள். இந்த டெம்பரேசர் எல்லாம் பாரன்ஹீட் தெர்மா மீடர்கொண்டு அளந்தவைகளே. இவ்வாறு தினந்தினம் பத்திரிகை யில்வருவதால் ஒவ்வொரு ஊரின் சீதோஷ்ணஸ்திதியும் பலருக்கும் நன்றாய்த் தெரிகின்றது. ஒரு ஊரை மற்றொரு ஊருடன் ஒப்பிட மிகவும் அனுகூல மாகின்றது. சில வருஷங்களின் ரிபோர்ட்டுகளைக்கொண்டு அந்த ஊரில் குளிர்காலம், வெயிற்காலம், மழைகாலம், இவை எப்பொழுது வருகின்றன என்பதையறிந்து அதற்குத் தக்கபடி குடியானவர் தங்கள் விவசாயவேலை களை சீர்படுத்திக்கொள்வார்கள்.

ஆர். கே. சுவாமி, பி-ஏ., எல்-டி.,

## ஸ்ரீ ராமர் சீதாபிராட்டியைக் காணல்.

கிளிக்கண்ணி மெட்டு.

64. மேனகை கண்வலையில்—சிக்கு—மகரிஷி மைந்தருடன்
ஜானகி வாஸசுபம்—சார்ந்த—மிதிலைபு குந்தனரே.

65. பாந்தம ணிக்கொடிகள்—பரிந்து—பார்த்திட ராமர்முகம்
அரங்கமர் இளமுகிலை—அன்பாய்—அணைத்தும கிழ்ந்தனனே

66. பசியப யிர்க்கதிர்கள்—பரிந்து—பார்த்திட ராமர்முகம்
நசிவறு நகைமுகங்கள்—தாழ்த்தி—நாணிம கிழ்ந்தனவே.

67. பங்கஜ நறுமலர்கள்—பரிந்த—பார்த்திட ராமர்முகம்
மங்கள மாகவெழில்—இதழ்கள்—மலர்ந்தும கிழ்ந்தனவே.

68. படர்ந்தப சும்பொழில்கள்—பரிந்து—பார்த்திட ராமர்முகம்
கடலெனப் பொங்குபுதுக்—கந்தம்—கமழ்ந்தும கிழ்ந்தனவே.

69. பனிமலர் வண்டுபல—பரிந்து—பார்த்திட ராமர்முகம்
இனிப்புறு மதுவைமிகப்—பருகி—இரைந்தும கிழ்ந்தனவே.

70. பறவையி னம்பலவும்—பரிந்து—பார்த்திட ராமர்முகம்
இறைவனே மங்களமென்—றினிதாய்—இசைத்தும கிழ்ந்தனவே.

71. தையலர் மாடங்களில்—கையில்—தாங்கிய யாழிசைத்துச்
செய்யதேன் இன்குரலில்—கீதம்—செப்பிம கிழ்ந்தனரே.

72. நிழல்தரு வன்மரங்கள்—தாங்கு—நீள்கயி றூஞ்சலாடி
குழல்குலைந் திருநங்கையர்—இனிது—குலாவிம கிழ்ந்தனரே.

73. மகரிஷி கௌசிகரும்—மன்னன்—மைந்தராம் ஶ்ரீஷருக்கு
நகரத்தின் நல்வளங்கள்—நலமாய்—நவின்று மகிழ்ந்தனரே.

74. ஊனமில் வேள்விமுடி—முனிவர்—ஒப்பிலா வீரருடன்
ஜானகி கன்னிமாடம்—அருகே—சார்ந்து மகிழ்ந்தனரே.

75. செப்பரும் வண்ணமமை—எங்கள்—ஸ்ரீராமர் திருமுகத்தை
உப்பரி கையிருந்தே—சீதை—உற்றுநோக் கிட்டனளே.

76. மன்னிய பேரழகை—மன்னு—மங்கையாம் ஜானகியின்
கன்னிமா டத்தைநோக்கி—ராமர்—கண்ணொளி நிலவியதே.

77. கயலெனு மீன்கடுத்த—சீதை—கண்களை ராமருற்று
வியப்புடன் நோக்கிடவே—சீதை—வியாகுல மாய்மகிழ்ந்தாள்.

78. மேனகை கண்வலையில்—சிக்கு—மகரிஷி ஶ்ரீஷராமர்
ஜானகி கண்வலையில்—சிக்கி—சஞ்சல மாய்மகிழ்ந்தார்.

79. எண்ணில ருந்தவஞ்செய்—முனிவர்—ஏகிட மைந்தருடன்
றண்ணிடை ஜானகியும்—தனித்து—நொந்தகம் வாடினளே.

(தொடரும்.)

சு. அ. சுப்பராயன்.



# கமலாலயம்.

(நவராத்திரி சமயம்.)

வெள்ளிக்கிழமை சாயங்காலம் ஆயிற்று; இன்று சீக்கிரமே பாட்டு
சத்தம் கேட்பதால் கொலுவில் இருக்கும் பதுமைகளுக்கு உபசாரம் நடத்
தினபின் புறப்பட்டு பங்களாவுக்குப்போகப் பிரயத்தனம் செய்கிறார்கள்
என்பது தெளிவாகின்றது. எவ்வளவோ ஜனங்கள் உள்ளே நுழைவதும்
வெளியே போவதுமாய் இருக்கிறார்கள். ஆனால் இன்றைக்குமட்டும் கூட்
டம் சற்றுமட்டு என்றே சொல்லலாம். சிறுவர்கள் சிறுமிகளுக்குக் கணக்கி
ல்லை. வேடிக்கையுடன் ஏதாவது சிற்றுண்டியும் கிடைப்பதினால் வாவத
ற்கு என்னதடை? சபைக்கு முக்கியமாய் வருகின்றவர்கள், முதல்நாளே
சமாசாரம் தெரிந்து இருப்பதினால் 7 மணிக்குள் கமலாலயம்வந்து சேர்ந்து
விட்டனர். ருக்மணி, கமலாபாய் இவர்கள் வண்டிகளும் நிற்கின்றன. லக்ஷ்
மியம்மை தன் இரண்டு குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு வியர்வை
சொட்ட நடந்துவருகிறாள். மீனாம்பிகைமட்டும் அன்று முழுவதும் சாவித்
திரியம்மை வீட்டிலேயே இருந்துவிட்டாள். அகிலாண்ட நாயகியம்மாள்
உடம்பு சௌக்கிய மில்லையென்றும், வந்தாலும் கிழவியாகையால் பனி
பொறுக்க முடியாதென்றும், சொல்லிவிட்டார். அதற்கு பதிலாய்ப் புதிதாய்
தாரா நகருக்குவந்த ரேஞ்சாபீசர் மனைவி சுந்தரவல்லியும், தாசில்தார்மனைவி
மஞ்களம்மாளும் வருவதாகச் சொன்னார்கள். முன்சொன்ன இரண்டு வண்
டிகளுடன் எங்கள் வண்டியும் வெளியே நிற்கின்றன. நானும் தம்பூர் எடுத்
துச்செல்லும் பாகவதர்போன்று தூரதிருஷ்டிக் கண்ணாடிவைத்து இருக்
கும் தோலபையை கையில் தூக்கிக்கொண்டு புறப்பட்டேன். பிரேமநாதர்
வரவில்லையென்று சொல்லிவிட்டார். நடராஜன் பறக்கிறான் வேடிக்கை பார்
ப்பதற்கு!! எல்லாரும் வண்டியிடம் வந்து நின்றோம். சந்திரசேகரர் "நாம்
இரண்டுபேரும் முன்னே போவோம் வா என, நான் புறப்பட்டேன்.

ருக்மணியம்மை "நிலாவிழ இன்னும் 1-மணி நேரம் செல்லும்.
ஆகையால் நிலாவில் நாமும் ஏன் நடந்து போகக்கூடாது? வரும்போது
வேண்டுமானால் இருட்டாயும் பனி அதிகமாயும் இருக்குமாதலால் வண்டி
களில் வரலாம். உங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லுங்கள்" என மீனாம்
பிகை "ஏன் அக்காவண்டியில் எல்லாரும் கசகசவென்று உட்கார்ந்து போவ
தைவிட நடந்துபோவதே மேலானது: மேலும் இத்தனைபேர் சேர்ந்து என்
றைக்குத்தான் நடக்கப்போகிறோம். அப்படிச் செய்வதுதான் நல்லதென்று
எனக்குத் தோன்றுகின்றது." ஞானம் "எல்லாருக்கும் எப்படி இஷ்டமோ,
அப்படிச் செய்வதில் ஆக்ஷேபணையில்லை—ஆனால் வண்டிகளும் வரட்டும்.
ஏறிக்கொள்ள இஷ்டமிருக்கிறவர்களும் ஏறிக்கொள்ளட்டும். ஏன் அக்கா,
(லக்ஷ்மியம்மாளை) நீங்கள் வேண்டுமானால் குழந்தைகளுடன் ஏறிக்கொள்
ளுங்கள். குழந்தை நடந்துவரமாட்டான்." என, லக்ஷ்மியம்மாள்மட்டும்
ஏறி உட்கார்ந்தாள். ஞானம் "வீரா! நீ உன் மூட்டையைத் தோட்டக்கார
னிடம் கொடு; அவன் ஐயருடன் முன்னே போகட்டும்; நீ எங்களுடன்
துணைவா" என்றாள். நான் கண்ணாடியை என் மருமகனிடம் கொடுக்கவே
அவனும் சந்திரசேகர அய்யரும் புறப்பட்டுவிட்டனர். நடராஜனும் கூடவே
ஓடிவிட்டான். நான் பெண்களுடன் துணையாய்ச் சென்றேன்.

வழியில் புதிதாய் வந்தவருள் ஒருவளாகிய சுந்தரவல்லி "ஞானம்மாள் உங்கள் சபையின் மீடிங்குகளுக்கு இனிமேல் வாரம் வாரம் நானும் வருகிறேன். நீங்கள்சபைவைத்து இருப்பதனால் என்னென்னவோ தெரிந்துகொள்ளுகிறீர்கள். மூட்டாள்கள் வீட்டில் அடைத்துக்கிடக்கும் எங்களுக்கு என்ன தெரிகிறது" என்றாள்.

ருக்மணி "என்னவென்ன தெரிந்துகொள்ளுகிறோம்! தெரியக்கூடாத விஷயம் ஒன்றும் நாங்கள் தெரிந்துகொள்வதில்லையே?"

சுந்தரவல்லி "மன்னிக்கவேண்டும்! நீங்கள் என்னவோ தப்பு அர்த்தம் செய்துகொண்டீர்கள். நான்வேறு ஒன்றும் சொல்ல வரவில்லை. பெண்கள் தெரிந்துகொள்ளவேண்டிய அவசியமான பல விஷயங்களையும் பற்றி விசேஷமாய் எடுத்துப் பேசுவதுடன் பல சாஸ்திர விஷயங்களையும் அறிய விரும்புகிறீர்கள் என்று சொல்ல வந்தேன். உதாரணமாய் இப்பொழுது வானசாஸ்திரம் கற்றுக்கொள்ளப் புறப்பட்டு இருக்கிறோமே; வானத்தின் அதிசயங்களை தூரதிருஷ்டி கண்ணாடியால் பார்க்கப்போகிறோமே! இது எல்லாப் பெண்களுக்கும் கிடைக்கக் கூடிய விஷயமோ? நாம் பார்க்கப்போகும் காக்ஷியின் பெருமை எப்படி இருக்கும் என்று நான் மனதில் அநுமானம் கூடசெய்து கொள்ள முடியவில்லை. இதையே சொல்லவந்தேன். வேறு விகல்பமாய் ஒன்றும் பேசவில்லை" என, ருக்மணி "அப்படியா; தெரியாது பதட்டமாய்ப் பேசிவிட்டேன். என் குற்றத்தை க்ஷமிக்கவேண்டும்!! தூரதிருஷ்டிக் கண்ணாடி வழியாய்ப் பார்ப்பது மிகவும் விநோதமான விஷயமே! ஆக்ஷேபணையில்லை. நான் குழந்தையாய் இருந்தபோது என் தகப்பனார் நாகப்பட்டணத்தில் வேலையாய் இருந்தார். அப்பொழுது ஒரு சமயம் அவர் கலக்டர் துரையுடன் ஸர்கூட்போயிருந்தார். நானும் என் தாயாரும்கூடவே இருந்தோம். அத்துரையிடம் ஒரு தூரதிருஷ்டிக்கண்ணாடி இருந்தது. ஒருநாள் அதை என் தகப்பனார் வாங்கிவந்து எங்களுக்குக் காட்டினார். 4 அங்குலநீளத்தில் இரண்டு குழாய் இருந்தன; ஒவ்வொன்றையும் ஒவ்வொரு கண்ணுக்கு வைத்துக்கொள்ளவேண்டும்; நடுவில் ஒரு ஸ்குரு இருக்கிறது. அதைத் திருகினால் பார்க்கிறவர்கள கண்ணுக்குத்தக்கபடி கண்ணாடிகளைச் சரியான நிலைமைகளில் வைத்துக்கொள்ளலாம். அப்பொழுது பார்த்தால் தூரத்தில் இருக்கும் செடி, கொடி, மனிதர்—இவைகள் எல்லாம் நன்றாய்த்தெரிவதுடன் வெகுபக்கத்தில் இருப்பனபோல் தோன்றுகின்றன. அப்பால் இருக்கும் மலையைப்பார்த்தால் 300, 400, அடிதூரத்தில் இருப்பதுபோல் தோன்றுகிறது.

மீனாம்பிகை:—"அப்படி எங்கேயாகிலும் இருக்குமா என்ன? கொஞ்சம் பொய்யும் கலந்துபேசுகிறாப்போல் இருக்கிறது!!". ஞானம் "அப்படியில்லை, மீனா!! ருக்மணியம்மாள் சொல்வது உண்மை தான்; இன்று பார்க்கப் போகிறாயே, அப்பொழுது உனக்கே அவள் சொல்வது சரியென்பது விளங்கும்—(ருக்மணியம்மாளை நோக்கி) நீங்கள சொல்லவேண்டியவற்றைச்சொல்லுங்கள், கேட்கலாம்"

ருக்மணி:—"எங்கள் மேல்மெத்தையிலிருந்து பார்த்தால் ½ மைலுக்கு அப்பால் உள்ள குளம் ஒன்று நன்றாய்த்தெரியும். அதில் யாரோ ஸ்நானம் செய்துகொண்டிருப்பது போல் தோன்றினபடியால் நான் அந்தப்பக்கமாய் தூரதிருஷ்டிக் கண்ணாடியைத் திருப்பிக்குளக்கரையில் பார்க்கவே எனக்கு



வெகுபக்கத்தில் ஒரு கிழவன் மீசையும் தாடியுமாய் என்னை 'உர்' என்று பார்ப்பதுபோல் தோன்றினபடியால் ஐயோ என்று அலறிவிட்டேன். உடனே என் தகப்பனார் கண்ணாடியைப் பிடுங்கிக்கொண்டு "பயப்படவேண்டாம்! குழந்தாய், அக்கிழவன் ½ மைல் தூரத்துக்கு அப்பால் இருக்கிறான்" என்று தேற்றினார். இதைக் கேட்கவே எல்லாரும நகைத்தார்கள. அப்பொழுது ஞானம்பாள் "நகைப்பதில் பயனில்லை. அப்படி பயப்படுவது ஸகஜம் தான். நேற்று ஒரு கதை நான் கேட்டேன். அதுவும் இம்மாதிரியே; அது அதிக விநோதமாய் இருப்பதால் உங்களுக்குச்சொல்லுகிறேன்". எல்லாரும் "சொல்லுங்கள், சொல்லுங்கள், வழிதொலையட்டும்" என, ஞானம்பாள் ஆரம்பித்தாள்.

## தூரதிருஷ்டிக் கண்ணாடியில் தோன்றிய உருவத்தைப் பார்த்து ஏமாந்துபோன சிற்றரசன் கதை.

ஆப்பிரிகாகண்டத்தில் முன்காலத்தில் நாகரீகமற்ற ஜாதியாரே குடியிருந்ததாகச் சொல்லுகிறார்கள். அப்பொழுது அத்தேசம் பற்பல சிறு இராச்சியங்களாகப்பிரிபட்டு சிற்றரசர்களால் ஆளப்பட்டு வந்தது. அவர்கள் ஒருவரோடொருவர் சதா சண்டைபோட்டுக் கொண்டிருந்தார்கள் என்பது சொல்லவேண்டியதில்லையே!! அவர்களுள் முடிமான் என்ற அரசன் ஒருவன். அவன் மகாபலசாலி. கூடியமட்டும் புத்திசாலி என்றே சொல்லலாம். ஆனால் கோபமும் குரூரமும் சொல்லிமுடியாது. தன் முன்னோர்காலத்தில் தன் தேசம் கொஞ்சம் பலஹீனமடைந்தது என்று எண்ணி தன்காலத்தில் தேசத்தை பலப்படுத்த எண்ணினான். அவ்வெண்ணத்துடன் தன் ஜனங்களையெல்லாம் சிராய்ப் பழக்கி எப்பொழுதும் யுத்தத்துக்குத் தயாராய் இருக்கும்படியான ஒரு சேனை ஏற்பாடு செய்துகொண்டான். அச்சேனையுடன் தன் பக்கத்து இராஜ்யத்தின்மீது படையெடுத்தான்.

அத்தேசத்து சிற்றரசன் "டாலோ". டாலோவுக்கு சாமர்த்தியம் அதிகம் கிடையாது. ஆனால் மிக்க நல்லவன். யார்வந்தாலும் உபசரிப்பான். ஆகையால் ஐரோப்பிய பாதிரிகளும் யாத்திரை செய்வோரும் அவன் தேசத்திலேயேபோய் இருந்துகொண்டு சுற்றுப் பக்கங்களுக் கெல்லாம் போவார்கள். இந்த டாலோவின் தேசத்தைக் கைப்பற்ற வேண்டுமென்று முடிமானுக்கு வெகு நாளாய் ஆசை. இதற்காகவேதான் தன் சேனையைச் சிராய்ப் பழக்கினான்போலும்!! ஆனால் டாலோவின் தேசத்தில் பல கோட்டைகளிருந்தன. அவைகளைப் பிடிப்பது வெகு கஷ்டமென்று டாலோ எண்ணியிருந்தான். முடிமான் தன் தேர்ந்த சேனையுடன் புறப்பட்டு மெள்ளமெள்ள எல்லாப் பிரதேசங்களின் கோட்டைகளையும் தனதாக்கிக் கொண்டுவிட்டான். டாலோ தன் சேனையை நடத்தினால் முடிமான முன்னால் அவர்கள் நிற்க முடிகிறதில்லை; பறந்தோடிப் போகிறார்கள். டாலோவின எண்ணமெல்லாம் பொய்யாயிற்று. எந்த எந்தக் கோட்டைகள் பிடிக்க முடியாதென்று எண்ணினானோ அவைகளெல்லாம் முடிமான் கையிலகப்பட்டன. டாலோவுக்கு கோட்டைகள் போகப்போக அவன் எதிரிக்கு பலமும் அதிகரித்தது. கடைசியாய் மிகச் சிறந்த கோட்டையாகிய தன் தலை நகரில்போய் சேனையுடன் ஒளிந்துகொண்டான். ஒருமாத காலத்திற்குள் முடிமான் அந்நகரத்தையும்

நோக்கிப் புறப்பட்டுவிட்டான். சண்டை மும்முரமாய் நடந்தது. அப்படியும் பிரயோஜனப்படவில்லை. முடிமான் ஜயமடையவே டாலோ மிஞ்சின சில சேனைத்தலைவருடன் காட்டுக்கு ஓடிவிட்டான்.

காட்டிலிருந்த போதிலும் இவர்களுக்கு முடிமானிடம் வெகுபயம். ஏனெனில் முடிமான் டாலோவையும் அவன் முக்கிய சேனைத் தலைவர்களையும் வேட்டையாடிக் கொன்றுவிட வேண்டுமென்று எண்ணியிருந்தான். இவர்கள் பயப்படுவதற்கு ஏற்ப முடிமான் தன் சேனையுடன் 2 மைலுக்கு அப்பால்வந்து இறங்கி இருக்கிறான் என்று ஒற்றர்கள்வந்து சொன்னார்கள். டாலோவுக்கு ஒன்றும் தோன்றவில்லை. கையைப் பிசைந்துகொண்டு முன்னும் பின்னும் தன் குடிசையில் அலைகின்றான். அச்சமயத்தில் ஒரு ஆங்கிலேயப்பிரபு அவ்விடம்வந்தார். அவர் டாலோவுக்கு மிகத்தெரிந்தவர். 4, 5 தடவை அவனிடம்வந்து விருந்தாளியாய்த் தங்கியிருந்தவர். அவர் டாலோவின் வருத்தத்தை நோக்கி பரிதாபப்பட்டு நடந்த விஷயங்களையெல்லாம் ஆதியோடந்தமாய்ச் சொல்லும்படி கேட்டார். அது முடிந்ததும் முடிமான் இறங்கியிருக்கும் பக்கம்பார்த்து தன்பையிலிருந்து ஒரு குழாயைப்போன்ற வஸ்துவை யெடுத்து வெகு ஜாக்கிரதையாக அதை நீட்டி கண்ணில் வைத்துப் பார்த்துக்கொண்டு சிலநேரம் நின்றார். பிறகு "டாலோ"வைப் பார்த்து "ஐயா, இப்பொழுது உமது விரோதிகள் சமையல் செய்கிறார்கள். சாப்பிட்டுவிட்டுப் புறப்பட நேரம் செல்லும். அதற்குள் நீங்கள் ஓடிப் பிழைக்கலாம்" என்றார். டாலோ "உமக்கு எப்படி தெரியும்? அது என்ன கையில் வைத்து இருக்கிறீர்? மாயைசெய்யும் சூனியகாரக் கைக்கோலா? விவரமாய்ச் சொல்லும்" என, வெள்ளைக்காரன், "அப்படியன்று; இதுதான் தூரதிருஷ்டிக் கண்ணாடி யென்பது. இதன் வழியாய்ப் பார்த்தால் தூரத்தில் நடக்கும் காரியங்களைக்கூட செவ்வையாய்க் கண்டறியலாம்" என்றார். டாலோ தானே அதன் வழியாய்ப்பார்க்க விரும்பவே அவ்வாங்கிலேயப் பிரபு அவனை நிறுத்திவைத்து அவன் கண்ணுக்குச் சரியாய் கண்ணாடியை நாட்டிவைத்தார்.

அவன் அதன்வழியாய்ப் பார்த்தானோ இல்லையோ உடனே 'ஓ' என்லறறி அடித்துக்கொண்டு தன் கையில்லையும் அம்புகளையும் கத்தி ஈட்டி இவற்றையும் ஒரே அடியாய் எடுத்துக்கொண்டு புறப்பட்டுவிட்டான். அவ்வாறு புறப்பட்ட டாலோவுக்கு உண்மையைச்சொல்லி அவன் பயத்தைத்தீர்க்க அரைமணிநேரம் சென்றது. பயம் தெளிந்த டாலோ "இவ்வளவு அதிசயமான கருவிவைத்து இருக்கும் நீர் எனக்கு ஓர் உபாயம் சொல்லிக்கொடுக்க முடியாதா?" என்று வேண்டினான். ஐரோப்பியன் சிறிதுநேரம் ஆலோசனை செய்துவிட்டு, "ஐயா! நீர் ஒரு வேலை செய்யும். அரைமணிநேரத்தில் நான் அவர்கள் கூடாரம் அடித்து இருக்கும் இடத்திற்குப் போய்விடுவேன். அங்கே போனதும் இக்கண்ணாடியை வெயிலில் ஆட்டுகிறேன். அது உங்களுக்கு வெளிச்சம் காட்டும். அதைக் கண்டதும் உடனே வரிசைக்கிரமமாய் கம்பீரமாய்ச் சண்டைக்கு வருகிறவர்கள்போல் புறப்பட்டுவிடுங்கள். ஜயமடைவதற்கு நான் ஜவாபுதாரி. தோற்றுப்போனால் இப்பொழுது ஓடுவதுபோல் ஓடலாம். மற்ற ஏற்பாடுகள் என்னைச் சேர்ந்தன" என்று சொல்லிப்புறப்பட்டார். அதற்குள் டாலோ தன் சிறு சேனையைத் தயார்படுத்தி சேனைத் தலைவர்களுக்கெல்லாம் நல்ல பளபளப்பான ஆயுதங்கள் கொடுத்து தானும் சரியானபடி நின்று கண்ணாடி வெளிச்சத்துக்குக் காத்திருந்தான். ஆங்கிலேயன் புறபட்டு அரைமணிக்குள்ளாகவே முடிமான்தனம் தங்கியிருக்கும் இடம்போய்ச் சேர்ந்தான்.



அங்கே அப்பொழுதுதான் சமையல் முடிந்து இருக்கின்றது. இன்னும் ஒருவரும் சாப்பிடவில்லை. சிலர் சாப்பிட ஆரம்பம் செய்கிறார்கள். சிலர் படுத்துறங்கினார்கள். ஆங்கிலேயர் முன்னமேயே டாலோவுக்கு சமிக்கை காட்டிவிட்டு தளத்துக்குள் நுழைந்தார். உடனே ஒரு வீரன் யார் என விசாரிக்க, "ஐயா! நான் ஹென்றி என்னும் ஆங்கிலேயன்!! உம்முடைய அரசர் முடிமானிடத்தில் வெகு அவசரமான வேலையின்மேல் வந்திருக்கிறேன். தலைபோகிற அவசரம்!! உன் எஜமானிடம் போய்வா" என்ன, சேவகன், "என் அரசன் தூங்குகிறார். மேலும் ஐரோப்பியரை நடுமத்தியானப்பொழுதில் பார்ப்பது வழக்கமில்லை. நீர் காத்து இருக்கவேண்டியதுதான்" என்ன, ஆங்கிலேயன் "நீ இப்பொழுது போய் அவரிடம் சொல்லாவிட்டால் பெரியவிபத்து நேரிடும். அப்புறம் அது தெரிந்தால் உன் அரசன் உன் தலையை வெட்டிவிடுவான்; பத்திரம். உடனேபோ. இல்லையானால் நடக்கிறது நடக்கட்டும், பார்த்துக்கொள்வோம். எனக்கென்ன வந்தது" என, சேவகன் "என்ன ஐயா! தொந்தரவுசெய்கிறீர்" என்று உள்ளேபோய் அரசனுக்கு சங்கதி தெரியப்படுத்தினான்.

அரசன் உடனே வெளியில்வந்து ஆங்கிலேயனை க்ஷேமசங்கதி விசாரிக்க, அவன், "அரசே! உம்மிடம் அதிக அன்புடன் வந்தவன் யான். உமக்கு இப்பொழுது ஒரு பெரிய ஆபத்து வருகின்றது. உம்முடைய எதிரி டாலோ பக்கத்து அரசனுடைய உதவியுடன் பலவீரரை யழைத்துக்கொண்டு இதோ வந்துவிட்டான். இன்னும் ஒரு நொடியில் இங்குவந்து குதித்து விடுவான்!! என்ன செய்வீர்களோ அதை உடனே செய்யவேண்டும்" என, முடிமான் "எப்படி ஐயா தெரியும் உமக்கு? பொய்சொன்னால் இதோ கொன்றே விடுவேன்!" என்று கத்தியை யோங்க, ஆங்கிலேயன் சற்றுப் பின் வாங்காமல் "ஐயா, நீரே இதோ இக்குழாய் வழியாய் பாரும். அவர்கள் வருகிறார்களோ இல்லையோ என்பது புலப்படும். பொய்யானால் என்னைப் பிறகு தண்டிக்கலாம்" என்றான்.

முடிமான் தூரதிருஷ்டிக் கண்ணாடி வழியாய்ப் பார்க்கவே, டாலோவும் அவன் படைவீரரும் தனக்குச் சில கஜங்களுக்கு அப்பால் வெயிலில் மின்னும் கத்திகளுடனும் புதியவில், அம்பு, இவற்றுடனும் குதிரையேறி வருவதைக் கண்டு, பிரமித்துப்போய் ஆங்கிலேயனை மெச்சி, உடனே தன் தனம் புறப்படவேண்டுமென்று உத்தரவளித்தான். அப்பொழுதுதான் வந்து இறங்கி 2 மணிநேரம்கூட ஆகாமல் இருக்கும்போது திரும்பவேண்டுமென்றால் எவ்வளவு கஷ்டம்! சேனையெல்லாம் சீர்குலைந்து நிலைகுலைந்து தட்டுத்தடுமாறி ஓடத் தொடங்கினர். இப்படி நிலைகுலைந்து ஓடும்போது துரத்துகிறவர்களுக்கு சுலபமில்லையா? டாலோ ஓடியும் வந்து அவர்களை எதிர்த்து முடிமானைச் சிறைசெய்தான். தங்கள் அரசன் அகப்படவே சேனைத் தலைவர்கள் மனம் அழிந்து தோல்வியடைந்தனர். டாலோ தன் தேசத்தை வரிசைக்கிரமமாய் ஜெயித்துவிட்டு ஆங்கிலேயனுக்கு மிக்க பரிசளித்து முடிமானையும் விடுதலை செய்துவிட்டான்" என்று முடித்தாள் ஞானம்பிகை.

கமலா, "யுத்தவீரர்களே பயப்பட்டுவிட்டார்கள் என்றால் நீ பயப்பட்டது ஆச்சரியமல்ல. ஆனாலும் நான்பார்த்த பிறகுதான் சொல்லுவேன்.

இப்படியும் இருக்குமா என்று சந்தேகம் கொடுக்கிறது" எனக்கு. ஞானம் 'இதோ பங்களாவுக்கு வந்துவிட்டோம்?—விரா' ஐயர் முன்னேபோய் இருக்கிறாரே, நீ ஓடு; குழாயைத் திறந்து முக்காலிமேல் ஏற்றிவைக்க 15, 20 நிமிஷம் செல்லும்—நடராஜா, நீ எங்கேயாவது ஓடிப்போய்விடாதே! உன் அத்திம்பேர் இடத்தில் இரு. இல்லையேல் என் கையைப் பிடித்துக்கொண்டுவா—கமலா "எல்லாம் இன்னும் 10 நிமிஷத்தில் பார்க்கிறாய். அவசரப்படாதே." எல்லாரும் மேல்மாடிக்கு வந்து சேர்ந்தார்கள். மற்றவைகளை அடுத்த அத்தியாயத்தில் பேசுவோம்.

☞ வாயில் காப்போன்.

## உபாத்தியாயர் கடமை.

உபாத்தியர் தகைமை யுரைக்குங் காலை
கல்வி யில் சிறார்க்கு கற்பித்தலாகும்
அறிவிற் சிறிய வமுதின் மொழியரை
கல்வியிற் பெரிய கலனச் செய்து
அறியாமை நீக்கி யறிவு கொளச் செய்தல்
அருந்தவம் பேறுடைய பெருந்தவ மாகும்
அன்புடை நண்புகொ ளாசரியரே ஆதலின்
நின் மாடுற்ற பெருந்தவப் புதல்வரை
எடுத்த புத்தகம் திடத்துடன் படிக்கவும்
கொடுத்த கணிதம் குறையாது வகுக்கவும்
கொடுத்த பூகோளம் துறையறி சரிதம்
சித்திர மெழுதல் செய்தொழிற் றேர்தல்
நூற் பல புனைதல் நுண் தமிழ்ப் பாடல்
அறியன தெரிதல் குறையின்றி வரைதல்
இத்தகைமுதலிய வெல்லாந் தெளிவித்
உத்தம நடையா முயர்ந்தோர் பணிதல்
கற்றறி மாக்களைக் கலந்துற வாடல்
பெற்றோர் பேணல் போன்பு தெரிதல்
ஈகை யிரக்கம் இணைஞரோ டாடல்
புத்தகம் பேணல் நற்போது போக்கல்
ஆங்கில வரசின ருமை தெரிதல்
அரசிற் குரிய வருஞ் செய லுணர்தல்
நற்றவர் பேண லுற்றவர் குதவல்
நல்லாசரியன் சொல்லுரை தெரிதல்
ஆகிய வெல்லா மறிவு கொளச்செய்து
உத்தம நடையைக் கற்பித்துதவு வீர்
அன்புடைச் சிறார் இன்பு கொண்டுதவும்
தாயும் நீரே தந்தையும் நீரே
தேசியும் நீரே தெய்வமும் நீரே
உற்றார் நீரே உறவோர் நீரே



பள்ளிற் கற்றன கொள்ளியின் மட்டும்
இளமையிற் கற்ற தீபம் மட்டும் ஆதலின்
நீர் பெற்றபேறு பெரும் பேறாக
உற்றுணர்ந் துதவு விருத்தமச் சிறார்க்கு
பேரறிவடையும் பெருந்தவ மாக்கள்
பெரியோ ராயி னின் பெருமை யறிவர்
உலகிற் குதவி யொளியாது புரிவர்
யாவரும் புகழப் பெரும் பெயரெடுப்பர்.
அரும் பொருள் திரட்டுவர் பெருந்திரள் செய்வர்
வரையாது தருவர் குறையாதுநின் பெருமை
என்றுலியன்ற நின்செவிப் படுத்ததும்
உற்ற மொழியென வுளத்திற் கொண்டு
நின்னுளங் கொண்ட தெள்ளறி வதனையும்
வரையா தளிக்கக் குறையா தெவையும்
கற்றுதரல் போற் கரவா தளிப்பின்
உற்றுருனக்குன் பள்ளியிற் பிள்ளைகள்.
பெரும் பொருள் தனைப் போதிய தாக்கி
யருந்தவங் கொள்வி ராசாரியரே
வாழ்கவாழ்க நின்வாக்குறுதி கொண்டு
வாழ்வ தாக நின் வழிகடைப் பட்டோர்
வாழ்க வாழ்க நின் வழி வழிப்பெருமை.

☞ கமலத்தன்னை.

## * எல்லா இந்திய சங்கீத சபை.

ஸ்ரீமதி ஸத்யபால தேவியால் பம்பாயில் புதிதாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் எல்லா இந்திய சங்கீத சபையின் நோக்கங்கள் பின் வருமாறு:—

(1) இந்தியாவின் பற்பல பாகங்களில் செழித்தோங்கி பிரபலமாயிருந்து பிரபலம் ஆய்க்கொண்டிருக்கிற சங்கீத வித்வான்களின் சங்கீதத்தைப் பத்திரமாய்க் காப்பாற்றி வைத்து அதை எழுத்து சமிக்ஞைகள் மூலமாய்க் (Notation)காட்டிப் பரவச்செய்வது. எழுத்துச் சமிக்ஞைமூலமாய்க் காட்டுவது தேசலிபியிலாவது அல்லது நாகரியிலாவது இருப்பதும்தவிர, ஆங்கிலத்திலும் இருக்கவேண்டும். ஹிந்து சங்கீதத்தை ஆங்கிலமுறைப்படி எழுத்துச் சமிக்ஞைகள் மூலமாய்க் காட்டுவது, ஹிந்து சங்கீதத்தை ஐரோப்பா, அமெரிக்கா ஓஷியானியா முதலிய ஐரோபபிய நாடுகளிலும், குடியேற்ற நாடுகளிலும் பிரபலமடையச் செய்வதற்குத்தகுந்த வழியாகும்.

(2) சங்கீதத்தைக் கற்றுக்கொள்ளுவதற்காக, இந்தியாவிலுள்ள பல தேச பாஷைகளில் ஸ்டாண்டர்டு டெக்ஸ்ட் புஸ்தகங்களை பிரசுரஞ்செய்தல்.

* [இதில் சேர விரும்புவோர் சத்யபாலதேவி. Principal All India Academy of Music, Sitaram Buildings, Bombay என்று இங்கிலீஷில் எழுதவேண்டும்—பத்திராதிபர் ]

(3) எல்லா இந்திய சங்கீத சபையையொட்டி பெரிய லைப்ரெரி ஒன்று ஸ்தாபிக்கப்படவேண்டும். அதில் ஸம்ஸ்கிருதத்திலும், இந்தியாவின் பல தேசபாஷைகளிலும் எழுதப்பட்டிருக்கும் சங்கீத நூல்கள் அனைத்தையும் வாங்கிவைத்தல். இலவசமாக அனுப்பும் சங்கீத நூல்களை வந்தனத்துடன் அங்கீகரிக்கப்படும்.

(4) இந்தியாவின் பல தேசபாஷைகளில் சங்கீதம் கற்பிக்கப்படுதல். இந்தியாவின் பல இடங்களிலிருந்து சங்கீதத்தைக் கற்றுக்கொள்ளவரும் மாணவர்களுக்குப் போர்டிங்கு ஸ்கூல்கள் ஸ்தாபித்தல்.

(5) இந்தியாவின் பல பாகங்களிலுள்ள சங்கீத மேதாவிகளின் பெயரை ரிஜிஸ்தர் செய்து வைத்தல். உலகத்தின் மூலைமுடுக்குகளில் மறைந்து கிடக்கும் ஸங்கீத மேதாவிகளின் பெயரை முன்னுக்குக் கொண்டுவருதல்.

(6) ஹிந்து சங்கீதத்தில் வித்வான்கள் என்ற பட்டத்தைப்பெற விரும்புகிறவர்களைப் பரீட்சை செய்து, தேர்ந்தவர்களுக்கு அவ்விதப்பட்டம் கொடுத்தல்.

(7) சங்கீதவித்தையை தேசமெங்கும் பரவச் செய்வதில் கண்ணும் கருத்துமாய் உழைத்துவரும் சங்கீதவித்வான்களுக்கும் மேதாவிகளுக்கும் பெல்லோ (Fellow)முதலிய பெரிய பட்டங்களைக்கொடுத்தல், இந்தியாவிலும்,அதற்கு வெளியிலுள்ள சர்வகலாசாலை அதிகாரிகள், அவ்வித யோக்கியதையுள்ள வித்வான்களைப்பற்றி சிபார்சு செய்வார்களானால் அவர்களுக்கு அவ்வித கௌரவப்பட்டம் கொடுத்தல்.

(8) சங்கீதவித்தை, பரவிச் செழித்தோங்குவதற்கு வேண்டிய நவீன முறைகள் அவசியம் என்று தோன்றினால் அம்முறைகளைக் கையாடுதல். இச்சங்கத்தில் அபிமானமுள்ள கனவான்களும், ஸ்திரீகளும், ஜாதி மதம் முதலியவைகளைப் பாராட்டாமல் மெம்பர்களாகச் சேர்த்திக்கொள்ளல். சேர விரும்பும் மெம்பர்கள் வருஷசந்தாத்தொகை ரூபாய் இரண்டை அட்வான்ஸாகக் கொடுத்து விடவேண்டும். இச்சங்கத்தில் அப்போதைக்கப்போது பிரசுரமாகும் சங்கீத நூல்களை கிரயத்திற்கு வாங்கப் பிரியப்படும் மெம்பர்களுக்கு அவைகள் பாதிக்கிரயத்திற்கு விற்கப்படும். இச்சபைக்கு 100 ரூபாய் நன்கொடையாகக் கொடுக்கப் பிரியமுள்ளவர்கள் ஜீவ பரியந்தம் மெம்பர்களுக்குள்ள சகல சுதந்தரங்களையும் அடைவார்கள். கனவான்களும் ஸ்திரீகளும், இவ்வித அனுகூல சமயத்தைக் கைநழுவ விடாமல், இச்சபையின் மெம்பர்களாகச் சேர முன்னுக்கு வருவார்களாக.

(9) இந்தியாவின் பற்பல பாகத்தில் ஸ்தாபிக்கப்படும் அல்லது ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சங்கீத ஸ்கூல்களை இச்சங்கத்திற்குக் கிளையாகச் சேர்த்திருக்கிறோம் என்றும் அவ்விதம் சேர்க்கப்பட்டதற்கு சபையோரால் அங்கீகாரப்பத்திரம் அடைந்திருக்கும் ஸ்கூல்களுக்கு இச்சங்கத்தில் பிரசுரமாகும் சங்கீதப் புஸ்தகங்கள் அரைவிலைக்கு விற்கப்படும். அவ்வித அங்கீகாரப் பத்திரம் அடைவதற்கு 10, ரூபாய் கட்டணம் கட்டவேண்டும். ஹிந்து சங்கீத பாடவிதானத்தைத் தங்கள் ஸ்கூல்களில் பாடம் வைத்து கற்பிக்கப் பிரியப்படும்



பிரைமெரி, செக்கெண்டெரி ஹைஸ்கூல் அல்லது காலேஜ் அதிகாரிகளுக்கு விசேஷ சௌகரியங்கள் செய்யப்படும்.

## சில அற்ப ஜீவராசிகள்.

"கண் கண்டதுதான் காட்சி" என்பதற்கு ஏற்ப இரு கண்ணுக்குச் சாதாரணமாய்ப் புலப்பட்டதுதான் பொருள்களென்றும், அவ்வாறு புலப்படாதிருக்கும் மற்ற வஸ்துக்கள் இருக்கக்கூடுமென்ற நம்பிக்கைகூட சில வருஷங்களுக்குமுன் நமக்குக் கிடையாது. "மைக்ராஸ்கோப்" என்கிற பூதக்கண்ணாடியின் உபயோகத்தைக் கண்டறிந்து வெளியிட்ட பின்னர்தான், கண்ணுக்குச் சாதாரணமாய்ப் புலப்படாத நுண்ணிய பொருள்களின் தோற்றங்கள் எவ்வாறிருக்கின்றனவென் றறியவிடமுண்டாயிற்று. அணுவிலோர் அணுவாயிருக்கப்பட்ட லோகப்பொருள்களும், ஜீவப்பொருள்களும் இருக்கின்ற வைபவம் இன்னதென்று அப்போதுதான் தெரியலாயிற்று. அக் கண்ணாடியின் உபயோகத்தினால் தெரிந்துகொண்ட விஷயங்களின் மேம்பாடு பற்றி இதுவரையில் அந்தகாரத்தில் மூடப்பட்டிருந்த லோகத்தின் விசித்திரங்களை நமது நுண்ணிய அறிவுக்கு எளிதில் புலப்படும்படியாக ஏற்பட்ட ஒரு விசித்திர தீபம் என்றே கொள்ளலாம். இவ்வாறு பூதக்கண்ணாடியின் உதவியால் நாம் அறியப்பெற்ற சில அற்ப ஜீவராசிகளின் குணங்களைப் பற்றி இங்கு விவரிப்போம்.

சென்ற வருஷம் ஜூன்மாதத்துச் சஞ்சிகையில் பிராணிகளின் முக்கிய குணாதிசயங்களை விவரித்தோம். அதில் எடுத்துக்காட்டப்பட்ட அமீபா என்ற ஒரு அற்ப ஜீவராசி ஒன்றை 500-மடங்கு பெருக்கிக் காட்டக்கூடிய பூதக்கண்ணாடியின் உதவியின்றி நாம் காணமுடியாதென்றும், நமது ஏரி குளங்களில் பாசத்தோடுகூட வசிப்பதையும், அவைகளின் உயிர் வாழ்க்கை எப்பேற்பட்டதென்பதையும் சற்று விபரமாய்க் கூறினோம். அமீபாவானது, ஜெலுந்துபோல் வெளுத்த பசைப்பற்றோடு கூடிய தேக அமைப்பின் விசேஷத்தால், தன்னிலும் எளிய அற்ப ஜீவராசிகளைத் தேகத்தில் அணைத்து ஒட்டி அவ்வாறு விழுங்கித் தனது தேகத்தோடு தேகமாக அதனை ஜீரணம் செய்துகொள்ளக்கூடிய சக்தியைப் பெற்றிருக்கிறது. இவ்வாறு உயிர் வளர்த்து, தேகம் பருத்து, மக்கட்பேறு உண்டாக்கும் பருவம் வருங்கால், தானே இரண்டாகப் பிரிந்து, தன் குஞ்சுகளாகின்றது. அமீபா இனத்திலோ ஆண் பெண் என்ற வித்தியாச விவகாரங்கள் கிடையாது. வித்தியாசமற்ற பிரம்மஸ்வரூபமென்றே சொல்லலாம், அமீபாவுக்குக் காலுமில்லை கையுமில்லை, வாயுமில்லை, வயிறுமில்லை. ஆனபோதிலும் தேகத்தில் எந்தப் பாகமும் எந்தத் தொழிலையும் செய்யவல்ல சக்தியை பெற்றிருக்கிறது.

இதுவரையில் அமீபாவில் நாம் கண்டறிந்த அவ்வளவு அற்புதச் செய்கைகளையும் நம் இரத்தத்தில் நீந்தி விளையாடும்படியான சுத்த ஸ்படிக நிறத்தோடு காணப்படும் வெளளைச் செதில்களில் நாம் காணலாம். நம் தேகத்தில் அசைவின்றிக் கட்டுண்டுகிடக்கும் மற்றைச் செதில்களாகிய மாமிசம்,தோல்,

நரம்பு இவைகளைப்போலிராமல் தன்னிச்சையாய்த் தனித்துத் திரியக்கூடிய சக்தியைப்பெற்று, இவ்வெள்ளைச் செதில்கள், நம் இரத்தத்துக்குள் புகுந்து, தங்கள் வாழ்நாளைக் கழிக்கவந்த இதர ஜீவன்களைப்போல் காணும். ஆனால் தேகசாஸ்திரம் உணர்ந்தோர் நமது தேகத்தைப் பிடிக்கப் புகும்படியான அநேக அற்ப ஜீவராசிகளை உயிர் தொலைக்க, நமது தேகமாகிய கோட்டையைக் காத்து இரட்சிக்கும்படி ஏற்படுத்தப்பட்ட இராணுவ வீரர்கள் இவ்வெள்ளைச் செதில்களே எனக் கூறியிருக்கின்றனர்.

நமது இரத்தத்தில் காணப்படும் வெள்ளைச் செதில்கள் அமீபாவிலும் நுண்ணிய தேகவமைப்புடையனவென்றால் அவைகள் எதிர்த்துச் சண்டையிட்டுக்கொண்டு ஜீரணித்துக்கொள்ளக்கூடிய அவைகளினும் கேவல ஜீவராசிகள் உண்டா என்று ஐயம்கொள்ள சற்று இடமுண்டாகிறது. அப்பேர்க்கொத்த ஜீவராசிகளும் இருக்கின்றன. அவைகளின் இருப்பும் செய்கைகளும் பூதக்கண்ணாடியின் உதவியாலின்றி ஒருக்காலும் நாம் அறியக்கூடியனவல்ல. பதார்த்தங்கள் புளித்தல், பண்டங்கள் அழுகுதல், இவைகளின் காரணங்களைச் சற்று நோக்குங்கால் அற்ப ஜீவராசிகளின் குணாதிசயங்கள் நன்றாக விளங்கும். புளித்தலுக்கும் அழுகுதலுக்கும் காரணபூதங்களாகநிற்பன மிகவும் நுண்ணிய தேக அமைப்போடு காணக்கூடிய (Yeast) ஈஸ்ட் (Bacteria) பாக்டீரியா என்று சொல்லப்படும் ஜீவராசிகளே. இவைகள் சில நிமிஷங்களுக்குள்ளே பிறந்து வளர்ந்து மக்கட்பேறு உண்டாக்கும் திறமை பெற்றிருக்கின்றன. ஒன்று லக்ஷக்கணக்காகப் பெருகக்கூடிய இயல்பையும் அடைந்திருக்கின்றன. ஆகவே இவைகளோ, இவைகளின் முட்டைகளோ நம்மைச் சுற்றிலும் இருக்கிற காற்றிலும், ஜலத்திலும், வஸ்துக்கள் ஒவ்வொன்றிலும் நிறைந்துள்ளன. இவைகளில் அநேக ஜாதிப் பிரிவினைகள் உண்டு. இவைகளெல்லாம் நமக்குக் கொடுமைசெய்ய ஆரம்பிக்குமாயின் ஒரு ஜீவராசியும் உலகத்தில் உயிர்வாழ இடமில்லை. ஆனால் அவைகளுக்கு ஏற்பட்ட காரியங்கள் உலகத்தில் காணும் பதார்த்தங்களைக் கூடிய சீக்கிரத்தில் அவைகளின் பிரதம சேர்க்கைப் பதார்த்தங்களாக வாய்க்குவதுதான். உதிர்ந்த இலைகளோ, இறந்த பிராணிகளோ, இஜ்ஜீவராசிகளின் வேலைகளால் தான் மண்ணோடு மண்ணாய்ப் போகும்படியாகச் செய்யப்படுகின்றன. அதனாலேயே பூமிக்கு உரம் ஏற்படுகிறது. இவைகளின் செய்கையே மலைகளிற் காணக்கூடிய பெரும் பாறைகள் பலம் குன்றிப் பொறியுண்டைமாதிரி எளிதில் உதிர்ந்து பொடியாகும்படியான நிலைமைக்கு வந்துவிடுவதற்குக் காரணம் என்றும் சொல்லுகிறார்கள்.

இவ்வளவு லோகோத்தமமான காரியங்களில் இராமல் மனிதருக்கு இம்சை உண்டுபண்ணக்கூடிய சில அற்பஜீவராசிகள் இருக்கின்றன. அவைகள்தாம் அநேக வியாதிகளுக்குக் காரணபூதமென்று சொல்லப்படும் முளைக்கிருமிகள்.

வியாதிகளுக்குக் காரணம் ஆராய்ச்சி செய்யுங்கால் வைத்திய சாஸ்திரிகள் பூதக்கண்ணாடியின் உதவியைக் கொண்டு அநேக நுட்பமான காரண விகாரங்களைக் கண்டறிந்திருக்கிறார்கள். அநேக வியாதிகளின் மூலகாரணம் இம்முளைக்கிருமிதான் என்று அப்பொழுது அறியலாயிற்று. முளைக்கிருமிகளும் அநேக வர்க்கங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. சில ஜுரமுளைக்கிருமிகள்



மேலேரியா (Malaria) டைபாயிட் (Typhoid), புதிதாகக் கண்டறிந்த பிளாக்டவுன்பீவர் (BlackTownFever) என்று சொல்லப்படும் காலஹஜார் (Kalahazar) என்ற ஜுரமும் முளைக்கிருமிகளின் விளையாட்டினால் ஏற்பட்ட விபரீதமான விஷ ஜுரங்களாம். அம்மை, காலரா (Cholera) என்ற வாந்திபேதி, இரத்த காசம் முதலிய க்ஷயரோகங்களும் முளைக்கிருமிகளின் செய்கைகளால் ஏற்பட்ட வியாதிகள் என்று சொல்லுகிறார்கள். சொறி சிரங்கு, தேமல், படை, குஷ்டம் முதலிய தோலைப்பற்றிய வியாதிகளும் அற்ப ஜீவராசிகளாகிய முளைக்கிருமிகள் நமது தேகத்தில் உண்டாக்கக்கூடிய அற்புதங்களாம். ஆகவே வியாதிகளின் மூலகாரணத்தை இன்னதென்று தெரிந்தபிறகாகிலும் முளைக்கிருமிகளை நமதுதேகத்தில் அணுகவொட்டாதபடி கூடியவரையில் நாம் ஜாக்கிரதையுடனிருக்கவேண்டும். வியாதிக்கு ஆதாரமாக இருக்கக்கூடிய முளைக்கிருமிகள் அநேகமா யெங்குமிருக்கின்றன. ஆனால் அவைகள் இடமறிந்துதான் சேரும். தேகத்தின் அசுத்தத்தையோ, துர்ப்பலத்தையோ, துர்நடத்தைகளையோ, இவைகளையே பெரும்பாலும் தழுவிநிற்கும். உட்புகுந்த முளைக்கிருமிகள் உஜ்ஜீவிக்கும்பொருட்டு உறைவிடம் தேடுகின்றன. அப்பொழுதுதான் அவை நமது இரத்தத்தில் தயாராயிருக்கும் படைவீரர்களாகிய வெள்ளைச் செதில்களால் கண்டுபிடிக்கப்பட்டு உயிர் தொலைக்கப்படுகின்றன. இரத்தத்தினுடைய வலிமை குறைந்திருப்பவர்களுடைய தேகத்தில் பிரவேசித்த முளைக்கிருமிகளோ தங்குதடையின்றித் தாங்கள்போய்ச் சேரவேண்டிய அங்க அவயவங்களைப் பிடித்துப் பிராணஹானியை எளிதில் கொண்டுவந்துவிடுகின்றன.

ஆகையால் முளைக்கிருமிகளின் பாதையின்றி நாம் உயிர் வாழவேண்டுமானால் சுகாதார விதிகளில் முக்கியமானவைகளான, தேகசுத்தம், இரத்த சுத்தம், சுத்தமான காற்று, ஜலம், ஆகாரம், உடை இவைபோன்றவைகளை முக்கியமாகக் கவனித்தல் அவசியம். அப்படிக்கவனித்து நமது தேகத்தைப் பக்குவமான நிலைமையில் வைத்திருக்கும் பட்சத்தில், சல்பம் சாப்பிட்ட பைராகியைக்கடித்த விஷப்பாம்பானது தானே இறப்பதுபோல, நம்மையடைந்த முளைக்கிருமிகளும் அவ்வாறே உயிர்துறக்கப் பெறுமேயன்றி நம்மை யொருக்காலும் பிடிக்கமாட்டாது என்பது நிச்சயம்.—விவேகபோதினி.

என். எஸ். ஜம்புநாதய்யயர், பி. ஏ., எல். டி.

# கமலா.

## (அங்கம் 1. களம் 3.)

### இடம்:—உத்யானவனம்.

(கமலா உத்யானவனத்தில் இந்து முகியின் துடையில் தலையை வைத்துக்கொண்டு நித்திரை செய்கிறாள். பத்மாவோ அருணேசன், கமலா இவர்களுடைய படங்களைச் சேர்த்து மாட்டிவைக்கிறாள்.)

இந்துமுகி:—அப்படங்களை வெகு அழகாக மாட்டியிருக்கிறாய். பிரியமுள்ள பத்மா! அவர்களுடைய க்ஷேமத்தைக் குறித்துப் பாடுவோம். பாடுகிறார்கள்,

(தனேந்திரன் இவர்களுக்குத் தெரியாமல் வேறு வழியாக வந்து இவர்கள் பாடுவதையும் பேசுவதையும் உற்றுக்கேட்கிறான்.)

பத்மா:—என்து அன்பு வாய்ந்த இந்துமுகி! நமது பிரயத்னங்கள் உபயோக மற்றவைகளே. கமலாவோ அயர்ந்து நித்திரை செய்கிறாள். நாம் சேர்ந்து பாடும்பொழுது அவளை எழுப்புவதற்காக மணியைக் கவனித்துவா.

இந்துமுகி:—சகோதரி! நீ சொல்வது சரிதான். நான் அவ்விதமே செய்கிறேன். மறுபடியும் பாட்டைப்பாட ஆரம்பம் செய். (இருவரும் பாடுகிறார்கள். கமலா தன் கையை அசைக்கிறாள்.)

அரசன்:—(பின்னால் நின்றுகொண்டு) ஹா! இதென்ன தோற்றம்! இப்படித்தோன்றும் தோற்றம் கனவோ, அல்லது உண்மையோ? இச்சிறுபெண்கள் என்து அருமையான மகளின் படத்திற்குப் பக்கத்தில் எனது ஜன்ம சத்துருவின் படத்தை ஏன் வைத்திருக்கிறார்களோ தெரியவில்லை? அது அருணேசனது படம் என்பதும் எனக்குச் சந்தேகமாயிருக்கிறது. இப்பெண்மணிகளோ அவர்கள் சௌக்யத்தைக்குறித்து பாடுகிறார்கள். இது என்ன அதிசயம்! என் குமாரத்தி என் விரோதியை நேசிக்கிறாளா என்ன! அப்படிச் செய்யமாட்டாள். அவளுக்கொன்றும் தெரியாது, (பெண்மணிகள் பாடிக்கொண்டே யிருக்கிறார்கள். கமலா திடீரென எழுந்து உட்காருகிறாள்.)

கமலா:—(ஆச்சரியத்துடன்) பிரியமுள்ள சகோதரிகளே ஏன் விவாக வாழ்த்துப் பாடல்களைப் பாடுகிறீர்கள்? (படங்களைப் பார்க்கிறாள்) ஹோ! ஹோ! இதற்கா! (வெட்கமடைகிறாள்.)

இந்துமுகி:—பிரியமுள்ள கமலா! நல்லது, சங்கதி தெரிந்துவிட்டது. ஒளிப்பதில் பிரயோசனமில்லை.

கமலா:—ஆனால், எனது பிரியமுள்ள இந்துமுகி.

இந்துமுகி:—இல்லை, கமலா, உன் முகம் உனது வார்த்தைகளை நம்பும்படி செய்யவில்லையே.

கமலா:—அப்படியானால் நல்லது, எனது படம் உனக்கு எப்படி கிடைத்தது? அதை எனக்குச் சொல்.

இந்துமுகி:—உனக்கு அவர்மீதுள்ள அன்பினால் எல்லாவற்றையும் மறந்துவிடுகிறாயே. நீ யாரை நேசிக்கிறையோ அவருடைய படத்தை சித்திரம் வரைவோனிடமிருந்து விலைக்கு வாங்கினது உனது ஞாபகத்திலில்லையா? அவனது வேலைக்காரன் இங்கு 15 நிமிஷத்திற்குமுன் இருந்தானே.



பத்மா:—சகோதரியே, பார்! (பூமாலையை மாற்றிமாற்றி படங்களுக்குப் போடுகிறாள்) ஆ! எவ்வளவு நேர்த்தியாய் இவைகள் காணுகின்றன! இப்படியே இவைகளை அவற்றின்மேல் போட்டுவிடுகிறேன். அவைகள் தனிமையாகப் பிரிந்திருக்கக்கூடாது.

கமலா:—அவ்விதமே யிருக்கட்டும். (தனேந்திரன் அவர்களிருக்குமிடத்திற்குப் போகிறார். பெண்கள் பயத்துடன் எழுந்திருக்கிறார்கள்.)

அரசன்:—(புன்னகை கொள்கிறான்) சிறு குழந்தைகளே! பயப்படாதேயுங்கள். பத்மா! அரண்மனை ஜென்னலிலிருந்து உனது பாட்டைக் கேட்டேன். பிரியமுள்ள பத்மா அதை முடித்துவிடு கேட்போம். (பத்மா அப்பாட்டைப் பாடி முடிக்கிறாள்.)

அரசன்:—(அப்படங்களைப் பார்க்கிறான்) எனது பிரியமுள்ள கமலா, அது உனது படமல்லவா? அதை நான் பார்க்க விரும்புகிறேன். அதைமாத்திரம் இங்கே கொண்டுவா. (இந்துமுகி பத்மாவைப் பார்க்கிறாள். கமலாவோ இருவரையும் பார்க்கிறாள். ஒருவரும் தங்களிருந்த இடத்தைவிட்டு அசையவில்லை. ஸ்தம்பம்போல் பிரமித்து நிற்கின்றார்கள்.)

அரசன்:—எனது அன்பு வாய்ந்த மகளே! ரோஹில் கண்டு அரசனை மணம்புரிவதில் ஏன் என் வார்த்தையைக் கேட்காமல் மனம் கசிந்து உருகுகிறாய்! நல்லது, நானே அதைஎடுக்கிறேன்,(படத்தின் சமீபம் செல்லுகிறான்.)

(கமலா பெருமூச்சுவிடுகிறாள். அவளுடைய கண்கள் மங்கிப்போயின.)

இந்துமுகி:—பிரியமுள்ள கமலா!

கமலா:—இந்துமுகி, அது அப்படியிராது. (அரசன் சுற்றி திரும்பிப்பார்க்கிறான்.)

அரசன்:—கமலா, இது என்னத்திற்கு? ஏன் இங்கு வைத்திருக்கிறாய்?

(கமலா தன் கண்களை புடவை நுனியை எடுத்து துடைத்துக்கொள்ளுகிறாள்.)

இந்துமுகி:—மகாராஜா! அவர்களின் படங்களைப் பிரித்து வைக்கக்கூடாது, ஏனெனில் இவர்கள் அந்நியோந்யமா யிருக்கிறார்கள். ஒருவர் ஒருவர்மீது மிகவும் வாஞ்சையுள்ளவரா யிருக்கிறார்கள்.

அரசன்:—என்ன! அதிசயம்! பிரியமுள்ளவர்களாம்? (கமலாவைப் பார்த்து) அந்தப்படத்தை அலங்கரித்திருப்பதைக்கொண்டே நான் சங்கதிகளைத் தெரிந்துகொண்டேன். ஆனால் எனது பிரியம்வாய்ந்த பெண்மணியே! நான் ஒரு சங்கதி சொல்லுகிறேன் கவனமாய்க்கேள். உன் தகப்பனது விரோதியை மணம்புரிய நீ நினைக்கவே கூடாது. ரோஹில் கண்ட்தேசத்து அரசகுமாரனை நீ மணம்புரியவேண்டும். இவன் மிக யோக்கியன். மனதுக்கினியன். யுத்தத்திலோ இவனை வெல்ல ஒருவராலும் முடியாது. ஆகையால் இவனை உன் கணவனாக வகிக்க விரும்பு. உனது தகப்பனது வார்த்தையைக்கேட்டு, நமதுவிரோதியாகிய அருணேசனது உருவத்தை உனது மனதிலிருந்து விலக்கிவிடு. (கமலாவுக்கு ஒரு பெருமூச்சுண்டானது அதை யடக்கமுயன்றாள்.)

அரசன்:—(கோபத்துடன்) கமலா! எக்காரியத்தையும் தீர ஆலோசித்து செய்யவேண்டும். பள்ளத்தில் எவனாவது குதிப்பானா? அதில் குதிப்பதற்கு முன் நன்றாக யோசிக்கவேண்டாமா? கமலா நான் சொல்லவேண்டியதை சொல்லிவிட்டேன். இனி உன் இஷ்டம்போல் செய் (அரசன்போய்விட்டான்).

பத்மா:—கடைசியாக அரசர் தமது சம்மதத்தை தெரிவித்தார்போல் தென்படுகிறதே!

இந்துமுகி:—(கடுமையான பார்வையுடன்) இல்லை, பத்மா! நீ அப்படி நினைப்பது தப்பு. தம்மால் கூடியமட்டும் தமது கோபத்தை நமது அரசர் அடக்கிக்கொண்டார்; ஆனால் கடைசிவார்த்தையில் அவரது கோபம் வெளிப்படையாகத் தெரிந்துவிட்டதே.

("ஐயோ! ஒருபடம் விற்போன் நரேந்திரனுடைய அரண்மனையில் சிறைப்படுத்தப்பட் டிருக்கிறான்" என்ற வார்த்தைகள் இவர்கள் காதில்விழுந்தன.)

இந்துமுகி:—கவனி! நீ அதைக்கேட்கிறாயா? இச்சங்கதி அரசனது கோபத்தைக் காண்பிக்கிறதே, ஐயோ! கமலா! நமக்கு என்னென்ன சங்கடங்கள் விளையுமோவென்பது எனக்கேபுலப்படவில்லை? ஆ இதென்ன! துரதிர்ஷ்டகாலமாயிருக்கிறதே!

கமலா:—என்து பிரியமுள்ள சகோதரிகளே! நான் என்னசெய்யட்டும்? கீர்த்திபெருதரோஹில் கண்டதேசத்து அரசனை நேசித்து எப்படி மணம்புரிவேன்? இந்துமுகி! பயங்கரமாயிருக்கிறதே! "என்தகப்பனார் சற்றுமுன் அவன் **உருவத்தை உனது மனதிலிருந்து விலக்கிவிடு"** என்று சொன்னாரே. இதனால் நான் அவர் முகத்தைப் பார்த்ததேயில்லை என்று நினைக்கிறாரோ? அல்லது அவரதுஉருவப் படத்தைக்கூட நான் பார்த்ததில்லையென்று நினைக்கிறாரோ என்னமோ எனக்கு நன்றாக விளங்கவில்லையே! ஐயோ! கடவுளே! நீர்தான் இந்த வேளையில் என்னைக் காப்பாற்றி எனக்கு அருள்புரியவேண்டும். எனக்குத் தாயாரில்லையே! அந்தப் பாக்கியத்தை நான் அடையவில்லையே! இது ஈஸ்வர சங்கல்பமே! ஐயோ, நான் அநாதை! நான் துர்பாக்கியவதி!! என்று சொல்லி (தாரை தாரையாக கண்களில் நீர் பெருகிக்கொண்டு கீழே விழப்போனாள். (பத்மா உடனே அவளைப் பிடித்துக்கொண்டு அவள் கண்களிலிருந்து வடியும் நீரைத் துடைத்துவிட்டாள்.)

இந்துமுகி:—பிரியமுள்ள கமலா, நீ இவ்விதம் மனவருத்தப்படாதே. "நம்மீது மூடியுள்ள பனியை சூரியபகவான் எடுத்துவிடுவார்" என்று என்னிடத்தில் ஒரு மகான் சற்றுமுன் சொல்லி மறைந்துவிட்டார்.

பத்மா:—கமலா! நிமிர்ந்து பார்: நம்பிக்கையை கைவிடாதே. அதுதான் ஜயத்தை யளிக்கும், உனது தகப்பனார் ஒருவேளை தமது விரோதியுடன் சிநேகம் செய்துகொண்டு உன்னிஷ்டம்போல் நடந்தாலும் நடப்பார்.

இந்துமுகி:—கமலா, முகமலர்ச்சியுடனிரு. நாம் அரண்மனைக்குள் போவோம்வா. (எல்லாரும் போகிறார்கள்.)

தாரா.

## சீனஸ்திரீகள்.

சீனாவில் ஸ்திரீகளின் சிற்சில வழக்கங்களை இப்பத்திரிகையில் எழுதகிறோம். இப்பத்திரிகையின் முதல்பக்கத்தில் சீனாதேசத்து ஸ்திரீயின் படம் வைக்கப்பட் டிருக்கிறது.

சீனாவில் ஜனங்கள் முன்காலத்தில் நாகரிக மில்லாதவர்களா யிருந்தார்கள்; ஆனால் இப்பொழுது அவர்கள் சீர்திருத்த மடைந்து வருகிறார்கள். ஆயினும் அவர்களைவிட்டு பழையகாலத்து வழக்கங்கள் இன்னும் நீங்க வில்லையாம்.



தாய் தந்தைகளிடத்தில் பிள்ளைகள் மிகவும் மரியாதையாகவும் கீழ்ப்படிந்தும் இருக்கவேண்டும். பெற்றோர்களது பேச்சைத் தவறி பிள்ளைகள் நடக்கவேமாட்டார்கள். இதைக்குறித்துபலகதைகள் அத்தேசத்தில்வழங்குகின்றன. ஒரு சமயத்தில் ஒரு ஏழை தாயும் தந்தையும் நித்திரை செய்யுமிடத்தில் கொசுக்கள் அதிக மிருந்தனவாம். அவர்களுக்கு ஒரு கொசுவலை வாங்க முடியவில்லை. அவர்களது புத்திரன் அவர்களைக் கொசு கடித்மையிருக்கும்படிதான் அவர்கள் பக்கத்தில் நிர்வாணமாய் படுத்து நிக்காரதி செய்தானாம்.

ஒருவன் தன் தாய் இறந்த பொழுது அவளைப் புதைத்துவிட்டு அவ்விடத்திலேயே எட்டு வருஷகாலம் ஜீவித்துவந்தானாம். இவனுக்கு அவ்விடத்தில் வீடு கிடையாது, சாதாரண பூமியில் படுத்துறங்கிவந்தானும், அக்கம்பக்கத்தி லுள்ளவர்கள் இவனது பக்தியைக் கண்டு புகழ்ந்து இவனுக்கு ஒரு குடிசை கட்டிக் கொடுத்தார்களாம். இவன் அதில் வசித்துக்கொண்டு வியாதியுள்ளவர்களுக்கு மருந்து கொடுத்தும், பெற்றோர்களிடத்தில் மரியாதையுள்ள விஷயத்தைப்பற்றியுள்ள பல புஸ்தகங்களைப் படித்து அக்கம் பக்கத்திலுள்ள ஜனங்களுக்குச் சொல்லிக் கொடுத்தும் வந்தானாம். இவன் இறந்தவுடன் இவனுக்கு தாயிடத்திலிருந்த பக்தியைக் கண்டு அதிசயத்து இவனை யாவரும் ஞாபகத்தில் வைத்திருக்குமாறு ஒருவளைவு மண்டபம் கட்டிவைக்கும்படி அத்தேசத்து சக்ரவர்த்தி உத்திரவு செய்தாராம், இது 1863-ம் வருஷம் நடந்த சங்கதி என "சீனாவில் ஜனசமூகம்" என்கிற இங்கிலீஷ் புஸ்தகத்தில் வரையப்பட் டிருக்கிறது. இன்னும் இவ்விதம் அநேக விஷயங்கள் அப்புஸ்தகத்தி லிருக்கின்றன. சமயம் வரும்பொழுது இன்னும் எழுதிவரமுடியும். ஸ்திரீகள் அத்தேசத்தில் இந்திய ஸ்திரீகளைவிட தாழ்மையாக நினைக்கப்பட்டு வருகிறார்கள். மனைவிகளுடன் கணவனோ, பந்துக்களோ கூட வெளியிற் போவதில்லையாம். ஸ்திரீகளே மூடு பல்லக்கில் ஏறி தங்கள் ஸ்திரீ பந்துக்களையோ சகிகளையோ காணப்போவார்கள்.

நம்மவர்களில் தற்காலத்தில் எவ்விதம் வரன் சம்பாதிக்க தரகுகாரர்கள் அனுப்பப் படுகிறார்களோ அவ்விதமே அவர்களும் தரகுகாரர்களை அனுப்பி விவாக நிச்சயம் செய்கிறார்கள். அவர்களும் ஜாதகத்தைப் பரிசோதித்துதான் விவாகம் செய்விக்கிறார்கள். ஜாதகத்தில் ஏதாவது ஒரு அம்சம் கெடுதியென்று தென்பட்டால் உடனே அந்தவரனை நீக்கிவிடுவார்கள். எல்லாம் சரியாகயிருந்தால் பெண்ணின் தகப்பனாரின் சம்மதத்தை எழுத்து மூலமாக பிள்ளைவீட்டார் கேட்பார்கள். இவ்விதம் சம்மதச்சீட்டுபெற்றபிள்ளைவீட்டார் தங்கள் சக்திபிரகாரம் வெகுமதிகளை பெண் வீட்டாருக்கு அனுப்புவார்கள். உடனே தரகுக்காரன் விவாக தினத்தை நிச்சயிக்கும்படி கேட்டுக் கொள்வான். கலியாணப்பிள்ளை தன் பந்து மித்திரர்களுடனும் வாத்தியகோஷத்துடனும் பெண் வீட்டிற்குச் சென்று, பெண்ணை தன் வீட்டிற்கு அழைத்துவருவான். விவாகம் நிச்சயமானதென்று இதனால் தெரியும். இவ்வித நிச்சயமான மூன்று தினத்திற்குள் ஏதாவது அபசகுனங்கள் உண்டானால் விவாகம் நின்றுவிடும்.

பத்திராதிபர்.

## நமது சக்ரவர்த்தியவர்கள்.

இங்கிலாந்து மன்னர்கள் ஸங்கீதக் கச்சேரிகளில் ஸபைக்கு முன் வந்த தில்லை. நமது மகாராஜா ஸங்கீதகுணத்தைக் காட்டுபவராய் பாலஸ் தியேடர் என்ற அரண்மனை நாடகசாலையில் விஜயமானார். அந்நாடக சாலையில் விசேஷ அலங்காரங்கள் செய்யப் பட்டிருந்த போதிலும், ஆடம்பரம் அதிகமாக ஒன்றும் காணப்படவில்லை. மகாராஜா மேரி ராணியாருடன் அங்கு விஜயம் செய்து, சிரிக்கவேண்டிய ஸமயத்தில் மகிழ்ந்தும், பொழுது போக்கினார்.

---

ஜூன் மீ 29உ நேற்று வின்ஸ்டர் அரண்மனையில் மகா ராஜா கார்டர் ஆர்டர் கச்சேரி நடத்தினார். அரசரும் அரசியும் கார்ட்டர் நைட்ஸும் ஸெயிண்ட் ஜார்ஜு சேபல்வழியாய் உல்லாசமாய் ஊர்வலம் செய்தார்கள்.

---

ஹாரோவுக்கு ராஜ தம்பதிகள் இன்று சென்றார்கள். அங்கு ஸ்கூல் பிள்ளைகளைக் கூட்டி நிறுத்தி, மகாராஜா ஒரு பிரசங்கத்தில் "நீங்கள் படித்து முன்னுக்கு வந்து நாட்டை ஆளவும் காக்கவும் தக்கவர்களாவீர்களென்று நம்புகிறோம்" என்றனர்.

## ஜார்ஜ் சக்கரவர்த்தியின் டெல்லி தர்பார்.

இச்சிறந்த புஸ்தகம் ஒவ்வொருவர் கையிலுமிருக்க வேண்டியதவசியம். இது பாடசாலைப் பிள்ளைகளுக்கும், பெண்மணிகளுக்கும் அறிவைக் கொடுக்கும் நூலாகையால் கல்வியிலாகாவைச் சேர்ந்தவர்கள் இதை ஸ்கூல் பைனல் பரிக்ஷைக்குப் படிக்கும் பிள்ளைகளுக்கு தமிழ்ப்பாட புஸ்தகமாக ஏற்படுத்தினால் மிகுந்த நன்மை விளையும். இது சிறந்த எளிய நடையில் யாவரும் இதை வாசித்து சுலபத்தில் அறிந்து கொள்ளுமாறு எழுதப்பட்டிருக்கிறது. அழகான சித்திரப்படங்களும் இதிலிருக்கின்றன. இப்புஸ்தகத்தை ஒவ்வொருவரும் வாங்கிப் படிப்பார்களென்று நம்புகிறோம். இதிலுள்ள விஷயங்கள் பின்வருமாறு:—

சக்ரவர்த்தி தம்பதிகள் டெல்லி தர்பாரை முன்னிட்டு இங்கிலாந்தை விட்டுப் புறப்பட்டதுமுதல் பம்பாயில் வந்திருந்ததைப் பற்றியும், பிறகு டெல்லியில் பத்துநாள் கொண்டாடிய வைபவங்களைப் பற்றியும், பிறகு நேபாளத்துக்குப் போய் கல்கத்தாவி லிருந்தபோது நடந்த வைபவங்களைப் பற்றியும், கடைசியாக பம்பாய்க்குத் திரும்பிவந்து ஜன்மதேசம் சென்றது வரையிலுமுள்ள எல்லா முக்கியமான விக்ஷயங்களையும் இப்புத்தகத்தில் எழுதியிருக்கிறது.

பிறகு இங்கிலாந்தில் பார்லிமெண்டில் டெல்லிதர்பாரில் விளம்பரப்படுத்திய விஷயங்களைப்பற்றி நடந்த விவாதங்களையும் சேர்த்திருக்கிறது. வெங்காளப்பிரிவினையைப்பற்றி இந்தியா கவர்ன்மெண்டுக்கும் செக்ரிடெரிக்கும் நடந்த நீண்ட கடிதப்போக்குவரத்து மிகவும் முக்கியமானதால் அதை வெகு சிரமப்பட்டு தெளிவாய் மொழிபெயர்த்திருக்கிறது. சக்கரவர்த்தி சக்கரவர்த்



தினி இவர்கள் இந்தியாவில் பற்பல சமயங்களில் விடுத்த பேச்சுக்களைத் தமிழில் எழுதியிருக்கிறது. ராஜதம்பதிகள் டெல்லியில் விஜயமானபோது நடந்த விசேஷங்கள் மிகுதியாய் இருப்பதால் அவற்றை "டெல்லிமாநகரில் ராஜதம்பதிகள்" என்றும், "தர்பார் மகோத்சவதினம்" என்றும், "டெல்லியில் இதர சம்பவங்கள்" என்றும் மூன்று அத்தியாயங்களாகப் பிரித்து ஒன்றுவிடாமல் எழுதியிருக்கிறது. டெல்லிமாநகரின் சரித்திரத்தில் பூர்வகாலந்தொட்டு தற்காலம் வரையிலுள்ள முக்கியமான விஷயங்களை யெல்லாம் எடுத்து எழுதியிருக்கிறது.

இவ்வளவு விவரமான விஷயங்களை யெல்லாம் சேர்த்து இம்மாதிரி புத்தகமாக ஒரு பாஷையிலும் இதுவரையில் வெளியிடப்படவில்லை. ராஜபக்தியும் தேசாபிமானமும் கொண்டவர்கள் அனைவரும் இதைவாங்கி வாசிக்கவேண்டியது. சக்கரவர்த்தி தம்பதிகளின் வர்ணப்படமும் லார்ட் க்ரூ, லார்ட் ஹார்டிஞ்ஜ் இவர்களுடைய படங்களும், ராஜகுடும்பத்தினர் படமும், டெல்லி தர்பார் கொலுமண்டபத்தின் அழகியபடமும் வெகுநேர்த்தியாய் அமைக்கப்பட்டிருக்கின்றன. புஸ்தகம் சுமார் 300-பக்கங்கள் கொண்டது. ராப்பர் பயிண்டு அணா-12. போர்டு பயிண்டு அணா-14. வி. பி. சார்ஜ் வேறு. வேண்டுவோர் சென்னை சுதேசமித்திரன் ஆபீசுக்கு எழுதவேண்டியது.

## சமாசாரக் குறிப்பு.

ஜூலை மீ 22உ ஜப்பான் சக்கரவர்த்தியின் தேகஸ்திதியைப் பற்றித் தெரிந்து கொள்ள (லண்டனிலுள்ள) ஜப்பான் ஸ்தானாதிபதி ஆபீஸில் ஜார்ஜ் சக்கரவர்த்தி அடிக்கடி விசாரித்துக்கொண்டிருந்தார்.

டோக்கியோவிலிருந்து கடைசியாய் வெளிவந்த துண்டு அறிக்கையால் ஜப்பான்சக்கரவர்த்தியின் நிலைமையில்அநுகூலம் உண்டாயிருப்பதாகத்தெரியவில்லை, நாடகசாலைகள் முதலிய உற்சாக மூட்டும் ஸ்தலங்களெல்லாம் மூடப்பட்டுவிட்டன. கடைசியாக ஜப்பான் சக்ரவர்த்தி இறந்துவிட்டதைக் கேட்ட உலகத்தார் மிகுந்த துக்கங்கொண் டாடினார்கள்.

---

கன்றுக்குட்டிகளுக்கு பால் கொடுக்காத குற்றம்:—ஆனரெரி பிரெஸிடென்ஸி மாஜிஸ்டிரேட்டுகள் முன்பாக சென்னை ஜீவஹிம்ச நிவாரணச் சங்கத்தாரால் குற்றம் சாட்டப்பட்ட மூவர்கள், கன்றுகளுக்குப் போதுமான பால் கொடுக்காத குற்றத்திற்காக முறையே ரூபாய் 10, 11, 5 அபராதம் விதிக்கப்பட்டார்கள்.

---

ஒரு ஸ்திரீ முனிஸிபல் கமிஷனர்:—டார்ஜீலிங்க் முனிஸிபாலிடியில் மிஸ்ஸஸ் ஹேம்லாலா ஸர்க்கார் என்ற இந்திய மாது கமிஷனராயிருந்துவருகிறார். அந்த அம்மாள் டார்ஜீலிங்கு முனிஸிபாலிடியில் ஒரு கமிஷனர் ஸ்தானம் வகிக்க ஆரம்பித்ததுமுதல் அந்த முனிஸிபாலிடி நடத்திவரும் நடவடிக்கைகளில் ஒருவித சுறுசுறுப்பு காணப்பட்டுவருகிறதென்றும், அந்த அம்மாள் அவ்வூர் முனிஸிபல் கமிஷனர்களில் ஒரு முக்கியஸ்தா யிருந்துவருகிறா

ரென்றும் ஒரு கல்கட்டா பத்திரிகை கூறுகிறது. அந்த அம்மாள் பண்டித
சிவநாத் சாஸ்திரி என்ற வங்காளநாட்டு ஸம்ஸ்க்ருத வித்வானின் குமாரத்தி
யாம்.

மின்ஸார சக்தித் தொட்டில்:—மின்ஸார சக்தியினால் எவ்வளவோ அற்
புத வேலைகள் நடந்துவருவதைக் கண்ணால் பார்க்கிறோம். தற்போது பாரிஸ்
நகரத்தில் மின்ஸார சக்தி யமைக்கப்பட்ட தொட்டில் ஒன்று செய்திருக்கிறார்
களாம். அத்தொட்டிலில் படுக்கவைக்கப்படும் குழந்தை அழுதால் உடனே
மின்ஸார யந்திரங்கள் வேலைசெய்யத் தொடங்கி தொட்டிலை அசக்கி ஆட்டிக்
கொண்டிருக்குமாம். அப்போது அதில் அமைக்கப்பட்டுள்ள கிராமபோன்
வாத்தியம் தாயார் பாடுவதுபோல பாட ஆரம்பித்து குழந்தையின் அழுகை
ஓய்ந்து நித்திரை செய்யும் வரைக்கும் தொட்டிலாடிக்கொண்டும் கிராமபோன்
பாடிக்கொண்டு மிருக்குமாம். இதனால் தாய்மார்களுக்கு எவ்வளவோ அநு
கூலமாயிற்றென பாரிஸ் பத்திரிகை சந்தோஷங் கொண்டாடுவதைக் கேட்பா
னேன்?

எல்லா ஸிலோன் பொருட்காட்சி:—ஸிலோன் தலைநகராகிய கொழும்பில்
இந்த மாதம் 1-ந் தேதி ஸிலோன் கவர்னர் எல்லா ஸிலோன் பொருட் காட்சி
யைத் திறந்து வைத்தார். அந்த சமயம் அவர் அநேக வியாபார ஸ்தாபனத்
தார் அந்தக் காட்சி சோபிதமாய் நடப்பது சாத்திய மாகும்படி வேண்டிய
உதவி செய்திருக்கிறார்களென்றும், அது பொது ஜனங்களின் பொருட்காட்சி
யென்றும், அது பொதுஜனங்களால் பொதுஜனங்களின் உதவியைக் கொண்டு
பொது ஜனங்களுக்காக கூட்டப்பட்டிருக்கிற தென்றும் அது இனிது நடந்து
முடியவேண்டு மெனத்தாம் விரும்புவதாயும் சொன்னார். ஸிலோன் கவர்னர்
அவ்வளவு ஒற்றுமை யுணர்ச்சி காட்டிப் பொது ஜனங்களைத் தட்டிக் கொடு
த்து உற்சாகப்படுத்திப் பேசியது அவருடைய உயர்பத கருத்துக்களையும் பட்
சபாதமில்லாத ஆட்சிப் புலமையையும் குறிப்பிடுகிறது.

ஒரு கணக்குப்போடும் யந்திரம்.—இங்கிலாந்தில் மிஸ்டர் விலியம் ஸ்கூ
லிங் என்பவர் ஒரு கணக்குப்போடும் யந்திரத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்.
அது ரெயில்வே கம்பெனிகளுக்கும், நிலக்கரிவெட்டி எடுக்கும் கம்பெனிகளு
க்கும் ரொம்ப உபயோகமாயிருக்கும். இந்த யந்திரத்தால் கூட்ஸ் வண்டிகளில்
ஏற்றிய ஸாமான்கள் இவ்வளவு நிறையிருக்கின்றனவென்று ஸுலபமாய்க்
கண்டுபிடித்துவிடலாம். வண்டியின் நம்பரையும், அதில் ஸாமான்கள் ஏற்று
வதற்குமுன் வண்டிமட்டும் என்ன நிறையிருக்குமோ அதையும், ஸாமான்
ஏற்றியபிறகு வண்டியின் நிறையையும், வரிசையாகவைத்து யந்திரத்திலுள்ள
ஒரு கைபிடியைப் பிடித்திழுத்தால், ஸாமானின் நிறையை யந்திரம் இவ்வ
ளவு என்று காண்பித்து அதை ஒருகாகிதத்தில் டைப் அடித்தும் விடுகிறது.
இந்த யந்திரத்தை உபயோகிக்கும் பக்ஷத்தில் தப்புக்கணக்குப் போட நியாய
மில்லை.

லார்டு கார்மைகேலைப்பற்றி சில விநோத கதைகள்:—(1) லார்டு கார்மை
கேல் டார்ஜிலிங்கிலுள்ள கடைகளுக்குத் தனியாகச் சென்று காய்கறிகளை
வாங்கி அவைகளைத் தம் கைக் குட்டையில் கட்டிக்கொண்டு வருவார். கவர்ன்
மெண்ட் ஹவுஸுக்குப் போகும்வழியில் அவர் அவைகளை எறிந்து விடுவார்.
(2) அவர் மூன்றாவது வகுப்பு கம்பார்ட்மெண்டில் ஏறி குர்ஸியாங்குக்குச்
சென்றதாகச் சொல்லப்படுகிறது. (3) ஒருநாள் அவர் ஹூயிஸானி டோரியத்



திற்குச் சென்று வீட்டுக்காரர்களுடன் தாராளமாய்ப் பேசினார். அந்த வீட்
டில் ஒரு வியாதியஸ்தர் படுக்கையில் படுத்திருந்தார். அவர் படுக்கைக் கரு
கில் லார்டு கார்மைகேல் உட்கார்ந்து அவர் வியாதியைப்பற்றி விசாரித்தார்.
(4) டார்ஜிலிங்கில் இருக்கையில் கவர்னர் ஒருவரையும்கூட அழைத்துச் செல்
லாமல் தனிமையாக வெளியேபோவார். இவ்விதம் செல்வதில் யாதேனும்
ஆபத்து நேரிடும் என்று ஆபீசர்கள் தடுத்துச்சொல்லியும் அவர் கேட்கவில்லை.

பயிர்களிலுள்ள புழுக்களை அழிக்க ஓர் யுக்தி:—"ஜெயங்கொண்ட சோழ
புரத்தில் ஓர் மகமதியர் மிகுந்த பிரயாசையுடன் ஒரு தூரவு வெட்டி கபிலை யேற்
றம் போட்டுத் தண்ணீர் இறைத்து ஒரு காணி கரும்பும் ஒரு காணி வாழை
யும், ஒரு காணி கத்திரியும் இப்படி ஒவ்வொரு பயிரிலும் ஒவ்வொரு காணி
வீதம் சாகுபடி செய்திருக்கிறார். அந்தப் பக்கங்களி லுள்ளவர்களுக்கு இது
மிகவும் ஆச்சரியத்தை உண்டாக்குகிறது. பயிர்களோ விடாமல் தண்ணீர்
இறைக்கப்படுகிற படியால் மிகவும் செழித்துக் கொண்டிருக்கின்றன. நன்றாய்
செழித்து வளர்ந்த கத்திரியில் பூச்சிகள் விழுந்து விட்டன. ஒரு காணியாகிய
400-குழி நிலத்திலும் பூச்சிகள் விழுந்து இலைகளெல்லாம் சுருண்டும் வெட்டுப
பட்டும் போய் பார்வைக்கே மிகுந்த விகாரத்தை யுண்டுபண்ணி விட்டதைப்
பார்த்த எவர்மனந்தான் சகிக்கும். மேற்படியார் சில யுக்திகள் செய்து பார்த்
துப் பலிக்காமல் கடைசியாக 30 கோழிகளை வாங்கி வந்து மேற்படி நிலத்தில்
விட்டு அவைகள் வெளியில் போகாமல் காவலும் ஏற்படுத்தினர். 2-3-தினத்
திற்குள் செடிகளி லிருந்த புழுக்களை யெல்லாம் கோழிகள் சாப்பிட்டுவிட
செடிகளெல்லாம் மறுபடியும் தழைத்துக் காய்த்து நல்ல பலனைக் கொடுத்தன.
ஆகையால் இம்மாதிரிப் பாடுபட வேண்டுமென விரும்புகிறோம்."

வங்காள மாகாணத்தைச் சேர்ந்த டாக்கா ஜில்லாவிலுள்ள பேலாவோ
என்கிற கிராமத்து மகமதியன் ஒருவன் தன் நிலத்தை வெட்டிக்கொண் டிரு
ந்தபோது ஒரு செப்புப் பட்டயம் அகப்பட்டதாம். அந்தப் பட்டயத்தை ராஜ
ஷாயி காலேஜ் புரொபஸர் R. பஸக்குக்குக் காண்பித்ததில் அதில் எழுதப்
பட்டிருந்த 51 வரிகளில் 26 வரிகளை அவர் வாசித்து அவைகளில் இன்னது
சொல்லப்பட் டிருக்கிறதென்று தெரிவித்தாராம். விக்ராம்பூர்ஷ்யாமள மகாரா
ஜாவின் குமாரராகிய மகாராஜாதி ராஜா போஜவர்மன் ஒரு பிராமணருக்கு
ஒரு நிலத்தை சர்வமானியஞ் செய்ததைப்பற்றிச் சொல்லி யிருக்கிறதென்
றும், அந்த போஜவர்மனால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு சகாப்தத்தின்பேர் அதில்
தேதியோடு வெட்டப்பட் டிருக்கிறதென்றும், தெரிவித்தாராம். அந்த சர்வ
மானிய விஷயம், சம்ஸ்கிருத வாசகமா யிருந்தாலும் செப்புப் பட்டயத்தில்
11-வது நூற்றாண்டில் வழங்கின வங்காளி பாஷைக்குரிய எழுத்துக்களில்
வெட்டப்பட் டிருந்தனவாம். அந்தப் பட்டயம் 10 அங்குல நீளமும் 9 அங்
குல அகலமுமுள்ளதா யிருக்கிறதாம். அதன் தலையில் விஷ்ணுவின் முக
உருவம் வெட்டப்பட் டிருக்கிறதாம். இந்தியாவின் பூர்வகால சரித்திரத்தை
விளக்கக்கூடிய சிலாசாஸனங்களும் செப்புப் பட்டயங்களும் பண்டைக் காலத்
தில் இல்லாதிருக்கவில்லை. ஒருவர்பின் ஒருவராய் பலதேசத்தார் இந்நாட்டின்
மீது படையெடுத்து வந்தகாலத்தில் அச்சரித்திரச் சின்னங்கள் உடைந்தும்
புதைந்தும்போ யிருக்கவேண்டும். இது நிற்க, வர்ம வமிசத்தைச் சேர்ந்த
அரசர்கள், ஸென்வமிச அரசர்கள் ஆளத் தலைப்படுவதற்கு முன்னே வங்காள
த்தில் ஆட்சி செய்தவர்களென்று சொல்லப்படுகிறது.

160

160a

OFFICE OF ... MADRAS.

பல கண்காக்ஷிகளில் மெடல்கள்பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

# * பி. சுப்பராய், ஆயுர்வேத ஔஷதசாலை, *

ஸ்ரீ வெங்கடேச பெருமாள்கோவில் சன்னதி, தஞ்சாவூர்.

தயவு செய்து இவைகளை தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.

1. **தாதுபுஷ்டி மருந்து:**—இதன் குணத்தை எழுதிமுடியாது. அநுபோகத்தால் தெரிந்துகொள்ளலாம். தாதுநஷ்டம், பலஹீனம், ஆண்குறிதுவளல், பசியின்மை, கண், கால் எரிவு, தேகவாக்ஷி, சீக்கிரத்தில் ஸ்கலிதம், சொப்பன ஸ்கலிதம், கை, கால் இடுப்புமுதலிய அவயவங்களில் சோர்வு, வலி, சோம்பல், மேகச்சூடு, பாண்டு, சோகை, மேகவெள்ளை, வெட்டை, நீரழிவு, மதுமேகம், சதையடைப்பு இன்னும் பற்பல மூத்திர ரோகங்களையும் போக்கும். சரீரபுஷ்டி, புருஷத்தன்மை, போகசக்தி, ஜீரணசக்தி, அபரிமிதமான தாதுவிருத்தியையும் உண்டாக்கும். நீத்திருக்கும் இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தி போகசக்தியை அதிகரிக்கும். டப்பா 1-க்குவிலைரூபா 2, வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம்.

2. **அக்கினி மாந்தத்திற்கு மருந்து:**—பசியின்மை, புளித்த ஏப்பம், நெஞ்செரிச்சல், மலச்சிக்கல், வயிற்றுவலி, வாய் நாற்றம், அஜீரணம், வயிற்றுப்பிசம், நித்திரையில்லாமை, பித்த உபத்திரவங்களை சொஸ்தப்படுத்தும். பசி தீபனமும், தேக ஆரோக்கியமும் தரும். டப்பா 1-க்கு அணா 8, வி. பி. சிலவு 1 அல்லது 2 டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

3. **பிரமேக நிவாரணி:**—எந்த காரணத்தினால் உண்டாயிருக்கும் மேகவெள்ளை, வெட்டை, நீர்குற்றல், நீர் தாரை எரிவு. சீழ் ரத்தம் வடிதல், முதலிய வியாதிகளையும் ஆண், பெண் இருதாரத்தார்களுக்கும் சொஸ்தப்படுத்தும். சீசா 1-க்கு விலை ரூ. 1, வி. பி. சிலவு ஒன்று முதல் 6 சீசாக்கள் வரையில் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

4. **லக்ஷ்மீகர கஸ்தூரி மாத்திரைகள்:**—தாம்பூலம் தரிப்பவர்கள் கையிருப்பில் எப்பொழுதும் வைத்துக்கொள்ளவேண்டிய விலையுயர்ந்த வஸ்து. தந்தநோய், வாய் நாற்றம், அஜீரணம், பித்தவாய்வு இதுகளை நீக்கும். தாம்பூலத்துடனாவது, தனியாகவாவது சாப்பிட்ட பின் 2 மாத்திரை உபயோகித்தால் எப்பேர்க்கொத்த கனத்த சாப்பாட்டையும் உடனே ஜீரணம் செய்வதுடன், வாயில் அநேக மணிநேரம் சுகந்த வாசனையிருக்கும். பிரதிதினம் காலையில் இரண்டு மாத்திரைகள் சாப்பிட்டால் நீடித்த அக்கினிமாந்தம், மலச்சிக்கல், அஜீரணத்தினாலுண்டாகும் வயற்றிழிவு, வயிற்றுநோய், நெஞ்செரிச்சல் முதலிய பற்பல வியாதிகள் தீரும். பிரசவகாலத்தில் தாம்பூலத்துடன் உபயோகித்து வந்தால் ஜன்னி கிட்டநாடாது; ஜன்னியில் கொடுக்க ஜன்னி தீரும். இதில் லாகிரி முதலான யாதொரு அபாயகாமானவஸ்துசேரவில்லை காஷ்மீர் தேசத்திலிருந்து நேராக வரவழைத்த கஸ்தூரி, தங்கரேக், பச்சைகற்பூரம் முதலிய அனேக விலைபெற்ற மருந்து சாமான்களும், வாசனை திரவியங்களும் சேர்த்து செய்யப்பட்டிருக்கிறது. தாம்பூலத்துடன் உபயோகித்தால் பச்சைகற்பூரம் முதலிய வாசனைவஸ்துக்கள் உபயோகிக்க வேண்டியதனாவசியம். அரை குழந்தைகள் முதல் வயதுசென்றவர்களுக்கு சளி, இருமல், காசம், காலரு, பிளேக், சுரம் முதலானவைகளுக்கு வயதுக்கும் தேகத்துக்கும் தகுந்தபடி 1 முதல் 4 மாத்திரைகள் வரையில் வெற்றிலைச்சாற்றில் கொடுக்க சுகமாகும். சீசா 1-க்கு விலை அணா 4. இந்தியாவில் 1 முதல் 12 சீசாக்கள் வரையில் அனுப்ப பாக்கிங்கு, தபால்சார்சு அணா 5-ம், சிலோனுக்கு அணா 7-ம் பிரத்தியேகம்.

5. **சர்வநோய் சம்ஹாரன்:**--இத்தைலம் கொஞ்சம் தேய்த்தால் கை, கால், கணுக்களின் பிடிப்பு, வீக்கம், முடக்கம், மார்புநோய், தலைநோய், கழுத்துநோய், பக்கசூலை, இடுப்புநோய் குதகவலி; பார்சுவாயு, மேகவாயு முதலான இன்னும் தேகத்தில் உண்டாகும் எல்லா நோய்களையும் சீக்கிரத்தில் குணப்படும். சீசா 1-க்கு விலை ரூபா 1, வி. பி. சிலவு 1 முதல் 3 சீசாக்கள் வரையில் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

* என்னுடைய அவுஷதசாலையின் ஹெட் ஆபீசை பாங்கிபேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்திரமாக மாற்றியாய்விட்டபடியால், இனி எல்லா ஆர்டர்களும், இப்பக்கத்தின் தலையில் அச்சிட்டிருக்கும் எனது ஹெட்ஆபீசாகிய தஞ்சாவூர் விலாசத்திற்கே எழுதக்கோருகிறேன். பாங்கிப்பேட்டைக்கு எழுதவேண்டாம்.



காலஞ்சென்ற ஜப்பான் சக்ரவர்த்தி.

THOMPSON & CO., MADRAS.

# மாதர் மனோரஞ்சனி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.


Vol. XIV. } Madras : August 1912. { No-8.

புத்தகம் - கச. } சென்னப்பட்டணம்: ஆகஸ்ட்மீ 1912. { இலக்கம் - 8.


## குடித்தனச் செட்டு.

ஒரு ஸ்திரீ நாலுகாசுக்கு ஒரு முகம் பார்க்கும் கண்ணாடி வாங்குகிறாள். மற்றொருவள் அரையணாவுக்கு ஒரு நல்ல கண்ணாடி வாங்குகிறாள். அரையணாக் கண்ணாடியில் முகம் நன்றாய்த் தெரிகிறது. விலை சரசமான கண்ணாடியிலோ முகம் மங்கலாய்த் தெரிகிறது. இதில் எதுசெட்டான வியாபாரம்? பொருளின் குணதோஷத்தைக் கருதி பதில் சொல்லவேண்டுமே யொழிய விலை சரசத்தை நோக்கியே பதில் கூறக்கூடாது. ஒருவன் தன் குமாரனை வீண்காலம் போக்குவிக்கிறான். மற்றொருவன் தன் குமாரனை ஒரு தொழிற் படிப்பு சொல்லிவைத்து பின்னிட்டு சம்பாதிக்கும் வழியைத் தேடுகிறான். இதில் எவன் செட்டாளி? ஒரு காரியத்தின் பலாபலன்களை உத்தேசித்தே அதன் குணத்தைக் கண்டுபிடிக்கவேண்டும்.

ஒருவன் திருச்சிக்கு ஒரு காரியமாய்ப்போய் உடனே அவசரப்பட்டுத் திரும்பிவிடுகிறான். இன்னொருவன் உத்தேசித்த காரியம் ஒன்றானாலும் இன்னும் சிலகாரியங்களையும் முடித்துக்கொண்டு தாமதித்துத் திரும்பிவருகிறான். இதில் எவன் காலத்தையும், பணத்தையும் செட்டாய்ச் செலவு செய்தவன்? ஒருவன் செட்டாய்க் குடித்தனஞ்செய்து நெய், பாலுக்கு பணத்தை செலவழிக்காமல் தீரா வயிற்றுவலியை சம்பாதித்துகொண்டு டாக்டருக்கு மருந்துச் செலவுக்குக் கொடுக்கவேண்டி வந்தது. மற்றொருவன் இன்னும் கொஞ்சம் அதிகமாய் செலவழித்தாலும் திடகாத்திரனாயிருந்து சிறந்த சம்பாத்தியம் செய்துவந்தான். எவன் இவர்களில் செட்டாளி?

ஒரு மாமனார் மாப்பிள்ளை நோயுற்றிருந்தபோது கடுஞ்செட்டுப் பண்ணி சரியாய் வைத்தியம் பார்க்காமல் அசட்டையாயிருந்ததால் பெண்விதவையாகி அவளை ஆயுள் பரியந்தம் சம்ரக்ஷிக்க நேர்ந்தது. இவன் செட்டாளி ஆவானோ! ஆகையால் பக்கத்து வீட்டுப் பட்டம்மாள் செட்டாய்க் குடித்தனம் செய்கிறாளென்றால், செட்டின் தன்மை எப்படிப்பட்டதென்பதை முதலில் அறியவேண்டும். சிலருக்கு கடுகுபோவது தெரியும், பூசனிக்காய்போவது தெரியாது. தம்படி தகரார் செய்வான், பின்னிட்டு அனாவசியமாய்த் தங்கத்தை வாரிக்கொடுப்பான் என்பதற் கேற்ப செட்டாயிருத்தலில் பிரயோஜனமில்லை. இதனால் நாம் சிறு காரியங்களிலேயே செட்டாயிருக்கவேண்டாமென்று சொல்ல வரவில்லை. ஒரே நிதானமாயிருக்கவேண்டுமென்று வற்புறுத்துவோம். ஐந்து வந்தாலும்

சரியாயிருக்கிறது. ஐம்பது வந்தாலும் சரியாயிருக்கும், பகவான் சரியாய் அளிந்து கொடுப்பனென்று நினைக்கபடி செலவு செய்யக்கூடாது. சிறிது பொருளை சேமித்துவைக்கப் பிரயத்தனப்படவேண்டும். குடும்ப நிர்வாகத்தில் பெண்கள் இது விஷயத்தில் கண்ணுங்கருத்துமா யிருக்கவேண்டும். கிரக கிருத்தியத்தை புருஷர்கள் ஆழ்ந்து கவனிக்கமுடியாது. சம்பாதிப்பதில் கருத்துடைய புருஷர்களுக்கு செலவு விஷயத்தை அடிக்கடி பரிசோதிக்க சாவகாசமிராது.

ஸ்திரீகள் வருவாய்க்கு மிஞ்சி செலவு செய்யக்கூடாது. பின்பு கையிலொரு காசுமில்லை; கடன்கொடுப்பார் யாருமில்லையென்று கஷ்டப்பட வேண்டிவரும். கண்ணுக்குப் பகட்டாயுள்ள இறைமல், சீட்டி, பழுக்காவகைகள், கண்ணாடி சாமான்கள், சீமை சாமான்கள், பொம்மைகள் முதலியவற்றில் பணத்தை செலவழிக்கக் கூடாது. அனாவசியமாய்ப் பொருளைச் சேதஞ்செய்யக் கூடாது. பண்டங்களை உபயோகப் படுத்துவதில் மிகவும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். விவாக சமயங்களில் நம் அந்தஸ்துக்கு மீறி செலவு செய்யக்கூடாது.

இக்காலத்து ஸ்திரீகள் மாப்பிள்ளைகளுக்குக் கடன் வாங்கியாவது பொருளைக் கொடுப்பதில் மிக தாராளந்தான். தன் குமாரர்கள் கையைப் பிசைந்தால் என்னசெய்வதென்பதை யோசிப்பதில்லை. மாப்பிள்ளை தன்னைக் காப்பாற்றுவானென்கிற தைரியமோ தெரியவில்லை. உற்றோர், உறவினர், ஊரார், இவர்களுடைய திருப்திக்காக வீண்டம்பங்கள் செய்து பணத்தை விரயஞ்செய்தால் நாளைக்குக் கையிலில்லாதபோது ஒரு பிராணி பக்கத்தில் வந்து ஒத்தாசை செய்யாதென்பதை இவர்கள் உணரவேண்டும். தம்முடைய சௌகரியத்திற்கும், ஸ்திதி, யோக்கியதைக்குத் தக்கபடி செலவு செய்யவேண்டும்.

சில மாணாக்கர்கள் பணத்தினருமை தெரியாமல் பெற்றோரை உபத்திரவித்து பணத்தை வருவித்து வீண் செலவு செய்கிறார்கள். இரண்டணா செலவழிக்கும் இடத்தில் நாலணா செலவழித்தால் தமக்கு யோக்கியதை உயர்ந்ததாக எண்ணுகிறார்கள். இவர்கள் பெற்றோர்கள் வயிற்றைக் கட்டி, வாயைக் கட்டி நாளைக்கு குமாரன் உயர்ந்த உத்தியோகஞ் செய்து உத்தாரணஞ் செய்யப்போகிறானென்று எண்ணி கஷ்டப்பட்டு பணம் அனுப்புகிறார்கள். இதை இளஞ் சிறுவர்களறிவதில்லை. அகவிலை உயர்ந்திருக்கு மிக் காலத்தில் மானம் நிதானந்தான். அவரவர் பெண்டு, பிள்ளைகளைக் காப்பதே தர்மமென்று சிலர் சொல்லாநிற்பர். அவனவன் தன் சக்திக்கேற்றவாறு பொதுக்காரியங்களுக்கு பண உதவி செய்யவேண்டும். ஏனெனில் ஜனசமூகம் க்ஷேமமா யிருந்தால்தான் இவனுக்குப் பொருள் மேல்மேலும் விருத்தியடையும். குடித்தனச் செட்டே தேசத்தின் க்ஷேமாபிவிருத்திக்கு அஸ்திவாரமாகும்.

K. V. சுப்பிரமணிய ஐயர், B. A.



சினக்குழந்தைகள் பாடசாலை.



சீனக்குழந்தைகள் பெட்டிக்குள் பொம்மை வேடிக்கை பார்த்தல்.



# சீனாதேசத்து குழந்தைகள்.

சீனர்கள் சாப்பிடும்பொழுது நம்மைப்போல் கையில் அன்னம் எடுத்து புசிப்பதுமில்லை. அல்லது ஆங்கிலேயர்களைப்போல் கத்தி, முள்ளு முதலியவைகளை வைத்துக்கொண்டும் புசிப்பதில்லை. ஆனால் இரண்டு நீண்ட குச்சிகளை வைத்துக்கொண்டு அவைகளின் உதவியால் அன்னம் எடுத்து புசிக்கிறார்கள். பணக்காரர்கள் விசிறியை கையில் பிடித்துக்கொண்டும் வஸ்திரங்கள் தளர்ச்சியாயிருக்கும்படி அணிந்துகொண்டுமிருப்பார்கள். ஜப்பானியர்களைப்போல் இவர்களுக்கும் காத்தாடி (படம்) களை பறக்கவிடுவதில் மிக்க ப்ரியம்; அநேக பக்ஷிகளை வைத்து வளர்க்கிறார்கள்.

அவர்கள் புஸ்தகங்கள் நமது புஸ்தகங்களைப்போலிராது. நாம் முதலிலிருந்து படித்து கடைசியில் முடிக்கிறோம்; அவர்கள் புஸ்தகத்திலோ கடைசி பாகம்தான் முதலில் படிக்கவேண்டிய பாகம். முதலில் நாம் படிப்பது அப்புஸ்தகத்தில் கடைசிபாகமாயிருக்கும்; ஒரு பக்கத்தின் முதலிலிருந்து இடது பக்கமாக வலப்பக்கம் வரைக்கும் படிக்கிறோம். அவர்களோ ஒரு பக்கத்தின் அடியிலிருந்து வலப்பக்கமாக இடப்பக்கம் வரைக்கும் படிக்கிறார்கள். அதில் அவர்கள் எழுத்தைப் பாருங்கள். எவ்வளவு அதிசயமாயிருக்கிறது, (சீனாவிலுள்ள ஒரு தெருவைப்பாருங்கள்). மேலும் அப்படத்தில் அவர்கள் கடுதாசியால் செய்த விளக்கையும்பாருங்கள்! அதுவும் எவ்வளவு நேர்த்தியாயிருக்கிறது?

ஒவ்வொரு தெருவிலும் ஏதாவது அதிசயமிருக்கும். அது கண்ணுக்கு வெகு விநோதமாயிருக்கும். ஒரு மனிதன் ஒரு மேஜையண்டை உட்கார்ந்து ஜனங்களுக்கு கடிதங்களை எழுதிகொடுத்துக் கொண்டிருப்பான். இவர்களில் அநேகருக்கு எழுதத்தெரியாது. ஆகையால் இவர்கள் தங்களுக்கு வேண்டிய கடிதங்களை ஒரு மனிதனுக்குப் பணம்கொடுத்து எழுதச்சொல்லுவார்கள்.

சிலர் ஜோசியம் சொல்லி பணம்பெற்று பிழைப்பார்கள். சீனாதேசத்தான் வேறு ஊருக்குப் பிரயாணம் செய்யப்போகுமுன் ஜோசியனை ஒரு நல்லநாள் பார்த்துச் சொல்லும்படி கேட்பான். சீனர்கள் தங்கள் குடுமியை பன்றிவாலைப்போல் வைத்துக்கொள்வார்கள். பல்லக்கு மாதிரி ஒரு பெரிய பெட்டியை இருவர் தூக்கிக்கொண்டுபோவார்கள். இதுதான் தனவந்தருக்கு நாற்காலி. சீனாவில் தனவந்தர்கள் நடப்பதே கிடையாது. ஒருவன் வெளியிற் போகவேண்டியிருந்தால் அவ்வித நாற்காலிகளில் உட்காருவார்கள். இவர்கள் இவனைத் தூக்கிக்கொண்டுபோவார்கள்.

இத்தேசத்துப் பெண்களைப்பற்றியும், பிள்ளைகளைப்பற்றியும் சில விஷயங்களை எழுதுகிறோம். இத்தேசத்தில் தகப்பனார்களும் தாய்மார்களும் தங்கள் புத்திரர்களை அதிகமாகக் கவனித்து வருகிறார்களே தவிர தங்கள் புத்திரிகளிடத்தில் அதிக ப்ரியமாயிருப்பதில்லை.

குழந்தையை தாயார் தன் முதுகில் கட்டிக்கொண்டிருப்பாள். அப்படிச் செய்வதால் தாய் எந்த இடத்திற்குப் போனாலும் அவ்விடத்திற்குத் தன்

குழந்தையும் போகுமல்லவா! ஜப்பானில் குழந்தைகளை வெகு சுத்தமாய் வைத்துக்கொள்வார்கள். இவ்விடத்திலோ அவ்விதம் வைத்துக்கொள்வதில்லை. குழந்தைகளை ஜலத்தில் ஸ்நாநம்செய்து வைப்பதே கிடையாது. இதை தவிர வேறெதையாவது செய்யப் பிரியபபடுவார்கள். பிள்ளைகள் பாடசாலைகளுக்குப் போவார்கள். பள்ளிக்கூடங்களில் சப்தம் அதிகமிருக்கும். ஏனெனில் பிள்ளைகள் தங்கள் பாடங்களை உரக்கப் படிப்பார்கள். ஒரு பையன் கெட்டியாய் சப்தம் செய்துகொண்டு படிக்காமலிருந்தால் அவன் சோம்பேரி என்று உபாத்தியாயர் நினைத்து அவனை அடிப்பார்.

நம்மூரில் பெரியவர்களுக்கு முன்னும், உபாத்தியாயர்களுக்கு முன்னும் சிறுபிள்ளைகள் வந்து நேராக நின்று பேசுவார்கள். அவ்விடத்தில் இவ்விதம் செய்வதில்லை. பிள்ளைகள் உபாத்தியாயர்களுக்கு தங்கள் முதுகைக் காட்டிக் கொண்டு நிற்கவேண்டும். இவ்விதம் செய்யாவிட்டால் அவர்கள் துஷ்டப்பிள்ளைகளென்றும் மரியாதை தப்பி நடப்பவர்களென்றும் உபாத்தியாயர் நினைப்பாராம். பள்ளிக்கூடங்களில் சில பிள்ளைகள் கஷ்டப்பட்டு வேலைசெய்வார்கள். அவர்கள் தங்கள் பாடங்களை நன்றாகப்படித்துவந்தால் காலக்கிரமத்தில் பெரிய அந்தஸ்துள்ள மனிதர்களாய்விடுவார்கள்.

இத்தேசத்துப்பிள்ளைகள் தாய்தகப்பனுக்குக் கீழ்ப்படிந்து நடக்க கற்றுக் கொள்வார்கள்: சிறுவர்களா யிருக்கும்பொழுதே இப்படிச் செய்து வருவதால் தான், பெரியவர்களானபோதிலும் இவ்விதமே சரிவர செய்துவருகிறார்கள்.

இத்தேசத்தில் ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் பற்பல விளையாடல்களை ஆடுவார்கள். காற்றாடி விடுவதில் இவர்களுக்கு அதிகப் பிரியம். இதைவிட (Shuttle cock) என்ற ஒருவித விளையாட்டு கருவியை வைத்துக் கொண்டு ஆடுவதில் அதிகப் பிரியம். இதைப் பந்தடிக்கும் சாட்டையால் அடிப்பதில்லை. ஆனால் தங்கள் உள்ளங்காலால் அடித்து விளையாடுவார்கள். இவ்விதம் அவ்விளையாட்டுக் கருவியை ஆகாயத்தின் உயரத்தில் அதிகநேரம் வைத்திருப்பார்கள்.

தெருக்களில் (Peep Shows) வேடிக்கைகள் வரும். அவைகளைப பெண்களும், பிள்ளைகளும் மிக்க ஆவலுடன் பார்ப்பார்கள். தெருக்களில் பலகாரங்கள் விற்கும். அவைகளை அவர்கள் வாங்கிப் புசிப்பார்கள். மேலும் சென்னையில் மிட்டாய்க் கடைகளும், காப்பி ஓட்டல்களும் அதிகமாக யிருப்பதுபோல அங்கும் ஓட்டல்களுண்டு. அங்கு தேயிலைத் தண்ணீர், சோறு, தித்திப்பு பணிகாரங்கள் விலைக்குக் கிடைக்கும். இவைகள் மிகவும் மலிவாக இருக்குமாம்.

நமது தேசத்தில் பிள்ளைகள் கடைக்குச்சென்று தங்களுக்கு எதுவேண்டுமோ அதைக் கொடுக்கும்படி காசு கொடுப்பார்களல்லவா! அவ்விடத்தில் இவ்வழக்கமில்லை. ஆனால் பிள்ளைகள் கடைக்காரனிடம் காசைக் கொடுப்பார்கள். அவன் அதைப் பெற்றுக்கெண்டு அநேக டிக்கட்டுகளிருக்கும் ஒரு பையிலிருந்து ஒரு டிக்கட்டை எடுக்கும்படி சொல்லுவானாம். இதை எடுத்தவுடன காசுகொடுத்த பையன் அதில் எந்தப் பணிகாரம் எழுதியிருக்கிறதோ அதை வாங்கிக்கொண்டு போகவேண்டுமாம். சில சமயத்தில், ஒரு டம்ப்ளர் தேயிலை தான் கிடைக்கும், மற்றொரு சமயம், ஏதாவது ஒரு பணிகாரம் கிடைக்கும்,



மற்றொரு சமயம், சோறு கிடைக்கும், இன்னொரு சமயம் ஒன்றும் கிடைக்காதாம். இது சரியானதா? இல்லையல்லவா? அவர்களுக்குக் கல்வியில்லாமையால் இவ்வித மூடத்தனம் அவர்களிடத்தில் குடிகொண்டிருக்கிறது.

ஏழை ஜனங்களில் பெரும்பான்மையோர் அரிசி, மீன் முதலியவைகளைப் புசிக்கிறார்கள். இவர்களது வீடுவாசல்களோ வெகு அசுத்தமா யிருக்கின்றன. அநேகருக்கு வீடுகளே கிடையாது. ஆனால் அவர்கள் ஆறுகளில் படகுகளிலேயே வசித்துவருகிறார்கள்.

ஏழைப்பெண்கள் மிகக் கஷ்டப்பட்டு வேலைசெய்யவேண்டியது ஆனால் பணக்கார வீட்டுப் பெண்மணிகள் சோம்பேரிகளா யிருக்கிறார்கள் அவர்களுக்கு 5 ஆறு வயதானதும் பாதங்களைக் கெட்டியாகக் கட்டிவிடுவார்கள் இவ்விதம் செய்வதால் அவர்கள் பாதங்கள் செம்மையாய் வளருகிறதைத் தடுக்குமல்லவா? சில பெண்கள் 4 அங்குல நீளத்திற்கு குறைந்த சோடுகளைக் கால்களில் போட்டுக் கொள்வார்கள். இவ்விதம் போட்டுக்கொண்டு இவர்களை நடக்கமுடியாது. இவர்களைப் பிடித்துக்கொண்டு போகவேண்டும்.

பணக்கார பெண்களும், பிள்ளைகளும், தங்கள் கைவிரல் நகங்களை வளரவிட்டுவிடுகிறார்கள். இவ்விதம் செய்துகொள்வதுதான் அவர்களுக்கும் பெருமையாம். நாம் அவ்விதம் செய்துகொள்வது விகாரமென்று நினைக்கிறோமல்லவா? சீனர்கள் மிகவும் சாமர்த்தியசாலிகள், ஆனால் அவர்கள் தங்களைச் சீர்ப்படுத்திக்கொள்ள விரும்புகிறதில்லை. 100 வருஷங்களுக்குமுன் ஜனங்களிருந்தமாதிரியே இப்பொழுது இருப்பவர்களுமிருக்கிறார்கள். ஆனால் அவர்களில் சிலர் ஜப்பானியர்களைப்போலிருக்க இப்பொழுது முயன்று வருகிறார்கள். ஜப்பானியர்கள் இங்கிலாந்து, அமெரிக்கா, ஜெர்மனி முதலிய தேசங்களிலிருந்து பலவிஷயங்களைக் கற்றுக்கொண்டு இப்பொழுது நல்ல ஸ்திதியிலிருக்கிறார்கள், இவர்களைப் பார்த்து சீனர்களும் கற்றுக்கொள்ள முயன்று வருகிறார்கள்.

பத்திராதிபர்.

# மனோவுன்னதபதவி.

காகமுறவு கலந்துண்ணக் கண்டீ ரகண்டாகார சிவ
போகமெனும் பேரின்பவெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமா
யேகவுருவாய்க் கிடக்குதையோ வின்புற்றிட நாமினியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேரவாரும் சகத்தீரே,

அன்பிற்குரிய சோதரமே! "மனோரஞ்சிதமே":—என்னறிவிற் பழகிய சில நுணுக்கங்களை நின்மாட்டுரைப்ப என்போன்ற இதர சோதரிகட்கு இதமூட்டுவாயென்று உனக்கிதனை யெழுதினேன். அஃதவர்கட்கு எவ்வாறான திருப்தியைத்தருமென்பதை நானறிந்திலேன். இருப்பினும் நானுனக்கதனைச் சொல்லிவிடுவது மாத்திரமே எனக்குச் சந்தோஷத்தைத் தருவதாகிறது. நீ பலரிடம் பழகிவரும் பெருமையும் தன்மையுமுன்னுள் நிறைந்திருப்பதால் நானெழுதுவது குறையாகாதெனை நம்புகிறேன்.

காடுங்கரையு மனக்குரங்கு கால்விட்டோட வதன்பிறகே
யோடுந்தொழிலாற் பயனுளதோ தொன்றாய்ப் பலவாயுயிர்க்குயிரா
யாடுங்கருணைப் பரஞ்சோதியருளைப் பெறுதற் கன்புநிலை
தேடும்பருவ மிதுகண்டீர் சேரவாருஞ் சகத்தீரே.

சமுத்திரத்திலலைகளெழுந்து கரையை மோதுகின்றன, கரையின் தாக்கலால் சலரூபமாய் கடலில் சேருகின்றன. அதுபோல் உன் மனோசங்கற்ப அலைகள் இந்திரியங்களில் தாக்க அதை திரும்ப உன்னிடமே சேருகின்றன. ஆதலின் மனதை அமைதிநிலையில் வைத்துக்கொள். அதின் பலன் பெரியதாகும். அவ்வமைதி நிலையிலிருந்து எதையும்செய். அது நிர்ப்பயமான பலனைத்தரும்.

சலனமற்ற மனதைக்கொண்டு உலகிலுபகாராபகார விஷயங்கள் எதையும் செய்ய இடப்படுத்தலே மேன்மை. ஒன்றைவாழ்வித்தல் ஒன்றை தேய்வுபடுத்தல் முதலிய காரியங்களைச் சுலபமாய்ச்செய்யலாம். அம்மட்டோ, உன் சுகத்தை நீவிரும்பும் எம்மட்டுமடையலாம். ஓடும் உன்மனக்கொந்தளிப்பைத் திடீரென நிறுத்தமுடியாததலின் கீழ்நோக்கிய வேகத்தோடு தெளிந்துமேலஞ்சலின்றி யோடும் நீரோட்டம்போல் இந்திரியங்களைத் தாக்குமுன் சங்கற்ப அலைகளை நிறுத்து. உன் தோற்றங்களுள் முகமாயோடப்பழகு. ஆனால் தெளிந்த நீர்போல் பழகிவரும் உன்மனதை ஆபாசப்படுத்துவது உன் பிசகேயாகும்.

நிர்ச்சலனமா யிருக்கப்பழகு. சலனமற்ற உன் வல்லபத்திற்கு முன் ஓடியாடித்திரியும் சலனமுடையார் மனதை உன் வசப்படுத்தலாமென்பது விவேகியாகிய நீ ஆராய்ந்து அனுபவமாய்த் திருப்தியடைவதன்றி நான் அளவிட்டுச் சொல்லத்தக்கதல்ல, ஆ? இவ்வல்லபத்தை யிழந்தல்லவா அநாதி சிருஷ்டி முதல் நீ சுலபமாய் நீக்கக்கூடிய துன்பங்களையும் நீக்கவியலாது துன்பமுடைகின்றன,

தெளிவுடைய இக்காலத்தையும் வீணாக்காது அன்றன்று உன் ஓய்வு நேரங்களில் மனதை நிர்ச்சலனமாக்கப்பழகு. அது முதிர்ச்சியடைய உனக்கு நிலைபெறவேண்டிய ஓர் காரியத்தையேனும், அல்ல துன்ஞானமைக்கிணங்க விஷயாதிகளி லொன்றையேனும், உன்மனதில் நிறுத்து. முற்சொல்லிய நிட்காமியப்பலனையும் பிற்சொல்லிய காமியபலனையும் எவ்வளவு பிரகாசமாயுன்னுள்ளிருப்பதையும் எவ்வளவு சீக்கிரத்திலுன் சுவாதீனப்படுவதையும் உன்னநுபவத்தில் காணலாம்.

உன் மனதைத் தெளிவுபடுத்த புறநோக்கொழித்துப் பழகுவதால் (இந்திரியங்களின் வழிமனம் செல்லுவதே புறநோக்காகும்) உன் மனம் உன்னைச் சவாரி செய்த காலம் போய் அதின்மேல் நீ சவாரி செய்யத்தலைப்படுகிறாய் ஆ? நீ அடிமையாயிருந்த காலம்போய், எக்காரியத்தையும் சாதித்துத் தரத்தக்க பெருவல்லமையுடைய உன் மனம் உனக்கடிமையாவதில் உனக்கெவ்வளவு மகிழ்வைத்தருமென்பதை சிறுமையாய்நினையாதே. ஆழ்ந்து யோசித்துப்பார். ஆ? அம்மட்டோ பிறபிராணிகளின் மனதும் உனக்கேவல்செய்ய உன் மனம் வலுமையுடையதாகிறது,

நரை, திரை, மூப்புச், சாக்காடு, எனத் தோன்றும் நீக்கற்கரிய பெருந்துன்பங்களைத் தரும், காமக் குரோத, லோப, முதலிய உன்னை—என் செய்யும்!



இத்துர்க்குணங்கள் வேரற்றுப்போன பின் முன்சொன்ன நல்வளமைப் பருவமுள்ள கனி எப்படிப் பழுக்கும்?

பேதமை யென்னும் வித்திற் பிறந்துபின் வினையென்னும்
வேதனை மாங்கனைறி வேட்கைவேர் வீழ்த்தி முற்றி
காதலுங் களிப்புமென்னுங் கவடு விட்டவலம் பூத்து
மாதுயரிடும்பை காய்க்க மரண்மே கனிந்து நிற்கும்.

ஆ? சோதரமே. இப்பாட்டு விவேகியாகிய உன்னைக் குறித்துப் பாடியதல்லவென வுனக்குத் தோன்றுமே. அப்போது என்ன ஆநந்தம் உன்னுளுதிக்கும். உன்போல் மற்ற மனிதப் பிறவிகளும் ஏன் அடையக்கூடாதென்கிற விசாரணையும், அவர்க ளறியாமையை நினைத்து நீ வருந்தவும் வருமே. அதுவன்றோ சீவகாருண்ய மென்பதாகும். இருளேறிய மனமுடையரென்றுணர்ந்தும் அவர்களிடத்துச் சீவகாருண்யத்தை யெதிர்பார்ப்பது நினைப்போரின் அறியாமையன்றி வேறென்னை "தாமவர் தன்மையுணர்ந்தும் தம்முணரா யேதிலரை நோவதெவன்" என்றபடி அறியார் அறியாரைக் குறை சொல்லுவர். குறை சொல்லுவதன்றி அவர்களைத் திருத்தி நல்வழிப்படுத்த லவர்கட்கியலாக்காரியம். மனோஸ்வாதீனமுள்ள உன்னிலைமையோ அவர்களைத் திருத்த வுன்னலியலுவதாதலின் ஒருவர் அறியாமையை நினைந்து வருந்துவதல்ல இரங்கப்படுதலே. அதுவே உண்மையான சீவகாருண்யம் என்பதாம்.

அன்புள்ள சோதரமே உனக்கு நான் சொல்லவேண்டிய முக்கிய விஷயம் மனம் என்பது யாது? அது உனக்கு எம்மட்டு முறவென்பதே. இதனை ஆன்றோர் வாக்கினாலும் விளக்குவேன். உன் கவனத்தையிதிற் செலுத்து. நீயேவும் எக்காரியத்தையும் செய்ய வல்ல மனதை தீயவழியில் செலுத்தாதிருக்கும் பொருட்டே. அதனை அவசியமாய்க் கவனிக்க விரும்புகிறேன். உண்மையான அதின் பெருமைக்காரிய முனக்குப் புலப்படும்போது:—தக்கோனொருவனை யிழிதொழிலேவல் புரிவிப்பது எம்மட்டும் லச்சை யுண்டாமோ அத்தகையதாக இஃது முனக்கு விளங்கும்.

நீ விசாரித்துத் தெரிந்துள்ள ஆன்மா இருவினை விலங்கைத் தரித்திருக்கும்போது அதற்குச் சீவனென்ற பெயராம். சீவன் சங்கற்பத்தொழிலை நடத்தும்போது மனமென்ற பெயரைப் பெறுகிறது. ஆதலின் நீ நினைவற்று வைத்திருக்கப் பழகும் மனம் தெளிவடைந்த முடிவில் சீவபதமுந்தாண்டி ஆத்மா என்ற இயற்கைப்பெயரைப் பெறுகிறது. அம்முடிவு நிலையே நம்பெரியோர் கூறும் துரியபதம். அந்நிலை எவ்வளவு சுலபத்தில் கைகூடச்செய்யலா மென்பதை நீ தெரிந்துகொள்ளலாம்.

இந்நிலையை நீ பெறும்வரையில் சாதித்துப் பின் உன் விருப்பமானால் உலக காரியங்களில் தலையிட்டு நன்மை செய்யப்போ. அஃதும் உன் விருப்பமாகாது சீவகாருண்யமே.

"சீவனென்கின்ற சொல்லும் செறிபொருளு மாயவான்மா
பாவனை மனனத்தாலே பருத்தெழு மனமதாகும்
மேவரும் பிரமந்தன்னில் வேலையி லலைபோல்வந்து
தாவுறு முள்ளந்தானே நினைந்தவா சங்கற்பிக்கும்"

"மனத்தின்வடிவு சங்கற்ப மற்றிவ்விரண்டு மொன்ருகு
மனர்த்தமோக மலம் பந்த மவித்தை மாயை தம முதலா
மின்த்தபெயர் சங்கற்பத்திற் கேற்றபெயரா மிதுநழுவிற்
கன்த்தசகக் காட்சியும்போம் கதிர்விட்டெரிக்கும் பரவடிவம்"

மனம் சர்வவல்லப முள்ளதென்று நானுனக்குக் கூறியது அம்மனம் சாந்தி மடைந்தவிடத்து சித்து ரூபமாயுள்ள ஆன்மா என்பதனாலேயேயாம். ஆதலின் நீ யிழிதொழில் செய்ப ஏவுதல் உன் ஆன்மாவையே. அவ்வாத்மாவை நீ யிழிதொழில் செய்ய யேவுதல் செய்வையா? செய்யமாட்டாய். அப்படி நீ செய்யின் உன்மனம் சாந்தி மடைந்த தில்லையென ஏற்படும்.

ஆத்மாவின் தோற்றமே அறிவு. ஆக அறிவு ஆத்மா என்பது நான் சொல்ல வேண்டியதில்லையே. நீ ஆத்ம ரூபத்தைக் கருதி மேற்செல்லின் அது அறிவின் செயலாகிறது. பகிர்முக நோக்கோடு இழிதொழில் செயப்புகின் அறிவு தன்செய லன்றெனக் கைவிடும். பின்னை; மனவுதவிகொண்ட சீவச் செயலாய் முடியும் ஆத்மா, அறிவு, சீவன், மனம், சங்கற்பமுதலிய எல்லாம் ஒரு பொருளைக் குறித்த பெயராய்க் கூறிப் பின் வேறு வேருய்ப் பிரித்துப் பேசுவதென்னெனில், அறியாது தியங்கினுய்; நம்மான்ருேர் சுவானுபவ ஆராச்சியிற் கண்ட தொழில்முறைப்பற்றி வேறு வேறு பெயரிட்டனர். அதனை நீ யுணர்ந்து ஒழுங்காய் நடத்துவதே உன் வல்லபம். அவ்வாறின்றி இந்திரியங்களின் வழிச்செல்ல விடுவையேல் அந் நடைக்கேற்ப பலபெயரை வகிக்கிறது. தன் பெயருக்கேற்ப ஆன்மா பிரதி பலிக்கிறது. பல பிரிவினையுடைய அதிகாரத்தை வகித்த ஓர் உத்தியோகத் தலைவர் தன்னுட்படும் காரியங்களை பிரிவினைப்படியே நடத்துகிருரென்பது நீ யறிவையே. ஆதலின் உன் பக்குவத்திற்கிணங்க உன் மனதைச் சலனமறச் செய்துகொண்டு அதினின்று முன்னென்ன மூன்றித் தியானி. நீ னன்ற னன்ற அதின் பலன் கைகூடும்.

மணிவாசகப்பெருமான்; "நோக்கரிய நோக்கே" யென்றும்;

வள்ளலார்: "நோக்கா நோக்கை நோக்க நோக்க
நோக்க நோக்க நோக்குமன்றே" என்ருர்கள்.

னக்குமுள்தாய் மன்மொன்றி லுறைக்கிலதுவா மாதலினற்
ருக்குமனத்தை மனத்தாலே தள்ளியேறித் தளர்வின்றி
யாக்கமழிவில் பதமடைவாய் மனத்தை மனத்தாலே
நீக்கவலதாம்.

சோதர ரன்புடையாய் மனதை வசப்படுத்தும் மந்திரமொன்றுன் கைவசமிருத்தல் வேண்டும். அஃது பொறிவழி மனதைச் செலுத்தாது இந்திரியங்கள் செயலற்றிருக்க உன் மன்தை யதோ முகப்பார்வை யாக்கு. உன் மனக்கண்ணதனை நோக்கும் அதுவேகூடும் முறை, அதுவே கைகூடும். மனம் இந்திரிய வழிச்செல்லுவதாலேயே பலஜோலி காண்கிருய். நீ நித்திரை செய்யும்போது உன்ஜோலிக ளெங்கு போயின. நீ விவேகியாதலால் விழித்திருக்கும்போதே இந்திரியங்களின் வேலையை யொழித்துப் பழகு. இந்திரியங்களின் போராட்டத்தால் இந்திரியங்கள் களைக்கும்வரை வேலைசெய்த உன்மனம் உன்



தூக்கத்திலுதவி செய்யமுடியாமல் தானும் களைத்துப்போயிற்று. இந்திரியங்கள் வேலைசெய்ய எழும்போதே உன்னறிவைக் கிளப்பு. அது அவைகளை அடக்கி உனக்குதவியான தோழியாய் உபர்தரமாய் உன் வேலைகளைச் செய்யும். தன்னை யேவுதல் செய்பவில்லையேயென இந்திரியங்களை யடக்கச் சமயம் பார்த்துப் பக்கத்தில்நின்ற உயிர்த்தோழியாகி அறிவு உனக்குதவி செய்வாள்,

"நாசிக் கதோமுகம் பன்னிரண் டங்குலம்
நீசித்தம் வைத்து நினையவும் வல்லையேல்
மாசித்தி மாயோகம் வந்து தலைப்பெய்தும்
தேகத்திற் கென்றுஞ் சிதைவில்லை தானே."

"முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே யானந்தம்
மகட்குத் தாய்தன் மணாளனோ டாடிய
சுகத்தைச் சொல்லென்ருற் சொல்லுமா றெங்ஙனே."

"நாசி நுனியின் நான்கு விரலிடை
ஈச னிருப்பிடம் யாரு மறிகிலர்
பேசி யிருக்கும் பெருமறை யம்மறை
கூசி யிருக்குங் குணமது வாமே."

"நாடுமங்குலி பன்னிரண்டெல்லை நாசியினுனி தன்னில்
நீடுவானத்தி லறிவுக ளிறந்திடி னிலைபெற வுயிர்நிற்கும்."

இந்தவல்லபத்தைக் கொண்டே இக்கால ஆராய்ச்சிப்படி இதனை விஷயாதிகளில் உபயோகிக்கக் கற்றுப் பயில்கின்றனர். அதனை வசிய முறையாய்த் தாற்பரியப்படப் பேசுகின்றனர். இனம் இனத்தோடுசேரும் என்றபடி உன்மனம் பிறமனத்தோடு சேரப்பழகுவதே யிதின் தொழிலாகிறது. பெரு நெருப்பு எரியும்போது அதனைச் சமீபித்துள்ள சிறுநெருப்பும் அதனோடுகலந்து அது செய்யும் வேலையையே செய்ய ஆரம்பிக்கிறது. மழைநீர் முதலிய சிறு நீரோட்டங்களும் சமீபித்துள்ள போற்றில் கலந்து அதின் வயமாகிறது.

அதுபோலவே உன் சலனமற்ற மனத்தோடு இதராளுடைய மனம் நீ யேவுதலால் கலந்து கொள்ளுகிறது. ஆக இரண்டும் சலனமற்றதாகிறது. உன் மனம் வலுவேறி யிருப்பதால் உன் ஏவலுக்கு பிறமனம் கீழ்படிகிறது. அதுவே தூங்காமல் தூங்கும் வழிக்குக் கொண்டுவந்து உன் மனதிற் கிசைந்த வேலை அவர்களை செய்யும்படி செய்வது.

யோசிக்க உன் மனமோ சலனமற்று உன் வயமாயிற்று. அதனுடன் கலக்கச்செய்யும் பிறமனமும் உன் மனமே யன்ருே. உதாரணமாக நீ பிறரை யேவுதல் செய்யுங் கோரணியை முன் உன்னுள் நீ யாடுவாய். அதனோடு கலந்து வலுவற்ற பிறர்மனம் அதனையே ஆட அவர்களுக்கு வழிநீ பிறரைக் காணச் செய்கிருய். மனத்தெளிவடையார்க்கு இது வியப்பே. புறநோக்கால் பூதரூபமாயுள்ள உன் மனத்தின் அக்கினி ரூபத்தால் எதிரியைத் தாக்குவதும், வாயுரூபத்தால் உன்னெண்ணத்தை அறிவிப்பதும் முதலிய தொழிலைச் செய்கிருய். நானுனக்குக் கூறுவதில் ஈதெல்லாம் ஓர் பிரிவெனப் பின்னர் காண்பாய். ஈஸ்வர வியாபக மத்தியில் நின்ற ஆத்மா தன்னிலை புரண்டு ஓடிவந்ததே இப்பூத குணங்கள். நான் கூறுவதெல்லாம் உன்னடுநிலைமையைப் பெறு என்பதே. அப்போது உச்சிச் சூரியன் முன் வைத்த பளிங்குபோல் பூதகாரியங்களில்லையாம். நீ சுகசொரூபி ஆகிருய்.

கமலத்தன்னை.

# ஜப்பான் சக்ரவர்த்தி.

ஜப்பான் தேசம் ஒரு தீவு. இதைச் சுற்றிலும் சமுத்திரம் சூழ்ந்திருக்கிறது. இது இந்தியாவுக்கு வடகிழக்கி லிருக்கிறது. நாம் அத் தேசத்திற்குப் போக வேண்டுமானல் 5 அல்லது 6 வாரம்பிடிக்கும், இத்தேசத்தார் அதிக உயர முள்ளவர்களல்ல. சிறிது குள்ளமாகவே யிருப்பார்கள், இவர்கள் முகம் நீண்டிருக்கும். இவர்களின் தலையில் கருமையான நீண்ட ரோம மிருக்கும். இவர்களது கண்கள் சிறியது; ஆனால் கருமையாகவும் ப்ரகாசமாகவு மிருக்கின்றன. புஷ்பங்களின்மேல் இவர்களுக்கு மிகுந்த ப்ரியமாகையால் அநேக புஷ்பத் தோட்டங்கள் இத்தேசத்தி லிருக்கின்றன. ஜப்பானியர்களுக்கு தங்கள் குழந்தைகளிடத்தில் மிக்க பிரியமுண்டு. எப்பொழுதும் அவர்களுக்கு ஏதாவது ஒரு வேடிக்கை விருந்து செய்வார்கள். தங்கள் குழந்தைகளை பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பி வருகிறார்கள். பாடசாலை படிப்பு முடிந்தவுடன் ஜர்மனி, இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய தேசங்களிலுள்ள பற்பல கைத்தொழில்களைக் கற்றுவர தங்கள் புத்ரர்களை அனுப்பி வருகிறார்கள். புத்ரர்களை தைரியமாயிருக்க பழக்கி வருகிறார்கள், மேலும் தங்களது சக்ரவர்த்தியையும் தங்கள் தேசத்தையும் நேசித்துவர போதித்துவருகிறார்கள். இவர்கள்சாமர்த்திய சாலிகள். நல்லவர்களாகவும், கைத்தொழில்களில் ஜாக்ரதையாயு மிருக்கவும் பழக்கிவருகிறார்கள். இவ்வித மிவர்கள் சுமார் 50 வருஷங்களுக்கு முன் இருக்க வில்லையெனத் தெரிகிறது. இவர்கள் இவ்வித விருத்தியை யடைந்தது ஜுலைமீ 29உ இறந்துபோன முட்ஸ ஹிடோ என்கிறசக்ரவர்த்தியால்தான்.

இவர் 15-வது வயதில் சிம்மாஸனம் ஏறினர். இதற்கு முன் பல தேசங்களுக்குப் போய்வந்த சிலரை இவருக்கு உபாத்தியாயர்களா யிருந்தார்கள். ஸிம்மாஸனம் ஏறினதும் தமது தோழர்களில் சிலரை பற்பல தேசங்களுக்கு அனுப்பி அங்குள்ள இராஜாங்கமுறை முதலியவைகளைத் தெரிந்து வரும்படி அனுப்பினர். அவ்விதம் இவர்கள் ஜர்மனி, இங்கிலாந்து முதலிய தேசங்களுக்குச்சென்று அங்கு நடந்துவரும் இராஜாங்க ஒழுங்கு, முறை சட்ட திட்டங்கள் முதலியவைகளைக் கற்றுக்கொண்டு தங்கள் தேசத்திற்குத் திரும்பி வந்தார்கள். இவர்களைத்தமது மந்திரிகளாக நியமித்துக்கொண்டு இவர்கள் யோசனைகளைக் கேட்டு சக்ரவர்த்தி தமது ராஜ்யத்தை ஆண்டுவந்தார். முதலில் கப்பல்களைச் செய்வித்து கடற்படையை ஏற்படுத்தினர். ஜர்மனியி லிருப்பது போல் தரைச் சைன்யத்தையும், வைத்ய இலாகாவையும் ஏற்படுத்தினர். சங்கீதம், கலைகள் இவ்விரண்டையும் பிரான்ஸ், இடாலி தேசங்களிலுள்ள கற்றவர்களைக்கொண்டு ஸ்தாபித்தார். பற்பலதேசங்களில் கற்றுவந்தவர்களைக்கொண்டு சட்டம், கல்வி முதலியவைகளை ஏற்படுத்தினர். உலகத்திலுள்ள மதசம்பந்தமான கொள்கைகளை யெல்லாம் அறிந்துவரும்படி பண்டித ஸ்ரேஷ்டர்களையும் நானு தேசங்களுக்கு அனுப்பினர். இப்பண்டிதர்கள் அவ்விதமே பல தேசங்களுக்குச் சென்று அந்தந்த தேசத்து மதக்கொள்கையை நன்ருக ஆராய்ந்து தெரிந்துகொண்டு தங்கள் தேசத்திற்கு வந்தார்கள். சக்ரவர்த்தியிடம் தங்களது தேசத்திலுள்ள மதக்கொள்கையை மாற்றவேண்டிய தில்லையென்று சொல்லிவிட்டார்கள். சக்ரவர்த்தியும் மிக மகிழ்ந்து மதக்கொள்கையை மாற்ற முன்வர வில்லையாம். இதை ஜனங்கள் கண்டு மிகுந்த சந்தோஷமடைந்தார்கள். காலக்ரமத்தில் சுரங்கப் பொருள்களைக் கண்டறியவும்,



வைத்யசிகிச்சை, கைத்தொழில் முதலியவைகளைக் கற்றுக்கொள்ளவும் சிறந்த வித்வான்களை நியமித்து பல காலேஜ்களை ஸ்தாபித்தார். எரிமலை இத் தேசத்திலுண்டு. அதன் விபத்தில் ஜனங்கள் அகப்பட்டுக் கொள்ளாமலிருக்க அவ்வித மலைகள் எரிய ஆரம்பிக்கும்பொழுது தெரிந்து கொள்ளத்தக்க ஏற்பாடு செய்வித்தார்.

1883-ம் வருஷத்தில் இங்கிலாந்து முதலிய தேசங்களில் பார்லிமேண்ட் இருப்பதுபோல் தமது தேசத்திலும் ஒரு பார்லிமெண்ட் இருக்கவேண்டுமென்று மந்திரிக்குச் சொல்லவே, அம்மந்திரியும் இதை அங்கீகரித்து, பார்லிமெண்டை ஸ்தாபித்தார்கள். ஜப்பானியராலேயே ருஷியாவிலும் பார்லிமெண்ட் ஏற்பட்டது. இப்பொழுது துருக்கியிலும், பெர்ஷியாவிலும் பிரதிநிதிஸ்தாபனம் உண்டானதும் ஜப்பானைப் பார்த்துத்தான். சீனவும் வல்லமையுள்ள அரசருக்குத் தப்பியது ஜப்பானல்தான்.

“மன்னவர்கள் ஆண்டது எல்லாம் மந்திரிகள் ஆண்மை” என்பதற்கிணங்க தக்க மந்திரிகள் சமயோசித யோசனைகளை சக்ரவர்த்திக்குச் சொல்லி வந்தமையாலும் பிரஜைகளும் “அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி” என்றபிரகாரம் சக்ரவர்த்தியைப்போல் தேசாபிமானமும், முதிர்ந்த ராஜபக்தியு முள்ளவர்களாய் தங்கள் தேசவிருத்தியை நாடி உழைத்தார்கள். இவ்விதம் உழைத்து வந்தமையால்தான் இத்தேசத்துக்கும் ருஷியாவுக்கும் சண்டை நடந்தபொழுது ஜப்பான் ஜயமடைந்தது. ஆகையால்தான் ஜப்பான் தேசத்தை வல்லமையுள்ள தேசத்து அரசர்கள் கௌரவமாக நடத்தி வருகிறார்கள்.

இச் சக்ரவர்த்தி இறந்தபொழுது அத்தேசத்து பிரஜைகள் கொண்ட துக்கத்திற் களவில்லை. ஒருவன் மனம் சகியாமல் தற்கொலை செய்துகொண்டான். இதல்லவோ சிறந்த ராஜபக்தி? இவனுக்கு மோக்ஷம் நிச்சயமாய் கிடைக்குமன்றோ?

இச் சக்ரவர்த்தியின் குடும்பத்தாருக்கு பலதேசத்து மன்னர்கள் தங்கள் துக்கத்தைத் தெரியப்படுத்தினர்கள். நமது ஜார்ஜ் சக்ரவர்த்தியும் உடனே தந்தி யனுப்பினர்.

பிரிடிஷ் ராஜ்யத்து மந்திரியாகிய மிஸ்டர் ஆஸ்க்வித் காமன்ஸ் ஸபையில் அடியில் வருமாறு பேசினர்:—“ஜப்பான்தேசத்து சக்ரவர்த்தியின் மரணம் அவருடைய அவருடைய ப்ரதாபமான ஆளுகையின் முடிவைக்குறிக்கிறது. அவருடைய ஆளுகையில் தான் அரசனுடைய நிலைமையிலும் ஜனங்களின் அபிவிருத்தியிலும் அதிக மாறுதல்கள் உண்டாயின. சக்ரவர்த்தி தமது 50 வருஷ ஆளுகையில் தெய்வீகம் பொருந்தியவராயும் அரசனுயுமிருந்தார். பின்பு சட்டத்திற்குட்பட்டு பார்லிமெண்டாரால் நியமிக்கப்பட்ட ஒரு அரசனுமானர்.

இவரது ஆளுகையில் இத்தேசத்தில் எந்த மாறுதலும் உண்டாகாதென்று யாவராலும் நினைக்கப்பட்டது. ஆனல் இது கடற்படையிலும் தரைப்படையிலும் சிறந்ததாயும் பிடிவாதமான வீரத்தன்மையுடையதாயு மிருக்கிறது. தற்காலத்தில் ஜப்பான் புதுமையான விஷயங்களை அநுசரித்துக் கொண்டே யிருக்கிறது.

இவருடைய ஆளுகையின் கீழ்தான் தனது பிரஜைகளுக்கும், மானுஷ்ய ஜாதிக்கும் அதிக அபிவிருத்தி யுண்டானதென்று சொல்வேன்.

10 - வருஷங்களுக்கு முன் ஜப்பானுக்கும் நமக்கும் ஸ்நேகமுண்டாயிற்று. அதற்குப்பிறகு இரண்டுதடவை ஸ்நேக உடன்படிக்கை மறுபடியும் செய்யப்பட்டது. இவ்வித ஸ்நேகம் ஸ்திரமாகவே யிருந்துவருகிறது. இவ்வித ஸ்நேகம் பிறருக்குத் துன்பம்செய்யும் பொருட்டல்ல. ஆனால் பரஸ்பர காப்புக்காகவும், மேன்மையான நோக்கங்களை உலகில் பரவச் செய்வதற்காகவும், சமாதானத்தைக் காப்பாற்று வதற்காகவும் இவ்வித ஸ்நேகம் செய்யப்பட்டது.

இம் மகாசபையில் இத்துக்கம் நம்மையும் வாட்டுகிறதென்பதைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவர்கள் மத்தியிலிருந்து நீங்கிவிட்ட சக்ரவர்த்தியின் அழியா ஞாபகத்தை நாம் கொண்டாடுகிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்."

பத்திராதிபர்.

# இந்திய ஸ்திரீகளின் தற்போதைய நிலைமை.

இந்தியாவில் சிறிது காலமாய் ஸ்திரீகளின் அபிவிருத்தியின் பொருட்டு புதுக்கிளர்ச்சி யுண்டாயிருக்கிறதென்றே சொல்லவேண்டும். போபால் பீகம் படுதாவை நீக்கி சக்கரவர்த்தி பரிவாரத்தோடு பவனி வந்தார். பெண்கள் கல்வியில் அபிவிருத்தி காட்டி டில்லிமாநகரில் ஒரு காலேஜ் பெண்களுக்காக ஸ்தாபிக்க பிரயத்தனம் செய்தும் வருகிறார். பரோடா மஹாராணியார் அமெரிக்கா, ஐரோப்பா முதலிய விடங்களுக்குச்சென்று பார்வையிட்டு தமது அநுபோகத்தையும், இந்திய ஸ்திரீகள் மேல்நாட்டாரிடமிருந்து என்ன கற்றுக்கொள்ளவேண்டுமென்பதைப் பற்றியும் ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறார். ஓர் வங்காளமாது அமெரிக்கா சென்று இந்து சங்கீதத்தினறிவை அங்கு பரவச்செய்து இங்கே சங்கீதத்தை விருத்தி செய்ய பல சங்கங்கள் ஏற்படுத்தி யிருக்கிறார். டார்ஜிலிங் முனிசிபாலிடியில் ஓர் இந்திய ஸ்திரீ முனிசிபல் கவுன்ஸிலாயிருக்கிறாராம். சிறிது மாதங்களுக்கு முன் ஒரு உயர்குல ஸ்திரீ வட இந்தியாவில் முனிசிபல் ஸ்தானத்திற்கு அபேட்சகராய் முன் வந்தார். சென்னையில் முதல் முதல் ஒரு பிராமணஸ்திரீ பி. ஏ. பட்டம் பெற்று, தாம் பெற்ற உயர் கல்வியின் பயனாய் கைம்பெண்களுக்கு ஓர் ஆச்ரமமும் கலாசாலையும் ஏற்படுத்தியிருக்கிறார். வடஇந்தியாவில் பெண்கள் கல்வி அவசியமென்பதை ஒப்புக்கொள்வதோடு நில்லாமல் அதன் அபிவிருத்திக்கு பல பிரயத்தனங்களும் செய்யப்பட்டு வருகின்றன. கூடிய சீக்கிரத்தில் சென்னையில் பெண்களுக்காக ஓர் தனிகாலேஜ் ஏற்பட்டால் சிலாக்கியமாகும். பில்டெனண்டு என்னும் ஓர் அமெரிக்கா தேசத்து ஸ்திரீ, பெண்கல்வி, ருதுவானபின் விவாகஞ் செய்தல் போன்ற விஷயங்களைப்பற்றி இந்தியா முழுமையும் உபந்யாசம் செய்துகொண்டு அங்கங்கே மீட்டிங்குகள் கூடி சங்கங்களும், கிளைச்சங்கங்களும் ஏற்பாடு செய்திருக்கிறார். பொதுவாய் ஆசார திருத்தத்தில் மனச்சார்பில்லாத உய



ர்குல ஸ்திரீகள் இத்தென்னிந்தியாவில் எல்லாவிடங்களிலும் அமெரிக்கா மாதின் புத்திமதியை அநுசரிக்க முன் வந்திருக்கிறார்கள். சென்னை, ராஜமஹேந்திரபுரம், காக்கிநடா, கும்பகோணம் முதலிய இடங்களில் ஸ்திரீ சங்கங்களும் சபைகளும் ஏற்பட்டு நல்லவேலை செய்துவருகின்றன.

என்றாலும் மேல்நாட்டு ஸ்திரீகளோடு ஒப்பிடுமிடத்து நாம் செய்திருக்கிற காரியம் அணுவளவாகுமென்று எவரும் ஒப்புக்கொள்வார்கள். இந்திய ஜன சமுகம் முன் நடக்க ஆரம்பித்தல் தான் கஷ்டம். ஆரம்பித்த பின் விடா முயற்சியோடு பின் நோக்காமல் முன் நோக்கிச் செல்லுமென்பதி லொரு ஆக்ஷேபனையுமில்லை. சீதா, சாவித்திரி, தமயந்திமுதலிய பெண்மணிகளை மேற்கோளாகக்கொண்டு அபிவிருத்தி யடைவார்களென்றே நம்புகிறோம். இந்திய ஸ்திரீகள் சில ஆங்கிலேய ஸ்திரீகளைப்போல் (English Suffragettes) இராஜாங்க நிர்வாகத்தில் பாத்தியம் பெறவேண்டுமென்று வாதிப்பார்களென்று எண்ண இடமில்லை. அடக்கம், பொறுப்பு, அச்சம், பயிர்ப்பு முதலிய நற்குணங்கள் இவர்களிடம் குடிகொண்டிருப்பதோடு, தங்களுடைய சக்திக்கும், இயற்கைக்கும், குணத்திற்கு மேற்ற இடம் (Sphere) இவையாகுமென்பதை இவர்கள் நன்றாயறிவார்கள். மனிதர்களுக்கு இருக்கும் சுதந்தரங்கள் யாவும் ஸ்திரீகளுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று வாதிக்கப்படுங் காலம் வந்தால் அது நல்ல காலமென்றே நாம் சொல்லத்துணிவோம். ஏனெனில் புத்திரன், புத்திரிகளைப்பெற்று அவர்களை சரியான வழியில் நடத்திப் பயிற்றுவிக்கும் தாய்மார்கள் ஜனசமுகத்தின் க்ஷேமம், அபிவிருத்தி சம்பந்தமான எல்லாக்காரியங்களிலும் கலக்கலாமென்பதே எம்முடைய துணிபு. ஸ்திரீகள் புத்தியிலோ, ஊக்கத்திலோ, மனோதிடத்திலோ புருஷர்களுக்கு பின்னடைந்தவர்களென்று எண்ண இடமில்லை.

இது நிற்க! தற்காலம் இந்தியாவில் ஸ்திரீகளின் முன்னேற்றத்துக்குத் தடையாயிருப்பன யாவை யென்பதைப்பற்றி சிறிது ஆராய்வோம். (1) படுதாக்குள் அடைபட்டிருக்கும்வழக்கம். (2)படுதாவிலிருந்துசிறிதுவெளிபட்டாலும், கல்வி புத்தி யபிவிருத்திக்குப் போதுமான சுதந்தரங்களின்றி தடுமாடும் கொடிய வழக்கம். சிறு பெண்களை பத்துவயதானதும் பள்ளிக்குச் செல்லவிடுவதில்லை. பெற்றோர் சம்மதித்தாலும் புருஷன் வீட்டார் சம்மதிப்பதில்லை. (பெண் புருஷனைவிட அதிகமாய்ப் படித்துவிடுவாளென்ற பயமோ?) நம்மில் ஸ்திரீகளின் இயற்கை குணங்களைப்பற்றி ஓர் கேவலமான தப்பபிப்பிராய மிருந்து வருகிறது. அவர்களுடைய மனது சஞ்சலமுடையதென்றும் (flutt-ering) ஏதோ கண்டதைப் பார்த்து மனதிடனின்றி புத்தி மாறுபடும் இயற்கையை யுடையதென்றும் நம்மில் பலர் கருதுகின்றனர். சில புராணங்களையும், கட்டுக்கதைகளையும்ஆதாரங்காட்டுகின்றனர். ஆகையால்பெரியோர் அருகிலிருந்து அவர்களுடைய ஜாக்கிரதையின் கீழ் இல்லாமற்போனால் கெடுதல் சம்பவிக்குமென்று எண்ணுகிறார்கள்போலும். இத்தகைய சமுசயங்கள் ஓர் நாகரீகமுள்ள எந்த ஜனசமுகத்தாரிடமும் குடிகொண்டிராது. காட்டு மனிதர்களும் நாகரீகமற்ற ஜாதியார்களுமே இக்கொள்கையைப் பின்பற்றுபவர். ஸ்திரீகளுக்கு அவர்களபிவிருத்திக்குவேண்டிய சில சுதந்தரங்கள் கொடுப்பதால் ஒழுக்கந் தவறுவார்களென்று நினைப்பது பிசகு. கற்பு ஒரு ஸ்திரீயை காக்குமே யொழிய கட்டுங்காவலும் நன்மை செய்யாவென்பதை இவர்கள் உணரவில்லையே. ஒதெல்லோ என்னும் மூர்ஜாதி சேனாதிபதி (ஷேக்ஸ்பியர் நாடகத்

இன் ஒருபாத்திரன்) தன்மனைவி டெஸ்டிமோனா என்னும் சீமாட்டி, சாதுரியமாய்ப் பேசுகிறாள், பாடுகிறாள், விளையாடுகிறாளென்றால் தான் சமுசயங்கொள்ள மாட்டேனென்றும், எங்கே கற்பு (virtue) இருக்கிறதோ அங்கே இவை அதை விளக்கிக் காட்டும் குணங்களேயென்றும் கூறுகிறார்.

நம்மில் பெண்களின் உயர்வு (dignity) அவர்களின்கதி (destiny) அவர்களடையவிருக்கும் பதவியைப்பற்றிக் கொண்டிருக்கும் நோக்கங்கள் கர்நாடக் கொள்கைகளாயிருக்கின்றன. (1) பெண்களை ஆடு, மாடுபோல் நடத்தவும், விலைபேசவும் செய்பவர் சிலர் (2) கொஞ்சிக் குலாவுதற் கேற்பட்ட பொம்மைகளென்று கருதி நடப்பவர் பலர். (3) சம்சாரத்தைப் பரிபாலிப்பவரென்றும், குழந்தைகளை இளம்பிராயத்தில் தொட்டிலாட்டி, சீராட்டி நல்லவழியில் பயிலுவிப்பவரென்றும் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் புருஷர்களுக்கு சரிசமானமான தோழர், கஷ்டம், சுகம் இவற்றை யுண்டுபண்ணும் ஜனசமுகத்தின் க்ஷேமாபிவிருத்தி சம்பந்தமான எக்காரியங்களிலும் அவர்கள் உற்றதுணைவர்களா யிருக்கவேண்டுமென்னும் கொள்கையை உயர்வாய் எண்ணி அநுசரிப்பவர் அருமையே. வரதக்ஷிணையை ஒழித்து நம் சிறுவர்கள், மணப்பெண்கள் உயர் கல்வி பெற்று உலக விஷயங்களை அறிய சக்தியுடையவர்களாயிருக்கவேண்டுமென்று வற்புறுத்துவார்களானால் அதனிற் சிறந்த தேசாபிமானம் வேறொன்றில்லை.

K. V. சுப்பிரமணிய ஐயர், B. A.

# கமலா.

## அங்கம் - 2. களம் - 1.

இடம்:—காஷ்மீரம் (அரண்மனையில் ஒரு அறையில், அரசனும், மந்திரியும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.)

மந்திரி:—அரசே! அம்மனிதனுக்குப்பின் அவனை அனுப்பியது மிகவும் நல்லகாரியமே. அவன் அருணேசனது தூதனல்லவென்று எவருக்குத்தான் தெரியும்?

அரசன்:—அது சரியே. விசாரணைக்கு அநேக கேஸ்களிருக்கின்றன. அவைகளை விசாரணை செய்யுமுன் அவனை விசாரிப்போமா?

மந்திரி:—அரசே! அது மிக்க முக்ய விஷயமாயிருப்பதால் நிச்சயமாகவே அவ்விதம் செய்வோம்.

அரசன்:—அங்கே யார்? (சேவகன் உள்ளே வருகிறான்.)

சேவகன்:—மாக்ஷிமைதங்கிய மகாராஜாவே!

அரசன்:—உங்களில் இருவர் சிறைச்சாலைக்குச் சென்று அக்கைதியை இங்கு இட்டுக்கொண்டுவாருங்கள்.

சேவகன்:—மகாராஜ்! தங்கள் ஆக்ஞைப்பிரகாரம் செய்கிறோம்.

மந்திரி:—கைதி மிக சாமர்த்தியசாலியென்று அவர்கள் சொல்லுகிறார்கள். மகாராஜ்! கிடைக்குரிய குணங்களெல்லாம் அவனிடத்திலிருக்கின்றன.

அரசன்:—நாம் அவைகளைப் பார்ப்போம். (கைதியை அழைத்துக்கொண்டு இரண்டு சேவகர்கள் வருகிறார்கள்.)



மந்திரி:—மகாராஜாவே! நான் அவனை கேள்வி கேட்கட்டுமா?

அரசன்:—மந்திரி, ஆம், அப்படியே செய்யுங்கள்.

மந்திரி:—கைதியே, நீ யார்?

கைதி:—மகாபிரபுவே! பஞ்சாப் தேசத்தான்.

மந்திரி:—உன் தொழில் என்ன?

கைதி:—மகாபிரபுவே! படம் விற்பதுதான் என் தொழில்,

மந்திரி:—நேற்று உன்னைப் பிடித்து ஏன் சிறைச்சாலையில் வைத்திருக்கிறார்கள்? இதற்குக் காரணம் தெரியுமா?

கைதி:—படம் விற்பதால் அரசருக்கு நான் யாதொரு தீங்கும் செய்யவில்லையே. என்னை சட்டத்திற்கு விரோதமாகவும் கொடுங்கோன்மையாயும் சிறையில் வைத்திருக்கிறார்களென்று நான் நிச்சயமாய்ச் சொல்வேன்.

மந்திரி:—அது நியாயமா அல்லது அநியாயமா என்று நான் உன்னை கேட்கவில்லை; கேட்ட கேள்விக்குப் பதில் சொல்; உன்னை கைதி செய்ததின் காரணம் தெரியுமா?

முதல் சேவகன்:—மூடத்தனமுள்ள வாயை மூடு. அப்படிச் செய்யாவிட்டால் உன் தலைபோய்விடும். ஜாக்ரதை.

இரண்டாவது சேவகன்:—நீ இப்பொழுது மகாராஜாவுக்கு முன்னிலையிலிருக்கிறதை நினைத்துக்கொள். உனது மாமன்வீட்டில் உல்லாஸமாகச் சோறு தின்பதாக எண்ணிக்கொண்டு உளராதே. தெரிந்தால் சொல்லு, தெரியாவிட்டால் வாயை மூடிக்கொண்டிரேன்.

கைதி:—மகா பிரபுவே! அப்படியானால் எனக்குத்தெரியாது.

மந்திரி:—காஷ்மீரத்துக்கும், பஞ்சாபுக்கும் உள்ள சம்பந்தம் உனக்குத் தெரியுமா?

கைதி:—பூனையும் எலியும் எப்படி சிநேகமாயிருக்கிறதோ அப்படித்தான் காஷ்மீரமும் பஞ்சாபுமிருக்கிறது. மேலும் எனது அரசன் குதிரைப் பந்தயத்தில் ஒரு பெருத்த யுத்தவீரனை ஜயித்ததாகவும் என் காதில் விழுந்தது.

அரசன்:—என்ன! இவன் நாக்கு எவ்வளவு நீளம்! இவன் வாய் எவ்வளவு பதட்டம்! இவ்விதம் கேள்வி கேட்பதால் இவனிடமிருந்து சரியான ஜவாபு வராது. (சேவகனைப்பார்த்து) அவனை சோதனைசெய்.

முதல் சேவகன்:—காட்டிலுள்ள நரிகளும் ஓநாய்களும் உன் மாமிசத்தைப் புசிக்க வெகு ஆவலாயிருக்கின்றன. அவைகளது பசியை ஆற்றி வைத்தால் நீ தர்மவானவாய்.

(இரண்டாவது சேவகன் கைதியை சோதனைசெய்து அவனிடத்திலிருந்து ஒரு பணப்பையையும், ஒரு டைரியையும் எடுக்கிறான்.)

இரண்டாவது சேவகன்:—மகாராஜாவே! இதோ இக்கைதியினிடமிருந்த பணப்பை இது, (அரசனிடத்தில் அதைக்கொடுக்கிறான்.)

அரசன்:—வேறொன்றுமில்லையா?

இரண்டாவது சேவகன்:—ஒரு டைரி கூட இருக்கிறது, மகாராஜ்! (இதையும் அரசனிடத்தில் கொடுக்கிறான்.) (அதை அரசன் திருப்பித் திருப்பி பார்க்கிறார்.)

அரசன்:—சேவகா, இவனை சிறைச்சாலைக்கு கூட்டிக்கொண்டு போய் நான் உத்தரவு செய்கிறவரையிலும் அங்கேயே வைத்திரு, அவன் பணப்பையைக் கொடுத்துவிடு.

கைதி:—டைரியைக்கூட.........

சேவகர்கள்:—ஓ கைதி, இங்கே இவ்விதம் பேசாதே. மரியாதையாக இரு, (சேவகர்கள் கைதியை இட்டுக்கொண்டு சிறைச்சாலைக்குப் போகிறார்கள்.)

அரசன்:—நாம் காரணமின்றி சந்தேகங்கொள்ளவில்லை. ஏனெனில், மந்திரி, இவன் இதில் எழுதியிருப்பதைப்பார். (மந்திரி படிக்கிறார்.)

"அருணேசனது கட்டளையால் விகட கவியாகிய நான் மந்திரியின் வேலைக்காரனைப்போல் வேஷம் போட்டுக்கொண்டேன். மந்திரியோ சித்திரம் வரைவோனாக வேஷம் போட்டுக்கொண்டு அரசனது உருவப்படத்தை காஷ்மீரதேசத்து அரசகுமாரியாகிய கமலாவுக்கு விற்றார்."

மந்திரி:—ஆ! ஆ!! இந்தப்பயல் அரசனது விகடகவியே!!!

அரசன்:—ஆம். அதற்கு என்ன சந்தேகம்? இவனை நாம் சிறைச் சாலையில் அடைத்து வைத்தது மிகவும் தப்பு. மேலும் நமக்கு பின்னிட்டு அபாயம் நேர்ந்தாலும் நேரும்.

மந்திரி:—மகாராஜாவே! அது உண்மையே, இனி நாம் என்ன செய்யக்கூடும்? அவனை சுயர்ச்சியாக விட்டுவிட்டால், அவன் உடனே சென்று அவனது அரசனிடத்தில் நம்மீது தூறுசொல்வான்; அவனை வைத்துக்கொண்டிருந்தாலோ ஜனங்கள் மூலமாக அரசன் இச்சங்கதியை யறிந்துகொள்வான். எப்படியும் அவன் கோபம் அதிகரிக்கும். திடீரென்று நம்மீது படையெடுத்து வருவான். (இச்சமயத்தில்சேவகர்களில் ஒருவன் அவசரமாக ஓடி வருகிறான்.)

சேவகன்:—மகாராஜா! கைதி தப்பித்துக்கொண்டு போய்விட்டான். இச் சமாசாரத்தை தங்களுக்குத் தெரிவிக்க அங்கிருந்து ஓடிவந்தேன்.

அரசனும், மந்திரியும்:—என்ன! தப்பித்துக்கொண்டு ஓடிப் போய்விட்டானா? எப்படி?

சேவகர்கள்:—மகாராஜாவே, அவனை ஒரு வீட்டுக்கு இட்டுக்கொண்டு போனோம். ஏனென்றால் தாகமாகிறது, குடிக்கத் தண்ணீர் வேண்டுமென்றான். நாங்கள் அவ்வீட்டுக்குவெளியில் நின்றுகொண்டிருந்தோம். வேறுவழியாக இருவர் இரண்டு குதிரைகளின் மீது ஏறிக்கொண்டு வாயுவேகம், மனோவேகமாய் சவாரி செய்வதைக் கண்டோம். அவர்கள் எங்கிருந்து வந்தார்களோ அதுவும் தெரியாது. இது மாயமா யிருக்கிறது. வீட்டிற்குள் நுழைந்து நாங்கள் அவனைத் தேடியபொழுது வீட்டில் அவன் தென்படவில்லை. மேலும் அவ்வீடு காலியா யிருந்தது.

அரசன் (பெருமூச்சு விடுகிறான்) ஹா! பக்ஷி பறந்து போய்விட்டதே! இதுவும் நமக்கு நல்லதுதான்; ஆனால் காலதாமதம் செய்யக்கூடாது. ஒருவேளை நமது விரோதிகள் நம்மை எதிர்க்க வந்தாலும் வரலாம். ஆகையால் உடனே நமது சேனைகளை யுத்தத்திற்கு ஆயுதபாணிகளா யிருக்கும்படி திட்டம் செய்யுங்கள்.

மந்திரி:—மகாராஜ், நான் அப்படியே செய்கிறேன். (இருவரும் போய் விட்டார்கள்).

☞ தாதா.



# ஸ்ரீமதி சுந்தராம்பாளும், இந்துகுடும்பமும்.

ஸ்ரீமதி சுந்தரம்பாள் சுதேசமித்திரனில் அடியில் வரும் விஷயங்களை எழுதியிருக்கிறார்கள். பெண்கல்வியில் அபிமானமுள்ளவர்கள் நமது பெண் மணிகளுக்கு கல்வி புகட்டிவருவதில் இவ்வியாசத்திலுள்ள விஷயங்களைப் புகட்டிவர முயலுவார்களென்று நம்புகிறோம். அது பின் வருமாறு:—

"ஒரு குடும்பத்தில் ஒரு ஹிந்து ஸ்திரீ கவனிக்கவேண்டிய விஷயங்கள் என்னவென்றால், முதலாவது வீட்டையும் வீட்டிலுள்ளவைகளையும் சுத்தமாய் வைத்துக்கொள்வது. 2-வது சீரான குடித்தனம் செய்வது. 3-வது சமையல் சாப்பாடு விஷயத்தைக் கவனிப்பது. 4-வது குழந்தைகளை வளர்ப்பது. 5-வது அவர்களுக்கு நன்னடக்கை, நற்குணம், தெய்வபக்தி போதிப்பது. 6-வது புருஷனுடன் ஒத்து அவருக்கு ஆதரவாக நடப்பது முதலியவைதான்.

1-வது வீட்டைக் குப்பை கூள மில்லாமலும் துர்நாற்றம் இல்லாமலும் வைத்துக்கொள்வதற்கு வீட்டிற்குள்ளிருக்கும் அறைகளில் தகுந்தபடி சுத்த ஆகாயம் இருக்கும்படிச்செய்யவும், உடுக்கும் வஸ்திரங்கள் சுத்தமாயும் குடிக்கும் தண்ணீர் நிர்தோஷமாயும் சாப்பிடும் ஆகாரம் உடம்பிற்கு ஒத்ததாயும் பழகும் பாத்திரங்கள் படுக்கும் படுக்கைகள் சுத்தமாய் வைக்கவேண்டியதற்குள்ள ஞானம், சுகாதாரவிளக்கமென்ற கிரந்தத்தை வாசிக்கத் தெரியவும்.

2-வது வரவிற்குத் தகுந்த செலவிடவும், பதார்த்தங்களைச் செட்டாயும் சீராயும் உபயோகப்படுத்தவும், பண்டங்களின் நிறை, அளவு, காலக்கிரயம் முதலானவை தெரிந்திருக்கவும் வேண்டுமானால், கணக்கு விஷயம் கற்க வேண்டியதுடன் பொதுவாய் படிப்பும் வேண்டியது.

3-வது சமையல் சாப்பாடு விஷயத்தில் வீட்டில் வேலைக்காரர்கள் வைத்துக்கொள்ளுகிற ஸ்திரீகள்கூட பாகசாஸ்திரம் பார்த்து அதன்படி பலவிதமான உண்டிகளைச் செய்யக் கற்பது அவசியம்.

4-வது குழந்தைகளுக்குப் பலவிதமான வியாதிகள் அண்ணியில் காற்று அவர்களுக்குத் தகுந்த ஆகாரம் கொடுத்து வளர்ப்பதற்கு குழந்தைகளின் தேகக்கூறு சாஸ்திரம் அறிந்திருக்கவேண்டும்.

5-வது குழந்தைகளுக்கு மதபக்தி, தேசபக்தி, தெய்வபக்தி, நன்னடத்தை, நற்குணம் இவைகளைப் போதிக்கத்தகுந்த யோக்யதை தாய்க்கு இருக்க வேண்டுமானால் தாயானவள் அந்த ஆசாரங்களை அனுஷ்டிப்பதுடன் ராமாயண, பாரத, பகவத் இதிகாசங்களின் சாராம்சத்தை அறிந்தவர்களா யிருக்க வேண்டும். ஹிந்துச் சிறுவர்கள் தங்கள் மதத்திற் பிடிப்பில்லாமலும், தெய்வபக்தி யென்பதில்லாமலும், நாஸ்திகர்களாய் வளர்கிறார்களென்பதற்கு அவர்கள் தந்தை தாயார்கள் காரணமே தவிர அவர்கள் படிக்கும் பள்ளிக்கூடங்கள் காரணமல்ல. என்ன முயற்சி செய்தாலும் தெய்வபக்தி என்ற குணமானது சிறுவயதிலேயே வீட்டிலுள்ள தாய் தந்தையர்களுடைய நடையினாலும் உபதேசத்தாலும் ஊட்டப்படவேண்டும். நம்முடைய வழக்கங்கள் நிலைநிற்க வேண்டுமானால் அவைகள் நம் ஸ்திரீகளால்தான் நிலைநிற்கவேண்டும். இவைகளுக்கு ஆதாரம் நம்முடைய சாஸ்திரங்களும் ராமாயண மகாபாரதங்களும் தத்துவ நூல்களுமே. இவைகளை நம்முடைய ஸ்திரீகள் அறியவேண்டுமானால்

☞ * ம-ா-ா-ஸ்ரீ டி. கே. ராமச்சந்திரராயர் எழுதியது விலை ரூபா 2-4-0.

அவர்கள் ஸம்ஸ்கிருதமென்னும் வடமொழிப் பாஷையைக் கற்பது அவசியம். நம் ஸ்திரீகள் அப்பாஷையைக் கற்று நம்முடைய சாஸ்திரங்கள் முதலானவைகளைப் பார்த்துவந்தால் இந்து தர்மமானது நிலைநிற்கும். இப்பொழுதிருக்கிற ஸ்திதியிலும் நம் ஆண்மக்கள் முழுவதும் பிரதேச நடை உடை பாவனைகளை அனுஷ்டிக்காம லிருப்பதற்குக் காரணம் நம் ஸ்திரீகளே.

6-வது சில காரியங்களைத் தவிர்த்து மற்றெல்லாக் காரியத்திலும் ஸ்திரீகள் புருஷருக்கு ஒத்தாசையா யிருக்கக்கூடியவர்கள். முக்கியமாய் காலதேச வர்த்தமானத்தை ஒத்து சில சீர்திருத்தங்கள் ஏற்படவேண்டியதா யிருக்கிறது. அவைகள் அத்யாவசியமென்று நமது ஆண்மக்களுக்குத் தெரிந்திருந்தும் அவர்களால்மட்டும் அவைகளைச் சாதிக்க முடியவில்லை. பெண் கல்வியை அபிவிருத்தி செய்தல்; பால்ய விவாகத்தைத் தடுத்தல், ஜாதிகளுக்குள் பல உட்பிரிவுகளைத் தவிர்த்து அவைகளை ஒன்றாக்கல். இன்னும் பலவித பொது ஜனசங்க அபிவிருத்தியைத் தேடுதல். இவ்வகையான விஷயங்களில் ஸ்திரீகளுடைய ஒத்தாசையின்றி புருஷர்கள் மட்டும் எவ்வளவு தீரர்களா யிருந்தாலும் அவர்களால் ஒன்றையும் நிறைவேற்றமுடியாது. இவ்வகையான விஷயங்களில் தம் புருஷர்களோடு கூடியோசித்துச் செய்யவேண்டிய சீர்திருத்தங்களை செய்யத்தகுந்த யோக்யதை ஏற்படுகிறதற்கு நம் ஸ்திரீகள் தகுந்தபடி கல்விப்பயிற்சி செய்யவேண்டும்."

---

மனோரஞ்சினியின் 14-ம் புத்தகம் 6-இலக்கம் 131-ம் பக்கத்து விடுவிக்கக்கூடிய கணித விடுகதை.

12 எழுத்துகள்:—திருநாவுக்கரசு நாயனார்.

8 எழுத்துகள்:—மார்க்கசகாயன்.

☞ கமலத்தன்னை, விசாலாக்ஷி, ருக்மணி.

---

## வரிசைக்கிரம ஒற்றை எண்களின் கூட்டுத்தொகை.

முன்னர் வரிசைக்கிரம எண்களின் கூட்டுத் தொகையைப் பற்றி வரைந்தோம். இங்கு வரிசைக்கிரம ஒற்றை எண்களின் கூட்டுத் தொகையைப்பற்றிப் பேசுவோம்.

20 ஒற்றை யெண்களின் கூட்டுத் தொகையை யாராய்வாம். அவற்றின் தொகை 20 ஐ 20 ஆல்பெருக்கிய தொகையாகும்.

அதாவது:—1, 3, 5, 7, 9, 11, 13,......39 வரை 20 ஒற்றை யெண்கள் இருக்கின்றன. (இது கடை யெண்ணையும் முதலெண்ணையும் கூட்டிய மொத்தத்தின்பாதியாகும்.)

இவற்றின் தொகை 20+20=400 ஆகும். இங்கு முதலெண் ஒன்றாயிருத்தல்வேண்டும்.

## வரிசைக்கிரம இரட்டை எண்களின் கூட்டுத்தொகை.

2, 4, 6, 8, 10, 12 முதலியன அடுத்துவரும் இரட்டை யெண்கள். இவற்றின் கூட்டுத் தொகையை யாராய்வாம். 20 வரையுள்ள இரட்டை யெண்களின் கூட்டுத் தொகையை உதாரணமாக எடுத்துக் கொள்வோம்.



இவற்றின் தொகை முதலெண்ணையும் கடை யெண்ணையுங் கூட்டிய தொகையை முதலெண்முதல் கடையெண் வரையுள்ள எண்களின் எண்ணிக்கையின் பாதி பாகத்தால் பெருக்கிய தொகையாகும்.

2, 4, 6, 8, 10, 12, 14, 16, 18, 20. இங்கு 10 எண்க ளிருக்கின்றன, இவ் வெண்ணிக்கையின் பாதி 5 ஆகுமன்றோ? கடையெண்ணும் முதலெண்ணும் சேர்ந்த மொத்தம் 22.

2+4+6.........+20=22×5=110. இதுபோலவே முன்னையதையும் செய்யலாம்.

இங்கு எடுத்துக்கொண்ட எண்களின் எண்ணிக்கையின் பாதி கடையெண்ணின் கால்பாகமாகக் காண்கின்றோம். இது முதலெண் 2 ஆக இருந்தால் ஒத்துவரும். ஆகவே 2 முதல் அடுத்துவரும் இரட்டை யெண்களின் தொகை முதலெண்ணையும் கடையெண்ணையும் கூட்டிய மொத்தத்தை கடையெண்ணின் கால்பாகத்தாற் பெருக்கிய தொகையாகும்.

☞ தி. மா. மார்க்கசகாயன்.

---

## மாதர்மனோரஞ்சனிக்கு வாக்கு ஸகாயம்.

இந்தப் பத்திரிகையில் போட்டிருக்கும் விளம்பரங்களைக் குறித்து எழுதும்போதெல்லாம் *மாதர் மனோரஞ்சனி* அல்லது **Tamil Zenana Magazine**-யில் பார்த்ததாக கம்பெனிகளுக்கு இங்கிலீஷிலேயே எழுதும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

"மாதர் மனோரஞ்சினி ஆபீஸ்" திருவல்லிக்கேணி.

---

## சமாசாரக்குறிப்பு.

தூரதிருஷ்டிக் கண்ணாடி:—தூரதிருஷ்டிக் கண்ணாடி 1590-ம் வருஷம் கண்டுபிடிக்கப்பட்டது.

காலஞ்சென்ற ஜப்பான் சக்கரவர்த்தி:—ஜப்பான் சக்கரவர்த்தியின் மரணத்தைக் கேட்டு H. M. ஜார்ஜ் சக்கரவர்த்தி தாம்கொண்ட அனுதாபத்தை ஜப்பான் இளவரசருக்குத் தந்திமூலமாய்த் தெரிவித்திருக்கிறார்.

ஜோதிவிருக்ஷம்:—ப்ரேஸில் தேசத்தில் 7 அடி உயரமுடைய ஒரு ஜோதி விருக்ஷமிருக்கிறது; அதன் பிரகாசம் ஒரு மைல்தூரம் வீசுகிறது. அந்தப் பிரகாசத்தில் எவ்வளவு சிறுவெழுத்துள்ள புஸ்தகத்தையும் படிக்கக்கூடுமாம்.

ஒரு பெருங் குகை:—அமேரிக்காவின் ஐக்கிய மாகாணத்திலுள்ள ஒரு மலையில் 64-மைல் தூரமுடைய குகை யொன்றிருக்கிறதாம்; இதுவே உலகத்திலுள்ள குகைகளில் பெரியதாம்.

தேள் கொட்டுக்கு மருந்து:—தேள் கொட்டிய இடத்தில் சிறிது புளியையும் அதேயளவு சுண்ணாம்பையுங் கலந்து வெண்ணெய் போலாக்கித் தடவினால், விஷம் 5 நிமிஷத்திற்குள் இறங்கிவிடுமாம்.

---

தெற்றுவாய்:—தினந்தோறும் அரை மணிநேரம் ஈசலடித்துக் கொண்டிருந்தால் தெற்றுதல் நின்றுவிடுமாம். இதை யாவரும் பிரயோகித்துப் பார்க்கலாம்.

---

கறையான் தொல்லைக்கு மருந்து:—நன்றாய்க் கொதிக்கும் வெந்நீரிலே சீனிக்காரத்தைக் கரைத்துப் பொந்திலூற்றிவிடக் கறையான் நாசமாகுமாம். பொட்டுப்பூச்சி வலைநெய்யு மிடங்களில் இதை யூற்றிவிட்டாலும் அது பயந்து ஓடிவிடுமாம்.

---

தாவர்சாஸ்திர போதனை:—கவர்ன்மெண்டார் ப்ரைமரி பாடசாலைகளில் வாசிக்கும் பிள்ளைகளுக்குத் தாவர சாஸ்திரத்தைப் பற்றிப் போதிக்க உபாத்தியாயர்களைப் பழக்கவேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அதற்குரிய ஏற்பாடுகள் இப்போது நடைபெற்று வருகின்றன.

---

பெண்களுக்கு மூலாதாரப் படிப்பு:—இந்தியாவில் கல்வி விஷயமாய் செலவிடுவதாக உத்தேசிக்கப் பட்டிருக்கிற தொகையில் பெண்களின் ஆரம்பப் படிப்புக்கு ஏதேனும் செலவிடப்படுமோ என்று உதவி மந்திரியை ஒருவர் கேட்டபோது இவ்விஷயத்தில் 33,000 பவுன் செலவிடப்படு மென்கிறார்.

---

கடல்நீரில் தங்கம்:—அமெரிக்கா ஐக்கிய நாட்டைச் சார்ந்த நியுயார்க் பட்டணத்தில் ஆஸ்கார் மாகல் என்னும் ஓர் ரஸாயன சாஸ்திரி கடல்நீரில் தங்கமிருக்கிற தென்றும், 3, 000 பவுன் எடையுள்ள கடல் நீரைக்காய்ச்சினால் 1 பவுன் தங்கம் எடுக்கலா மென்றும், 48, 409 பவுன் செலவு செய்து அதற்கேற்ற யந்திரங்களை யமைத்தால் 2, 60, 000 பவுன் மதிப்புள்ள தங்கம் அடையலாமென்றும் சொல்லுகிறாராம்.

---

இந்தியா சட்டசபையில் இரண்டு மசோதாக்கள்:—அடுத்துவரும் இந்தியா சட்டசபை மீட்டிங்கில் ஆனரெபில் மிஸ்டர் தாதாபாய் தன் வயது தனக்குவராத பெண்களின் பாதுகாப்பை யொட்டித் தம்முடைய மசோதாவைக் கொண்டுவர அனுமதி பெற்றுவிட்டார். ஆனரெபில் மிஸ்டர் மாட்ஜ¯ம் ஸ்திரீ அடிமைகளின் விற்பனையை அடக்குவதை யொட்டித் தாம் கொண்டுவரப் போகிற மசோதா வைப்பிரேரிக்க அனுமதி பெற்றுவிட்டார்.

---

ஒரு ஆச்சரியமான எரி நட்சத்திரம்:—ஆகஸ்டுமீ 11வ இரவு 10-மணிக்கு பெஷாவரில் ஒரு ஆச்சரியமான எரி நட்சத்திரம் காணப்பட்டது. பூமியிலிருந்து 1000 அடி உயரத்திற் காணப்பட்ட போதிலும் அதன் வால் 100 கஜநீள மிருந்தது. வடகிழக்கி லிருந்து தென் மேற்காய்ச் சென்றது. அது மறைந்துபோன பிறகும் 10 வினாடி காலம் ஜோதி நிறைந்திருந்தது. தூமகேதுவின் சஞ்சாரம்போல் இவ்வெரி நட்சத்திரத்தின் தோற்றமிருந்தது.

---

B. A. பரீட்சையிற் றேர்ந்த ஓர் இந்திய ஸ்திரீ:—மிஸ் எலிஜபெத் லாழுவேல், B. A. பரீட்சைக்கு சரித்திரபாடம் எடுத்துக்கொண்டு அதில் முதல்வகுப்பில் தேர்ந்திருக்கிறார். அவர் மெட்ரிக்குலேஷன் பரீட்சையில் தேர்ந்த இரண்டாவது வருஷத்திலேயே F. A. பரீட்சையில் தேர்ந்துவிட்டார். அவர் திருவனந்தபுரம் மகாராஜா பெண்பாடசாலையில் வாசித்துவந்தார். மதுரையிலுள்ள தென் இந்திய தமிழ்ச் சங்கத்தார் அந்த ஸ்திரீயின் தமிழ்ப் பாண்டியத்தைக் கண்டு, அவருக்கு ஒருமெடல் சில வருஷங்களுக்கு முந்தி பரிசளித் திருக்கிறார்கள்.



---

மலையாளத்தில் ஸ்திரீகளுக்கும் குழந்தைகளுக்கும் ஆஸ்பத்திரி:—இந்த ஆஸ்பத்திரியில் சப் அஸிஸ்டண்ட் ஸர்ஜனை ஒருவர் இன்னும் வேலைபார்த்து வருகிறார். அவர் வேலையில் சமர்த்தர். நோயாளிகளிடம் மிகவும் பட்சமாக இருக்கிறார். இப்படி இருந்தும், அவ்வூரார் தங்கள் ஸ்திரீகளை ஆஸ்பத்திரிக்கு அனுப்பப் பின் வாங்குகிறார்கள். ஏழைகளும் கீழ்வகுப்பு ஸ்திரீகளும் மேற்சொன்ன ஆஸ்பத்திரிக்குப் போய்வருகிறார்கள். உயர்குல ஸ்திரீகள் ஆஸ்பத்திரிக்குப் போய்வர வேண்டுமானால், சீக்கிரத்தில் லேடி அப்பாத்திகிரி ஒருவரை நியமனஞ் செய்யவேண்டும்.

---

ஜர்மனி சக்கரவர்த்தினி:—வரப்போகிற செப்டம்பர் மாதத்தில் ஜர்மனி சக்ரவர்த்தினி அவர்கள் தம்முடைய ஒரே பெண்ணாகிய ப்ரின்ஸெஸ் விக்டோரியா லூயிஸுடன் இங்கிலாந்திற்கு வந்து சில வாரங்கள் அங்கு வசிப்பாரென்று சொல்லப்படுகிறது. அவருக்குக் கொஞ்ச காலமாய் தேக ஸ்திதி நன்றாய் இருக்கவில்லை. ஆகையால் டாக்டர்கள் இங்கிலாந்தின் தென் பாகத்தில் சிலகாலம் வசித்தல் அவருடைய தேக ஸ்திதிக்கு நன்மையைத் தருமென்று அபிப்பிராயப் படுகிறார்கள்.

---

ஜெனகம்மாள் வெகுமதி:—பொஹாம்பூர் அடிஷனல் டிப்டி கலெக்டர் மிஸ்டர் D. V. ஸ்ரீகண்டய்ய, இறந்துபோன தம்மனைவி ஜெனகம்மாவின் பேரால் 150-ரூபாய் மொத்தத் தொகையை சேவிங்ஸ் பாங்கியில் போட்டு அதிலிருந்துவரும் வட்டியைக்கொண்டு வாலாஜாபேட்டை கவர்ன்மெண்ட் பெண்ஸ்கூலில் உயர்ந்த வகுப்பில் படிக்கும் சிறந்த நடத்தையுள்ள இரண்டு சிறுமிகளுக்கு ஒன்று அல்லது இரண்டு வெகுமதிகளைக் கொடுப்பதற்கு உதவும்படியாய் ஏற்பாடு செய்திருக்கிறார். அதை சென்னைக் கவர்ன்மெண்டார் அங்கீகரித்து விட்டார்கள்.

---

5,000,000 பவுன் மதிப்புள்ள சமையற் பாத்திரங்கள்:—பர்ஷியா தேசத்திய மன்னரான ஷாவின்சமையல் அறையிலிருக்கும் பாத்திரங்களின் மதிப்பை அறிய நிபுணர்கள் கமிட்டிகூடி, 5000,000 பவுன் மதிப்பென்று திட்டம் போட்டிருக்கிறார்கள். பர்ஷியஷாவின் அரண்மனையைச் சேர்ந்த சமையல் பாத்திரங்களைப்போல அவ்வளவு விலைமதிக்கத் தக்கவைகள் எங்கும் இல்லை. ஸ்பெயின் தேசத்து அரண்மனையிலும் கூட இல்லையென்று சொல்லுகிறார்கள். பாத்திரங்களின் உட்புறம் முழுதும் கில்ட் கொடுக்கப்பட்டிருக்கின்றது. சாதாரணமாய் உபயோகப்படும் பாத்திரங்கள் வெள்ளியினால் செய்யப்பட்டவை. சில பாத்திரங்கள் தங்கமயமாக இருக்கின்றன. சாப்பாட்டின்போது உபயோகிக்கப் பட்டுவரும் கத்திகளின் பிடிகளில் நவரத்தினங்கள் இழைக்கப்பட்டிருக்கின்றன.

---

மிட்லண்டஸில் ராஜ தம்பதிகள்:—லண்டன், ஜுலை மாதம் 11-ந்தேதி ராஜ தம்பதிகள் யார்க்ஷயர் நிலக்கரி சுரங்கத்தையும் தொழிற் சாலைகளையும் பார்வையிடுவதை முடித்துவிட்டார்கள். பாக்கியாயிருந்த கொலோன்வாலி மில்களையும் அவர்கள் பார்வையிட்டார்கள். சுரங்கக் கூலிகள் அரசனும் அரசியும் வந்ததற்காகப் பல தீவர்த்திகளேந்தி ஊர்வலஞ் சென்றுவர வெண்டிவர்த்திஉள்ள பாண்டு வாத்தியக்காரர்கள் பாடினார்கள். பிறகு ஜார்ஜ் மன்னர் ஜனங்கள் மத்தியில் ஒரு பிரசங்கம் செய்து அதில் தாம் சுரங்கக் கூலிகளை வேலை செய்யும் போது நோக்கியதில் பெரிதும் திருப்தி யடைந்த தாகவும், அவர்களுடைய வீட்டிற்குச் சென்றதில் களிப்படைந்ததாகவும் டெனபிச் சுரங்கத்தில் உண்டான விபத்தால் தமக்கும் மகா ராணியாருக்கும் துக்கம் உண்டானதாகவும் சொன்னார்.

சிக்கந்தராபாத்தில் ஸ்திரீகளின் கூட்டம்:—இந்திய பார்ஸி ஆங்கில ஸ்திரீகளுள் பரஸ்பர பழக்கமும், சம்பாஷணையும், அபிப்பிராய மாற்றமும் விருத்தியாகும்படியாய் ஹைதராபாத்தில் ஓர் ஸொஸைடி ஏற்பட்டிருக்கின்றது. சென்ற ஜுன் மாதம் 2?-ந்தேதி வெள்ளிக்கிழமையன்று, அச்சங்கத்தைச் சேர்ந்த மெம்பர்கள் பலர் ஜெனனா ஸ்கூலில் கூட்டம்கூடி சந்தோஷமாய் காலங் கழித்தார்கள். மிஸ்ஸஸ் நந்தி விருந்து செய்வித்தார், அநேக பார்ஸி இந்திய ஸ்திரீகள் வந்திருந்தார்கள். வந்திருந்த ஆங்கில ஸ்திரீகளுள் மிஸ்ஸஸ் க்ளான்ஸி, மிஸ்ஸஸ் பெண்ட்லிஸ்பரி, ஸ்கூல் லேடிசூப்ரெண்ட் மிஸ் வில்டி, மிஸ் கார்ட்டர், மிஸ் பௌவெல் B A இவர்கள் முக்கியஸ்தர்கள் ஆவார்கள். இந்திய ஸ்திரீகள் தரித்து வந்த ஆடை ஆபரணங்களுக்கு ஆங்கில ஸ்திரீகளின் உடுப்புகளை ஒப்பிடுவதற்கில்லை. அச்சமயம் படிப்பதற்குச் சுலபமாயும், புத்திமதிகளைப் புகட்டக் கூடியதாயுமுள்ள ஜோரா என்ற புஸ்தகம் வாசிக்கப்பட்டது. தேத்தண்ணீர் பருகினபிறகு, ஸ்திரீகள் அனைவரும் அடுத்தாற்போல் இருந்த ஹாலுக்குச் சென்று அங்கு இந்திய ஸ்திரீகளால் நடத்தப்பட்ட பாட்டுக் கச்சேரியைக் கேட்டு ஆநந்த மடைந்தார்கள். அதன் பிறகு ஆங்கில ஸ்திரீயான மிஸ்ஸஸ் ஜான்சன் சில பாட்டுகளைப் பாடிச் சபையோருக்கு ஆநந்தம் உண்டாக்கினார்.

ஹைதராபாத்தில் பெண்கல்வி:—சென்னை ரேஞ்சு பெண்கள் பாடசாலைகளின் அஸிஸ்டண்ட் ஸ்கூல் இன்ஸ்பெக்டரெஸ் மிஸ்ஸெஸ் எங்கிளர் M. A., L. T, யை இரண்டுவருஷத்திற்கு ஹைதராபாத்து நிஜாம்ஸர்விஸுக்கு உதவியிருக்கிறார்கள். மிஸ்ஸெஸ் எங்கிளர் H. H. நிஜாம் ஜெனனா ஹைஸ்கூலுக்கு ஹெட் மிஸ்ட்ரஸ்ஸாக நியமனம் பெறுவார். மிஸ்ஸெஸ் எங்கிளர் ஹிந்துஸ்தானியிலும் பாஸ் செய்திருக்கிறபடியால் அந்த ஸ்தானத்திற்குத் தகுந்தவராவார். சென்னை ரேஞ்சில் அவர் இருந்துவந்த சொற்பக் காலத்திற்குள், உபாத்திமார்கள், வித்தியார்த்திகள் இவர்களுடைய அபிமானத்தைப் பெற்று விளங்கினார், இவர் ஜுலை மாதம் 31௳ யன்று சென்னையைவிட்டு ஹைதராபாத்துக்குப் பிரயாணஞ்செய்தார்,

பெண் பாடசாலைகளுக்கு ஸ்காலர்ஷிப்புகளைக் கொடுப்பதாக வித்யா இலாகா டைரெக்டர் உத்தேசித் திருக்கிறார். எலிமெண்டெரி, ஸெக்கெண்டெரி ஸ்கூல்களிலுள்ள நான்காவது ஸ்டாண்டர்டு மாணாக்கர்களுக்கு மாதம் ஒரு ரூபாய் பெறும்படியான 330 ஸ்காலர்ஷிப்புகள், (2) உயர்தர எலிமெண்டெரி ஸ்கூல்களில் ஐந்தாவது ஸ்டாண்டர்டு பிள்ளைகளுக்கு மாதம் 2 ரூபாய்



பெறும்படியான 100 ஸ்காலர்ஷிப்புகள், (3) உயர்தர எலிமெண்டெரி ஸ்கூல்களில் 6-வது ஸ்டாண்டர்டு பிள்ளைகளுக்கு மாதம் 3 ரூபாய் பெறும்படியான 65 ஸ்காலர்ஷிப்புகள், (5) செக்கெண்டெரி ஸ்கூல்களில் 1,2,3, இந்த பாரங்களில் வாசிக்கும் பிள்ளைகளுக்கு மாதம் ஒன்றுக்கு 3-ரூபாய் பெறும்படியான 60 ஸ்காலர்ஷிப்புகள், பெண் பாடசாலைகளைச் சேர்ந்த மூன்று இன்ஸ்பெக்டரஸ்கள் அவரவர்கள் ஸர்க்கில்களில் அந்த ஸ்காலர்ஷிப்புகளைக் கொடுக்கும்படியாக உத்தரவு பெற்றிருக்கிறார்கள். இந்த வருஷத்திற்கும் அடுத்த வருஷத்திற்குமாக மொத்தச்செலவு 10,000 ரூபாய்க்குமேல் போகாதபடி மேற்கூறிய ஸ்காலர்ஷிப்புகள் கொடுக்கப்படவேண்டுமாம்.

# * குழந்தைகள் விளையாட்டுப்பாட்டு.

## கிள்ளாப்பிரண்டி. 1.

கிள்ளாப்பிரண்டி, கீப்பிரண்டி, மாப்பிரண்டி, மல்லிகைப்பூவேங் கொப்பங் தலையிலே என்னபூச்சி?

### முருங்கப்பூச்சி.

முருங்கப்பூச்சித் தின்னவனே முன்னாழி எண்ணெய் குடிச்சவனே காக்காய் வாழைப்பழம் தின்னவனே.

### மாட்டேன்.

மாட்டேயென்னால் வல்லேயென்னால் வல்லெப்பந்தங் கைஎ்ய கொல்லையென்னால் தாரு தாரு வாழைக்காய் தாவரம் போல் கோபுரம் புதுப்பெரும்பான் மண்டபம் பூமிதேவி சீதாதேவி கைமடக்கு.

கை யெங்கே?
காக்காய் கொண்டுபோச்சு.

காக்கை யெங்கே?
மரத்துமேலே.

மரம் எங்கே?
வெட்டிப்போட்டான்.
வெட்டிப்போட்ட துண்டெங்கே?
அடுப்பெறித்துப்போட்டான்.
அடுப்பெறித்த சாம்பலெங்கே?
போரவா வரவா பல்தேச்சுப்போட்டா.
தேய்த்த தண்ணெங்கே?
பில்லு மூளைத்துப்போச்சு.
பில்லெங்கே?
ஆனையும் குதிரையும் தின்னுபோச்சு.
யானை எங்கே?
அரமனை வாசலிலே.
குதிரை யெங்கே?
கோட்டை வாசலிலே.
அதோ வாரது பார்!
கை வந்தது, கைவந்தது, கைவந்தது.

## கண்ணாமூச்சி. 2.

கண்ணாமூச்சி ரே ரே
காட்டுமூச்சி ரே ரே
மூட்டு மூச்சி ரே ரே

என்க்கொரு பழம் உனக்கொரு பழம் கொண்டுவா?

* [இவ்விதம் பல விளையாட்டுப் பாட்டுகளிருக்கின்றன. நேயர்கள் கூடுமான வரையில் இவைகளைச் சேகரித்து எழுதியனுப்பி நமக்கு உதவிபுரிவார்களென்று நம்புகிறோம். —ப-ர்.

1910

பல கண்காக்ஷிகளில் மெடல்கள் பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

## * பி. சுப்பராய், ஆயுர்வேத ஔஷதசாலை,

ஸ்ரீ வெங்கடேசபெருமாள் கோவில் சன்னதி, தஞ்சாவூர்.

தயவுசெய்து இதை தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.

6. **சுகந்த கூந்தல் தைலம்:**—இத்தைலத்தால் தலைமயிர், மீசை கண் இமை வெகு செழிப்பாகவும், நெருக்கமாகவும், கருப்பாகவும், வளரும். கண்களைக் குளிரச்செய்யும். சகல கண் நோய்களும், தலைநோய்களும் நீங்கும், செம்மட்டை மயிர் கருக்கும். மயிர் உதிராமல் காக்கும். கண்களுக்கு பிரகாசத்தை தரும். விலை புட்டி 1-க்கு அணா 8, வி. பி. சிலவு 1 அல்லது இரண்டு சீசாக்கள் வரையில் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

7. **நேத்திர பிந்து:**—கண்ணோய், கண் குற்றல், கூசல், நீர்வடிதல், மங்கல், அந்திமாலை, பீளைக்கட்டல், மாமிசம் வளர்ந் திருத்தல், பூவிழுந் திருத்தல், கண் சிவப்பு, எரிச்சல், கண் இமை, புருவம், இவைகளின் வலி, கண் புகைச்சல் இவைகளை குணப்படுத்தும். மாணாக்கர்களுக்கும், ஆழ்ந்த பார்வையோடு வேலை செய்பவர்களுக்கும் வெகு சிறந்த ஔஷதம். மருந்து உபயோகித்தால் கண்ணாடி போடவேண்டியது அனாவசியம். சீசா 1-க்கு விலை அணா 8, வி. பி. சிலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

8. **கர்ணபிந்து:**—காதில் சீழ்வடிதல், வலி, குத்தல், குடைச்சல், காதடைப்பு, இரைச்சல், செவிடு இவைகளை குணமாக்கும். செவி நன்றாய் கேட்கும், சீசா 1-க்கு விலை அணா 8, வி. பி. சிலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

9. **சர்வபடை சம்ஹாரன்:**—இடுப்பு, தொடையின் இடுக்கு முதலிய இடங்களில் உண்டாகி, ஓயாத நமச்சலைத் தந்து, வெகு சீக்கிரத்தில் மற்ற இடங்களில் படரும், மேகப்படை, சொரி, சிரங்கு, தடிப்புப்படை, தேமல் முதலியவைகளை அடியோடு குணப்படுத்தும். சீசா 1-க்கு விலை அணா 4, வி. பி. சிலவு 1 முதல் 12 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

10. **பேதி மாத்திரைகள்:**—வயிற்றில் வலி, ஆயாசமில்லாமல் சுகமாய் பேதியாகும். அஜீரணம், பித்த உபத்திரவங்கள், சகலவாயு, மலச்சிக்கல், அக்கினி மாந்தம், வாதம், கை, கால் முதலிய அவயவங்களின் குடைச்சல், வலி, சகல சுரங்கள் முதலியதுகளை சொஸ்தப் படுத்தும் சீசா 1-க்கு அணா 8, வி. பி. சிலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

11. **ஜ்வர சம்ஹாரி:**—தீராத நாள் பட்ட சகல சுரங்கள், குளிர் சுரம், முறை சுரம், வாத சுரம், பித்த சுரம், அஸ்தி சுரம், மாலை சுரம், மார்வலி, காமாலை, பிடரிவலி, இடுப்புவலி, விலாவலி, முழங்கால்வலி, உடம்பு வெளுப்பு, மயக்கம், தாகம், இருமுறை சுரம், நாலாமுறை சுரம் முதலிய சகல சுரங்களை, அடியோடு போக்கும். டப்பா 1-க்கு ரூபா 1, வி. பி, சிலவு அணா 5 பிரத்தியேகம்.

12. **உரோம சம்ஹாரி:**—இந்த சூரணத்தை மயிருள்ள இடத்தில் தடவினால் வெகு எளிதில் மயிர் நீங்கிவிடும். சீசா 1-க்கு அணா 4. ஒன்று முதல் 6-சீசாக்கள் வரையில் வி-பி. சிலவு அணா 5 பிரத்தியேகம்.

* என்னுடைய ஔஷதசாலையின் ஹெட் ஆபீசை பரங்கிப்பேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்திரமாக மாற்றிவிட்டபடியால், இனி எல்லா ஆர்டர்களும், இப்பக்கத்தின் தலையில் அச்சிட்டிருக்கும் எனது ஹெட் ஆபீசாகிய தஞ்சாவூர் விலாசத்திற்கே எழுதக் கோருகிறேன். பரங்கிப்பேட்டைக்கு எழுதவேண்டாம்.



Hon. Mr. P. S. Sivasawmi Iyer, C. S. I.


# மாதர் மனோரஞ்சனி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

| Vol. XIV. | Madras : September 1912. | No-9. |
| --- | --- | --- |
| புத்தகம் - ௧௪. | சென்னப்பட்டணம்: ஆகஸ்ட்மீ 1912. | இலக்கம் - 9. |


## சீதாகல்யாணம்.

*சீதாபிராட்டி தன் னுயிர்த்தோழியர்க்குக் கூறல்.*

"அம்பலத்தில் ஆடுகின்றார் பாங்கிமாரே..." என்ற மெட்டு.

79. மாமுனிவர் ஒருவரோடு சகிமாரே—ஒரு
மகபுருஷர் சென்றாரின்று சகிமாரே.
80. சுந்தரத்திண் டோட்குன்றத்தில் சகிமாரே—உயர்
சோர்விலாவில் தாங்கிச்சென்றார் சகிமாரே.
81. நீலவிருட் கூந்தலோடு சகிமாரே—திறல்
நீண்டகைகள் வீசிச்சென்றார் சகிமாரே.
82. முழுமதியே யாகுமன்னார் சகிமாரே—திரு
முகத்திலொரு முறுவலுற்றார் சகிமாரே.
83. ஒண்முகத்து முறுவலோடு சகிமாரே—என
துள்ளந்தன்னைக் கொள்ளைகொண்டார் சகிமாரே.
84. உள்ளந்தன்னைக் கொள்ளைகொண்டு சகிமாரே—என
துயிர்பதைக்க விட்டுச்சென்றார் சகிமாரே.
85. காரிகையர் கண்ணுழைந்து சகிமாரே—உளங்
கவருகின்ற கள்வனவர் சகிமாரே.
86. கணப்பொழுதில் சீதைக்கென்றும் சகிமாரே—உயிர்க்
காதலராய்க் கடுகிச்சென்றார் சகிமாரே.
87. புதியதொரு கிளர்ச்சிபொங்கி சகிமாரே—குடி
புக்கதென்னஞ் சத்தினுள்ளே சகிமாரே.
88. கிளர்ச்சியுறக் காரணராம் சகிமாரே—என்றன்
கேள்வனையே யான்மணப்பேன் சகிமாரே.
89. பொங்கியவென் னுள்ளத்தோடு சகிமாரே—எழில்
பூம்பொழிற்குப் போயினேன்யான் சகிமாரே.
90. பூம்பொழிலில் எவ்விடத்தும் சகிமாரே—ஒரு
புதியமணம் பரவிற்றின்று சகிமாரே.
91. நவீனமணப் புஷ்பம்வேண்டேன் சகிமாரே—என்றன்
நாதன்முகப் பூவிழைந்தேன் சகிமாரே.

92. தடாகத்துப் பங்கஜப்பூ சகிமாரே—அவர்
தனிமுகத்தை ஒத்திருக்கச் சகிமாரே.
93. புரந்தரிற் றாவிச்சென்று சகிமாரே—கையிற்
பற்றியிழுத் தேனப்பூவை சகிமாரே.
94. காதலால்யான் பற்றுபுஷ்பம் சகிமாரே—என்றன்
கையைவிட்ட கன்றோடிற்று சகிமாரே.
95. பக்கமுள்ள மென்குயிலும் சகிமாரே—என்னைப்
பரிகசிக்க நாணினேன்யான் சகிமாரே.
96. ஒருபறவை முன்புநாணி சகிமாரே—விரைந்
துங்களிடம் ஓடிவந்தேன் சகிமாரே.
97. ஓடுமென்னை வெருட்டித்தென்றல் சகிமாரே—நிறை
உவகையோடு தொடர்ந்தோடிற்று சகிமாரே.
98. எழுந்ததிங்கள் அப்போதென்முன் சகிமாரே—மகிழ்ந்
தென்னைநோக்கி நகைத்துநின்றான் சகிமாரே.
99. தேன்குயிலின் தீங்குரலும் வெண்ணிலாவும்—இளந்
தென்றலும்யான் வெறுத்ததென்னே சகிமாரே.

## சீதாபிராட்டி தனிமையிற் சிந்தித்தல்.

இராகம்:—சங்கராபரணம்-ஆதிதாளம்.

தூற்றுக்குடி - மு. சுப்பராயபிள்ளை இயற்றிய

"எப்போதா னிரங்குமோ" என்ற மெட்டு.

பல்லவி.

100. உற்றென்கண் கண்ட கண்ணை
ஓமாக்னி முன்—காண்—பே—னோ.

அநுபல்லவி.

உற்றென்கண் கண்டே என்றன்
உள்ளங்கொள் ளைகொண் டிட்ட
கொற்றவா—கொற்றவா—கொள்ளைகொண் டெங்-கொ-ளித்-தாய். (உற்றென்)

சரணங்கள்.

101. யாதொன்றும் அறிந்தி டாத பேதைப்பெண் சீ-தை-யுள்-ளம்
ஆதவன்காண் வெண்பூ வாக அலர்ந்திட்டா நந்-தம்-பொங்-க
காதலாற் கனியுந் தன்மை கணப்போதில் கற்பித் திட்ட
நாதனே—நாதனே—நங்கைநீத் தெங்-கொ-ளித்-தாய். (உற்றென்)
102. மன்னவர்க்கு மன்னன் றானோ மாமுனிவர் மைந்-தன்-றா-னோ
என்னனைய இளம்பெண் கட்கு இன்னலிழை மா-ரன்-றா-னோ
மின்னலென என்கண் புக்கு மெல்லுள்ளம் மே-விச்-சென்-றார்
அன்னங்காள்—அன்னங்காள்—அன்பன்யா ரென்-று-ரைப்-பீர். (உற்றென்)
103. பெண்ணாகப் பிறந்த சீதை பெட்புற்ற நா-தன்-றன்-னை
கண்ணாரக் கண்டே யுள்ளங் கலந்திட்டா நந்-திப்-பா-னோ
எண்ணாத எண்ண மெல்லாம் எண்ணித்தான் ஏங்கு-வா-னோ
கண்ணாளா—கண்ணாளா—கழறுன்றன் கா-த-லிக்-கு. (உற்றென்)

[இன்னும் வரும்.] ☞ சு. அ. சுப்பராயன்.



# கமலா.

### அங்கம்-2, களம்-2.

இடம்:—(பஞ்சாப் தேசத்தில் அரண்மனையில் ஒரு அறையில் கமலாவின் உருவப்படத்துடன் அருணேசன் வருகிறார்.)

அரசன்:—தனிமையாகச் சொல்லுகிறான். இரண்டு மூன்று தினங்களாக எவ்வளவோதரம் இப்படத்தை நான் பார்த்திருக்கிறேனே! அதை இன்னும் அடிக்கடி பார்த்தபோதிலும் நான் சலித்துப்போக மாட்டேன். த்ரிவிக்ரமனே செய்யச்சொல்லிய காரியத்தைச் செவ்வையாகச் செய்து முடித்தான். ஆம், அவளும் என்னை மணம்புரிய விரும்புகிறா ளென்றே தெரிகிறது. இதற்கு யாதொரு சந்தேகமில்லை; ஆனால் இன்னும் பாதிவேலை முடியவில்லையே! நான் எவ்விதம் அவளை அடைவேன்? நானோ அவளுடைய அருமையான தகப்பனுக்கு ஜன்ம சத்ரு. ஆகையால் அவன் தன்மகளை எனக்கு எவ்விதம் மணம் முடித்து வைப்பான்? பிரளயகாலம் வரும்வரையிலும் நம்மிருவருக்கும் விரோத மிருந்துகொண்டிருக்குமோ என்னமோ? நான் அவனுடன் யுத்தத்திற்குப் போனால் ஜயம் பெறுவது நிச்சயம், ஆனால் அவள் தகப்பன் தோல்வியடையும் பக்ஷத்தில் அதைக்கேள்வியுற்று எங்குமனமுருகுவாளோ? நாம் ஏன் இவ்விதம் மனப்பால் குடிக்கவேண்டும்? கமலா! என் ப்ரியே! என்முன் உள்ள உனது திவ்ய உருவத்தைப் பார்ப்பதால் உண்டாகும் உற்சாகத்தால் உன் தகப்பனாரை எதிர்த்து ஜயம் பெற்று உன்னை பிடித்துக்கொண்டு எனது இராஜ்யத்திற்குச் சென்று அங்கு உன்னை மணம்புரிவேன், யுத்தத்திற்குத் தகுந்த காரணம் வேண்டுமே? அது இன்னதென்று புலப்படவில்லை. (கதவுதிறந்த சப்தம் கேட்டது, பெருத்தமூச்சு விட்டுக்கொண்டு விகடகவி உள்ளே வந்தான்.)

அரசன்:—விகடகவியே! வாருங்கள். மலாவைப்பற்றி ஏதாவது நல்ல சமாச்சாரம் உங்களுக்குத் தெரியுமென்றே நினைக்கிறேன். ஏதாவதிருந்தால் சொல்லுங்கள்.

விகடகவி:—அதற்கென்ன குறைச்சல்! எனது பிரபுவே! நல்ல சமாச்சாரமிருக்கிறதுஉண்மையே! முதலில் மகாராஜாவே! அப்படத்தைக் கீழேபோட்டுவிடுங்கள். மேலும் கமலாவினிடத்திற்கு என்னை மறுபடியும் அனுப்புகிறதில்லையென்று சத்தியம் செய்யுங்கள்.

அரசன்:—என்னிடத்தில் மிக்க விசுவாசமுள்ள விகடகவியே! கமலா என்னை விரும்பவில்லையென்றா சொல்லுகிறீர்கள்?

விகடகவி:—பிரபுவே! நான் அப்படிச் சொல்லவரவில்லை. அவள் தங்களை விரும்பும் விஷயம் யாதொன்றும் எனக்குத் தெரியவே தெரியாது. நான் அந்தப் படத்தை எடுத்துக்கொண்டுபோய்க் கொடுத்தபொழுது அவள் நித்திரை செய்துகொண்டிருந்தாள். இந்துமுகி (அவள் தோழி) மந்திரியினிடத்தில் ஒரு பெட்டியைக் கொடுக்கும்படி என்னிடத்தில் சொல்லி அப்பெட்டியையும்

கொடுத்தாள். எனது பிரபு! நியாயமான தீர்ப்புவேண்டும். தனேந்திரன் என்னைப் பிடித்து சிறையில் அடைத்துவிட்டான். மேலும் அவனது சேவகர்கள் என்னைச் சோதனை செய்தார்கள்.

அரசன்:—என்ன! இவ்விதம் உளருகிறாயே! உனக்கு புத்தி சுவாதீனமில்லையா என்ன! இதோ மந்திரி வருகிறார். எல்லாம் விவரமாகத் தெரியும். (மந்திரி உள்ளே வருகிறார்.)

அரசன்:—த்ரிவிக்ரமா! இந்துமுகியினிடமிருந்து உமக்கு வந்திருக்கும் பெட்டி இதோ யிருக்கிறது. அதிலுள்ள சாமான்களைப் பாரும்.

மந்திரி:—(அதிலுள்ள சாமான்களை எடுத்து ஒவ்வொன்றையும் பரிசோதிக்கிறார்.) பிரபுவே! இதோ ஒரு கடித மிருக்கிறது. இதில் "அருணேசனிடத்தில் கமலா வைத்துள்ள பிரியம் அவள் சாகும்வரையி லிருக்கும்" என்று எழுதியிருக்கிறதைப் பாருங்கள்.

அரசன்:—நல்லது! நான் மிகுந்த களிப்படைந்தேன். விகடனைப்பார்த்து "உன்னைச் சேவகர்கள் சோதனை செய்தார்களென்று சொன்னாயே. இந்தப் பெட்டியை எவ்விதம் காப்பாற்றிக் கொண்டுவந்தாய்?" என்று கேட்டார்.

விகடன்:—தனேந்திரனுக்கும் எனக்கும் நடந்த விவரம் முழுவதையும் சொல்லுகிறேன் கேளுங்கள். என்னைச்சேவகர்கள்சோதனைசெய்து கனமுள்ள பையையும், டைரி புஸ்தகத்தையும் எடுத்து அரசனுக்குக் காண்பித்தார்கள். அரசன் பையை ஒற்றுப் பார்த்துவிட்டு அதில் விசேஷ மொன்றுமில்லையென்று எனக்கு அதைத் திருப்பிக் கொடுத்துவிட்டார். எனக்குப் படத்துடன் வெகுமதியாக இப் பெட்டி கிடைத்தது. தங்களுடைய தூதனைத்தான் இருக்கலாமென்று எண்ணி என்னைச் சிறையில் அடைத்து விட்டார்கள். அரசனுக்கு முன்பாக என்னை விசாரணை செய்தார்கள். (அப்பொழுது நான் வேடிக்கையாக இழுத்து இழுத்துப் பேசினேன். விகடமாகவும் பேசினேன். சேவகர்கள் என்னைக் கடிந்துகொண்டார்கள்.) டைரி புஸ்தகத்தைத் திருப்பித் திருப்பி ஒவ்வொரு பக்கத்திலும் நான் எழுதியுள்ளதைப் படித்து மந்திரிக்குக் காண்பித்தார். இதன்மேல் அவர் திருஷ்டி விழுந்தது. இதை வைத்துக்கொண்டு என்னை மறுவிசாரணை செய்யும் வரையில் சிறைச்சாலையிலிருக்கும்படி அனுப்பிவிட்டார். ஆனால் சேவகர்களுக்கு ஏராளமாக லஞ்சம் கொடுத்துத் தப்பித்துக்கொண்டுவந்தேன். ஒருசேவகன் காட்டிலுள்ள சுருக்கமான வழியைக் காண்பித்தான். மேலும் தன் உயிரிருக்கும் வரையில் என்னிடத்தில் ஊழியம் செய்வதாகவும் வாக்குறுதி கொடுத்தான். தப்பித்துக்கொண்டு இங்கு வந்துவிட்டேன். நீங்கள்தான் இதன் நியாயத்தைத் தீர்க்க வேண்டும் துரையே!

மந்திரி:—இந்த முக்யமான சமாச்சாரத்தைப்பற்றி இவ்விதம் நீ இழுத்து இழுத்துப் பேசலாமா? வார்த்தைகளையும் செவ்வையாய்ச் சொல்லவில்லையே!

விகடன்:—பயந்தவன்போ லிருக்கிறான்.



அரசன்:—த்ரிவிக்ரமா! நான் நிச்சயம் செய்தாயிற்று: தனேந்தரனை எதிர்க்கத்தக்க பிரயத்தனம் செய்யுங்கள். நமது விகடனைக் கஷ்டத்திற்குள்ளாக்கிய பழிக்குப் பழிவாங்கவேண்டிய தவசியமே.

மந்திரி:—பிரபுவே! ஆம். அவ்விதம் செய்யவேண்டியதுதான். (மந்திரி போகிறார்.)

அரசன்:—விகடா! பயப்படாதே! உன் உயிரைக் காப்பாற்றுபவன் நானன்றோ? உனக்காக அவனை எதிர்த்துச் சண்டை செய்கிறேன். இது என் காரியத்திற்கும் அநுகூலமாகும். வேறு இதர வேலைகளை நான் கவனிக்கப்போகிறதில்லை. (அரசன் உள்ளே போகிறார்.)

தாதா.

# சந்திரவதனன் ஓர் நாவல்.

என் இளமைப் பருவத்து என் பெற்றோர் இறந்துபோனார்கள் என்பதே நான் தெரிந்திருந்தது. தொட்டில் குழந்தையா யிருந்த என்னை ஒரு ஸ்திரீ முக்காடிட்டு நூறு ரூபாய் கொடுத்து என்னை வளர்க்கவேண்டி அடிக்கடி தான் வருவதாய்ச் சொல்லிப்போனாள்; திரும்ப அவள் வந்ததில்லையென்பதும் சொல்லிவந்தார்கள். ஆனால் மாதாமாதம் அனுப்புவோர் இன்னாரென்பது அறியப்படாது ரூபாய் பத்து கஜானாவிலிருந்து வந்துகொண்டிருந்ததாம். இரண்டு வருடங்களாய் அதுவும் நின்றுபோயிற்று. கஜானாக்காரர்களைக் கேட்டாலும் தலைநகர் கஜானாவிலிருந்து தங்களுக்கு மாத்தப்படுவதாயும், தங்கட்கு வேறொன்றும் தெரியாதென்றும் சொல்லிவிட்டார்களாம். இரண்டு வருடங்களாய் ஏழையாகி அவர்கள் என்னைப் போஷித்து வந்தார்கள். அவர் இருபது பிள்ளைகளுக்கு உபாத்தியாயிருந்து அதின் ஊதியத்தைக்கொண்டு தம்பதிகளிருவரும் காலம் கடத்தியதுடன் என்னையும் போஷித்து வந்தார்கள். ஆறுமாதங்கட் கொருதரம் விடுமுறைகாலத்து எல்லாப் பிள்ளைகளும் தங்கள் பெற்றோர் இருக்குமிடம் போவார்கள். போக்கிடமின்றிய நான் அவர்கள் பிரயாண உற்சாகத்தையும், தங்களூரில் அவர்க ளனுபவிக்கப்போவதாய்ச் சொல்லும் சிறப்புகளையும், கேட்டு என் அநாதித்தன்மையை நினைத்து வயிறுமுதல் சிரசுவரை ஓர்வித எரிவுகாணும்; என் நெஞ்சு விம்மும்; கண்ணீர் தாரைதாரையா யோடும்; எல்லோரையு மனுப்பிவிட்டு அப் பள்ளிக்கூடத்தில் வேலைசெய்த பத்து வயதுள்ள ஓர் பெண் என்னிடம் வந்து எனக்காறுதல் சொல்லுவாள். என் எண்ணங்களையும், வருத்தத்தையும் படிப்போரே யூகித்துக்கொள்வது நலம்.

ஓர் விடுமுறை காலத்துத் திடீரென் என்னை வளர்த்த உபாத்தியாயர் இறந்தார். அவர் மனைவி பள்ளிக்கூடத்தை காலிசெய்து, தலைநகரத்துள்ள தன் சகோதரியிடம்போகத் தயாரானாள். அச்சமையம் அவளழைத்தனுப்ப ஓர் கொழுத்த பயங்கரரூபமான மனிதன் வந்தான். அவனைக் கண்டதும் அவ்வம்மை குரூரா! இப்பையனை உன்வசம் வைத்து, இவனை ஏதேனும் வேலை பார்த்து சீவனம் செய்யும்படி செய்தல் வேண்டுமென்றாள். இவ்வார்த்தை என் நெஞ்சைப் பிளந்தது. திடீரென அவள் காலில் விழுந்து, அவ்விடம் வேலையைச் செய்வதாயும், அவளுடனிருந்து என் சீவ

கொண்டு பக்கத்திலிருந்த ஓர் பிரம்பை யெடுத்து மாறிமாறி வீசினான். நான் கூக்குரலிட்டேன். "மடையா? இது பழிகாரத்தெரு. "இங்கு உன்னைக் கொலை செய்யினும் பிறருதவி செய்யார்" என்று நான் களைக்கும்வரை புடைத்தான்.

"இனி நான் சொல்வதைஆலசியம்செய்யாதே" யென்றுசொல்லிக்கொண்டு, உட்கார்ந்தான். அன்று அவனிட்ட வேலைகளைப்பயத்துடன் செய்தேன். மறுநாள் காலமே யென்னை வீட்டின் வெளியே அழைத்து வந்து, "ஓடுகாலி நாயே, என் பின்வா? நீ, தீனசாலையிலிருந்து ஓடியதுபோலோடுவையானால் உன்னைப் போலீஸ்காரர்களிட மொப்புவித்து மறுபடியும் தீனசாலை போகும்படி செய்வே" னென்றான். இவ்வார்த்தை என்னை நடுங்கச் செய்ததால், மவுனமா யவன் பின்னே போனேன். ஊருக்குப் புறம்பே ஓர் அழகிய மாளிகை அவ்வாயிற்படியிற் சென்று, கப்பலுடைந்து தந்தையாகிய அவனும், அவன் மூத்தமகனாகிய நானும், கரையிலொதுக்கப்பட்டதாய்ச் சொல்லிக்கொண்டிருந்தான். அச்சமையம் குதிரைமேல் சவாரி வந்த ஐம்பதுவயதுள்ள அவ்வீட்டுத் தலைவர் குதிரையை நிறுத்தி, என்னை நோக்கி "யார்?" என்றனர். அதற்குள் குரும்பன் தன் பொய்மொழிகளைக் கூறினான். அவர் சந்தேகித்து, "சிறுவனே! இவனுன் தகப்பனல்லன், உண்மையைக் கூறு" என்றார். என் கண்களில் நீர் பெருகியது. நாத்தடுமாற, "ஐயா, இவனை முந்தாநாளிரவுதான் நான் கண்டேன்" என்றேன். அவர் குரும்பனை நோக்கி நானிப்பக்கத்துக் குற்றவிசாரணைத் தலைவனென்பது நீதெரிந்திருப்பாய், (ஒரு ரூபாயையெறிந்து) இது நீ அப்பையனுக்காகச் செய்த உதவிக்காகும், நட" என அதட்டினர். குரும்பன் பதிற்பேசாது பற்கடித்த முகத்துடன் என்னைப்பார்த்துச் சென்றான்.

## சுகுண துரை மாளிகை.

ஏறத்தாழ இருபது ஏக்கர் விசாலம். மாளிகை நாலு ஏக்கர் விஸ்தீரணமும், அதற்குள்ள பருமனுமுள்ளது. முன்புறம் மூன்று ஏக்கர்; சுற்றுமதில்களின் ஓரங்களில் சீதளந்தரும் பல பெரிய விருட்சங்களும், சுகந்த வாசனை தரும் புட்பச்செடிகளும் இருந்தன. பின்புறம் பலந்தரும் பலவிருட்சங்களும், ஆங்காங்கே ஒழுங்காக ஒதுக்கப்பட்ட பாறைகளில், கோடைகாலங்களில்வெயிற் றோன்றாது தென்றல் விரும்பிக் களையாறும், மேடைகளும், பலகைகளும், நாற்காலிகளும், வைக்கப்பட்டிருந்தன. சுகுண துரைக்கு இரண்டே பெண்மக்கள். மூத்தகுமாரத்திக்கு வயது முப்பது; இளைய பெண்ணிற்கு வயது பதின்மூன்று; மூத்தமகளைத் தேவநகர் சக்கரவர்த்தியின் மந்திரிகளில் வியாபகமுடைய ஒருவரின் சகோதரர்க்கு மணம்புரிவித் திருந்தனர். இளைய பெண்ணிற்கு வதுவை நிகழாமையால், வீட்டில் தந்தைக் குதவியா யிருந்தனள். இளைய பெண்ணைக் கருவீன்ற விடத்தே அவர் மனைவி உயிர் துறந்தனள். பெண்களின் சுகத்தைக் கருதியும், மனைவியின்மீதுள்ள அன்பின் பெருக்காலும், மறுமணம் வேண்டாதிருந்தனர். இம்மாளிகை யெங்கும் விசேஷ அலங்காரங்களாலும் போதிய சிப்பந்திகளாலும் சிறப்புற்றிருந்தது.

இதினுள் ஓர் விசாலமான கூடம். நாற்புறத்தும் பெரிய நிலைக்கண்ணாடிகளும், சுவற்றிலும் விரும்பத்தக்க படங்களும், தொங்கவிடப்பட்டு மத்தியில் ஓர் வட்டமேஜையும், அதனைச்சுற்றிலும் நாற்காலிகளும்போடப்பட்டிருந்தன. இதில் ஓர் நாற்காலியில் சுகுணதுரை சமாசாரப் பத்திரிகை வாசித்திருக்க, எதிர்புறம் நாற்காலியில் சாந்தகுணமும் அழகிய முகமும் விளங்க ஓர் பெண்மணி வீற்றிருந்தாள். அவள் தன் கையிலேதோ புத்தகம் படித்துக்கொண்



சிலர் [illegible]ணைத்திப்பூச்சி, தும்பி முதலியவைகளைப்போல் செய்துவிடுவார்கள். இவைகளுக்கு சிவப்பு, மஞ்சள், பச்சை, நீலம் முதலிய வர்ணமிட்டு அழகாகச் செய்வார்கள்.

குழந்தைகளல்லவா நமது தேசத்தில் காத்தாடிகளை விடுவார்கள். ஜப்பானில் கிழவனோ, வாலிபனோ, சிறுபிள்ளையோ காத்தாடிகளை விடலாம்.

சென்னையில் மாஞ்சாவென்று கண்ணாடியைத் தூள்செய்து பிசினுடன் கலந்து நூலில் தடவி விடுவதைப் பார்த்திருக்கிறீர்களல்லவா? மேலும் ஒருவன் இன்னொருவன் விடும் காத்தாடி பறந்துகொண்டிருக்கும் பொழுது அதைத் தன் காத்தாடியால் அறுக்க முயலுவதையும் பார்த்திருக்கிறீர்களல்லவா? அவர்கள் நூலில் ஒரு கண்ணாடித் துண்டைக் கட்டியாவது அல்லது கண்ணாடித் தூள் சேர்ந்த பிசினுடன் நூலில் கலந்த காத்தாடி விடுவார்கள். ஒருவன் காத்தாடி ஆகாயத்தில் பறக்கும்பொழுது மற்றொருவன் தன் காத்தாடியால் அதை அறுத்துவிடுவான். அப்பொழுது அவன் சந்தோஷத்துடன் சிரிப்பான்.

ஜப்பான் தேசத்துப் பிள்ளைகளுக்கு வருஷத்தில் விசேஷ கொண்டாட்ட நாள் "கொடிவிருந்தாம்." அதாவது அந்த நாள் ஒவ்வொரு வீட்டிலும் கடிதாசியால் ஒரு பெரிய மீனும் அதில் ஒரு பையன் வசிப்பதுபோலும் செய்து மேலே கட்டி தொங்கி ஆடும்படி செயவார்கள். ஷாப்புகளில் சோல்ஜர் பொம்மைகள் அதிகமாக விலைக்கு அன்று கிடைக்குமாம்.

பிள்ளைகளை தைரியமாயிருக்க போதித்து வருகிறார்கள். தங்கள் ஜன்மதேசத்தை விரும்பும்படியும், அதற்காக உயிரைக் கூட கொடுக்க தயாராயிருக்கவும் பெற்றோர்கள் போதித்து வருகிறார்கள். பிள்ளைகளும் சாமர்த்ய சாலிகள். நல்லவர்களா யிருக்கவும் ஜாக்கிரதையுள்ள வேலைக்காரர்களா யிருக்கவும் கற்றுக்கொள்ளுகிறார்கள்.

பெண்களுக்கு விசேஷ சந்தோஷமான நாள் "பொம்மை விருந்து" நாள்தான். அன்றையதினம் பெண்கள் தங்களைப்போன்ற சிறுபெண்களை வரவழைத்து அவர்களுக்கு விருந்து செய்வார்கள். விருந்துக்காக வரும் ஒவ்வொரு பெண்ணும் ஒரு பொம்மையை எடுத்து வருவாள். இந்த விருந்து கூட்டத்தில் அப்பொழுது பலவித பொம்மைகளைக் காணலாம். பெரிய பொம்மைகளிருக்கும், குழந்தையைப்போன்ற பொம்மைகளிருக்கும், நமது தேசத்தில் பெண்கள் பொம்மைக்குக் கலியாணம் செய்வதைப் பார்த்திருக்கிறீர்களல்லவா? அம்மாதிரியே அவர்களும் கலியாணம் செய்யாவிட்டாலும் வாஸ்துவமாக சமையல்செய்து பொம்மைகளை நாற்காலிகளில் உட்காரவைத்து விருந்து உண்பார்கள்.

ஜப்பானியர்கள் தங்கள் வீடுகளையும் உடுப்புகளையும் சுத்தமாய் வைத்துக்கொள்வார்கள். ஸ்நானம் செய்வதில் அவர்களுக்கு பிரியம். அதுவும் மிகச் சுடுகிற வென்னீராயிருந்தால் போதும் அவர்களுக்கு மிகுந்த ஆநந்தம்.

பத்திராதிபர்.

# சமாசாரக்குறிப்பு.

பம்பாயில் இயந்திர சாலைகள்:—பம்பாய் ராஜதானியில் 1910-ம் வருஷத்தில் 577 இயந்திர சாலைகள் இருந்தன. 1911-ம் வருஷத்தில் அதைவிட 26 சாலைகள் அதிகம் ஏற்பட்டிருக்கின்றன. அந்தச் சாலைகளில் 1910-ம் வருஷம் 1628 விபத்துகள் நேர்ந்தன; 1911-ம் வருஷம் 1499 விபத்துக்களாகக் குறைந்திருக்கின்றன.

அமெரிக்கா தேசத்திலுள்ள லோஸ் என்ஜிலிஸ் என்னும் பட்டணத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சர்வகலாசாலையில் பெண்கள் மணம்செய்து கொள்ளவேண்டிய முறையும் குடித்தனம் செய்துகொள்ள வேண்டியமுறையும், குடித்தனம் செய்வது, குழந்தைகளைக் காப்பாற்றுவது முதலியவற்றையும் பற்றி கற்பிக்கப்படுகின்றன.

இந்திய லேடி டாக்டர்:—மிஸ் ஸென் என்கிற வங்காள நாட்டுஸ்திரீ கிளாஸ்கோவைச் சேர்ந்த ஸர்ஜன்கள் வயித்தியர்களின் சங்கத்தில் ஒரு மெம்பர் (Fellow) ஸ்தானத்தை அடைந்ததைக் கேட்டுச் சந்தோஷப்படுகிறோம். இவ்வித மெம்பர் ஸ்தானத்தை அடைந்த இந்த ஸ்திரீயே முதல்வராவார். அந்த ஸ்திரீயின் வழியை பலர் பின்பற்றுவார்கள் என்று நம்புகிறோம்.

மின்சார சக்தியால் மீன்களைக் கொன்றது:—அமெரிக்காவில் ஓரிடத்தில் மின்சாரசக்தி உண்டாக்கும் ஒரு பெரிய யந்திரசாலைக் கருகில் ஒரு குள மிருந்தது. அந்த மின்சார சாலையிலிருந்து ஒரு கம்பிவழியால் மின்சாரசக்தியை அந்த குளத்துக்குள்ளே விடவே அதிலிருந்த மீன்களெல்லாம் மின்சாரசக்தி வேகத்தால் அடிபட்டு இறந்து போயின. இவ்விதமாய்ப் பரீக்ஷைசெய்து பார்த்த ஐந்துபேர்களும் அபராத தண்டனை விதிக்கப்பட்டார்களாம்.

மைசூரில் விவசாய ஸ்கூல்கள் ஸ்தாபிக்க வேண்டியது அவசியமென்று 25,000 ரூபாய் எடுத்துவைத்து சிறந்த கட்டடம் கட்டி விவசாயப் பள்ளிக் கூடங்கள் ஸ்தாபிக்கப்பட வேண்டியது அவசியமென்று மைசூர் கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டு விட்டார்கள். அவ்வித ஸ்கூல்களை ஸ்தாபனம் செய்து அவைகளைச் சரிவர நடத்தி மேல்விசாரணை பார்த்து வரும்படி அந்த சமஸ்தானத்து விவசாய இலாக்காத் தலைவரைக் கவர்ன்மெண்டார் கேட்டுக்கொண் டிருக்கிறார்கள். இப்பள்ளிக் கூடங்களில் மிருக வைத்திய சாஸ்திரத்தையும் கற்பிப்பார்கள்.

“ஓர் சிறந்த குணவானுக் குரிய லக்ஷணங்கள் தந்நல மறுப்பும், விடா முயற்சியும், நாணயமுமேயாம். நம்மில் பலர் இக்குணங்கள் வாய்ந்தவர்களா யிருந்தாலும் இவை பொது நன்மைக்குற்ற வழியில் செலுத்தப் படுவதில்லையென்று விசனிக்கிறோம். நம்மில் ஸ்தலயாத்திரை செய்பவர்களென்ன, யோகாப்பியாசம் செய்து சமாதி நிலையில் நிற்பவரென்ன, பிரம்ம வித்தையை நாடி (Theosophy) கண்ணுக்குப் புலப்படாத ரிஷிகளைக் கனவில்கண்டும் பேசியுமிருக்கும் மஹான்களென்ன, மெய்ம்மறந்து பஜனை செய்பவரென்ன யாவரும் இவ்வுலகத்தின் சுகங்களை நாடாது மறு உலகத்தை எதிர்பார்த்திருக்கிறார்கள். யோகியோ ஜன சமூகத்தைவிட்டுப் பிராணாயாமங்கள் செய்து தன் ஆத்மாவைக் காப்பாற்றிக்கொள்ள முயலுகிறான். கஞ்சிக்காகப் பறக்கும் பொது ஜனங்களுக்கு இவர்களாலென்ன நன்மை ஏற்படுகிறது?”



சென்னையில் கூடப்போகிற சுகாதாரக் கான்பிரென்ஸ்:—சென்னையில் சமீபத்தில் கூடப்போகிற சுகாதாரக் கான்பரென்சுக்கு ஐக்கிய மாகாணங்களின் உத்தியோகப் பற்றில்லாத பிரதிநிதியாய் ஆனரெபில் பாபு கங்கபிரசாத் வர்மா தெரிந்தெடுக்கப்படக் கூடுமென்று காண்கிறது. அவர் ஏற்கெனவே லக்னெளவின் சுகாதாரச் சங்கத்தில் ஒரு மெம்பரா யிருக்கிறாராம். அவர் சென்னையில் கூடப்போகிற எல்லா இந்தியச் சுகாதாரக் கான்பரென்ஸுக்கு ஐக்கிய மாகாணங்களின் பிரதிநிதியாய்த் தெரிந்தெடுக்கப்படுவது விரும்பத் தக்கதேயாகும். அவர் லக்னெள முனிசிபல் கமிஷனராயும் வைஸ்சேர்மனாயும் சென்ற 25 வருஷகாலமாயிருந்து வந்திருப்பதில், அந்த நகர்ச்சுகாதார விருத்திக்காக வெகுவேலை செய்திருக்கிறார்.

சூரியவெப்பத்தால் ஓடும் நீராவி எஞ்ஜின்:—அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களிலுள்ள பிலடெல்பியா நகரத்துக்குப் பக்கத்தில் சூரிய சக்தி கம்பெனி என்ற பெருடைய கம்பெனியாரால் ஒரு நீராவி எஞ்ஜின் செய்யப்பட்டிருக்கிறது. அதன் வேகம் 20-குதிரை ஓட்டம். பார்ப்பதற்குச் சாதாரண ரெயில் எஞ்ஜினைப்போலவே இருக்கும். ஆனால் அதில் நீராவி உண்டாக்குவதற்கு நிலக்கரி விறகு முதலியவை போட்டு எரிக்க வேண்டியதில்லை. சூரிய வெப்பத்தால் ஜலத்தைக்காய்ச்சி ஆவி உண்டாக்கப்படுகிறது. சூரிய வெப்பத்தால் ஜலத்தைக் காய்ச்சுகிற இடத்தில் சிறுபாத்திரங்கள் வரிசையாய் அடுக்கி யிருக்கின்றன. அந்த சிறிய பாத்திரமானது உலோகத்தால் செய்யப்பட்டு சதுரமாய் நீண்டிருக்கும். அதற்குள்ளே ஜலம் நிரப்பியிருக்கும். அந்த பாத்திரம் கண்ணாடியால் மூடப்பட்டு இருபுறத்திலும் நிலக்கண்ணாடிகள் வைத்து சூரிய வெளிச்சம் அந்த பாத்திரத்திலுள்ள ஜலத்தின்மேல் அதிகமாய்ப் பிரதிபலிக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதனால் ஜலத்தில் சூடுண்டாகிறது. அந்தப் பாத்திரத்திலுள்ள சூடு வெளியே போகாதபடி அதற்கு அடியில் காகித அட்டையும், (புட்டிகளின் வாயில் அடைக்கும்) கார்க்கு பட்டையும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இம்மாதிரியான பாத்திரங்கள் அநேகம் வரிசையாய் வைக்கப்படுகின்றன. சூரிய கிரணங்கள் அவைகளின்மேல் நேராக வந்து படும்படி அவைகளைத் தூக்கியும் இறக்கியும் வைக்கும்படி யந்திரம் அமைக்கப்பட்டிருக்கிறது. சூரிய கிரணங்கள் நேராக அடிக்கும்படி அந்தப் பாத்திரங்களை ஒரு தடவை கணக்காய்ப்பார்த்து அமைத்துவிட்டால் பிறகு மூன்று வாரங்களுக்கு மாற்ற வேண்டியதில்லை சூரியதிசை மாறிக்கொண்டு வருவதால் 20-நாள்களுக்கு ஒருதரம் மாற்றி வைத்தால்தான் கிரணங்கள் நேராக வந்து விழும்.

ஆப்பிரிக்காவில் கிடைக்கும் ஓர்வகைப்பட்டு:—ஆப்பிரிக்காவில் இப்போது ஒரு புது மாதிரியான பட்டு கிடைக்கிறது. அது அவ்வளவு நாகரீகமான பட்டல்ல. வெகு காலத்தில் இப்போது கிடைக்கும் டாஸாஸில்க் என்றும் பட்டைப்போன்றது. அது முரட்டுப் பட்டுத் துணிகளுக்கு உபயோகிக்கப் படுகிறது. ஆப்பிரிக்காப் பட்டானது உரோமமுடைய மகமல் செய்வதற்கும் டாஸாஸில்க்குக்குப் பதிலாகவும் ஐரோப்பாவில் அதிகமாய் உபயோகிக்கப்படுகிறது. பட்டுப்பூச்சிகள் கூட்டங் கூட்டமாய்க் கூடிக்கொண்டு பழுப்பு நிறமுள்ள கூடு கட்டுகின்றன. அதற்குள்ளே முட்டைகளிலிருந்து வெடித்த புழுக்கள் புகுந்து கொள்ளுகின்றன. இந்த சிறு புழுக்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சிறுகூட்டை அந்தப் பெரிய கூட்டுக்குள்ளே கட்டிக் கொள்ளுகின்றன. அந்தப்பெரிய கூடு சிலவேளை ஒரு மனிதன் தலை அவ்வளவு பெரிதாயிருக்கும். அதற்குள் நூறு சிறு கூடுகளிருக்கும். சில கூடுகள் கோழிமுட்டை யவ்வளவு இருக்கும், அதற்குள் சுமார் 10-சிறு கூடுகளிருக்கும். இந்தப்பட்டுக் கூடுகளிலுள்ள பட்டு ஒன்றாய் ஒட்டிக்கொள்வதால் பட்டு இழைகளைப் பிரித்தெடுப்பது கொஞ்சம் கஷ்டம். ஆப்பிரிக்காவில் இந்தப் பட்டுப் பூச்சிகளைக் காப்பாற்றுவதற்கு பட்டுச் சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதனால் பட்டு வியாபாரம் அதிகமாய் விருத்தியடையுமென்று எண்ணப்படுகிறது. ஆனால் சில வியாபாரிகள் மிகுந்த பேராசை கொண்டவர்களாய் ஆப்பிரிக்காவுக்குவந்து பட்டுக்கூடுகளைக் கண்டபடி எடுக்கவும் பட்டுப்பூச்சிகளை வெளித்தேசங்களுக்கு ஏற்றுமதி செய்துவிடவும் கூடுமாகையால் அப்படிச் செய்யாதபடி தடுக்கத்தக்க ஏற்பாடு செய்யவேண்டும். மேலும், இதர துஷ்டப் புழுக்கள் பட்டுப் பூச்சிகளை அழித்துவிடாதபடியும் காத்துக் கொள்ளவேண்டும்.

ஸ்கூல் கட்டடங்களின் மீது இங்கிலிஷ் கொடிகள்:—ஸ்கூல் கட்டடங்களின் மீது (Union Jack) பறக்கவிட வேண்டுமென்று சென்னைக் கவர்ன்மெண்டார் கல்வி இலாகாவில் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்.


மரமும் காகிதமும்:—மரத்துக்கும் காகிதத்திற்கும் என்ன சம்பந்தமென்று நாம் நினைக்கவேண்டாம். ஆஸ்திரியாவிலே மரத்தைக் காகிதமாக மாற்றுகிற பட்டாண்டை ஒன்றுஉண்டு. அதிலே அறுப்புண்டுவிடுகிற மரங்களை 145நிமிஷத்திலே யந்திரத்தால் பக்குவப்படுத்திக் காகிதமாக்கிப் பத்திரிகைகள் அச்சிடப்பட்டு முடிகின்றன. இனி மரங்களைப் பட்டாடைகளாகவும் மாற்ற உத்தேசிக்கிறார்களாம்.

ஆசாரத்திருத்தக் கான்பிரன்ஸ்:—காப்டன் ராயினுடைய சர்லாரம், "இந்தியாவில் புருஷர்மட்டும் கல்விகற்றுத் தேசநன்மையைக் கவனித்து வருவதும், ஸ்திரீகள் அறியாதவர்களா யிருப்பதும், ஒரே வண்டியில் பலமும் புலியினமுமான எருதுகளைப் பூட்டி ஓட்டுவதுபோலாகுமென்றார். தேசத்தின் க்ஷேமமானது இருவகுப்பாரும் சேர்ந்து நடத்தினால் மட்டும் பூரணமாய் நிறைவேறும், அதற்கு ஸ்திரீகளும் புருஷர்களைப்போல் படித்தவர்களாயிருக்கவேண்டும், எத்தேசத்திலும் படிப்பு ஜாதியவழியிற் செல்லவேண்டும், ஜாதித் தலைவராலேயே நடத்தப்படவேண்டும், அப்போதுதான் சிறுவர்களுக்குச் சரியான படிப்புக்கிடைக்குமென்று" சொன்னார்.

சக்கிரவர்த்தி தம்பதிகளின் ஞாபகச்சின்னம்:—பூனாவிலிருந்து பம்பாய்க்கு ஸர் ஜார்ஜ் கிளார்க்கு விசேஷ வேலையின்மேல் போயிருந்த சென்ற 17-ந்தேதி அன்று சித்திரக்கலாசாலையில் செய்துவைத்திருக்கும் மாதிரிக் கதவுகள் அவருக்குக் காட்டப்பட்டன. இவைகள் வெகு விஸ்தாரமான சித்திரவேலையை உடையனவாய் வெகு அழகாயிருக்கும்படி. மிஸ்டர் ஜி. விட்டெட் என்பவரால் பிளான் போடப்பட்டபடி செய்யப்பட்டவை. சென்ற வருஷத்தில் சக்கரவர்த்தியும் சக்கரவர்த்தினியும் பம்பாயில் வந்திறங்கினதற்கு ஞாபகக்குறியாக மேற்படி மாதிரிக் கதவுகள் போன்ற கதவுகள் செய்யப்பட்டு பம்பாய் அப்பாலோ பந்தரில் வைக்கப்படும்.

எழும்பூர் பெண்கள் போதனாமுறை பாடசாலை:—எழும்பூர் பெண்கள் போதனாமுறை பாடசாலையை (Presidency Training School for Mistresses) யொட்டி பிராமணக்கைம் பெண்களுக்கு ஒரு ஹாஸ்டல் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்று இச்சென்னை மாகாண வித்தியாதிகாரி சிபார்சு செய்திருந்தபடி கவர்ன்மெண்டார் இந்த மாதம் 1-ந்தேதி முதல் ஒரு ஹாஸ்டலின் ஸ்தாபனத்தைச் சாங்கிஷன் செய்திருக்கிறார்கள். அந்த ஹாஸ்டல் ஸ்தாபிக்கப்படுவது காரணமாக பிராமண ஜாதியல்லாத பெண்களின் படிப்பு சௌகரியங்களுக்கு யாதொருகுந்தகமும் வரக்கூடாதென்று கவர்ன்மெண்டார் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். அந்த ஹாஸ்டல் இந்த மாதம் 1-ந்தேதி முதற்கொண்டே ஸ்தாபிக்கப்பட்டிருக்க வேண்டும்.

கண்களில் எழுத்துகள்:—இரண்டு வயதுள்ள ஒரு ஆண் குழந்தையின் கண்கள் கிரமமா யிருந்ததாக அமெரிக்காவிலுள்ள வைத்தியர்கள் இப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள். கால் அங்குல உயரமுள்ள இரண்டு எழுத்துகள் இரண்டு கண்களில் இருப்பதாகக் கண்டார்கள். அக் குழந்தையின்



ஹாரேள–கோ.

**ஜப்பான் சக்ரவர்த்தினி.**

With the kind courtesy of Messrs. G. A. Natesan & Co., Madras.

# மாதர் மனோரஞ்சனி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.


Vol. XIV. | Madras: October 1912. | No. 10.

புத்தகம் - கச. | சென்னப்பட்டணம்: அக்டோபர்மீ 1912. | இலக்கம்-10.


## மஹிலாமண்டலம்.

கோட்டா மகாராஜா அவர்கள் ஸ்திரீகளுக்காக டெல்லியில் ஸ்தாபிக்கப் போகும் மெடிகல் காலேஜுக்கு லக்ஷம் ரூபாய் கொடுத்திருக்கிறார். டெல்லி டர்பார் ஆனவுடன் சக்ரவர்த்தியும், சக்ரவர்த்தினியும் இவரது நாட்டிற்கு வந்துபோனதற்கு ஞாபகார்த்தமாக இவ்விதம் செய்தாராம். இந்திய மாதர்களுக்கு இவ்வித காலேஜ் ஒன்று அவசியம் வேண்டியதே. ஏனெனில் உயர்ந்த வகுப்பைச் சேர்ந்த ஸ்திரீகள் புருஷர்கள் படிக்கும் காலேஜியில் படிக்க முன் வருவதில்லை. இதற்காகவே இந்தியா கவர்ண்மெண்டார் இந்த பணத்தை அதற்கு உபயோகிக்கவும், இன்னும் இந்தியாவிலுள்ள மன்னர்களிடமிருந்து பணம் வசூல் செய்யவும் தீர்மானம் செய்திருக்கிறார்கள். சுமார் ரூபா 15 லக்ஷம் தேவையாம். சில மன்னர்கள் $7\frac{1}{2}$ லக்ஷம் ரூபா கொடுப்பதாக வாக்களித் திருக்கிறார்களாம். தென் இந்தியாவிலுள்ள மன்னர்களும் இப் பேருபகாரமான காரியத்திற்குத் திரவிய உதவிசெய்ய முன் வருவார்களென்று நம்புகிறோம்.

சென்னை சரஸ்வதி பாலிகா பாடசாலைப் பெண்மணிகளுக்குப் பரிசளிக்கும் கூட்டம் பச்சையப்பன் மண்டபத்தில் கூடிற்று அச்சமயம் கனம் ஜட்ஜி சதாசிவ ஐயரவர்கள் சபைத்தலைமையை வகித்தார்கள். பரிசளித்தபின் கனம் சதாசிவ ஐயாவர்களின் மனைவியார் பெண்கல்வியின் அவசியத்தைப் பற்றி உபந்நியாசம்செய்து பெண்களுக்குக் கல்விபுகட்டிவருவதுடன் அவர்கள் முன் காலத்தில் கீர்த்தியுடனிருந்தமாதிரி செய்யுங்களென்று சொன்னார்கள்.

**நாம் செய்யும் காரியங்கள்.**

மூன்றுவித காரியங்களிருக்கின்றன. நல்லது, கெட்டது, சந்தேகமுள்ளது. சந்தேக முள்ளதைப்பற்றி நாம் மிக்க ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். ஏனெனில் அவ்வித காரியங்கள் செய்வதால் நாம் அபாயத்திற்கு ஆளாகுவோம். மேலும் அவ்வித காரியங்கள் முதலில் பயத்தை யுண்டுபண்ணும விருந்துகொண்டே பலகெடுதல்கள் உண்டாகும்படி செய்யும். சந்திவெளிச்சத்தின் நிழல் எப்படி நம்மை நல்லிருளுக்குச் சேர்க்கிறதோ அதேமாதிரிதான்.

போபால் பீகம் அவர்கள் போபாலிலுள்ள மாதர்சங்கத்தில் பின்வருமாறு தமது இனத்தாருக்கு புத்தி சொன்னார்கள்:—

"கல்வி ஒவ்வொருவருக்கும் தேவை, ஆனால் அளவுக்கு மிஞ்சிய சுதந்தரம்கூடாது. ஆங்கிலேய ஸ்திரீகளுக்கு எவ்விதமான சுதந்தரமிருக்கிறதென்பது நமது ஸ்திரீகளுக்குத் தெரியாது. நமது தேசத்திலுள்ள ஸ்திரீகளுக்கு அவ்வித சுதந்தரம் வேண்டியதில்லை. மகமதிய ஸ்திரீகளுக்கு கடவுளின் வார்த்தையே உண்மையானவும் ஜெயம் பெறக்கூடிய வழிகாட்டி". 'சுத்தமாயிருப்பதை எடுத்துக்கொள். அவ்விதமில்லாததை விலக்கிவிடு' என்று நமது தீர்க்கதரிசியார் வார்த்தையின்படி நடக்கவேண்டும். மகமதிய ஸ்திரீகள் தங்கள் மதசம்ப்ரதாயப்படி அநுஷ்டித்து வரவேண்டுமே தவிர அதிக சுதந்தரம்பெற விரும்பக்கூடாது. துருக்கிதேசத்து ஸ்திரீகள் விருத்தியடைந்து வருகிறார்கள். ஆனால் அவர்கள் மேற்கிலுள்ள ஸ்திரீகள் சுதந்தரம்பெற முயன்றுவருவதைப்போல் முயலுகிறார்கள். இது அவர்களுக்குப் பின்னிட்டு தீங்கை விளைவிக்குமென்று பயப்படுகிறேன். ஆகையால் அவர்கள் சரியான மார்க்கத்தைப் பின்பற்றி நடப்பார்களென்று கடவுளை ஸ்துதி செய்கிறேன். முன்காலத்தில் மகமதிய ஸ்திரீகள் கீர்த்திபெற்று மதசம்பரதாயத்தைச் சிறிதும் நழுவவிடாமலிருந்துவந்தார்கள். அவர்களால் நாகரீகம் விருத்தியடைந்தது. அவர்கள் பழக்கத்தால் சிறந்த வித்வான்களும், கீர்த்திபெற்ற மனிதர்களும் உதித்தார்கள்.

ப. ர்.

# * ஜப்பான் சக்கரவர்த்தினி.

முட்ஸுஹிடோ சக்கரவர்த்தியின் மனைவியான ஹாரௌகோ (Harow Ko) 1850ம் வருஷம் பிறந்தார். சக்கரவர்த்தியை விட இரண்டுவருஷம் மூத்தவர். ஜப்பானில் சக்கரவர்த்திக்கு அடுத்தபடியில் 5 உயர்தரக் குடும்பங்கள் உண்டு. அவைகளில் ஒன்றிலிருந்தே சக்கரவர்த்தியின் மணப்பெண்ணைத் தெரிந்தெடுப்பது வழக்கம். ஹாரௌகோ பிரின்ஸ் தாடாகாவம்சத்தில் பிறந்தபெண் இளம்பருவத்தில் கயோடாவில் வசித்தனர். மேல்நாடுகளில் சன்னியாசி மடங்களில் அடைப்பட்டிருக்கும் கன்னிகைகளைப்போல் உலகத்துச் சம்பந்தம் எதுவுமறியாமல் வளர்க்கப்பட்டு வந்தார். அங்கு தமது பிற்கால அந்தஸ்துக்குரிய பயிற்சியைப் பெற்று 19-வது வயதில் சக்கரவர்த்தியை மணம்புரிந்தார். ஹாரௌகோ ஜப்பானில் தற்காலத்து ஸ்திரீகளில் அதிசயமாய்த் தோன்றுகிறவர். ஜாப்பானிய உடைகளை உபயோகப் படுத்தாமல் பாரிஸ் நகரத்தில் தமது உடைகளைச் செய்வித்து உடுக்கிறார். அன்னிய உடுப்புகளானாலும் அவைகளை விகாரமாவது கூச்சமாவது இல்லாமல் மேல்நாட்டு ஸ்திரீகளைப்போலவே உடுத்து நடமாடுவார். அவர் தோற்றம் அழகுள்ளதாயில்லாவிட்டாலும் அவர்முகத்தில் களையிருக்கின்றது. அன்பும் புத்தியும் பரபரப்பும் விளங்குகின்றன. அவருடைய உடையும் மாதிரியும் மேல்நாட்டு உடையையும் மாதிரியையும் போன்றனவாயினும் ஹிருதயத்தில் கீழ்நாட்டவராகவே

* "புதிய ஜப்பான்" என்னும் புத்தகத்தின் இரண்டாவது அத்தியாயத்திலிருந்து எடுக்கப்பட்டது.

அடுத்த பத்திரிகையில் இப்பொழுது சக்ரவர்த்தியாகிய யோஷிஹிடோவின் சரித்திரம் சித்திரப்படத்துடன் பிரசுரிக்கப்படும்.—ப. ர்.



இருக்கிறார். ஜப்பானின் புராதன வழக்கங்களில் பக்தியுள்ளவராயும் அநாவசியமான புதுமைகளை விரும்பாதவராயும் உள்ளவர்.

ஹாரௌகோ ஜப்பானுக்கு வீராவேசத்துடன் ஊழியம் செய்ய விரும்புகிறவர். தமது ஜனங்களுக்காக எவ்விதமாய்த் தம்மை அர்ப்பணம் செய்துகொள்ள வேண்டுமானாலும் செய்துகொள்வார். ஜனங்களுடைய கோரிக்கைகள், பயங்கள், விருப்பங்கள், எவைகளோ அவைகளை தம்முடையனவாக்கிக்கொள்வதே அவருடைய பெரும் விருப்பம். இதையறிந்து ஜனங்கள் சக்கரவர்த்தியை உபசரிக்கிறபடி அவரையும் உபசரிக்கிறார்கள். சக்கரவர்த்தியின் மஹிஷி என்கிற காரணத்தாலல்ல, இனிவரும் சக்கரவர்த்திக்கு ராஜீய அநுஷ்டானப்படி அவரே மாதா என்கிற காரணத்தினால் இவ்விதம் உபசரிக்கப்படுகிறார். சக்கரவர்த்தினியை இவ்வாறு உபசரிப்பதற்கு வேறு விசேஷ காரணமுமொன்று உண்டு. வெகுகாலத்துக்கு முன்னால் சக்கரவர்த்தினியாயிருந்த ஒருவர் அவருடைய உத்தம குணங்களினால் தெய்வம்போல் கொண்டாடப்பட்டார்; அவர் தற்காலம் புனர் ஜனனம் அடைந்து ஹாரௌகோவாக அவதரித்திருக்கிறாரென்று ஜப்பானியர் நம்புகிறார்கள்.

ஹாரௌகோவிடத்தில் சக்கிரவர்த்திக்குப் பூரணமான அபிமானமிருந்தபோதிலும் சக்கரவர்த்தினியின் நிலைமை துக்கமற்றதாயிருக்கவில்லை. அவர் சக்கரவர்த்தியின் பட்டமஹிஷியாயினும் வேறு சில ஸ்திரீகளையும் சக்கரவர்த்தி மணம்புரிந்திருக்கிறார். இப்பொழுது இருக்கும் சக்ரவர்த்தி இவருக்குப் பிறந்த புத்திரரல்ல. சக்கிரவர்த்தியின் அந்தப்புரம் பட்டமகிஷி ஒருவராலும் வேறு பதினொரு ஸ்திரீகளாலும் பூர்த்தி பெற்றிருந்தது. பட்டமகிஷி மேற்சொன்ன 5-முதல்தர உயர்குலங்களிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட, மற்ற ஸ்திரீகள் கீழ்த்தர அந்தஸ்துள்ள குலங்களிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்டார்கள். பட்டமஹிஷிக்குள்ள கௌரவங்கள் மற்ற ஸ்திரீகளுக்கில்லாவிட்டாலும் மற்ற ஸ்திரீகளில் எவருக்கேனும் பிறந்தபிள்ளை பட்டத்துக்கு உரியவனாகவே கொள்ளப்படுவான். இப்போது சக்ரவர்த்தியாயிருப்பவர் கீழ் அந்தஸ்து ஸ்திரீகளில் ஒருவருக்குப் பிறந்தவர். ஆயினும் மஹிஷிக்குச் சந்ததி உண்டாகாதென்று நிச்சயமாய்த் தெரிந்தவுடன் அவருக்கு யுவராஜாப்பட்டம் சூட்டப்பட்டது. யுவராஜாவுக்கும் சமீபத்தில் ஒருபிள்ளை பிறந்து அந்தப் பிள்ளையும் பட்டத்துக்கு உரியவனாக அங்கீகரிக்கப் பட்டிருக்கிறான். இந்த யுவராஜாவிடத்தில் ஹாரௌகோ தம் சொந்த மகனுக்குரிய அன்பைப்பாராட்டி வருகிறார். அவருடைய படிப்பிலும் பயிற்சியிலும் முழுக்கருத்தும் வைத்திருப்பதன்றி அவருடைய ஜனன மாதாவையும் வெகு நேசமாய் நடத்தி வருகிறார்.

சமீபத்தில் ருஷியாவுடன் யுத்தம் நடந்த காலத்தில் வழக்கமாயிருந்த சகலகளியாட்டங்களையும் உல்லாசக் கச்சேரிகளையும் விட்டுவிட்டு யுத்தம் நடத்திக் கொண்டிருந்த போர்ச் சேவர்களும் வேண்டிய சௌகரியங்கள் எவையோ அவைகளைச் சேகரிப்பதில் முழுக்கவலையும் செலுத்தி வந்தார். சீனுவுடன் யுத்தம் ஆரம்பமானதற்குச் சிலகாலம் முன்னால் ரெட்கிராஸ் ஸொஸையடி என்று தாதிமார்களடங்கி ஒருசங்கத்தை ஸ்தாபித்தார். இந்தச் சங்கத்துக்கு ஹாரௌகோ தலைவர். அதற்காக நாளெல்லாம் அவர் உழைத்து வருகிறார். யுத்தம் நடந்த காலத்தில் தாமாவது அரண்மனையைச் சேர்ந்த எவராவது சுகத்துக்காகவும் விளையாட்டுக்காகவும் சிறிது பணமேனும் செலவு

செய்யப்பட மாட்டாதென்று கண்டிப்பாய் உத்தரவு செய்திருந்தார். மிகுக்கக்
கூடிய பணமெல்லாம் போர்வீரரின் உபயோகத்துக்கே செலவாகவேண்டு
மென்று நிச்சயித்திருந்தார்.

காலஞ்சென்ற ஜப்பான் சக்கரவர்த்திக்கு 33-வயதுள்ள (இப்பொழுது
சக்ரவர்த்தி)குமாரரும், நான்கு ராஜகுமாரத்திகளும் உண்டு. யோஷி ஹிடோ
1879வரு ஆகஸ்டுமீ 31உயில் பிறந்து 1889வருடத்தில் இளவரசுப் பட்டம்
வகித்து, இப்பொழுது 28-வயதுள்ள ஸடாகோ ராஜகுமாரத்தியை 1900வரு
த்தில் மணந்தார். இவருக்கு இப்பொழுது 11-வயதுள்ள ஹயான் ஹிடோ
என்ற பட்டத்திற்குரிய ஒரு குமாரரும், 10, 7-வயதுள்ள இன்னும் இரண்டு
குமாரர்களும் உண்டு.

## சந்திரவதனன்.

இரண்டு குதிரைகள் பூட்டிய வண்டி மாளிகையினுள் ஓடி வந்தது. புத்
தகசாலை சன்னல் வழியாய் பார்த்த என் வயறு எரிந்தது; என்தேகம் நடுங்
கியது, எனக்கேதோ ஆபத்து வருவதாய் எண்ணினேன். ஒன்றும் புரியாது
மயங்கி, இருந்த நிலையிலசையாதிருந்தேன். ஒருமணி சென்றிருக்கலாம். ஒரு
வேலைக்காரன், **சுகுணதுரை** வெளியில் இருவருடன் பேசியிருப்பதாயும்,
என்னை யழைப்பதாயும் கூறினான். என்னெஞ்சு அடைத்துப்போயிருந்தமை
யால் அவனைக் கேட்க நாவெழாது சென்றேன். குள்ளமாயும் அம்மைத் தழும்
புகள் நிறைந்த கொடூரமுகமுடைய ஒரு மனிதனும், அவன் பக்கத்தே குரூர
னும் உட்கார்ந்திருப்பதையும், எதிரில் சுகுணரையும் கண்டேன். அப்புதிய
வன் என்னைக்கண்டதும் என்னருமை மருமகனே; எனக்கட்டிக்கொள்ள வந்
தான். நான் பயத்தால் சுகுணதுரையிடம் ஓடினேன். "சூதரே" உமது விவ
காரத்தை தெரிந்து கொள்ளுமுன் நீர் அவசரப்படுவது நியாயமல்ல, உட்காரு
மென்றார்.

என்னருமை மருமகனை ஆலிங்கனம் செய்துகொள்வதற்கு விவகாரம் தீர
வேண்டியதென்ன? என உட்கார்ந்தான்.

சந்திரவதனா ? குரூரரை உனக்குத்தெரியும்; இப்புதியவர் உன் தாய்
மாமனும், இவருன்னை யழைத்துபோக வந்திருக்கிறார்; உன் உறவினராய்
அவர் வந்திருக்கும்போது நான் வேறு சொல்வது கூடாது. நீ புறப்படத்
தயார் செய் என்றார். நானவர் காலைப்பிடித்துக்கொண்டு, துரையே ? எனக்
கோர் பந்துவிருப்பதாய் நானறியேன். இஃது யேதோ மோசமாயிருக்கிறது,
என்னை நழுவவிடாதீர்கள் என்றேன்.

குரூரன் என்னை அதட்டி நீ சிறுவன் உனக்கென்ன தெரியும்? இச்சூத
ரை எனக்கு நெடுநாளாய்த் தெரியும், தேவநகரில் இவர் ஓர் நல்ல குடித்தனக்
காரர், இவர் உன் அம்மான்தான். அவர் மனம் வருந்தாமல் நீ அவருடன்
போ என்றான்.

இதற்குள் சூதன் என்னும் அப்புதியவன் சிறுபிள்ளை யாதலால் ஏதோ
வித்தியாசமாய் நினைக்கிறாய், நானடிக்கடி வந்து காணவில்லை யென எண்ணம்



போராடுகிறது, அதின் விபரங்கள் நான் நமது சாகைபோய் தெரிவிப்பேன்,
வீண் பிடிவாதங்கள் செய்யாது என்னோடுவா, என்று, கம்மிய தொண்டை
யால் பயங்கரமாய் பேசி என்னை நெருங்கி இழுக்க வந்தான். நான் ஓ? வென்
றலறினேன். மாளிகை ஜனங்கள் அங்கு கூடினர்; கற்பக வல்லியாரும் அங்கு
வந்து விபரங்கள் தெரிந்து தன் தந்தையை நோக்கி, அருமைத் தாதையே
யாதொரு ஆதாரமுமில்லாது நம்மிடமிருக்கும் அப்பையனை அழைப்பானேன்?
அவனும் அவரைத்தெரியேனென்கிறான். நீங்கள் அவனை அவருடன் அனுப்ப
நினைக்கிறீர்களா? என்றாள். நானவள் பக்கம் ஓடி என்னை காக்கும்படி வேண்
டினேன். இவ்வார்த்தை கேட்ட அவர் தந்தை திடீரென ஏதோ யோசனை
செய்து, சூதரே, நீர் இப்பையனுக்கு அம்மானென்பது நம்பத்தக்கதாயில்லை.
சரியான ஆதாரம் கொண்டுவாரும். அதற்குமுன் இவனை உம்மோடு அனுப்பு
வது முடியாதென்றார். இதைக் கேட்டதும் சர்ப்பம்போல் சூதன் சீறி நான்
மரியாதையுள்ள குடித்தனக்காரன். என் மருமகனை நீர் கேவல வேலை வாங்கு
கிறீர், நான் ஆதாரம் ருசுப்படுத்தி, அதின் பிறகு பேசிக்கொள்கிறேனென்று
இருவரும் வெளியே சென்றனர். வண்டி திரும்பிப்போயிற்று. சுகுண துரைக்
கும் கற்பகவல்லியார்க்கும் என் நன்றியைக்காட்டி வணங்கினேன்.

இரண்டாநாள் மாலைப்போது தோட்டத்தின் புரம் என் மனோரச்சியம்
செய்து திரும்பினேன். இருள்மேலிட்டது. மாளிகை புழக்கடையில் யாரோ
இருவர் மரத்து நிழலில் வேகமாய் சென்றதாய்த் தோன்றியது. தோட்டக்
காரர்களாயிருக்குமென எண்ணி வந்தேன். இரவு நித்திரைசெய்தபோது திடீ
ரென விழித்தேன். யேதோ ஆரவாரம் கேட்டது. யாரையேனும் எழுப்ப
எண்ணினேன். அச்சத்தம் மறுபடி கேளாமையால் தூங்கினேன். நான் நித்
திரைவிட்டெழுந்தபோது மாளிகை ஓரே இரைச்சலாயிருந்தது. தலை தெரி
யாது ஓடினேன். என் நெருக்கமான வேலைக்காரன் என்னெதிரே ஓடிவந்த
வன் சந்திரா, கொலை! கொலை! யென்றோடினான். நான் போய் பார்த்தபோது
சுகுணதுரை சயனமண்டபத்தெல்லோரும் கூடி நின்றார்கள். பிரக்ஞையற்றுக்
கிடந்தகற்பகவல்லியை அவர் பள்ளியறைக்கு யெடுத்துச்சென்றார்கள். சுகுண
துரை காதுவரை துண்டிக்கப்பட்ட ரத்தப்பிரவாகத்திற் கிடந்தார். அதைப்
பார்த்தவுடன் என்னை யிருள்மூடிக் கீழே விழும்படி செய்தது. நான் விழித்த
போது மாலைமூன்றுமணி. போலீஸார் விசாரணைசெய்துகொண்டிருந்தார்கள்.
கற்பகவல்லி பிரக்ஞையடைந்தும் செயலற்றவராயிருந்தார். உல்லாசசுந்திரரும்
கற்புக்கரசியும் வந்திருந்தார்கள். பந்துக்கள் ஏராளமாய்க் கூடியிருந்தார்கள்.

அதில் குறிப்பிட வேண்டியது கற்புக்கரசி கற்பகவல்லி இவர்களின் தாய்
மாமன் இருபது வயதுள்ள சற்குணர் ஒருவரே உங்கள் ஞாபகத்தில் கொண்டு
வரவேண்டியது. வளர்த்துவதிலென்? போலீஸாரிடம் நானும் சாட்சியமாய்
விசாரிக்கப்பட்டேன். ருசுவின்மையால் உண்மை வெளிப்படுத்தவேண்டியது
தங்கள் பொறுப்பிலிருப்பதாய் முடிவு படுத்திச் சென்றார்கள். பிரேதம்
அடக்கம் செய்யப்பட்டது. மறுநாட்காலை ஒரு வேலைக்காரன் என்னை எழுப்பி
அப்பொழுது வீட்டிற்கெஜமானாய் வந்திருக்கும் உல்லாசசுந்திரர் அழைப்ப
தாய்க்கூறினான். நானெழுந்து அவரைத் தேடித் தெருவாயிற்படி சென்றேன்.
அவரையும் எனக்கம்மானாய்வந்த சூதனையுங்கண்டேன். உல்லாசர் இவருன்னை
பாத்தியங்கொண்டாடுகிறார். எனக்கிருக்கும் தொந்திரவும் மனோவருத்தமும்
போதாதென இது ஒரு விவகாரமா? நான் கவனிக்கநேரமில்லை. இதோ ஒரு
பவுன் எடுத்துக்கொள். நீ அவருடன் போகலாம் என்றார்.

சூதன் அவரைக் கடுந்ததாய்ப்பேசி நான் தக்க குடித்தனக்காரன் நீங்கள் என் மருமகனுக்கு யாசகம் கொடுக்கவேண்டியதில்லை யென்றார்.

உல்லாசர் கோபமாய்த் திரும்பிப்போனார். நாஜேடி அவரைக் கெஞ்சிக்கொள்ள எத்தனப்பட்டேன். அதற்குள் மாமனுய்வந்த சூதன் என்கையைப் பிடித்திழுத்து வண்டிக்குள் தள்ளினான். வண்டியின்கதவு சாத்தப்பட்டது. வண்டி ஓட ஆரம்பித்தது. நான் வண்டியின் சாளரவழியாய் வெளியே பார்த்துக் கொண்டிருந்தேன். சற்று நாழிகை சென்றபின் சூதன்முகத்தை கடைக்கண்ணால் பார்த்தேன். அவன் முகத்திலுள்ள இயற்கையான கடுமையைத் தவிர வேறொன்றுந் தோன்றவில்லை. வண்டி ஓடிக்கொண்டிருந்தது. இரண்டுமணி நேரம் ஓடியிருக்கலாம். பெரியரஸ்தா ரோட்டில் ஒரு வீட்டின் வாயில் வண்டி நின்றது. அவலட்சணமற்ற ஒரு சாதாரணவீடு. கதவைத் தட்டினான். ஓர் மத்திமவயதும் நாகரீகமுமுள்ள வேலைக்காரி கதவைத் திறந்தாள். முப்பது வயதுள்ள ஓரழகியமாது நோயாளியாய் கட்டிலில் படுத்திருந்தாள். அவளிருந்த அறையில் என்னைக் கொண்டுபோய்விட்டு, இதோ உன் மருமகன் சந்திரவதனன்; கமலா. இது ஓர் ஓடுகாலிநாய். இதனை சாக்கிரதையாய் பார்த்துக்கொள் என்றான். அம்மாது பதில் கூறுமுன் வழக்கமான கடுமையோடு வெளியிற் சென்றான்.

அவளென்னை உட்காரும்படிச் சொல்லி சந்திரவதனா உன்வரவு நல்வரவாக என்று என்னைத் தன் சமீபத்தழைத்து உச்சிமுகந்து தடவிக்கொடுத்து குழந்தாய் இன்றுமுதல் நீ என் குமாரன்; உன்னைச் சந்தோஷிக்கச் செய்யும் தாய் நான். ஆனால் உன்னை திருப்தியாய் வளர்க்க என்னிச்சைப்படி ஒன்றும் என்றபோது அவள் கன்னங்களில் கண்ணீர் ஓடியது. நானந்த அம்மானை மாமி என் பெற்றோரை உங்கட்குத் தெரியுமா? என்றேன். என்கண்ணே சந்திரா, உன் மாமன், படித்துக்கொண்டிருந்த நீ ஓடிப்போனதாயும் சுகுணமாளிகையிலிருந்து இன்றுன்னை அழைத்து வருவதாயும் நேற்றுதான் கூறினார். இதற்குமுன் உன்னைப் பற்றிய பிரஸ்தாபமுங் கிடையாது. என் புருஷன் குடும்பத்தார் யாரையும் நான் தெரிந்ததுமில்லை. கேட்டதுமில்லை என்றாள்.

இதற்குள் யாரோ வரும் அரவங் கேட்டது. சாற்றியிருந்த அவ்வறைக் கதவுதிறந்தது. அவ்வம்மை சடுதியிற் கண்களைத் துடைத்துக்கொண்டு சந்திரவதனா என் கண்ணே, இவள்தான் என்மகள், உன் மைத்துனி சுந்திரவதனி என்றாள். நான் எழுந்து திரும்பிப் பார்த்தேன். என்னுயுளில் தோன்றாத கிளர்ச்சி யென்னுட் தோன்றியது. என்மனம் நான் தோன்றிய நாள்களாய் துக்கத்திலழுந்தி என் நெஞ்சு வருத்தத்தால் விம்மிவிம்மி வடிந்திருந்தது. இன்று ஓர் சுபதினமாய் என் நெஞ்சு சந்தோஷத்தால் விம்மியது. இதுகாறும் ஸ்திரீகளின் அழகையும் வர்ணித்திருந்தாலும், அவர்கள் வகுப்பிற்குரிய பேதத்தை நினைத்ததன்றி, அவர்களைப்பற்றிய கருத்து வித்தியாசப்பட்டதில்லை.

இப்பொழுதோ சுந்தரவதனியின் பிரியம் வேண்டுமென நினைத்தேன். அவள் தயவுதேட நான் எவ்வித துன்பத்தையும் அனுபவிக்கலாமென நினைத்தேன். இவ்வளவு அருமையான ஒருபதார்த்தத்தை "சூதன்" மகளாய் அடைந்திருப்பது தெரிந்திருந்தால், நானவனைக் கொஞ்சமும் வெறுக்கக் காரணமில்லை என எண்ணினேன். கடவுளின் சிருட்டியில் ஆண்பால் பெண்பால் என்று வகுக்கப்பட்ட இருதா ஜீவியங்களில் பெண்பால் ஆண்பாலினும் அவ



[illegible]மாய் சிருட்டிக்கப்பட்டதென யேதோ ஒன்றில் படித்திருந்தேன். [illegible] யெழுதியவர் கருத்து தன் சீவகாலங்களில் தன் மனதைக் கவரும் ஒரு ஸ்திரீயைக் காணுமையே காரணம் என எண்ணினேன். ஸ்திரிகளை வெறுத்ததாய் பேசும் மாந்தர், மனதைக் கவரும் ஒரு ஸ்திரீயைக் காணுமையே அவர் துறவுபேசும் தன்மையென எண்ணினேன்.

லட்சணமென நினைத்து தன் மனதைக் கவனிப்பதைவிட்டு, அவலட்சணமென நினைத்து அவர் மனதையும் லட்சணக் குறைவுசெய்வது அவரவர் பிசகேயென எண்ணினேன். பொதுவாய் விருப்பமற்றவைகளை வெறுப்பது உலகியற்கையாதலால் நானதைப்பற்றி அதிகம் போராடவேண்டாம். உலகைப் படைத்து, தேவஸ்திரீகளை இதனிலும் லட்சணமாய்ப் படைத்து தன் கைதேர்ந்தபின் சிருட்டிக்குரியான் இவளைப் படைத்தான் என ஒன்றில் வாசித்திருந்தேன். அது கற்பனையென்றே நம்பியிருந்தேன்; இப்பொழுது கற்பனையென்ற வார்த்தையே என்னிடமிருந்து விற்பனையாயிற்று. ஸ்திரீகளின் சாமுத்திரிகா லட்சணங்களின் விசேஷபாகமே ஓர் உருவமாய் என்முன் நிற்கக் கண்டேன். கோதிச்சுருண்டு கறுத்த பளபளப்புள்ள சிகையும் பளபளப்பான நெற்றியும் மினுமினுப்பும் வசீகரமுமுடைய இருகன்னங்களும் அழகாய் நீண்டுயர்ந்த நாசியும், அகண்டு நீண்டு பருத்த கண்களும் அவளது சாந்த குணத்தையும், கம்பீரத்தையுங்காட்டியது. பொதுவாய்ச் சுருக்கிச் சொல்லுமிடத்து ஒத்ததேகமும் அழகிய முகமும், வசீகரப்பார்வையும் என் நெஞ்சைக் கவர்ந்து நின்றது. இவ்வித எண்ணங்களாலும் பார்வையாலும் நான் அசைவற்று நின்றேன்.

சுந்திரம், நேற்றுன்தந்தை அழைத்து வருவதாய் சொல்லிப்போன சந்திரவதனன் உன் மைத்துனன் என்று கமல ரேகையார் சொல்லும் போது என் பிரக்கினை வந்தது , பதினன்கு வயதுடைய சுந்திரம் குளிர்ந்த பார்வையுடனும், புன்னகைத் தோற்றத்துடனும், என் சமீபத்தில் வந்து, அத்தான்! உங்கள் நல்வரவு நன்மையாகுக என்றாள். நானித்தனை நேரம் எனக்குப் புதிதாய் கிடைத்த சுந்திராம்பாளைப் பற்றி வர்ணித்ததற்கு என் மீது குறைகூற மாட்டீர்களென்று நம்புகிறேன். உலகநடை அறியாது நின்ற என்மனம், துமன்றி, இதுவரையும் ஒன்றிலும் பற்றுக்கொள்ளாது நின்ற என்மனம், என் வாழ்நாளை சந்தோஷமாய் கடந்த ஓர் பெரும் பாக்கியம் நான் எதிர் பாராது திடீரென என்முன் நிற்பதாய்க் கண்டால் நானதை வர்ணிக்காதிருக்க எப்படி முடியும்? நான் கிடைத்தகையை சில நேரம் பிடித்திருந்தேன்.

இது சமயம் சூதன் அழைப்பதாய் ஓர் வேலைக்காரி வந்தழைத்தாள். நான் சென்றபொழுது ஓர் விசாலமான அறையில்மேஜை நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. நான் சென்றதும் ஓர் விரலால் உட்காரச் சைகை காட்டி என்னை சில நிமிஷங்கள் இமைக்கொட்டாது பார்த்து என் வருத்தங்கள் நீங்கியிருப்பதை அறிந்துகொண்டு என்னைப் பார்த்து" தன் கம்மிய குரலுடன் அதட்டி இனி நீ ஓடும் வழக்கத்தை விட்டுவிட வேண்டியது. அப்படி உன்னைத் துரத்திப் பிடிக்கும்படியான காரியங்கள் செய்வையானால் உன் கழுத்தை அறுப்பதும், யோசியேனென்றான். அவ் வார்த்தையால் என் முகம் வாடியதுகண்டு, தான் கடகடவென்று நகைத்து,உன் நெஞ்சம் அஞ்சும் வார்த்தையைச் சொல்லிவிட்டேன். நல்லது நீ என் உத்திரவின்றி வெளியே போகக்கூடாது, நான் உன் ஒழுங்கைத் தெரிந்து பின் உனக்கோர் உத்தியோகம் தேடித்தருவேன்

என்றான். நான் பிறரைத் தொந்திரவுசெய்யாது இப்பொழுதே எந்தவேலையும்
பார்க்கத் தயாராயிருக்கிறேனென்று அவன் வார்த்தை மத்தியில் பேசினேன்.
இத்திக்கப் பேசிப் பழகும் வழக்கத்தை என்னிடம் வைக்காதே. வார்த்தை
மத்தியில் பேசுவதையும் விடு என பற்கடித்துப் பேசினான். இனி அப்படி
செய்வதில்லை. உங்கள் மனம்போலவே ஆகுக ஐயா என்றேன். ஐயா—எப்படி
உனக்கு நான் ஐயாவாகும்—நான் உன் அம்மான் நீ என் மருமகன் நல்லது
இதோ இருக்கும் புதிய உடைகளைத் தரித்து அந்த உடைகளைச் சுற்றிக்கட்டி
"உல்லாசசுந்திரர் சுகுணதுரை மாளிகை என்று விலாசமிடு, அதைத் தபாற்
வண்டியில் அவர்களுக்கு அனுப்பவேண்டும். உனக்கு என்முன் யாசகம்தந்த
அவர்க்கு மரியாதை அதுவே. நீ அங்கு ஓர் வேலைக்காரனாயிருந்தது எனக்குக்
குறைவு. ஆதலால் நீ அவ்வீட்டார் யாரையும்கண்டு எக்காரணத்தாலும் சம்
பாஷிக்கக்கூடாது. நீ அவர்களைக் காணின் கொஞ்சங்கூடப் பழக்க மில்லா
தவன்போல் நடந்துபோக வேண்டியது எனத் தாக்கீது தந்தான்.

நான் உடையைமாற்றி அவன் சொற்படிச்செய்துநின்றேன். நான் சொல்
லியபடி சரியாய் நடப்பையா என்றான். நானப்படியே செய்கிறேனென்று
அவன் மனைவி, பெண்ணிருக்கு மிடம்வந்தேன். நான் அவனோடு பேசிவந்த
தென்னவென அவர்கள் கேட்கப்பயந்தார்கள். நானும் சொல்லவில்லை. நான்
ஒருவாரம் வீட்டிற்குள்ளேயே யிருந்தேன். பின் சில நாட்கள் சூதன் காலை
மாலைகளில்தான் வெளியே போகும்போது என்னையும் அழைத்துப் போவன்.
தான் யாரோடேனும் சம்பாஷிக்க நேரின் என்னைக் கவனித்த வண்ணமா
யிருப்பான். அநேக சமையங்கள் அவன் தனித்துப் போய்வருவான். அவன்
உத்தியோகம் இன்னதென்று யாரும் தெரிந்ததில்லை. அவன் இன்னவிதமாய்ச்
சம்பாதிக்கிறான் என்பதும் பிறரறிய முடியாதிருந்தது. ஆனால் பிறர் தோற்
றத்திற்கு மரியாதையுள்ள குடித்தனமாகவே செய்துவந்தான்.

ஒருநாள் என்னை யழைத்து நான் அடிக்கடி வெளியே போகவேண்டி
வருவதால் நீ சுந்திரவதனியுடன் வெளியே போய்வரலாம் என்றான். அன்று
முதல் என்னைப்பற்றிய கண்ணோட்டம் வைக்காதிருந்தான். அவ்வார்த்தை
எனக்குச் சந்தோஷத்தைத் தந்தது. நானெப்பொழுதும் அவளுடன் சம்பா
ஷிக்க இடமுண்டாயிற்று. அவள் தன் தாய்க்கு உதவிசெய்து அவளுடன்
இருக்கும்போதும் நானுமிருப்பேன். அவ்வேலை முடிந்தபோது தையல்முத
லிய பின்னல் வேலைகளையும் செய்வாள். நானவளுடனிருந்து பல நாற்சம்மந்த
மான புத்தி நுணுக்கமும் அறிவிற் தெளிவு முண்டாகும். விசாரணைகளைச்
செய்வேன். ஆனால் எங்கள் பூரண விசாரணைகளை நடத்திச் சந்தோஷிக்க
அவள் தாயின் மனோவியாகூலமான நோய் இடையூரா யிருந்தது. நான் தன
வந்தனாயிருந்தால் இம்மூர்க்கன் தொந்திரவில்லாமல் அவர்களை நான் போஷித்
துச் சந்தோஷிக்கலாமே என எண்ணுவேன். இவ்விதம் ஆறுமாதங்கள்
சென்றன.

ஓர்நாள் அவள் தாய் கமலரேகையார் தன் மகளைத் தன் சிக்கறைவிட்டு
வெளிப்புறம் காத்தோடு மிடம்போ யிருக்கும்படிச் சொல்லினார். நானும்
கூடச் சென்றேன். அவள் ஏதோ தையல் வேலை செய்துகொண்டிருந்தாள்.
அவள் தன் தாயின் நோயைப்பற்றிய வியாகூலம் மேலிட்டவளாய் இருக்கக்
கண்டேன். சுந்திரம்! உன் தாயின் நோய் நீங்கிப்போம். அவர்க்குவியாதியாய்
நினைக்கவில்லை. மனோவியாகூலமே நோயாய்க் காண்கிறது. பலநாள் துன்பமும்



[illegible]கூடிய ஒரு நல்லநாள் வரலாம். நாம் சகிப்போடு அதனை எதிர்ப்
பார்த்திருப்பதே புத்தியின் பெருமையென்று நான் சொல்லிவரும்போது
அவளழகிய கன்னங்களின் வழி சில முத்துக்கள் சிதறுவதைக் கண்டேன்.
என் மனந் தாளாது அவள் முன்னகர்ந்து அவள் கைகளைப் பிடித்தபோது
அவள் கருணையோடு என்னை அண்ணார்ந்து பார்த்த அன்பின் விளக்கப்
பெருமை என் ஆயுளில் ஒன்றும் மறக்கமுடியாதிருந்தது. சுந்திரம் தன்
கண்களைத் துடைத்து என்னைப் பார்த்தபோது என் கண்களிலும் ஜலம் ஓடு
வதைக் கண்ட அப்பெண்மணி "சந்திரரே! நீரும் எனக்காகத் துக்கிக்கிறீர்?
சுந்திரமே!, நீ துக்கப்படுவதைக் கண்ட நான் எப்படி வருத்தப்படாதிருக்க
முடியும்? அன்புடையீர் என் மனோநிலைமையை நீர் அறியீர். என் தாயின்மீது
எனக்குள்ள அன்பு நீரறிவீரா? என் தாய் மெத்தநல்லவள். என்மீது அவளுக்
குள்ள அன்பும் சொல்லுவதல்ல. அவளோ மெத்த வருந்துகிறாள். அவள்
நோய் நீங்குவதைக் காணேம். அவளுக்கு ஏதேனும் சம்பவித்தால் என்
கதி?" என்றவுடன் திரும்பிக் கதவைப் பார்த்தாள். கதவு சாத்தப்பட்
டிருந்ததுகண்டு அவள்முகம் தெளிவடைந்தது. சுந்திரம் அன்புடையாய் நீ
அவ்வாறு நினைத்தல்வேண்டாம். உன் தாய்க்கு பயங்கரமான நோயில்லை. தேக
த்தின் பலக்குறைவே. சீக்கிரத்தில் அவர் நோய் நீங்கும் என்றேன். அவள்
விசனகரமான முகத்தை நிமிர்த்து சந்திரரே நீர் எனது திர்ப்திக்காக பேசு
கிறீர். ஒரு மாதமாய் இதைப்பற்றிய கவலை என்னை மேல்கொண்டது. தான்
சுற்றிப்பார்த்துக்கொண்டு ஒருபெண் தன் தந்தையைப்பற்றிக் குறை கூறுவது
பயங்கரமான காரியம்; அவர் கொடூரநடையே அவளை படிப்படியாய் பலக்
குறைவாக்குகிறது. அது உண்மையே. சந்திரரே நாங்கள் மிக்கஏழையாயிருந்
தோம். இரவும் பகலும் தையல்வேலைசெய்து என்னையும் போஷித்துவந்தாள்.
எங்கள் தரித்திரம் நீங்காமையாலே நோய்ப்பட்டாள். மிக்க வறுமையால் கஷ்
டப்பட்டாள். அவளுத்தமத்தாய், உத்தம மனைவி. அத்தனை கஷ்டங்களையும்
அனுபவித்தவள். சுகத்தைப் பெறுதல் வேண்டாமா? நானவற்றையெல்லாம்
என்னுள் மறைத்திருக்கிறேன். அவள் இறந்துபோனால் என் கதி என்னவாகி
றது? என்றாள்.

நான் அவள் காங்களைப்பிடித்து என்னால் கூடிய சமாதானங்களைக் கூறி
னேன். அவள் வருத்தம் நீங்காது கண்ட என் மனம் தாளாது அவளை அணை
த்து என்முகத்தால் அவள் கன்னங்களில் ஓடிய கண்ணீரைத் துடைக்க இரு
கண்ணீரும் ஒன்றாய் ஓடியது. சடுதியில் சுந்திரம் என்னைவிட்டு மெதுவாய்
விலகி, சந்திரரே என்னால் நீரும் வருந்துவது சரியல்ல. நாம் வேறே யேதே
னும் பேசுவோமென்று. சுகுணதுரைமாளிகையில் நடந்த அநியாயக் கொடு
மைக்கு பிறகு நீரொருவரையுங் காணவில்லையா? உமது விஷயத்தில் பட்சங்
காட்டிய கற்பகவல்லி என்னவாயினாள் என்பது தெரியவில்லையே! நீர் ஓர் தட
வை பார்த்துவரலாகாதா? ஒருவேளை துலை தூரமாயிருக்குமோ? என்றாள்.

சுந்திரமே, அன்பே, எவ்வளவு தூரமானால் என்ன? உன் தந்தை என்னை
அவ்வீட்டாருடன் பேசவுங்கூடாது பார்க்கவுங்கூடாது என்கிறார் என்றேன்.
ஆச்சரியத்துடன் சற்று என்முகத்தைப்பார்த்துப் பின் நம்மிடம் திரவியமிருந்
தால் கற்பகவல்லியை அழைத்து உபசரிக்கலாமென்றாள். கற்பகவல்லியார்
தரித்திரப்படவேண்டியவரல்ல. அவர் தந்தை சுகுணதுரை அவரது இரண்டு

பெண்களுக்கும் தன்னாஸ்தியை இருபாகமாக்கியிருக்கிறார்:—இவ்வார்த்தை நான்சொல்லியதும் திடீரென கதவுதிறக்கப்பட்டது. இராக்கதகோரத்துடன் சூதன் வெளிவந்தான். தன்மகளை உள்ளே போவென தன்காலைக்கீழேமோதி அதட்டினான். சுந்திரம் நடுநடுங்கி தன்கையிலிருந்த தையல்வேலையைப்போட்டுப்போட்டு எடுத்தோடினாள்.

மறுபடி கதவை சாத்திக்கொண்டு சந்திரா, நீங்கள் இருவரும் பேசியதெல்லாம் நான்கேட்டேன். அவ்வயோக்கியக் கழுதை என்னை உதாசீனம் பேசினாள். நானவளை விசாரித்துக்கொள்கிறேன். நீ சுகுணதுரை தன் மக்களிருவருக்கும் பாகித்துவைத்திருப்பதாய்ச் சொன்னையே, அவ்விரகசியம் வேலைக்காரனாயிருந்த உனக்கெப்படித் தெரியும் என்றான். நான் புத்தகசாலையில் சுகுணர்க்கும் உல்லாசர்க்கும் நடந்த சம்பாஷணையைச் சொன்னேன். அவன் கொடூரமாய் தன்கையை ஓங்கி ஒருவர் குடும்பரகசியங்களை ஒட்டுக்கேட்டு வெளிப்படுத்தும் மருமகன் எனக்கிருப்பதைவிட அவனெஞ்சைப் பிளப்பது நன்மையென நெருங்கிவந்தான். நான் எண்ணாமலே என் தேகம் அதைத்தாங்கவோ அல்லது அதனைத்தடுக்கவோ நிமிர்ந்து நின்று கைகளும் தயாராயின. என் கண்களின் கொடூரத்தையோ தேகத்தின் கெம்பீரத்தையோ பார்த்த அவன் தன் கையைத் தணித்துக்கொண்டு நீ பிறர்க்கு வெளிப்படையாய் அவர்கள் விஷயத்தைப்பேசியது பிசகு; இனி அப்படிபேசாதே என்று தன்னறைக்குள் சென்றான்.

அப்பொழுது சுந்திரம் கதவைத் திறந்து வெளியேவந்தாள். உன் தாயிடம்போவென்று அதட்டி வெளிவந்தான். அவள் அன்னைக்கு ஆகாரம் எடுக்கப்போகிறேன், தந்தையே, கோபியாதீர்கள் என்றாள். சூதன் நான் சொல்லுவதைத் தடுத்துப் பேசுகிறாயாவென அவ்வழகிய என் மைத்துணியை அடிக்கக்கண்டேன். அவ்வறை என் நெஞ்சிலும் விழுந்தது. ஓர் புலியைப்போல் பாய்ந்தேன். ஓர் குத்தில் அவனைக் கீழேதள்ளினேன். சுந்திரம் என்னை விலக்கினாள். சூதன் எழுந்து சந்திரவதனரே, தயைசெய்து உங்கள் அறைக்குள் போங்கள் என்றான். சுந்திரமும் என் காதோடு அப்படியே செய்யச் சொன்னாள். நான் என்னறைக்குட் சென்றேன். கதவு சாத்தப்பட்டது, சூதன் என்னறையைப் பூட்டி சாவியை எடுத்துப்போனான். தெருக் கதவு திடீரென சாத்தப்பட்டமையால் அவன் வெளியேபோயினான் என்பது நினைக்கவேண்டியதாயிற்று. நான் அளவுமிஞ்சி நடத்தியதாய் எண்ணினேன்.

பகல் இரண்டு மணியாயிற்று. சுந்திரம் காலடிச்சத்தம் கதவடியில் கேட்டது. நான்கதவின்பக்கம்வந்துநின்றேன். சுந்திரம்அத்தான்என்றுமெதுவாய்க் கூப்பிட்டாள். நானும் சுந்திரமென்றேன். என் தந்தை வெளியே போயிருக்கிறார். அவர் வந்துதானே ஆகாரம் உண்ணல்வேண்டும். சாவியைஅவர்கையில் கொண்டுபோயிருக்கிறார். நானிங்கு நின்றல் கூடாது. வேலைக்காரர்கள் அவர்க்குச்சொல்லுவார்கள். என் கண்ணே எனக்கு ஆகாரம் இருந்தாலும் தேவையில்லை. நீ இங்கு நிற்பதை வந்து காணப்போகிறார் என்றேன். அவள் மெதுவாய்ச் சென்றாள். இரவு எட்டுமணியாயிற்று. சூதன்வரவில்லை. சுந்திரம் வந்து நான் பசியால் வருந்துவேனென்று வருந்திப்போனாள்.



பத்துமணிக்குக் கதவு திறக்கப்பட்டது. ஒருகையில் ஆகாரமும் ஒருகை டிஞர்ஒருதடிக்கம்புகொண்டு சூதன் தோன்றினான். இதோ ஆகாரமிருக்கிறது, உண்ணு. உன் முட்டாள்தனமான செய்கையை என்னிடம் காட்டுவாயானால் இக்கம்புக்கு உன்னையிரையாக்குவேன் என்றான். நீர் ஓர் சிறுபெண்ணை யடிக்கும் சிப்பாய்; அதிலும் மகளையடிப்பதில் தேர்ந்தவர். வெட்கமில்லாமல் உமக்குக் கோபமும் வருமோ என்றேன். அவன் ஆகாரத்தைக் கீழே வைத்து என்னையடித்தான். அது என்னைக் கொலைசெய்யும் எண்ணத்துடனல்ல. என்னைக் கண்டிப்பதற்காக என்று தோன்றியதால் பொறுமையோடிருந்தேன். அவனுமக்கிது போதியது. இதோ ஆகாரம் உண்ணு என்றதட்டினான். எனக்காகாரம் தேவையில்லையென்றேன். அப்படியே யாகுக என்று சொல்லி என் வஸ்திரங்களைக் கழற்றும்படி விரும்பினான். எனக்கவசியமாய் வேண்டிய ஓர் ஆடையை உடுத்திக்கொண்டு பாக்கியைக் கொடுத்தேன். அவன் அவைகளையும் சுருட்டி கதவைப் பூட்டிக்கொண்டுபோனான்.

பதினோருமணி கடிகாரமடித்தது. தெருக்கதவை யாரோ தட்டினதும் சூதன் வேலைக்காரர்கட்கு நீங்கள் கதவு திறக்கவேண்டாம், நான்திறந்து கொள்கிறேனென்றதும் காதில் விழுந்தது. பின்னொன்றும் தெரியவில்லை. இரவு பனிரண்டு மணியடித்தது. சுந்திரம், படுக்கையறைக் கதவு திறந்தது. அரைமணி சென்றது. சூதன் அறைக்கதவு மெதுவாய் திறக்கப்பட்டது. பின் கமலரேகையார் அறைக் கதவுதிறக்கப்பட்டது. இவை இன்னதெனத் தெரியாது மயங்கியிருந்தேன். கடைசியாய் என்னறைக் கதவு திறக்கப்பட்டது. சூதன் என்னை கொலைசெய்யவருவதாய் எண்ணி மனம் நடுங்கி கண்ணைமூடிப் படுத்திருந்தேன். அத்தான் தூங்குகிறீரா என்ன? என சுந்திரம் என்னை மெதுவாய்த் தட்டினாள்.

கமலத்தன்னை.

## குழந்தைகள் ஏன் அதிகதூரம் நடக்கக்கூடாது.

சாதாரணமாக மிதமிஞ்சி நமது தேசத்தில் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு ஆகாரம் கொடுக்கப் பிரியப்படுகிறார்கள். இது பல வியாதிகளுக்கு காரணமாகுமென்பதை யறிவார்களென்று நம்புகிறோம். மேலும் சிறுகுழந்தைகளை சிற்சில சமயங்களில் அதிக தூரம் நடக்கும்படி செய்கிறார்கள். இப்படிச்செய்வதால், குழந்தைகள் இளைப்பு அடைகிறது. உடனே தேகவளர்ச்சி தடைபடுகிறது. ஆகாரம் ஜீரணமாகாது, பலஹீனம் அதிக முண்டாகும். இதற்கு உதாரணமாக ஒரு கதையுண்டு:—ஒரு சிறிய பெண் தன் தாதியுடன் விளையாடிக்கொண்டும் பேசிக்கொண்டும் ஒரு குடிசையிலிருந்து இன்னொரு குடிசைக்கு நடந்துபோனாளாம். இப்படி நான்கு மணிநேரம் இப்பெண் செய்துகொண்டிருந்தாளாம். அச்சமயம் இவள் சுறுசுறுப்பாயும், முகமலர்ச்சியுடன் சந்தோஷமாயுமிருந்தாளாம். அங்கு தோட்டத்திலுள்ள புஷ்பங்களையும் பறித்த பின் தாதியிடம் "அம்மா! நான் களைத்துப்போய் விட்டேன், வீட்டிற்குப் போக வேண்டும்" என்றாள். உடனே இருவரும் வீட்டிற்கு வந்தார்கள், இச்சிறு பெண் கீழே படுத்துக்கொண்டு, தேயிலைகூட அருந்தவேண்டாமென்று சொல்லிவிட்டு படுக்கையில் படுத்துக்கொண்டாளாம். மூன்றுமணிநேரம் அயர்ந்து நித்திரை செய்தாள். பின்னிட்டு கண்விழித்து சுகமின்மையால், ஆகாரம் வேண்டாமென்று சொல்லி குடிக்கத் தண்ணீர் மாத்திரம் கேட்டாள். உடனே சுரம் வந்துவிட்டது. மருந்து கொடுத்தும் சுரம் நீங்க வெகுநாள் சென்றதாம். ஆயினும் இப்பெண் தன் ஆயுள்பரியந்தம் பலஹீனமாயிருந்தாளாம்.

நமது வைத்தியர்.

# * அரக்களராணி.

பீகாரில் பக்ஸார் என்று வழங்கும் நகரத்திற்குச் சமீபத்தில் அர்க்களம் என்கிற இந்து சமஸ்தான மிருந்தது. இச் சமஸ்தானத்திற்கு கௌதமன் அரசனாயிருந்தான். இவனுடைய தர்மபத்னியே இக்கதாநாயகி. இக்காலத்தில் நாஜர் உடீன் டெல்லி சக்ரவர்த்தியா யிருந்தார். இவருக்கு அரசர்கள் அநேகர் அடங்கி கப்பங்கட்டி வந்தார்கள். கௌதமன் கப்பம் கட்டமாட்டேன் என்று உறுதியாகச் சொல்லிவிட்டான். டெல்லி சக்ரவர்த்தி மிகவும் கோபங்கொண்டு அயோத்திக்கு கவர்னரா யிருந்தவரை சேனைத் தலைமையை வகித்து கௌதமனை எதிர்த்து சண்டை செய்யும்படி அனுப்பினார். அயோத்தி கவர்னர் திரண்ட சேனைகளுடன் சென்று கௌதமனுடன் யுத்தம்புரிய ஆரம்பித்தான். யுத்தம் இருவருக்கும் மிக்க பலமாக நடந்தது. டெல்லி சக்ரவர்த்தியின் சேனைகளில் அநேகர் கொல்லப்பட்டார்கள். இவர்கள் தோல்வி யடைந்தார்கள். கவர்னராகிய சேனைத்தலைவர் கௌதமனுக்கு ஈடல்ல என்பதை யறிந்துகொண்டார். மீதி யுள்ளவர்கள் உயிருக்கஞ்சி துரிதமாக தங்கள் தேசத்திற்குத் திரும்பிச் சென்றார்கள். கௌதமனோ தனது அரண்மனைக்குச் சென்று தான்கொண்ட ஜயத்திற்காக ஒரு விருந்து செய்துவைத்தான்.

நிற்க, அமாவாசை வந்துவிடவே, ராணியார் கங்காஸ்நாநம்செய்ய வேண்டுமென்று விரும்பினாள். கங்கையில் ஸ்நாநம் செய்தால்தான் ஆபத்துக்கள் நீங்கி க்ஷேமம் உண்டாகுமென்று எண்ணினாள்; ஆனால் கங்கைக்கரையோ விரோதிகள் கைவசமிருந்தது. இது இவள் மனதில் பயத்தை யுண்டுபண்ணிற்று, தனிமையாக இவ் விஷயத்தைப் பற்றி ராணி யோசித்து தன்னுடைய தோழிமார்களுடன் பக்ஸாரிலுள்ள ஸ்நாந கட்டத்திற்கு ஒருவருக்கும் தெரியாமல் போய்வர தீர்மானித்தாள்.

இவ்விதமே அந்த இருளான இரவில் துரிதமாகத் தமது தாதிமார்களுடன் போனாள். பொழுது விடியுமுன் கங்கைக்கரைக்கு வந்துவிட்டார்கள்.

தைரியமாகவும், முகமலர்ச்சியுடனும் சீக்கிரமாக நடந்து ஸ்நாநகட்டத்திற்கு இவர்கள்வந்து சேர்ந்தார்கள். ராணியும், தோழிமார்களும் கங்காதேவியைப் பூஜைசெய்துவிட்டு கங்காதீர்த்தத்தில் ஸ்நாநஞ் செய்தார்கள். இதுவரையிலும் யாதொரு கெடுதலும் ராணிக்கு உண்டாகவில்லை. ஒவ்வொன்றும் நன்மையாகவே முடிந்தது. ஆனால் ராணியார் ஸ்நாநகட்டத்திற்கு இரகசியமாய் ஸ்நாநஞ்செய்ய வந்திருந்தபோதிலும் ஒருவருக்கும் ராணியார் வரவு தெரியாமலிருக்குமா? ஆகையால் வெகு சீக்கிரத்தில் கங்கைக் கரையில் சமீபத்தில் கூடாரத்திலிருந்த அயோத்தி கவர்னருக்கு ராணியார் ஸ்நாநத்திற்கு வந்திருக்கும் சமாச்சாரம் எட்டியது. தானும் இவ்விராணி அரக்களராணிதானா வென்பதையும் தீரவிசாரித்து தெரிந்துகொண்டான். உடனே ராணியாரைச் சிறைப்படுத்த உத்திரவளித்தான்.

ராணியார் ஸ்நாநம், பூசை முதலியவைகளைச் செய்து முடித்துக்கொண்டு தமது தாதிமார்களுடன் தமது இருப்பிடத்திற்குத் திரும்பிப் போகும்பொழுது மகமதிய சேனைகள் ராணியாரைச்சூழ்ந்து கொண்டார்கள். ராணியாருடைய மனது அப்பொழுது எவ்விதமிருந்த தென்பதைப்பற்றி ஒருகவி வர்ணித்திருக்கிறார். அதுபின்வருமாறு:—

விரோதிகள் சமீபத்தில் வந்தபொழுது ராணியார் மனதுக்குள் திகிலடைந்தாள். கண்ணீர் விடவில்லை. ஆனால் அவளது கண்கள் கோபாக்னியால் ஜ்வலித்துக்கொண்டிருந்தன.

* All Rights Reserved.



தைரியமாகவும் நிந்தித்துக்கொண்டும் தமது தாதிமார் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தாள். கலங்காத நெஞ்சுடனும், சாந்தத்துடனும், தனது கோபப் பார்வையால் சத்துருக்களைத் திரஸ்கரித்தாள். உடனே தன்னிடத்திலிருந்த, கடாரியை கையிலெடுத்துக்கொள்ளவே, தைரியமான தாதிமார்களும் தங்கள்வஸ்திரத்தில் ஒளித்துவைத்திருந்த கடாரியை தங்கள்கையில் ஏந்திக்கொண்டார்கள். விரோதிகளை விலக்கிக்கொண்டு வழிசெய்து தங்கள் அரண்மனைக்குப் போகப் பிரயத்தனப்பட்டார்கள். அதுவெகு அசாத்தியமா யிருந்ததை ராணிகண்டபொழுது பின்வருமாறு கெட்டியாகச் சொன்னாள்:—

"இந்து தாய்மார்களிடத்திலும், சகோதரி, மனைவிமக்களிடத்திலும் பிரியமுள்ளவர்களில்லையா ?

அவ்விதமிருந்தால் எழுந்து உதவிக்கு வாருங்கள். ஆணையிட்டுக்கேட்கிறேன். அப்படி வராவிடின் நான் சபிக்கின்றேன்".

என்று கோபாவேசத்துடன் ராணியார் சொன்னதும், அபயச் சந்த், நிர்பய சந்த் என்ற இருவீரர்கள் அவ்வழியாகப் போய்க்கொண்டிருந்தார்கள். இவ்வார்த்தைகள் இவர்கள் காதில் விழுந்தவுடன் தங்களிடம் வந்திருந்த சில பரிவாரங்களுடன் ஓடி வந்து விரோதிகளின்மீது புலி பாய்வதுபோல் பாய்ந்து யுத்தம் செய்தார்கள். சிறிது நேரத்திற்குள் ராணியார் பக்கம் வழியை உண்டாக்கி அவர்கள் ராணியார் அருகே சென்றார்கள். ராணியாரும் அவளுடைய தாதிகளும் தங்களைச் சூழ்ந்துள்ள மகமதியர்களைத் தைரியமாக எதிர்த்துக்கொண்டிருந்தார்கள். இவ்விரு வீரர்கள் வெகு சிரமப்பட்டு யுத்தம்செய்து சத்துருக்களை விலக்கி கும்பலில் வழியை யுண்டாக்கினார்கள். ராணியையும், தாதிகளையும் மிக்க பத்திரமா யிட்டுக்கொண்டு அரண்மனைக்குப் போக முயன்றார்கள். அவர்களது முயற்சி வீணாகப்போயிற்று. சண்டையோ பலமாக நடந்தது. ஒரு அடிக்கு ஒரு அடி இந்துக்களில் அநேகர் கஷ்டப்பட்டு ஜயித்து வந்து கத்திக்கு இரையானார்கள்.

தைரியமுள்ள நிர்பயச்சந்த் படுகாயப்பட்டு மரணமடைந்தான். இவனுடனிருந்தவர்களி லநேகரும் யுத்தகளத்தில் மடிந்தார்கள். ஆபத்து வேளையில தெய்வமே துணையென்று எண்ணியிருந்தாள் ராணி. கடவுள் கிருபையால் உடனே உதவி கிடைத்தது. அரக்கள அரசனுக்கு இச்சமாசாரம் தெரிந்தது. உடனே சில ஆட்களுடன் துரிதமாக தன் மனைவியைக் காப்பாற்ற ஓடி வந்தான். மகமதியர்கள் இவனையும் இவனது தைரியமான ஆட்களையும் கண்டவுடன் எடுத்தார்கள் ஓட்டம்.

அரக்கள அரசன் அபயச்சந்தின் தைரியத்தைக் கண்டு மெச்சி அவனுக்கு தனது அருமையான மகளை விவாகம் செய்துவைத்தான்.

தைரியமற்ற அந்த கவர்னரின் கதி என்ன? சிநேகிதர்களும், விரோதிகளும் அரக்களராணியை எதிர்த்ததற்காக குற்றங்கூறி அவனை அவமானம் செய்தார்கள்.

ஒரு பெண்ணை எதிர்க்கச் சென்ற அவ்வயோத்தி கவர்னரை அவன் சாகுமளவும் யாவரும் நிந்தித்துப் பேசி வந்தார்கள்.

☞ பத்திராதிபர்.

## ஜப்பான் தேசத்துக் குழந்தைகள். 2

குழந்தைகளே:—

ஜப்பான் தேசத்தைப் பற்றியும் அத்தேசத்து சக்ரவர்த்தியைப் பற்றியும் ஆகஸ்டு மாதப் பத்திரிகையில் எழுதியிருந்தோம். இப்பத் திரிகையில் அத்தேசத்து குழந்தைகளைப்பற்றி சிற்சில விஷயங்களை எழுதுகிறோம்.

ஜப்பான் பெண்கள் நீண்ட கவுன்போன்ற உடுப்பைத் தரித்துக் கொள்ளுகிறார்கள். இடுப்பில் ஒரு பில்ட்போன்ற பட்டு கச்சையைச் சுத்திக் கொள்ளுகிறார்கள். கால்களுக்கு மரத்தால்செய்த பாதரட்சையைப் போட்டுக் கொள்ளுகிறார்கள். ஒவ்வொரு பெண்ணும் தன்முதுகில் ஒரு குழந்தையைக் கட்டிக்கொண்டு விளையாடுவாள், காரியம் ஏதாவதிருந்தால் செய்வாள், தன்முதுகில் குழந்தை யில்லாததுபோல் நினைத்துக்கொண்டு குதித்து விளையாடுவாள், இங்குமங்கும் ஓடுவாள். இப்படி இவள் குழந்தையை முதுகில் வைத்துக்கொண்டு செய்வதால் குழந்தைக்குச் சிறிது கஷ்டமாக யிருக்கும், ஆனால் குழந்தை இதைக் கவனிக்கவே கவனிக்காதாம்.

இவர்களுக்கு புஷ்பங்களின்மேல் அதிகப்ரியம். அவர்கள் தோட்டங்களில் பல வர்ண புஷ்பச் செடிகளை வளர்த்து வருகிறார்கள்.

குழந்தை பிறந்ததினம் ஒரு உருண்டை வடிவமுள்ள கண்ணாடி பாத்திரத்தில் மீன்களைப்போட்டு (தங்கள் வீட்டிற் கெதிரிலுள்ள) ஒரு மரக்கொம்பில் கட்டி தொங்கவிடுவார்கள். இப்படி எந்தவீட்டில் செய்கிறார்களோ அந்தவீட்டில் குழந்தை பிறந்த தினம் என்று தெரிந்துகொள்ளலாம்.

ஜப்பானியர்கள் தங்கள் குழ்ந்தைகளிடத்தில் அதிக அன்புடையவர்கள், அவர்கள் பிறந்த வருஷதினத்தில் எப்பொழுதும் விருந்து செய்விப்பார்கள்.

தாய்தந்தைகள் பெண்களைவிட பிள்ளைகளைத்தான் அதிகமாகக் கவனித்துவருகிறார்கள். நமது தேசத்திலும் இவ்விதம்செய்து வருகிறார்களல்லவா? ஆனால் இங்கிலாந்தில் இவ்விதம் செய்கிறதில்லை. பெண்ணானாலும்சரி, பிள்ளையானாலும்சரி, ஒரேவிதமாய்க் கவனித்து கல்விபுகட்டி வருகிறார்கள்.

பிள்ளைகள் தக்க வயது வந்தபொழுது பள்ளிக்கூடத்திற்குப் போவார்கள். இங்கு நீங்கள் பெஞ்சியில் உட்காருவதுபோல் அங்கு உட்காருவதில்லை. நமது தெரு பள்ளிக் ளிக்கூடத்தில் பிள்ளைகள் தரையில் உட்கார்ந்து படிப்பதுபோல்தான் தரையில் உட்கார்ந்து படிப்பார்கள். நீங்கள் பேனாவால் எழுதுகிறீர்களல்லவா? அவர்கள் அப்படிச் செய்யாமல் ப்ரஷ் எடுத்துக்கொண்டு எழுத்துக்களை வர்ணம் கொடுத்து அதாலேயே எழுதுவார்கள்.

பள்ளிக்கூடத்திலிருந்து சாயங்காலம் வீட்டுக்கு வந்தால் பற்பல விளையாடல்களை ஆடுவார்கள். அவர்களுக்குக் காத்தாடி விடுவதில் அத்யந்த ப்ரியம். விதம்விதமானவும் விநோதமான காத்தாடிகளைச் செய்துவிடுவார்கள். ஒருமீனைப்போல் சிலர் செய்துவிடுவார்கள். வேறு சிலர் ஒரு அழகான பட்சியைப்போல் செய்துவிடுவார்கள், இன்னும்.



தாய் தந்தையர் அது பிறப்பதற்கு முன்னால் அதற்கு ஒருபெயர் இடுவதாகத் தீர்மானித்திருந்தார்கள். அந்தப் பெயரின் முதல் எழுத்துகள் அக்குழந்தை கண்களில் இருந்தன. வலதுகண் மத்தியில் பச்சிலை குத்தினாற்போல ஜெ (J) என்னும் ஆங்கில எழுத்து அச்சடித்திருந்தது. இடது கண்ணில் அதேமாதிரியாக டி (D) என்னும் எழுத்து இருந்தது. பிலடெல்பியா நகரத்து வைத்திய நிபுணர்கள் அக் குழந்தையின் கண்களைப் பரிசோதனை செய்தும் அந்த விசித்திர ரூபத்துக்குக் காரணம் சொல்லக் கூடவில்லை. அக் குழந்தையின் கண்கள் நல்ல பார்வையோடு கூடி யிருக்கின்றன. தேகமும் ஆரோக்கியமாயிருக்கிறது. இவ்வாறு ஒரு ஆங்கிலப் பத்திரிகை எழுதுகிறது.

---

மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவ அய்யரின் சம்ஸாரம் பின்வருமாறு பேசினார்: "ஸ்திரீகள் படித்தவர்களாகி, புருஷர்கள் செய்யும் முயற்சிகளில் அனுதாபம் வைத்து அவர்களுக்குத் துணையாக நிற்கக்கூடியவர்களாகிறவரையில், இந்தியாவின் முன்னேற்றம் அரைகுறையாகத்தானிருக்கும். ஸ்திரீகள் படிப்பில்லாத மூடர்களா யிருப்பதோடுகூட புருஷர்களின் படிப்பும் நம் ஜாதிக்குப் பொருந்தியவாறு மற்றத் தேசங்களைப்போல ஜாதீயவழியிற் செல்லாமல் அன்னியரால் குறிக்கப்படும் வழிகளிற் செல்லுவதால் குறைப்பட்டிருக்கின்றது. இந்தியாவில் ராஜாங்க நிலைமை இவ்விதமான கல்விதான் நமக்குச் சாத்தியமாகும்படி இருக்கின்றது. ஜனங்களின் கல்வி அவர்களுடைய க்ஷேமத்தை மாத்திரம் நோக்கமாகக் கொண்டதாயிருக்க வேண்டுமேயன்றி, அன்னிய ராஜாங்கத்தாரின் நன்மையையும் அவர்களின் விருப்பத்தையும் பற்றினதா யிருக்கக்கூடாது. ஆயினும் நமது யூனிவர்சிடிகளும் காலேஜகளும் ஆங்கிலேய ப்ரொபெஸர்களாலேயே நிர்வகிக்கப்பட்டு வருகின்றன."

---

இதுவரையில் மழை பெய்யவேண்டியிருந்தால் ஆகாசத்தில் வெடி குண்டெறிந்து மழை வருஷிக்கும்படி செய்யப்பட்டதாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். அமெரிக்கா தேசத்தில் லோஸ் ஏஞ்சிலிஸிலிருக்கும் மிஸ்டர் ஹாட்பீல்டு என்பவர் மழை பெய்விக்கிறார். தனக்கு முற்பட்டோர் செய்து வந்தது போல வெடி குண்டு முதலியவைகளை எறிந்து மேகத்தைப் பிளக்காது, பெரிய தொட்டிகளை உயரத்திற் கட்டி அவைகளிற் சில மருந்துகளைப் போடுகிறார். அது நமது கண்களுக்குத் தெரியாமல் புகைப்படலமாக மாறி மற்ற மேகங்களை அவ்விடம் சேரும்படி செய்கிறதாம். அப்படி மேகங்கள் கூடினதும் மழை பொழியும்படி செய்துவிடுகின்றாராம். அதிகக் காம்பாகக் கிடந்தவிடமெல்லாம் இப்பொழுது சிரம்பமாகச் செய்திருப்பதாகத் தெரிகிறது. அவர் 1000-பவுன் வரையில் ஒரு தடவைக்கு சன்மானமாகப் பெறுகிறார். அமெரிக்கர்கள் அவருக்குக் கொடுப்பது நஷ்டமில்லையென்று கண்டிருக்கின்றனர்.

---

பிரான்சுதேசம் சுகவாசத்திற்கும் பேர்போனது. அங்கேசதாகாலமும் ஐரோப்பியசீமான்களும் சீமாட்டிகளும் கூடின வண்ணமாகவே யிருப்பார்கள். அப்படி இருப்பதால் அத்தேசத்தாரைக் கேட்பானேன். அவர்கள் ஸ்திரீ புருஷர்களாக முறைப்படி வசிக்க இஷ்டப்படாமல் சமயத்திற்குத் தக்கபடி இருந்து வருகிறார்கள். இதனை முதன் முதல் பார்த்துக் குறைகூறினது அமெரிக்க ஐக்கிய நாட்டின் பழைய தலைவரான மிஸ்டர் ரூஸ்வெல்ட்டாம். ஜனசங்கை குறைவதால் உண்டாகும் அபாயத்தை உணர்ந்து பிராஞ்சியர் கண் விழித்துக்

228a
MADRAS

கொண்டு முறைப்படி கலியாணம் செய்துகொண்டு வாழ்ந்து குழந்தைகளையுடையோருக்குக் குறைந்த வரியும், மற்றோருக்கு ஜாஸ்தி வரியும் விதிக்க ஏற்பாடு செய்திருக்கின்றனர். 3-குழந்தைகளுக்கு மேற்பட்டோருக்குக் குழந்தைகளின் சங்கியைக்குத் தக்கபடி வரி குறைக்கப்படும்.

—

எல்லூரில் கவர்ன்மெண்ட் மகமதிய பெண்பாடசாலை:—எல்லூரில் ஹிந்துப்பெண் பாடசாலை யொன்று ஏற்கனவே ஸ்தாபிப்பதாக ஏற்பாடு ஆயிருப்பதோடுகூட, அவ்விடத்தில் கவர்ன்மெண்ட் மகமதியப் பெண் பாடசாலை யொன்றும் ஸ்தாபிப்பதற்கு சாங்க்ஷன் செய்ய வேண்டுமென்று வித்தியா இலாகா டைரெக்டர் கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொண்டிருந்தார். எல்லூரில் மகமதிய ஜனத்தொகை அதிகமா யிருக்கிறதென்றும், கவர்ன்மெண்ட் மகமதியப் பெண்பாடசாலை யொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டுமென அவ்வூர் மகமதியர்கள் அடிக்கடி தம்மை கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்றும், ஹிந்துப்பெண் பாடசாலையில் ஏற்பட்டிருப்பதுபோல 20 ரூபாயில் ஒரு உபாத்தினி, 15 ரூபாயில் ஒரு உபாத்தினி, 12 ரூபாயில் இருவர், 10 ரூபாயில் இருவர், ஆக ஆறு உபாத்தினிகளை நியமிக்கவேண்டும் என்றும் டை சர்க்கில் இன்ஸ்பெக்டரெஸ் ஏற்கனவே ரிப்போர்ட் செய்திருக்கிறதென்றும் உபாத்திமார்களின் சம்பளம் முதலியவைகள் உள்பட மொத்தச் செலவு வருஷத்திற்கு 1518 ரூபாய் ஆகும். இத்தொகை பெண் பாடசாலைக்கு ஏற்பட்டிருக்கும் இம்பீரியல் கிராண்ட் தொகையாகிய 87,000 ரூபாயிலிருந்து கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். அதன்படியே எல்லூரில் கவர்ன்மெண்ட் மகமதிய எலிமெண்டரி பெண்பாடசாலை யொன்று ஸ்தாபிப்பதற்கும், மேற்குறித்தவாறு உபாத்தினிகளை நியமனஞ் செய்வதற்கும் கவர்ன்மெண்டார் சாங்க்ஷன் கொடுத்துவிட்டது சந்தோஷமே.

—

லேடி சங்கரன் நாயருக்கு ஒரு விருந்துக் கச்சேரி:—லேடி ராமஸ்வாமி முதலியாரின் இருப்பிடமாகிய ராம மந்திரத்தில் ஒரு சிறந்த விருந்துக் கச்சேரி நடந்தேறிற்று. ஹிந்து ஸ்திரீகளின் கிளப்பைச் சேர்ந்த ஸ்திரீகள், ரிக்ரியேஷன் கிளப்பின் (Recreatoin Club) மெம்பர்களையும் சரஸ்வதி ஸமாஜத்தின் மெம்பர்களையும் மேற்கூறிய மந்திரத்திற்கு வரவழைத்து அவ்விருந்துக்கச்சேரி நடத்தப்பட்டது. சிறந்த ஆடையாபரணங்களை தரித்துக்கொண்டு ஸ்திரீகள் அந்த ஹாலில்வந்துகூட, அது வெகு சிறப்பாக விளங்கிற்று. விருந்தினர்கள் உபசரிக்கப்பட்டார்கள். ஒருவருக்கொருவர் சம்பாஷணை செய்துகொண்டார்கள். அதன்பிறகு மிஸ் கிருஷ்ணன், மிஸ் நாராயணராவ், மிஸஸ் T. ரங்காசாரியாரின் மருமகள் ஆகிய இம்மூவரும், பிடிலுடன் தமிழ்ப் பாட்டுக்களைப் பாடி சபையோரைச் சந்தோஷப்படுத்தினார்கள். அதன்பிறகு சிற்றுண்டிகள் அளிக்கப்பட்டன. வந்தேமாதரம் பாட்டு பாடப்பட்டது. அதன்பிறகு கிளப்பின் ஸெக்ரிடேரிகளுள் ஒருவராகிய மிஸஸ் T. ரங்காசாரி தமிழில் ஒரு அட்ரெஸ் வாசித்தார். மிஸஸ் அப்பாஸ்வாமி அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துச் சொன்னார். மிஸஸ் நம்பெருமாள் செட்டி, லேடி சங்கரன் நாயருக்கு புஷ்பமாலை சூட்டினார். லேடி சங்கரன் நாயர் தம்மை வரவழைத்து உபசரித்ததற்காகத் தாம் மிகவும் சந்தோஷப்படுவதாகச் சொல்லி அவர்களுக்கு வந்தனஞ் செய்தார். சந்தனம், புஷ்பம் தாம்பூலம் பழவர்க்கங்கள் முதலியவைகள் வழங்கப்பட்டதும் சபை கலைந்தது.

**SUPPLEMENT TO THIS ISSUE.**



எச். இ. லார்ட் பெண்ட்லெண்ட்,
சென்னை கவர்னர்.

**With the kind courtesy of G. A. Natesan & Co.**

MADRAS

# மாதர் மனோரஞ்சனி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

**Vol. XIV. Madras: November 1912. No. 11.**
புத்தகம் - கச. சென்னப்பட்டணம்: நவம்பர்மீ 1912. இலக்கம்-11.

## பர்மாதேசத்து குழந்தைகள்.

நமது இந்தியாவுக்கு கிழக்கே பர்மா என்ற தேசமிருக்கிறது. நமது 5-வது ஜார்ஜ் அரசசக்ரவர்த்திதான் இதை ஆண்டுவருகிறார். இது இந்தியாவுடன் சேர்க்கப்பட்டிருப்பதால் நமது வைஸிராய் லார்ட் ஹார்டிஞ்ச் இத்தேசத்துக்கும் வைஸிராய். இதற்கு ஒரு லெப்டினண்ட் கவர்னரிருக்கிறார். இது உஷ்ணமான தேசம்.

இத்தேசத்தில் அநேக நதிகளிருக்கின்றன. பர்வதங்களுமிருக்கின்றன. அநேக பர்மாதேசத்து ஜனங்கள் நதிக்கரைகளில் வசித்து வந்தார்கள். ஏனெனில் அத்தேசத்திற்கு நதிகளைத் தவிர வேறு தெருக்கள் கிடையாது. இப்பொழுது நமது துரைத்தனத்தார் அநேக சீர்திருத்தங்கள் செய்து பல ரஸ்தாக்களைச் செய்திருக்கிறார்கள். ரயில் பாதைகளையும் ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

குழந்தைகளுக்கு பர்மா நல்லதேசம்தான். பர்மியர்கள் உல்லாசமாயிருப்பவர்கள். அவர்கள் தங்கள் குழந்தைகளை மிக அன்புடன் நேசிக்கிறார்கள்.

தங்கள் குழந்தைகளை எப்பொழுதும் சந்தோஷமாயிருக்கும்படி செய்து வருகிறார்கள். இப்படி செய்வதால் தான் அவர்களும் மகிழ்ச்சி யடைகிறார்கள். அவர்கள் சந்தோஷமா யிராவிட்டால் பர்மியர்கள் விசனமடைகிறார்கள்.

இவர்கள் உறுதியான மூங்கில் புல்லால் செய்த வீடுகளில் வசிக்கிறார்கள். இவைகளைப் பாயைப்போல் முடைந்து 4 அல்லது 5 பாய்களைச் சேர்த்து கட்டுகிறார்கள். வீடுகள் கட்டும்பொழுது ஆணிகளை அடிக்க உபயோகிப்பதில்லை. ஏணிவைத்துக்கொண்டு ஏறிப்போகவேண்டும். ஏனெனில் வீடுகள் பூமிக்கு மேல்கட்டப்பட்டிருக்கின்றன. இவ்விதம் செய்யாமலிருந்தால் நதியின் ப்ரவாகம் உள்ளே வந்துவிடும்.

சிற்சில மாஸங்களில் தினம் கனமழை பெய்யும். அப்பொழுது நதிகளில் ப்ரவாகம் ஏராளமாய் வரும். இது கரைகளை உடைத்துக்கொண்டு வந்துவிடும். பூமிக்குமேல் உயரமாக வீடுகளைக்கட்டியிராவிட்டால் ப்ராவாகம் வீடுகளை அடித்துக்கொண்டுபோகும்.

ஒரு குடும்பத்தில் ஒரு குழந்தை பிறந்தால் ஒரு அழகான தொட்டிலில் குழந்தையை விடுவார்கள். அது மூங்கில்களால் செய்யப்பட்டு அழகான பட்டாடையால் மூடப்பட்டிருக்கும். குழந்தைக்கு விளையாட்டு சாமான்களைக் கொடுப்பார்கள். அவைகளெல்லாம் மிகவும் பளபளப்பான வர்ணமுடையதாயிருக்கும். கண்ணைப் பறித்துக்கொண்டு போகுமாம். இத்தேசத்தாருக்கு இவ்வித வர்ணங்களில் அத்யந்த ப்ரியம்.

நீங்கள் குழந்தைகளா யிருந்தபொழுது உங்கள் தாய்மார்கள் உங்களை தொட்டிலில் விட்டு "ஆராரோ—" என்ற தாலாட்டு பாட்டுகளைப்பாடி ஆட்டியது உங்கள்ஞாபகத்திலிருக்கிறதா? பர்மாவிலும் தாய்மார்கள் இவ்விதமே தங்கள் பாஷையில் தாலாட்டுபாடி வருகிறார்கள்.

குழந்தைகள் வயதாகி அங்குமிங்கும் நடமாட சக்தியடையும் பொழுது தான் வெகு சந்தோஷமாயிருக்கும். ஏனெனில் சாதாரணமாக குழந்தைகள் ஏதாவதொரு காரியம் செய்ய விரும்புமல்லவா ? அதாவது குழந்தைகள் செயயும் காரியம் சிற்சில சமயங்களில் நமக்குத் தொந்திரவாகத் தோன்றும். அப்படி செய்வதை நாம் தடுக்கவும் கூடாது. பயமுறுத்தவுங் கூடாது. கண்டபடி திட்டவுங் கூடாது.

அத்தேசத்து குழந்தைகள் வீட்டிற் கெதிரில்விளையாடும். நதிக்கரைக்குப்போக விரும்பும். அக்குழந்தை தவறி நதியில் விழுந்துவிட்டால் அதன் தாய் நதியில் முழுகி பத்திரமாய் குழந்தையை எடுத்துக்கொண்டு வருவாள்.

ஒவ்வொருவருக்கும் பர்மாவில் நீந்தத்தெரியும். சிறிய பிள்ளைகளும் பெண்களும் நடக்க ஆரம்பித்தவுடன் நீந்தவும் கற்றுக்கொள்ளுகிறார்கள்.

பெற்றோர்கள் தங்கள் புத்திரர்களும் தைரியமாக இருக்கவும், தேகத்தில் நோவுண்டானால் அழாமல் பொறுத்துக்கொண்டிருக்கவும் போதித்து வருகிறார்கள். கைக்குழந்தைகள்கூட அழாமலிருக்கவும் போதித்து வருகிறார்கள். கைக்குழந்தைகள்கூட அழாமலிருக்க கற்றுக்கொள்ளுகின்றன. இப்படி இவர்கள் செய்து வருவது நல்லதல்லவா ?

அவர்கள் நீங்கள் இங்கு விளையாடும் ஆட்டங்களையே அநேகமாக ஆடுகிறார்கள். பம்பரம் விடுவதிலும், காத்தாடி விடுவதிலும் அவர்களுக்கு ஆசை அதிகம். புட்பால் க்ரிகட் முதலிய பந்து ஆட்டங்களும் இப்பொழுது ஆடுகிறார்கள்.

புருஷர்களுக்கும் இவ்வித ஆட்டங்களில் அதிக ப்ரியம். அவர்களும் தங்கள் குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடுவார்கள். அவர்கள் பந்தயம் வைத்துக்கொண்டு படகுகளைவிட அதிகமாக விரும்புகிறார்கள்.

எல்லாப் பிள்ளைகளும் பாடசாலைக்குப் போகிறார்கள். சில பெண்களும் கூட பாடசாலைக்குப்போகிறார்கள். அங்கே இவர்கள் படிக்கவும், எழுதவும், கணக்குப்போடவும் கற்றுக்கொள்ளுகிறார்கள்.

பெண்கள் வயதாக ஆக வெகு அழகுள்ளவர்களாயும் முகமலர்ச்சியுடையவர்களாயும் தேறுவார்களாம். பர்மா ஸ்திரீகள் அதிக சுதந்தரம் பெற்றவர்கள். எப்பொழுதும் சந்தோஷமாயிருக்கிறார்கள். இவர்களைப்போல் பூலோகத்தில் எத்தேசத்திலும் ஸ்திரீகள் இவ்வித ஸ்திதியில் இல்லையாம்.

---



# கமலாலயம்.

## வான ஆராய்ச்சி.

தூரதிருஷ்டிக் கண்ணாடியைச் செவ்வையாய் முக்காலிமீது பதித்து
வைத்தாயிற்று. அதன் துவாரங்களைத் திறந்துவிட்டு கண்ணாடிகளைத்துடை
த்து ஐயர் ஏதோ சில ஆணிகளைத்திருப்புகின்றார். எல்லாம் சித்தமானதும்
தான் ஒருதடவை இயந்திரத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு, "இப்பொழுது நீங்
கள் எல்லாரும் ஒவ்வொருவராய் பார்க்கவரலாம். இன்னும் ½ மணிக்குள் சந்
திரன் அஸ்தமித்துவிடுவான். ஆதலால் சந்திரனைமுதலில் தரிசித்துக்கொண்டு
மற்றவைகளின் பக்கம் குழாயைத்திருப்புகின்றேன்" என்றார்.

சந்திரனைப்பார்க்க அநுகூலமாக அதன்பக்கம் திருப்பிக்கொண்டே "இது
காறும் பிறைச்சந்திரனை நீங்கள் எல்லாரும் எவ்வளவோ தடவை பார்த்து
இருக்கிறீர்கள். 'அம்புலிமாமா வாவா' என்று அழைக்கும் குழந்தைக்குச் சந்
திரன் எவ்வளவு விநோதமாய்த் தோன்றுகின்றதோ, அதற்குச் சற்றும்
குறைவுபடாமலே அச்சந்திரனை ஆராய்ச்சிசெய்யும் தத்துவ சாஸ்திரிக்கும்
தோன்றுகின்றது. உங்களில் பலருக்கு சந்திரனைப்பற்றி விசேஷமான சில
விஷயங்கள் தெரியாமல் இருக்கலாம். இப்பொழுது அதைச்செவ்வையாய் இக்
கண்ணாடி மூலமாய் பரிசைசெய்யும்போது ஏதோ எனக்குத்தெரிந்த சில
விஷயங்களை எடுத்துச்சொல்லி உங்களுக்கு திருப்தி உண்டாக்க எண்ணியிரு
க்கிறேன். பிறைச்சந்திரனை நேரே பாருங்கள். வெள்ளிய பாகத்தின் உட்புற
த்து வளைவும் வெளிப்புறத்து வளைவும் ஒழுங்காய்க் காணப்படுகின்றன. சற்
றுச்செவ்வையாய்ப் பார்த்தால் உட்புறத்து வளைவில் சில ஒழுங்கின்மை புலப்
படும். தவிரவும் வெள்ளியபாகத்தில் சில இடங்களில் சற்றே களங்கங்கள்
தென்படுகின்றன; இவற்றை பரிசோதனை செய்துகொண்டு கண்ணாடி வழி
யாய் அதே பாகங்களை இன்னும் கவனமாய்ப் பார்க்கவேண்டும். அப்பொழுது
தான் சந்திரனுடைய தன்மை வியக்தமாய்ப்புலப்படும். உங்கள் இஷ்டப்படி
யாக வேண்டுமானாலும் வந்துபார்க்கலாம்" என்றுசொல்லி சற்றே விலகி
நின்றுகொண்டார்.

பெண்டிர் சற்று கூச்சப்படுவார்களே என்ற எண்ணத்தால் அவ்வாறு
விலகிப்போனாரே ஒழிய வேறு ஒன்றுமில்லை. அப்பொழுது ஞானம் "கமலா
நீயே முதல் முதல் போய்ப்பார்; ஏதாவது விசித்திரமாய்த் தென்பட்டால்
பயப்படாதே!! நீ பார்த்துச் சொல்வதை நாங்கள் எல்லாம் கேட்டுக்கொண்டு
பிறகு போய்ப்பார்க்கின்றோம்"என்றாள். கமலம் கண்ணாடியண்டை கண்ணைச்
செவ்வையாய் வைத்துக்கொண்டு பார்க்கின்றாள்.

கமலம் "ஐயோ! இதென்ன!! இதென்ன!!! ஆச்சரியம்! சந்திரன் தானு
இது; ஏதோ ஒருவெள்ளிய பாறை ஆகாயத்தில் தொங்குவதுபோல் தோன்று
கின்றதே; சந்திரன் சாதாரணமாய் மானத்தில் ஒட்டிக்கொண்டு இருப்பது
போல் அல்லவா தோன்றுகின்றது? இப்பொழுது ஏன் நட்டநடுவில் ஆதார
மில்லாமல் தொங்குகின்றது? இதுவாசந்திரன்?" என, ஞானம் "கமலா, சந்தி
ரன் எப்பொழுதும் ஆகாயத்தில் தொங்கிக்கொண்டு தான் இருக்கிறான், ஒரு
வரும் அவனை வானத்தில்மேல் கோந்துபோட்டு ஒட்டவைக்கவில்லை. தூரத்

தில் இருப்பதால் அவன் வானத்தில் ஒட்டியிருப்பதுபோல் காண்கிறான். அவ்
வளவே தான்!! இன்னும் என்னவிசேஷம் தென்படுகின்றது?"

"வெளிப்புறத்து ஓரத்தில் வித்தியாசம் இருப்பதுபோல் காணவில்லை.
ஒழுங்காகவே தான் இருக்கின்றது. ஆனால் உட்புறத்து ஓரம் எவ்வளவோ கோ
ணல்; எத்தனை குழிகள்; ஐயோ இது ஏன் இப்படி குழிக்குழியாய்க்காணப்
படுகின்றது? கருப்பாய் இருக்கும் பாகத்தில் வெளுப்பான பொட்டுகள் எவ்
வளவு? அவைகள் என்னவோ?" ஞானம் "அவையெல்லாம் பிறகு விவரமாய்த்
தெரிந்துகொள்வோம். நீபார்த்து முடிந்தால் தயவுசெய்து பின்னேவா, மற்ற
வர்கள் பார்க்கட்டும்."

ருக்மணியம்மாள் "மங்களம்மாள், நீங்கள் போய் பாருங்கள்; நாங்கள்
பிறகு வருகிறோம்" என, அவரும் பார்த்துவந்தாய்விட்டது.

மங்களம் "ஞானம்பா, அம்புலிமானைக் காணோமே" என, ஞானம்,
"அம்புலிமான் என்று தனியாய் ஒன்றுமில்லை. குழிகளாயும் கோடுகளாயும்
காண்கின்றனவே அவைதாம் அம்புலிமானாக நம் கண்ணுக்குத் தோன்று
கின்றன. அப்பால் காணும் மலையை நீங்கள் பகல்காலத்தில் வெயில் அடிக்கும்
போது பார்த்தால் ஒருபுறம் சூரிய வெளிச்சம் படுவதால் நிழல் சாய்கிறது;
தூரத்தில் இருந்து பார்ப்பதால் நமக்கு நிழல் கருப்பாயும் சூரியன் படும்
பாகம் பிரகாசமாயும் விளங்குகின்றன. மற்று வேறில்லை. மலையின் மேடுபள்
ளம் சரியாய் நமக்குத் தோன்றுவதில்லை; அதனாலேயே மலையின் பக்கம்
மொழுமெழுவென்று இருப்பதாகச் சொல்லக்கூடுமா? இக் கண்ணாடியைக்
கொண்டு பார்ப்பின் சூரியன்படும் பாகம் பிரகாசமாய் இருப்பதுப, வெளிச்
சம்படாத நிழல் விழும் இடங்கள் இருண்டுகிடப்பதும் வியக்தமாய்க் காண
லாம்".

லக்ஷ்மி "ஆனால் சந்திரன்மேலும் மலைகள் இருக்கின்றனவா என்ன?
அங்கேயும் சூரிய வெளிச்சம் படுகின்றதா?"

ஞானம் "ஆக்ஷேபணையென்ன? நமது நிலத்தின்மேல் எவ்விதமாய்ப்
பள்ளத்தாக்குகளும், மலைகளும், மலைச்சிகரங்களும் இருக்கின்றனவோ, அப்
படியே சந்திரன்மேலும் மலைகளும், குழிகளும், பள்ளத்தாக்குகளும் இருக்
கின்றன. நமது நிலத்தில் சூரியன்பட்டு எப்படி வெளிச்சம் உண்டாகின்
றதோ அப்படியே சந்திரன்மேலும் சூரியவெளிச்சம் விழுகின்றது.

கமலம் "சூரிய வெளிச்சம் படுவதானால் இப்பொழுது சூரியனை நாம்
பார்ப்பது இல்லையே; எப்படி வெளிச்சம் சந்திரன்மேல்மட்டும் படுகின்றது?"

ஞானம் சந்திரசேகரரை நோக்கிச் சற்று புன்சிரிப்புச் சிரிக்கவே அவர்
"எப்படியெனில், நமது மேஜைமீது ஒரு விளக்கு இருப்பதாக வைத்துக்
கொள்வோம். எதிரே சுவற்றின்மேல் மாட்டியிருக்கும் படத்தில் வெளிச்சம்
விழுவதால் படம் நமக்குப் புலப்படுகின்றது. நாம் பின்புறம் திரும்பிக்கொண்
டால் நம் முதுகின்மேல் விளக்கு வெளிச்சம்படுகின்றது; ஆகையால் விளக்கு
வெளிச்சம் நமக்குத் தென்படுவதில்லை. இருப்பினும் நாம் படத்தைப் பார்க்க
முடியுமல்லவா? படத்தில் வெளிச்சம் விழவும் தடை ஒன்றும் இல்லை பாருங்
கள். அதுவேபோல் இப்பொழுது நாமிருக்கும் பூமியின் பாகம் சூரியனுக்கு
எதிரே இல்லை. அக்காரணத்தினால் நமக்கு இப்பொழுது இரவாயிற்று. ஆனால்



நமக்கு எவ்வளவோ மைல் அப்பால் உள்ள சந்திரன்மீது சூரியனது வெளிச்
சம் விழுந்துகொண்டே இருக்கின்றது. ஆகையால் சந்திரன் பிரகாசிக்கின்
றான். சூரியனது வெளிச்சம் விழாவிட்டால் தானே பிரகாசிக்கும் தன்மை
சந்திரனிடத்தில் இல்லை. அப்படி இருக்குமானால் மந்தமாய்த் தோன்றும்
இதர பாகமும் வெளேரென்று பிரகாசிக்கவேண்டுமல்லவா? நாளுக்குநாள்
சந்திரனுடைய பிரகாசமான பாகம் அதிகமாய் நமக்குக் காணப்படுகின்றது
வளர்பிறை நாள்களில்; தேய்பிறையிலோ நாளுக்குநாள் நாம் காணும் பிர
காசபாகம் குறைகின்றது. இது சந்திரனுடைய கலை உயரவும் தேயவும் கார
ணம். நான் சொல்வது உங்களுக்கு அவ்வளவு தெளிவாய் விளங்கவில்லை
யென்பது நிச்சயம். இதே விஷயத்தை இன்னொருமுறை படங்களையும் பந்து
களையும் வைத்துக்கொண்டு விவரிக்கின்றேன். இப்பொழுது இவ்வளவுதான்
சொல்ல சௌகரியமாய் இருக்கின்றது.

இன்னும் ஏதாவது கேள்விகள் கேட்கவேண்டுமானால் அவற்றிற்கும்
பதில் சொல்லத் தயாராய் இருக்கின்றேன் என்றார். சிலருக்குக் கேள்வி
கேட்க விருப்பமிருந்து இருக்கலாம். ஆனால் யாரும் கேட்கத் துணியவில்லை.

எல்லாரும் ஒவ்வொருவராய்ப்பார்த்து ஆயிற்று; கடைசியாகச் சந்திர
சேகரர் "வீரா, நீயும் தோட்டக்காரனும் வேண்டுமானால் பாருங்கள்; பொழுது
போகின்றது; சந்திரன் அஸ்தமித்துக்கொண்டிருக்கிறான்" என்று சொல்லு
முன்னமேயே நடராஜன் ஓடிவந்து "நானும்பார்க்கிறேன் அத்திம்பேரே"
என, நாங்கள் மூவரும்பார்த்தோம். நடராஜன் "அத்திம்பேரே,சந்திரனுடைய
இருண்ட பாகத்தில் வெள்ளைப்பொட்டுகள் காணப்படுகின்றனவே அவை
யென்ன?" என வினவினான்.

சந்திரசேகரர் "அவைதாம் சந்திரன்மீதுள்ள மலைகளின் உச்சிகள்.
பொட்டுகள்போல் காணவேண்டிய அவசியம் என்னவெனில் சொல்லுகிறேன்.
உதயத்தில் சூரியன் புறப்பட்டதும் எந்த வஸ்துக்களின்மேல் முதலில் வெளி
ச்சம்படுகின்றது? மலை உச்சி, மரங்களின் உச்சி, மாடி, கோபுரம்—இவை
களின் மீதல்லவா? ஏன்? அவைகள் உன்னதமாய் உயர்ந்து இருக்கின்றன.
அவற்றிற்கு நடுவேயுள்ள பிரதேசங்களில் வெளிச்சம் விழுவதேயில்லை. சில
மணிநேரம் கழித்து சூரியன் மேலே ஏற ஏற பள்ளமான இடங்களின்மேலும்
வெளிச்சம்படத் தொடங்குகின்றது. சந்திரனுடைய மேற்புறமும் கரடுமுர
டாய் இருப்பதினால் மலைச்சிகரங்களை முதலில் சூரிய வெளிச்சத்தை மீதேற்
றுக்கொண்டு பிரகாசிக்கின்றன. இப்பொழுது கருப்பாய் இருக்கும் பாகமும்
இன்னும் சிலநாளில் சூரியன் முகமாய்த்திரும்பும்போது எல்லா இடங்களி
லும் சூரிய வெளிச்சம்படும்" ஞானம் "அவ்வெள்ளைக்கோடுகள் என்ன?"
சந்திரசேகரர் "அவைகளா? அக்கோடுகள் மலைத்தொடர்கள்போலவும், மதில்
கள்போலவும், மேடாய் நெடுந்தூரம் வியாபித்து இருக்கும் இடங்கள். இரு
ண்ட களங்கமாகத்தோன்றும் இடங்களே பள்ளத்தாக்குகள். அவை நிழலில்
இருக்கின்றன. பூர்ணசந்திரனை இக்கண்ணாடி வழியாய்ப்பார்ப்பின் நான்சொல்
லும் விஷயங்கள் இன்னும் நன்றாய் விளங்கும். ஞானம் "அக்குழிகளும் மலை
களும் எவ்வாறு உண்டாயின?"

சந்திர "அவை உண்டான வழிகளை விளக்குவது எளிதன்று; ஆயினும்
ஒருவாறு சொல்லுகிறேன். சந்திரன் ஒருகாலத்தில் அதிக உஷ்ணமான வஸ்
துவாய் இருந்ததாம். அது குளிரக்குளிர உருகினநெய் உறைவதுபோலவும்,

உருகின அரக்கு உறைவதுபோலவும், மேற்புறம் முதலில் கனப்பொருளாக
மாறிற்றும். உறைந்த கனப்பொருள் மறுபடி குளிரக்குளிர தன்னளவில் சுறு
ங்குமல்லவா? சுறுக்கம் ஏற்படவே மேற்புறமுள்ள கனப்பொருள் உள்ளிருக்
கும் திரவப்பொருளான வஸ்துக்களை அழுத்த அவை அழுத்தம் தாங்கமாட்
டாது, சில இடங்களில் பொந்து செய்துகொண்டு வெளிப்புறப்பட்டு மலைக
ளாகவும், பள்ளத்தாக்குகளாகவும் குவிந்துவிட்டன. பலபாகங்களிலும், பல
நாட்களாய் இவ்விதம் நிகழ்ந்தது பற்றி எவ்வளவோ கணக்கற்ற மலைகள் சந்
திரன்மீது காணப்படுகின்றன. நமது பூமியின்மீது இன்றைக்கும் நாளைக்கும்
இவ்வாறே நிகழ்கின்றது. எரிமலைகள் தீ உமிழ்கின்றனவென்கிறார்களே அவ்
விஷயம் இப்படியே தான் நிகழுகின்றது. இன்னும் நமது பூமியின் அடிபாக
ங்கள் உருகின தன்மையிலேயே இருக்கின்றன. மேலும், அள்ளையிலும் அழு
த்தம் மீறினவுடனே உள்ளடைந்து இழுக்கும் நெருப்புக்குழம்பும், நீராவியும்
வெளிப்புறப்பட்டு எரிமலையாகின்றன. சுருக்கமாய்ச் சொல்லுமிடத்து சந்திர
னில் தோன்றும் குழிகள் எல்லாம் எரிமலையின் வாய்கள். பக்கத்தில்தோன்
றும் மேடுகள் அம்மலைகள் வெளிக்கிளப்பி உமிழ்ந்துவிட்ட மண்முதலிய வஸ்
துக்கள் நம்பூமிபோன்று இன்னும் உஷ்ணமான எரிக்குழம்புகள் சந்திரனில்
இல்லையென்று தோன்றுகின்றது. இவ்வெரிமலைகள் பல ஆண்டுகளுக்கு முன்
னே ஏற்பட்டு இப்பொழுது முற்றிலும் குளிர்ந்துபோனவை. மனிதன் சந்தி
ரனை ஆராய்ச்சி செய்யத்தொடங்கிய காலம் முதல் அவனிடத்தில் ஒரு எரிமலை
யாகிலும் புதிதாய் உண்டாகவே இல்லை. அவ்வாறு புதிது புதிதாய் எரிமலை
கள் உண்டாய்க்கொண்டே இருக்குமானால் சந்திரனது மேற்புறம்மாறிக்கொண்
டே இருக்கவேண்டுமல்லவா? அவ்விதம் மாறுபாடு ஒன்றும் காணப்படாமல்
இருப்பதால் சந்திரன் முற்றிலும் குளிர்ந்துபோய், நிலைமாறுத்தன்மையை
அடைந்துவிட்டது என்றுசொல்ல இடமிருக்கின்றது. நிலைமாறுபாடு எப்பொ
ழுது இல்லையோ அப்பொழுது ஒவ்வொரு மூலையையும் வரையரைவாய்ப்பரி
க்ஷித்து, அளவிட்டு படம் (Map) வரைந்து இருக்கிறார்கள். நமது கோயமுத்
தூர் ஜில்லாமேப்பில் எவ்விதம் அமராவதி காவேரி இந்நதிகளையும், பழனி
மலை, நீலகிரி, பிளிகிரி ரெங்கன்மலை, இவற்றைக்கண்டு பிடிக்கிறோமோ அப்
படியே சந்திரனுடைய மேப்பிலும் சந்திரனுடைய மேப்பிலிருந்து இடங்களைக்
கண்டுபிடிக்க சௌகரியப்படும்படி மலைகளையும் பள்ளத்தாக்குகளை பேரிட்டுக்
காட்டியிருக்கின்றனர்.

"இம்மேடு பள்ளங்கள் நிலைமாறுதிருப்பதற்கு இன்னொரு காரணமும்
உண்டு; அது என்னவெனில், ஜலம் இல்லாமையே; நம்முலகில் ஜலம் பூமியின்
மேற்புறத்தின் உருவத்தை சதாமாற்றிக்கொண்டே இருக்கின்றது. இப்பொ
ழுது மலைப் பிரதேசமாய் இருப்பது இன்னும் சில வருஷங்களில் ஜலம் ஓடி
ஓடி பள்ளத்தாக்குகளாக மாறலாம். இதே இடங்களில் பல ஆயிரம் வருஷங்
களுக்கு முன்னர் சமுத்திரமட்டத்திற்கு கீழ் இருந்து இருக்கவும் கூடும்.
அவ்வாறு மாற ஏதுவே கிடையாது சந்திரனிடத்தில்!! ஜலம் என்ற பிரஸ்
தாபமே கிடையாது என்றால் மழை, மேகம், மோடம், பனி, இவையென்று
சொல்லவும் வேண்டுமா!! இவற்றால் விளையும் தொந்தரவே கிடையாது. நம்
முலகில் சுற்றிலும் காற்று இருப்பதுபோன்று சந்திரனிடத்தில்காற்றுமில்லை.
இவ்விபரீத குணங்களையுடைய சந்திரன் நமக்கு இங்கிருந்து பார்க்க வினோத
மாயும், அழகாயும், தோன்றினும், நாம் சந்திரனிடத்தில் போகமட்டும் கூடு
மானால், அங்கே ஒரு மலைமேல் நின்றுகொண்டு சுற்றிலும் பார்த்தால், நெடுக்



[illegible]ரம் வியாபித்துக்கிடக்கும் அகாதமான மலைகளும், கிடுகிடு பாதாளமாய்த்
தோன்றும்' பள்ளத்தாக்குகளும், தண்ணீர் இல்லா உலர்ந்த காக்ஷியும், வாயு
வின்றிச் சப்தமாய் இருப்பதும், நின்று பரிக்ஷைபார்க்கும் நமது தனிமையும்,
அத்தியந்தம் அச்சத்தைக் கொடுக்குமென்பதற்கு ஐயமில்லை. 'மழையின்றிப்
பாழடைந்து, பசுமையற்று, எரிமலைகளின் கொடும் பொருள் நிரம்பி, சூரிய
வெளிச்சத்தில் பிரகாசிக்கும் இச்சந்திரனை இறந்துபட்ட பழையதோர் பூமி
யென்னலாம்". அதாவது நம்போலியர் சந்திரமண்டலத்தில் வசித்தல் அசாத்
தியம்—ஜீவகோடிகள் அங்கே இல்லவும் இல்லை.

"ஆயினுமென்! எந்த எந்த ஜாதியார் எவ்விதமாய்ச் சந்திரனை வர்ணி
த்து இருக்கின்றனர்? நம்மவர் சந்திரன்மீது மான்படுத்து இருப்பதாகவும்
முயல் படுத்து இருப்பதாகவும் வர்ணிக்கக் கேட்டு இருக்கிறோம். சீனதேசத்
தாரும் நம்மைப்போலவே, சந்திரன்மீது முயல் படுத்துறங்குவதாகச் சொல்
லுகின்றனர். இன்னுமொரு விந்தை, அவர்கள் சொல்வது! அம்முயல் சந்திர
னில் இருப்பதுபற்றியே நாம் நிலா வெளிச்சத்தில் நடந்தால் நிழல் நிலத்தின்
மேல் விழுகின்றதாம். பெசபிக் மஹாசமுத்திரத்திலுள்ள சில தீவுகளில் உள்
ளோர் சந்திரனில் ஒருபெண்மணி குடிகொண்டிருப்பதாக எண்ணுகின்றனர்.
இன்னும் சில தேசத்தார் சந்திரனில் ஒரு மனிதன் ஒரு முள்மூட்டையைச்
சுமந்துகொண்டு ராந்தலும் கையுமாய்த் தன் நாயை நடத்திக்கொண்டு போகி
றான் என்கின்றனர். இம்மாதிரிகள் இன்னும் எவ்வளவோ விதமாய் தத்தம்
மனத்திற்கு வந்தபடியெல்லாம் ஜனங்கள் அபிப்பிராயம் கொண்டிருக்கின்
றனர். இப்பொழுது சாஸ்திர ஆராய்ச்சி முற்ற முற்ற அத்தப்பு அபிப்பிராயங்
கள் எல்லாம் தவிடு பிடியாய்ப் பறந்து விடுகின்றன. **டெலஸ்கோப்** என்னும்
தூரதிருஷ்டிக் கண்ணாடியின் மஹிமை இவ்வளவென்று அளவிடக்கூடுமோ?
மூட பக்தியை வேரறுத்து உண்மையையும், தெளிவையும் நிலைநாட்டி இருக்
கின்றது. இவ்வற்புதக் கருவியை உபயோகித்து சந்திரனின் ஒவ்வொரு பாக
த்தையும் ஆராய்ந்துபார்த்த மஹாபுருஷர்களின் பேரும் உலகத்தில் என்றும்
நிலைநிற்கும். ஏனெனில் ஒவ்வொரு குன்றுக்கும், பீட பூமிக்கும், கணவாய்க்
கும் பள்ளத்தாக்குக்கும், ஒவ்வொரு மஹானின் பேரைவைத்து இருக்கின்றார்
கள். நாளையதினம் பகலில் ஒரு பெரிய சந்திரபடத்தை உங்களுக்குக் காட்டு
கிறேன். அதில்எல்லாவற்றையும் தமிழிலேயேநான் எழுதியிருப்பதுபற்றி நீங்
களே அவற்றைப் படித்தறியலாம். இனிப்பொழுதாகிறபடியால் மற்ற வினோ
தங்களைப் பார்ப்போம்". கண்ணாடியண்டை போய் ஐயர் ஏதோ திருகுகின்
றார்.

இதற்குள் ருக்மணியம்மாள் "அம்மைமார்களே! இன்று என் மனதில்
பொங்கும் ஆனந்தத்தை என்னவென்று சொல்வேன். பேசக்கூட வார்த்தை
கள் கோர்வையாய் வரவில்லை. ஹா! ஹா!! அடிவானத்தின் செக்கரும், அஸ்
தமிக்கும் சந்திரனும், மினுமினுக்கும் நக்ஷத்திரக் கூட்டங்களும், மந்தமான
இருளில் அமைதியாய் உறங்கும் இவ்வுலகும், பனி மூடிய இப் பூந்தோட்ட
மும்,—என்னவென்று வர்ணிக்கட்டும்!! இத்தகைய இயற்கைவினோதங்களைக்
கண்ணுற்றல்லவா கவிக்காளிதாசன், பவபூதி, ஜெகப்பிரியர், கம்பன் முதலிய
வர் தம் இனிய கவிகளில் இக்காட்சிகளை பற்பலவிதமாய் பாடியுளர். இவற்
றைப் பார்த்து ஆனந்திக்காத கண்களும் கண்களா?"

ஞானம் "நான் பலநாளைக்குமுன் படித்த ஒரு வர்ணனை ஞாபகத்திற்கு
வருகின்றது. (பாடுகின்றாள்):—

கானத்தி னேனமொத்த கனவிருட் குழலங்
வேனத்தின் எயிற்றையொத்த திளம்பிறை யதனைப்பூண்ட
கோனொத்த தண்டமந்தக் கூரெயி ருகுத்தமுத்தம்
தானொத்து விளங்குகின்ற தாரகா கணங்களெல்லாம்.—கந்தபுராணம்.

மீனாம்பிகை: "இது இருக்கட்டும் அக்கா! இங்கே தலைக்குமேலே பார்த்தீர்களா! ஒரே அடியாய்த் தென்கோடுமுதல் வடகோடுவரை வெளேரென்று தெரிகின்றது. இது என்னவென்று அறியவேண்டாமா? இதைத்தான் பார்ப்போமே!" என்றாள். எல்லாரும் உச்சியில் உயர நிமிர்ந்து பார்க்கவே, வானத்துக்குச் சுண்ணாம்பு பூசியதுபோல், சுமார் இரண்டு கஜ அகலத்துக்கு வெளேர் என்று வெளிச்சம் பரவியிருக்கக் கண்டோம். இதை தினமும் பலர் பார்த்து இருக்கலாம். ஆனால் இப்பொழுது ஒருவர் காட்டவே, அதன் விவரத்தைச் சொல்ல இன்னொருவர் பக்கத்தில் இருப்பதுபற்றி எல்லாருக்கும் அந்த இடத்தை பரிக்ஷிக்கவேண்டுமென்ற ஆவல் உண்டாயிற்று. (தொடரும்)

☞ வாயில் காப்போன்.

# ஜ ய சீ ல ன்.

இச்சிறந்த நாவல் (மிஸ்ஸஸ் சாமிநாதன்) மிஸ்டர் சாமிநாதய்யரின் மனைவியால் எழுதப்பட்டிருக்கிறது. இம்மாது கல்விகற்றவர். இந்துக்கள் ஆசார விஷயங்களில் சீர்திருத்தமடைய வேண்டுமென்று வெகுகாலமாக விரும்பி இந்து சகோதரிகளுடன் சேர்ந்து கான்பிரன்ஸ், மாதர் சங்கம் முதலியவைகளில் மிக்க சிரத்தை எடுத்துக்கொண்டு உழைத்து வருபவர்களில் முக்கியமானவர் பெண்கல்வி விருத்தியடையவேண்டும் என்ற எண்ணம் இம்மாதுக்குப்பூராவாக உண்டு. தமது குமாரத்தியையும் சரியானவழியில் படிக்கவைத்து அக்குமாரத்தியின் விருத்தியை நாடிவருகிறார்கள். இவரது கணவரும் அவ்வித எண்ணமுடையவர்தான். ஆகவே இம்மாது ஆடவர்கள் சென்னையில் நாவல்கள் இங்க்லீஷ் புஸ்தகங்களைப்படித்து அதன்படி எழுதி பிரசுரித்து வருவதுபோல் எழுதாமல், மிஸ்மேரிகாரிலி, மிஸ்லெஸ் ஹென்றி உவுட் முதலிய ஆங்கிலமாதர்கள் தங்கள் ஜனசமூகம் சீர்திருத்தமடைய ஒவ்வொன்றையும் ஒற்றுப்பார்த்து நன்றாக ஆராய்ந்து சிறந்த நாவல்களை எவ்விதம் எழுதி வருகிறார்களோ அவ்விதமே நமதுசகோதரியார் இந்து குடும்பங்களில் காணும் பலகுறைகளையும், அவைகளை நீக்க நல்லவழிகளையும் தீரயோசித்து இப்புதிய சிறந்த புஸ்தகத்தை எழுதியிருக்கிறார்களென்று நமக்கு நம்பிக்கையுண்டாகிறது. இம்மாதிரி ஆடவர்களும் சரி, ஸ்திரீகளும் சரி இதுகாறும் எழுத முன்வரவில்லை என்போம். ஒவ்வொரு அத்தியாயமும் மனோகரமாயும், நாம் மேன்மையடைய சிறந்த கருத்துக்களையுடையதாயு மிருக்கின்றன. யாவரும் எளிதில் அறிந்துகொள்ளுமாறு எளியநடையில் எழுதப்பட்டும் அங்கங்கே ஸ்திரீகளும், புருஷர்களும் உபயோகிக்கும் பழமொழிகளும், தெய்வபக்தி நன்னடக்கை, மிதமிஞ்சி செலவு, கடன்படல் முதலியவைகளின் கருத்தமைந்த சிறந்தபாடல்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.



நிற்க, நல்ல ஸ்திதியிலிருந்த கைலாஸய்யர் மிகக் கஷ்டப்படவேண்டியிருந்தது. இவருக்கு ஒரு புத்திரனும் ஒரு புத்திரியுமுண்டு. புத்திரிக்கு விவாகம் முன்னமே செய்துவைத்துவிட்டார். புத்திரனை சென்னையில் படித்துவர அனுப்பியிருந்தார். இவர் விதிவசத்தால் தரித்திரம் மேலிட்டு மிகக் கஷ்டப்பட்டார். இவரது மனைவி பார்வதி அருந்ததிக்குச் சமானமென்று சொல்லலாம். இவளைத் தன் புத்திரியினிடம் அனுப்பிவிட்டு இவர் இராமேஸ்வரம் சென்று யாவற்றையும் துறந்து கடவுளைத் துதித்துவந்தார். சிறிதுகாலஞ் சென்றபின் இவர் மரணமடையவே, இவரது புத்திரன், தன் தாயாருடன் இராமேஸ்வரம் வந்து இவருக்குச் செய்யவேண்டிய கிரியைகளைச் சரிவரச் செய்தான். இவனது தாயாரும் பின்பு இறந்துவிட்டாள். இவர்களது புத்திரன் தந்தை தாயைத் துறந்து மிக வருந்தி சென்னைக்குச் சென்று, வாரத்திற்குச் சில கனவான்கள் வீட்டில் புசித்து, பி-ஏ. பரிக்ஷையில் தேறினான். சென்னையிலுள்ள கோபாலய்யர் இவனுடைய நடை உடைபாவனைகளைக்கண்டு அதிசயித்து இவனுக்கு வேண்டிய உதவியைப் புரிந்துவந்தார். ஏனெனில் ஜயசீலன் புத்தியுள்ளவன். எப்பொழுதும் உபகாரம் செய்யவேண்டுமென்ற எண்ணமுடையவன். ஏழையாயிருந்தும் தன்னாலியன்ற உதவி தனது சிநேகிதர்களுக்குச் செய்துவந்ததானது கோபாலய்யருக்கு இவனிடத்தில் அதிக அன்புடனிருக்கச் செய்தது. இவர் திருநெல்வேலியிலுள்ள கிருஷ்ணசுவாமி ஐயரின் குமாரத்தியை இவனுக்கு விவாகம் செய்துவைத்தார். அப்பெண் மணியின் பெயர் **சரஸ்வதி**. இவள் தனது மாமன் இராமச்சந்திர ஐயர் மேல் பார்வையிலிருந்து படித்துவந்தாள். இவள் பெங்களூர் போய்வந்ததைப்பற்றியும், வழக்கம் என்ற விஷயத்தைப்பற்றியும் எழுதியவியாசங்கள் நன்றாயிருக்கின்றன. இராமச்சந்திர ஐயரும் அவர் மனைவியும் **சரஸ்வதியின்** படிப்பு விஷயத்தில் மிக்க கவனம் செலுத்திவந்தார்கள். கடைசியில் இராமச்சந்திர ஐயருடைய ஒரே பெண் தன் கணவனை இழந்து, தன் குழந்தைகளுடன் பிறந்த வீட்டிற்குவந்து **சரஸ்வதியை** மிக்க துன்பப்படுத்திக்கொண்டுவந்தாள். ஏனெனில் இவளுக்கு கல்வி வாசனையே கிடையாது. மேலும் ஜயசீலன் உபகாரச் சம்பளம் பெற்று கலெக்டர் பரீக்ஷைக்குப் படிக்கச் சென்றதுமுதல் ஜனங்களும், காமாக்ஷியும் இராமச்சந்திர ஐயரை இம்சித்துவந்தார்கள். இவர் ஒன்றுக்கும் பயப்படவில்லை. கடைசியில் தனது பெண்ணின் உபத்திரவத்தைச் சகிக்கமுடியாமல் சரஸ்வதியை அவள் தகப்பனாரிடத்திற்கு அனுப்பினார். ஸரஸ்வதிக்கு தன் மாமா மாமி இவர்கள்மேல் யாதொரு குற்றமில்லையென் பது நன்றாகத் தெரியும். ஒரு வருஷகாலம் இவர்களை விட்டுப்பிரிந்திருந்த போதிலும் இவர்கள் சரஸ்வதி யிருக்குமிடத்திற்கு அடிக்கடிபோய் அவளைப் பார்த்துவந்தார்கள். ஜயசீலனும் சீமையில் கலெக்டர் பரீக்ஷையில் முதலில் தேறி திருநெல்வேலியில் அஸிஸ்டெண்ட் கலெக்டர் வேலையையடைந்தான்.

ஜயசீலன் சென்னைக்கு வந்தவுடன் இவன் மாமனார், மாமாமாமி, சரஸ்வதி, கோபாலய்யர் முதலியவர்களும் வந்து நல்வரவு கூறி வீட்டிற்கு இட்டுக் கொண்டு போனார்கள். மறுநாள் ஒரு விருந்து நடந்தது. ஒருமாதம் சென்னையிலிருந்துவிட்டு அடுத்தமாதம் திருநெல்வேலிக்கு எல்லோரும் சென்றார்கள். அங்கே ஜயசீலன் ஜில்லா கலெக்டரைப் பார்த்துத் தன் வேலையை ஒப்புக் கொண்டான். ஆற்றங்கரையிலும், குளக்கரையிலும் முன் இகழ்ச்சியாய்ப் பேசின பெண்டுகள், இப்பால் சிவகாமியம்மாளையும், ஸரஸ்வதியையும் போற்றிப் பேசப் புகுந்தார்கள். இது நம்மவர்களுள் காணப்படும் அதிசயமல்லவோ!

வைதீக சிரேஷ்டர்களும், மற்ற பிராமணர்களும் இவர்கள் வீட்டிற்கு வரப்போக்கா யிருந்தார்கள். இத்துடன் இச்சிறந்த கதை முடிகிறது.

இவ்வித நாவல் நமது பெண்மணிகளுக்கும் புருஷர்களுக்கும் மிகவும் புத்தி புகட்டக்கூடியதே. இது ஒவ்வொருவரிடத்திலு மிருக்கவேண்டியதவசியம். மேலும் ஜயசீலனைப்போல் கல்வியிற்றேர்ந்த சிறுவர்கள் வரதக்ஷிணை வாங்காமல் நல்ல குலத்தில் பெண்மணிகளை மணம்புரிந்து ஒற்று வாழ்ந்துவரவேண்டுமென்பது நமது மனப்பூர்ண எண்ணம். ஆகையால் இப் புஸ்தகத்தை யாவரும் படித்தால் அது நிறைவேறும் என்பது நிச்சயம்.

☞ பத்திராதிபர்.

# ஜப்பான் தேசத்து புதிய சக்ரவர்த்தி.

**ஹாரு - நோமியா - யோஷி - ஹிடோ.**

இவர் 1879-ம் வருஷம் 31உயன்று ஜனித்தார். இவருக்குத் தக்கவயது வந்தபொழுது இவரது தகப்பனார் இவரை காகுஷு-இன் அதாவது பிரபுக்கள் பிள்ளைகள் படிக்கும் பாடசாலைக்கு அனுப்பினார். முன்காலத்தில் நமது தேசத்திலிருந்த மாதிரி இராஜ குமாரர்களுக்கு உபாத்தியாயர் அரண்மனைக்கு வந்து பாடம்சொல்லி கொடுப்பது வழக்கம். காலஞ்சென்ற சக்ரவர்த்திக்கு இது பிடிக்கவில்லை. ஆகையால் இவர் 1877-ம் வருஷத்தில் இப்பாடசாலையை ஸ்தாபித்தார். இதில் பிரபுக்களுடைய குமாரர்களும், குமாரத்திகளும் படித்துவர ஏற்பாடு செய்தார். 1884-ம் வருஷம் இதில் யாவரும் படிக்கலாமென்கிற ஏற்பாடு உண்டாயிற்று.

**யோஷி ஹிடோ** சிறு குழந்தையா யிருந்தும் பள்ளிக்கூடம்போக விருப்பமுடையவர். தம் பாடங்களைச் சரிவரப் படித்து வந்ததும் தவிர உபாத்தியாயர்கள் சொன்னபடி செய்தும்வந்தார், உபாத்தியாயர்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்துவந்ததும் தவிர அவர்களிடத்தில் மரியாதையுடனும் பிரியத்துடனு மிருந்தார். மற்ற பிள்ளைகளுடன் சேர்ந்து தேகாப்பியாசம், பற்பல விளையாடல்கள் முதலியவைகளையும் செய்துவந்தார். சிறிதுகாலஞ் சென்றபின் இவருக்கு தேக அசௌக்ய முண்டாயிற்று, டாக்டர்கள் அரசகுமாரன் அரண்மனையிலேயே யிருந்து வரவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டு சக்ரவர்த்திக்கும் இச் சங்கதியைத் தெரியப் படுத்தினார்கள். சக்ரவர்த்திக்கு இது பிடிக்கவில்லை ஆயினும் பிள்ளையினுடைய தேகஸ்திதியை யோசித்து ஒத்துக்கொண்டு அரண்மனையிலாவது சிறிதுநேரம் தினம் படித்துவர ஏற்பாடு செய்தார். இராஜகுமாரனும் ராஜபதவியி லிருப்பதாகச் சிறிதும் கர்வம்கொள்ளாமல் நன்றாகப் படித்துவந்தார். குடியரசுக்குரிய எண்ணங்களை யடைந்தார்.

அரச குமாரனுக்கு இரண்டு மூத்த சகோதரர்கள் இறந்துவிட்டார்கள். ஆகையால் பட்டத்திற்குரியவர் இவர்தான். 1887-ம் வருஷம் பட்டத்திற்குரியவர் யோஷி ஹிடோதான் என யாவருக்கும் தெரிவிக்கப்பட்டது. அடுத்த வருஷம் நவம்பர் மாதம் 3உ இவர் இளவரசராக்கப்பட்டார். இவர்பட்ட மஹி

SUPPLEMENT TO THIS ISSUE. 238a



ஜேப்பான் சக்ரவர்த்தி.

With the kind courtesy of G. A. Natesan & Co.

ஷியினுடைய புத்திரனல்ல. பட்டமஹிஷிக்குப் புத்திரனுமில்லை, புத்திரியுமில்லை, ஜப்பான் சக்ரவர்த்திக்கு வேறு 12 மனைவிமார்களிருந்தார்கள். இவர் அவர்களிலொருத்திக்குப் பிறந்தவர். பட்டமஹிஷி இப் புத்திரனிடத்தில் மிக்கப் பிரியமாயிருந்து வருகிறார்கள். இவரும் பட்டமகிஷியினிடத்தில் அவ்விதமே இருந்துவருகிறார்.

இவர் 1898-ம் வருஷம் முழுவதும் ராணுவத்தில் காப்டினாகவும், பின்னிட்டு மேஜராகவுமிருந்து யுத்த விஷயங்களைக் கற்றுவந்தார். பின் கப்பற்படைக்கு லப்டினண்டு கமாண்டராகவும் நியமிக்கப்பட்டு அதற்குரியவைகளைச் செவ்வனே கற்றுக்கொண்டார்.

## இவரது விவாகம்.

சக்ரவர்த்தியின் குமாரர்களுக்கு அத்தேசத்திலுள்ள 5 முக்யமான பிரபுக்கள் குடும்பங்களிலுள்ள பெண்மணிகளை விவாகம் செய்துவைப்பது வழக்கம். **ப்ரின்ஸ் குஜோ மிச்சிடகா** இவ்வித குடும்பங்களில் சேர்ந்தவர். இவரது குமாரத்தி குடியரசில் மிகவும் பிரியமுடையவள். இவள் அரசகுமாரனுக்கு மனைவி ஆவாள் என்று ஒருவரும் நினைக்கவில்லை. ஆனதுபற்றி இவளுக்கு ராஜபதவிக்குரியவைகளை பழக்கியும் வைக்கவில்லை. இவள் குழந்தையாயிருந்த பொழுது ஒரு கிராமத்தில் ஒரு குடியானவன் குடும்பத்திலிருந்து வந்தாள். இங்கு ஏழைக் குழந்தைகளுடன் பற்பல விளையாடல்களை ஆடித்திரிந்தாள். இவள் தலைக்கு ஒன்றுமில்லாமலும், கால்களுக்கு ஒன்றுமில்லாமலும் நடந்து வந்தாள்.

இவ்விதம் குழந்தைப் பருவத்தில் சிறிதுகாலம் சென்றபின்பு இவளை **டோகியோ**விலுள்ள பிரபுக்கள் பெண்கள் படிக்கும் பாடசாலைக்கு இவளது பெற்றோர்கள் அனுப்பினார்கள். இவளுக்கு இது பட்டணமாகையால் அதிக சந்தோஷத்தை கொடுத்ததென்கலாம்.

இவ்விதம் இப்பெண்மணி இங்கு படித்துவருகையில் இடீரென்று இளவரசுக்கு இப்பெண்மணியை மணம்புரிய இஷ்டமென்று ஒருகடிதம் இவள் பெற்றோர்களுக்கு கிடைத்தது. அவர்கள்கொண்ட சந்தோஷத்திற்களவில்லை. அப்பொழுது இவளுக்கு வயது 15. இவளது தகப்பனார் இவளுக்கு தமது கிரகத்தில் நல்ல அழகான அறைகளைக் கட்டிவைத்து அதில் சிற்சில அலங்காரப் பொருள்களையும் சேர்த்து வைத்தார். இவ்விடத்தில் இப்பெண்மணி எட்டுமாஸகாலம் தனிமையாக வசித்துவந்தாள். இவள் சாப்பிடும்பொழுது ஒருவரும் அருகிலிருக்க மாட்டார்கள். இவளுக்கு வேலைக்காரர்கள் தினம் தனிமையாக சமையல்செய்து அழகான தாம்பாளங்களில் வைத்து இங்கு கொண்டுவந்து வைப்பார்கள். சக்ரவர்த்தி குமாரனுக்கு தங்கள் பெண் மனைவி ஆகப்போகிறாளென்பதைக் கேட்டதுமுதல் இவள் பெற்றோர்களும், பந்துமித்திரர்களும் இவளிடத்தில் மிக்கமரியாதையாகவும் வணக்கத்துடன் தூரநின்று தான்பேசிவந்தார்களாம் (இது அத்தேசத்திய பூர்வகால வழக்கம். பந்துமித்திரர்கள் இவளைப் பூஜித்தும் வந்தார்கள்.) இவள் நேர்த்தியான உடுப்புகளைத் தரித்துக்கொண்டு வீட்டிலேயே உபாத்தியாயர் போதிக்கும் விஷயங்களைக் கற்றுவந்தாள். தன்புதிய பதவிக்குரிய விஷயங்களையெல்லாம் நன்றாகத்தெரிந்து கொண்டாள். இவளும் விவேகமுள்ள பெண்மணியாம்.

1900-ம் வருஷம் மேமீ 10உ இப்பெண்மணிக்கும் இராஜகுமாரனுக்கும்
விவாகம் சிறப்பாக நடந்தது. அப்பொழுது அநேகபுது ஆசாரங்களை அனுஷ்
டித்தார்களாம். இராஜகுமாரன் இப்பெண்மணியை தனக்கு மணம் புரிந்து
வைக்கும்படி இப்பெண்ணின் தகப்பனாரைக் கேட்டதொன்று. இதுகோயிலில்
பலிபீடத்திற்குமுன் நடந்ததாம். உடனே அவர் சம்மதித்து விவாகம் செய்து
வைத்தார். ராஜகுடும்பத்தாரும், பிரபுக்களும் வந்திருந்தார்கள்; விவாகச்சட
ங்கு முடிந்தவுடன் தம்பதிகள் வண்டியில் உட்கார்ந்து அரண்மனைக்குப்போய்
ஒருதனிமையான இடத்தில் வசித்தார்கள். அன்று சாயங்காலம் ஒருவிருந்து
நடந்தது. அநேகபிரபுக்களும், பந்துக்களும், உத்தியோகஸ்தர்களும் வந்திரு
ந்தார்கள். ராணியும், இராஜகுமாரனும் விருந்து நடக்கு மிடத்திற்கு வந்தது
யாவருக்கும் ஆச்சரியத்தை யுண்டாக்கியதாம். ஏனெனில் இம்மாதிரி அத்
தேசத்தில் இதுவரையிலும் தம்பதிகள் வந்ததில்லையாம்.

## இவர்களது குணம்.

இவர்கள் மனமொத்து வாழ்ந்து வருகிறார்கள். தன்புருஷனைப் போல்
இவளும் நடந்துவருகிறாள். இருவரும் ஒருமிக்கப் புசிக்கிறார்கள். சேர்ந்து
குதிரைசவாரிசெய்கிறார்கள். இராஜாங்க ஜனசமூக விஷயங்களிலும் இணைபிரி
யாமலிருந்துவருகிறார்கள். இவர்தம் மனைவியை வெகு மரியாதையாய் நடத்தி
வருகிறார். இவள்ஒருவள்தான் சக்ரவர்த்திக்குமனைவி. இவர்தம் தகப்பனாரைப்
போல் பலரை மணம்புரிந்து கொள்ளவில்லை. இவருடையதாயாரும் இவரிடத்
திலும் இவர்மனைவியிடத்திலும் மிக்க அன்புடனிருந்து வருகிறார்கள். பூர்வ
காலந்தொட்டு ஜப்பானில் சக்ரவர்த்தியின் பேரையும் சொல்லவதென்றால்பயம்,
அவர்முகத்தையும் காண்பதரிது. அவரை தெய்வமாக எண்ணி பூஜித்துவந்
தார்கள். இவரோ அவ்வித வழக்கத்தை நீக்கி தெருக்களிலும், பொதுசபை
களுக்கும் தாராளமாக தமதுசக்ரவர்த்தினியுடன் சென்று வருகிறார். வழியில்
ஜனங்களுடைய குறைகளைக் கேட்டு அவைகளை நீக்கவும் வாக்குறுதி செய்து
வருகிறார். இவர்வெளியில் குதிரைசவாரியோ, பைஸிகிலிலோ, மோடார்வண்டி
யிலோ செல்லும்பொழுது இவர்கூட பாடிகார்டு வரவேகூடாது. இவர்தனிமை
யாக யாதொருடம்பமின்றி செல்வார். இவர் உல்லாசமாய் நடக்கும்பொழுதும்
பணிவிடைக் காரர்கள் வரக்கூடாது.

இவர் இளவரசரா யிருந்தது முதல் இவ்விதம் செய்து வருகிறாராம்.
இப்பொழுது கேட்கவேண்டுமோ? இவர் வருஷம் 45 லக்ஷம் ரூபா பெற்று
வருகிறார். இது சக்ரவர்த்திகளுக்குக் குறைந்த தொகையே. ஆயினும் இவர்
தகப்பனார் 6 கோடிரூபா சேர்த்து வைத்திருப்பதிலிருந்துவரும் வரும்படியை
எடுத்து வெகு சிக்கனமாக செலவுசெய்து வருகிறார். கௌரவத்திற்கு சில
வருஷங்களுக்குமுன் லப்டினின்ட் ஜெனரலாகவும், வைஸ் அட்மிரலாகவும்,
கடற்படைக்கு கர்னலாகவுமிருந்தார். இவ்வித வேலைகளில் தமக்கு அநுபவம்
உண்டாவதற்கு பழகிவந்தாராம். இவருக்கு ப்ரஜைகளிடத்தில் அதிகப்ரிய
முண்டு. தம்மாலியன்ற நன்மையைச் செய்வார் என்பதற்குத் தடையில்லை.
இவரைப்போல் சகல விஷயங்களிலும் தேர்ந்த சக்ரவர்த்தி இதுவரையிலும்
அத்தேசத்தில் இருந்ததில்லையாம்.

பத்திராதிபர்.



# புகைபனி மூடுபனி.

பருவதப் பிராந்தியங்களில் தரை குளிர்வதால் இறுகு நீராவி வேறு
ரூபங்களையடையும். ஈரங்கொண்ட வெப்பமான காற்று குளிர்ந்த மலையுச்சி
யில் வீசும்போது காற்றுக்குளிர்ந்து அதிலுள்ள நீராவி, மென்மாசு ரூபமாக
வும் மேகரூபமாகவும் படிந்து கண்ணுக்குத் தோன்றும். அடிக்கடி இந்த
மேகம் துண்டாய்க் காணப்படுவதுமன்றி, அது படர்ந்திருக்கும் பிரதேசத்
தின் ரூபத்திற்கேற்றபடி வடிவங்கள் கொண்டு அம்மலைச்சிகரத்திற்கு ஒரு
வெண்மயிர்க்குல்லாய் மாட்டினதுபோலத் தென்படும். இது பெரும்பாலும்
காலைவேளைகளில் பனிக்காய்த் தெரியும். பொழுதேறவேற சூரியவெப்பத்தால்
குளிர்மைமாறி இந்தப் புகைபனி மறுபடியும் காற்றில் சுவறிப்போம். இரவு
வந்து அனல்பறிந்து தரைகுளிர, காற்றில் போந்தமட்டும் நீராவி யிருந்தால்
இம்மேல்மாசு மறுபடியும் உண்டாய் மலையைமீண்டு குல்லாய்போல் மூடிக்
கொள்ளும்.

குளிர்ந்த தரையைப்போலக் குளிர்ந்த காற்றும் வெப்பமுள்ள காற்றின்
நீராவியை இறுகச்செய்யும். ஆற்றங்கரையில் நின்று நீரோட்டத்தின் வழியே
கண்ணோட்டினால் இவ்விதமாய் நீராவி இறுகுவதை அடிக்கடி காணலாம். சூரி
யன் மலைவாயில் விழுந்தவுடன் நதிச்சலத்தின் வெப்பம் பறிவதற்குமுன்
அதன் இருகரையின் உஷ்ணம் பறிந்துபோம். ஆதலால் கரைமீதுள்ள வாயு
நதிமீதுள்ள வாயுவைவிடக் குளிர்ந்துபோம். ஜலத்தின்மீதுள்ள அனற்
காற்று மேல் எழும்ப, குளிர்ந்த கரைக்காற்று அங்குபாயும். பாயவே கிளம்
பும் அனற்காற்றிலுள்ள நீராவி இறுகி, ஜலத்தின்மீது மூடுபனியாய்க் கம்மிக்
கொள்ளும். இது சாதாரணமாய் இரவிலும் அதிகாலையிலும் ஆறுகளையும்
வாய்க்கால்களையும் பார்த்தால் தென்படும்.

மேகம் இப்படி நீராவி இறுகுவது பூமியைவிட ஆகாசத்திலேயே மெத்த
அதிகம். நீராவி ஆகாசத்தில் இறுகுவதினாலேயே மேகங்கள் உண்டாகின்றன.
தினந்தோறும் வானத்தில் தோன்றும் மேகங்களைவிட உங்களுக்கு அதிபரி
சயமுள்ள தென்னவிருக்கிறது. ஆகாயத்தில் வெப்பங்கொண்ட வாயு எந்த
ஏதுவினாலாவது குளிர்ந்துபோனால் புகைபனிப்படலம் உண்டாகும். இந்தப்
பனிப்படலம் தான் மேகம். காற்றுமேல் எழும்பும்போதே விலத்திகொண்டு
விரியும். அப்போது குளுமை பிறக்கும், அல்லது மேல்மண்டலத்தி லுலாவும்
குளிர்ந்த காற்றுடன் சேர இதுவும் குளுமைகொள்ளும். வானத்தில் நடப்
பதை உற்றுநோக்கினால் மேகங்கள் உண்டாவதைப் பலவாறாய்க் காணலாம்.
முதலில் ஒரு சிறு சில்லத்தனை வெண்புள்ளிதோன்றும். இதுவே வரவரப்
பெரிதாகும். இப்படியே பல மேகக்குழுக்கள் அங்கங்கே உதித்து நெருங்கி
ஆகாயமெங்கும் அடர்ந்து பரவிக்கனத்து மழைபெய்ய ஆரம்பிக்கும். வானத்
தில் இப்படி இறுகிய நீராவியெல்லாம் பூமிப்பரப்பிலுள்ள நீர் சுண்டி ஆவியாக
ஏறினதுதான். அது வெப்பக்காற்றுடன் மேலே கிளம்பும். அக்காற்று உயரப்
போகப்போக உஷ்ணங்குறைந்து அங்குள்ள குளிர்ந்த வாயுப்படலங்களுடன்
சேர்ந்து மேலுங் குளிர்ந்து தன்னிடத்துள்ள நீராவி மிகுதியைக் கக்க, அவ்
வாவி மேகமாக விறுகும்.

கோடையில் பலதினங்களில் உதயத்தில் ஆகாசம் மாசுமறுவின்றி இருக்கும். பொழுதேற வேற பூமி உஷ்ணங்கொண்டு அதிக நீராவி பறியும். அது மேலெழும்பும் காற்றுப்படலங்களுடன் வாயுமண்டலத்தில் குளிர்ந்த உன்னதப் பிரதேசங்களிற் சென்று அங்கு உருமத்திலும் பொழுது சாயும்பொழுதும் குளுமைகொண்டு வெள்ளைமாசு மேகங்களாய்த்திரளும். பொழுது படும்போது தரையில் நீராவி பறிதல் தணிய, பின்னும் மேகப்படலங்கள் திரள்வது ஓய்ந்துபோம். முன்திரண்ட மேகங்கள் சூடு வரவரக்குறைந்து கனதியால் கீழிறங்க, தரையிலிருந்து பறிந்த வெப்பத்தால் சூடுகொண்ட அடித்தளவாயுவுடன் கலந்து மறுபடியும் ஆவியாய் மறையும், வானம் மாசுமறுவின்றித் தெளிந்து தோன்றும். இதுவும் தவிர வானத்தில் மேகங்கள் மூலைக்குமூலை குறுக்கும் நெடுக்கும் ஓடுவதைக் காண்பீர்கள். அவைகள் மேல்மண்டலத்தில் வீசுங் காற்றுப்படலங்களால் அப்படித்தள்ளுறும். அக்காற்றின் வேகத்துக்குத் தக்கபடி அம்மேக சஞ்சாரமுமிருக்கும். இப்படித் தள்ளுண்டு வெகு தூரத்துள்ள மேகங்கள் வானத்தைக் கம்மிக்கொள்வதுண்டு. இப்படி மேகங்கள் வருவதையும் போவதையும் நோக்கும்போது வாயுமண்டலத்துள்ள நீராவி இடைவிடாது மாறிக்கொண்டே இருக்குமென்பது விளங்கும். உலாவும் காற்றின் சீதோஷ்ண விகற்பத்துக்குத் தக்கபடி இந்த நீராவி ஒருகாலத்தில் மேகங்களாகத்திரளும். மற்றோர் காலத்தில் மீண்டும் ஆவியாகவும் கரைந்து மறையும்.

## க ம ல ா.

### அங்கம் - 2. களம் - 3.

(காஷ்மீர அரண்மனையில் ஓரிடத்தில் அரசன் தனிமையா யோசிக்கிறார்)
அரசன்: நான்முன் நினைத்த பிரகாரம் ஒவ்வொரு காரியமும் சம்பவிக்கின்றது. ஆ! யார் அங்கே போகிறது? என்றார். (அரசனது விகடன் உள்ளே வருகிறான்).

விகடன்:—மகாராஜாவே!

அரசன்:—யுத்தம் எப்படி நடக்கிறது? பீரங்கி சத்தம் கேட்கிறதே.

விகடன்:—கவனியுங்கள். நமது ஜனங்கள் துப்பாக்கியால் சுடும் சப்தம் தான். நமது மந்திரி திறமையுடன் நமது சேனைகளை நடத்திவருகிறார்.

அரசன்:—விரோதிகளை நமது சேனை தடுக்கமுடியுமா? நீ என்ன நினைக்கிறாய்?

விகடன்:—நான் ஒன்றும்சொல்ல முடியாது, (சப்தம் கேட்கிறது) அந்த பயங்கரமான அரசன் ஜயித்துவிட்டான்போல் தோன்றுகிறது. ஜயகோஷம் கேட்கிறதே! அவனுக்கு ஈடு ஒருவருமில்லை, உமது குமாரத்தி பாக்கியசாலி தான்.

அரசன்:—(கோபத்துடன்) மடையா, நான் ஒன்று கேட்டால் நீவேறொன்று சொல்லுகிறாயே. இவ்விதம் எனக்கு ஏன் இப்பொழுதும் மனவருத்தமுண்டாகும்படி செய்கிறாய்? இனி அவ்விதம் மறுபடி என்முன் பேசாதே.



அரசன்:—(சிறிது நேரம் மௌனமாயிருந்தார்) பின்பு மந்திரி தனது சதுரங்கசேனையை எங்கு நிறுத்திவைத்திருக்கிறார்? என விகடனைக்கேட்டார்.

விகடன்:—பதிலுரைக்கவில்லை.

அரசன்:—நீ பேசுவாயா, மாட்டாயா?

(விகடன் ஒரு துண்டு கடிதத்தில் ஏதோ எழுதி அரசனிடத்தில்கொடுக்கிறான்.)

அரசன்:—மனவெறுப்புடன் சிரிக்கிறார்.

என் உத்திரவுபிரகாரம் இனி நட.

விகடன்:—அப்படியே செய்கிறேன் மகாராஜ்!

அரசன்:—இவன் என்ன அதிக பிரசங்கியாயிருக்கிறானே! நாம் எப்பொழுதாவது வேடிக்கையாகப் பேச இவனுக்கு உத்திரவு கொடுத்திருக்கிறதை வைத்துக்கொண்டு நம்மிடத்தில் எப்பொழுதும் சமயாசமய மறியாமல் வாயில் வந்தபடி பிதற்றுகிறானே! இவன் புத்தியீனத்திற்கு என்ன செய்வது?

விகடன்:—மகாராஜ்! ஒரு வார்த்தை! தயவுசெய்து கேட்கவேண்டும். ஒரு பெரிய ஆலமரத்திற்குமேல் ஒரு பருந்து பறப்பதைப் பார்த்து ஒரு மனிதன் தானும் பறக்க எண்ணி அவ்வாலமரத்தின்மேல் ஏறி ஒரு கிளையில் உட்கார்ந்து குதித்துப் பறக்கமுயலுகிறான். உடனே கீழே விழுந்து படுகாயம் அடைகிறான். இதில் பருந்துமேல் தப்பா? அல்லது விவேகமில்லாத மனிதன் மேல் தப்பா? என்னை மன்னித்து தயை புரிந்து சொல்லவேண்டும் மகாராஜ்!

(உடனே ஜயபேரிகையின் சப்தம் கேட்டது).

அரசன்:—கவனி! விரோதிகள் செய்யும் சப்தம்போல் காண்கிறதே! அவர்கள் ஜயம் பெற்று இங்கு வருகிறார்களா? என்ன? (மந்திரி அவசரமாக உள்ளே வருகிறார்).

மந்திரி:—இராஜகுமாரன் கையில் கத்தியை ஏந்திக்கொண்டு தனது மூர்க்கமுள்ள சேனையுடன் உள்ளே வருகிறான். உடனே எங்கேயாவது ஓடி மறைந்துகொள்ளுங்கள். அப்படிச் செய்யாவிட்டால் தங்கள் உயிருக்கே அபாயம் உண்டாகும்.

அரசன்:—இப்படியா முடிந்தது? சரி. நான் ஓடிப்போகமாட்டேன். இங்கேயே உயிர் துறக்கிறேன்.

மந்திரி:—தங்கள் அருமையான குமாரத்தியோ? அவளைப் பத்திரமாக எவ்விடத்திற்காவது இட்டுக்கொண்டு போகட்டுமா?

அரசன்:—அவ்விராஜகுமாரன் நிச்சயமாக அவளை இட்டுக்கொண்டு போய் விவாகம்செய்துகொள்வான். நீ அவளை இட்டுக்கொண்டுபோனால் உங்களிருவருக்கும் கெடுதலுண்டாகுமென்று அஞ்சுகிறேன்.

(திடீரென்று கதவைத் திறந்துகொண்டு அருணேசனும் அவன் மந்திரியும் உள்ளே வருகிறார்கள்).

அருணேசன்:—மகாராஜாவே?

அரசன்:—ஓ ஈஸ்வரனே ! என் கதி இப்படியாய்விட்டதா !

அருணேசன்:—மகாராஜாவே! தாங்கள் ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். இன்று நான் அநேகரை வதைத்துவிட்டேன், சாமர்த்தியமும், ஒழுங்குமுள்ள தங்களது சேனை சிதறுண்டு போயிற்று, யுத்தகளமோ இரத்தமயமா யிருக்கிறது. என்னுடைய விகடனே தங்களால் விளைந்த கோபத்தால் தங்கள் சேனையை இன்னும் வதைசெய்துவருகிறான். நாம் இருவரும் சமாதானம் செய்துகொள்கிற வரையிலும் அவன் இவ்விதமே வதைசெய்து வருவான். மகாராஜாவே! தங்களுக் கிஷ்டமானதைச் சொல்லுங்கள். தங்கள் குமாரத்தியை எனக்கு விவாகம் செய்துவைப்பதாக வாக்குறுதியும் செய்ய வேண்டும்.

அரசன்:—என் குமாரத்தியை மணம்செய்து வைக்கவேண்டுமா! பேஷ் வெகு நன்றாயிருக்கிறது!! அரசனே, இது ஒருபொழுதும் முடியாதகாரியம். அவளை இந்த அரண்மனை மெத்தையிலிருந்து இதோ தெரிகிற அகழியில் தள்ளிவிடுவேனே தவிர உனக்கு அவளை விவாகம் செய்துவைக்க மாட்டேன். நீ என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம்.

விகடன்:—மகாராஜாவே! நமது சேனையோ தோற்றுப்போயிற்று. அவ்வாசனோ ஜயமடைந் திருக்கிறான். நாம் இப்பொழுது அவன் கைக்குளிருக்கின்றோம், நம்மை அவன் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். நமது ஜனங்களோ தவிக்கிறார்கள். ஆகையால் இந்த ஆபத்து சமயத்தில் சமாதானம் செய்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

அரசன்:—இச்சகம் பாடாதே. நான் அவ்விதம் செய்யமாட்டேன்.

அருணேசன்:—துரதிர்ஷ்டமுள்ள அரசனே, உனது அரண்மனையிலிருந்து சிப்பாய்களையும், காவற்காரர்களையும் துரத்திவிட்டேன். அவர்களிருந்த ஸ்தானத்தில் எனது ஆட்களிருக்கின்றார்கள். அரண்மனையிலிருந்து வெளியே போக ஒருவரையும் அவர்கள் விடமாட்டார்கள். இப்பொழுது ஒருநாள் சாவகாசம் தங்களுக்கு கொடுக்கின்றேன். யோசனைசெய்து முடிவுக்கு வாருங்கள். எனது இஷ்டப்படி நீங்கள் செய்யாவிட்டால் உங்களது சேனையைத் தும்சம் செய்வோம். இந்த அரண்மனை நாளை சூரியோதயத்திற்குள் பாழாய்விடும்.

(அருணேசனும், த்ரிவிக்ரமனும் திரும்பிப் போய்விட்டார்கள்.)



மந்திரி:—மகாராஜாவே ! அருணேசனோ தான் சொல்லும் வார்த்தை பிரகாரம் நடப்பவன். அவன் சொல்லுகிறபடி நாம் இணங்கவேண்டியதைத் தவிர நாம் வேறொன்றும் செய்யமுடியாது.

விகடன்:—மந்திரி பிரபுவே, நான் நமது மகாராஜாவிடத்தில் முன்னமேயே இப்படித் தான் சொன்னேன்.

அரசன்:—ஐயோ ! எனது எண்ணங்கள் வீணாயிற்றே. கடவுள் என் என்னை இவ்விதம் மனம் திண்டாடும்படி செய்கிறார் ! வினைப்பயனோ? தெரியவில்லையே. மந்திரி, நாம் உள்ளே போய் யோசனை செய்வோம். (உள்ளே போகிறார்கள்).

தாதா.

## நமது கவர்னர்.

சென்ற 30உ மாலை H. E. ரைட் ஆனரபில் ஜான்பாரன் பெண்ட் லண்ட் சென்னை மாகாண கவர்னர் உத்தியோகத்தை ஏற்றுக்கொள்ள கவர்ன்மெண்ட் விருந்து மண்டபத்தில் அவரும் லே. டி. பெண்ட் லண்டும் பகிரங்கமாய் வர வேற்கப்பட்டார்கள். விருந்து மண்டபத்துக்கு அவர்கள் வந்து சேருமுன், ஸிவில் மிலிட்டெரி உத்தியோகஸ்தர்கள் எல்லோரும், சென்னை வாசிகளில் பிரமுகர்களும் அங்குவந்து சிறிது நேரம் காத்திருந்தார்கள். காத்திருந்த காலத்தில் கவர்னருடைய பாண்டின் சங்கீதத்தால் பொழுது உல்லாசமாய்ப் போயிற்று. கோட்டையிலிருந்து விருந்து மண்டபத்துக்கு கவர்னர் தம்பதிகள் ஏறிவந்த வண்டிவந்து சேர்ந்தவுடன், ஆனரபில் ஸர்-ஜான் அட்கின்ஸன் முன்சென்று அவர்களை வரவேற்று சீப்ஜஸ்டிஸ், சென்னை லார்டுபிஷப், லெப்டினண்ட் ஜனரல் ஸர் J. E. நிக்ஸன், ப்ரிகாடியர் ஜனரல் F. C. பாண்ட், கவர்ன்மெண்டின் மெம்பர்கள், இவர்களை கவர்னருக்கு அறிமுகம் செய்துவைத்தார். கார்ட் ஆப் ஆனரை பரிசீலனை செய்துவிட்டு, கவர்னர் லேடி பெண்ட்லண்டுடன் சேர்ந்துகொண்டு, இருபக்கமும் மெய்காவலாளர் புடைசூழ்ந்து நிற்க படிகளின் மேலேறிச் சென்றார்.

விருந்து மண்டபத்தின் தாழ்வாரத்தில் ஸர் மர்ரே ஹாமிக்கும், லேடி ஹாமிக்கும், மிஸ்ஸெஸ் ஹாமிக்குகளும், லார்ட் பெண்ட்லாண்டையும் லேடி பெண்ட்லாண்டையும் வரவேற்று ஹைகோர்ட்டு ஜட்ஜுகளையும் கவர்ன்மெண்டின் முக்கிய உத்தியோகஸ்தர்களையும், ராஜாக்களையும், ஜமீன்தார்களையும் மற்றவர்களையும் அறிமுகம் செய்துவைத்தார்கள். ஆஜராயிருந்த அநேகர்களுடன் கைகுலுக்கிவிட்டு, ஸர் மர்ரே ஹாமிக்குடனும், லேடி ஹாமிக்குடனும், விருந்து மண்டபத்தின் வழியாய் கவர்ன்மெண்ட் ஹவுஸுக்குப் போனார்கள்.

அங்கு H. E. ரைட் ஆனரபில் ஜான் பாரன் பெண்ட்லண்ட் சென்னை மாகாண கவர்னர் உத்தியோகத்தை ஏற்றுக்கொண்டு விட்டதாக விளம்பரம் படிக்கப்பட்ட பிறகு அவ்வுத்தியோகத்துக்கு அவரை நியமித்த வாரண்ட் ஆப் அப்பாயிண்ட்மெண்ட் என்கிற ஸன்னத்து படிக்கப்பட்டது.

இம்மீ 1?உ சென்னைக் கார்பொரேஷன், மகாஜனசபை, சென்னைக் காங்கிரஸ் கமிட்டி, நிலச்சுவான்தார்கள்சங்கம், தென் இந்தியாவியாபாரசங்கம், தெஞ்சம் நிலச்சுவான்தார்களின் சங்கம், இவைகளின் பிரதிநிதிகள் லார்ட் பெண்ட்லண்டைப் போய்ப்பார்த்து அவருக்கு நல்வரவுப் பத்திரங்கள் வாசித்துக்கொடுத்தார்கள். அந்தப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்டு அவர் பதில் சொன்னார். அவர் பதில் சொன்னபோது வெகு ஒற்றுமைபுணர்ச்சி காட்டிப் பேசினார்:—"நான் இந்தியாவுக்குப் புதிதாய்வந்திருக்கிறேன். உங்களுக்கு வேண்டும் வேண்டாதவைகளைத் தெரிந்துகொள்ளவேண்டியவனா யிருக்கிறேன். உங்களுடைய தேவைகளை யறிந்துகொள்ளவேண்டுமென்று விருப்பத்தோடும் உங்களுடைய க்ஷேமத்தையும், முற்போக்கையும், முற்படுத்துவதற்கு என்னுடைய பதவியிலிருந்து நான் செய்யக்கூடியதைச் செய்யும் நோக்கத்தோடும் என் முன்வைக்கப் படுவனவற்றை அனுதாபச் சிந்தையோடு கவனிக்கும் நோக்கத்தோடும் நான் இங்கு வந்திருக்கிறேன்" என்றார். இதைவிட அவர் சொல்லக்கூடியதும் நமக்குக் கொடுக்ககூடிய உறுதியும் வேறில்லை. அவருடைய ஆட்சிகாலத்தில் கவர்ன்மெண்டாருக்கும் பொதுஜனங்களுக்குமுள்ள பரஸ்பர மதிப்பு அதிகப்பட இம்மாகாணம் ஜனங்களின் க்ஷேமத்துக்குற்ற பல அமிசங்களிலும் கல்வி விஷயத்திலும் முற்போக்கை யடையுமென்று நாம் நம்பியிருக்கிறோம்.

---

## துருக்கி பால்கன் யுத்தம்.

அக்டோபர்மீ 8உ மாண்டிநீகிரோக்கள் துருக்கியுடன் யுத்தம்செய்ய தீர்மானித்தார்கள். பலமானயுத்தம் இருவருக்கும் நடந்துகொண்டிருக்கிறது. துருக்கியர் ஜயம்பெறுவார்களென்று நம்புகிறோம். இந்த யுத்தத்தில் காயம் பட்டவர்களுக்கு உதவிபுரிய பம்பாயில் மகமதிய கனவான்கள் அக்டோபர்மீ 20உ மீட்டிங் கூடினார்கள். அப்பொழுது ரூபா 10,000 வரையிலும் சில கனவான்கள் கொடுத்தார்கள். இன்னும் கல்கத்தா சென்னைமுதலிய விடங்களில் இவர்களுக்கு உதவிசெய்ய பணம்வசூல்செய்து வருகிறார்கள். அநேகர் உதவி புரிய முன்வருவார்களென்று நம்புகிறோம்.

லாகூரில் ஒரு பெருங்கொடை:—ஓரியண்ட் பாங்க் ஆப் இந்தியா என்ற மகமதிய பாங்கி தன்னுடைய பங்குகளை எல்லாம் விற்று, அதனால் சேரக்கூடிய 2-கோடி ரூபாயைத் துருக்கி கவர்ன் மெண்டுக்குக் கடன் கொடுக்க யோசிக்கிறது. துருக்கிக்குக் கடன் கொடுக்க இந்திய மகமதியர்களுக்கு அனுமதி கொடுத்ததற்காக ராஜப்பிரதிநிதி லார்ட் ஹார்டிஞ்சுக்கு வந்தனம் அளிக்கப்பட்டது.


மகமதிய ஸ்திரீகளும் யுத்தமும்:—சென்ற 6-ந்தேதி லாகூரில் மகமதிய ஸ்திரீகள் ஒரு கோஷா மீட்டிங்கூடினார்கள். யுத்த நிவர்த்தி பண்டுக்குப் பணம் வசூல் செய்வதே மீட்டிங்கின் கருத்து. ரொக்கமாய் அங்கேயே வசூலானதும் கொடுப்பதாய் வாக்களிக்கப்பட்டதும் சேர்ந்து 1,500 ரூபாய் ஆய்விட்டது.

---

## பத்திராதிபர் துண்டுப் பத்திரிகை.

டெல்லிக்குள் வைசிராயும் அவருடைய பரிவாரங்களும் பிரவேசம் செய்யப்போகிறார்கள். அப்பொழுது லெஜிஸ்லேடிவ் கௌன்சில் மெம்பர்கள் எல்லாரும் டிசம்பர்மீ 23உ அங்குவந்து சேர்வார்களாம்.

# துருக்கி பால்கன் யுத்தம்.




இப்படத்தின் மத்தியில் வெண்மையாயிருக்கும் பாகமெல்லாம் ஐரோப்பியத்துருக்கியென்று சொல்லப்படும். கான்ஸ்டாண்டி நோபிளுக்கு மேற்கில் ட்ராமா என்னுமிடம் வரையிலுமுள்ள பிரதேசம் திரேஸ் என்று சொல்லப்படும். கறுப்பும் வெளுப்புமாய்க் கோடிட்டவை யெல்லாம் ரெயில் பாதைகள். அட்ரியா நோபிளுக்குத் தெற்கே யிருக்கும் குலிலி என்பது குலிலி பார்காஸ்; அதற்கடுத்திருக்கும் பாபா என்பது டாபா எஸ்கி. படத்தின் தலைப்புறம் வடக்கு.

சென்னை ஜார்ஜ்டவுனிலுள்ள சுதேசமித்திரன் பத்திரிகையின் அச்சுக்கூடத்தில் அச்சடிக்கப்பட்டது.

புனவில் கிங் எட்வர்ட் மெமோரியல் ஆஸ்பிடல், முதலியார் டிஸ்பென்
ஸரி முதலியவைகளுக்கு அஸ்திவாரக்கல்லை H. E. சர் ஜார்ஜ் களார்க் அக்
டோபர்மீ 4உ யன்று வைத்தார்கள். அச்சமயம் அநேக மாதர்களும் கனத
னவான்களும் பிரசன்னமா யிருந்தார்கள்.

---

மிஸ்டர் கோகலே இங்கிலாந்தைவிட்டு தென் ஆபிரிகாவுக்கு அக்டோ
பர்மீ 5உ புறப்பட்டுப்போனார், இவர் அங்குசென்று இந்தியர்கள்படும் அவஸ்
தையைக் கண்ணாரப் பார்த்து தக்க விசாரணை செய்தாராம்.

---

டைப் மெஷினில் நன்றாகப் பழகினவர்கள்:—மேரி ராணியார், நமது
அரச சக்ரவர்த்தி 5-வது ஜார்ஜ், கேய்ஸர், ப்ரின்ஸஸ் க்ரிஸ்டியன், க்ரீஸ் அரசர்.

---

கருப்பாம் பூச்சிகளைக் கொல்லவழி:—மாவு, சர்க்கரை, ப்ளாஸ்டர் ஆப்
பேரிஸ் இம் மூன்றையும் சம எடையாக எடுத்துக் கலந்து அவைகள் அதிக
மாயிருக்கு மிடங்களில் வைத்தால் அவைகள் இதைத் தின்று இறந்துவிடும்.

---

நமது அரச சக்ரவர்த்தி ஒரு தோட்டக்காரர்:—நமது அரச சக்ரவர்த்தி
கைதேர்ந்த தோட்டவேலை செய்பவரென்று ஒருவருக்கும் தெரியாது. இவர்
தோட்டவேலை செய்யும்பொழுது இவருக்கு ஒருவரும் உதவிசெய்ய வரக்
கூடாதாம். மேரிராணியார் உதவிசெய்யவந்தால் பேசாமலிருப்பாராம். இவ
ரால் பயிர்செய்யப்பட்ட காய்கறிகள் அலக்ஸாண்டிரா ராணியாருக்குஅடிக்கடி
அனுப்பப்பட்டு வருகிறதாம்.

---

**மூன்று வயதில் புஸ்தகம் எழுதிய மாது.**

மிஸ்ஸஸ் ஆலிஸ் எம் பீஹல் என்கிறமாது சில வாரங்களுக்கு முன் இங்
கிலாந்தில் இறந்துவிட்டாள். இம்மாது 87 நாவல்களை எழுதி யிருக்கிறார்கள்.
இம்மாது மூன்றுவது வயதில் தமது தாதிக்கு ஒருகதை சொன்னளாம். இவ
ளது 8-வது வயதில் ஒரு பாட்டு புஸ்தகம் எழுதி பிரசுரித்தாளாம்.

---

வெங்கலத்தை வெண்மையாக வைத்துக்கொள்ளல்: இவ்வித பாத்திரங்
கள் அழுக்கடையாமல் வெண்மையாக யிருக்கவேண்டுமானல் அதைச் சாதா
ரணமாய் சுத்தி செய்வதுபோல் செய்தபின், மிதிலேடட் ஸ்பிரிட்டால் கொஞ்
சம் அதைத் தடவவேண்டும். பின்னிட்டு சீமைச் சுண்ணாம்பைப் பொடி
செய்து கந்தல் துணியில் வைத்துக்கொண்டு இதைத் தேய்த்தால் இது
பளபளப்பாய்விடும்.

---

ஸ்டாம்புகள்:—உலக முழுவதிலும் 25,000-க்குமேல் விதம்விதமான
ஸ்டாம்புகள் வழங்கிவருகின்றன.

---

போஸ்டுகார்டுகள்:—ஜர்மனி வருஷத்தில் 1,000,000,000 கார்டுகளும்,
ஜப்பான் வருஷத்தில் 89 கோடி கார்டுகளும், ஆஸ்டிரியா, 44 கோடி கார்டு
களும், ருஷியா 29 கோடி கார்டுகளும், இட்டலி $13\frac{1}{2}$ கோடி கார்டுகளும்,
ஹங்காரி $11\frac{1}{2}$ கோடி கார்டுகளும் பிரான்ஸ் 3 கோடி கார்டுகளும் உபயோகி
த்து வருகின்றன.

---

நித்திரையில்லாத ஸ்திரீ:—பூடாபெஸ்டில் ஒருஸ்திரீ 7-வருஷகாலமாய்
நித்திரையின்றி யிருக்கிருள். இவளுக்கு நித்திரை செய்ய பிரியமில்லையாம்.
இதனல் யாதொருகெடுதலு முண்டாகிறதில்லையெனத் தெரிகிறது.

பத்திராதிபர்.

## கோஷா ஆஸ்பத்திரி.

கௌண்டஸ் ஆப் டப்பரின் பண்டு:—இப்பண்டின் கமிட்டியினுடைய
மீட்டிங் ஒன்றுநடந்தது. H. E. லேடி ஹாமிக் அக்ராசனம் வகித்தார்.
விக்டோரியா காஸ்ட் கோஷா ஹாஸ்பிட்டலுக்கு யாரை ஸ்திரீ சூபரின்
டெண்டாக நியமிப்பதென்ற விஷயம் ஒரு கமிட்டிக்கு விடப்பட்டது.
கடப்பை முனிஸிபாலிட்டியிட மிருந்து கிடைத்த 30, 500 ரூபாயிக்கும்
வருஷத்துக்கு 4 வட்டி கிடைக்கக்கூடிய மெட்ராஸ் முனிஸிபாலிடியின்
டிபென்சர் பத்திரங்களை வாங்குவதாகத் தீர்மானஞ் செய்யப்பட்டது.
கோஷா ஹாஸ்பிடல் ஐவேஜியிலிருந்து 15 ரூபாயும் டப்பரின் பண்டி
லிருந்து 10 ரூபாயும் ஆபீஸ் செலவுக்காக சாங்க்ஷன் செய்யப்பட்டது.
பென்ஷன் பெற்ற இஞ்சினீராகிய மிஸ்டர் கோபால கிருஷ்ணய்யரிடமிரு
ந்து ஸ்கூல் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் ராவுபஹதூர் ப்ரணத்தார்த்திஹர அய்யர்
தூண்டுதலால்கிடைத்த 2500 ரூபாயை ஏற்றுக்கொண்டு அவர்களிருவருக்கும்
வந்தன மளிக்கப்பட்டது.

இப்பொழுதுள்ள மருத்துவச்சி ஸ்தானத்தில் உயர்தர வைத்தியபட்டம்
பெற்ற ஒரு மருத்துவச்சியை நியமிப்பதாயிருந்தால் மாதம் 50 ரூபாய் கொ
டுப்பதாகத் தஞ்சாவூர், திருநெல்வேலி, கள்ளிக்கோட்டை முனிஸிபாலிடிகள்
ஏற்கெனவே கேட்கப்பட்டிருந்தன. கள்ளிக்கோட்டை முனிஸிபாலிடி பண
த்தைப் பெற்றுக் கொள்ளத் தயாராயிருப்பதாய் எழுதிவிட்டு, பணம் எதற்
காகக்கொடுக்கப்படும் என்ற நிபந்தனையைப் பற்றி ஒன்றும் எழுதவில்லை.
ஆகையால் அந்தப்பணத்தை கோஷா ஆஸ்பிடலுக்காகவே செலவிடுவதாய்த்
தீர்மானஞ் செய்யப்பட்டது.

இந்த கோஷா ஆஸ்பிட்டலின் அபிவிருத்தியின் பொருட்டு H. E. லேடி
ஹாமிக்கும், H. E. ஸர் மர்ரே ஹாமிக்கும் விசேஷ சிரத்தை எடுத்துக்கொ
ண்டு வந்தார்கள். இவர்களுக்கு வந்தனமளித்தபின் சபைகலைந்தது.

---

## சமாசாரக்குறிப்பு.

காட்பாடியில் ஒரு தொழிற் பள்ளிக்கூடம்:—காட்பாடியில், அமெரிக்கன்
ஆற்காட் மிஷன்தொழிற் பள்ளிக்கூடக் கட்டடத்துக்காகக் கவர்ன்மெண்டார்
2565 ரூபாய் கட்டடக் கிராண்டு சாங்க்ஷன் செய்திருக்கிறார்கள்.

---

மிஸ்ஸஸ் லாஸரஸ் ஏழை மாணவரின் பள்ளிக்கூடம்:—இப் பள்ளிக்
கூடத்தின் மாணவர்களுக்கு ஆடைமுதலிய பரிசுகள் வழங்கப்பட்டன. லேடி
பென்ஸன் அக்கிராஸனம் வகித்தார். பரிசுகள் லேடி பென்ஸனும் மிஸ்ஸஸ்
சதாசிவய்யாரும் வழங்கப்பட்டன.

---

ஸ்திரீகள் போதனுமுறைப்பாடசாலைகளுக்கு திரவிய சகாயம்:—கவர்
ன்மெண்டில் திரவிய சகாயம் பெற்று நடத்தப்பட்டு வரும் ஸ்திரீகள் போதனு
முறைப்பாடசாலைகளுக்கு வேண்டிய மேஜை நாற்காலி முதலிய சாமான்
களுக்குப் பொருளுதவி செய்வதற்காகக் கவர்ன்மெண்டார் ரூபா 7000-சாங்
க்ஷன் செய்திருக்கிறார்கள்.



உடம்பு ஸ்தூலித்து இருக்கப்பட்டவர்கள் ஒவ்வொரு வேளையும் சாப்பி
ட்டு அரைமணி நேரத்திற்குப் பிறகு எலுமிச்சம் பழரசத்தை ஒரு டம்ளர்
குளிர்ந்த ஜலத்தில் பிழிந்து ஒரு நாளைக்கு மூன்று வேளை வீதம் ஒருநாள்
விட்டு ஒருநாள் குடித்துவந்தால் தேகத்திலுள்ள ஊழல் சதை மாறிவிடும்.
எலுமிச்சம் பழரசம் தேகத்திலும் கைகால்களிலும் நகங்களிலும் இருக்கப்
பட்ட அழுக்குகளையும் துணிமணிகளிலுள்ள கரைகளையும் போக்கடிக்கும்.

---

சென்னை ஏழைப் பெண்கள் ஐவேஜி:—சென்ற செப்டம்பர் மாதம்
முதல் தேதி வரையில்வந்த ரூபா 995-12-0 ல் ரூபா 135-15-8 செலவா
னதுபோக பாக்கி கையிலிருப்பது ரூபா 859-12-4. அதன் பிறகு பணமனு
ப்பி னவர்களுக்கும், புஸ்தகங்கள் நாற்காலி மேஜை அனுப்பி உதவினவர்
களுக்கும் நன்றிசெலுத்தி மேன்மேலும் உதவியை வேண்டுகிறார்கள்."

---

பிலிப்பைன் தீவில் புயல்:—சிங்கப்பூருக்குக் கீழ்த்திக்கிலுள்ள பிலிப்
பைன் என்ற தீவுக்கூட்டத்தில் ஸெபு என்ற தீவில் அடித்த புயலால் 400
ஜனங்கள் இறந்துபோனார்கள். மாசூல்கள் அழிந்துபோய்விட்டன. மொத்த
நஷ்டத்தின் பெறுமானம் 105 லட்சம் டாலர். அதே தீவுக் கூட்டத்திலுள்ள
வெயிட் என்ற தீவில் 2000 வீடுகள் நாசமாயின. அழிந்துபோன மாசூலின்
நஷ்டம் 10 லட்சம் டாலர்.

---

ஸ்திரீ சுதந்தரவாதி தண்டிக்கப்பட்டாள்:—லண்டன், அக்டோபர்மீ
20உ 23 வயதுள்ள மிஸ் ஹெலன் க்ராக்ஸ் என்கிற ஸ்திரீ சுதந்தரவாதி ஒன்
பதுமாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டாள். மிஸ்டர் ஹார்கோர்ட்டினு
டைய மாளிகையில் புகுந்து நெருப்புவைக்கயத்தனஞ்செய்தது இவள் செய்த
குற்றம்.

---

வாணியம்பாடி அஞ்சுமான் முஸ்லீம் பெண்பாடசாலை:—வாணியம்பாடி
அஞ்சுமான் இ-காயிர்-கா-அம் இன் ஆதரணையின்கீழ் புதிதாய்க் கட்டப்
போகும் முஸ்லீம் பெண்பாடசாலைக்கு அஸ்திவாரக் கல் நாட்டுவதற்காக
பொதுமீட்டிங்கு ஒன்றுகூடிற்று. அன்று வேலூர் சிரேஷ்டகுருவும் வேலூர்
பக்ஹியாதூஸ் ஸலிஹாத் ஸ்கூலின் பிரின்ஸிபாலும், சென்னை முதலிய
விடங்களிலிருந்து வந்திருந்த மௌல்விகளும் பேசினார்கள்.

---

ஹிந்துப் பெண்களுக்கு ஒரு காலேஜ்:—ஹிந்துப் பெண்கள் உயர்தரக்
கல்வி கற்பதற்காக யாழ்ப்பாணத்தில் ஒரு காலேஜ் ஸ்தாபிக்க ஆனரபில் மிஸ்
டர் இராமநாதன் செய்துவந்த முயற்சி நிறைவேறிவிட்டது. அந்தக் காலே
ஜில் 750-பெண் மாணவர்கள் காலேஜிலேயே வசிக்கக்கூடும். அக்காலேஜின்
ப்ரின்ஸிபால் (பிரதம போதகர்) ஆகிய மிஸ்ஸஸ் ப்ளாரென்ஸ்பார் எமரி என்ற
வர் யாழ்ப்பாணம்வந்து சேர்ந்துவிட்டார். இவர் செல்டன் ஹாம் லேடி காலே
ஜில் உயர்தர வித்யாபட்டம் பெற்றவர்.

---

ஆசாரத்திருத்த சங்கம்:— ஆசாரத்திருத்த சங்கத்தின் ஆதரவின்
கீழ் அட்வோகேட் மிஸ்டர் M. A. திருநாராயணச்சாரி ஆனரபில் மிஸ்
டர் தாதாபாய் வயதுவராத பெண்களின் காப்புக்காகக் கொண்டுவந்திருக்
கும் மசோதாவைப்பற்றி ஒரு பிரஸங்கம் செய்தார். ஆனரபில் மிஸ்டர்
L. A. கோவிந்தராகவய்யர் அக்ராஸனம் வகித்தார். இருவரும் மசோதா

வின் நோக்கத்தைப் புகழ்ந்து அது சட்டமானால் நமது ஜனசாரத்திலுள்ள ஒரு பழிச்சொல் நீங்குமென்று பேசினார்கள்.

---

எல்லா இந்தியச் சுகாதாரக் கான்பரென்ஸ்:—எல்லா இந்தியச் சுகாதார கான்பரென்ஸ் இச் சென்னையில் இந்தியாக் கவர்ன்மெண்ட் கல்வி மெம்பர் ஆன ரெபில் ஸர். H. பட்லரின் அக்கிராசனத்தின்கீழ் ஆரம்பமாயிற்று. அந்தக் கான்பரென்ஸுக்கு மொத்தத்தில் 70 மெம்பர்கள் வந்திருந்தார்கள். எல்லா இந்தியச் சுகாதாரக் கான்பரென்ஸ் மெம்பர்கள் சென்னைநகர் சுற்றிப் பார்த்தார்கள். அவர்களில் பெரும்பாலார் ஜார்ஜ் டவுன் தம்புசெட்டித் தெரு வழியாய் ராயபுரம் போனார்கள்.

---

லாகூர் மேரி ராணியார் காலேஜ்:—லாகூர் மேரி ராணியார் காலேஜை (Queen Mary College) சென்றமீ 31உ லேடி ஹார்டிஞ்சு திறந்துவைத்த போது பஞ்சாப் மாகாண லெப்டினண்ட் கவர்னரின் மனைவியார் லேடி டேன் அந்தக்காலேஜின் சரித்திரத்தை விஸ்தாரமாய் எடுத்துச் சொல்லி எட்சிஸான் சீப்ஸ் காலேஜ் (Aitchison College) உயர்குடும்பச் சிறுவர்களுக்கு எவ்வித முபயோகப்படுகிறதோ, அவ்விதமே மேரி ராணியார் காலேஜ் பஞ்சாப் மாகாண உயர்குல ஸ்திரீகளுக்கு உபயோகப்படுமென்று சொன்னதுமன்றி அந்தக் காலேஜ் முழுதும் கோஷா முறையை யனுசரித்து நடத்தப்பட்டுவருமென்று உறுதி கூறினர். அப்பொழுது படிதா ஸ்திரீகளைத் தவிர புருஷர்கள் எவரும் வரவில்லை.

---

வெள்ளாட்டுப்பால்:—செம்மறி ஆட்டுப்பாலைக் காட்டிலும் வெள்ளாட்டுப்பால் மிகவும் சிலாக்கியமானது. பசும்பாலுக்கும் எருமைப்பாலுக்கும் எவ்வளவு வித்தியாசம் உண்டோ அவ்வளவு வெள்ளாட்டுப்பாலுக்கும் செம்மறி ஆட்டுப்பாலுக்கும் உண்டு. வெள்ளாட்டுப்பால் ருசியாய் இருப்பதோடு தேகத்திற்குப் புஷ்டியையுந் தரக்கூடியது. வைத்தியத்தில் வெள்ளாட்டுப்பால் மிகவும் கையாள உதவுகின்றது காலை 7-மணிக்கு இந்த ஆட்டின் பாலைக் கறந்து அதைச் சுத்தமான வெள்ளைத் துணியால் வடிக்கட்டி 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் கால்படி பாலும், அதற்குக் கீழ்ப்பட்டவர்கள் அரைக்கால்படி பாலும் கொஞ்சம் பத்தியத்துடன் ஏழுநாளைக்கு சாப்பிட்டுவந்தால், தேக சம்பந்தமான வியாதி ஒன்றும் வராது. ஆறு மாதத்திற்கு ஒருதரம் இப்படிச் சாப்பிட்டுவருவது மிகவும் நல்லது.

---

ஜூஸியில் கங்கைக்கு ஒரு பாலம்:—இம்மாதம் முதல்வாரத்தில் ஐக்கிய மாகாண லெப்டினண்ட் கவர்னர் ஸர் ஜேம்ஸ் மெஸ்டன வட இந்தியாவில் ஜூஸி (Jhusi) என்ற இடத்தில் கங்கைக்குக் கட்டப்பட்டிருக்கும் ரெயில் பாலத்தைத் திறந்து வைத்தார். அந்தப்பாலம் கங்கை யமுனை இவ்விரண்டு நதிகளுக்கும் அலகாபாத்தில் கட்டிவிடப்பட்டிருக்கும் பாலங்களை விட நீண்ட பாலமெனப்படுகிறது. ஜூஸிபாலம் 6380 அடி நீளமுடையதாம். ஈஸ்ட் இந்தியன் ரெயில்வேக் கம்பெனியார் யமுனை நதிக்கு அலகாபாத்தில் கட்டிவிட்டிருக்கும் பாலம் 3,159-அடி நீளத்துக்கு மேலில்லையென்றும், அயோத்தி ரோஹில் கண்ட் ரெயில்வேயார் கங்கைக்கு அலகாபாத்தில் கட்டி விட்டிருக்கும் பாலம் 3,250 அடி நீளத்துக்கு மேலில்லை யென்றும் சொல்லப்படுகிறது. ஜூஸி பாலம் 40 லட்சம் ரூபாய் செலவில் 3-வருஷத்தில் கட்டப்பட்டதாம். முதலில் கட்டை



வண்டிகளும் பாட்டைசாரிகளும் போக ஒரு பாலம் ரெயில்வே பாலத்தோடு சேர்த்துக் கட்டிவிடப் படவேண்டுமென்று பிரேரிக்கப்பட்டதாம். அதிகச் செலவு பிடிக்குமென்று அந்தயோசனை அங்கீகரிக்கப்படவில்லையாம்.

---

தபால் பட்டுவாடாவைப்பற்றி ஒரு அதிசயமான கதை:—இந்தியாவிலுள்ள தபால் ஆபீஸுகளைப் பற்றி அனுப்பிய வருஷாந்தர நிர்வாக ரிபோர்ட்டில் கிராமாந்தரங்களில், தபால் பட்டுவாடா செய்யப்படுவதில் இன்னும் பிராசீன முறை அனுசரிக்கப்பட்டு வருகிறதைப்பற்றி விநோதக்கதையொன்று உதாரணமாகச் சொல்லப்பட்டிருக்கிறது என்று பயோனியர் பத்திரிகை சொல்லுகிறது. அதாவது:—1911-ம் வருஷம் ஜூன் மாதம் 22-ந் தேதி யன்று பஞ்சாப் லூடியானா ஜில்லாவைச் சேர்ந்த இரண்டு கிராமத்தார்கள் பாசி நிறைந்த ஒருகுளத்தின் கரையில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஒருதவளை தண்ணீரின்பேரில் வந்து உட்கார்ந்ததைக் கண்டு அவர்கள் அதைக் கழியால் தொட்டார்கள். அந்தத்தவளை குதித்துக் குதித்து ஓடிற்று. அது உட்கார்ந்திருந்த இடத்தில் ஒரு கட்டுத்தபால் கடிதங்களைக் கண்டார்கள். அக்கிராமத்தில் ஸ்கூல் மாஸ்டரே தபால் மாஸ்டராகவும் இருந்தார். அவர் தபால்களைப் பட்டுவாடாசெய்யும்படி ஸ்கூல் பிள்ளைகளுள் ஒருவனிடம் கொடுத்தார். அவைகளை அவன் பட்டுவாடா செய்யாமல் பிரஸ்தாபக் குளத்தில் போட்டுவிட்டான்.

---

நாயர்களின் விவாகச்சட்டம்:—திருவாங்கூர் சட்டசபையில் நாயர்களின் விவாகச்சட்டம் அங்கீகரிக்கப்பட்டுவிட்டது. மணப்பிள்ளை மணப்பெண்ணுக்கு முண்டு கொடுக்கிற தென்ற இப்பொழுதுள்ள வழக்கத்தைக் கிரமமான விவாகச்சடங்காய் சட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. எந்த விவாகமுறையும் இதற்கு முன்சட்டத்தால் அங்கீகரிக்கப்படவில்லை. ஆகையால், இந்தச்சட்டம் செய்யப்பட்டதால் எல்லா ஜனங்களும் திருப்தி அடைந்தவர்களாயிருக்கிறார்கள். ஜனசாரவிஷயமாய் இதுதான் மகாராஜா அவர்களால் செய்யப்பட்ட முதற்சட்டம். நாயர் வகுப்பினராகிய அநேக ஸ்திரீகள் ஒருமீட்டிங்கூடி, விசேஷமாய்ச் செய்யப்பட்ட ஆட்சேபனையைக் கவனிக்காமல் இந்தச் சட்டத்தைச் செய்ததற்கு புகழ்ந்து மகாராஜாவுக்கு வந்தனம் செய்தார்கள். திருவனந்தபுரம் டிஸ்டிரிக்ட் ஜட்ஜியும் செஷன் ஜட்ஜியுமாகிய மிஸ்டர் ராமன் தம்பியின் மனைவியாகிய மிஸ்ஸஸ் தம்பி அக்கிராஸனம் வகித்தார்.

---

மிஸ்ஸஸ் பெஸண்டின் பிரஸங்கம்:—விக்டோரியா மண்டபத்தில் மிஸ்ஸஸ் பெஸண்ட் "இந்த உலகத்தில் மனிதனுடைய வாழ்வைப்பற்றியும் மரணமென்பது என்ன" என்பதைப்பற்றியும் ஒரு பிரசங்கம் செய்தார். பிரஸங்கத்தைக் கேட்கத் திரளான ஜனங்கள் கூடியிருந்ததுடன் பிரமுகர்கள் அநேகர் வந்திருந்தார்கள். பிரஸங்க விஷயத்தின் முதற்பாதியைப்பற்றி விஸ்தாரமாகப் பேசிவிட்டு மரணமென்பது என்ன என்கிற விஷயமாய்ப் பேசினர்: "மரணமென்பது இயந்திரத்தை இயக்கும் சக்தியை அதனின்றும் பிரித்து விடுவதுதான். மரணமென்பது என்ன என்பதை நன்றாய்த் தெரிந்துகொண்டால், அநேகர் அதற்குப் பயப்படுவதுபோல் ஒருத்தரும் பயமடையத்தேவையில்லை. தெருக்களில் திரியும்போது ஜனங்கள் போட்டுக்கொண்டிருக்கிற மேற்சட்டையைப்போல சரீரமிருக்கிறது. வீட்டுக்குள் நுழைந்தவுடன் மேற்சட்டை [illegible] நீக்கிவிடுகிறார்கள். தூக்கமும் மரணந்தான். தூக்கத்துக்காக யார் பயப்

படுகிறார்கள்? அதுபோல் சரீரத்தை நீக்கினவுடன் உண்டாவதாகிய மரண
மாகிற தூக்கத்துக்கும் பயப்படவேண்டாம்?

---

லேடிபென்ஸன் சொன்னதாவது:—"18-மாதங்களுக்குமுன் இப்பள்ளிக்
கூடம் கட்ட அஸ்திவாரக்கல் நடப்பட்டது. விடாது 20 வருஷ முழைத்து
மிஸ்ஸஸ் லாஸரஸ் திக்கற்ற பிள்ளைகளுக்காக இப்பள்ளிக்கூடத்தைக் கட்டி
நடத்துகிறார். மிஸ்ஸஸ் லாஸரஸால் துவக்கப்பட்ட இவ்வேலை பிறராலும் பின்
பற்றப்பட்டுப் பெருகுமென்று நான் நம்புகிறேன். அப்படி ஆனால், குழந்தை
களுக்கு எழுதப்படிக்கச்சொல்லிக் கொடுப்பதுடன், ஒழுங்கு, மரியாதை,
நன்னடக்கை, சுகாதாரம் முதலிய விஷயங்களைப் பற்றிய முக்கிய தத்வங்க
ளும் சென்னையிலுள்ள குழந்தைகளுக்கெல்லாம் சொல்லிக்கொடுக்கப்படும்.
குப்பை வண்டிகளை முனிசிபாலிட்டி எவ்வளவு வாங்கினாலென்ன? கல்வி எல்
லா ஜனங்களுக்குள்ளும் பரவாவிடில், தெருக்களெல்லாம் அசுத்தமாகத்தான்
இருக்கும். கல்வி பரவினால் ஜெயில்கள், ஆஸ்பிட்டல்கள் முதலிய ஸ்தாபனங்
களின் வேலையில் குறைவுண்டாகும். "ஒரு பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்தால்
ஒரு ஜெயிலை மூடுவதற்குச் சமானம்" என்று பழமொழி யுண்டு. "இங்கிலாந்
தில் வருஷமொன்றுக்குச் சராசரியாக 1622 பேர் கடுங்காவல் தண்டனையை
அடைந்துவந்தார்கள். 24 வருஷங்கழித்து ஜனங்களிடத்தில் கல்வி பரவின
தன் பயனாய் அத்தொகை 791 ஆகக்குறைந்து, 8 சிறைச்சாலைகள் தேவை
இல்லாமல் மூடப்பட்டன. ஆகையால் சென்னையில் மிஸ்ஸஸ் லாஸரஸ் செய்து
வரும் வேலை இன்னும் பலரால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். நாராயண
முதலித்தெருவிலுள்ள செட்டிப் பெண்பாடசாலைக்கு, திவான்பகதூர் C.
கண்ணுசெட்டி ஏராளமாய்ப் பண உதவி செய்வதுபோலும் அநேகர் சென்னை
க்குத் தேவை. ஆஸ்பிட்டலில் வசதிகளை உண்டுபண்ணுவது தர்மந்தான்;
ஆனால் அப்படிச்செய்வது வந்தபின் காத்தல்; ஒருபள்ளிக்கூடத்தை ஸ்தாபிப்
பதோ, வருமுன் தடுத்தல்"

---

பாம்புடன் சண்டை:—ஜெர்மன் தேசத்தில் ப்ராங்கு போர்ட் ஆன்மெய்
என்ற இடத்திலுள்ள மிருகம் முதலியவைகள் வைக்கப்பட்டிருக்கும் தோட்
டத்தில் செப்டெம்பர் மாதம் 14-ந் தேதியன்று அங்கு வைக்கப்பட்டிருக்கும்
ஒரு பாம்பு காவற்காரனைக் கவ்வி அவனுடைய தேகத்திலிருந்து அரை பவு
ண்டு மாமிசத்தை வெளியே இழுத்துவிட்டது. அந்தப்பாம்பு 20 அடி நீளம்.
சமீபத்தில்தான் அது அங்குகொண்டுவந்து வைக்கப்பட்டது. அதுவந்தநாள்
முதல் ஆகாரம் எடுத்துக்கொள்ள மறுத்துவிட்டது. அது அடைக்கப்பட்டிரு
க்கும் அறையில் மண்டலம் போட்டுக்கொண்டு படுத்திருந்தது. அதுநகராமல்
சாகும்போல் இருந்ததைக்கண்டு, அதைத் தண்ணீரில் தூக்கிப்போட்டால்
சுறுசுறுப்புடன் இருக்கும் என்று டாக்டர் சொன்னார். 4 காவற்காரர்கள் அது
அடைக்கப்பட்டிருக்கும் அறைக்குள் சென்று அங்கிருந்த ஒரு குளத்திற்குள்
தூக்கிப்போட எத்தனித்தார்கள். அச்சமயம் அது கோபத்துடன் நான்கு
பேரையும் கடிக்க வேகமாய்க் கிளம்பிற்று. மூவர் தப்பித்துக்கொண்டு ஓடி
விட்டார்கள். ஒருவன் அகப்பட்டான். பாம்பு அவன் புஜத்தில் தன்பற்களை
ஊன்றிப் பிடித்துக்கொண்டு அவன் தேகத்தின்மேல் சுற்றிக்கொண்டது.
மற்றமூவர் அவனை விடுவிக்கப் பிரயத்தனஞ் செய்தும் அவர்களால் முடிய
வில்லை. அதன் பற்கள் அவனுடைய புஜத்தில் நிரம்ப ஆழமாகப் பதிந்து



மைசூர் புதிய திவான்:—மைசூர் புதிய திவான் மிஸ்டர் M. விஸ்வேசுவரய்யா இம்
மாதம் 9உ மைசூருக்குப் புறப்பட்டு நேற்றுக்காலமே மகாராஜாவைப் போய்ப்பார்த்து,
அவரோடு பேசிக்கொண்டிருந்தார். அவர் அத்தினத்திலேயே மைசூர் திவான் வேலை
யை ஒப்புக்கொண்டுவிட்டார்.

---

திருவாங்கூர் ஜூனியர் ராணி:—திருவாங்கூர் ஜூனியர் ராணி ஓர் ஆண்மகவை
பெற்றதாய்ச் சமாசாரத்தையறிந்து சந்தோஷப்படுகிறோம்.

---

இரும்புகளில் துருப்பிடித்தல்:—இரும்பில் துருவேறி அது சீக்கிரத்தில் கெட்டுப்
போகிறதென்று அதற்கு வர்ணம் முதலானவை பூசிவருகிறார்கள். ஆனால் வர்ணம்
அதிகமாய்க் கொடுத்தால் கெட்டியாயிருந்து இரும்பு அதிகநாள் நல்ல ஸ்திதியில் இரு
க்குமென்று நினைக்கிறார்கள். இப்படி வர்ணங்கொடுப்பதைப்பற்றி இரண்டு ஜெர்மானிய
கெமிஸ்டுகள் சோதனைசெய்து பார்த்ததில், இரண்டு மூன்றுதரம் வார்னிஷ் அல்லது
வர்ணம்கொடுத்தால் வர்ணம் அதிகநாள் நிற்காமல் மறுபடியும் இரும்பு கெட்டுப்போகிற
தென்றும், ஒருதரம் பூசினால் அதுவே நீடித்து நின்று இரும்பு நல்ல ஸ்திதியில் இருப்ப
தற்கு உதவியாயிருக்கிறதென்றும் ஆகையால் ஒருதரம்தான் இரும்புக்கு வர்ணமாவது வார்
னிஷாவது பூசவேண்டுமென்றும் சொல்லுகிறார்கள். அதிகமாய்ப் பூசுவதால் வர்ணம்
கனமாகி அதனால் வெடித்துப்போவதற்கு இடமாகிறது. அந்த வெடிப்புகள் வழியாய்
துரு மறுபடியும் உண்டாகிறது. ஒருதரம் பூசினால் இம்மாதிரி வெடிப்பு உண்டாவ
தில்லை.

---

இந்தியாவில் சில குஷ்டர்கள் ரூபாய்களையும் கவர்ன்மெண்டு நோட்டுகளையும் கள்
ளத்தனமாகச்செய்து உண்மையான நாணயங்களோடு அந்தப் போலி நாணயங்களையும்
கலந்துவிடுகிறார்கள். போலி நாணயங்கள் சிலவேளை மிகவும் சாமர்த்தியமாய்ச் செய்யப்
படுவதால், அவைகளைக் கண்டுபிடிப்பது மிகவும் கஷ்டமாயிருப்பதுமுண்டு. இக்குற்ற
த்திற்காக வருஷா வருஷம் தண்டனையடைகிறவர்கள் அநேகம்.

---

ஒரு மகமதியப் பெண்பாடசாலை:—திருஷ்ணா ஜுன்டூர் பெண் பாடசாலை இன்ஸ்
பெக்டரஸாகிய மிஸ்ஸஸ் M. A. ஸ்ரீநிவாஸாவின் வேண்டுகோளின்மேல், டைப் ஜட்ஜ்
மிஸ்டர் V.C. மால்கரோன்றோஸ் எல்லூரில் ஒருமகமதியப்பெண்பாடசாலையை சென்ற
7-ந்தேதி திறந்துவைத்தார். இந்தப்பாடசாலை கவர்ன்மெண்டால் நடத்தப்பட்டு ஆரம்பப்
படிப்பை சொல்லிக்கொடுக்கும்.

---

ஓர் அற்புதம்:—திருவள்ளூர் தாலுக்காவிலுள்ள பாக்கம் என்னும் சுரோத்திரிய
கிராமத்தில் சுரோத்திரியதாரர்களின் சொந்த வாழைத் தோட்டம் ஒன்றில் ஓர் வாழை
மரம் தலையால் குலையை ஈன்று நடுமரத்தில் வெடித்து குலை தள்ளியிருப்பது மிகவும்
ஆச்சரியமாகவும் புதுமையாகவும் காணப்படுகின்றது.

---

காஞ்சிபுரத்தில் எல்லா இந்திய சுகாதாரக் கான்பரென்ஸ்:—மேற்படி கான்ப
ரென்ஸின் ப்ரெஸிடெண்டும் மற்ற 25 பிரதிநிதி மெம்பர்களும் சென்னையிலிரு
ந்து புறப்பட்டு காஞ்சிபுரத்துக்கு 11-20 மணிக்குப் போய்ச்சேர்ந்தார்கள். ஸப்கலெக்
டரும் முனிஸிபல் சேர்மனும் அவர்களை ரயில்வே ஸ்டேஷனில் வரவேற்று 3 மைல்
தூரத்திலுள்ள ஜலவசதி வேலைத்தலைப்பிற்கு அழைத்துக்கொண்டுபோனார்கள். கவர்ன்
மெண்டு ஸானிட்டரி எஞ்சினியராகிய மிஸ்டர் ஹட்டன் அவ் வேலை சம்பந்தமான விஷ
யங்களை அவர்களுக்கு எடுத்துச்சொன்னார். காஞ்சிபுரம் வேகவதி ஆற்றின் கரையில்
இருக்கிறது. ஆற்றில் வெள்ளம் வருவது விசேஷமாய் இல்லையாயினும், மேல் மணலின் கீழ் நீரோட்ட
மிருந்துகொண்டே இருக்கிறது. ஆற்றின் மணலைப் பிரித்தண்
டாகும் ஊற்று நீர்,கால்வாய்களின் வழியோடி ஆயிரக்கணக்கான கஜ் நஞ்சை நிலங்கள்
சாகுபடி செய்யப்படுகின்றன.

---

லேடி பெண்ட்லண்ட்:—நவம்பர்மீ 14உ மாலை 5-மணிக்கு H. E. லேடி பெண்ட்
லண்ட் விஜயநகரம் மகாராணியை பதில் பேட்டி போய்க்கண்டார்.

---

H. E. லார்ட் பெண்ட்லண்ட்:—பிராணி ஹிம்சை நிவாரண சபையின் ப்ரெஸி
டெண்டாக இருக்க H. E. லார்ட் பெண்ட்லண்ட் இசைந்திருக்கிறார்.

# FLANNELS

எங்களிடத்தில் உயர்ந்த மாதிரியான ப்ளானல்கள் தினுசுதினுசாயும் பல விலையுள்ளதாயும் எவ்வளவு கெட்டியாக வேண்டுமோ அம்மாதிரியும் ஏராளமாயிருக்கின்றன. இதை உடுப்புசெய்து தரித்துக்கொண்டால் பார்க்க வெகு திருப்திகரமாயிருக்கும். அடியில் உள்ளது அவைகளின் விலை.

## LALIMLI ALL WOOL.

## லாலிம்லி ஆல் ஊல்.

ஷை கம்பெனியாரேலேயே செய்யப்பட்டவைகள். சுருங்கவே சுருங்காது.

**Coating Flannels** Rs. 3-4 and Rз. 3-12 per yard.
Numerous patterns and shades, stripes and checks.
Splendid Suiting or Costume material.

**Plain Coloured Flannels** Rs. 2-8 and Rs. 3 per yard.
Medium weight excellent for general wear.
Colours stocked—Black, Dark Blue, Dark Green, Khaki, Scarlet and Gold.

**White Cricketing Flannels** Rs. 3 per yard.
This special line is known throughout India and the Far East for its magnificent quality.

**Shirting Flannel** from Rs. 2-4 to Rs. 3 per yard.
A lighter make for Shirts, Pyjamas, etc., supplied in White, Dark Blue and Khaki; also in Checks and Mixtures.

**Fawn Silk and Wool Flannel** at Rs. 2-6 per yard.
A blend of silk and wool, making a material of fine finish, durable and shrinkless.

**Grey Army Flannel** Standard quality Rs. 2-6 per yard.

**Welsh Flannel.**

**Silver Grey and Darb Mixture** Flannel, extra superior quality and regulation shades.

**Check Flannels** from Rs 2-4 to Rs. 2-12. per yard.
For Waistcoats, Coat Linings, etc. Colours—Khaki, Fawn and White.
We shall be glad to send you a varied selection of patterns.
Write Now! They are sent quite FREE for the asking.

*Cawnpore Woollen Mills Co. Ld., Cawnpore*

# LALIMLI

## ALL PURE WOOL.



# மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol. XIV. புத்தகம் - கச. | Madras: December 1912. சென்னப்பட்டணம்: டிசம்பர்மீ 1912. | No-12. இலக்கம்-12.


## உஷ்ணம்

போன பாடத்தின் துவக்கத்தில் நமது உணர்ச்சியே நம்மை ஏமாற்றி
விடுகின்றது என்று சொன்னோமல்லவா? அதை இப்பொழுது நன்றாய்
ஆராய்ச்சிசெய்வோம். பகல் பொழுதில் வழி நடந்தவன் ஒருவனும் தோட்
டத்தில் உலாவி வந்த ஒருவனும் ஒரே சமயத்தில் ஒரு திண்ணையில் வந்து
உட்கார்ந்தபோது வழிநடந்து வந்தவன் திண்ணைகுளிர்ச்சியாய் இருக்கின்ற
தென்றும் தோட்டத்தில் உலாவிவந்தவன் தாபமாய் இருக்கின்ற தென்றும்
சொல்லிக் கொண்டிருக்கிறார்களே! அதற்குக் காரணத்தை அறியப் பிரயத்த
னம் செய்யலாம். பகல் காலத்தில் வழிநடந்ததுபற்றி, திண்ணையில் உட்கா
ரும் வரையில் அம்மனிதன் மிகுந்த உஷ்ணபிரதேசத்திலேயே நடந்திருக்
கிறான். அவ்வழிகளில் உள்ள வாயுவும் (air) உஷ்ணமாய்த்தானே இருக்க
வேண்டும். திண்ணை, நிழலில் இருப்பதால், அவ்வளவு சூடாய் இல்லை. அங்
கிருக்கும் வாயுவும் சற்று சூடுதணிவாய் இருக்கின்றது. ஆகவே அம்மனி
தன் உஷ்ணமான இடத்திலிருந்து உஷ்ணம் தணிவாயிருக்கும் இடத்திற்கு
வருகிறான். அதனால் அவனுக்கு இன்பமாய் இருப்பதுபோல் தோன்றுகின்
றது. இரண்டாம் மனிதன் தோப்பில் உலாவிக்கொண்டிருந்தான். தோப்பு
களில் மரங்களடர்ந்து இருந்ததால் வெயிலின் கொடுமை இல்லையாகையால்,
குளுகுளு வென்றிருக்கும். அதைவிட வீதித்திண்ணை சூடு அதிகமென்பது
நான் சொல்லாமலே விளங்கும். ஆகையால் இரண்டாவது மனிதன், குளிர்ச்சி
யாய் இருக்கும் இடத்திலிருந்து உஷ்ணமாய் இருக்கும் இடத்துக்கு வருவ
தால், அவனுக்கு உஷ்ணமாய் தோன்றுகின்றது. இவ்வித்தியாசங்களைத் தெர்
மாமீடர் வைத்துக்கொண்டு உண்மையோவென்று விசாரிக்கலாம். தெர்மா
மீடரை திண்ணையில் 10-நிமிஷம் நூலைக்கட்டித் தொங்கவிடுவோம். ரசம்
95-படியில் நிற்கின்றது. ஒருகுடை பிடித்துக்கொண்டு தெருவில் நடந்து
போகும்போது குடைக்கம்பியில் அதை 10-நிமிஷம் தொங்கவிட்டு டெம்ப
ரெசர் எவ்வளவென்று பார்ப்போம். 98, 97, டிக்கிரி இருக்கின்றது. அருகில்
உள்ள தோப்பில் தெர்மாமீடரை வைத்துக்கொண்டு உலாவுவோம். 92 93-
வது படியில் ரசம் நிற்கின்றது. ஜலத்தில் மூன்றுவிதம், ஒவ்வொரு கிண்ணத்
திலும் வைத்துக்கொண்டு பரிசைஷசெய்தோமே, அப்பொழுது தோன்றின
வித்தியாசத்தின் காரணம் என்னவென்று விசாரிப்போம்.

உஷ்ண ஜலத்தில் தெர்மாமீடரை வைத்தபோது ரசம் 100, 110-வது
படியில் நிற்கின்றது. இரண்டாவதில் 80, 82 - வது படியில் நிற்கின்றது.
மூன்றாவதில் 90, 92, வது படியில் நிற்கின்றது. ஆனால் விரல்கள் மட்டும்
ஏன் ஒன்று ஒரு விதமாயும் மற்றொன்று இன்னொரு விதமாயும் உணர்ச்சி
கொடுக்க வேண்டுமெனறால் முதல் கிண்ணத்தில் இருந்த விரல் வெயிலில்
நடந்து வந்த மனிதன் போன்று டெம்பரெசர் அதிகமான இடத்தில்
இருந்ததல்லவா? அதைக் கொண்டுபோய் கடைசி கிண்ணத்தில் தோய்த்த
போது கையிலிருந்து உஷ்ணம் ஜலத்துக்குப்போகிறது. ஆகையால் கை
குளிர்ந்ததுபோல் தோன்றுகின்றது. மற்றொருவிரல், தோப்பில் உலாவி
வந்தவன்போன்று சூடு குறைவாய் இருந்த இடத்தில் இருந்தது பற்றி,
மூன்றும் கிண்ணத்தில் வைத்தபோது ஜலத்திலிருந்து உஷ்ணம் விரலுக்கு
வருகிறது. ஆகையால் விரல் உஷ்ணமாய் இருப்பதுபோல் தோன்றுகிறது.
உஷ்ணத்தின் தன்மையே இவ்விதமல்லவா? உஷ்ணம் எப்பொழுதும் சூடு
அதிகமாய் இருக்கும் இடத்திலிருந்து சூடு குறைவாய் இருக்கும் இடத்துக்
கே போகுமல்லவா? முதல் விரல் ஜலத்தைவிட சூடு அதிகம். இரண்டாவதோ
ஜலத்தைவிட சூடு குறைவு. ஆகையால்தான் ஒன்று உஷ்ணத்தை ஜலத்துக்
குக் கொடுத்து குளிர்ச்சியாய் இருப்பதுபோலும், மற்றொன்று உஷ்ணத்தை
வாங்கிக்கொண்டு சூடாய் இருப்பதுபோலவும் உணர்ச்சி உண்டாக்குகின்றன.

உஷ்ணமாக்கிய வஸ்துக்கள் எல்லாம்—கனப்பொருள்களாயினும், திரவப்
பொருள்களாயினும், வாயுப்பொருள்கள் ஆயினும்—தம்அளவில் அதிகமாகின்
றனவென்று முன்பாடத்தில் சொன்னோமல்லவா? அவ்விதப்படி தம்மளவில்
அதிகமாகாத வஸ்துக்களும் உண்டு. அவை மிகக் கொஞ்சம். மழைக்காலங்
களில் நம் வீட்டு மரக்கதவுகளை நன்றாய்ச் சாத்தி தாள்போட முடிவதில்லை.
வெயிற்காலத்தில் நன்றாய்த் தாள்போடமுடிகின்றது. ஆகவே மழைகாலத்தில்
கதவின் பலகைகள் தம்மளவில் அதிகமாய் விட்டனபோலும். வெயிற்காலத்
தில் குறைந்து விட்டனபோலும் தோன்றுகின்றன. வெயிற்காலத்திலோ
உஷ்ணம் அதிகம். மழைகாலத்தில் அவ்வளவு உஷ்ணமில்லை. இதற்குக்கார
ணம் தெரியவேண்டுமானால் ஒரு பரிக்ஷைசெய்யவேண்டும். ஒரு (பிஸ்கட்)
துண்டு எடுத்து ஜலத்தில் ஊறப்போடுங்கள். அது என்னவாகின்றது? ஊறி
ப்பருத்துப்போகின்றது. வடாம் இட்டு வெயிலில் உலரவைத்தால் அது
சுருங்கிப்போகின்றது. இவற்றிற்குக் காரணம் நான் சொல்லவேண்டியதில்லை
யே! பிஸ்கட் ஜலத்தை உரிஞ்சிக்கொள்ளுகின்றது. வடாம் தன்னிடத்தில்
உள்ள ஜலத்தை இழந்துவிடுகின்றது. அதனாலேயே இம்மாறுபாடுகளுண்
டாகின்றன. ஒரு அட்டையை ஜலத்தில் நனைத்தால் அது ஊறிப்பெருத்து
ப்போகிறது. வெயிலில் வைத்தால் அது சுருங்குவதையும் பார்க்கலாம். செடி
களின் இளங்கிளைகளையும் தடிப்பான இலைகளையும் உலர்த்தினபோதிலும்
அவை சுருங்குவது நன்றாய் விளங்கும். கதவின் மரம் மழைக்காலத்தில் பெ
ருத்துப் போவதற்குக் காரணம் நீங்களே யோசித்து அறியலாம். மழைகாலத்
தில் வாயுவில் ஏராளமாய் ஈரம் இருக்கின்றது. அவ்வீரத்தை மரம் உரிஞ்சிக்
கொண்டு பெருத்துப்போகின்றது. வெயிற்காலத்தில் மரம் தனது சிறிய துவா
ரங்களிலுள்ள ஈரத்தை இழப்பதினால் சுருங்கிப்போகின்றது வெயிற்காலங்
களில் புஸ்தகங்களை மேஜையின்மேல் வைத்து இருந்தால் அட்டை வளைந்து
போகின்றது. மழைகாலத்தில் அதேபுஸ்தகத்தின் அட்டை உட்புறம் குழி
வாயும் வெளிப்புறம் உப்பியும் போகிறது. மரம்போலவே உஷ்ணமாக்கிய



போது சுருங்கியும் மழைக்காலத்தில் பெருத்தும் போகக்கூடிய வஸ்துக்கள்
இன்னும் சிலவுண்டு. இந்தியாரப்பர், தோல் இவை அம்மாதிரியானவை.

இனி உஷ்ணம் என்பதற்கும் சீதோஷ்ணஸ்திதியென்கிற டெம்பரெ
சர் என்பதற்கும் வித்தியாசத்தை விவரமாய் அறியவேண்டும். பழுக்கக்காய்
ச்சின ஊசி, கொதிக்கும் ஜலத்தைவிட சூடானதல்லவா? ஏன்? பழுக்கக்காய்
ச்சின ஊசியைக் கொதிக்குஞ் சலத்தில் அமிழ்த்தினால் ஊசி தன் உஷ்ண
த்தை கொதிக்குஞ் ஜலத்துக்குக் கொடுத்துவிடுகிறது? ஆகையால்தான் பழுக்
கக் காய்ச்சியிருக்கும்போது ஊசியின் டெம்பரெசர் கொதிக்கும் ஜலத்தின்
டெம்பரெச்சரைவிட அதிகமென்கிறோம். மறுபடி ஊசியை பழுக்கக் காய்ச்சு
வோம். இரண்டு சரியான அளவுள்ள சொம்பில் அரைவரிசை வரையில் குளிர்
ந்த ஜலம் எடுத்துக்கொள்வோம். ஒன்றில் ஒரு டம்ளர் கொதிக்கும் ஜலத்தை
யூற்றுவோம். மற்றொரு செம்பு ஜலத்தில் பழுக்கக்காய்ச்சின ஊசியைத்
தோய்ப்போம். ஒரு நிமிஷம் பொருத்து இரண்டு செம்புகளையும் பரிக்ஷை
செய்வோம். எந்த சொம்பின் ஜலம் அதிகசூடாய் இருக்கிறது? சந்தேகமாய்
இருந்தால் நீங்களே செய்துபார்க்க வேண்டியதுதான் எச்சொம்பில் கொதிக்
கும் ஜலத்தை யூற்றினோமோ அச்சொம்பின் ஜலந்தான் அதிகசூடாய் இருக்
கின்றது. மற்றொன்றிலுள்ள ஜலம் கிட்டத்தட்ட முன்போலவே இருக்கின்
றது. ஏனெனில் டம்ளரில் உள்ள கொதிக்கும் ஜலம் பழுக்கக்காய்ச்சின
ஊசியைவிட அதிக உஷ்ணம் கொடுத்திருக்கின்றதென்று தெளிவாய் விளங்கு
கின்றதல்லவா?

இன்னுமொரு திருஷ்டாந்தம். வெந்நீர் அண்டாவில் ஜலம் காய்கின்றது;
அப்பொழுது ஒரு சொம்பில் அதே ஜலத்தை எடுத்து பக்கத்தில் வைப்
போம். இரண்டிலும் தெர்மாமீடரை வைத்துப் பார்ப்போம். இரண்டிலும்
தெர்மாமீடர் ஒரே படியிலேயே நிற்கின்றது. ஆனால் அண்டாவிலுள்ள
ஜலத்தில் அதிக உஷ்ணம் இருக்கின்றது. சொம்பில் இருக்கும் ஜலத்தில்
அதிக உஷ்ணம் இல்லை; ஆனால் இரண்டு பாத்திரத்தில் உள்ள ஜலமும்
ஒரே மாதிரியான உஷ்ண நிலையில் இருக்கின்றது. ஆகையால் ஒவ்வொரு
வஸ்துவிலும் உள்ள உஷ்ணத்தை சரியாய் அளவிட வேண்டுமானால் அதன்
டெம்பரெசர், அதன் கனம் இவை இரண்டையும் கணக்கில் எடுத்துக்கொள்ள
வேண்டுமல்லவா? 30 ஒரே மாதிரியான ஆணிகளை அடுப்பில் போட்டுப் பழுக்
கக்காய்ச்சினோமானால் ஒவ்வொரு ஆணியும் ஒரே டெம்பரெசரை யடைகின்
றது. ஆனால் எல்லா ஆணிகளும் ஒரே மாதிரியாய் இருப்பதால் ஒவ்வொன்
றிலும் ஏதோ ஒரு அளவு உஷ்ணம் இருக்கும் அல்லவா? 5 ஆணிகளை கால்
படி ஜலத்தில் போடுவோம். 25 ஆணிகளை இன்னுமொரு கால்படி ஜலத்தில்
போடுவோம். சுபாவமாகவே 25 ஆணிகள் எதில் போட்டோமோ அந்த
ஜலமெல்லாம் அதிக உஷ்ணத்தைப் பெற்றுக்கொண்டு சூடு அதிகமாகின்றது.
ஆகவே ஒவ்வொரு வஸ்துவிலும் உள்ள உஷ்ணத்தை அளவிட வேண்டுமா
னால் அது எவ்வளவு உஷ்ணத்தை மற்ற ஒரு குளிர்ந்த வஸ்துவுக்குக் கொடு
க்குமென்பதைப் பார்த்துதான் நிர்ணயம் செய்வது வழக்கம். உஷ்ணம் என்ப
தற்கும் டெம்பரெசர் (சூடு குளிர்ச்சி) என்பதற்கும் நன்றாய் வித்தியாசம்
தெரியவேண்டும். அதுபற்றி இவ்வளவு திருஷ்டாந்தம் சொல்லுகிறேன்.
ஒரு சிறு பாத்திரத்தில் குளிப்பதற்கு ஜலம்காய்ச்ச வேண்டுமானால் ஒரு
விறகு வைத்து எரியவிட்டால் அவ்வுஷ்ணம் ஜலத்தைக் காய்ச்சிவிடுகிறது.
பெரியபாத்திரத்தில் ஜலத்தைக் காய்ச்சவேண்டுமானால் ஜலம் 3 பங்கு அதிக

மாயிருந்தால் 3 பங்கு அதிகமாய் விறகு வைக்கவேண்டுமல்லவா? ஆகையால் எந்த வஸ்துவைச் சூடாக்கவேண்டுமானாலும் அதன் அளவையும் அது எந்த டெம்பரேசர் ஆகவேண்டு மென்பதையும் உத்தேசித்து உஷ்ணம் கொடுக்கவேண்டும். அதற்கு மாறாக எந்த வஸ்துவையும் குளிரச் செய்யும் போது அதன் அளவு (கனம்) அதன் டெம்பரேசர் இவற்றிற்குத் தக்கபடி ஒவ்வொன்றும் உஷ்ணம் கொடுக்கும். ஒருசொம்பு ஜலத்தைக் கைபொறுக்கக்காய்ச்ச ஒரு விறகு வேண்டியிருந்தால் அதே ஜலத்தைக் கொதிக்கக் காய்ச்ச இன்னும் அதிக உஷ்ணம்வேண்டும். டெம்பரேசரை அளந்தமாதிரி உஷ்ணத்தையும் அளப்பதுண்டு. 1 பவுண்டு ஜலத்தை 1 டிக்கிரீ சூடேற்ற வேண்டுமானால் எவ்வளவு உஷ்ணம் வேண்டுமோ அதைத்தான் unit என்று வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். அதுவேபோல் 1 பவுண்டு ஜலம் 1 டிகிரீ அளவு குளிர்ந்தால், எவ்வளவு உஷ்ணம் வெளிப்புறப்படுமோ அதுவும் ஒரு unit அல்லவா? 10 பவுண்டு ஜலம் 100 டிகிரீயிலிருந்து 90 டிகிரீவரையில் குளிர்ந்தால் அதாவது, 10 டிக்கிரீதூரம் குளிர்ந்தால் அது $10\times10=100$ unit உஷ்ணம் வெளிவிடும்.

(இன்னும் வரும்.) ஆர். கே. சுவாமி, பி-ஏ., எல்-டி.

# ஜெனரல் நோகி.

காலஞ்சென்ற ஜப்பானிய சக்கரவர்த்தியின் மரணதினத்தன்று, சில ஜப்பானியர்கள் தற்கொலை புரிந்துகொண்டார்க ளென்பதையும், அவரது சரீர அடக்கத்தினத்தன்று மஹாகீர்த்திபெற்ற சேனைத்தலைவரான **ஜெனரல் நோகி என்பவரும், அவருடைய மனைவியும்** தற்கொலை புரிந்துகொண்டார்கள். தற்போது அவரைப்பற்றிய பலகதைகள் ஜப்பானிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்டுவருகின்றன. ஜப்பான் அட்வர்டைஸர் என்ற பத்திரிகையில் நிருபர் ஒருவர் பின்வருமாறு எழுதுகிறார்:—

"காலஞ்சென்ற **ஜெனரல் நோகியைப்பற்றி** இப்போது நான் சொல்லப்போகிற கதையானது காலஞ்சென்ற ஜப்பானிய சக்கரவர்த்தியின் குணாதிசயங்களை இன்னுமதிகமாக விளக்குவதாகும். போர்ட் ஆர்தரில் நடந்த சண்டையில் ஜெயமடைந்த பிற்பாடு ஜெனரல் நோகி டோகியோ நகருக்கு ஜெயபேரிகையுடன் திரும்பினர். அந்த யுத்தத்தில் அவரடைந்த வெற்றியினால், மகா கீர்த்தியடைந்தாராயினும், ஜப்பானிய சக்கரவர்த்தியின் புத்திரர்களான, ஸோல்ஜர்கள் மாண்டுபோனதைக் குறித்து வருத்தமுற்று அதற்கு ஈடாகத் தனது ஆவியைக் கொடுத்துவிடத் தீர்மானித்திருந்தார்.

ஜெனரல் நோகி ஜெய பேரிகையுடன் பட்டணத்திற்குத் திரும்பி வருகையில், திரளான ஜனங்களாலும், காலஞ்சென்ற சக்கரவர்த்தியவர்களாலும் வெகு குதூகலத்துடன் வரவேற்கப்பட்டார். ஜெனரல் நோகி, போர்ட் ஆர்தரில் நடைபெற்ற யுத்தங்களைப்பற்றி விவரித்துக் கூறியதைக் கேட்ட மன்னர், அவரை வெகுவாய்ப் புகழ்ந்து பேசினர். ஆனால் ஜெனரல் நோகி, சிறிதும் சந்தோஷங் கொள்ளாமல், தனது அஜாக்கிரதையினால் ஜப்பானிய யுத்த வீரர்கள் இறந்துபோனதாகவும், அதற்காகத் தனது ஜீவனை விட்டுவிடப் போவதாகவும் கூறி அவ்விடத்தை விட்டகல ஆரம்பித்தார். காலஞ்சென்ற சக்



சரவர்த்தி யவர்களாலும் வெகு குதூகலத்துடன் வரவேற்கப்பட்டார். ஜெனரல் நோகி, போர்ட் ஆர்தரில் நடைபெற்ற யுத்தங்களைப்பற்றி விவரித்துக் கூறியதைக்கேட்ட மன்னர், அவரை வெகுவாய்ப் புகழ்ந்து பேசினர். ஆனால் ஜெனரல் நோகி, சிறிதும் சந்தோஷங்கொள்ளாமல், தனது அஜாக்கிரதையினால் ஜப்பானிய யுத்த வீரர்கள் இறந்துபோனதாகவும், அதற்காகத் தனது ஜீவனை விட்டுவிடப் போவதாகவும் கூறி அவ்விடத்தை விட்டகல ஆரம்பித்தார். காலஞ்சென்ற சக்கரவர்த்தி யவர்கள் அவரைப் போகவொட்டாமல் நிறுத்தி "போர்ட் ஆர்தரில் நடந்த கொடிய யுத்தங்களில் நேரிட்ட நஷ்டத்தைக் குறித்து உமது மனம் மிகுந்த வருத்தமுறுகிற தென்பதை யான் அறிவேன். ஆனாலும், உயிரோடிருப்பதைவிட இறந்துபோவது இலகுவென்பதை ஞாகத்தில் வைக்கவேண்டும். நீர் உம்முடைய ஆவியை விட்டுவிடப் பிரியப்படுவதானால், நானிறந்துபோன பிற்பாடு நீர் அப்படி செய்துகொள்ளும்" என்று கூறினர்.

அன்பும் காருண்யமும் பொருந்திய இவ்வார்த்தைகளை, கண்யமும் ராஜவிஸ்வாஸமுமுள்ள ஜெனரல் நோகி, கேட்டு தாரை தாரையாகக் கண்ணீர் சொரிந்தார். சக்கரவர்த்தியும் மனந்தாளாது அழுதுவிட்டனராம். ஆகையால் ஜெனரல் நோகி, சக்ரவர்த்தியின் அந்திய காலமட்டும் உயிரோடிருந்து பிறகு தற்கொலை புரிந்துகொண்டார்.

சக்கரவர்த்திக்கும் ஜெனரல் நோகிக்கும் நடந்த மேற்படி சம்பாஷணையையும் சம்பவங்களையும் அப்போது அங்கு கூடயிருந்த, (Baron Ukasawa) பாரன் அகஸாவா என்பவர் சொல்ல, எல்லோருக்கும் தெரியவந்தது.

ஜெனரல் நோகி இன்னும் சில காலம் ஜீவித்திருந்து தற்போதைய சக்ரவர்த்தியின் கீழும் வேலைபார்த்துவரலாம். ஆனால் அவருக்குப் பழைய சக்ரவர்த்தி யிடத்தி லுண்டாயிருந்த நேச சம்பந்தமானது நிற்க இடங்கொடுக்கவில்லை. எப்படியாயினும் அவருடைய ஞாபகம் ஜப்பானிய ஜனங்களுக்குள் என்றைக்கும் இருந்துகொண்டிருக்கும்".

# கல்லட்டிகை.

விதிவசத்தால் சாதாரண ஸ்திதியையுடைய வம்சத்தில் உதித்தவும் மிகவும் அழகுள்ளவளும் பிறர் மனதைக்கவரும் தன்மையையுடையவளுமான பெண்களில் **சந்திரகாந்தி** என்பவள் ஒருத்தி. கீர்த்திபெற்ற தகுந்த ஐவேஜியுள்ள ஒருவனால் நேசிக்கப்பட்டு அவனை விவாகம் பண்ணிக்கொள்ளத்தக்க சீதனம் அவளுக்கு இல்லை. ஆதலால் சர்வகலாசாலைச் சங்கத்தின் ஒரு குமாஸ்தாவை விவாகம் பண்ணிக்கொள்ள நேரிட்டது. பணம் இல்லாததினால் அவள் உடை சாதாரணமா யிருந்தது. ஆனால் அவள் நிலைமைக்குத் தக்கவாறு உதிக்கவில்லை யென்கிற வருத்தம் அவளிடத்தில் குடிகொண்டது. சாதாரணமாய் பெண்களுக்கு உயர் குடிப்பிறப்பு நல்லகால வழியில் வருதல் இவைகளைவிட அழகும் பிறரைக்கவரும் ரூபமும் தான் முக்கியம். அப்பேர்ப்பட்ட முக்கிய பாவனைகள் அவளிடத்தில் இருந்தன.

ஆனல் நானுவித உற்சாகத்தை அனுபவிக்கவென்றே அவள் பிறந்தாள்
என்று எண்ணினள். ஆதலால் தன் வீட்டின் இழிவான ஸ்திதியைப்பற்றி
யும் உடைந்துபோன நாற்காலிகளைப்பற்றியும், கேவலமான திரைகளைப்பற்றி
யும் நினைத்து நினைத்து உருகுவாள். இவள் நிலைமையையொத்த பெண்கள்
எவைகளைப்பற்றி கவலைப்படமாட்டார்களோ, அவைகள் அவளுடைய மன
தைப் புண்படுத்தின.

அவளும் அவளுடைய கணவனும் சாப்பிடும்பொழுது, "இது மிகவும்
நன்றாயிருக்கு" என்று அவன் சொன்னல், அதினும் மேன்மையாயிருக்கும்
பண்டங்களைப்பற்றி நினைத்து நினைத்து வருந்துவாள். அவளுக்கு நல்ல உடுப்
பும் ஆபரணங்களும் கிடையாது. மேற்கூறியவைகளைப் பூட்டிக்கொள்ளவே
சிருஷ்டிக்கப்பட்டாள் என்று அவள் நினைத்தாள். பிறர்கள் அவளை நேசிக்க
வும், மனமகிழ்ந்து தன்னை விரும்பவும் அவள் வேண்டினள்.

அவளுடன் வாசித்த ஒரு தோழி அவளுக்கு உண்டு. இந்நிலைமையில்
அத்தோழியைப் பார்க்க அவளுக்குக் கால் எழவில்லை. இப்படி யிருக்க ஒரு
நாள் அவளுடைய புருஷன் ஒரு கடிதம் கொண்டுவந்து அவளிடம் கொடுத்
தான். அதில் கலாசாலைச் சங்கம் சம்பந்தமாய் அவளை ஒரு மாதர் கூட்டத்
திற்கு அழைத்திருந்தது. அதைப்பார்த்தவுடன் விசிறிக் கீழே எறிந்தாள்.

"என் கண்ணே! இதனல் நீ சந்தோஷப்படுவா யென்றே யிருந்தேன்.
இதற்காக நிரம்ப சிரமப்பட்டேனே. அதற்கு அழைக்கப்பட்டவர்கள் பொறி
க்கி எடுத்த சில பேர்கள் தானே". என்று அவளுடைய கணவன் சொன்னன்.
அவள் கோபத்தோடு அவனைப்பார்த்து, "நான் என்ன உடுத்திக்கொண்டு
போகிறது" என்று கேட்டு சற்று கண்ணீர்விடலானள். பிறகு என்ன சங்
கதி யென்று கேட்க அவள் அழுகையை அடக்கிக்கொண்டு, "ஒன்றுமில்லை,
எனக்குத் தகுந்த உடுப்பு இல்லை யாதலால் நான் வரவில்லை. என்னைக்காட்டி
லும் மேலான அந்தஸ்தையுடைய தங்கள் சிநேகிதன் மனைவிக்கு இந்த சீட்
டைக் கொடுங்கள்" என்று சொன்னள்.

புருஷன் இதற்கு என்ன பண்ணுகிறதென்று தெரியாமல் திகைத்து
பிறகு அதற்கு எவ்வளவு பணம் வேணுமென்று கேட்க அவள் 16 பவுன்
வேண்டுமென்றாள். வேட்டையாடப் போகவேண்டி ஒரு துப்பாக்கி வாங்கும்
பொருட்டு அவன் சேர்த்து வைத்த அப்பதினறு பவுன் தான் அவனிடத்தி
லிருந்ததை யோஜித்து சற்று திகைத்து பிறகு அத்தொகையைக் கொடுக்க
இணங்கினன். அக்கூட்டதினம் நெருங்க அவன் மனைவி நல்ல உடை செய்து
கொண்ட பிறகும், மிகக்கவலை யுள்ளவளாயும் சஞ்சலப்பட்டவளாயும் காணப்
படுவதைப்பார்த்து என்ன சங்கதியென்று கேட்க, அவள், "நான் அணிந்து
கொள்ள ஒரு நகையுமில்லையே, மற்றவர்களெல்லாரும் நகை அணிந்திருக்க
நான் நகையில்லாமல் போவதைவிடக் கீழ்ப்பட்டது வேறொன்றுமில்லை" என்று
சொல்ல, அவன் "உன்னுடைய தோழி ஜயத்தைக் கேட்டு ஏதாவது நகை
வாங்கிப் பூட்டிக்கொண்டுவாயேன்" என்று சென்னன். உடனே அவள் போய்
ஒருகல்லட்டிகை இரவல் வாங்கிப் பூட்டிக்கொண்டு அம்மாதர்க் கூட்டத்திற்
குச் சென்றாள்.

அங்கு வந்திருந்த பெண்களில் அதிரூபவதியாயும், மிக இனியவளாயும்,
பிறர் மனதைக் கவருந் தன்மையையுடையவளாயும் இருந்தவள் சந்திரகாந்
தியே; எல்லாரும் இவளைப் பார்த்து ஆச்சரியப்பட்டு இவளுடன் பேச இஷ்



டப்பட்டார்கள். இதனல் அவள் திருப்தி யடைந்தது இவ்வளவுதான் என்று
சொல்லமுடியாது. சில சமயங்களில் தன்னையும் மறந்தாள். பிறகு கூட்ட
முடிந்தவுடன் வீட்டுக்குப்போக வண்டி தேட அவளும் அவள் புருஷனும்
குளிர்காலமானதால் கம்பளியைப் போர்த்துக்கொண்டு ஒரு தெருவழியாய்ச்
சென்றார்கள்.

வண்டியில் வீடு வந்தவுடன் அவள் அழகைக் கண்ணடியில் பார்க்க கம்
பளியை யெடுக்க கல்லட்டிகை அவள் கழுத்திலில்லாததைப் பார்த்து திடுக்
கிட்டாள். பிறகு கணவனிடத்தில் சொல்ல அதைக்கண்டு எடுக்க எவ்விதப்
பிரயத்தனமும் வீணய் முடிய அதற்கு பதில் கல்லட்டிகை ஜயத்துக்கு எப்
படி கொடுக்க முடியும் என்பதை யோஜித்தார்கள். அது மாதிரி யொன்று
வாங்கக் கடைகள் முழுதும் தேடியும் அகப்படவில்லை. கடைசியில் ஒரு கடை
யில் அது மாதிரி யிருக்க அதின் விலை 1500 பவுன் என்று கடைக்காரன்
சொன்னன். முடிவில் அதை 1400 பவுனுக்குத் தீர்த்து அவன் தகப்பன
ரால் அவனுக்கு வைக்கப்பட்ட 600 பவுனேடு பாக்கித்தொகை, 100 பவுன்
50 பவுன் இப்படி நாணயத்தின் பேரில் நாட்டுக்கோட்டைச் செட்டியிடம்
ப்ராமிஸரி நோட்டின் பேரிலும் வட்டிக்குப் பணம்பெற்று அந்தக் கல்லட்டி
கையை வாங்கி அவளது தோழிக்கிக் கொண்டுபோய் கொடுக்கச்சொன்னன்.
அவள் கொண்டுபோய் கொடுத்தவுடன் அத்தோழி "முன்னமே கொடுத்
திருந்தால் உபயோகப்பட்டிருக்கும்" என்று சொல்லி அப் பெட்டியைத் திற
ந்து பார்க்காமலே வாங்கி வைத்துக்கொண்டாள்.

பிறகு வாங்கின கடனை அடைக்கவேண்டி மிகவும் செட்டாய் குடித்
தனம் செய்யும்படி நேரிட்டது. ஆதலால் முன்னிருந்த வேலைக்காரனைத்தள்ளி
ஒரு சிறிய கட்டடத்திற்குக் குடிபோய், கடைக்கு சாமான் வாங்கப்போகி
றது, பாத்திரம் விளக்குகிறது, சமயல்பண்ணுகிறது, எல்லாம் அவளே செய்
யத்தொடங்கினள்.

அவளுடைய கணவனும் தனக்கு ஒழிந்த சமயங்களில் பிறர்களுக்கு
குமாஸ்தா வேலையோ அல்லது வரவுசெலவு கணக்கு எழுதுகிறதோ இவை
கள் செய்து சர்க்கார் சம்பளம் தவிர இவ்விதத்திலும் சம்பாதித்தான். இப்
படி இவர்கள் 10 வருஷகாலம் கஷ்டப்பட்டு கடன்களை வட்டியோடும் வட்டி
க்கு வட்டி யோடும் சேர்த்து அடைத்தார்கள். இதனல் சந்திரகாந்தி யென்ப
வள் அஸல் குடித்தனக் காரியாகக் காணப்பட்டாள். ஆனல் சில சமயங்களில்
அவள் கணவன் ஆபீஸுக்குப் போயிருக்கும்போது அவள் முன்னிருந்த
ஸ்திதியைப்பற்றி யோசிப்பாள். அக்கல்லட்டிகை காணமல் போகாதிருந்தால்
அவள் ஸ்திதி எப்படி யிருந்திருக்குமென்று யாருக்குத்தான் தெரியும். ஒரு
சிறிய செய்கையும் ஒருவனுடைய நடவடிக்கையை முழுமையும் மாற்றிவிடு
கிறது.

கொஞ்சகால மானபிறகு, ஒரு ஞாயிற்றுக்கிழமை அவள் வாரமுழுதும்
காரியம் செய்ததினல் உண்டான சிரமத்தை ஆற்றிக்கொள்ள ஓரிடத்தில் உலா
விக்கொண் டிருக்கும்போது ஜயத்தையும் அவளுடைய குழந்தையையும் சந்
தித்தாள். கல்லட்டிகையின் முழுவரலாற்றை சொல்லலாமென்று உத்தேசித்
தாள். பிறகு அவ்வரலாறு முழுமையும், தான் விலைகொடுத்து வாங்கினதை
யும்சொல்ல, ஜயம், "என்னுடையது 30 பவுன்தானே என்றுசொல்லி ஆச்
சரியப்பட்டு, தன் அருமையான தோழியை வீட்டுக்கு அழைத்துச்சென்று,

1400 பவுனுக்கு வாங்கின கல்லட்டிகையை சந்திரகாந்திக்கு இனாமாகக்
கொடுத்தாள். சந்திரகாந்தி முகமலர்ச்சியுடன் வீடு சென்று எல்லாவற்றையும்
தன் உயிருக்குயிரான கணவனிடத்தில் சொன்னாள். இருவரும் சந்தோஷப்
பட்டு கர்வங்கொள்ளாமல் செட்டாய் குடித்தனம் செய்து சுகமாக வாழ்ந்து
வந்தார்கள்.

என். எஸ். பி-ஏ.

# கமலா.

(காஷ்மீரம். அரண்மனையில் ஓர் அறையில் அரசன் தனது மந்திரியுடன்
பேசிக்கொண் டிருக்கிறார்.)

மந்திரி:—மகாராஜாவே, நமக்கு இதைத் தவிர வேறுவழியில்லை. நமது
விகடன் சொன்னதுபோல் தங்களது பிரஜைகள் தங்கள் உயிரைக் காப்பாற்
றிக்கொண்டு சௌக்யமாய் வாழவும் தங்களையே நம்பி யிருக்கிறார்கள்.

அரசன்:—எனது பிரியமுள்ள மகளை இப்பொழுது அவனுக்கு கலியா
ணம் செய்துவைத்தால் ஜனங்கள் அவனுக்குப் பயந்து இவ்விதம் நான் செய்த
தாக நினைப்பார்களே! நான் எவ்விதம் இதைச் செய்வேன்?

மந்திரி:—எதிரியின் சேனைகள் நமது தேசத்தைப் பாழாக்கி கொள்ளை
யடித்து வருகிறார்கள். தாங்கள் எவ்விதமாயாவது சமாதானம் செய்துகொள்
வதுதான் மேலானது. அவனுக்கு தங்களது அருமையான மகளை விவாகம்
செய்து வைப்பதால் உங்களுக்கும் அவனுக்கும் சிநேகமுண்டாய் பந்துத்வம்
ஏற்படும். விரோதமென்பதே இருவருக்குமிராது. க்ஷத்திரியர்களெல்லாம் இவ்
விதம்தான் செய்து வருகிறார்கள்.

(நாரதமகாரிஷி வருகிறார்: ராஜனும், மந்திரியும் ரிஷிக்கு நமஸ்காரம்
செய்து ஆஸன மளிக்கின்றார்கள்.)

அரசன்:—தங்களைக் கண்டவுடன் எனது மனதிலிருக்கும் திகிலெல்
லாம் சூரியனைக் கண்டபனிபோல் பறந்து போய்விட்டன. எனது அரண்
மனையும் பரிசுத்தமாயிற்று, தங்களுக்கு என்னால் செய்யக்கூடிய காரியம்
ஏதாவதிருந்தால் தயைபுரிந்து சொல்லும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ரிஷி:—நல்லது, ராஜனே, மூன்று காலங்களில் சம்பவிக்கும் விஷயங்
களை யறிந்துகொள்ள எனக்கு கடவுள் கிருபை யுண்டல்லவா? அவருடைய
கிருபையால் நீ தத்தளித்துக் கொண்டிருக்கும் விஷயத்தை யறிந்து, உனக்கு
உதவி புரியலா மென்று எண்ணி வந்திருக்கிறேன்.

அரசன்:—தங்களுக்கு இவ்வித உதவிக்காக அடியேன் என்ன செய்ய
முடியும்? இன்னது செய்கிற தென்றும் பேசுகிறதென்றும் என் மனதில்
தோற்றவில்லை.

நாரதர்:—அது இருக்கட்டும், அடே, நீவருத்தப்படும் விஷயமுழுவ
தும் எனக்குத் தெரியும். உனது குமாரத்தியை அருணேசனுக்கு விவாகம்
செய்து விடு. இதுதான் இராஜ தந்திரமுறைகளில் முக்கியமானது. மேலும்
நான் சொல்லப்போகும் விஷயத்தைக்கேட்டால் நீ அவனுடைய விரோதி
யென்பதை மறந்து விடுவாய். ஆகையால் நான் சொல்வதைக் கவனமாய்க்



னேன். வங்கதேசத்து அரசனுக்கும் உன் சகோதரிக்கும் விவாகம் நடந்து
இருவரும் இல்லறம் நடத்திவந்தார்கள். அவர்களுக்கு ஒரு புத்திரன் ஜனி
த்தான். இவனது ஐந்தாவது வயதில் இவன் தாய் (உன் தங்கை) இறந்து
விட்டாள். அவ்வங்கதேசத்து அரசன் வேறொரு இராஜகன்னிகையை மணம்
புரிந்துகொண்டான். அந்த இராஜபுத்திரி உன் தங்கையின் குழந்தையின்மேல்
பிரியம் வைக்காமல் வெறுத்து வந்தாள். இவ்விதம் சிறிது காலஞ்சென்றபின்
இவள் அப்பிள்ளையைக் காட்டில் மரங்களடர்ந்த இடத்தில் விட்டுவரும்
படி தனது வேலைக்காரர்களுக்கு உத்திரவு செய்தாள். அறிவில்லாத அவர்கள்
ராணிவார்த்தைக்குப் பதிலொன்றும் சொல்லாமல் இப்பிள்ளையைக் காட்டில்
தனிமையாக விட்டுவிட்டு வந்தார்கள். காட்டில் வேட்டையாடிக் கொண்
டிருக்கும் பொழுது ஒரு புலி "இவனைக்கொன்றது" என்று யாவருக்கும்
தெரிவித்துவிட்டாள் இந்த பாதகி. அரசன் அரண்மனைக்கு வந்தவுடன் இத்
துக்கசமாசாரத்தைக் கேட்டு தன் மனைவி வார்த்தையை நம்பி மிகவும் விசன
முற்று துக்கப்பட்டுக்கொண்டிருந்தான். இவள் செய்த பாபகிருத்தியத்திற்
காக இறந்துபோகாத குழந்தை இறந்துபோனதாகக் கேட்டு துக்கப்பட
லாயிற்று. நிற்க, நான் அகஸ்மாத்தாய் வனத்திற்கு சில ரிஷிஸ்ரேஷ்டர்களைக்
காணச் சென்றேன். மரங்களடர்ந்த காட்டில் ஒரு மரத்தின்கீழ் ஒரு கல்லின்
மேல் உட்கார்ந்திருந்த குழந்தையைக் கண்டு பரிதாபப்பட்டு இவனது விருத்
தாந்தங்களை ஞானதிருஷ்டியா லறிந்துகொண்டேன். இதற்குமுன் இவன்
ராஜசபையில் என்னை அடிக்கடி பார்த்திருந்தமையால் என்னைக் கண்டதும்
என்னைக் கட்டிக்கொண்டு விம்மி விம்மி அழுதான். குழந்தையைத் தேற்றி,
பஞ்சாப்தேசத்து அரசனிடத்திற்கு இவனை இட்டுக்கொண்டு போனேன்.
அவனுக்கு பிள்ளையுமில்லை, பெண்ணுமில்லை. ஆகையால் இக் குழந்தையை
சுவீகார புத்திரனாக வைத்துக்கொண்டு வளர்த்து வரும்படி சொன்னேன்.
அவனும் அவன் மனைவியும் முகமலர்ச்சியுடன் என் வார்த்தையைத் தட்டா
மல் செய்துவந்தார்கள். சிறிதுகாலம் சென்றபின் பஞ்சாப்தேசத்து அர
சனும் அவன் மனைவியும் காலகதியால் இறந்துவிட்டார்கள். இந்த சுவீகார
பிள்ளையினுடைய புத்தி சாதுர்யத்தையும், தைரியத்தையும் ஜனங்கள் கண்டு
இவனை தங்கள் அரசகுமாரனென்றே சொல்லிவந்தார்கள். இவனும் பஞ்சாபு
க்கு அப்பொழுது அரசனாய்விட்டான். இவ்வரசகுமாரனாகிய அருணேசன்
உனது சகோதரியின் புத்திரன்.

அரசன்:—ஓ கடவுளே! இவனுக்கு தீர்க்காயுளை அளியும். தெய்வகடா
க்ஷத்தால் எனது தங்கையின் புத்திரனைக் கண்டதே எனது பாக்கியம். நாரத
மகாரிஷியே இவ்விதம் தாங்கள் உதவிபுரிந்து சகலவிஷயங்களையும் எனக்குத்
தெரியப் படுத்தியதற்காக நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். தங்களுக்கு
கோடி நமஸ்காரம். உடனே என் மந்திரியை அனுப்பி அவன் என் மருமகன்
என்றும் அவனை நான்கண்டு ஆலிங்கனம் செய்துகொள்ள விரும்புகிறேனென்
றும் சொல்லி அவனை வரவழைக்கிறேன்.

நாரதர்:—நாளைய தினம்தான் இவன் இறந்துபோனதாக எண்ணி துக்
கம் கொண்டாடும் வருஷம் முடிவாகிறது. இவனது தகப்பனையும் உடனே
வரவழைக்கவேண்டும்.

அரசன், தங்கள் ஆக்ஞைப்படியே செய்கிறேன்.

அரசன்:—மந்திரி, உடனே வங்கதேசத்து அரசனுக்கு இச்சமாசாரங்களை விரிவாக எழுதி ஒரு கடிதம் தூதனுடன் அனுப்பி அவரை இங்கு விவாகத்திற்கு வரும்படி வரவழையும். நீங்கள் அருணேச னிடத்திற்கு நேரிற்சென்று அவனை இங்கு இட்டுக்கொண்டு வாருங்கள்.

மந்திரி:—மகாராஜா, அவ்விதமே செய்கிறேன்.

நாரதர்:—உங்களை யெல்லாம் பார்க்க நாளையதினம் வருகிறேன், (எல்லாரும் போகிறார்கள்.

இடம் (தனேந்திரனுடைய அரண்மனை) அரசன் வங்கதேசத்து அரசனாகிய ப்ரபாகரனுடன் பேசுகிறான்).

ப்ரபாகரன்:—எனது பிரியமுள்ள மைத்துனரே, எனது மனைவி சொல்லைக்கேட்டு நம்பி இதுவரையிலும் துக்கப்பட்டுக் கொண்டிருந்தேன். இந்த நல்ல சமாச்சாரம் எங்களுக் கெட்டியதும் அவள் உடனே நஞ்சுண்டு மரணமடைந்தாள். இதோ நாரத மகாமுனிவர் வருகின்றார்.

இரு அரசரும் நின்றுகொண்டு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, வரவேண்டுமென்று சொல்லி அவருக்கு ஆஸன மளித்தார்கள்.

ப்ரபாகரன்:—தபஸ்ரேஷ்டரே! தாங்கள் எங்கள்மேல் கிருபைகூர்ந்து இவ்வளவு நன்மை செய்ததற்காக உங்களுக்கு அநேக நமஸ்காரம் செய்கின்றோம். இனிமேலும் தங்களது பூர்ண ஆசீர்வாதம் எங்களுக்குவேண்டும். அந்தக் குழந்தையைத் தாங்களே இங்கிருந்து ஆசீர்வதித்து விவாகம் செய்துவைக்கும்படி மிகவும் தங்களை வேண்டுகிறோம்.

நாரதர்:—சரி, அவ்விதமே செய்கிறேன், அரசகுமாரனைக் கண்டீர்களா?

தனேந்திரன்:—இன்னும் பார்க்கவில்லை. இப்பொழுது அவன்வரவை எதிர் பார்க்கின்றோம். இதோ குதிரைகளின் காலடி சப்தமும், சங்கத்தொனியும் கேட்கின்றதே. அவன் வருகிறான்போல் தோன்றுகின்றது.

இவர்கள் இவ்விதம் பேசி முடித்தார்களோ இல்லையோ அருணேசன் தனேந்திரனுடைய மந்திரியுடன் உள்ளேவந்தான்.

அருணேசன் நாரதமகா முனிவருக்கு நமஸ்காரம் செய்தவுடன் ப்ரபாகரன் தன் புத்திரனை முகமலர்ச்சியுடன் ஆலிங்கனம் செய்துகொண்டு பின்வருமாறு சொன்னான்:—"ஆ! ஆ!! நான் உன்னைக் கண்டுதான் ஆநந்தங் கொள்ளுகிறேனே அல்லது சித்த ப்ரமையோ? உன்னை தாலாட்டி வளர்த்திவந்த உன் தாய் உருவத்தையே நீ அடைந்திருக்கிறாய், உன் தாய் என்முன் நிற்பதுபோல் தோன்றுகிறதே! அதுவும் ப்ரமைதான். ஐயோ! பாபியாகிய உன் மாற்றாந்தாய் என்றால் என்தேகம் கூச்சமடைகிறதே! தன் புருஷனுக்கு விசுவாசமற்றவளாய் நடந்தாளே! தன் புருஷன் விசனப்படுவரே என்பதைச் சிறிதும் நினையாமல் இப்படி என்னைத் துக்கிக்கும்படியும், உன்னையும் அலையவிட்டாளே! அவளைப்பற்றி நினைப்பது பாபமே ஒழிய வேறன்று. அவள் துற்செய்கையைப் பற்றி ஜனங்கள் தூற்றுவார்கள். அவளுக்கு நற்பெயர் எவ்விதம் கிடைக்கும்? அவள் செய்த பெரும் குற்றத்திற்கு அவள் தண்டனையடைந்தாள். அப்பா! என் அருமைக் குழந்தையே! இப்பொழுதுதான் எனக்கு சுவர்க்கம் கிடைத்ததுபோல் என் மனது குளிர்ந்திருக்கிறது. நான் சந்துஷ்டி அடைந்தேன்!

(தனேந்திரனும் தன் மருமகனை கட்டி தழுவிக்கொண்டான்.)

தனேந்திரன்:—எனது குழந்தாய்! இதுவரையிலும் நாம் விரோதமாயிருந்ததைப் பற்றி மறந்துவிடுவோம், நீயோ எனது சகோதரியின் அருமைக்குழந்தை. எனது மருமகன். இது எனக்கு முன்னமேயே தெரிந்திருந்தால் நாம் எவ்வளவோ சந்துஷ்டியா யிருந்திருப்போமே. இது தெய்வச்செயலே யொழிய வேறன்று. இனி நீ எனது குமாரத்தியை மணம்புரிந்து சுகமாக வாழ்ந்து வரவேண்டியதே எனது ஆசீர்வாதமும் கோரிக்கையுமேயாம்.



ப்ரபாகரன்:—நான் நமது குழந்தை **கமலாவைப் பார்க்க விரும்புகிறேன்.**

தனேந்திரன்:—யார் அங்கே!

வேலைக்காரன்:—மகாராஜ்! ஆஜர்.

தனேந்திரன்:—நமது குழந்தை **கமலாவை** இங்கு அழைத்துவா.

வேலைக்காரன்:—சித்தம், அப்படியே செய்கிறேன். (உடனே அந்தப்புரம்சென்று கமலாவை அழைத்துக்கொண்டு வருகிறான்.) கமலா தனது சகிகளுடன் உள்ளே வந்து தலைகுனிந்து நின்றாள். (அருணேசன் விடைபெற்று சென்றான்.)

தனேந்திரன்:—பிரியமுள்ள கமலா, நாரதமகாமுனிவருக்கு நமஸ்காரம்செய்.

நாரதர்:—குழந்தாய், நீ சுகமாய் அருணேசனுடன் இல்லறவாழ்வை நடத்திக்கொண்டு வாழக்கடவாய். நீ தீர்க்காயுசுடன் சுமங்கிலியா யிருப்பாய்.

தனேந்திரன்:—மந்திரி, அருணேசன் களைப்புற்றிருக்கிறான். அவனுக்கு வேண்டியதைச் செய்யுங்கள். (மந்திரி வேலைக்காரனுடன் சென்று அருணேசனுக்கு ஆகாரம் வரவழைத்து புசிக்கும்படி சொல்லுகிறார்.)

அருணேசன் புசித்தபின் சிறிது நேரம் மந்திரியுடன் பேசிவிட்டு மந்திரியை அனுப்பிவிட்டான்.

நாரதர்:—என்வேலை முடிந்தது, நித்திய கர்மங்களைச் செய்யப்போகின்றேன். (இரு அரசரும் சிறிதுதூரம் வழிசென்று நாரதரிஷியை அனுப்பிவிட்டு திரும்பிவந்தார்கள்.)

பத்மா:—அன்புள்ள கமலா, அன்றையதினம் உத்யானவனத்தில் அந்தப் படத்தைவைத்து எவ்விதம் அலங்காரம் செய்திருந்தேனே அவ்விதமே படத்தை சுவற்றில் மாட்டிவைத்து அலங்கரித் திருக்கிறேன்.

இந்துமுகி:—பத்மா, நீ சொன்னதெல்லாம் நிறைவேறிற்றே.

பத்மா:—பிரியமுள்ள இந்துமுகி, நல்ல சமாச்சாரத்தைக் கேட்டு கமலா ஆநந்த சாகரத்தில் மூழ்கி யிருக்கிறாள். அவள் பேசாமல் தலை குனிந்தபடி வெட்கத்துட னிருக்கிறாள். ஒருவேளை ஒருமணி நேரம் தனிமையாக இருக்க விரும்புகிறாள்போல் தோன்றுகிறது. அவள் இஷ்டப்படி யிருக்கட்டும். நாம் போய்வருவோம்.

கமலா:—பத்மா, அப்படி யொன்றுமில்லை, நாழிகை ஆய்விட்டது. நானும் உங்களுடன் வருகிறேன். (எல்லாரும் அந்தப்புரம் போகிறார்கள்.)

மறுநாள் அருணேசனுக்கும் கமலாவுக்கும், த்ரிவிக்ரமனுக்கும் இந்து
முகிக்கும் விமரிசையாக கலியாணம் நடந்தது. நாரதரிஷி முதலிய பெரியோ
ரும் எல்லா தேசத்து மன்னர்களும் வந்திருந்து தம்பதிகளை ஆசீர்வதித்தார்
கள். அருணேசன் பஞ்சாப், காஷ்மீர், பெங்கால் என்ற மூன்று தேசங்களுக்
கும் அரசனானான். கமலாவுடன் சுகமாக வாழ்ந்து வந்தான். பத்மாவதிக்கும்
த்ரிவிக்ரமனுடைய சகோதரனுக்கும் விவாகம் நடந்தது. இவன் அருணேச
னுடைய சேனைக்குத்தலைவன். (முற்றிற்று)

☞ தாதா.

# ப்ரத்யும்னன் ஜநநம்.

[நமது சித்திரப்படமுள்ள கதை. பாகவதம் - தஸமஸ்கந்தம் ]

மன்மதன் முன் சிவனால் தகிக்கப்பட்டு இறந்தான். பின்பு ஸ்ரீகிருஷ்ண பகவானுக்கும், ஸ்ரீருக்மணிதேவிக்கும் குமாரனாக ஜனித்தான். அப்பொழுது இக்குழந்தை வெகு அழகாகவும், பலமுள்ளதாகவு மிருந்தது. இக் குழந் தைக்கு ப்ரத்யும்னன் எனப் பெயரிட்டு நாளொருமேனியும், பொழுதொரு வண்ணமாக பெற்றோர்கள் சகல வைபவத்துடன் வளர்த்து வந்தார்கள். இச் சமயத்தில் சம்பராசுரன் என்கிற ராக்ஷதனிருந்தான். இவன் கெட்டவன், கடவுள் பக்தி யில்லாதவன். ஜனங்களைத் தொந்திரவு செய்துவந்தான். இப் ப்ரத்யும்னன் மிக்க பலமுள்ளவனென்பதை இத்துஷ்டன் அறிந்து இவன் தனக்கு விரோதியா யிருப்பான் என்று பயந்தான். ஒருவேளை தன்னை எதிர்த் துக் கொன்றாலும் கொன்றுவிடுவான் என்கிற திகிலையு மடைந்தான். இதற் காக எவரும் தன் யோசனையை யறியாமல் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய அரண்மனைக்கு மாறு வேஷத்துடன் சென்று குழந்தை ப்ரத்யும்னனைத் திரு டிக்கொண்டுவந்து சமுத்ரத்தில் போட்டுவிட்டான். நமது சித்திரப்படத்தில் குழந்தை ப்ரத்யும்னன் சமுத்திரத்தில் விழுந்திருப்பதைப் பாருங்கள்.

சம்பராசுரன் இப்படி செய்தபின் இனி நமது உயிருக்கு யாதொரு பய மில்லை என எண்ணிக்கொண்டு தனது இருப்பிடத்திற்குச் சென்றுவிட்டான். குழந்தையைப் பறி கொடுத்த ஸ்ரீ கிருஷ்ணனும் ருக்மணியும் விசனமுற் றிருந்தார்கள்.

இக் குழந்தையை சமுத்ரத்திலுள்ள ஒரு மீன் விழுங்கிற்று. ஒரு செம் படவன் அச்சமயத்தில் தன் வலை மிக்க பளுவாயிருப்பதைக் கண்டு வெளியிற் கொண்டுவந்தான். அதில் ஒரு பெரிய மீன் அகப்பட்டுக் கொண்டிருந்தது. இப்பெரிய மீனை சம்பராசுரனுக்கு இனாமாகக் கொடுத்தால் நம்மீது மிகுந்த சந்தோஷப்பட்டு நல்ல வெகுமதி கொடுப்பானென்று யோசித்து அவனிருப் பிடத்திற்கு இதை எடுத்துச் சென்றான். சம்பராசுரன் இம்மீன் அழகாயும் பெரியதாயு மிருப்பதைக் கண்டு மிகுந்த ஆநந்தங்கொண்டான். செம்பட வனுக்குத் தகுந்த வெகுமதி கொடுத்து அனுப்பிவிட்டு, தனது பாகசாலைத் தலைவனைக் கூப்பிட்டு "இந்த மீன் வெகு அழகாக யிருக்கிறது". இதை இன்று துண்டம் செய்து பக்குவமாக சமையல்செய் என்று சொன்னான். அவனும் அவ்விதமே செய்கிறேன் என்று உத்திரவுபெற்று இதை எடுத்துக்கொண்டு பாகசாலைக்குச் சென்றான்.

சம்பராசுரனுக்கு எதிரில் பெரிய மீனை செம்படவன் வைத்துக் காண்பிக் கின்ற படத்தைப் பாருங்கள்.

---

☞ அடுத்தமாஸ பத்திரிகையில் மாயாவதி ஆச்சரியங் கொள்ளுதல், ப்ரத் யுமனனை மாயாவதி மணம் புரிந்து கொள்ளும்படி கேட்பது என்கிற அழகிய இரண்டு சித்திரப்படங்கள் வெளிவரும்.

பத்திராதிபர்.

௨௬௮a



**Pradyumna thrown into the Sea.**



बालप्रद्युम्न.

The 'Lakshmi Art,' Bombay.

Fisherman's present.



मत्स्यभेट.

…kshmi Art;'—Bombay.



# சந்திரவதனன்.

ஓர் நாவல் தொடர்ச்சி.

இல்லை விழித்திருக்கிறேன் என்றேன். அத்தான் பயப்படாதீர்என்று முன்னிலும் மெதுவாய்ப்பேசி என்னை வேறொன்றும் கேளாதீர் நீரிவ்வீட்டை விட்டுபோக வேண்டும். நீர் ஓடிப்போகவேண்டும்; அத்தான், பறந்து ஓடினாலன்றி தப்பமுடியாதென்றாள். பலவித எண்ணங்களும் பயமும் என்னை மூடியது. நான் ஓடிப்போக வேண்டுமா? நான் எங்கே போவேன்? என்றேன். ஐயோ? அத்தான் உமது மனோ தயிரத்தைக் குறைக்காதீர்; நீர், எங்கேனும் ஓடிப்போகவேண்டும் தேவநகருக்கு தொலைதூரத்தில் போவது நல்லது. எவ்வளவு தூரத்தில் போகிறீரோ அவ்வளவும் நன்மை. உமது வழிச் சிலவிற்குப் பணம் வைத்திருக்கிறேன்:—எனது வஸ்திரங்களை உன் தந்தை:—அது எனக்குத் தெரியும். நானதை எடுக்க முயலுவது என்னுயிர் இழக்கவேண்டிய காரியம். இதை தரித்துக்கொள்ளும் நான் வெளியில் பார்த்துக்கொண் டிருக்கிறேனென்றாள். அவ்வாடை சுந்திரத்தினதாயிருந்தது. நான் தரித்துக்கொள்ள ஐந்து நிமிஷங்கள் சென்றன. என் கைப்பிடித்து மெதுவா யழைத்துப்போனாள். வழியிலிருந்த சூதன் படுக்கையறையையும் வெகு சாக்கிரதையாய்த் தாண்டினோம், தெருக்கதவும் கவலையோடு நிதானமாய்த் திறந்தாள், தெருவில் வந்தோம்.

அத்தான் இனி பயமில்லை நீர் நெடுந்தூரம் செல்ல உமது வழிச்சிலவிற்கு பணம் இதோயிருக்கிறது. (வாங்கிக்கொண்டேன்) அத்தான் எனது தந்தையே உமது உயிரை வாங்கத் தயாரா யிருக்கிறார் என்று சொல்லவேண்டி யிருக்கிறது என்று வீதி வெளிச்சத்தில் தெரிந்த அவளழகிய முகத்துடன் என்மேற் சாய்ந்தாள். அவளை என் மார்போடணைத்து மிருதுவாகிய அவளழகிய கன்னங்களில் முத்தமிட்டு என் கண்ணே, சுந்தரமே, நான் உன்னைமாத்திரம் அபாயத்தில் விட்டு எப்படிச் செல்வேன் என்றழுதேன். அவள் என் கண்ணீரைத்துடைத்து, அத்தான், நீர் எனக்காகவருந்தாதீர். உம்மை நினைப்பதுபோல் என்னுயிரைவாங்க அவர் நினையார்:—நான் இந் நிலைமையில் உன்னைவிட்டுப் பிரியேன் என்றேன். அத்தான், உம்மை நமஸ்கரித்து கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன். நீர் காலதாமசம் செய்வதெல்லாம் உயிர்காப்பதென்பதை மறந்து பேசுகிறீர். நீர் கொண்டிருக்கும் அன்பின் பெருக்கால் பேசுகிறீர், விவேகத்தோடு உபயோகிக்கும் அன்பே நிலைநிற்கும். விவேகத்தைக் குறைத்து உபயோகிக்கும் அன்பு வேரற்ற மரமாகும்.

உங்கள் மீது கொண்ட அன்பல்லவா? என் துணிவைக் கையாளுவது; முன்போல் என் தந்தை விழித்து ஓட்டுக்கேட்டால் என்னவாகும்? என் நன்மைக்காக நீங்கள் ஓடிப் போகவேண்டும்:

என் நாயகமே, கண்ணே, உன்னைத் திரும்ப எப்போது காண்பேன்? அத்தான்,
குரும்பன் என் தந்தையுடன் பேசிக்கொண்டிருந்தான். இருவரும் உம் உயிரை ஒழிக்
கப் பேசினார்கள். சாக்கிரதை நமதன்பிற்குக் கடவுள் சாட்சிய மாகிறார். நாமிருவரும்
அவசியம் காணலாம் என்று என்னாலிங் கணத்திலிருந்து விடுபட நினைத்தவளை மறபடி
முத்தமிட்டுக் கொண்டேன். அவளும் அதனை யேற்றவளாய் என்னைத் தழுவினாள்.
இருவரும் பிரியா விடைபெற்று நகர்ந்தோம். என்னை ஓடிப்போகும்படி சைகை காட்டி
தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டுபோய் கதவை மெதுவாய் சாற்றிக்கொண்
டாள். அவள் மறைந்ததும் பெண்ணுடை தரித்திருக்கும் வெட்கமும் சூதனைப்பற்றிய
பயமும் என் மேலாடியது.

அர்த்தராத்திரியில் வெகு வேகமாய் நடந்தேன். இரவில் என்னைப் பார்ப்போர் ஓர் இளம்பருவப் பெண்ணென்றே எண்ணுவர். சுகுணதுரை. மாளிகையில் குரும்பன்

பற்சடித்துப்போன நினைப்பு வந்தது. அவனென்னைக் கொல்ல வல்லவன் என்றே எண்
ணினேன். சூதன் உண்மையில் என் மாமனாயிருந்தால் என்னுயிரை விரும்புவானேன்?
இத்தோற்றங்களால்ஓடினேன். (இதனை வாசிக்கும் சோதரிகளே, நானிடம்விட்டு இடம்
போதலும் ஆங்காங்கு நேரும் ஆபத்துக்களால் பயந்து ஓடுவதும் உங்கள் மனதிற்கு
வெறுப்பைத் தரலாம். பலர் கருத்தும் பலர் நடையும் பலர் மோசமும் பலர் விசுவாச
மும் என் கதையில் அரியக் கிடப்பதால் உலகானுபவத்தைக் கொண்டிருக்கும் என்
சரிதம் முற்றும் கவனித்து படிக்க வேண்டுகிறேன். அது கரும்பை நுனியிலிருந்து
அருந்தியதாய் கடைசியிற் தோன்றும்) சடுதியிற் ஓர் கூலி வண்டியேறி சுகுணமாளிகை
செல்ல எண்ணினேன். ஆனால் அது தேவ நகர்க்கு சமீபத்துள்ளது. அங்கும் இப்
போது எஜமானாயிருக்கும் உல்லாசசுந்திரர் என்னை காப்பாற்றுவார் என்கிற நம்பிக்
கையுமில்லை. ஓடுவது நலமென்றே ஓடினேன். ஆங்காங்கு ஸ்திரீகளும் புருஷர்களும்
உலாவிக்கொண்டும் நடந்துகொண்டுமிருந்தார்கள். வண்டிகளும் ஓடிக்கொண்டிருந்தன.
தேவநகர் சரியாய் நித்திரை செய்யவில்லை. ஓட்டமத்தியில் ஓர்வித புருடன் என் கை
யைப் பிடித்து ஏதோ சொல்லினன். நான் கையைத் திமிறிக்கொண்டோடினேன். பல
தெருக்கள் கடந்தேன். ஓர் தெருவில் பலபால்யர்கள் கூடியிருந்த கூட்டத்தில் எதிர்ப்
பட்டேன். ஒருவன் கையைப்பிடித்தான். அவனை தப்பியோடினேன். அவர்கள் கைக்
கொட்டி கெக்கலிக்கும் ஆரவாரம் கேட்டது. அவர்கள் பின்பற்றி துரத்துவதாய் காதில்
விழுந்தது. பயத்துடன் வெகுவேகமாய் ஓடினேன். நாலுகுதிரைகள் பூட்டிய வண்டி
யொன்று எதிரில் நின்றது. அச்சாரதி என்னை வண்டியில் யேறிக்கொள்ளச் சொன்
னான். நான் ஏறியவுடன் வண்டியின் கதவைச் சாத்திக் கொண்டு தான் வண்டியில் உட்
கார்ந்து வேகமாய் ஓட்டினான்.

சற்றுநேரம் சென்றதும் வண்டி ஏதென்றும் சுந்திரம் எனக்காக திட்டம் செய்
திருக்கமுடியாதென்றும் எண்ணி வண்டியின் சாளரவழியாய் சாரதியை அழைத்தேன்.
வெகு வேகமாய் வண்டி யோடியது. சாரதி நான் கூப்பிடக் கூப்பிட கையை அமர்த்தி
ஓட்டினதன்றி வண்டியை நிறுத்தவில்லை. பலதடவை அவனைக் கூப்பிட்டலுத்தேன்.
இரண்டுமணி ஓடியது. பட்டணத்தைக் கடந்து வெகுதூரம் வந்ததெனக் கண்டேன்.
ஒரு சந்தின்வழி ஓடி ஒரு பெரிய ரஸ்தாவில் திரும்பியது. இருபுரமும் மதில்கள் சூழ்ந்
திருந்தன. மத்தியில் வண்டி நின்றது. எதிரில் பெரிய வாயிற்படியிருந்தது. அங்கிருந்த
இருவர் என்னை இறங்கும்படிச் சொன்னார்கள். அவர் கருதிய பெண் நானல்லவென்
பது அப்போது எனக்குப்பட்டது. இருந்தாலும் அவர்களுடன் நான்பேச முடியவில்லை.
அவர்களில் ஒருவர் என் கையைப்பிடித் தழைத்துப்போக, ஓர் தோட்டத்தைக் கடந்து
உள்ளிருந்த ஒரு மாளிகை வாயிற்படிக்குப் போனோம். அங்கிருந்து ஓர் மாது உள்ளே
என்னை அழைத்துச் சென்றாள். புருடர்களிருவரும் என் பின்னே வந்தார்கள். ஓர்
அறைக் கதவு திறந்ததும் என்னையும் அழைத்து எல்லோரும் உட்சென்றார்கள்.

அவ்வறை மிக்க அலங்கரிக்கப்பட்டிருந்தது. மத்தியில் ஓர் தீபம் தொங்கவிட்டப்பட்
டிருந்தது. சுற்றிலும் பலவித ஆசனங்களும் மேஜைகளும்போடப்பட்டிருந்தன. என்னை
அழைத்துப்போன அம்மாது தீபவெளிச்சத்தில் என் முகத்தை நோக்கினாள். சடுதியில்
என் கையைவிட்டு சுசீலா மோசம் மோசமென்றாள். இருவரும் ஓடிவந்தார்கள். ஒரு
வர்க்கு வயது ஐம்பதிருக்கும். மற்றவர்க்கு வயது இருபத்தைந் திருக்கலாம். அம்மாதி
ற்கு வயது நாற்பதிருக்கலாம். விருத்தர் என் முகத்தைப் பார்த்து ஆம் மோசமென்றார்.
அப்பால்யர் சடுதியிற் கத்தி யெடுத்துவந்து உண்மையைச் சொல்லென்றார். ஐயா என்
பேரில் பிசகில்லை. வண்டிக்காரன் என்னை ஏறும்படிச் சொன்னான். நானபாயத்திலிருந்
தமையால் ஏறினேன். வண்டிக்காரனை பலதடவை நான் நிறுத்தச் சொல்லியும் நிறுத்த
வில்லை என்றேன். நீ யார்? என்றார். நான் சுகுணதுரை மாளிகையில் வேலைக்காரனா
யிருந்தேன். அதற்குமேல் என் விருத்தாந்தம் என் ரகசியம் முதலியவைகளைச் சொல்ல
முடியாது என்றேன். அவர் தன் மூக்கில் விரல் வைத்து நீ ஆண்மகனாயிருந்தால் இப்
பெண்ணுடை என் வந்ததென்றார். அது என் இரகசியம் என்றேன். அவர் கடுங்கோப
முடையவராய் உன்னைக் குத்துவேனென்றார்.

விருத்தரும் அம்மாதும் அவர் கையைப் பிடித்து, மகனே, அநாவசியமாய் ஓர்
உயிரை வதைப்பதில் பாபம். ஆயினும் வண்டிக்காரனிடம் வாக்குமூலம் வாங்கு என்றார்.



வண்டிக்காரன் உள்ளே அழைக்கப்பட்டான். சுசீலராகிய அப்பால்யர் அவனை நோக்கி
உன்னை வண்டியை நிறுத்தும்படி நீ ஏற்றிவந்த இச்சிறுவன் உன்னைக் கூவினதுண்டா
என்றார். அவன் பாக்க விழித்து அடிக்கடிக் கூப்பிட்ட சத்தம் கேட்டது. நான் வண்டி
யை நிறுத்தப் பயந்தேன் என்றான். நாம் உத்தேசித்தபடி நடந்ததில்லை. நீ ஓர் சிறுவனை
ஏற்றிவந்திருக்கிறாய். நடந்த காரியமென்ன சொல் என்றார்.

அவன் தான் கொண்டுபோன கடிதத்தைக் கொடுத்தனுப்பியதாயும் கால் மயிலுக்
கப்பால் குறிப்பிட்ட இடத்தில் வண்டியை நிறுத்தியிருந்ததாயும் பின் அரைமணிநேரத்
தில் நான் அங்கு ஓடிவந்ததாயும் என்னை யாரோ பின்பற்றித் துரத்தியதாயும் தான்
வண்டியில் ஏறும்படி சொல்லி அழைத்துவந்ததாயும் சொன்னான். அவனைப் போகும்
படி தாக்கீது தந்து உன் பெயரென்ன? என்றார்கள். "சந்திரவதனன்" என்றேன். நீ
வேலைக்காரனாய் இருந்ததாய்ச் சொன்னையே, நீ நம்மிடத்திலேயே அப்படி யிருக்கச்
சம்மதமா? எச்செலவும் போக மாதம் ரூபாய் பதினைந்து தரப்படும் என்றார்கள். நான்
ஒப்புக்கொண்டேன். உன் இரகசியத்தை நாங்கள் விசாரிப்பதுமில்லை. வெளியிடுவது
மில்லை. எங்கள் இரகசியத்தையும் நீ வெளியிடுதல் கூடாதென்றார்கள். ஐயா! நான் அவ்
விதம் கேவல வேலை செய்யேன். மரியாதையோடு என் ஜீவனத்திற்கு எந்த வேலையும்
செய்வேன். மரியாதைக் குறைவானதைச் செய்யமாட்டேன் என்றேன். நாங்கள் உன்
வார்த்தையை நம்புகிறோம். என் பின்னே வாவென்று ஒரு தீபத்தைக் கையில் எடுத்
துக்கொண்டு ஓர் அறையில் அழைத்துப்போய் உடுக்க வேறு வஸ்திரங்கள் கொடுத்து
என்னை அங்கிருந்த ஓர் சயனத்தில் படுத்துக்கொள்ளும்படிச் செய்து விளக்கை வைத்து
விட்டுப் போயினர். நான் கதவைத் தாளிட்டுக்கொண்டு சுந்திரவதனி தந்த பணப்பையில்
ஏதேனும் கடிதம் இருக்குமா என்று திறந்து பார்த்தேன். அதில் பத்து பவுனும் ஒரு
கடிதமு மிருந்தது. மிக்க ஆவலோடு அக் கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தேன். கடிதம்
பின் வருமாறு:—

"என தன்பிற்குரிய அத்தான்,

வெளியே செல்வதால் உங்கட்கு தவியாய் அநேகம் நேசர்கள் சேர்வார்கள். அவர்
களுடன் சம்பாஷிக்க நேரும்போது என்னைநினைத்து எனக்காக என் தந்தையின் பெய
ரை வெளியிடாதிருக்க வேண்டுகிறேன். என்மீது காட்டியபட்சத்திற்கு என்தாய் நன்றி
பாராட்டக் கடமைப்பட்டவளாய் எழுதச்சொல்லுகிறாள். தங்க ளன்பிற்கு நானெப்
பொழுதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவளாகிறேன். நான் எவ்வளவு அவாவை
அடக்கி இக்கடிதம் துரிதமாய் எழுதியிருப்பேனென்று யூகித்துக் கொள்வீர்கள்.

தங்களன்பிற்குரிய துர் அதிர்ட்டமுள்ள சுந்தரவதனி."

கடிதத்தை திரும்பத்திரும்ப பலதடவைப் படித்தேன். என் கண்களில் சலம் பிர
வாகமாய் ஓடியது. ஒருவாறு சமாதானம் செய்துகொண்டு காகிதத்தைப் பதனப்படுத்
திக்கொண்டேன். நான் உடை மாற்றிக்கொண் டிருந்தபொழுதும் ஓர் வேலைக்காரன்
ஆகாரம் கொண்டுவந்து தந்தான். அதை உண்டு அங்கேயே உறங்கினேன். சூரிய
உதயமாயிற்று. நன்றாய் நித்திரை செய்தெழுந்தேன். சுசீலரும் கதவைத் திறந்து சந்
திரவதனா என் பின்னே வாவென்றார். அவர் பின்னே சென்றேன். விசாலமான மாளி
கையாயிருந்தது. ஏராளமான வேலைக்காரர்களிருந்தார்கள். சுசீலர் ஓர் வேலைக்காரனை
சம்புநாதா வென்றழைத்து உனக் குதவியாய் இவன் அமர்த்தப்பட்டிருக்கிறான். என்
றென்னை யவனிடம் ஒப்புவித்துச் சென்றார். நாங்களிருவரும் அதுமுதல் நெருங்கிய
நேயரானோம். அவனுக்கு வயதிருபதிருக்கலாம். மிக்க குணவான், அவனும் நானும்
அடிக்கடி வெளியே செல்வோம், வேலையதிக மில்லாமையால் எங்கட்குச் சாவகாசம்
யெத்தவுண்டு. பொதுவாய் எல்லா வேலைக்காரர்களும் சுகவாசியென்றே சொல்லும்படி
யிருந்தார்கள்.

கொல்லைத்தோட்டத்தில் ஒருநாள் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். அவன்
சந்திர காந்தா இந்த ஜமீன்தார் வாகுண பிறபுவிற்கும் மாது பெரியநாயகியம்மணி
யார்க்கும் சுசீலர் ஒரு குமாரன்தான். இவர் முன்னோர்கள் காலம் முதல் பெருஞ் சில
வாளிகள். நீண்ட நாள்களாய் ஏற்பட்டு வந்த கடனும் வழக்கத்தை ஒட்டிச் செலவுசெய்து
வந்த இவரும் கடனாளியானதன்றி சுசீலரையும் தஸ்தாவேஜுகளில் கையெழுத்துப்

போடச்செய்து சொத்துக்களெல்லாம் கடனுக்குள்ளாக்கிக் கிடக்கிறது. வேலைக்காரர்
கட்கும் மூன்று மாதச்சம்பளம் பாக்கி. இக்கோழிபுரிகிராமம் அவர்களுடையது. தேவ
நகர் இருபது மையில் சமீபத்திலிருப்பதால் இதனை நாலுகோடி ரூபாய்க்கு விலைகூறி
னார்கள். மூன்று தினத்தில் இக்கிராமத்தை விட்டு இவர்கட்கு சுவதீனநாடாகிய சந்தன
நாட்டிற்குப் பயணம் போகவேண்டியது. இன்னும் ஆறு கோடி ரூபாய்கள் கடன்
பாக்கியுண்டு. என்னைப் பார்த்து நகைத்தான். நான் ஏன் நகைக்கிறாயென்றேன், அவர்
கட்கு பத்து கோடி ரூபாய் வருவதாயிருந்தது. அதனைக்கொண்டு கடன் தீர்த்து ஜமீனை
மீட்கலாமென்றிருந்தார்கள். அந்தப் பத்துகோடியும் உன்னுருவமாய் வந்து சேர்ந்த
தென்று நகைத்தேன் என்றான். நான் மறுபடியும் தெரியவில்லையே என்றேன். ஆம்,
அவர்கள் நினைப்பு இந்த ரகசியம் ஒருவர்க்கும் தெரியாதென்பது. உனக்கும் நன்றாய்த்
தெரியாது. மற்றெல்லோர்க்கும் நன்றாய்த் தெரியும் என்றான். இதற்குள் கூப்பிடுமணி
கேட்டது. நாங்கள் பிரிந்துபோனோம். மூன்று தினங்களில் மாளிகை சாமான்கள்
எடுக்கப்படவேண்டியிருந்ததால் நாங்கள் இருவரும் சாவகாசமாய் பேசமுடியவில்லை.
நாங்களிருவருள்பட சில வேலைக்காரர் வேலைக்காரிகள் மாத்திரமே எங்களுடன் எடுத்
துக்கொள்ளப்பட்டார்கள். மற்றவர்கள் அக்கிராம சாசனத்திற் கட்டுப்பட்டவர்களாயி
னார்கள். கோழிபுரி கிராமத்திற்கும் சந்தன நாட்டிற்கும் நாற்பது மயில். இரவில் பிர
யாணமாகி மறுநாட் காலைவந்து சேர்ந்தோம்.

## சந்தன நாடு.

நூறு ஏக்கர் சுற்றளவுள்ள தோட்டமத்தியில் முப்பது ஏக்கர் விஸ்தாரமுள்ள ஒரு
பெரிய அரண்மனை இருந்தது பழையகால கட்டிடம். இது இடிந்துபோன பாகங்க
ளெல்லாம் புதிதாய் பழுதுபார்க்கப்பட்டிருக்கின்றன என்பது நன்றாய் விளங்கியது.
அநேக வருடங்களுக்கு முன்னுண்டான பெரிய விருட்சங்கள் அக்கட்டிடத்தின் படி
யைக் காட்டியது. அநேக பழையகால படங்களும் சமீன்தார்களாய் இருந்தவர்கள் படங்
களும் தொங்கவிடப்பட்டிருந்தன. பழைய கட்டடமாயிருந்தாலும் பழமையை அனுசரி
த்து தற்கால நாகரீகப்படியும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அங்கு வாரத்திற்கு ஒருதடவை
யாவது விருந்து நடவாதிராது. சுற்றுக் கிராமங்களிலுள்ள அநேகப் பிரபுக்களும் வெளி
யூரிலிருந்து பல பிரபுக்களும் விருந்துண்ண வருவார்கள். இவர்களில் பலபழையப் பிர
புக்களைப்பற்றி நானுங்கட்குச் சொல்லவில்லை. நூதனப் பிரபுக்களாயுள்ள கோபால
கிருஷ்ணப் பிரபுவும், சப்பையன் என்ற பிரபுவுமே பின் கதையில் சில தூரம் வருபவர்
கள். கோபால கிருஷ்ணனுக்கு வயதிருபதிருக்காலம். சப்பையனுக்கு வயது நாற்ப
திருக்கலாம். முந்திபவன் அழகும், நாகரீக உடையும், டாம்பீகமு முள்ளவன். பிந்திய
வன் அவலட்சணமுள்ளவன். ஆபாச உடையன். அநாகரீகன். இதில் சப்பையன் வா
குணவாசருடன் விருந்துண்டு வெகுநேரம் பேசிவருவான்.

ஒருநாள் விருந்தில்லாத சாவகாச நாளில் நானும் சம்புநாதனும் கொல்லைப்புரம்
போய் உலாவி ஒருபெருவிருட்ச நிழலிலிருந்த சாய்வுப்பலகையிலுட்கார்ந்து கொண்டி
ருக்கும்போது சந்திரவதனா நாமிவ்வளவு சாவகாசமாய் பேசி ஒருமாதமாகிறது. கோழி
புரியில் நாம் பேசியபிறகு வேலைசாஸ்தியாய்ப் போயிற்று. இனி விருந்து நாட்கள்
தவிர மற்றநாள்களில் வேலையிராது என்றான். ஆம் அன்று நாம் பேசியது முடிவு
பெறவில்லை என்றேன். ஆமாம் அவர்கள் செய்வது பிறர்க்குத் தெரியாதென்பது அவர்
கள் கருத்து. சுசீலப் பிறவிற்கு தாய்மாமன் ஒருவர் உண்டு அவர் சக்கரவர்த்தி சேனை
களிலுயர்ந்த உத்தியோகத்திலிருந்தார். அவர் உத்தியோகத்தி லுபகாரச் சம்பளம்பெற்று
கல்யாணம் செய்துகொண்டார். அவர்க்கு ஓர் பெண்மகள் பிறந்தது. அவர் தேவநகரில்
வாசஞ்செய்தார். அப் பெண்ணிற்கு வயது பதினைந்தாகிறது. அவர் இறந்து மூன்று வரு
டங்களாயின. அக்காலத்தில் தேவநகர் திரவியசாலையில்தான் சேமித்துவைத்த பத்துக்
கோடி ரூபாயை தன் மகள்பேருக்கு உயில் எழுதிவைத்தார். ஜமீன்தார் ஜமீன்தாரணி
யார்க்கும் அப்பெண்ணைத் தன் மகன் சுசீலர்க்கு விவாகம் செய்ய நினைப்பு. இதைக் கரு
திக்கேட்டுவந்தார்கள். (இன்னும் வரும்.)

கமலத்தன்னை.



# டெல்லி நகரில் கொடிய அராஜகச்செயல்.

டெல்லி நகருக்குள் நமது வைஸிராயும், எச். இ. லேடி ஹார்டிஞ்சும்
தங்கள் பரிவாரங்களுடன் பிரவேசித்தபொழுது ஒருவீட்டின் கூரையிலிருந்து
ஒரு பாம்ப் (வெடிகுண்டு) எறியப்பட்ட சங்கதியைக்கேட்டு மிகவும் துக்கப்படு
கிறோம். இது ஒரு கிராதகன்செயல் எனப்படுகிறது. எச். இ. லேடி ஹார்டிஞ்சு
க்குத் தெய்வச்செயலாய் காயம்படவில்லை. ஆனால் நமது வைசிராய்க்கு காயம்
பட்டு ப்ரக்ஞையற்று போய்விட்டார். இப்பொழுது டாக்டர் சிகிச்சை
யால் சௌக்யமடைந்து வருவதைக் கேட்க மிகவும் சந்தோஷப்படுகிறோம்.
இவர் உயிர் தப்பியது தெய்வச்செயலே. அநேகம் வைஸிராய்களில் இவர் மிக
வும் சிறந்த குணமும், நம்மீது மிக்க அநுதாபமும், இராஜ்யத்தை ஆளுவதில்
மிக்க சாமர்த்தியமு முள்ளவர். நமது வைஸிராய் சீக்கிரம் பூர்ண சுகமடையு
மாறு கடவுளை ஸ்துதிசெய்கிறோம். கல்நெஞ்சுள்ள எந்த க்ராதகனோ இவ்
வித கொடிய அராஜகச்செயலை செய்துவிட்டான். அவனைப் பிடிக்க யாவரும்
முயன்று வருகிறார்கள். அவனுக்கு ரௌரவாதி நரகத்திலுண்டாகும் தண்
டனையைவிட கடுமையான தண்டனை விதிக்கவேண்டும். இவ்வித கஷ்டத்தில்
லேடி ஹார்டிஞ்ச் மனம் தளராது தமது கணவரைப் பார்த்துக்கொண்டும்,
சகல கடிதங்களுக்கும் பதில்எழுதிக்கொண்டும்வருகிறார்கள். இவர்களுக்கும்,
இவர்கள் குடும்பத்தாருக்கும் நமது அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

ராஜப்பிரதி நிதியின் மிகுதியும் கொண்டாடத்தக்க உறுதிமொழி:—
டிசம்பர்மீ 23உ திங்களன்று ராஜப்பிரதிநிதி தமக்குக் காயங்கள்பட்டு
வேதனையோடு படுத்திருக்கும்போதுகூட பின்வருமாறு சொன்னதாகத்
தெரிந்து சந்தோஷிக்கிறோம்:—"என் உயிரைவாங்கச் செய்யப்பட்ட முயற்சி
யால் எனக்கு இந்தியாவினிடத்தும் இந்தியர்களிடத்துமுள்ள நேசப்பான்மை
மாறிவிடாது. அது என்னுடைய ராஜீய முறைகளிலும் ஆட்சியின் பான்மை
யிலும் மாறுதலைச் செய்துவிடவும் மாட்டாது. இந்தியா முழுதும் திகிலும்
வெட்கமும் அடைந்து மனம் குன்றிப்போகுமே யென்று நான் அனுதாபப்
படுகிறேன்". இப்படிப்பட்ட உத்தமரை ராஜப் பிரதிநிதியாய்ப்பெற இந்தியா
பெரும்பாக்கியம் செய்திருக்க வேண்டுமன்றோ?

## யூனிவர்சிடி கான்வொகேஷன்.

யூனிவர்சிடி கான்வொகேஷன்:—வருஷாவருஷம் யூனிவர்சிடி சங்கத்தார்
காலேஜ்களில் படித்துத் தேறின சிறுவர்களுக்கு பி. ஏ., எம். ஏ. முதலான
பட்டங்கள் கொடுக்க வழக்கமாய்க் கூடுவதுபோல் சென்றமாதம் கூடினார்கள்.
இந்த யூனிவர்சிடி சங்கத்துக்குத் தலைவராய் சான்ஸெலர் என்ற உத்தியோ
கம் வகிக்கும் கவர்னர் அக்கிராசனம் வகித்தார். சுமார் ஆயிரம் சிறுவர்களுக்
கு மேல் பட்டம் பெற்றார்கள். இவர்களில் 788 பேர் பி. ஏ. க்களும், 169 பி.
எல், களும், 120 எல், டி., களும், 7 எம். பி. ஸி. எம். களும், 28 எல். எம்.
எஸ், களும் (வைத்தியப் பரீட்சைகள்) எஞ்ஜினீரிங் முதலான வேறு வித்தியா
பட்டங்கள் பெற்றவர்களும் இருந்தார்கள். இதில் 8 பெண்மணிகள் பட்டம்
பெற்றவர்கள். இத் தொகையில் 3 பெண்மணிகள் எல். டி யும், I. எம். பி. சி.
எம், I எல் எம். எஸ் 3. பி. ஏ க்ககளுமாம்.

மிஸ்டர் கார்டினர் பின் வருமாறு பேசினார்:—"தேசபாஷைகளைக் கற்றறி
யாதவர்களைப் படித்தவர்களோடு எவ்வளவுதூரம் சேர்க்கக்கூடுமென்பது சந்
தேகம். இந்திய வாழ்க்கையில் எது நல்லதோ எது அழகானதோ அவை
யெல்லாம் இந்தப் பாஷைகளடங்கிய நூல்களின் செல்வாக்குக்கு உரியன.
இந்த செல்வாக்கைக் குறையாமற்காத்து, அதை மேற்றிசைப் பயிற்சி மன
தை உயர்த்திக் கிளர்ச்சி செய்யும் சுபாவத்தோடு, கலக்கவேண்டும். அப்படி
ச் செய்யாவிட்டால் இந்தியாவின் கற்றறிந்த மக்கள் முன்னோது ஆர்ஜிதமாய்
ப்பெற்ற கல்விப்பொருளை இழந்து விடுவார்களென்ற பயமிருக்கின்றது. இது
வரையில் யூனிவர்சிடிப் படிப்பானது புத்தி, சமூக வாழ்க்கை, ஒழுக்கம்
இவைகளின் முற்போக்குக்குக் காரணமாகி, எந்த வழியிலும் நன்மைசெய்து
வந்திருக்கின்றது. ஆயினும், தற்காலம் யூனிவர்சிடிப் படிப்புப் பெற்றவர்கள்
தங்கள் அறிவையும் அனுபோகத்தையும் படிப்பில்லாத ஜனங்களின் தேவை
களுக்கு ஒத்தபடி உபயோகிக்கிற தில்லையென்று ஒப்புக்கொள்ள வேண்டும்.
ஆகையால், இந்த தேச பாஷைகளுக்குப் புதுச் சக்தியையும் புதுச் செல்வா
க்கையும் உண்டு பண்ணி, புனருத்தாரணம் செய்விக்க வேண்டும். இந்த மா
காணத்தில் எழுத வாசிக்கத் தெரிந்தவர்கள் 150 பேரில் ஒருவருக்குமேலி
ல்லை. இங்கிலீஷ் தெரிந்தவர் ஒருவரானால் தேசபாஷை தெரிந்தவர்கள் 11
பேர் இருக்கிறார்கள். இந்தியர் சம்சார வாழ்க்கையில் ஸ்திரீகளின் செல்வாக்
குக்கு அளவில்லை. அப்படியிருந்தும், கல்விகற்ற ஸ்திரீகள் 4000 பேர் ஹிந்து
மகம்மதியரும், 9000 பேர் கிறிஸ்தவர்களுமே தவிர அதிகமில்லை.

இவ்வருஷத்து கிராஜுவேட்டுகளே! (பட்டம் பெற்றவர்களே) இந்திய
யௌவனத்தின் புஷ்பம் உங்களில் மலர்ந்திருக்கிறது. உங்கள் தலைமுறையில்
இந்தியாவின் மகிமையின் பலன்களை ஈன்று, உங்கள் இயற்கையான கதியைப்
பூர்த்தி செய்யும்படி கவலை கொள்ளுங்கள்"

---

## ஆனரபில் மிஸ்டர் சிவஸ்வாமி அய்யர் பிரசங்கம்.

திருச்சி ஸெண்ட்ஜோஸப்ஸ் காலேஜ் மாணவர்களுக்குப் பரிசளிப்பு நட
ந்தபோது அக்ராசனம்வகித்த ஆனரபில் மிஸ்டா P. S. சிவஸ்வாமி அய்யர்
செய்த பிரசங்கத்தின்சில பாகங்கள் பின் வருமாறு:—

"இந்தஸெண்ட் ஜோஸப்ஸ் காலேஜை இதுவரையில் நான்பார்த்ததில்லை.
தகுந்த போதகர்களை உடையதாயும், புஸ்தகசாலை முதலிய தளவாடங்கள்
நிரம்ப பெற்றதாயு மிருக்கும் இந்தக் காலேஜின் மாணவர்களுக்குப் பரிசளிப்
பதில் அக்ராஸனம் வகிக்க நேர்ந்ததற்காக நான் மிகவும் சந்தோஷமடை
கிறேன். மாகாணத்தின் தேவைக்கு இப்பொழுதுள்ள சென்னை யூனிவர் ஸிடி
போதாமல், வடஜில்லாக்களுக்கும், மேற்குஜில்லாக்களுக்கும்தெற்குக்குமொவ்
வொரு தனி யூனிவர்ஸிடி ஏற்படக்கூடிய காலம் சமீபத்தில் நேரும். அப்படி
நேருங்காலத்தில் ரோமன் கத்தோலிகா காலேஜையும் ப்ரோடெஸ்டெண்ட்
காலேஜையும் சீக்கிரம் காலேஜாகக் கூடிய நாஷனல் ஹைஸ்கூலையும் உடைய
இந்தத் திருச்சினாப் பள்ளியே தென் யூனிவர்ஸிடிக்கு ஸ்தானமாகவும். அந்த
யூனிவர்ஸிடிக் காலேஜ்களில் இந்த ஸெண்ட் ஜோஸப்ஸ் காலேஜே பிரதான
காலே ஜாகவும் இருக்கும். இந்தக் காலேஜின் போதகர்களும் காலேஜை நடத்
துவோருமாகிய சேசு சபையாருக்கு வித்யா விஷயத்திலிருக்கும் உற்சாகம்
அளவிறந்ததாயுள்ளது.



### பள்ளிக்கூடச் சம்பளம்.

மாணவர்களின் பள்ளிக்கூடச் சம்பளத்தை உயர்த்திவிட்டால், தகுதி
யற்ற மாணவர்கள் உயர்தரப் பள்ளிக் கூடங்களில் கூடுவது தடுக்கப்படு
மென்று காரணஞ் சொல்லப்பட்டு சமீபத்தில் சம்பளங்கள் உயர்த்தப்பட்டன.
மற்றத் தேசங்களில் எப்படி இருந்தபோதிலும் செல்வவான்களுடைய பிள்ளை
கள் தான் புத்திக்கூர்மையுடையவர்களாகவும், ஏழைகளின் பிள்ளைகள் மந்தர்
களாகவும் நமது தென்னிந்தியாவில் இல்லை. மேற்கண்ட சம்பள உயர்வால்
உயர்தரக்கல்வி பெறக்கூடிய புத்திவலிமையுள்ள அநேக மாணவர்கள் தடைப்
பட்டுப் போவார்களென்றே என்னுடைய அபிப்பிராயம்.

### கீழ்த்திசைப் பாஷைகள்.

யூனிவர்ஸிடிப் படிப்பில் இப்பொழுது எற்பட்டுள்ள மாறுதல்படி கீழ்த்
திசைப் பாஷைகள் ஒருவாறு அலட்சியம் செய்யப்பட்டிருக்கின்றன. பாதர்
பெர்ட்ராம் பிரேரணை செய்ததுபோல் இண்டெர்மீடியட் பரீக்ஷைக்கும் பி. ஏ.
பரிட்சைக்கும் ஒரு கீழ்தேசப் பாஷையைக் கட்டாயப்படிப்பாய்ச் செய்ய
வேண்டியது அவசியம். அல்லாமலும் ஹைஸ்கூல் முடிவுப் படிப்புக்கும் அப்
படிச் செய்யவேண்டியதும் அவசியமென்று நான் நினைக்கிறேன்.

### சாஸ்திரக்கல்வி.

ஏதேனும் ஒரு சாஸ்திரத்தை விசேஷப் படிப்பாய் இந்திய மாணவர்
கள் பின்பற்றுகிறதில்லை யென்றும், ஆகையால் பௌதிக ரஸாயனத்துறை
களில் சுய ஆராய்ச்சி இந்தியாவில் செய்யப்படாமற் போகிறதென்றும் பெருங்
குறை கூறப்படுகிறது. என்னுடைய அபிப்பிராயம் அவ்வாறில்லை. சாஸ்திரக்
கல்விபெற்ற பி. ஏ. பட்டதாரிகளும் மற்ற பி. ஏ-க்களைப்போல் ஏதேனும் ஒரு
ஜீவன உபாயத்தைத் தேடவேண்டித்தான் இருக்கிறது. எந்தசாஸ்திர விஷய
மான கல்வி பெற்றார்களோ அவ்வழியிலேயே ஆயுள் முழுக்கச் செலவிட்டா
லொழிய, சுய ஆராய்ச்சி சாத்தியமில்லை. தாராளமான கல்விகற்றவர்களே
தேசத்துக்குத் தேவையாயிருக்கிறார்கள். சாஸ்திரக் கல்வி கற்பதால் எதையு
ம் உற்று நோக்கி நிதானமாக யோசிக்கும் பழக்கமுண்டாகிறது. இப்பழக்க
த்தைக் காட்டிலும் சாஸ்திர சம்பந்தமான விஷயங்களைத் தெரிந்துகொள்ளல்
மேலானதன்று. மேற்சொன்ன காரணத்தால், விசேஷப் படிப்பைபற்றி மிஞ்சி
அளவுக்குபிரஸ்தாபிக்கப்படுகிறதென்று நான் நினைக்கிறேன். மற்ற கல்விகளி
னுடையபாத்தியம், சாஸ்திரப்படிப்பு மும்முரத்தில் மறக்கப்படுகிறது.

இங்கு கூடியிருக்கும் மாணவர்கள் படிப்பு முடிந்தபிறகு என்ன செய்
கிறதென்பதைத் தீர்மானஞ் செய்துகொள்ளவேண்டும். கல்வி கற்கும் எல்
லோரும் கவர்ன்மெண்ட் உத்தியோகத்தில் அமருவது கூடாத காரியமான
தால் தொழில் துறைகளிலும் வியாபாரத் துறைகளிலும் நீங்கள் இறங்கலாம்.
பிற்காலத்தில் தொழில் செய்வதற்குத் தகுந்த கல்வியைக் கற்பிப்பது பள்ளிக்
கூடத் தலைவர்களின் கடமையாகும். வியாபார சம்பந்தமான படிப்பு கள்ளிக்
கோட்டை ஸ்கூல் ஆப் காமர்ஷில் போதிக்கப்படுவதுபோல் இந்தக் காலே
ஜிலும் விருத்தி செய்யப்படலாம். மெக்கானிகல் எஞ்சினீரிங் சில மாணவர்
களுக்கு இந்தக் காலேஜில் கற்பிக்கப்பட்டால், இங்குள்ள ரயில்வே ஓர்க்
ஷாப்பில் உமேதவாரிகளாய் அவர்களிருந்து தொழிலை அனுபோகத்தில் கற்
றுக்கொள்ளக்கூடும். இதுபோன்ற துறைகளில் கற்பிக்கவேண்டுமென்று

ஏராளப் பொறுப்பை ஏற்கெனவே வகித்திருக்கிற இந்தக் காலேஜ் அதிகாரிகளை நான் கேட்டுக்கொள்வதற்கு அவர்களுக்கு இத்தேசத்திலுள்ள அன்பும் அவர்களுடைய ஊக்கமும் கல்வி போதிப்பதில் அவர்களுக்குள்ள உற்சாகமுமே காரணம்.''

# நமது துண்டுப் பத்திரிகை.

ஹிப்போட்ரோம் என்ற விடத்தில் இரண்டு வாலில்லாக் குரங்குகளிருக்கின்றன. இவைகள் 6 விதபாஷைகளில் பேசுமாம். இவைகள் சுருட்டுபிடிக்கின்றனவாம், பைசகிலில் சுலபமாகச் சவாரிசெய்கின்றனவாம், புசிக்கும்பொழுது கத்தி முள்ளு முதலியவைகளை வைத்துக்கொண்டு தாராளமாகப் புசிக்கின்றனவாம், வஸ்திர மணிந்துகொண்டு கஷ்டமின்றி அதை எடுத்துவிடுகின்றதாம், போர்வையைப் போத்திக்கொண்டு படுக்கையில் நித்திரைசெய்கின்றதாம், ஒரு தடவை இவைகளைப்பார்த்தவர் மறுதடவை இவைகளின் முன்வந்தால் ஞாபகம் வைத்துக்கொண்டிருக்கிறதாம். வெந்நீரில் ஸ்நானம் செய்யவும், பற்களைச் சுத்திசெய்துகொள்ளவும், பைசகில்களை அழுக்கில்லாமல் துடைத்துவைக்கவும், ஊசியில்நூல் கோர்க்கவும் விரும்புகின்றன. சித்திரப்படங்களுள்ள புஸ்தகங்களைக்கண்டு மகிழ்கின்றனவாம். ரோமம் எதையும் கண்டால் வெறுக்கின்றனவாம். ஏனெனில் இது இறந்துபோன மிருகத்தின் தோலென்று நினைத்துவருகிறதோவென அநேகர் சம்சயிக்கலாம்.

தாய்சொற்கேள்:—நமது அரசசக்ரவர்த்தி 5-வது ஜார்ஜ் அவர்கள் ப்ரிடானிகாவில் குழந்தையாயிருந்தபொழுது இவருடைய தாயார் அலக்ஸாண்டிரா ராணியார் கிரமமாக பைபிலைப்படித்து வரும்படி சொன்னார்கள். தினம் ஒரு அத்தியாயம் கிரமமாகப் படித்துவருவதாக வாக்குறுதிசெய்தாராம், இதுவரையிலும் நமது அரசசக்ரவர்த்தி அவ்விதமே செய்துவருகிறாராம், இப்படிச்செய்துவருவதால், இவருக்கு தெய்வபக்தி தினே தினே அதிகரித்துவருவதுடன் இவரது சிறந்த குணமும் மாசற்றதாயிருக்கிறதாம். நமது சக்ரவர்த்தியைப்போல் யாவரும் தங்கள் தங்கள் மதகிரந்தங்களைப் படித்துவருவதுடன் தாயார் வார்த்தையையும் கேட்டுவரவேண்டும்.

ஒருவினோத வழக்கம்:—ஹாலண்டில் அநேக வீடுகளுக்கு ஒரு தனிமையான வாசற்படியிருக்கிறதாம். இதை இரண்டு முக்யமான காலங்களில் தான் திறந்துவைக்கிறார்களாம். அதாவது விவாககாலத்திலும், எவராவது மரணமடைந்த சமயத்திலும் தான். இவ்வாசற்படியின் வழியாக கலியாணப்பெண்ணும், பிள்ளையும் நுழைந்து உட்சென்றவுடன் கதவை மூடிவிடுவார்களாம். மரணம் உண்டானால் சவத்தை இதன்வழியாக வெளியே கொண்டுபோவார்களாம்.

வயது முதிர்ந்த மாது:-பில்டெல்ப்யாவில்'' 104 வயதுள்ள ஒருமாது இருக்கிறாள். அங்குள்ள ஸிடி ஹாலுக்கு 538 படிகட்டுகளிருக்கின்றதாம், அதில் தன்னுடன் 50 வயதுள்ளமாது ஓடிவர பந்தயம் கட்டிபேசுகிறாளாம். ஒருஸ்திரீயாலும் அவ்விதம் செய்ய முடியவில்லையாம்.

இங்கிலாந்தில் டோவரிலிருந்து ராம்ஸ்கேட்டு 24 மைல்தூரமுள்ளது. ஒருமாது $6\frac{1}{2}$ மணிநேரத்தில் டோவரிலிருந்து ராம்ஸ்கேட்டுக்கு நீந்திச்சென்றாளாம். நீந்துவதில் கீர்த்திபெற்ற கேப்டின் வெப் $7\frac{1}{2}$ மணியில் நீந்தினாராம். இவ்விதம் நீந்தின முதல் மாது மிஸ்லிலி ஸ்மித்.

23 வருஷத்திற்குமுன் தபாலில் போட்ட பத்திரிகை:—23 வருஷத்திற்குமுன் லண்டன்மாநகரத்தில் தபால் மார்க்கமாய் "க்ரிஸ்டியன் வொரல்ட்'' என்ற பத்திரிகையை 27-வயதுள்ள ஒருவருக்கு 1889-ம் வருஷம் மார்ச்சு மீ அந்த ஆபீஸார் அனுப்பினார்களாம். இவ்வருஷம்சென்ற ஜூலைமாசம் தான் அம்மனிதனுக்கு அப்பத்திரிகை தபால் மார்க்கமாய் கிடைத்ததைக்கண்டு அதிசயத்தாராம். அவருக்கு இப்பொழுது வயது 50-இது ஆச்சரியமல்லவா!



வுட்க்ரீனில் மிஸ்ஸஸ் ரெபேக்கா க்ளார்க் என்றமாது வசித்துவருகிறாள். இம்மாதுக்கு இப்பொழுது வயசு 108. 89 வருஷங்களுக்குமுன் இவளுக்கு விவாகமாயிற்று, இவளுக்கு 9 குழந்தைகள் உண்டு. இளையவனுக்கு இப்பொழுது வயது 67-ம். இம்மாதுக்கு பேரன், பேத்திமார்களுமுண்டு. இவள்செய்த பாக்கியமே பாக்கியம்!

இல்லறம்:—லோஸ் ஆஸ்க்லிஸில் விவாகமானபெண்கள் குழந்தைகளைக் காப்பாற்றும்முறை, தாய்க்குரிய தொழில், குடும்பசம்ரக்ஷணை முதலியவைகள் பெண்மணிகளுக்குப் போதிக்கப்பட்டு வருகிறதாம். இவ்விதமே சென்னை மாதர்சங்கங்களைச் சேர்ந்தவர்கள் அநுஷ்டித்துவர முயலுவார்களென்று நம்புகிறோம்.

இரவில் நடப்பது:—இரவில் நடப்பது தேகத்திற்கு மிகவும் சௌக்ய முண்டாகுமென்று இப்பொழுது சிறந்த மேலாட்டு சாஸ்திரிகள் நினைக்கிறார்கள். இப்படிச்செய்வதால் இது நரம்புகளைச் சரிபடுத்தி, நித்திரை செய்யவும் தூண்டுகிறதாம்.

சமுத்திரத்தில் பொக்கிஷம்:—இங்கிலாந்திலிருந்து இந்தியா வரைக்கும் சமுத்திரத்தின் அடியில் 800,000,000 பவுன் மதிப்புள்ள பொன்னும், நகைகளுமிருப்பதாகத் தெரிகிறது.

கண்ணாடி:—அழுக்குள்ள கண்ணாடி பாத்திரங்களையும், பீங்கான் பாத்திரங்களையும் உப்பு கரைத்த வெந்நீரால் கழுவினால் அவைகள் சுத்தமாய் காணப்படுமாம்.

ப்ரைடனில் திக்குபவர்களுக்கு ஒரு பாடசாலை தனிமையாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதாம்.

சென்னையில் தந்திக்கம்பியில்லாத ஒரு ஆபீஸ் ஸ்தாபிக்கப்படலாமென்று சொல்லப்படுகிறது.

புகையிலையை அமெரிக்காதேசத்து ஸ்திரீகள் வாயில் போட்டுமென்று வருகிறார்களாம். நமது தேசத்தில் தஞ்சாவூர், திருச்சி, கோயம்புத்தூர், சேலம், மலையாளம் முதலிய ஜில்லாக்களிலுள்ள சில பிராமணர்களும், பிராமணரல்லாதவர்களில் சில புருஷர்களும் ஸ்திரீகளும் இவ்வழக்கத்தை யனுஷ்டித்து வருகிறார்கள். இத்துர்வழக்கத்தை நீக்க அவர்கள் முயன்று வருவார்களென்று நம்புகிறோம்.

பால், சலவைக்கல் இவைகளைக்கையாலேயே செய்ய கண்டுபிடித்திருக்கிறார்கள்.

பிரிடிஷ் ராஜ்யத்தில் மாத்திரம் 7000ம் விதம் விதமான ஸ்டாம்புகள் வழங்கிவருகின்றன.

ஏறி
மிஸ்டர்கோடி என்பவர் இங்கிலாந்தில் இரண்டு தடவை ஆகாயவிமானத்தில் ஏறி
சென்று 5000 பவுன் பந்தயம் கெலித்திருக்கிறார். இவர் இந்தியாவுக்கு ஆகாயவிமான
மார்க்கமாய்வர முயன்று வருகிறாராம்.

சென்னைக்கு இம்
ராயல் கமிஷன்:—லார்ட் இஸ்லிங்டனும், மற்றமெம்பர்களும் இங்கிருந்து பர்மா
மாசம் 28உ வந்து ஒருபக்ஷம் இங்கு தங்கியிருப்பார்கள், பின்னிட்டு இங்கிருந்து பர்மா
வுக்குப்போவார்கள். ஒவ்வோரிடத்திலும் சகலவிஷயங்களைக் குறித்தும் விசாரணைசெய்
வார்கள்.

இது
நகரும் பட்டணம்:—திபேத்தில் கார்டோக் என்ற பட்டணமிருக்கிறது இது
வருஷத்திற்கு இரண்டு தடவை நகருகிறதாம், அதாவது படத்தில் குறிக்கப்பட்டிருக்கு
மிடத்திலேயே வருஷத்தில் மூன்றுமாசகால மிருக்குமாம். மீதியுள்ள 9 மாசகாலம்
இவ்விடத்திலிருந்து தெற்கில் 40-மைல் தூரத்திலிருக்குமாம். இந்த அதிக உஷ்ண
மாகும்பொழுது கார்டோக்குக்கு எல்லா ஜனங்களும் தங்கள் ஆடுமாடு முதலியவைக
ளுடன் சென்று வசிப்பார்கள். இங்கு குளிர் அதிகரிக்கும் சமயத்தில் தெற்கில் 40 மைல்
தூரத்தில் வந்து வசிப்பார்களாம். இந்தியாவிலிருந்து இங்கு வியாபாரிகளும் இவ்விதம்
வியாபாரம் செய்துவருகிறார்கள்.

பத்திராதிபர்.

## சமாசாரக் குறிப்பு.

*கோயமுத்தூரில் ஸ்திரீகளின் சங்கம்:*—ஸ்திரீகளுக்காக ஏற்பட்ட கோயமுத்தூர் கவர்ன்மெண்ட் பெண் பாடசாலையில், ஸ்திரீகள் ஒரு கூட்டம் கூடினார்கள். அதற்கு கோயமுத்தூர் விவசாயக் காலேஜிலிருந்து சிலர் வந்திருந்தார்கள். மிஸ்ஸஸ் தேவசகாயம் பிரேரிக்க, மிஸ்ஸஸ் ஸ்ரீநிவாசராவ் அக்கிராசனம்வகித்தார். ஸ்திரீகள், குழந்தைகள் சிகிச்சை செய்யப்படும் டிஸ்பென் ஸெரியைச் சேர்ந்த மிஸ்ஸஸ் மார்ஷல் அன்று மீட்டிங்குக்கு வருவதற்குச் சற்று நேரஞ் சென்றதினால், மிஸ்ஸஸ் தேவசகாயம் ஜப்பானைப் பற்றி அழகான உபந்நியாசஞ்செய்தார். மிஸ்ஸஸ் பாலகிருஷ்ண அய்யரும், மிஸ்ஸஸ் நாகராஜ அய்யரும் மிஸ்ஸஸ் சீனிவாசய்யரும் மிஸ்ஸஸ் ராமசாமி சிவனும் மிஸ்ஸஸ் தேவசகாயத்தை ஆதரித்துப் பேசினார்கள். மிஸ்ஸஸ் மார்ஷல் "பிள்ளைகளைக் காப்பாற்றல்" என்ற விஷயத்தைப் பற்றி ஓர் உபந்நியாசஞ்செய்தார். அவர் அந்த உபந்நியாசத்தில் குழந்தைகளுக்கு ஆகாரம் உடை விஷயங்களில் கவனிக்கவேண்டிய முறைகளை எடுத்துச்சொன்னார். அதன் பிறகு வந்திருந்தவர்களில் ஒரு ஸ்திரீயால் பாட்டு பாடப்பட்டது. கடைசியாக சபாநாயகர் சில வார்த்தைகளைப்பேசி முடிக்க சபை கலைந்தது.

---

*லேடி விட்டல்தாஸ் தாமோதர தாக்கர்ஸே காலமானார்:*-பம்பாய் பாரிவர்த்தகரும், இந்தியா சட்டசபை மெம்பருமாகிய ஆனரெபில் ஸர் விட்டல்தாஸ் தாமோதர தாக்கர்ஸேயின் மனைவியார் இறந்துபோய் விட்டதாய்த் தெரிந்து விசனிக்கிறோம். அந்த அம்மாளுக்கு 27 வயதுக்குமேலில்லையென்றும், நாகரிகக்கொள்கைகள் மேலிட்ட நல்ல படிப்பாளியென்றும், பொதுக்காரியங்களிலும், பெண்கல்வி அபிவிருத்தியிலும் அக்கறை யெடுத்து வந்தாரென்றும், தேவதாசன் போன்ற தர்மஸ்தாபனங்களை யாதரித்துவந்தாரென்றும் அறிகிறோம். இவ்வளவு நற்செய்கையும் தர்மச்சிந்தையுமுள்ள மனைவியை ஸர் விட்டல்தாஸ் தாமோதர தாக்கர்ஸே இழந்து விட்டாரேயென்று நாம் வருத்தப்படுகிறோம்.

---

*ஊர் ஊராய்க் கொண்டு போகப்படும் வைத்திய சாலைகள்:*—சென்னை ராஜதானியில் ஊர்ஊராகக்கொண்டு போகும் வைத்திய சாலைகள் ஸ்திரமாய் ஏற்படுத்தப்படவேண்டும் என்று ஸர்ஜன் ஜெனரலும் ஸானிடெரி கமிஷனரும் செய்த சிபார்சை சென்னைக் கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அவ்வித வைத்தியசாலைகளில் வேலை செய்யும் உத்தியோகஸ்தர்களுக்கு கேவலம் ஔஷதங்களை கொடுப்பதற்கு வேண்டிய சாமர்த்தியம்மட்டும் இருந்தால் போதாது. அவர்கள் விஷஜ்வரம், காலரா, வயிற்றுக்கடுப்பு, நரம்புச் சிலந்தி இவைகளின் காரணங்களையும், சுகாதார விஷயங்களையும் பற்றி ஜனங்களுக்கு போதிக்கும் திறமையை உடைத்தானவர்களாகவும் இருக்கவேண்டும் என்று ஸர்ஜன் ஜெனரல் சிபார்சு செய்ய அதையும் கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

---

*7½-வருஷம் தாமதித்து வந்த தபால்:*—19 5-ம் வருஷம் ஜூன்மாதம் 21-ந்தேதி அகமத் நகரில் போஸ்ட் செய்யப்பட்ட ஒரு கடிதம், மேற்படி தேதியுள்ள தபால் முத்திரையுடனும், பமபாய் வந்துசேர்ந்த தேதியாகிய 1905-ம் வருஷம், ஜூன் மாதம் 22-ந் தேதியுள்ள தபால் முத்திரையுடனும், 1912-ம் வருஷம் நவம்பர் மாதம் 30-ந்தேதியன்று 1912-ம் வருஷம் நவம்பர்மாதம் 29,30ந்தேதி முத்திரைகளுடன் தாம் கிடைக்கப்பெற்றதாகப் பம்பாயிலுள்ள ஒருவர், டைம்ஸ் ஆப் இந்தியாப் பத்திரிகைக்கு எழுதியிருக்கிறார். இதனால் 7½ வருஷம் தாமதித்திருக்கிறதென்று தெரிகிறது. அகமத்நகருக்கும் பம்பாய் நகருக்குமுள்ள தூரம் சுமார் 250மைல் இருக்கலாம். எக்காரணத்தால் இந்தத்தாமதம் நேரிட்டதெனத் தெரியவில்லையாயினும் பொதுவாய் வியப்பையுண்டாக்குகிறது.

---

*ராஜசக்ரவர்த்தியின் காருண்யம்:*—சக்ரவர்த்தி இந்தியாவுக்கு விஜயஞ்செய்திருந்த காலத்தில் வயதுசென்ற ஒரு ராணுவ உத்தியோகஸ்தர் கஷ்டதசையிலிருப்பதாக அவருடைய காதில்விழுந்தது. மிக்க நிர்த்தனமான செய்கைகளை அவ்வுத்தியோகஸ்தர் செய்த